61640

# Tamil Nadu Legislative Assembly Debates

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th, 25th, 28th, 29th and 30th January* **1974.**

VOLUME XLVII (Nos. 1 to 5)

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Thursday, 24th January* 1974. | |
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... | ix–xvi |
| **1. Questions and Answers ... ... ... ...** | **1–58** |
| 2. Announcement : Business of the House ... ... ... ... | 58 |
| 3. Discussion on the Motion of Thanks on the Governor's Address—*contd.* ... ... | 58–133 |
| 4. Papers laid on the Table ... ... ... | 134–135 |
| *Friday, 25th January* 1974. | |
| 1. Questions and Answers ... ... ... ... | 145-180 |
| 2. Government Bills : The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1974 ... ... | 180–181 |
| 3. Discussion on the Motion of Thanks on the Governor's Address—*contd.* ... ... ... | 181–277 |
| **4. Papers laid on the Table ... ... ... ...** | 277–278 |


128-180– 1

PAGES

*Monday, 28th January 1974.*

1. Questions and Answers
2. Announcement:
   Felicitations to Thirumathi Jothi Vencatachellum, M.L.A., on award of Padma Sree on her on the Republic Day ... ... ... 319
3. Discussion on the Motion of Thanks on the Governor's Address—cont. ... ... 320–382
4. Papers laid on the Table ... ... ... ... 382–383

*Tuesday, 29th January 1974.*

1. Questions and Answers ... ... ... ... 393–414
2. Privilege Matter:
   Incorrect publication of a Member's speech in the daily 'Makkal Kural' ... ... 415
3. Adjournment Motion:
   Murder of a Deputy Tahsildar in Thanjavur and consequent panic among officials ... 416–417
4. Government Bills:
   (a) The Essential Commodities (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... 418
   (b) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 (L.A. Bill No. 3 of 1974) ... ... ... ... 418–448
   (c) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974 (L.A. Bill No. 1 of 1974) ... 449–462
   (d) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1974 (L.A. Bill No. 5 of 1974) ... ... 462–473
   (e) The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 2 of 1974) ... ... ... ... ... ... 473–484

PAGES

*Tuesday, 29th January 1974—cont.*

4. Government Bills—cont.
   (f) The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill 1974 (L.A. Bill No. 4 of 1974) ... ... ... ... ... 485–492
5. Announcement:
   The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill 1974 (L.A. Bill No. 5 of 1974) ... ... 462
6. Government Resolution:
   Recommending to the Centre the export of semi-finished hides and skins ... ... ... 492–493
7. Government Motions:
   (a) Draft amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 ... ... ... ... ... 504
   (b) Draft amendments to rules under the Madras City Municipal Corporation Act, 1919, the Madurai City Municipal Corporation Act, 1971 and the Tamil Nadu District Municipalities Act, 1920 ... ... ... ... 504
8. Papers laid on the Table ... ... ... ... 505

*Wednesday, 30th January 1974.*

1. Questions and Answers ... ... ... ... 521–558
2. Adjournment Motions:
   (a) Damage done to statues of Gandhiji, Bharathi and Kattabomman and the consequent unrest ... ... ... ... ... 559–562
   (b) Interference of police against the cultivating tenants in Villur village ... ... 562–573
   (c) Assault on warden of Stanley Medical College Hostel and unrest among the students. 566–573

**6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

**8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

**9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

**10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

**11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

**12. மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி—இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

**13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

**14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

**15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

PAGES

*Wednesday, 30th January 1974—cont.*

3. Announcement :
   Adjournment of House to enable Members to participate in the Martyr's Day observance ... 573-574

4. Calling Attention :
   Outbreak of cholera and dysentry in Kanyakumari, Tirunelveli and Tiruchirappalli districts. ... ... ... ... 574-576

5. Presentation of Reports :
   Report of the Committee on Estimates on action taken by Government on the recommendations of the Committee contained in the Reports on (i) Forests and (ii) Tamil Nadu State Electricity Board. ... ... ... ... 576

6. Non-official Business—
   Resolution :
   Fixation of prices of essential commodities under the Essential Commodities Act—discussion—cont. ... ... ... ... 577-620

7. Government Motion :
   Adjournment of the House *sine die* ... ... 620

8. Papers laid on the Table ... ... ... ... 621-623

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி—விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சிறை, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதி சீட்டுகள்.

8. **The Hon. Thiru** S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering, Wing and Animal Husbandry.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. The Hon. Thiru MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. The Hon. Thiru K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. The Hon. Thiru M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village, Industries and Rural Industries Project, Milk Operation Flood, Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

**பேரவைத் தலைவர் :**

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

**பேரவைத் துணைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. கு. காமாட்சி
2. திரு. ஆ. பாந்தாமன்
3. திரு. என். இராசாங்கம்
4. திரு. கே. பி. கோபால்
5. திரு. ஆ. கு. சுப்பையா
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

**சட்டப் பேரவைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்.**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 12 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 13 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 14 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 15 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 16 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 17 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 26 இராசு, திரு. ஜே. எ. மு. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹளூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்கநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. கி. | சேலம்–1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமனாத புரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஓட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க் காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஓசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்பத்தூர்—மேற்கு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

**வியாழக்கிழமை, 1974 சனவரி 24.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Technological University*

*121 *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU N. KITTAPPA :
THIRU V. BALASUNDARAM : Will the Hon. the Minister for Education and Tourism with reference to question No. 506, answered on the floor of the Assembly on 26th March 1973 be pleased to state whether any reply has been received from the Centre on the starting of the Technological University in this State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம். மத்திய அரசினர் இந்தியாவில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் அமைப்பது பற்றிய பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளை எதிர் நோக்கியுள்ளதாகவும் அப்பரிந்துரைகள் வரப்பெற்ற பின் முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். பல்கலைக் கழக மானியக் குழு ஒரு சிறப்புக் குழுவை இதற்காக அமைத்துள்ளது. எனவே பல்கலைக் கழக மானியக் குழு இது பற்றி இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை எந்த மாவட்டத்தில் வைப்பதென்று சிபார்சு செய்திருக்கிறார்கள் என்பதை அறிவாரா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதை வருகின்ற கல்வியாண்டில் துவக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் தமிழக அரசின் சார்பாக மத்திய கல்வி அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறோம். தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுவதாக இருந்தால் அதை சென்னை நகரத்தில் தான் ஏற்படுத்தவேண்டியிருக்கும். ஏனென்றால், அதற்கான வாய்ப்பு வசதி, கட்டடங்கள், மற்றவைகளெல்லாம் தலைநகரத்தில் தான்—சென்னை நகரத்தில்தான் அமைந்திருக்கின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் துவக்குவதற்காக மத்திய அரசு ஏதாவது அதற்காக மானியம் தருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக்குழு இதற்காக மானியம் தரும். ஆகவேதான் அவர்களுடைய இசைவைப் பெறவேண்டியிருக்கிறது. இல்லையென்றால், நாமேகூட துவக்கிவிடலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக ஒரு குழு ஆராய்ந்ததே, அதன் பரிந்துரைகள் என்ன என்பதை அறியலாமா? அது மட்டும் அல்லாமல், இது அடுத்த கல்வி ஆண்டில் நிச்சயமாகத் துவங்கப்படும் என்பதற்கான க்ரீன் ஸிக்னல் ஏதாவது வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக துணைக் குழு ஒன்று அமைத்து, தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கான கருத்துக்களை ஆராய்ந்து, அந்த அறிக்கையை மத்திய அரசுக்கு நாம் அனுப்பிவைத்தோம். அதற்குப் பிறகு, மத்திய அரசு 'ஸ்டாண்டிங் கமிட்டி ஆன் இன்ஜினிரிங் எஜுகேஷன்' என்ற குழுவினை, பல்கலைக் கழக மானியக் குழு 1972 ஜூன் திங்களில் அனுப்பிவைத்து, தமிழக அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அவர்கள் என்ன அறிக்கை தந்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. அதற்குப் பிறகு, எல்லா மாநிலங்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதுபற்றி விரிவாக ஆராய வேண்டி பல்கலைக் கழக மானியக் குழு வல்லுநர் குழுவை (எக்ஸ்பர்ட் கமிட்டி) அமைத்திருக்கிறது. அதனுடைய அறிக்கையை மத்திய அரசின் கல்வித் துறை எதிர்பார்த்துக்





கொண்டிருக்கிறது. மத்திய அரசு கல்வித் துறைக்கு அந்த அறிக்கை வந்தபிறகு முடிவு எடுக்கப்படும் என்று மத்திய அரசு கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் சென்னை நகரத்தில்தான் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதன் சில பிரிவுகளையாவது மற்ற மாவட்டங்களில்—கோவை, திருச்சி போன்ற மாவட்டங்களில்—அமைப்பதற்கு ஏதாவது முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது பொறியியற் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழும் மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழும் அமைந்திருக்கின்றன. தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைந்துவிடுமானால், எல்லாப் பொறியியற் கல்லூரிகளும் அதன் கீழ் வரும். ஆகவே, தலைமையிடத்தில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அமைப்பதுதான் வசதியாக இருக்கும். அதற்காக இங்கே டெக்னலாஜிகல் கேம்பஸ் அமைந்திருக்கும் பகுதியில் மிக விரிவான கட்டடங்கள் அமைப்பதற்கு வசதி இருப்பதாலும், சென்னை தலைமையிடமாக இருப்பதாலும், இங்கிருந்து தொடர்புகொள்ள வாய்ப்பு வசதி இருப்பதன் காரணமாகவும் தலைமையிடம் சென்னையில்தான் அமைய வாய்ப்பு ஏற்படும்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, சென்னை நகரத்தில் தான் இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமையவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இப்பொழுது சென்னை மாநகரத்தில் மக்கள் நெரிசல் ஏற்கெனவே தாங்கமுடியாமலிருப்பதால், தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைப் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிமாநகரத்தில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் தலைமையிடத்தில் தலைமை அலுவலகம் அமையும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழிருக்கும் பொறியியற் கல்லூரிகளெல்லாம் அந்தப் பல்கலைக்

கழகத்தின்கீழ் வரும். பல்கலைக் கழகத்திற்கு என்று அட்மினிஸ்ட்ரேடிவ் செக்ஷன் இருக்கும். இந்த நிலையில் மையமான இடத்தில்தான் பல்கலைக் கழகம் அமையவேண்டுமே தவிர, ஒவ்வொரு ஊரிலும் மற்ற மற்ற வளர்ச்சித் திட்டங்கள் மாதிரி ஏற்படுத்த இயலாது. இது ஒரு நிர்வாக அமைப்பு. ஆகவே, நிர்வாக அமைப்பை சென்னை நகரத்தில் வைப்பதற்கேற்றவாறு வாய்ப்புகளும் கட்டட வசதி முதலியவைகளும் சென்னையில் இருக்கின்றன. சென்னையில் இல்லாமல் வெளியிடங்களில் அமைப்பதனால் ஏராளமான பணச் செலவு ஆகும் என்ற காரணத்தினால்தான் குறைந்த செலவில் துவக்கக்கூடிய முறையில் சென்னை தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அரசு அல்லாத மற்ற வசதி படைத்த தனியார் நடத்துவதென்றால் அதை அரசு அனுமதிக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வகையில் அமைக்கக்கூடிய ஒன்றல்ல தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்பது. பல்கலைக் கழகம் என்றால், அதற்கு சிண்டிகேட் அவை, செனட் அவை அமைக்கப்படுவதோடு, துணை வேந்தர், இணைவேந்தர், நியமிக்கப்படுவதோடு, பட்டமளிப்பு விழா வைத்து பட்டம் தரும் முறைகளெல்லாம் இருக்கின்றன. அவையெல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்றன. தனியார்ப் பல்கலைக் கழகம் என்றால், அதற்கென்று தனி செனட் அவை, சிண்டிகேட் அவை, ஏற்பட்டு துணை வேந்தர் நியமிக்கப்பட வேண்டும். தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைப்பதன் மூலம் தேர்வு நடத்துவதையெல்லாம் அந்தப் பல்கலைக் கழகமே நடத்தும். அதுதான் வழக்கமே தவிர, தனியார் துறையிடத்திலே விடுவதென்பது பொருந்தி வராது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, சென்னையில் ஏற்கெனவே இந்த டெக்னாலஜியைப் பொறுத்த மட்டில் சில ப்ராஞ்சஸ் இருக்கின்றன. அந்தக் காரணத்தை வேண்டி, வருகின்ற கல்வியாண்டிலிருந்து இந்த டெக்னலாஜிகல் யூனிவர்சிடியை சென்னையில் ஆரம்பிப்பதற்கு கனம் அமைச்சர் [illegible] மத்திய அரசுக்கு வலியுறுத்துவார்களா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழக அரசு சென்ற மூன்று நான்கு ஆண்டுக் காலமாகவே வற்புறுத்தி வருகிறது. அடுத்த கல்வி ஆண்டிலாவது, 1974-75-ம் ஆண்டிலிருந்தாவது பல்கலைக் கழகத்தைத் துவக்க அனுமதி அளிக்கவேண்டும் என்று மத்திய அரசினைத் தமிழக அரசு வற்புறுத்தி இருக்கிறது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பில் இங்கே சில தொழில் நுட்பக் கல்லூரிகள், ஐ.ஐ.டி. போன்று நடத்தப்பட்டுவருகின்றன. நாம் இங்கே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கும்போது, மத்திய அரசு நடத்தும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் அதனுடன் ஒருங்கிணைக்கப்படுமா? அல்லது அவை தனியாக இயங்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஐ.ஐ.டி. போன்றவை இதிலே வருகின்ற நிலைமை இருக்காது. பொறியியல் கல்லூரிகள், அரசின் சார்பில் நடத்துவதாக இருந்தாலும், தனியார் நடத்துவதாக இருந்தாலும், அவை இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின்கீழ் வரும். பாலிடெக்னிக் போன்றவற்றையும் இதன்கீழ் கொண்டுவர வாய்ப்பு இருக்கும்.

## தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வுகள்

*122 **வினா—திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-ம் ஆண்டு, மே திங்களில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளின் முடிவுகள் காலங்கடந்து வெளியிடப்பட்டதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகள் 1973-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ம் நாளில் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் திங்கள் முதல் நாளில் முடிவடைந்து, தேர்வு முடிவுகள் ஆகஸ்டு திங்கள் இருபத்தி மூன்றும் நாளில் அறிவிக்கப்பட்டன. மே திங்களில் நடத்தப்படும் தேர்விற்கு 24 பாடப் பிரிவுகளுக்குத் தேர்வு

நடத்தப்பட வேண்டுமாதலால் மேற்படி தேர்வு நடத்துவதினால் உண்டாகும் வேலைப்பளு, தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை இவைகளைப் பார்க்கின் தேர்வு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைந்தனவாகவே கருதப்பட வேண்டும். மேலும் 1972 ஆம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களை விட 1973-ம் ஆண்டு மே திங்களில் நடத்தப்பட்ட தேர்விற்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைவு.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்விக்கென்று தனி இயக்குநர், தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உரிய நேரத்தில் தேர்வைத் தொடங்கவும், உரிய நேரத்தில் தேர்வு முடிவை அறிவிக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு எவ்வளவு விரைவு படுத்த இயலுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. 1972-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 3 திங்கள் 2 நாட்கள் ஆகும். 1973-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 2 திங்கள் 23 நாட்கள் ஆகும். இன்னும் எவ்வளவு குறைக்க இயலுமோ அவ்வளவு குறைக்கும் முயற்சியினை இந்தத் துறை மேற்கொள்ளும்.

*123 வினா—**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டு, மே திங்களில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

(இ) அவர்களில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியிலே கலந்துகொள்வதற்கான குறைந்தபட்சத் தகுதி என்ன நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, லோயர் கிரேடு, ஹையர் கிரேடு என்று பல்வேறு தன்மைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தனியார்த் துறையில் இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை அளிக்கின்றன. இந்தத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பை மட்டும் தொழில் நுட்ப இயக்குநர் அகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்களுக்கு என்ன என்ன தகுதிகள் என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

### *Research on works of Avvaiyar*

*124 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to institute any research project into the works of Avvaiyar in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS: Sir, may I know whether all the writings of Avvaiyar have been collected?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றி ஆராய்ச்சி முடிப்பதற்கு நாம் தனி குழு ஒன்றும் அமைக்கவில்லை. ஆனால் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு இருக்கும் மாணவர்கள் இப்படிப்பட்ட தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

---

@ 136–137-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வைக்கப்பட்டிருக்கிறது. இது 9, 10, 11-வது வகுப்புகளில் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், அதிலே ஒரு சோதனை நடத்தி, தேர்வு நடத்தி மேல் வகுப்புகளுக்கு அனுப்பும் நிலையில்லை. அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு கருதி வருகிறது. அதிலே தேர்வு நடத்தப்படுகிறது என்றால்தான் அக்கறையும், ஆர்வமும் ஏற்படும் என்பதால், அரசு இது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் இந்த ஆண்டு அதைக் கட்டாயப் பாடமாக வைத்து, தேர்வு எண்ணிக் கையின் அடிப்படையில்தான் மேல் வகுப்புக்கு அனுப்புவது என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அது பற்றிய விவரக் கருத்துக்களை இந்த அரசு கேட்டு இருக்கிறது. அந்த வகையில் வருகிறபோது இந்த எபிசியன்சி டெஸ்ட் போன்றவற்றைப் பற்றி நாம் ஆராயலாம்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, பள்ளி மாணவர் களுக்கு காரத்துப் பயிற்சி அளிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர வர்களே, இப்போது தனிப்பட்ட முறையில் அது நடத்தப்பட்டு வருகிறது. அதிலே பல மாணவர்கள் ஈடுபட்டு கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, arising out of the answer given by the Hon. Minister that our State also is going to make physical education compulsory and also to conduct an examination for it, whether the marks of such examination will be counted to have a pass in the examination so that our boys and girls will be benefited out of it.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர வர்களே, அது பற்றி நான் முதலில் குறிப்பிட்டேன். தமிழக அரசு அது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டாயப் பாடமாக ஆக்கி, தேர்வு நடத்தி மேல் வகுப்பிற்கு அனுப்புவது என்று வந்தால்தான், அதில் ஆர்வம் ஏற்படும். அக்கறை ஏற்படும் என்பதால் அதைப் பற்றி அரசு தீவிரமாக ஆலோசித்துக்கொண்டு வருகிறது.





**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த விளையாட்டுப் பயிற்சி வகுப்பு கட்டாயமாக உயர்நிலைப்பள்ளிகளில்தான் இப்போது நடத்தப்படுகிறது என்று எண்ணுகிறேன். இதுபோல், ஆரம்பப்பள்ளி, உயர் ஆரம்பப்பள்ளி போன்றவற்றில் உள்ளவர் களுக்கும் பயிற்சி அளிக்க, தனி உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர வர்களே, இப்போது இருக்கின்ற முறைப்படி 1 வகுப்பிலிருந்து 11 வகுப்பு வரை உடற்பயிற்சி கட்டாயமாக இருக்கிறது. துவக்கப் பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகியவற்றில் தீவிரப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், முறைப்படுத்தவும் அரசு எண்ணிக்கொண்டி ருக்கிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பல பள்ளிகளில் உடற்பயிற்சி அளிப்பதற்காகத் தனியாக ஆசிரியர்கள் இல்லை. அடுத்த கல்வியாண்டிலாவது ஒவ்வொரு எலிமெண்டரி ஸ்கூல்களுக்கும் ஒரு உடற்பயிற்சி ஆசிரியரை நியமிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசு அது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்போது ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாம் தனியாக உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் அங்கேயுள்ள மாணவர்கள் உடற்பயிற்சி செய்யாமல் சென்று விடுகிறார்கள். இப்போது உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் வேலையில்லாமல் இருக் கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஆரம்பப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா? பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் உள்ள மாணவர்கள் உடற்பயிற்சியில் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவர்களுக்கு ஆரம்பப்பள்ளியிலிருந்தே உடற்பயிற்சி அளிக்கப்பட்டு வருவதுதான் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட முயற்சியினை அரசாங்கம் எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர வர்களே, உயர்நிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் கட்டாயமாக இருந்துவருகிறார்கள். உயர் துவக்கப்பள்ளி

[1974 சனவரி 24

அது மட்டுமல்லாமல், தனியாக இருக்கும் பேராசிரியர்கள் பலரும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இப்போது மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று தனியாக ஒரு அறக்கட்டளை நடத்தி வருகிறோம். ஓரளவிற்கு திருக்குறள், சங்க இலக்கியங்கள், மற்றவைகள் பற்றி ஆராய இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையேற்படுகிறபோது, தனியாக சங்க இலக்கியங் களில் புகழ்பெற்றுள்ள புலவர் பெருமக்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தலாம்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, ஔவையார் என்ற பெயரில் பல்வேறு காலங்களில் ஒவ்வொருவர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த மூன்று பேர்களைப்பற்றியும் தனித் தனியாக ஆராய்ச்சி நடத்தி, அவற்றை வெளியிட அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன். அது இது குறித்து ஆராய்ச்சி எதையும் நடத்தவில்லை. பல்கலைக் கழகங்கள்தான் நடத்தி வருகின்றன. மற்றவர்களும் வேண்டுமானால் ஆராய்ச்சி நடத்தலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, பழைய பழ மொழிகள் இப்போதுள்ள நடைமுறைக்கும், ஜனங்களுடைய நட்டத்தைக்கும் ஒத்துவராமல் வித்தியாசம் இருப்பதால், சர்க்கார் பணத்தை இந்த மாதிரி ஆராய்ச்சிகளில் விரயம் செய்யாமல் இருக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவா வர்களே, விரயம் என்று சொல்வதற்கு இல்லை. நான் முதலில் கூறியபடி, அரசு நேரடியாக இப்படிப்பட்ட வகைகளில் இறங்கிப் பணம் செலவழிப்பது இல்லை. பல்கலைக் கழகங்களில் இது குறித்து ஆராய்ச்சி நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச் சிகளில் பணம் விரயம் ஆகிறது என்று சொல்வதற்கு இல்லை. பல்வேறு நாடுகளில், ரஷ்யா போன்ற நாடுகளில் கூட, மாநில மொழிகளை மேன்மைப்படுத்துவதற்கும், அதை வளம் மிக்கதாக ஆக்குவதற்கும் பெருமுயற்சி எடுத்து இருக்கிறார்கள். இருப் பினும், அரசு தனியாக இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக பணம் செலவழிக்கவில்லை. பல்கலைக் கழகங்கள்தான் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.



1974 சனவரி 24]

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, ஔவையார் அவர் களுடைய குறுகிய அடிகளிலே சொல்லப்பட்டு இருக்கின்ற கருத்துக்கள் புரட்சி ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களாக இருக் கின்றன. அவர்களுடைய ‘உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு’ என்பது குடும்பக் கட்டுபாட்டிற்கு ஏற்ற கருத்தாக இருப்பதாக கருதப்படுகிறது. அதுபோல் ஔவையார் அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் பெண்டிற்கே உரியதாக இருப்பதால், அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அதில் அரசு மிகத் தீவிரமாக கவனம் செலுத்த முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போது ஆராய்ச்சி யாளராக மாறினார் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைத் தீவிரமாக நடத்தி வெளியிடுவார்களானால் தமிழகம் அதனால் மிகவும் நலம்பெறும்.

## மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி

* 125 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுப் பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்கு கட்டாய மாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கெனவே அனைத்துப் பள்ளிகளிலும் அனைத்து வகுப்புகளிலும் உடற் பயிற்சி கட்டாயமாகத் தான் இருந்து வருகிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, தற்போது பள்ளி மாணவர்களுக்கு ‘எபிசியன்சி டெஸ்ட்’ என்று வைக்கப்படுகிறது. அதில் சில மாணவர்கள்தான் கலந்து கொள்கிறார்கள். எல்லா மாணவர்களும் கலந்து கொள்ளச் செய்யும் வகையில் அதைக் கட்டாயப் பாடமாக ஆக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த உடற் பயிற்சி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகுப்புக்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரவேண்டும், அப்படி யில்லையென்றால் மேல் வகுப்பிற்கு அனுப்புவது இல்லை என்று

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கல்லூரிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் இருந்தபோதிலும், மாணவர்களுக்கு உடற் பயிற்சி வகுப்பு கட்டாயப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக இனிமேலாவது அரசாங்கம் உடற் பயிற்சி வகுப்பை அவர்களுக்கு கட்டாயமாக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உடற் பயிற்சி இப்பொழுது எல்லா பள்ளிகளிலும் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்கள் கட்டாயமாக உடற் பயிற்சி பயிலவேண்டும், இவ்வளவு நாட்களுக்கு உடற்பயிற்சி வகுப்புக்கு வரவேண்டும் என்று இருக்கிறது. அதற்குக் குறைந்தால் மேல் வகுப்புக்கு அனுப்பக்கூடாது என்று கூட சட்ட திட்டம் இருக்கிறது.

கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை ஏற்படவில்லை. அது அவரவர்கள் விருப்பமாகத் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. உயர் நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆர்வம் ஊட்டிவிட்டால், கல்லூரிகளில் தேவை இல்லை என்ற அளவுக்கு வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி தனியாக வேண்டுமானால் ஆராய வேண்டும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** உடற் பயிற்சி காரணமாக மாணவர்கள் ஸ்போர்ட்சில் கலந்துகொண்டால்தான் அவர்களை மேல் வகுப்புக்கு அனுப்ப முடியும் என்ற நிலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பலஹீனப்பட்ட மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியில் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படும்பொழுது, அப்படிப்பட்ட மாணவர்கள் படிப்பில் திறமை உள்ளவர்களாக இருந்தாலும் கூட, ஸ்போர்ட்சில் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்றால் அவர்கள் மேல் வகுப்புக்குச் செல்ல இயலாத நிலைமை ஏற்படும். ஆகவே, இதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்டவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் பெற்று, அவர்களுக்குத் தனிச் சலுகை அளித்து, விலக்கு அளித்து, மேல் வகுப்பிற்கு அனுப்புகின்ற முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.



*Passes for entry into General Hospital*

* 126 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the police administration were permitted to locate persons without valid passes in the General Hospital in Madras about the 6th March 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்கள் அளவில், சென்னையில் உள்ள பொது மருத்துவ மனையில் எல்லா வார்டுகளிலிருந்தும் மருத்துவ அதிகாரிகளின் அறைகளிலிருந்தும் டிபன் கேரியர்கள், டிரான்சிஸ்டர்கள், மற்றும் பிற சில்லறைப் பொருட்கள் ஆகியவை களவு போய்விட்டதாகத் தகவல்கள் கிடைத்தன. தகுந்த விசாரணை மேற்கொள்வதற்காக மருத்துவ மனை நிர்வாகம் இந்தத் தகவல்களைப் பொது மருத்துவ மனையிலுள்ள புறக்காவல் நிலையத்திற்கு அனுப்பியது. காவலர்கள் சரியான நுழைவுச் சீட்டுகள் இல்லாதவர்களைக் கண்டுபிடித்து, 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாளிலிருந்து பத்து வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

THIRU N. DENNIS : The time allowed to see patients is limited. The patients also use to have some guests there. Therefore may I know whether Government will give up such methods?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நல்லவர்கள் பலர் நோயாளிகளைப் பார்க்க வருகிறார்கள். அதே நேரத்தில் அதை சாக்காக வைத்துக்கொண்டு திருடக் கூடிய மனப்பான்மையுள்ள சிலரும் உள்ளே நுழைந்துவிடுகிறார்கள். அதன் காரணமாக நோயாளிகளின் பொருள்களும், டாக்டர்களின் பொருள்களும் பறிபோய் விடுகின்றன. இதைத் தடுக்கவேண்டுமென்றால் காவல் துறையினரைக் கொண்டுதான் ஏதாவது செய்ய முடியும். காவல்துறையினர் சந்தேகத்திற்குரியவர்களையும் கைது செய்கிறார்கள். நல்லவர்களையும், சந்தேகம் இல்லாதவர்களையும் அந்த நேரத்தில் சேர்த்து கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்படும். பொது நன்மைக்காக சில்லறைத் தொல்லைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அளவிற்கு முதலில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்தபிறகு, துவக்கப்பள்ளிகளில் போடுவதைப் பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். ஆனால் இப்போதைய நிலையில் உயர் துவக்கப்பள்ளி களில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, மாணவர்கள் இந்த விளையாட்டுப் பயிற்சியில் அதிக அக்கறையில்லாமல் இருக் கிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், விளையாட் டில் சிறந்த மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி விளையாட்டுப் பயிற்சி தரப்படும் என்று கொண்டு வந்தால், அவர் களுக்கு ஊக்கமும், ஆர்வமும் ஏற்படும். ஆகவே, சிறந்த விளையாட்டு வீரர்களாகக் கருதப்படுகிறவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி பயிற்சி தரும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர வர்களே, விளையாட்டுப் பயிற்சி அளிப்பதற்காக வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. இங்கேயே நல்ல வசதிகள் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டிற்கு முதல் ஆண்டு அகில இந்திய அளவில் சென்றபோது 36 மாணவர்கள் முன்னணியில் சென்று 45-46 பரிசுகளும், பதக்கங் களும் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இங்கே நாம் உருவாக்கும் மாணவர்கள் மாநில அளவில் மட்டு மல்ல, அகில இந்திய அளவில் மட்டுமல்ல, ஆசிய அளவில் கூட சென்று திறம்படைத்தவர்களாக வருகிறார்கள். அப்படித் திறம் படைத்தவர்களாக காணப்படுகிறவர்களுக்கு உதவித் தொகைகள் கல்லூரி அளவில் 10 மாணவர்களுக்கும், 10 மாணவியர்களுக்கும், அளிக்கப்படுகிறது. உயர்நிலைப்பள்ளி அளவிலும் இப்படிப்பட்ட உதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன. அவர்களை ஊக்கு விக்க மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள விளையாட்டுக் குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த உடற் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படுகிற எல்லா மாணவர்களுக்கும் போஷாக்கான உணவு இல்லாத காரணத்தினால், பலரும் அதில் கலந்து கொள்ளாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குச் சத்தான



உணவு வழங்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமானால் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு நாளடைவிலே அவர்களுடைய உடல் வலிமை பெருகும் என்ற கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் சொல்லியபடி அந்த வகையிலே சிறந்தவர்கள் என்று மாவட்ட அளவில், மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை அளிக்கின்ற முயற்சிகளை மாநில விளையாட்டுக் குழுவும், மாவட்ட விளையாட்டுக் குழுவும் மேற்கொண்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் மாநில அளவில் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களை, அகில இந்திய அளவிலே, ஆசியா அளவிலே போட்டியிலே ஈடுபடக்கூடியவர்களாக ஏற்றுக்கொண்டு, அவர் களுக்கு வேலை கொடுத்து, சம்பளம் கொடுத்து, ஆனால் வேலை வாங்காமல் இருக்கவேண்டும் என்று சிலபல தொழில் அதிபர்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். 1,000, 2,000 பேர்கள் வேலை செய்கின்ற இடத்தில் இரண்டு விளையாட்டு வீரர்களை அவர்கள் காப்பாற்றுவதில் அதிக கடினம் இருக்காது. அவர்களிடமிருந்து வேலை வாங்காமலேயே மாதச் சம்பளம் கொடுத்து, மற்ற நேரங் களில் அவர்கள் பஸ்கி, தண்டால் இவைகளைப் போன்ற வேறு பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தால்தான் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். அகில உலகப் போட்டியில் கலந்துகொள்ள வருபவர்கள் 365 நாட்களிலும் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நம் நாட்டில் பல்வேறு அலுவலகங் களில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் அகில உலக விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள நேரிடும்பொழுது இரண்டு நாட்களுக்கு முன்பு அவர்கள் பயிற்சி செய்து, ரிஹெர்சல் செய்து, கலந்துகொள்வதன் காரணமாக அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. பல பெரிய தொழில் அதிபர் களிடம் இதுபற்றி கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் இசைவு தெரிவித்திருக்கிறார்கள். மாநில அளவில் முதன் மையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யார் என்பதை மாநில விளையாட்டுக் குழுவினிடம் கேட்டிருக்கிறேன். அவர்கள் தந்த தற்குப் பிறகு பெரிய தொழில் அதிபர்களைக் கேட்டு அவர்களை அந்தத் தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்திக்கொள்ளும்படி ஈடுபடுத்தவேண்டும் என்ற எண்ணமும் அரசாங்கத்திற்கு இருக் கிறது.

**காற்றுத் தூய்மை கெடுவது குறித்த குழுவின் அறிக்கை.**

*127 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்பகுதிகளில் Air Pollution -ஐத் தடுப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றி ஆலோசனை கூறுவதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துவிட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் சிபாரிசுகள் யாவை ?

(உ) அவை எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) & (உ) சட்டப்பேரவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** இந்த ஏர் பொல்யுஷனைத் தடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது சட்டம் கொண்டுவர உத்தேசம் இருக்கிறதா ? அப்படியானால் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாக சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான அதிகாரங்கள் அரசாங்கத்தினிடம் இருக்கின்றன. எப்படிப் பாதுகாப்பது, என்ன முறைகளைக் கையாள்வது என்பதும், தொழில்கள் நிறுத்தப்படாமல், மக்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்படுவது தடை செய்யப்படாமல், அதே நேரத்தில் காற்றுத் தூய்மை கெடுதல், நீர் தூய்மை கெடுதல் ஆகியவைகளுக்கு இன்றையதினம் எவை எவை காரணமாக இருக்கின்றனவோ, அவற்றை நடைமுறையில் எப்படி மாற்றுவது என்பதையெல்லாம் நிபுணர் குழு ஆலோசித்து வருகிறது. அப்படி அமைக்கப்பட்ட குழுவின் மூலம் பல்வேறு நிர்வாக அமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்று, அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தமிழகத்தில் பல நகரங்களில் ஓடுகின்ற ஊர்திகள் கக்குகின்ற புகை மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படிப் புகை கக்குவதைக் குறைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 138-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சீமை எண்ணெயைக் கலந்து ஓட்டுவதன் காரணமாக புகை அதிகமாக கக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முதல் நடவடிக்கையாக சென்னை போன்ற பெரிய நகரத்தில்தான் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த முயற்சி ஏற்கனவே அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறை—இப்பொழுது அது பல்லவன் போக்குவரத்து—நிர்வாகத்தினரிடம் பஸ்களிலிருந்து வெளிப்படுகின்ற புகையினுடைய அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் அந்தப் புகை எந்த அளவுக்கு வருகிறது என்பதை அளப்பதற்கு ஒரு கருவியை பயன்படுத்த வேண்டும் என்றும் சில ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போல வெளியூர்களிலிருந்து வரக்கூடிய லாரிகள் முதலியவற்றினால் ஏற்படக்கூடிய புகையைத் தடுப்பதற்கும், புகையை அளவுக்கு மீறி கக்கினால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் காவல் துறையினர் ஓரளவுக்கு சில நேரத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அதைப் போல ரயில்வே மூலமாக ஏற்படுகின்ற புகை மிகுதியை தடுப்பதற்கு நிலக்கரி அல்லது நிலக்கரி சாம்பல் 'ஆஷ்' கொட்டப்படுகின்ற இடங்களில் ஈரமாக வைத்து இருப்பதன் மூலம் காற்றில் பரந்து தூற்றப்படாது என்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையின் மூலமாகவும் ஓரளவுக்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் கலப்பதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். எண்ணெய் கிடைக்காத காலத்தில் அந்த நெருக்கடியில் அது எந்த அளவு மிகுதியாக இருக்கிறது என்பது இப்பொழுது நமக்குப் புலனாகவில்லை. அதைத் தடுப்பதற்கு அகில இந்திய அரசே கூட எண்ணெய் நிறத்தை மாற்றி அமைப்பதன் மூலம் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

தாழ நூற்றுக்கணக்கான இடங்கள் அந்தப் பட்டியலில் வந்திருக்கின்றன. இதுவரை 14 தொகுப்புகள் வந்திருக்கின்றன. திருப்புவனம் ஊராட்சியில் 13 கிராமங்கள் எடுக்கப்பட்டு, 4 கிராமங்களுக்கு திட்டங்கள் நிறைவேறிவிட்டன. 9 கிராமங்களுக்கு விரைவில் நிறைவேறும். இவை எல்லாமே ஆக்சிலிரேடெட் ப்ரொக்ராமில் வருகிற காரணத்தினால் இவற்றிலும் முன்னுரிமை வழங்க முன்னால் யோசிக்கப்படவில்லை. தற்போது எல்லாவற்றுக்குமே நிதி கொடுப்பதில் இடையூறு இருக்கிற காரணத்தினால் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள பட்டியலில் தேவையானால் மாற்றம் செய்ய மறுபரிசீலனை செய்யலாம்.

*130 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பாட்டம் அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) கிராம குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள், 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது. அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாட்டம் அரிசன காலனி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடி-நீர் வழங்க ரூ. 46,400-க்கான திட்ட மதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆழ்த் துளைக்கிணறு தோண்டி அதிலிருந்து நீரேற்று குழாய்கள் மூலம் தண்ணீரைக் கிராமத்தினுள் அமைக்கப் பெறவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டுவந்து, கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இத்திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.



**திரு. த. சோனையா:** திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாட்டம் கிராமம் அரிசன பெருமக்கள் நிறைந்திருக்கிற இடம், அங்கே குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடையாது. அந்த பாட்டம் அரிசன காலனி மக்களுடைய குறைகளை நீக்க அரசாங்கம் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே பாதுகாப்பு குடி தண்ணீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது மத்திய அரசுக்கு அனுப்பி, அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, உதவித் தொகை கொடுத்து, அதை சீக்கிரம் செய்துவிடலாம் என்று எதிர் பார்ப்பது சரியல்ல. நாம் எற்கனவே 14 தொகுப்புகள் அனுப்பியிருக்கிறோம். இது 15-வது தொகுப்பில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் முதல் இரண்டு மூன்று தொகுப்புகளைத்தான் ஏற்று இருக்கிறார்கள். இன்னும் பத்துப் பன்னிரண்டு பட்டியல் இருக்கிறது. அந்த முறை அல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வசதி அளிக்கிறது என்கிற வேறு அடிப்படையில் 46,400 ரூபாய் அளவு திட்டமில்லாது, வெறும் ஆழ்துளைக் கிணறைப் போட்டுக் கொடுத்துவிடுவது. ஊராட்சி ஒன்றியம் மற்ற தண்ணீர் சப்ளைக்கான செலவுகளை ஏற்றுக்கொள்வது என்கிற அடிப்படையிலாவது குறைந்த காலத்தில் நிறைவேற்ற முடியுமா என்று பரிசீலிக்கலாம். அதற்கு ஊராட்சி ஒன்றியம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**திரு. த. சோனையா :** பாட்டத்தில் நூற்றுக்கு நூறு அரிசன மக்களே இருப்பதால் அரிசன நலத்துறை மூலமாகவாவது விசேஷ சலுகை என்கிற அடிப்படையில் உதவி பெற்று, அந்தக் குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒரேநேரத்தில் ஒரு அமைச்சரிடத்திலேயே பல துறை சம்பந்தமான கேள்விகளைப்போட்டு பதில் பெற முடியாது. அரிசன நலத் துறைக்கு அதுபற்றி கேள்வி போட்டால் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்து, அவர்கள் ஆலோசனையையும் பெறலாம்.

**திரு. எம். தேவராசன்:** மக்கள் பெருக்கத்தைவிட ஏர் பொல்யூஷன் எதிர்காலத்தில் மிகுந்த துன்பம் விளைவிக்கும் என்று கூறுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு வாரத்துக்கு ஒரு நாள் எந்த ஒரு வண்டி வாகனமும் நகரில் ஓடக்கூடாது என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அந்த அவசியம் ஏர் பொல்யூஷன் காரணமாக மட்டும் ஏற்படவில்லை. பெட்ரோல் கிடைக்காத நெருக்கடியான நேரத்தில் மத்திய அரசு அந்த அளவுக்கு ஒரு முறையை கையாள்வதன் மூலம் சமாளிக்க முயற்சிக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. இதனால் மக்கள் பெருக்கத்தைவிட அதிகமான கஷ்டம் ஏற்படும் என்று யாரும் கருதத் தேவையில்லை. இதனால் ஏற்படும் கஷ்டம், நெருக்கடி, மூச்சு விட்டால் அதில் கெடுதல் ஏற்படும். ஆனால், மக்கள் தொகை அளவுக்கு மீறினால் மூச்சே விடமுடியாத நிலை ஏற்படும்.

## மாயூரத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*128 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் குடிதண்ணீர் திட்டத்தினை விரிவுபடுத்த அந்நகராட்சி கடன் தொகை ஏதேனும் கோரியுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாயூரம் நகராட்சி எல்லைக்குள், குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்கு குடிநீர் முதன்மைக் குழாய்களை அமைப்பதற்காக ரூ. 4 இலட்சம் கடன் வழங்குமாறு கேட்டு 1971 ஜூலையில் அந்த நகராட்சி விண்ணப்பித்தது. ஆனால் அப்போது மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்தை நீட்டிப்பதற்காக அரசால் ஏற்பளிக்கப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை. எனவே, அப்போது அக்கடன் தொகையை வழங்க தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் பரிவுரைக்கவில்லை. அந்நிலை குறித்து அந்நகராட்சிக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது மாயூரம் நகராட்சி எல்லைக்குள் குடிநீர் வழங்கப் படாத பகுதிகளுக்கு 18 மீட்டர் குடிநீர் பங்கீட்டு முதன்மைக் குழாய்களை ரூ 9.4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து



மாயூரம் நகராட்சி ஆணையாளருடன் கடிதத் தொடர்பு கொள்ளப் பட்டு வருகிறது. இந்த வரைவுச் செயற்குறிப்பை ஆய்வு செய்த பின்னர் அரசின் நிர்வாக ஒப்பளிப்பை பெறுவதற்காக அதனை தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் அனுப்பிவைக்கும். வரைவு செயற்குறிப்புக்கு அரசு அனுமதி வழங்கிய பின்னர் அரசுக்கடன் வேண்டி அந்த நகராட்சி விண்ணப்பிக்குமானால் அப்போது அது பரிசீலனை செய்யப்படும்.

## திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் திட்டங்கள்.

*129 வினா—**திரு. த. சோணையா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1973-74-க்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுவதாக உள்ளது?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் 1973-74-ல் குடிநீர் வழங்கப்பட உள்ள கிராமங்கள் எண்ணிக்கை 13.

(இ) மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.560 லட்சம்.

(முற்பகல் 9-30)

**திரு. த. சோணையா:** தலைவர் அவர்களே, இந்த திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்கிறபோது முதலிலே எந்த எந்த கிராமங்களில் குடிக்கத் தண்ணீர் இல்லையோ அவற்றுக்கு முதலில் கொடுக்கவேண்டும், அப்படியின்றி ஏற்கனவே குடிக்கத் தண்ணீர் வசதியுள்ள கிராமங்களுக்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி அளிக்கிறார்கள், அப்படியின்றி இனி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் கலந்து கொண்டு, குடிதண்ணீர் வசதியற்ற எந்த எந்த கிராமங்களுக்கு முதலில் குடிதண்ணீர் வசதி அளிப்பது என்பதை நிர்ணயிப் பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தப் பட்டியல் தயாரித்த போது அந்தப் பட்டியலில் உள்ள கிராமங்கள் எல்லாவற்றுக்குமே உதவுவதாக மத்திய அரசு அறிவித்திருந்த காரணத்தினால் ஏறக்

**விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கான உதவித்தொகை.**

*131 **வினா—திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகையை (Residential Scholarships) உயர்த்தித்தரும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : தற்போது இல்லை.

**திரு. கா. வேழவேந்தன்** : இப்போது எவ்வளவு தொகை அளிக்கப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தினால் அந்தத் தொகையை இனியாவது உயர்த்தித்தர அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : 1960-ம் ஆண்டில் இருந்து குறைந்த பட்சமாக அளிக்கப்பட்டு வந்ததை 1971-72 இல்தான் நாம் உயர்த்தினோம். அந்த விவரத்தை நான் கூற விரும்புகிறேன். கலை, விஞ்ஞானம், சட்டம் ஆகிய படிப்புக்கு—சென்னையில் 1971-க்கு முன்னால் கொடுக்கப்பட்டது ரூ. 60. 1971-72-இல் நாம் ரூ. 70 ஆக உயர்த்தினோம். வெளியில் 50 ஆக இருந்ததை 55 ஆக உயர்த்தினோம். மருத்துவம், பொறியியல் ஆகியவற்றுக்கு, முன்பு சென்னையில் 70; அதை 75 ஆக உயர்த்தினோம். வெளியில் 70 ஆக்கினோம். உளவியல்—70 ஆக்கினோம், எம்.எஸ்.சி., எல்.சி.இ. ஆகியவற்றுக்கு சென்னையில் 50 ஆக இருந்ததை 60 ஆகவும், வெளியில் 45 ஆக இருந்ததை 50 ஆகவும் 1971-72-இல் தான் உயர்த்தியிருக்கிறோம்.

**திரு. கு. காமாட்சி** : கொடுக்கிற தொகையை, விடுதியில் உள்ள மாணவர்களே ஒரு குழு அமைத்துக்கொண்டு செயல்படும் வகையில், அவர்களிடத்திலேயே கொடுத்தால் அவர்களே தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி, டைவிடிங் சிஸ்டத்தில் செலவைப் பகிர்ந்துகொள்ள, அரசு ஆவன செய்ய முன்வருமா?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : கல்லூரியில் இருக்கிற விடுதிகளில் இந்த முறைதான் இருக்கிறது. அரசினர் தனியாக நடத்துகிற விடுதிகளில்தான் மாவட்ட நல அதிகாரிகள் அதனைக் கவனித்துக்கொள்கிறார்கள். இதை எடுத்தால் அதிகப்படியான பணம் தேவைப்படும்.

**திரு. எஸ். வடிவேல்** : மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித்தொகை உயர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் வயிறு நிறைவது இல்லையே. ஆகவே அரசே விடுதிகளை ஏற்றுக்கொண்டு அதற்காகும் செலவை ஏற்று, படிக்கிற மாணவர்களுக்குப் போதுமான உணவை அளிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : கல்லூரிகளில் உள்ள விடுதிகளில் மாணவர்கள் டிவைடிங் சிஸ்டத்தில் தங்களுக்கான உணவுப்பொருள்களை மெனு போட்டுக் கொண்டு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இதனால் செலவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. அங்குள்ள அரிசன மாணவர்களுக்கு நாம் கொடுக்கிற உதவித்தொகை குறைவாகவே இருக்கிறது. அரசே முழுத்தொகையும் கொடுப்பது என்பதும் சாத்தியம் அல்ல. ஆகவே விடுதியில் உள்ள மாணவர்களே சிக்கனமாக உணவுக்காகும் செலவை கட்டுப்பாடாக வைத்துக்கொள்ள முன்வந்தால் அது எல்லோருக்குமே பயன்தரும்.

**புலவர் சி. பழனிச்சாமி** : விடுதிகளில் தங்கிப்படிக்கிற மாணவர்களுக்கு உணவுக்காக நாம் ஒருநாளைக்கு 1½ ரூபாய்தான் தருகிறோம், அதை 2½ ரூபாயாக உயர்த்தித்தர அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : 1971-72-இல் இருந்து நாம் மொத்தமாக ரூ. 70, 75 என்றுதான் கொடுக்கிறோம். உணவுக்காக என்று தனியாக எதுவும் கொடுப்பது கிடையாது.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவர் அவர்களே, சில மாணவர்களுக்கு, விடுதியிலே தங்கி படிக்கின்றபொழுது, கல்லூரி வெகு தூரமாக இருந்தால், அவர்கள் போக்குவரத்துக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. அதை அகற்றிவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாகவே பஸ்ஸில் செல்ல அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 24

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** பஸ்ஸிலே இலவசமாகச் செல்கின்ற வசதியை இப்பொழுது செய்துதர முடியாது. ஆனாலும் விடுதிகளிலேயிருந்து கல்லூரிகள் நெடுந்தொலைவில் இருந்தால் அவர்களுக்குப் போக்குவரத்துக்கான பஸ் செலவை, சில விடுதிகளில்—அதாவது, விடுதிகளிலிருந்து நெடுந்தொலைவில் கல்லூரிகள் இருந்தால், அவ்விடுதிகளில்—படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் தருகிறது. ஆனால் விடுதிக்கு அருகில் பள்ளியோ, கல்லூரியோ இருக்குமானால் அந்த மாணவர்களுக்குப் போக்குவரத்துச் செலவு தரப்படவில்லை. இதை அறியாத சில மாணவர்கள் கல்லூரியிலிருந்து தூரமான இடத்தில் விடுதிகளை உடைய மாணவர்கள் கேட்கின்ற உதவித் தொகையைப் போல் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அது சரியல்ல என்றுதான் அரசு கருதுகிறது.

**கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறித்துவ அரிசனங்கள்.**

*132 வினா—திரு. அ. தேவேந்திரன்:* மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிறித்துவ அரிசனங்களை (சாம்பவர்கள்) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 22—9—1973 தேதியிட்ட அரசு ஆணை எண் (பலவகை) 853, சமூக நலம் உத்தரவின் மூலம் கிறித்தவ அரிசனங்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர். இதன் காரணமாக அரிசன கிறித்துவர்கள், அனைவருக்கும் முன்பு இருந்தது போலவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ளவர்களுக்கு மாநில அரசினால் அளிக்கப்படும் கல்விச் சலுகைகள் கிடைக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சாம்பவ அரிசன கிறித்துவர்களும் பயன்பெறுவர். ஆகவே அவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.



1974 சனவரி 24]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கிறிஸ்தவ அரிசன மக்களைப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த, ஷெடியூல் காஸ்ட் லிஸ்டில், சேர்ப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா, இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு முதல்வர் அவர்களே, பிரதமர் அவர்களுக்கு இதைப்பற்றி வலியுறுத்தி கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு வீட்டு மனை, மற்ற உழவு மாடு போன்ற சலுகைகளை அளிப்பதற்கு மாநில அரசு ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறதா? பொருளாதார அடிப்படையிலே சமுதாயத்திலே கீழ் மட்டத்திலே இருக்கிறார்களென்றாலும், மதம் மாறியவர்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்படாமல் இருக்கிறதே அதைப்பற்றி அரசாங்கம் என்ன ஆலோசனை கூறியிருக்கிறது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாநில ஓதுக்கீட்டைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட இந்த மக்களுக்கு அளிக்கப்படுகின்ற எல்லா சலுகைகளும் இந்த கிறிஸ்தவ அரிசனங்களுக்கு உண்டு. மத்திய ஒதுக்கீட்டில் செய்யப்படுகின்ற எந்தத் திட்டத்திலும், இந்த கிறிஸ்தவ அரிசனங்களுக்கு உதவி கிடையாது. அதை வலியுறுத்தித்தான் அவர்களையும் அந்தப் பட்டியலிலே சேர்த்துப் பிறகு அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பதால் முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாம்பவ கிறிஸ்தவ அரிசனங்களை தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் சேர்ப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1966-ம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், சமுதாயத்தின் அடிப்படையில் பின்தங்கிய நிலையில் எந்தெந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் அந்த அந்த வகுப்புகளிலே கிறிஸ்தவர்

களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப் படலாம், என்று பேரறிஞர் அண்ணா அவர்களே அதைப்பற்றி பேசி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருமானால் அதற்கான நடைமுறைகளைச் செய்யும் என்ற உறுதிமொழி அளித்தார்கள். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஏறத்தாழ 7 ஆண்டுகள் ஆகின்றன. இனிமேலாவது மதத்தின் அடிப்படையிலே பட்டியலைத் தயாரிக்காமல் அவர்கள் எந்த எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ, அந்த அந்த சமுதாயத்தை மட்டும் பார்த்து, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்து மதத்திலே இருப்பவர்களை பட்டியலிலே சேர்க்கிற அதே பட்டியலிலே இவர்களையும் சேர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தாழ்த்தப்பட்ட மக்கள் என்கின்ற பட்டியலை வெளியிடுவதே மத்திய அரசு. அவர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதானால் தாழ்த்தப்பட்ட நிலையி லிருந்து உயர்த்தப்படுகிறார்கள் மத அடிப்படையில் என்றுதான் மத்திய அரசு கூறுகிறது. காரணம், கிறிஸ்தவ மதத்திலே ஜாதி வேற்றுமை கிடையாது என்று கூறுகிறது. இருந்தாலும் அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்று பலமுறை இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கிறது. முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களுக்கு வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக் கிறார்கள். நானும் டெல்லி செல்லும்போதெல்லாம் மாநாடு களிலும் மற்ற இடங்களிலும் எடுத்துறுத்தி வருகிறேன்.

ஆனால், பட்டியலைத் தயாரிக்கவேண்டிய மத்திய அரசு அதை ஒத்துக்கொள்ளவில்லை. நான் கன்னியாகுமரி சாம்பவ கிறிஸ்துவர்களும் பயன்பெறுவர் என்று குறிப்பிட்டது, அவர்களை ஏதோ தாழ்த்தப்பட்டவர் பட்டியலிலே சேர்த்து பயன் தருகிறோம் என்று அல்ல. மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அப்படிப்பட்ட வர்களுக்கும் உதவி கிட்டாமல் இருந்தது. அவர்கள் பெற வேண்டுமென்றுதான் இப்படி செய்திருக்கிறோம். மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் அப்படிப்பட்ட நிலை இல்லை. மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செய்து கொடுக்கின்ற எல்லா சலுகைகளையும் இந்த சாம்பவ கிறிஸ்தவர்களுக்கும் தரலாம் என்றுதான் 1973-ம் ஆண்டு திருத்த குறிப்பில் நாம் செய்திருக்கிறோம். மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் உதவி தர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். அதுதான்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் கூட, அதைத்தான் இன்றைக்கும் வலியுறுத்தி வருகிறோம். எதற்கோ. பட்டியலை பேழைகளிலே எடுத்துச் செல்கிறவர்கள் இதற்கும் எடுத்துச்சென்றால் நன்றாக இருக்கும். அந்த சமுதாயத்திற்கும் நன்மை செய்ததாக இருக்கும்.

**டாக்டர் ச. அ. சின்னராசு:** அரிசனங்கள் என்ற பெயர் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் காணப்படுவதில்லை. இதனால் மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற முடியாமல் அவதிப்படுகி றார்கள். சமீபத்திலே தர்மபுரி மாவட்டத்திலே இரண்டு மாணவர்கள் என்னிடத்திலே வந்து, அரிசனங்கள் என்று போடப் படாததனால் உபகாரச் சம்பளம் பெற முடியவில்லை என்று குறை கூறி அழுததைக் கண்டேன். நாம் பொதுவாக, தாழ்த்தப்பட்ட வர்களை அரிசனங்கள் என்றுதான் குறிப்பிடுகிறோம். ஆகவே, அத்தகைய மாணவர்கள் படுகின்ற அந்த அவதியை நீக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஷெடியூல்ட் காஸ்ட் என்பதுதான் அவர்களுக்கு சட்டப்படி இருக்கிற பெயர். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உலக உத்தமர் மறைந்த காந்தியார் அவர்கள் அரிசனங்கள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். பட்ஜெட் ஒதுக்கீட்டிலும் ஷெட்யூல்ட் காஸ்ட் என்றுதான் கூறப் படுகிறது. இதர குறிப்புகளிலும் ஷெட்யூல்ட் காஸ்ட் என்றுதான் கூறப்படுகிறது. பின்தங்கியவர் என்றுதான் கூறப்படுகிறது. அரிசனங்கள் என்றால், தாழ்த்தப்பட்டவர்கள் என்று அனைவரும் ஒத்துக்கொள்கிறோம். அது அனைவருக்கும் தெரியும். வேண்டாத சிலர், மாணவர்களை பார்த்து, பட்டியலிலே இந்தப் பெயர் இருக் கிறதா இல்லையா என்று வம்பு விளைவிக்கப் பேசலாமே தவிர, அது மாதிரி எந்த எந்த இடத்தில் நடக்கிறது, எந்த எந்த மாணவர் அவதிப்படுகிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பு தருவார்களானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** சலுகை அளிப்பதிலே, அரிசனங் களிலே சக்கிலி, பள்ளன், பறையன் என்ற வேறுபாடுகள் இருக் கின்றன. அதைப்போல், கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கவில்லை, முஸ்லிம்களுக்குக் கிடைக்க வில்லை என்று இருக்கிறது. அதற்குப்

பதிலாக, பொருளாதாரத்திலே தாழ்ந்த எல்லா மதத்தைச்
சேர்ந்தவர்களுக்கும் உதவி அளித்தால் அது உதவியாக இருக்
குமே? அம்மாதிரியான கருத்தை அரசாங்கம் ஏதாவது யோசனை
யில் வைத்திருக்கிறதா? பொருளாதாரத்தில் தாழ்ந்த அவ்வளவு
பேருக்கும் உதவி அளிப்பதற்கான வாய்ப்பை உண்டாக்க
இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பொருளாதாரத்
தில் தாழ்ந்த அவ்வளவு பேருக்கும் உதவி செய்யவேண்டுமென்ற
நிலையை ஒத்துக்கொள்வதற்கில்லை. காரணம், தாழ்த்தப்பட்ட
சமுதாயம் தாழ்ந்திருப்பதற்கு காரணமே, ஜாதிதான். அவர்களுக்
கும் அனைவரையும் போல் உழைக்க நல்ல சக்தி இருக்கிறது, நல்ல
அறிவு இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது. ஆனல், அவர்கள்
மாத்திரம் சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே ஏன் தாழ்ந்
திருக்கிறுர்கள்? பொருள் ஈட்டுவதற்கான வாய்ப்புகளையும்,
சந்தர்ப்பங்களையும், கல்வி அதிகமாகக் கற்று மேம்பாடு அடைவ
தற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் அவர்கள் நீண்டகால
மாகப் பெறவில்லை. தாழ்த்தப்பட்டு, பாதிக்கப்பட்ட நிலையில்
தான் அவர்கள் இன்னமும் இருக்கிறுர்கள். பொருளிலே உயர
வேண்டுமென்று சொன்னுல், வியாபாரம் செய்யவேண்டும். வேறு
பல துறைகளிலே முன்னேற வேண்டுமென்ருல் ஜாதி குறுக்கிடு
கிறது. அந்தக் குறுக்கீடுகள், வேற்றுமை உணர்வுகள், எண்ணங்
கள் தலை தூக்காமல் மறைந்துவிட்டபிறகு, பொருளாதாரத்
துறையிலே அவர்கள் ஏற்றங்கள் பெறுவதற்கு வழியிருக்கிற
தென்று சுயமரியாதைப் பாரம்பரியத்திலிருந்து உருவாகி
யிருக்கிற இந்த அரசு நம்புகிறது, கடைப்பிடிக்கிறது.

## குடியிருப்பு மனைகளை மேம்படுத்திக்கொள்ள மானியம்

* 133 வினு.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினைவுக்கு விடையளிப்
பாரா—

தாழ்த்தப்பட்டவர்களுக்கு குடியிருப்பு மனைகளாக வழங்கப்
பட்ட நஞ்சை நிலங்களை மேம்படுத்திட அரசு மானியம்
ஏதேனும் வழங்குகின்றதா?





**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்த
நஞ்சை நிலங்கள், குறிப்பாக 10, 15 வருடங்களாக அப்படியே
இருக்கின்றன. நான் கூட ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தேன்,
அரிசனக் காலனிக்காக, 10 வருடங்களுக்கு முன்பு. அந்த நிலம்
உற்பத்திக்கும் பிரயோசனப் படவில்லை, வீடு கட்டவும் பிரயோ
சனப் படவில்லை. இருபுறமும் நட்டம் ஆகிறது. ஆகவே,
அதற்காகச் சிறப்பான திட்டம் போட்டு, பயன்படுத்த அரசு முன்
வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உறுப்பினர்
அவர்களே 10 ஆண்டு காலத்திற்கு முன்னலே என்று சொல்லி
விட்டார்கள். அப்பொழுது எல்லாம் ஏதோ தாழ்த்தப்பட்டவர்
கள்தானே ஏதோ கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பள்ள
மும் படுகுழியுமாக இருக்கிற இடங்களைக் கொடுத்திருக்கிறுர்கள்.
இப்பொழுது கொடுக்கப்பட்ட நிலங்கள் அப்படி இல்லை. ஏற்
கெனவே இருந்த அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பள்ளங்களை
உயர்த்தவேண்டுமென்ருல் அதிகமாகச் செலவாகும். 1971-ஆம்
ஆண்டிலே வாரிய உறுப்பினர் திரு. எஸ். கிருஷ்னசாமி அவர்களை
இதைப்பற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்யுமாறு இந்த அரசு
பணித்திருந்தது. அவர்கள் ஒட்டு மொத்தமாகக் கணக்கு
கொடுத்திருக்கிறுர்கள். மாவட்டவாரியாக எந்த எந்த இடங்
களில் எவ்வளவு பேர்களுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டு இருக்
கின்றன, எவ்வளவு பேர்களுக்கு எத்தனை இடங்களில் என்ற
விவரங்களையெல்லாம் நலத்துறை இயக்குநர் அவர்களைக் கேட்டு
இருக்கிறேம். அவர்கள் பட்டியல் தந்ததற்குப் பிறகு இதுபற்றி
கவனிக்கமுடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பள்ளத்தையெல்லாம் கொடுத்து
விடவில்லை, நல்ல நஞ்சை நிலங்களாக இருந்தால்கூட அக்வயர்
பண்ணுவதற்கு அதிகாரம் இருந்த இடங்களில் எல்லாம் கொடுத்
திருக்கிறுர்கள். அவர்கள் செய்யவில்லை என்று சொல்கிறுர்கள்.
அவர்கள்தான் செய்யவில்லை என்ருலும் கூட நீங்கள் வந்து 7
ஆண்டுகள் ஆகின்றனவே, இங்கே வந்து உட்கார்ந்து கொண்
டிருக்கிறீர்களே நீங்கள் செய்துகொடுக்கவில்லையே ஏன்? நஞ்சை
நிலங்களாக இருந்தால் திருப்பிக் கொடுத்துவிடச் செய்து புஞ்சை
நிலங்களை அதே இடங்களில் கொடுத்து, நஞ்சை நிலங்களைக்

கொடுப்பது உணவு உற்பத்திக்குச் செய்கிற பாவம் என்று கருதி, அவர்களுக்கு வீடுகட்டக்கூடிய நிலங்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நஞ்சை நிலங்களையெல்லாம் கொடுப்பது பாவம் என்று அந்த ஆட்சி இருந்த பொழுது அவர்கள் அறிவுரை கூறியிருக்கலாம். அவர்கள் அறிவுரை கூற இருந்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். பள்ளங்களாக இருந்தால் சரியாக்கிக்கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்பொழுது கொடுக்கப்படுகிற நிலங்கள் புஞ்சை நிலங்கள், தரிசு நிலங்கள் அரசாங்க நிலங்களாக இருந்தால் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 3.4 அடி ஆழமாக இருக்கிற நிலங்கள் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலும் தென் ஆற்காடு மாவட்டத்திலும் அதிகமாக இருப்பதால் செலவு அதிகமாகிறது. கொஞ்சம் கொஞ்சமாக மாவட்ட வாரியாக கணக்கு எடுத்து செய்துகொண்டிருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister aware that many of the house-sites allotted to the Harijans are not used for construction of houses because of the non-provision of elementary facilities like approach roads, water supply and other things that are absolutely necessary for living?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பாதையில்லை விளக்கு இல்லை என்ற காரணத்திற்காக யாரும் வீடு கட்டாமல் இருக்கிறார்களா என்ற விவரம் தெரியவில்லை. கையிலே பணம் இல்லை என்ற காரணத்தினால்தான் பலபேர்கள் வீடுகளைக் கட்டாமல் இருக்கிறார்கள்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ்நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு வீட்டுமனை பட்டாக்களை வழங்கியிருக்கிறது. அவைகளில் வீடுகளைக் கட்டுவதற்குப் பணம் இல்லாத காரணத்தினால்தான் அந்த வீடுகளை அவர்கள் கட்டிக்கொள்ள முடியவில்லை. ஆகவே மானியம் என்று இல்லாவிட்டாலும் கூட கடன் உதவி என்ற பெயரிலாவது நீண்டகாலக் கடன் கொடுத்து உதவி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் வீடுகள் வீதம்



கட்டித்தருகின்ற முறையிலே ஒரு திட்டத்தை ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கின்ற இடங்களில் வீடுகளைக் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. புதிதாக வீடுகளைக் கட்டித் தருவதற்கும் தனியாக ஒரு வீட்டு வசதி வாரியத்தை உருவாக்கலாம் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது உருவானதற்குப் பிறகுதான் எந்த எந்த வகையிலே எப்படி எப்படி கட்டிக் கொடுக்கலாம் என்பது பற்றி முடிவெடுக்கப்படும்.

**திரு. கு. பெரியசாமி :** பள்ளம் படுகுழியைக் கொடுத்தார்கள் என்று அங்கத்தினரும் சொன்னார்கள், அமைச்சரும் சொன்னார்கள். மேட்டுப்பாங்கான இடங்களிலே உள்ள நிலங்களைக் கொடுக்கவும் சில அக்கிரஹாரங்களில் இருக்கின்ற காலியிடங்களையும் அக்வயர் செய்து அரிசனங்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அக்கிரஹாரங்களைச் சேர்த்துத்தான் இடங்கள் இருந்தால் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற இடங்களைப் பற்றிச் சொன்னால் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது அரசு.

**திரு. கு. காமாட்சி:** பள்ளமான இடங்களாகக் கொடுக்கப்பட்ட இடங்களிலே பாதி கட்டியும் கட்டாமலும் அப்படியே இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. முன்னால் இருந்த ஆளுநர் விஷ்ணு ராம் மேதி அவர்கள் திருவரங்கம் தொகுதியிலே உள்ள ஒரு பேரூராட்சிப் பகுதியிலே உள்ள ஒரு இடத்திற்கு அப்படி அடிக்கல் நாட்டிவிட்டு அது அப்படியே இருக்கிறது. அதை என்ன செய்வது என்று தெரியாத நிலைமை இருந்துவருகிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களைப் பரிசீலனை செய்து உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குறிப்பிட்ட இடத்தைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தரப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அரிசனங்களுக்கு நிலங்கள் கொடுத்த எண்ணிக்கையை வைத்துக்கொண்டு பெருமை கொள்வதைவிட அவர்கள் கட்ட இயலாத கஷ்டத்தைப்பற்றி அமைச்சர்

அவர்கள் கூறவில்லை. கடன் அவர்களுக்கு கொடுக்க முன்வந்தாலும் நிபந்தனைகள் வேறு இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் என்ன என்ன என்று அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அந்த வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் இன்னும் உருவாக்கப்படவில்லை. அது உருவாக்கப்பட்டதற்குப் பிறகு எந்த அடிப்படையிலே கடன்கள் தரப்படும் என்று சொல்ல முடியும். சில பேர்களுக்கு அரசு நலத் துறையின் மூலமாக வீடுகளைக் கட்டுகிறது. இதிலே மானியங்கள் அளித்து வீடு கட்டிக் கொடுக்கின்ற முறை இருக்கிறது, கடனாகவும் கொடுக்கப்படுகிற முறை இருக்கிறது. கடனைத் திருப்பித் தருவதற்குப் பதிலாக உடல் உழைப்புத் தந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவைகளின் மூலமாக ஏதோ ஒரு 10, 20 வீடுகள் தான் கட்டிக் கொடுக்க முடிகிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட டெவலப்மெண்ட் கார்ப்ரேஷன் மூலமாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பணம் பெற்று ஆண்டுதோறும் 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு இருக்கின்ற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதைப் பற்றி ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் விரிவான விளக்கங்களைத் தரமுடியும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தற்போதுள்ள காலிமனைகளிலே வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம் ஒன்றைத் துவக்க அரசு அறிவித்து ஒரு ஆண்டு ஆகிவிட்டது. இதுவரையில் அது துவங்கப்படவில்லை. அதற்கு உரிய காரணம் யாது, எப்பொழுது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இப்பொழுது அதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து சொல்வதற்கு வாரிய உறுப்பினர் நம்பியார் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் மாநில அளவிலே எல்லாவகையிலுமான கணக்குகளை எடுத்து ஏற்கனவே கொடுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு, எவ்வளவு இடங்களிலே வீடுகள் கட்டியிருக்கிறார்கள், எவ்வளவு இடங்களிலே வீடுகள் கட்டப்படவேண்டும், இன்னும் கட்டித்தரப்பட வேண்டிய மக்கள் எவ்வளவு இருக்கிறார்கள், எப்படிக் கட்டுவது, இலவசமாகக் கட்டித்தரப்படவேண்டியவை எவ்வளவு, கடனுக்



கட்டித்தரவேண்டியவை எவ்வளவு, எத்தனை பேர்கள் திருப்பித் தரக்கூடிய வசதியுள்ள நிலையில் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் உதவிசெய்யக் கூடிய முறையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ஐந்து கோடி ரூபாய் கடனைப்பெற்று செய்யவேண்டுமென்று நினைக்கிறோம். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் 9 சதவிகிதம் வட்டி தரவேண்டுமென்று கேட்கிறார்கள். நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தானே செய்கிறோம் 4½ சதவிகிதம் வட்டி விதத்தில் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறோம். அவர்கள் ஒத்துக் கொள்ளமுடியாது, தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் நாங்கள் கொடுப்பது அரசாங்கத்திற்குத்தானே என்று 9 சதவிகிதம் கேட்கிறார்கள். நாலரையா ஒன்பதா என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இவையெல்லாம் முடிவு செய்யப்பட்டதற்குப் பிறகுதான் வேலை துவங்கப்படவேண்டும்.

**திரு. க. மு. இராசகோபால்:** தலைவர் அவர்களே, ஆதித் திராவிட மக்களுக்கு தனியார் நிலங்களை எடுத்துக் கொடுக்கும் பொழுது அவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று 10, 12 ஆண்டுகள் என்று காலம் தாமதமாக்கிக்கொண்டிருக்கிறது. கால தாமதம் செய்யாமல் இந்த அரசு எல்லா இடங்களிலேயும் இருக்கின்ற கோயில் நிலங்களை எடுத்து அவர்களுக்குக் கொடுக்க முன்வருமா? அந்த அந்த ஊர்களிலேயே பக்கத்திலே கொடுக்கவேண்டும். அப்படியில்லாமல் எட்டிக்கொடுத்தால் ஜாதியை ஒழிப்போம், திண்டாமை ஒழியவேண்டும் என்று எல்லாம் சொல்லி விடுதலைபெற்று 25 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் எட்டிப்போய் அவர்களுக்கு வீடுகொடுப்பதிலே பிரயோசனம் இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி தகவல் அறியத்தான் போடவேண்டுமேயொழிய யோசனை சொல்வதற்கு இருக்கக் கூடாது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எட்டிப் போய்க் கட்டவேண்டும் என்பது அரசின் கொள்கையல்ல. ஆனால் எட்டிப் போகவேண்டும் என்று சில அரிசனங்களே நினைக்கிறார்கள்

காரணம் கொடுமைகள் தாங்கமுடியாமல், நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் கட்டித்தருவதற்கு ஏற்பாடு செய்கிறோம். கோயில் நிலங்களைப்பற்றி இலாகா இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** அரிசன மக்கள் முன்னேற்றத்திற்காக, எஸ்டிமேட்ஸ் கமிட்டி, பி.ஏ.சி.-யைப்போல் ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலிருந்து பரிந்துரை வந்ததா. கேரளத்திலே அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி இங்கேயும் அமைக்க இந்த அரசாங்கத்திற்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி குடியிருப்பு மனைகளைப் பற்றியது. அரிசனங்கள் என்றால் அரிசனங்கள் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பொதுவாகக் கேட்பது என்றால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, உயர்திரு நம்பியார் அவர்கள் ஒரு அறிக்கை அளித்தார்களே, அந்த அறிக்கையை இந்த அவையின் மேஜையின்மேல் வைப்பதற்கு இந்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திரு. நம்பியார் அவர்களின் அறிக்கையை அரசே இன்னும் பரிசீலனை செய்யவில்லை. பரிசீலனை செய்தபிறகு அவசியப்பட்டால் வைக்கலாம்.

**கமுகேர்கடை அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.**

*134 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கமுகேர்கடை அரிசனங்களுக்கு குடியிருப்புக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது மனைப் பட்டா வழங்கப்படும்?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. முடிந்த பின் பட்டாக்கள் வழங்கப்படும்.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, இருபதாண்டுக் காலமாக திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கமுகேர்கடை கிராமத்திலுள்ள அரிசன மக்கள் குடியிருக்க இடமில்லாமல் இருபதாண்டுக்காலமாக மனுப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுதாவது அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தமைக்கு நன்றி சொல்லி, உடனடியாகப் பட்டாக்கள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** எல்லா வேலையும் முடிந்து 1973 மார்ச் திங்களில் பணமும் அவர்களுக்கு டிரஷரியில் கட்டியாகிவிட்டது. இப்பொழுது மறுபடியும் நிலச்சொந்தக்காரர்கள் வேறு சிலருக்குச் சொந்தம் என்று வருகிறார்கள். மின்சாரக் கம்பிகள் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள். பரிசோதனை செய்துதான் எடுத்திருக்கிறார்கள். ஆனாலும் புகார் வந்திருப்பதால் மீண்டும் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக வரையறுக்கப்பட்டபிறகு இந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்து பட்டாக்கள் வழங்கப்படும்.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, சில நேரங்களில், அரிசனங்களுக்காக இடங்களை ஆர்ஜிதம் செய்யும் நேரத்தில் அந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள் வேண்டுமென்று அங்கே மின்சாரக் கம்பங்களை நட்டு அந்தப் பகுதியிலே லைன்களை இழுக்கிறார்கள். எனவே, அவைகள் மனுக்களுக்கு முந்தியதா, பிந்தியதா என்று பார்த்து, மனுக்களுக்குப் பிந்தியதாக இருந்தால் அவைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குறுக்கீடுகள் எதுவும் இல்லையென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். வேண்டுமென்றே நடைபெறுகிறது என்றார்கள். அப்பொழுது கேட்டால் மின்சாரக் கம்பிகள் ஓடுகின்றன என்ற காரணத்தைக் காட்டியும், வேண்டுமென்றே சில குறுகியகாலப் பயிர்களை, கேழ்வரகைப் போட்டு வைக்கிறார்கள், வாழையை நட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லி மறுபடியும் நாங்கள் நிலத்தைக்

கொடுக்க மாட்டோம் என்று மறுப்பு தெரிவிக்கிறார்கள். இவைகளெல்லாம் இல்லாத வகையில் மாண்புமிகு அங்கத்தினர்களும் துணை செய்தால் விரைவில் எடுத்துக் கொடுக்க முடியும்.

### முத்தூர் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*135 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி முத்தூர் கிராமம், படையம் ஆத்திக் குளத்தில் உள்ள அரிசனங்கள் அண்மையில் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) விண்ணப்பம் எதும் வரவில்லை. எனினும் குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்த அரிசன மக்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பர வரைவு 11—10—1972 தேதியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, தற்பொழுது அரிசன நலத்துறையில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைகள் வழங்கப்படுவது தொடர்ந்து நடைபெறுகிறதா அல்லது வேறொரு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சந்தேகமே இல்லை, இந்தத் துறைதான் செய்துகொண்டு வருகிறது.

### காரணி கிராம இருளர்களுக்கு வீட்டு வசதி

*136 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணி கிராமத்தில் இருளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவடையும் ?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) காரணி கிராமம் குளப்புறம்போக்கு சர்வே எண் 163-ல் இருளர்கள் குடியேற விருப்பப்படாததால் சைதாப்பேட்டை தனித் தாசில்தார் வேறு நிலத்தை நில ஆர்ஜிதம் செய்ய தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அந்தக் கிராமத்தில் செட்டில்மெண்ட் வேலை முடிந்துவிட்டதால், இருளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தில் தாமதமில்லாமல் வேறு தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, எடுத்த இடத்திலே குடியேற முன்வந்தால் எப்பொழுதோ முடிந்திருக்கும். கொடுக்கும் இடத்தில் குடியேற முற்படாததால் வேறு இடம் பார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, அவர்கள் விருப்பப்படியே பார்க்க வேண்டுமென்று இருப்பதால் நாட்கள் ஆகிறது. இதுதான் தாமதத்திற்குக் காரணம்.

### மானாமதுரையருகேயுள்ள வைகைப் பாலம்.

*137 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை வைகையில் உள்ள மேம்பாலம் பழுதுப்பட்டு இருப்பது உண்மையா ?

(இ) அதை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(உ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) & (உ) இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் ரூபாய் 35 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு அனுமதி பெற்றதும் இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளக் கூடும்.

பேர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் பிழைத்துக்கொண்டனர். இறந்து போன 8 பேர்களின் குடல்கள் முதலியவற்றையும், கைப்பற்றப்பட்ட கள்ளையும் இரசாயனப் பகுப்பாய்வு செய்து கொடுக்கப்பட்ட அறிக்கைகளிலிருந்து பூச்சி கொல்லி மருந்தாகப் பயன்படுத்தப்படும் நச்சுக் கலப்பு "பாராத்தியன்" கலந்திருப்பது தெரிய வந்தது. இரண்டு வழக்குகளுக்கான குற்றப் பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் விசாரணையில் உள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இம்மாதிரி கள் குடிப்பவர்களை, சாராயம் குடிப்பவர்களை விஷத்தையும் கொடுத்துக் கொலை செய்வது என்ற முறையில் சமீபத்தில் 8 பேர் இறந்திருக்கிறார்கள். இது கடுமையான குற்றம். இந்த மாதிரிச் செய்பவர்கள் மீது கொஞ்சம் தீர்க்கமாக நடவடிக்கை எடுத்து கேஸ் போட்டு தண்டனை அளித்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இதிலே அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நாகர்கோயில் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவரான திரு. சி. ஆர். நடேசன் என்பவர் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரதர் உவரியிலுள்ள 71-ஆம் எண் கள்ளுக்கடையின் உரிமதாரர் ஆவார். இக்கடைக்கு மாதக் குத்தகை ரூ. 4,055, உவரியைச் சேர்ந்த திரு. துரைபாண்டியன் (முன்னாள் எம்.எல்.ஏ.) மேற்பார்வையின் கீழ், வேலையாட்கள் மூலம் இக்கடை நடத்தப்பட்டு வந்தது. திசையன்விளை காவல் நிலையத்தில், "நச்சுக் கலந்திருந்ததால் ஏற்பட்ட இறப்பு குறித்து 74/73-ஆம் குற்ற எண்ணிலும், திருவாளர்கள் இசக்கிமுத்து கோனார் (உரிமதாரரின் ஏஜெண்ட்) எண் 71, உவரி கள்ளுக்கடை உரிமைதாரான சி. ஆர். நடேசன் ஆகியோர் மீது தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தின் 61, 63-வது பிரிவுகளின்கீழ் 76/73-ஆம் குற்ற எண்ணிலும் காவலர் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். திசையன்விளை காவல் நிலைய குற்ற எண் 74/73-ல் இ.பி.கோ. 304 (எ) பிரிவின்படி 9–11–1973-ல் திருநெல்வேலி கூடுதல் செய்யப் முதல்தர நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. குற்ற எண் 76/73-ல் தமிழ்நாடு அரசு ஆயத்தீர்வைச் சட்டம் பிரிவு 61 (எஸ்) மற்றும் 63 (பி) பிரிவுகளின்படி



குற்றவாளி உரிமைதார் நடேசன் நாடார் மீதும், ஏஜண்ட் இசக்கி முத்துக் கோனார் மீதும் 9—11—1973-ல் நாங்குநேரி துணை நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இசக்கி முத்துக் கோனார் பெயிலில் விடப்பட்டுள்ளார். நடேசன் தலை மறைவாகிவிட்டார். நடேசனைக் கைதுசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வழக்கு விசாரணைக்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இறந்துபோன எட்டு குடும்பத்தாரும் ஏழைகள். அவர்களுடைய குடும்பத்தாருக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒரு குறிப்பு அரசாங்கத்திடம் இல்லை.

*Prices of pesticides*

*140 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government to reduce the price of pesticides in this State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேளாண்மைத் துறை விவசாயக் கிடங்குகளில் பூச்சிகொல்லி மருந்து லாபம் அற்ற விலையில் விற்கப்பட்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்போது இருக்கக்கூடிய பிரச்சினை போதுமான மருந்து கிடைக்கவில்லை என்பது. முன்பு சர்க்கார் தரப்பில் அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலம் மருந்துகளுக்கு ஏஜன்சி எடுத்து இப்போது கைவிட்டு விட்டார்கள். விவசாயிகளுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கொடுப்பதற்கு விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அக்ரிகல்சுரல் டெப்போவில், எந்த ஊரில் மருந்துகள் இல்லையென்று தெரிகிறதோ, உடனே மேற்கொண்டு பூச்சி மருந்துகள் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக பி.எச்.சி. என்ற மருந்துதான் விவசாயத் துறையினரால் ஊக்கப்படுத்தப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பி.எச்.சி. மருந்தை விரும்பி வாங்குகிறார்கள். அக்ரோ

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) நடப்பு ஆண்டின் ஏலம் ஜூலை முப்பதாம் தேதியுடன் முடியவில்லை. இது வரை ஏலம் போனதில் எதிர்பார்க்கும் தொகை ரூ. 30.69 கோடி.

(இ) கடந்த குத்தகையாண்டு ஆகஸ்டு 31-ம் தேதியுடன் முடிவுற்றது. அவ்வாண்டில் கள்ளு சாராயக் கடைகளின் ஏலத் தொகை ரூ. 30.38 கோடி.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the abolition of toddy and in view of the fact that selling price of high class liquor in this part of the country is low, is the Government aware that there is huge smuggling of whisky and brandy and other high class liquors from here. If I take one bottle of whisky to Delhi, I can get Rs. 20 extra.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, அதுபோன்று பெருமளவில் கடத்தல் இருப்பதாகத் தகவல் இல்லை. இந்த மூலக்கேள்வியில் எவ்வளவு வருமானம் என்று கேட்கப்பட்டிருப்பதால் அந்த விவரங்கள்தான் இப்பொழுது இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, இப்பொழுது கள்ளுக்கடை, சாராயக்கடைகளை மூடுவதன் மூலம் சுமார் 30 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து தெரிகிறது. இப்பொழுது தமிழ் நாட்டிலே சாராயம் காய்ச்ச தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு சாராயம் காய்ச்சுகிறார்கள். அங்கே உற்பத்தி யாகும் சாராயத்தை என்ன செய்யப் போகிறார்கள்? வெளியிலே அனுப்பி அதனால் ஏதாவது சம்பாதிக்க வேண்டுமென்றால் வரி போட்டு ஈடுகட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்தச் சாரா யத்தை வேறு தொழிலுக்கு உபயோகப்படுத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. இப்பொழுது செப்டம்பர் மாதம் வரையில் இந்த சாராயம் அனுமதிக்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், 30 கோடி ரூபாய் வருமானம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது பேப்பரில் எழுதப்பட்ட தொகையா, அல்லது ஏலம் விட்டு ஆக்சு



வலாகக் கிடைத்த தொகையா? ஆக்சுவலாகக் கிடைத்த தொகை எவ்வளவு? ஏலத்தொகைக்கும் ஆக்சுவலாகக் கிடைக்கும் தொகைக்கும் வித்தியாசம் எவ்வளவு இருக்கும் என்று பார்த்தால் தெரியும். கட்ட முடியாமல் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். எனவே வசூல் எவ்வளவு ஆயிற்று? எத்தனை கோடி ரூபாய் நஷ்டம்? மேலும், சாராயத்தை வேறு தொழிலுக்குப் பயன் படுத்துவது பற்றிச் சொன்னார்கள். என்ன தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிறார்கள்? இவ்வளவு சாராயத்தையும் எந்தத் தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிறார்கள் என்று விளக்கமாகச் சொன்னால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் கொடுத் திருக்கின்ற கணக்கு ஏலத்திற்குக் கோரப்பட்ட தொகை. அதைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது 30.69 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே இந்தக் கணக்குதான் இப் பொழுது தரப்பட்டுள்ளது. வசூல் அந்தந்த மாதத்திலே வசூலாகிறது. இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால், இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற குறிப்பிருக்கிறது. எந்தெந்த இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற விவரம் அரசாங்கத் தின் பரிசீலனையில் இருக்கிறது.

### திசையன்விளையில் கள் குடியால் இறந்தவர்கள்.

*53 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில், 12-6-1973-ஆம் நாளன்று அல்லது அந்நாளளவில், கள் குடித்து 8 பேருக்கு மேல் இறந்து விட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ), (இ) & (உ) 3-6-1973 அன்று, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், குட்டம் கிராமத்திலுள்ள சேகரிப்பு முனையில் 17 பேர் கள் குடித்தனர். அவர்களில், 8 பேர் மருத்துவ சிகிச்சை அளிப் பதற்கு முன்னரேயே உடனடியாக இறந்தனர். எஞ்சிய 9

## நிலக்கடலை பயிரிட மானியம்

*141 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கடலை பயிரிட அரசு மானியத்தொகை ஏதேனும் வழங்கிவருகிறதா ?

(இ) நமது மாநிலத்தில் எத்தனை ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகிறது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) இல்லை.

(இ) 9,42,000 ஹெக்டர். ஒரு ஹெக்டருக்கு இரண்டரை ஏக்கர்.

## *Supply of groundnut oil in Northern States*

*142 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether a large quantity of groundnut oil is being sent to North Indian States from this State for the Vanaspathy Industries; and

(b) if so, the details thereof for the calendar years 1971 and 1972?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) ஆம்.

(இ) 1971-ல் 4,76,099 குவிண்டால், 1972-ல் 4,70,341 குவிண்டால்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இங்கு கடலை எண்ணெய் எக்கச்சக்கமான விலையில் விற்கும்போது வட மாநிலங்களுக்கு லட்சக்கணக்கான குவிண்டால் அளவிற்கு விற்கிறீர்களே, காரணம் என்ன ? மத்திய அரசு அப்படி விற்கச் சொன்னாலும் மாநில அரசு தேவை இவ்வளவு இருக்கிறது என்று எடுத்துச்சொல்லி வேண்டிய தடை விதிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** வேர்கடலை, வேர்கடலை எண்ணெய் உபரியாக இருக்கிறது. நம் தேவை போக மீதி இருப்பதுதான் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது.





## மேல்ப்பாளையம் நகரமன்றக் கூட்டம்

*143 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலப்பாளையம் நகரமன்றம் கடந்த 1971, 1972 இரண்டு வருடங்களில் எத்தனை முறை மன்றக் கூட்டங்களை நடத்தியுள்ளது ?

(இ) கடைசியாக நடைபெற்ற கூட்டம் எப்போது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :**

(அ) 1971-ல் 13.

1972-ல் 12.

(இ) கடைசியாக நடைபெற்ற கூட்டம் 31—5—1973.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** 1973-ல் 13 கூட்டங்களும், 72-ல் 12 கூட்டங்களும் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற நேரத்தில் கூறினார்கள். இதில் எவ்வளவு சாதாரண கூட்டங்கள் ? எவ்வளவு அவசரக் கூட்டங்கள் என்பதைச் சொல்வார்களா ? நான் இதை எதற்காகக் கேட்கிறேன் என்றால் சென்னை முனிசிபல் சட்டப் பிரகாரம் ஒவ்வொரு நகரசபையும் மாதத்திற்கு ஒரு சாதாரணக் கூட்டம் எப்படியும் நடத்தியாக வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. மேல்ப்பாளையம் நகரமன்றத்தைப் பொறுத்து அங்கு பல மாதங்கள் தொடர்ந்து சாதாரணக் கூட்டங்களை நடத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1973-ல் என்று சொல்லவில்லை. 1971-72-ல். அதன் விவரம் தற்போது என்னிடம் இல்லை. நகர மன்றத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மிளகனூருக்குத் தார்ச்சாலை அமைத்தல்

*144 வினா.—திரு. த. சேனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கம்பகோனேந்தல் என்ற ஊரிலிருந்து மிளகனூர் என்ற ஊருக்குத் தார்ச் சாலை போடும் வேலையை அரசு 18—5—1973 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை எண் 1014-ல் அனுமதித்துள்ளது.

(இ) அதன் மதிப்பீடு இரண்டரை லட்சம் ரூபாய் ஆகும்.

**திரு. த. சேனையா :** மானாமதுரை ஒன்றியத்திலுள்ள மிளகனூருக்கு தார்ச் சாலை இல்லாததால் பஸ் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தார்ச் சாலைகள் அமைக்கும் தமிழக அரசுக்கு நன்றி கூறுகிறேன். அதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வருகிற ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதும் இத்திட்டம் செயலாற்றப்படும். இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைகள் எல்லாம் கருங்கல் போடப்பட்டு அதன் மேல் தார் போடப்பட்டு எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற சாலைகளாக அமைக்கப்பட இருக்கிற காரணத்தால் உடனடியாகச் செய்வதற்கு இயலாது என்றாலும் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

## *Allotment of baby food*

* 145 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Druggists Association has represented to the Government to give a liberal supply of baby food during September 1973; and

(b) if so, the action taken thereon?



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) உற்பத்தியாளர்கள், குழந்தை உணவு ஒதுக்கீட்டளவை உயர்த்தாததால், மருந்துக்கடை கடைக்காரர்கள் சங்கத்தின் வேண்டுகோளை நிறைவேற்ற இயலாது.

**திரு. என். கே. பழனிசாமி :** இப்போது குழந்தைகளுக்கான பால் பவுடர் வாங்குவதற்கு ஒவ்வொரு நகரத்திலும் பர்த் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்றிருக்கிறது. அப்படி பர்த் சர்டிபிகேட் வாங்கக்கூடிய காலத்தில், ஆறு மாதக் குழந்தைகளுக்கு மட்டும்தான் கொடுக்கிறார்கள். ஆனால் பால் பவுடர் குழந்தைகளுக்கு மூன்று நான்கு வயது வரையில் தேவையாக இருக்கிறது. ஆகவே, பெருவாரியான நடுத்தர மக்கள், ஏழை மக்கள் இதை நம்பியிருப்பதால், ஆறு மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு மட்டுந்தான் இந்த பால் பவுடர் கொடுக்கப்படும் என்றிருக்கும் விதியை ரத்து செய்துவிட்டு, மாதவரம், ஹோசூர் பண்ணைகளில் இந்தமாதிரி பால் பவுடர் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** வெளி மாநிலங்களிலிருந்து வருகிற பால் உணவு, அங்கு பால் கிடைக்காத காரணத்தால் 50 சதவிகிதம்தான் உற்பத்தி செய்கிறார்கள். வருகிற அளவைக் கொண்டு, 50 சதவிகிதம் கிடைப்பதை வைத்துக்கொண்டு ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மூன்று கிலோ என்றும் ஒரு வயதுக்கு மேற்பட்டு இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு கிலோ என்றும் அளவு வைக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகப்படுத்துவது என்றால் இது அதிகம் தேவைப்படுகிறது. 1974-ல் இரண்டு மாதங்களில் பால் உற்பத்தி அதிகமாகும். உற்பத்தி அதிகமாகும்போது இந்த விதிவிலக்குபற்றி ஓரளவிற்குப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்தக் குழந்தை உணவுத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுகிற ஒரு நிலை. ஆகவே குழந்தை மருத்துவர்களைக் கலந்தாலோசித்து ஏதாவது எளிய முறையில் கிடைக்கிற உணவாக குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் உணவு தயாரிக்கும் ஒரு திட்டத்தை இந்த அரசு வகுக்க முன்வருமா ?

[1974 சனவரி 24

இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனே இந்த மருந்தை எல்லா டெப்போ களுக்கும் கொடுத்து வருகிறார்கள். எங்காவது தட்டுப்பாடு இருக்கிறது என்று தெரிவித்தால் உடனே தட்டுப்பாட்டை நீக்க வழி செய்யப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** பாலிடால், என்ட்ரின், மாலதியான் போன்ற மருந்துகள் எந்த யூனியன்களிலும் இல்லாமல் விவசாயி கள் பருத்திக்கு மருந்து அடிக்க வழி இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மருந்தை ஏன் அரசாங்கம் இறக்குமதி செய்யவில்லை? வாங்கி யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஏன் கொடுக்கவில்லை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** என்டரின், பாலிடால், மாலதியான் போன்ற மருந்துகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவை. பி.எச்.சி. நம்முடைய மாநிலத் தில் உற்பத்தி செய்யப்படுகிறது. D.D.T. மகாராஷ்டிர மாநிலத்தில் உற்பத்தி ஆகிறது. என்டரின் தட்டுப்பாடு வந்த உடனேயே மத்திய அரசுக்குச் சொல்லி ஏறத்தாழ இறக்குமதியில் 30 சதவிகிதத்தை, மூன்றில் ஒரு பங்கு தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாங்கி கோவை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது. இதைப் பற்றி விசாரித்தால் நன்றாகத் தெரியும். பருத்தி உற்பத்தி எங்கும் பூச்சியால் குறைந்துவிட வில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பி.எச்.சி. தமிழ்நாட்டிலேயே உற்பத் தியாகிறது என்று சொன்னார்கள். அதை முன்கூட்டியே கொடுத்தால் நன்றாக இருக்கும். பூச்சி மருந்து விலை அதிகமாக ஏறிவிட்டது. மத்திய சர்க்கார் மானியத்தை நிறுத்திவிட்ட தால் மாநில சர்க்கார் மானியம் கொடுத்து உதவலாம். ஊராட்சி மூலமாக விற்பனையாகாமல் வேறு கடைகளுக்குச் சென்று விற்பனையாகக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு மருந்துகளைக் கொடுத்து அதிலே வெளி விற்பனைக்கு அல்ல என்ற சீலைக் குத்தி விடுவது நல்லது. அந்த ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய முன்வருமா? மேலும் . . . (மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே நேரத்தில் எத்தனை கேள்விகள்?



1974 சனவரி 24]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பி.எச்.சி. 10 எங்கு கிடைக்கவில்லை என்று சொன்னாலும் உடனடியாக அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன். இங்கிருந்து வெளிக் கடைகளுக்கு எடுத்துச் சென்று விற்கப்படுகிறது என்ற புகார் வந்தவுடன் விவசாயிகளிடத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இந்த மருந்துகளை விற்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட குறைகள் அதிகமாக இல்லை.

**திரு. முனு ஆதி :** பி.எச்.சி. 10 பூச்சி மருந்து ஒன்றியத்தி லிருந்து தனிப்பட்ட வியாபாரிகளுக்குப் போய்விடுகிறது. 16 ரூபாயாக இருந்த அந்த மருந்தின் விலை இந்த ஆண்டு 26 ரூபா யாக ஆகியிருக்கிறது. இதற்கும் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறார்களா? அல்லது மாநில சர்க்கார்தான் பொறுப்பா? 17—17—17 காம்ப்ளெக்ஸ் 180 ரூபாய் விற்கப்படுகிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பூச்சி கொல்லி மருந்தைப் பற்றி மட்டும் கேளுங்கள். உரத்திற்குப் போகாதீர்கள்.

**திரு. முனு ஆதி :** ஏன் இந்த விலை உயர்வு?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த வினா பூச்சி கொல்லி மருந்தைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன 17—17—17 காம்ப்ளெக்ஸ் என்பது உரம். உரம் வேறு, பூச்சி கொல்லி மருந்து வேறு. பி.எச்.சி. 10 வேளாண்மைத் துறையினரால் வேளாண்மைக் கிடங்கில் 481 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. இந்த மருந்தை வெளிக் கடைகளில் விற்பதற்கு எந்த விதத் தடையும் இல்லை. வியாபாரிகள் 550 ரூபாய்க்கு விற்றுக் கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் வெளிக் கடை களுக்குப் போகத் தேவையில்லை. தேவையான அளவு பூச்சி கொல்லி மருந்தை வேளாண்மைத் துறை கிடங்குகளிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

அநேகமாக 106 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மதராசில் 22, நீலகிரியில் 4, மதுரையில் 25, திருநெல்வேலியில் 5, திருச்சியில் 11, தென் ஆர்க்காடில் 3 என்று கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே எந்த அளவில் கண்ட்ரோல் செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** பால் பவுடர் போன்ற குழந்தை உணவுகளைவிட நம் நாட்டில் கிடைக்கக்கூடிய சாதாரண கேழ்வரகு கூழைத் துணியில் வைத்துப் பிழிந்து அதில் கொஞ்சம் சர்க்கரை போட்டுக் கொடுத்தால் அதிகமான சத்து குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. குழந்தைகள் உணவு இல்லாது சாக வேண்டியவர்கள் அல்ல என்று பேசக்கூடிய தாய்மார்கள் அதை மற்ற தாய்மார்களிடம் பிரசாரம் செய்வதற்கு அவர்களுக்கு அரசாங்கம் ஊக்கமளிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் உணவு பெரும்பாலும் கிராமங்களிலுள்ளவர்களால் தயாரிக்கப்படுகிறது. எனவே, கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வருவது கிடையாது. ஆனால் நகரங்களிலுள்ள தாய்மார்களால், அந்த பிழிவது போன்றவைகளைச் செய்ய முடியாத காரணத்தால், அந்த உணவைக் கொடுக்க முடிவதில்லை. எனவே, நகரங்களிலுள்ள குழந்தைகளுக்கு அந்த நோய் உண்டாகிறது. ஆனால் கிராமத்திலுள்ள தாய்மார்கள் அந்தப் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கேழ்வரகு மாவை தொங்கவிட்டு, அதிலேயிருந்து வடிகின்ற பால் நல்ல சத்துணவு. அந்த முறையை நகரத்திலுள்ளவர்களும் கையாண்டால் நன்றாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது வெண்மைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறதென்றும், அதிகமாகப் பால் கிடைக்கிறது என்றும் சொல்கிறார்கள். நீலகிரியில் ஒரு 'பேபி ஃபுட்' ஆலை துவங்குவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது என்று முன்பு கூறினார்கள். அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை அரசு மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மில்க் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனின் மூலம் குழந்தை உணவு தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஈரோடில் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

*Supply of Kerosiene*

* 146 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to increase the supply of Kerosene in this State?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒவ்வொரு மாதமும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. அதை மாநில அரசு சில்லறை விற்பனையாளர்கள் மூலமும், கைவண்டிக்காரர்கள் மூலமும் மக்களுக்கு வினியோகம் செய்கிறது. மத்திய அரசு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை உயர்த் தினால்தான், அதிக அளவு மண்ணெண்ணெய் வினியோகிக்க முடியும்.

**திரு. என். கே. பழனிசாமி:** மண்ணெண்ணெயின் விலை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. சில இடங்களில் ஒரு லிட்டர் 83 காசாகவும், மற்றொரு இடத்தில் 85 காசாகவும், இப்படி மாறுபட்டிருக்கிறது. எனவே, மண்ணெண்ணெய் விலையை ஒரே சீராக வைத்து விற்பனை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, மண்ணெண்ணெய் விலை சென்னை பூராவும் ஒரே சீராக லிட்டருக்கு 85 காசுகள் என்று நிர்ணயித்திருக்கிறோம். மண்ணெண்ணெய் விலை நிர்ணயிக்கிற அதிகாரம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெயின் போக்குவரத்துச் செலவையொட்டி, அதனுடைய விலை மாவட்டத் திற்கு மாவட்டம் மாறுபடலாம். குறிப்பாக, சென்னைக்கு மண் ணெண்ணெய் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வரு கிறது. இங்கே இல்லை யென்றால் கொச்சியிலிருந்து வருகிறது. எனவே, மண்ணெண்ணெய் கொண்டுவருவதற்கான போக்கு வரத்துச் செலவை ஒட்டி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதன் விலையை நிர்ணயிக்கிறார்கள். எனவே, லிட்டருக்கு 85 பைசா, 86 பைசா, 87 பைசா என்ற முறையில் வித்தியாசம் இருக் கலாம்.

### *Kerosene, etc., seized in Madras*

* 147 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that large stocks of petrol and kerosene were seized from unauthorised salesmen in Madras around 17th February 1973; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) 13—2—1973 அன்று சென்னை மாநகரின் நான்கு வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன. அச் சோதனைகளின்போது மொத்தம் 3,675 லிட்டர் மண்ணெண்ணெய், 287 லிட்டர் பெட்ரோல், 125 லிட்டர் டீசல் எண்ணெய், 55 லிட்டர் எஞ்சின் எண்ணெய் ஆகியவை கைப்பற்றப்பட்டன. காவலர்களால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

### மதுரை பால் பண்ணை

* 148 வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்பண்ணைக்கு எந்தெந்த மாவட்டங்களிலிருந்து, எத்தனை சங்கங்களிலிருந்து பால் வருகிறது ?

(இ) மதுரை பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் வருகிறது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) மதுரை பால் பண்ணைக்கு மதுரை மாவட்டத்தில் 171 சங்கங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 53 சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 18 சங்கங்களும் பால் வழங்குகின்றன.

(இ) இப்பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு 23,099 லிட்டர் பால் வருகிறது.

**திரு. த. சோனையா :** கிராமங்களிலிருந்து பால் பண்ணைகள், மதுரை போன்ற நகரங்களுக்கு எல்லா பாலையும் கொண்டு போய் விடுகிற காரணத்தால், கிராமங்களில் பால் கிடைப்பதில்லை.



எனவே, கிராமங்களிலிருக்கின்ற அந்தந்த பால் பண்ணைகள், அந்த கிராமத்திலே விரும்புகிறவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பால் கொடுக்கின்ற முறையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கிராமங்களிலிருக்கின்ற பால் வழங்குகிற கூட்டுறவு சங்கங்கள் அந்தந்த கிராமங்களுக்குத் தேவையான பாலை வழங்கி, மிகுதியுள்ள பாலைத்தான் பால் பண்ணைகளுக்குத் தருகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற இடங்களில் இப்படித்தான் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. மேலும், கிராமப்புறங்களில் பால் வளத்தைப் பெருக்குவதற்காகவும், எல்லா கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் மக்கள் பயன் அடைகின்ற வகையிலும் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் அரசாங்கத்தின் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

### *Price of milk in Madras*

* 149 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Religious and Endowments be pleased to state—

(a) whether the prices of the milk supplied in Madras by the Dairy Corporation has been increased from the middle of April 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

(அ) ஆம். பாற்பண்ணைக் கழகம், பாலின் விலையை 1973 ஏப்ரல் திங்கள் 16-ஆம் நாளிலிருந்து உயர்த்தியுள்ளது.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் தான் வழங்கும் பல வகையான பாலின் விலைகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

| புட்டிப்பால். | லிட்டர் ஒன்றுக்கு முன்பிருந்த விலை. | லிட்டர் ஒன்றுக்கு மாற்றியமைக்கப்பட்ட விலை. | கொழுப்பு சத்தின் அளவு. | கொழுப்பு சத்து அல்லது பிற சத்துக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூபாய். | ரூபாய். | சத விகிதம். | சத விகிதம். |
| (அ) தரப்படுத்தப்பட்ட பால். | 1·30 | 1·50 | 4·5 | 8·5 |
| (இ) தரம் உயர்த்தப்பட்ட பால். | 1·00 | 1·20 | 3·0 | 8·5 |

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தக் குழந்தைகள் உணவு எளிய முறையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் மூலமாக, 'வின் புட்' என்ற பெயரால் காந்தி கிராமத்தில் தயாரிக்கப்பட்டுவரும் ஒரு எளிய விலையுள்ள உணவுப் பொருளை மேலும் தமிழகத்தில் இரண்டு மூன்று இடங்களில் தயாரிக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனை வழங்கப் பட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட எளிய உணவு கிடைக்குமானால் பெருமளவிற்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த க்ளாக்ஸோ என்ற பால் உணவு கிடைப்பதே கிடையாது. மருந்துக் கடைகளில் சென்று கேட்டால் எங்களுக்கு வருகிற சப்ளையில் இருக்கக்கூடிய சர்ட்டிபி கட்டுகளுக்கே கொடுக்க முடியவில்லை, இனிமேல் புதிதாகக் குழந்தைகள் பிறந்து அக் குழந்தைகளுக்காக சர்டிபிக்கட் கொண்டு வந்தால் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே இனிமேல் பிறக்கக்கூடிய குழந்தைகள் உணவு இல்லாமல் சாக வேண்டுமென்று பொருளா? குழந்தைகளுக்கு இதைத் தள்ளிப் போட முடியாது. ஆகவே உடனடியாக இந்தப் பஞ்சத்தைத் தீர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது? லாக்டோடெக்ஸ் பால் உணவு கொடுத்திருக் கிறார்கள் அதைக் கூட அதிக விலைக்குத்தான் விற்கிறார்கள். இவற்றை யெல்லாம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய அரசாங்கம் முன்வருமா? பெரியவர்கள் காத்துக் கொண் டிருக்கலாம், ஆனால் குழந்தைகள் தாங்காது. எனவே இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இவர்கள் எதை எடுத்தாலும் இப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு [illegible]லாவது நியாயமாக நடப்பதாக அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. நியாயத்தில் பிறந்து நியாயத்தில் வளர்ந்தவர்கள் என்று அவர்கள் ஒத்துக்கொள்ளப் போவதுமில்லை. எவ்வளவு முடியுமோ அதை, கிடைப்பதை வைத்துக் கொண்டு செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் குழந்தைகளுக்கு உணவு நயமாகக் கிடைக்கிற வகையில் மாநில அரசு இப்போது பரிசீலித்து வருகிறது. தட்டுப்பாடு ஏற்பட்ட பிறகு, மூன்று வெளி





மாநிலங்களிலிருந்து பஞ்சாப், மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங் களிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அவர்கள் 1974-ல் அதிகம் கிடைக்கும் என்ற முறையில் சொல்கிறார்கள். அப்படி வந்து விட்டால் இந்த நிலைமை யெல்லாம் சரியாகப் போய்விடும். விலை உயர்வு இருக்கிறது என்று சொல்கிறார்கள். இவர்கள் விலை உயர் விற்கு ஊக்கமளிப்பதைவிட பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நாங்கள் கிட்டத்தட்ட 106 கேஸ்கள் பிடித்திருக்கிறோம். அவர்களைப் பொறுத்தமட்டில், இங்கு எங்களைக் காட்டிக் கொடுக்கும் நிலைமையில் பேசாமல் கூடுமான வரையில் எங்கெங்கு அதிகமான விலைக்கு விற்கிறார்கள் என்று அவர்கள் எங்களிடம் சொல்வார் களானால் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும். இப்போது இதற்கான விலைகளை சர்க்காரோ மற்றவர்களோ நிர்ணயிக்கவில்லை. தனியார் கம்பெனிகள் தான் அந்த விலைகளை நிர்ணயிக்கிறார்களே தவிர சர்க்கார் இவற்றிற்கு ஒரு விலை நிர்ணயிப்பதாகத் தெரிய வில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 'மோட்டல்' கற்பிக்கிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்தக் குழந்தைகள் உணவு கிடைப்பது கஷ்டமாக இருப்பதன் காரணமாகப் பல குழந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்ட்ரோல் வருகிற காரணத்தால் இப்படி ஒரு நிலை ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணருகிறதா? இந்தக் கண்ட்ரோலை எடுத்துவிட்டு— 50 சதவீதம் கிடைப்பதாகச் சொல்கிறார்கள், அதுகூடச் சரியாகக் கிடைப்பதில்லை. அவை பதுக்கல்காரர்களிடம் சென்று ப்ளாக் மார்க்கட் ப்ரைஸ் கொடுத்து வாங்க வேண்டிய நிலையெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே கண்ட்ரோலை எடுத்துவிட்டு அல்லது இந்த 50 சதவிகிதத்துக்குப் பதிலாக குழந்தைகள் உணவு அதிக அளவில் கிடைப்பதற்கு வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பதுக்கல்காரர் களைப் பிடிப்பதற்காக டி.ஐ.ஆர். 114-வது பிரிவுப்படி இருப்பு களுக்கு போர்ட் போட வேண்டும். விலைகளுக்குப் போர்ட் போட வேண்டும், சில்லறை விற்பனை குறித்து போர்ட் போட வேண்டும். கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும், விற்பனைக்கு வைத்துக் கொள்வதற்கு சர்டிபிக்கட் வைத்துக் கொள்ளவேண்டும் என்றெல் லாம் செய்து கள்ளமார்க்கெட் இல்லாமல் செய்திருக்கிறோம்.

பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் வினாவின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வினா உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 25-ம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பது என்று நாம் முன்பு முடிவு எடுத்து இருந்தோம். அதை 28-ம் தேதி என்று வைத்துக் கொண்டு, இன்றும், நாளையும் விவாதம் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 28-ம் தேதியன்று எடுத்துக் கொள்வதாக இருந்த அரசினர் அலுவல்கள் 29-ம் தேதியன்றும், 29-ம் தேதியன்று எடுத்துக்கொள்வதாக இருந்த தனியார் அலுவல்கள் 30-ம் தேதியன்றும் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின் பேரில் நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பில் சில திருத்தங்களை நாங்கள் கொடுத்து இருக்கிறோம். அந்தத் திருத்தங்களிலே ஓரளவிற்கு எந்தப் பிரச்சினைகளில் எல்லாம் நாங்கள் வேறுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

அதே நேரத்தில் பொதுவாகப் பேசுகின்றபோது கவர்னர் பெருமானின் பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப் போகும் காரியங்களைப் பற்றியும், கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளைப் பற்றியும் கோடிட்டுக் காட்ட வேண்டிய அளவில் இருக்க





வேண்டும். உண்மையில் அது அப்படியில்லை என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்சியாளர்களுடைய திட்டங்களையும், கொள்கைகளையும் கவர்னர் பேருரை குறிப்பிட்டு இருப்பதும், அந்தத் திட்டங்களுக்கு ஏற்ப நிதி பகிர்ந்து அளிப்பதும், புள்ளிவிவரங்களைக் கூறுவதும் தான் வரவு செலவுத் திட்டம் என்பது என்று நான் அறிந்த வரையில் எண்ணுகிறேன். கவர்னர் உரையில் கொள்கைகளைக் குறிப்பிடாமல், நிதியமைச் சரின் பிரசங்கத்திற்கு கவர்னர் அதை ஒத்தி வைத்து இருக்கிறார் என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இதை 1957-லே மே மாதம் 6-ம் தேதியன்று கவர்னர் உரை மீது நடந்த விவாதத்தில் பங்கு கொண்டு அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் கூறிய கருத்தைத்தான் நான் இந்த இடத்தில் சொல்ல விரும்புகிறேன். இதை ஏற்கனவே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் சொன்னார்கள். இது கவர்னர் உரைமீது பொதுவான கருத்து.

அடுத்தாற்போல், இந்த கவர்னர் உரையிலே வரப் போகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். கவர்னர் உரையில் ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்த மாக தமிழ்நாட்டில் நாம் ஒரு நகல் திட்டம் வைத்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நகல் திட்டத்தை சட்ட மன்றத்திற்கு முன்னால் வைத்து விட்டோம் என்று சொன்னால் அதை வரவேற்று இருக்க முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவற்றைக் குறித்து இதே மன்றத்தில் விவாதித்து, உறுப்பினர்களின் கருத்தை அறிந்து, அதன் மூலமாக மத்திய அரசுக்கு நாம் சொல்ல வேண்டிய விஷயங்களை, எந்தெந்த வகைகளில் அமல் படுத்த வேண்டுமென் பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறோம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், எந்த முக்கியமான கொள்கையாகட்டும், அதை இங்கே கொள்கை சம்பந்தமாக விவாதித்து, இங்கேயுள்ள உறுப்பினர் களின் கருத்துக்களை அறிந்து, பல்வேறு கட்சிகளின் கருத்துக்களை தெரிந்து கொண்டு, அதற்குப் பின்னால் மொத்தமாக ஏகோபித்த கருத்தாக ஒரு முடிவு எடுப்பது என்பது பாரம் பரியமாக இருக் கிறது. அந்தப் பாரம்பர்யம் இப்போது கைவிடப்பட்டு இருக் கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

அடுத்தாற்போல், இந்த கவர்னர் உரையிலே சில விஷயங்கள் சொல்லப்படாமல் இருக்கிறது. உதாரணமாக நான் இதைக் 'காரக்டரைஸ்' செய்வது என்றால் is evading the main issue பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அச்சத்தையும், சுயக்கட்டுப்பாட்டை உண்டாக்கும் விதத்திலும் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பற்றி, விவசாயிகளைப் பற்றி, விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி, நிலச் சீர்திருத்தம் பற்றி, நகர்ப்புற உச்சவரம்பு பற்றி, மாணவர்கள் கிளர்ச்சி பற்றி குறிப்பிடப்படாமல் இருப்பது அகஸ்மாத்தாக நேர்ந்ததல்ல. சம்பள உயர்வை எதிர்ப்பது, ஜாயிண்ட் செக்டாரை ஆதரிப்பது, ஆகியவை எல்லாம் இந்த அரசின் போக்கு என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அந்த நோக்கில் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள் என்று நாங்கள் சொன்னால் கண்டிப்பாக ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கோபித்துக் கொள்ளலாம். நேற்று ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரே இன்று லெவி சுகருக்கு நாம் அதிகமான விலை வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்பது முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்குவது போலாகும் என்று எடுத்துச் சொன்னார்கள். இங்கேயிருக்கும் சர்க்கரை ஆலை முதலாளிகள் எல்லாம் பெரிய பெரிய புள்ளிகளாக இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்த வரையில் சொன்னால், இந்த நாட்டில் 75 ஏகபோகக் குடும்பங்கள் முன்பு இருந்தார்கள், இப்போது 150 ஏகபோகக் குடும்பங்களின் பட்டியலில் இவர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நேற்று ஆளும் கட்சி உறுப்பினர் கரும்பைப்பற்றி பேசியபோது நான் குறுக்கிட விரும்பவில்லை. காரணம், அப்போது விளக்கம் சொன்னால் சரியாக இருக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது எதிர்க்கட்சி அங்கத்தினர் குறிப்பிட்டதால் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த 'லெவி பிரைஸ்' என்பது மத்திய அரசு கொள்முதல் செய்கிற விலை. லெவி பிரைஸ் என்பது வேறு, கன்ஸ்யூமர் பிரைஸ் என்பது வேறு. கன்ஸ்யூமர் பிரைஸ் அகில இந்தியாவிற்கும் ஒரே விலைதான், ரூ. 215. அதை மாற்றச் சொல்லவில்லை. ஆனால் மத்திய சர்க்கார் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விலை கொடுத்து சர்க்கரை வாங்குகிறார்கள். பஞ்சாபில் அவர்கள் வாங்குவது ரூ. 195-க்கு. அந்தச் சர்க்கரை



யையும் ரூ. 215-க்குத்தான் விற்கிறார்கள். தமிழ்நாட்டில் அவர்கள்
கொடுப்பது ரூ. 155. அதையும் ரூ. 215-க்குத்தான் விற்கிறார்கள்.
நமக்கு பஞ்சாபில் கொடுக்கிற விலை கொடுத்தால் போதும். நாம்
கேட்கிற கொள்முதல் விலையை மத்திய அரசு கொடுத்தால், அது
ஆலை முதலாளிகளுக்குப் போகாது. நான் நிச்சயமாக அதைச்
சொல்ல முடியும். அப்படி அவர்கள் கொடுப்பார்களானால், அது
நிச்சயமாக கரும்பு உற்பத்தியாளர்களுக்குப் போகும்படி செய்ய
லாம். இரண்டையும் அருள்கூர்ந்து குழப்பிக் கொள்ள வேண்டாம்
என்று கேட்டுக்கொள்கிறேன். கன்ஸ்யூமர் பிரைஸ் என்பது
அகில இந்தியாவிற்கும் ரூ. 215 தான். பஞ்சாபில் ஆகட்டும், மகா
ராஸ்டிரத்தில் ஆகட்டும், மத்தியப் பிரதேசத்தில் ஆகட்டும், ராஜஸ்
தானில் ஆகட்டும் எல்லாயிடத்திலும் ஒரே விலைதான். ஆனால்
லெவி பிரைசைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் வாங்குகிற
சர்க்கரையின் விலை ரூ. 155, பஞ்சாபில் வாங்குகிற சர்க்கரைக்கு
ரூ. 195 என்று கொடுக்கிறார்கள். இந்த அதிகப்படியான ரூ. 40
நமக்குக் கொடுத்தால், நிச்சயமாக அது கன்ஸ்யூமர் பிரைஸ் ரூ.
215-ஐ மாற்றாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சுருக்கமாக சொல்லப்போனால்,
தமிழ்நாட்டில் இருக்கிற பெரிய ஆலை முதலாளிகளுக்கு அதிகமாக
வாங்கிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் உங்கள் நோக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் தெளிவு படுத்த
விரும்புவது என்னவென்றால் இந்த அதிகப்படியான சர்க்கரை விலை
ரூ. 40 நமக்குக் கொடுக்கப்படுமானால், நான் இப்போதே உறுதி
யாகச் சொல்ல முடியும். அந்த ரூ. 40 கரும்பு உற்பத்தியாளர்
களுக்குத்தான் கூடுதலாகப் போகும். இப்போது நாம் ரூ. 90
அல்லது ரூ. 95 அல்லது ரூ. 100 என்ற நிலையில் கரும்புக்குக்
கொடுக்கிறோம். இந்த ரூ. 40 அதிகப்படுமானால், மத்திய அரசி
லிருந்து நமக்கு ரூ. 40 அதிகம் கிடைக்குமானால், நான் இப்போதே
சொல்கிறேன் ரூ. 20 அதிகமாகக் கொடுக்க முடியும். ஒவ்வொரு
டன்னுக்கும் ரூ. 110 அல்லது ரூ. 115 கொடுக்க முடியும்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** பொதுவாக, அமைச்சர் அவர்கள்
விளக்கத்திற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்தக் குறுக்கீடுகளுக்
கெல்லாம் சேர்த்து எனக்கு நேரம் கொடுக்க வேண்டுமென்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 சனவரி

கேட்டுக்கொள்கிறேன். இப்போது மத்திய அரசு லெவி சுகரைப்
பொறுத்தவரையில் கொள்முதலுக்காக ரூ. 10 வரி குறைத்து இருக்
கிறார்கள். அப்படியானால் கன்ஸ்யூமருக்கு குறைத்துக் கொடுக்க
வேண்டுமென்பதுதானே நோக்கம். இன்றைக்கு நீங்கள் இங்கே
இருக்கும் ஆலை முதலாளிகளுக்கு ஆதரவாகத்தான் வாதாடுகிறீர்
கள். அதிலும் வி.எஸ்.டி., ஏ.பி.டி., கோத்தாரி, பாரி, கருமுத்து
தியாகராஜ செட்டியார் இப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாகக்
கிடைக்கச் செய்வதற்காகத்தான்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவைக்குத் தவறான
தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைத்
திருத்த வேண்டுமென்பதற்காக சொல்கிறேன் லெவி சர்க்கரை
மீது எக்சைஸ் டியுடி 5 சதவீதம் குறைத்தார்கள். 25 சதவீதம்
என்று லெவி சர்க்கரை மீது எக்சைஸ் டியுடி இருந்தது. அதில்
5 சதவீதம் குறைத்தார்கள். 30 சதவீதம் என்று எக்சைஸ் டியுடி
வெளி மார்க்கெட் சர்க்கரை மீது இருந்தது. அதை 36½
சதவீதம் என்று உயர்த்தினார்கள். இதை உயர்த்துவதற்குக்
காரணம் என்ன ? லெவி சுகரில் குறைத்து இருக்கிறார்கள்.
கன்ஸ்யூமர் பிரைசில் கன்சஷன் கொடுத்து இருக்கிறார்கள் என்று
சொல்வது சரியல்ல. இதனால் முதலாளிகளுக்குக் கொழுத்த
லாபம் கிடைத்திருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன். அதற்கு
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்ன சொல்கிறார்கள் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நம்முடைய சர்க்காரின் சார்பில்
லெவி பிரைஸ் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்
பதை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள் என்று கூறிவிட்டு, அடுத்த
விஷயத்திற்குப் போகலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** லெவி பிரைஸ் பற்றி நான்
பேசவில்லை. மத்திய அரசாங்கம் எக்ஸ்-மில் ரேட்டில் லெவி சுகர்
மீது போட்டிருந்த 25 சதவீதம் எக்சைஸ் டியுடியை 20 சதவீதம்
ஆக்கினார்கள். ஓபன் மார்க்கெட்டில் கொடுக்கப்பட்ட சுகர் மீது
30 சதவீதம் போட்டிருந்ததை 36½ என்று உயர்த்தியிருக்கிறார்
கள். இதனால் வெளி மார்க்கெட் சர்க்கரை விலை உயர்ந்தது. இந்த
5 சதவீதம் குறைந்ததால் யாருக்கு லாபம் கிடைத்தது ? கன்ஸ்யூ
மர்களுக்குக் கொடுத்தார்களா, கன்ஸ்யூமருக்கு வந்து சேர்ந்து
இருக்கிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்



1974 சனவரி 24]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்களுடைய சர்க்காரைத் தாக்குவதில் ஆட்சேபணை இல்லை தமிழ்நாட்டை இன்னொருவருக்கு அடகு வைத்துவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. பஞ்சாபில் லெவி சுகர் ரூ. 194.33.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சர் அவர்களே, இந்த விவரங்களை ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள்

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீங்கள் இரண்டு கருத்துக்களை எழுப்பியிருக்கிறீர்கள். ஒன்று நாம் போய் அவர்களிடம் கூடக் கொடுக்க வேண்டும் என்று கேட்கவே இல்லை. லாஜிகலாகக் கேட்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பத்திரிகையிலே தமிழக அரசு லெவி பிரைஸை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்பதற்கு தூது கோஷ்டி அனுப்புவதாகச் செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** லெவி சுகர் பஞ்சாபில் ரூ. 194, உத்தரப் பிரதேசத்தில் ரூ. 158, 155. நாம் கொஞ்சம் குறைத்துக் கேட்கலாம் என்பது வேறு பிரச்னை. இரண்டு பிரச்னைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. ஏதோ மத்திய சர்க்கார் உத்தரவு போட்டு, எக்சைஸ் டியூட்டியை அரசாங்கம் பொது மக்களுக்குக் கொடுக்கின்ற லெவி சுகருக்குக் குறைத்து, ஓபன் மார்க்கெட் சுகருக்கு அதிகப்படுத்தி கன்ஸ்யூமருக்கு நல்லது செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். அதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது. முதலாளிகள் கொள்ளை லாபம் அடிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதைத்தான் ஆட்சேபிக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கன்ஸ்யூமர் பிரைஸ் குறைய வேண்டும் என்பதற்கு கண்டிப்பாக நாங்கள் இங்கே பேசுவது மட்டுமல்ல. நாடாளுமன்றத்திலேயும் ஏற்கனவே ரூ. 2 இருந்ததை ரூ. 2.15 ஆக்குவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்பதை எங்களுடைய உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இன்னும் அதையும் குறைப்பதற்கு நாங்கள் பேசத் தயார். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் பெரிய முதலாளிகள் சார்பில் லெவி பிரைஸ் அதிகமாக வேண்டும் என்று தமிழக சர்க்கார் போய் மத்திய சர்க்காரிடம் கேட்கப் போகிறது, தூது கோஷ்டி போகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்

கின்ற நேரத்தில் இம்மாதிரி தூது கோஷ்டி அனுப்புவது இல்லை சர்க்காரின் சார்பாக என்று பதில் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இனி அடுத்த விஷயத்திற்கு நான் போகலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கனம் உறுப்பினர் அவர்களுடைய நன்மைக்காகவும், சபையின் நன்மைக்காகவும் ஒரே ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு லெவி சுகர் விலை ஏற்றியதற்குப் பிறகு 20 சதவீதத்தி லிருந்தா லெவி சுகருக்கு இருந்த எக்சைஸ் டியூட்டியை 20 சதவீத மாகக் குறைத்திருக்கிறார்கள். எதற்காகக் குறைத்திருக்கிறார்கள்
so that the consumers do not pay the higher price for sugar at fair shops
என்று யு.பி. மில் ஓனர்ஸ் அசோசியேஷன் விளம்பரம் கொடுத் திருக்கிறார்கள். யாருக்கும் எந்தவிதமான கன்ஃப்யூஷனும் தேவையில்லை. எக்சைஸ் டியூட்டியைக் குறைத்தது லெவி சுகர் அதிகமான விலைக்கு விற்கக் கூடாது என்பதற்காகத்தான். லெவி சுகருக்கு ரூ. 10 அதிக விலை வேண்டும் என்று கேட்டால் கன்ஸ்யூ மர் அதிகமாக இன்னும் 10 பைசா கொடுக்கக்கூடிய நிலையில் கொண்டுவிடும். ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன். லெவி சுகர் பிரைசை அதிகப்படுத்த வேண்டும் என்று மாநில அரசு மத்திய சர்க்காரிடம் கேட்கக் கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அடுத்து நான் பொதுவாகச் சொல்கிறபொழுது தொழிலாளிகளைப் பற்றி எந்த விஷயமும் கவர்னர் உரையிலே இல்லை என்று நான் சொன்னேன். அதிலே சில விவரங்களைச் சொல்லிவிட்டு தொழில்களைப்பற்றி சில பிரச்னை களைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். தொழிலாளர்களைப் பற்றிக் கூறுகிற பொழுது நான் ஏற்கனவே கொடுத்த திருத்தத்தில் refusal of Simpson Co. Management to reinstate 400 workers in spite of Government assurances
29—9—1972 ஒப்பந்தப்படி சிம்ப்ஸன் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள். சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிற 376 தொழி லாளிகளுக்கும் சம்பளம் உண்டு. சார்ஜ் ஷீட் போட்டு முதலாளிகள் விசாரித்திருக்கக்கூடிய 184 பேர்களைப் பற்றிய விசாரணை 45 நாட் களுக்குள் முடியும். 15 நாட்களுக்கு ஒரு தடவை லேபர் கமிஷனர்



அதை பார்ஸ்யூ பண்ணும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். கடைசியில் எந்த முடிவு எடுத்தாலும் கூட, அதை முதல் அமைச்ச ரிடம் விட்டு, முதல் அமைச்சர் அவர்களுடைய முடிவை எல்லோரும் ஏற்றுக் கொள்வது. போலீஸ் கேசில் இருப்பவர்கள்
will have to wait the result of criminal proceedings
என்றெல்லாம் சொன்னதற்குப் பின்னரும் இதுவரையில் யாரும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதே நேரத்தில் ஸ்ட்ரைக் கில் ஈடுபட்டவர்கள் யார் பேரிலும் நடவடிக்கை எடுக்கக் கூடாது. 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிச் சம்பளம் 27—9—1972-ல் கொடுக்கப் படும். ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் இரண்டு தரப்பினர்களும் முறையாக நடந்துகொள்ள வேண்டும். முதலாளிகள் அன்ஃபேர் லேபர் பிராக்டீசில் ஈடுபடக் கூடாது, தொழிலாளிகள் உற்பத்தியை தடை செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டது. இப்படி இருந்தும் கூட இன்று வரையிலும் இது நடந்தது 25—9—1972, 1, 1½ வருஷம் ஆகிவிட்டது. அதற்குப் பின்னும் கூட இன்னும் யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொன்னால், சர்க்கார் கொடுத்த உத்தரவாதத்திற்கு என்ன மதிப்பு நிர்வாகம் கொடுக்கிறது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, சங்க பேதம் இல்லாமல் எல்லா தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும், எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் கூட சமீபத்தில் சென்னையில் 19-ம் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் கண்டிப்பாக இந்த ஒப்பந்தத்தையாவது முறையாக அமுல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன் னார்கள். கிரிமினல் ப்ரொசிடிங்களில் சம்பந்தப்பட்டவர்கள் 134 பேர்கள் என்று நினைக்கிறேன், இதுவரையில் அவர்களுடைய கேஸ் களை நடத்துவதைக் காணோம். எனக்குத் தெரிந்தவரையில் முன்னணியில் இருக்கக்கூடிய 50 பேர்கள்மீது எப்படியாவது கேஸ் களை நடத்திவிட்டு, மற்றவர்களை டிஸ்சார்ஜ் பண்ணிவிடலாம் என்ற முறையில் நிர்வாகம் ஆவலாக இருக்கிறது. முன்னணியில் இருக்கக்கூடியவர்களைப் பழி வாங்கக்கூடிய முறையில் நிர்வா கத்தின் போக்கு இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் சிம்ப்ஸன் பிரச்னையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் 'என்ன நிலை எடுக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில்கள் சம்பந்தமாக இருக்கக்கூடிய விஷயங்களைப் பற்றிச் சொல்ல முற்படுகிறேன். இப்பொழுது வேலை நிறுத்தம் கூடாது என்று பலரும் சொல்கிறார்கள். ஆனால், லாக் அவுட் கூடாது என்று யாரும் சொல்லியதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். நானும், திருமதி அனந்தநாயகி அவர்களும் கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்களுக்கு வக்காலத்து வாங்குகிறோம் என்று கூறுகிறார்கள். மதுரை நகரில் மூன்று மில்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மில்லுக்கு மட்டும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. வக்காலத்து வாங்குவதாகச் சொல்கிறார்கள். நான் அதைத் திருப்பிச் சொல்லலாம். இம்மாதிரி மின்சாரம் வழங்குவதில் பாருபாடு காட்டுவதற்கு என்ன காரணம்? நீங்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். நான் பேசுகிறபொழுது காரணம் சொன்னேன். தேர்தலுக்குப் பணம் கொடுத்த மில்களுக்கு மின்சார வெட்டு கிடையாது. தேர்தலுக்குப் பணம் கொடுக்காத மில்லுக்கு மின்சார வெட்டு என்ற குற்றச்சாட்டை நான் சாட்டியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். பொறுப்பு உள்ள ஒரு தலைவர் இப்படிப் பேசுவது சரியல்ல. மன்றத்தில் விளக்கம் தரப்பட்டது. 206 நூற்பு ஆலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாம் 75 சதவிகிதம் பவர் கட் போட்டோம். பவர் கட் எல்லோருக்கும் போட்டோம். 25 சதவிகிதம் மின்சாரம் எல்லா மில்களுக்கும் கொடுத்தோம். அதற்கு மேலே கேரளா, மைசூர், மகாராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்து நமக்கு மின்சாரம் கிடைத்தது. அப்படிக் கிடைத்த மின்சாரத்தை எந்த மில்கள் முன்வந்து வாங்குகின்றனவோ அவர்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த மின்சாரத்தின் மூலம் அதிகமாக உற்பத்தி செய்கின்ற நூலை அரசாங்கத்தினிடம் குறைந்த விலையில் ஒப்படைத்துவிட வேண்டும். இதை எல்லா மில் முதலாளிகளும் ஒத்துக்கொண்டார்கள், நூலை ஒப்படைத்தார்கள், நியாயமான விலையிலே நெசவாளர்களுக்கு அதை நாம் வழங்கினோம். ஒரே ஒரு ஆலை முதலாளி மட்டும் நீதிமன்றத்திற்குச் சென்றார். அதன் விளைவாக ஒரு மாதத்தில் ரூ. 10 லட்சம் அதிக லாபம் கிடைத்தது என்று பத்திரிகையிலே விளம்பரம் தந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் பாதுகாப்புச்





சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்குப் பணம் பெற்றுக் கொண்டு அந்த முதலாளிகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? இந்தக் கொள்கையிலே என்ன தவறு என்று சொல்லவேண்டும். மின்சாரம் கொடுத்து, அதன் மூலம் உற்பத்தியாகின்ற நூலை கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் திட்டம்.

THIRU K. T. K. THANGAMANI : There is something which as a student I learnt. There are certain acts which would lead to such results and there will always be some pretext. I say that the explanation given by the Hon. Minister is a pretext. நான் சொல்வது என்னவென்றால் பக்கத்திலுள்ள மகாலட்சுமி மில், சீதாலட்சுமி மில், விசாலாட்சி மில் இவைகளுக்கெல்லாம் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தத் திட்டத்தை மறுக்கிறார்களா? இந்தத் திட்டம் தவறு என்று சொல்கிறார்களா? ஆலை முதலாளிகள் சங்கம் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. அதிக மின்சாரம் கொடுத்தால் உற்பத்தியாகின்ற நூலை குறைந்த விலைக்கு நெசவாளர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினிடம் ஒப்படைத்தார்கள். அந்த மில்களுக்குத்தான் மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. இது தவறா? கருமுத்து தியாகராச செட்டியார் மில்லுக்கும் கொடுக்கவேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சி கேட்கிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** உங்களுடைய வார்த்தை நீங்கள் சொன்னால் நான் என்னுடைய வாதத்தைத் திருப்பிச் சொல்வேன். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை கருமுத்து தியாகராச செட்டியாருக்கு சொந்தமாக இருக்கக்கூடிய மீனாட்சி மில்லில் ஒரு மாதத்திற்கு மேலாக கதவடைப்பு செய்திருக்கிறார்கள். இதை நாங்கள் எதிர்க்கிறோம். அரசாங்கம் இதை ஒத்துக்கொண்டு இந்த அரசு என் மில்லைத் திறக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு வாதத்திலிருந்து இன்னொரு வாதத்திற்குப் போகிறார்கள். இந்த மன்றத்திற்கு ஒரு தெளிவு ஏற்படவேண்டும். மற்ற மாநிலத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்று இந்த மில்களுக்கு வழங்கி, அதன்மூலம்

உற்பத்தியை அதிகரித்து அந்த நூலைக் குறைந்த விலைக்கு நெசவாளர்களுக்கு வழங்குவதற்கான ஒரு ஏற்பாட்டை ஒரு முதலாளி எதிர்த்தார். அந்த எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர் கொள்ளை லாபம் அடித்தார், கொள்ளை லாபம் அடித்ததாக அவரே அறிக்கை விட்டார். அந்த முதலாளிக்கு நீங்கள் ஆதரவு கொடுக்கிறீர்களா? அந்த முதலாளி நூலை ஒப்படைப்பதற்கு ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவருக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பது கட்சிக்கொள்கையாக இருக்கிறதா?

(முற்பகல் 11.00)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னுடைய பாயின்ட்—இந்த அரசு தொழிலாளர்களுடைய நலனைக் கருதவில்லை என்பதுதான். அந்த மில் மூடப்பட்டு ஒரு மாதம் கிடந்தும், தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு என்ன செய்தது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுக்காக வாதாடுகிறார்கள். நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நான் இப்போது கேட்பதெல்லாம் இந்த அரசாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுத்து அண்டை மாநிலத்தில் இருந்து பெறுகிற மின்சாரத்தை மில்களுக்குக் கொடுத்தால் அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கிற நூலை எல்லாம் அரசாங்கத்தினிடம் கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்காக அளிக்க வேண்டும் என்கிற போது அதனை 206 மில்காரர்கள் ஏற்றுக்கொண்டு, தாங்கள் உற்பத்தி செய்த நூல்களைத் தந்திருக்கிறார்கள். இவர் ஒருவர் மட்டும் தரமாட்டேன் என்றார். சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார். ஏழை நெசவாளர்களுக்குக் கொடுமை செய்தார். அதனால் தாம் பெரும் லாபம் சம்பாதித்திருப்பதாகப் பத்திரிகையில் விளம்பரப்படுத்திக்கொண்டாரர். இவருக்கு நாம் மின்சாரம் கொடுக்காமல் இருந்தது தவறு என்கிறாரா என்பதுதான். இதை விளக்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Minster is misleading the House, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிஸ்லீடிங்காகச் சொன்னால் ப்ரிவிலேஜ் ஆக வரும். நீங்கள் அதைக் கொண்டு வாருங்கள்.





**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்த முதலாளிக்கு நீங்கள் சாதகமாக இருந்த காரணத்தினால்தான் அவர் கதவடைத்து ஒரு மாதமாகி, ஒரு வழியும் இல்லாது, அந்த முதலாளி சொன்ன அடிப்படையில் தொழிலாளர்கள் கையெழுத்துப் போட்டு உள்ளே போகவேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டது. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உங்கள் வாதம் அந்த முதலாளிக்கு நாங்கள் மின்சாரம் கொடுக்காது அநீதி செய்தோம் என்பதாகும். இப்போது அந்த முதலாளிக்கு நாங்கள் சாதகமாக இருக்கிறோம் என்கிறீர்கள். இந்த இரண்டில் எது உண்மை?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்த முதலாளிக்கு நீங்கள் சாதகமாக இருந்தீர்கள் என்பதுதான் என் வாதம். கருமுத்து தியாகராச செட்டியார் விஷயத்தில், வி. எஸ். டி. போன்றவர்களுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் நீங்கள் ஆதரவாக இருந்து கொண்டு தூது கோஷ்டி போகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் கேட்கிற விஷயத்தை விட்டுப் போகிறீர்கள். அரசாங்கத்தின் கொள்கைப்படி மின்சாரம் கொடுத்தால் அவர்கள் உற்பத்தி செய்கிற நூலை அரசாங்கத்திடமே கொடுக்கவேண்டும் என்பதற்கு அவர் ஒத்துக்கொள்ளவில்லை, அவருக்கு மின்சாரம் மறுக்கப்பட்டது, அது தவறு என்கிறீர்களா? அரசாங்கத்தின் கொள்கை தவறு என்று எதிர்த்து அந்த மில் முதலாளி சுப்ரீம் கோர்ட்டுக்குப்போனார். ஆனால் கனம் உறுப்பினர் அரசாங்கம் கொண்ட கொள்கை தவறு என்கிறாரா? அல்லது இதை ஆதரிக்கிறாரா என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அன்றைக்கே நான் அதைப் பற்றிக் குறிப்பிட்டேன். மின்சார வெட்டை வைத்துக்கொண்டு நீங்கள் மின்சாரத்தைப் ப்ளாக் மார்க்கெட் பண்ணினீர்கள். சில மில்களுக்கு அதிகமாகவும், சிலவற்றுக்கு மறுத்தும் வந்தீர்கள். Anyway I am not going to be diverted. I have made my point. Let him have his point. Let the country decide. If he thinks I am for Thiru Karumuthu Thiagaraja Chettiar, let the people decide.

[1974 சனவரி 24

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் சொல்வதை—மாண்புமிகு தங்கமணி அவர்கள் தான் ஆரம்பித்தார்—இப்போது வேறுதிசை திருப்புகிறார். திரு. தங்கமணி சொன்னது தேர்தலுக்கு நிதி கொடுத்தவர்களுக்கு மின்சாரம் கொடுத்தீர்கள், இவர் தேர்தல் நிதி கொடுக்க மறுத்த காரணத்தினால் மின்சாரம் கொடுக்கவில்லை. எனக் குற்றம் சாட்டுகிறேன் என்பதாகும். அதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள், 'அவருக்கு மின்சாரம் கொடுக்காததற்குக் காரணம் தேர்தல் நிதி கொடுக்காதது அல்ல, மின்சாரம் கொடுத்தால் உற்பத்தியாகிற நூல்களை அரசாங்கத்திற்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கவேண்டும் என்பது அரசின் கொள்கை. இந்த மில்காரர் ஏற்க மறுத்தார். அதனால் மின்சாரம் கொடுக்கப்படவில்லை, அது தவறா? என்பதாகும். இதற்கு உறுப்பினர் விளக்கம் தர வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: சென்ற கூட்டத்திலே அதைப் பற்றி விளக்கமாகப் பேசிவிட்டேன். என்னுடைய பாயின்ட் என்னவென்றால் . . . நான் கருமுத்து தியாகராசச் செட்டியாரை ஆதரிக்கிறேன், அவருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறேன் என்பதாக அரசின் ஸ்போக்ஸ்மென்னாக இருக்கக் கூடிய திரு. மாதவன் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கூட வருகிறவர்களிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் யார் அவருக்கு ஆதரவாக இருந்தார்கள் ? ஒரு மாதத்திற்கும் மேலாக தொழிலாளர்களை அவர் பட்டினி போட்டாரே, அந்தக் கதவடைப்பைத் தீர்க்க இவர் என்ன செய்தார் ? அரசு என்ன செய்தது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: அதே தியாகராச செட்டியார், 'இந்த அமைச்சர் மாதவன் தான் எங்களிடத்திலுள்ள தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு எனக்கு எதிராக வேலை செய்கிறார்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: அதிகமாக முதலாளிகள் உங்களைக் குறை சொன்னால் உங்களுக்குத்தான் நல்லது. வரவேற்க ஆரம்பித்தால் ஆபத்து. இந்த ஒரு விஷயத்தில் நீங்கள் அவரை எதிர்க்கத் தயாராய் இல்லை. அடுத்தாற்போல கோவை கதிரி மில். அது ஒரு மாதமாக மூடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களைப் பழி வாங்குகிற அவர்களது போக்கு அதைக் கண்டிக்க இந்த அரசு என்ன செய்தது ?



1974 சனவரி 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஓட்டல் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க 1958-ம் வருஷம் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தொழிலாளர்களுக்கு 8 மணி வேலை நேரம், வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை—அதற்காக இன்ஸ்பெக்டரேட் ஏற்படுத்தினோம். மதுரையிலேயே ஆறு, ஏழு இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். நான் யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. என்ன செய்கிறார்கள் ? ரவுண்டு அடிக்கிறார்கள். மாலையில் வீட்டுக்குப் போகும்போது இருநூறு, முந்நூறு ரூபாய் அவர்கள் பையில். இந்த அளவில்தான் நடக்கிறது. ஓட்டல் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? குறைந்தபட்ச சம்பள உத்தியோகங்களுடன் அதை இணைத்துவிட்டார்கள். என்றாலும் அவர்களுக்கு என்று ஒரு குழு அமைக்கவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு மாதவன் அவர்களிடம் இருக்கும் இலாக்கா கைத்தறி. கைத்தறிபற்றிப் பேசும்போது ஏற்கனவே திரு. சுப்பிரமணியத்திடம் கோபித்தார்கள். நான் பேசினாலும் கோபிக்கலாம். என்றாலும் நான் சொல்ல விரும்புவது சந்தானம் கமிட்டி போட்டார்கள். நிபுணர் கமிட்டி சந்தானம், கனகசபை, நாச்சிமுத்து ஆகிய மூன்றுபேரும் அதில் இருந்தார்கள். விஷயம் தெரிந்தவர், நிபுணர் குழுவைப் போட்டது 1972 ஆகஸ்ட் வருட இறுதிக்குள் ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று சொன்னோம் 1973 பிப்ரவரியில் ரிப்போர்ட் அளித்தார்கள். அந்த அறிக்கை ஜனவரி 1974-ல் இந்த அவையில் வைக்கப்படுகிறது. காலதாமதத்திற்குக் காரணம் என்ன ? அதனைப் பரிசீலிக்கிறோம், ஒரு குழு போடுகிறோம் என்பதாக ஒன்றும் இல்லை, அந்த சிபாரிசை அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று பொதுவாகச் சொல்வது இன்றைக்கு எங்களுக்கு எல்லாம் மர்மமாகவே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: நான் அன்றைக்கு திரு. சுப்பிரமணியம் சொன்னதற்கு கோபமாக ஒன்றும் சொல்லவில்லை. இன்றைக்கும் கோபித்துக்கொள்ளவில்லை. அந்த சிபார்சுகளை ப்ரின்ட் செய்து அவையில் வைக்கவேண்டும் என்றோம். அதுதான் காலதாமதம். என்றாலும் அவர்கள் கொடுத்த சிபார்சுகளை அன்றைய நாளில் இருந்தே நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். அதில் முக்கியமாக அரசாங்கமே நூலை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது, முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி

ரூ. 5 தான் சம்பள உயர்வு. இன்றைக்குக் கேள்விப்பட்டேன், இந்த மாதம் 28-ம் தேதி எல்லோரையும் கூட்டி, அமைச்சர் பேசப் போவதாக. பேசுவதோடு நின்றுவிடாமல் காரியங்களை செய்ய வேண்டும். அதிலும் தொழிற்சங்கங்களிலே பாகுபாடு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகச் சங்கங்கள் இருக்கின்றன . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் பிரச்சனையில் அருணகிரி என்கிற ஒரு வரைப்போட்டு 6 மாத காலம் ஏறக்குறைய ரூ. 1½ லட்சத்தை அரசு செலவு செய்து, தொழிலாளர்களுக்கு நல்ல நீதி வழங்க வேண்டுமென்று இந்த அரசு முயற்சி செய்துள்ளது. அதிலே ஈடுபட்ட தொழிற்சங்கங்கள் ஒருவருக்கொருவர் கருத்து வேறு பாடு கொண்டிருந்த காரணத்தால் ஒருமித்த கருத்தை அவர்க ளால் கூறமுடியவில்லை. அந்தச் சிபாரிசுகளை ஒத்துக்கொள்ள முடியாது என்று அதற்காகப் பல கிளர்ச்சிகளைச் செய்தார்கள், போராட்டம் நடத்தினார்கள். என்னைச் சந்திக்காமலே, பல காரியங்களைக் கோவை மாவட்டத்திலே செய்ய ஆரம்பித்தார்கள். நான், அனைவரையும் 28-ம் தேதி மீண்டும் சந்தித்து, அருணகிரி குழுவிலே என்ன என்ன குறைகளைக் காண்கிறீர்கள் என்று கேட்டு தீர்க்க பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அரசு எவ்வளவு தூரம் சலுகைகளைச் செய்யவேண்டுமோ அவ்வளவை யும் பார்த்து முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை திரு. தங்கமணி அவர்களுக்கு இந்தச் சபையின்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அடுத்து, நான் மாணவர்கள் சம்பந்தமாகச் சொல்லவிரும்புகிறேன். பலரும் அதுபற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே கிளைவ் ஹாஸ்டல், பாளையங் கோட்டை சம்பவங்கள்பற்றி தீர்ப்புகள் வந்ததற்குப் பிறகு, மாணவர்கள் பேரிலே, அரசை எதிர்த்தவர்கள் பேரிலே கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. பொறுப்பான அரசியல் கட்சிகள் எல்லாம், தொடர்ந்து மாணவர்களைப் பார்த்து, நீங்கள் பள்ளி களுக்குப் போக வேண்டுமென்றுதான் வற்புறுத்தினார்கள். இன்றைக்கு மாணவர்கள் பள்ளிகளுக்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள். அப்படி செல்கிற மாணவர்கள்மீது, மாணவர் தலைவர்கள் மீது போடப்பட்டிருக்கிற கேஸ்கள் வாபஸ் வாங்கப்படவில்லை.



பெயில் கண்டிஷன்ஸ் கூட வாபஸ் ஆகாத நிலை இருக்கிறது அவற்றை வாபஸ் வாங்கவேண்டுமென்று நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாணவர்களாலே, அடிக்கடி சொல்லப்படுகிற ஒன்று, தமிழக அரசின் திரைப்படக் கல்லூரி, பற்றியது. அந்த திரைப் படக்கல்லூரியில் பல வருஷங்களாக குறைபாடுகள் இருக்கின்றன, என்று சொல்லி, சென்ற மாதம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் மாணவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். அக்கல்லூரியில் 100-க்கும் அதிகமான மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்க ளுடைய முக்கியமான கோரிக்கைகள், அங்கு தகுதி இல்லாத முதல்வர் இருக்கிறார், தகுதி இல்லாத ஆசிரியர்கள் இருக்கிறார் கள் அவர்களை நீக்கவேண்டும்—ஸ்காலர்ஷிப் படிக்கும்போது கிடைப்பதில்லை, பாதி படித்து முடித்தபிறகு கிடைக்கிறது. பட்டமளிப்பு விழாவே நடக்க வில்லை, பட்டமளிப்பு விழா நடக்க வேண்டும். 1973-74-ல் ரூ. 67 இலட்சம் ஒதுக்கப்பட்டது, அது செலவழிக்கப்படவில்லை. இப்படி கோரிக்கைகள். அது நமக்கே தெரியவேண்டும், எந்த வழியிலே அந்தப் பணம் செலவழிக்கப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவேதான் மோகன்சுந்தரம், முத்துமாணிக்கம், ஞானபிரகாசம் என்று மூன்று மாணவர்கள் 17-1-1974 முதல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதில் ஞானப்பிரகாசம் என்ற மாணவனது நிலை மோசமாகி, 21-1-1974 அன்று மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார். அந்தத் துறை முதலமைச்சருடைய நேரடிப் பார்வையில் இருக்கிறது. அவர் கொஞ்சம் கவனம் செலுத்து வாரானால் அப்பிரச்சனைகளைத் தீர்த்துவிடலாம். அங்கு எல்லாமே மிகமிகக் கோளாறாக இருக்கிறது. நானே போய் பார்த்தேன், அவர்கள் சொல்லக் கூடிய விஷயங்களை. படங்கள் எப்படி வீணாக்கப்பட்டிருக்கின்றன? 70 எம்.எம். தியேட்டர் கட்டப்பட்டு சும்மா இருக்கிறது. கேன்டீன் கட்டப்பட்டு சும்மா இருக்கிறது. அதைக்கொண்டு அவர்களுக்கு ஹாஸ்டல் கட்டிக் கொடுக்கலாம். முதலமைச்சர் அவர்கள் அங்கே தலையிட்டு, யாராவது சிறிய அதிகாரியை போட்டு கவனம் செலுத்தி . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கனம் உறுப்பினர் அவர்கள் யாரைச் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது, அவர் சொல்வதைப் பற்றிய விவரமும் எனக்குத் தெரியாது. ஆனால் கேஸ்களிலே வருகிற பெயர்களைச் சொல்லி, இன்ன முடிவு சொல்லியிருக்கிறார்கள் அது சரியல்ல என்று சொல்வதுதான் இங்கே சிக்கலைக் கிளப்புகிறது. ஆகவே பெயர்களைக் குறிப்பிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இன்றைக்கு அவர் ஜன்ம தண்டனை விதிக்கப்பட்டு கோயம்புத்தூர் ஜெயிலிலே இருக்கிறார், * * *
இம்மாதிரியான முறையில் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படிப்பட்ட கருத்துக்களை சபை நடவடிக்கைக் குறிப்பிலேகூட அனுமதிப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்கள் ஒரு தீர்ப்பையே தவறு என்று சொல்கிறார்கள்.

செஷன்ஸ் கோர்ட்டிலே அந்த வழக்கு நடந்து தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் தவறு என்று சொல்வது சரியல்ல. அன்றைக்கு அவருடைய வீட்டிற்கு எல்லாம் யார் யார் போனார்கள் என்பது எல்லாம் திரு. தங்கமணி அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு அவர்கள் எல்லாம் அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கிறார்கள். அதே ஊரிலே கொலை வழக்கு. தி.மு.க.காரர் முத்து என்ற நண்பர் இறந்தார், அப்பொழுதெல்லாம் ஒன்றாக இருந்தது. எங்களுடைய தலைவர்கள் எல்லாம் அங்கே போய் இருந்தார்கள். கொலை செய்தவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார்கள். செஷன்ஸ் கோர்டிலே தீர்ப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படித் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகு அது தவறாகும் என்று வாதாடுவது சரியல்ல, அது சபைக்குறிப்பிலே இருப்பதுகூட சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி அவர்களுக்கு தெரியும். நேற்றே கூட இதுபற்றிப் பேசினோம். இந்த சபையிலே ஏதோ ஒரு நிலைமை வரக்கூடும் என்று சொல்வதே

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





சரியல்ல என்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் அப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே கூறுவது முறையல்ல. அதைத் தாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பைக் குறித்து அந்த தீர்ப்பு சரியல்ல, * * * [redacted] என்று சொல்வது எப்படி முறையாகும்?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏற்கனவே செய்து வந்த முறைப்படி ஒருவர் அநியாயமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை வாதிட வேண்டிய இடம் வேறு, இங்கல்ல, * * *
என்று சொல்லியது முறையல்ல, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அடுத்ததாக திரு. கண்ணன் அய்யங்கார் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். எங்களுடைய கட்சிக்காரர் மேட்டுப்பாளையத்திலே அருணாசலம் என்பவர் கொலை செய்யப்பட்டார், கேஸ் எந்த நிலையில் நடந்துகொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதேபோல அண்ணா தி.மு.க.-வை சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கொலைசெய்யப்பட்டார். அந்த கேஸ் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. வி. பி. சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டாரே அந்த கேஸ் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** லத்தீப் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள். அதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதிப்பிற்குரிய ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபிறகுதான் நிலபிரபுக்கள் தாக்கப்பட்டால் தாக்கியவர்களுக்குத் தண்டனையும் விவசாயி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லா விஷயங்களும் தீர்க்கப்படக் கூடிய விஷயங்கள்தான். அவைகள் தீர்க்கப்படக் கூடிய விஷயங்கள்தான் என்று ஏற்கனவே அவர்களிடம் சொல்லப்பட்டது. அவர்கள் சொன்னதில் ஒன்று, அங்கிருக்கிற முதல்வரை உடனடியாக மாற்ற வேண்டுமென்பது. அதற்காக உண்ணாவிரதமும் இருப்பதாகச் சொன்னார்கள். ஒவ்வொரு கல்லூரியிலும் உடனே முதல்வர் அவர்களை மாற்ற வேண்டுமென்று மாணவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து, அதற்கு இணக்கம் தெரிவித்தால் என்ன நிலை ஏற்படும் என்பதை பொறுப்புள்ளவர்கள் எண்ணிடவேண்டும். அவரை மாற்ற வேண்டுமென்றால், அதைப் போல் திரைப்படத் தொழில் நுட்பங்களைக் கற்றுத் தருகிற வேறு கல்லூரி இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னால் மாணவர்கள் என்னைச் சந்தித்துச் சொன்னார்கள். அவர் தவறாக நடந்துகொண்டால், அதுபற்றி பேசி, சரியாக நடப்பதற்கான வழி வகைகள் சொல்லலாம். மாணவர்கள் திடீரென்று யாரிடத்திலும் சொல்லாமல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள். நேற்றையதினம் நாங்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொள்கிறோம் என்று அவர்கள் அறிவித்ததாகத் தகவல் வந்தது. மேற்கொண்டு என்ன செய்வார்களோ தெரியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உண்ணாவிரதத்தை விட்டுவிட்டார்கள் என்பது ரொம்ப சந்தோஷமான விஷயம். அவர்கள் போராடுவதை கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். பிரின்சிபாலுக்கு என்ன குவாலிஃபிகேஷன்ஸ் வைக்கப்பட்டிருக்கிறது? அவரை எனக்குத் தெரியாது, நான் தனிப்பட்ட எந்த விரோதத்தை வைத்தும் சொல்லவில்லை. அந்த இன்ஸ்டிட்யூஷன் நன்றாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், சில மாறுதல்கள் அவசியமாக இருக்கும் என்று மட்டும் இந்த இடத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்னும் இரண்டு மூன்று விஷயங்கள்—சொல்லி நான் முடித்து விடுகிறேன். இப்பொழுது இந்த அரசைப் பொறுத்தவரையிலே, எதிர்க்கட்சிகள், கூர்மையாக எதிர்க்கக்கூடிய கட்சிகள் பேரிலே, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுப்பதிலும் நியாயமற்ற முறையிலே நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. உதாரணமாக,



சமீபத்திலே ஒருவர் சொன்னது, நான் எப்போதுமே சொல்வதுண்டு. இந்த இடத்திலே குற்றச்சாட்டாகச் சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. அரசியலே ஒரு முக்கியமான தலைவர் பேரிலே கொலை கேஸ் போடுகிறோம் என்று சொன்னால், 10 பேர் நேரடியாகப் பார்த்தேன் என்று சொல்லத் தயாராக இருக்கிறார்கள், என்று ஏ.எஸ்.பி. தீர்ப்பிலே சொல்கிறார். ஏ.எஸ்.பி. சொல்கிறார், 2 பேரை கொலை செய்தார் என்று வழக்கு போட்டால், 20 பேர் பார்த்தேன் என்று சொல்லக் கூடிய அதே நிலைதான் இன்றைக்கும் தொடர்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைக்கு அருகிலே, குமாரப்பட்டியிலே 30 பேருக்குமேல் இருப்பார்கள், ஏதோ ஒரு ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் 2 பேர் தாக்கிக் கொண்டார்கள். உடனே, அதற்கு அரசியல் சாயம் பூசி, அந்த இடத்திலேயே இல்லாத ஐயாதுரை என்ற எங்கள் கட்சியினுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேஸ் பற்றி பொதுவாகச் சொல்லுங்கள், அதிலே இருக்கிற பெயர் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேஸ் பெண்டிங் ஜட்ஜ்மென்டாக இருக்கும்போது அதைப்பற்றி பேசுவது நன்றாக இருக்காது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒருவர் பெயரிலே இன்றைக்கு கொலை கேஸ் போட்டுவிடலாம், ரொம்ப லேசு. ஆனால் போடுவது கிடையாது. யாரும் தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். முத்துராமலிங்கத் தேவர் பேரிலே கொலைகேஸ் போடப்பட்ட சமயத்திலே அதை எதிர்த்து நானும் தலைவர்களும் மேடையிலே எல்லாம் பேசியிருக்கிறோம். அதிலே ஜன்ம தண்டனைதான் கொடுத்திருப்பார்கள், நல்லவேளையாக அனந்தநாராயணன் போன்றவர்கள் எல்லாம் இருந்ததால் அதிலே ஒன்றும் கான்ஸ்பிரசி இல்லை என்று சொல்லி விட்டார்கள். இதே அய்யாத்துரை அவர்கள் பேரிலே கேஸ் போடப்பட்டு நான்கு பேர்களுக்கு ஜன்மதண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. 34 பேர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் யாரைச் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது, அவர் சொல்வதைப் பற்றிய விவரமும் எனக்குத் தெரியாது. ஆனால் கேஸ்களிலே வருகிற பெயர்களைச் சொல்லி, இன்ன முடிவு சொல்லியிருக்கிறார்கள் அது சரியல்ல என்று சொல்வதுதான் இங்கே சிக்கலைக் கிளப்புகிறது. ஆகவே பெயர்களைக் குறிப்பிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்றைக்கு அவர் ஜன்ம தண்டனை விதிக்கப்பட்டு கோயம்புத்தூர் ஜெயிலிலே இருக்கிறார், * * * இம்மாதிரியான முறையில் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படிப்பட்ட கருத்துக்களை சபை நடவடிக்கைக் குறிப்பிலேகூட அனுமதிப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்கள் ஒரு தீர்ப்பையே தவறு என்று சொல்கிறார்கள்.

செஷன்ஸ் கோர்ட்டிலே அந்த வழக்கு நடந்து தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் தவறு என்று சொல்வது சரியல்ல. அன்றைக்கு அவருடைய வீட்டிற்கு யார் யார் போனார்கள் என்பது எல்லாம் திரு. தங்கமணி அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு அவர்கள் எல்லாம் அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கிறார்கள். அதே ஊரிலே கொலை வழக்கு. தி.மு.க.காரர் முத்து என்ற நண்பர் இறந்தார், அப்பொழுதெல்லாம் ஒன்றாக இருந்தது. எங்களுடைய தலைவர்கள் எல்லாம் அங்கே போய் இருந்தார்கள். கொலை செய்தவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார்கள். செஷன்ஸ் கோர்டிலே தீர்ப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படித் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகு அது தவறாகும் என்று வாதாடுவது சரியல்ல, அது சபைக்குறிப்பிலே இருப்பதுகூட சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமணி அவர்களுக்கு தெரியும். நேற்றே கூட இதுபற்றிப் பேசினோம். இந்த சபையிலே எதோ ஒரு நிலைமை வரக்கூடும் என்று சொல்வதே

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது,





சரியல்ல என்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் அப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே கூறுவது முறையல்ல. அதைத் தாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பைக் குறித்து அந்த தீர்ப்பு சரியல்ல, * * * [redacted] என்று சொல்வது எப்படி முறையாகும்?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே செய்து வந்த முறைப்படி ஒருவர் அநியாயமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை வாதிட வேண்டிய இடம் வேறு, இங்கல்ல, * * *
என்று சொல்லியது முறையல்ல, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அடுத்ததாக திரு. கண்ணன் அய்யங்கார் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். எங்களுடைய கட்சிக்காரர் மேட்டுப்பாளையத்திலே அருணாசலம் என்பவர் கொலை செய்யப்பட்டார், கேஸ் எந்த நிலையில் நடந்துகொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதேபோல அண்ணா தி.மு.க.-வை சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கொலைசெய்யப்பட்டார். அந்த கேஸ் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. வி. பி. சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டாரே அந்த கேஸ் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** லத்தீப் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள். அதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதிப்பிற்குரிய ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபிறகுதான் நிலபிரபுக்கள் தாக்கப்பட்டால் தாக்கியவர்களுக்குத் தண்டனையும் விவசாயி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைகிணங்க அகற்றப்பட்டது.**

கள் தாக்கப்பட்டால் தாக்கியவர்களுக்கு தண்டனையில்லாத நிலையும் இருப்பதை இங்கேதான் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். சில எதிர்க்கட்சிக்காரர்களை பொறுத்தவரையில் போட்டிருக்கிற கேஸ்களை தீவிரமாக நடத்துவதையும் தங்களுக்குப் பாதகமாக வந்தால் அதை பிளே டவுன் பண்ணுவதுமான போக்கு இருக்கிறது. நான் உதாரணத்திற்காகத்தான் சொன்னேன் இது சரி, அது சரியல்ல என்ற முறையிலே நான் விவாதிக்கவில்லை. என்னுடைய பெயரிலோ அல்லது கட்சித் தலைவர்கள் பேரிலோ கேஸ் போட்டால் பரவாயில்லை. ஆனால் சாதாரண ஊழியர்கள், கட்சித் தொண்டர்களின்மீது கேஸ்கள் போடப்படுகின்றன, பிறகு விடுதலை செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. 25—3—1973-ம் தேதியன்று சாலிகிராமத்திலே எம்.ஜி.ஆர். போனவேன் தாக்கப்பட்டு, தாக்கியவர்கள் மேல் வழக்கு போடாமல் உள்ளேயிருந்தவர்கள் மீது வழக்குப்போட்டு துரைராஜன், பாபு, ரத்தினம் ஆகியவர்கள் மீது கேஸ் போடப்பட்டு பிறகு அவர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாகிவிட்டது, இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 15 நிமிடங்களாவது வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் அதிகமாகிவிட்டது, 10 நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பத்து நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இன்னொரு முக்கியமான விஷயம். சில முக்கியமான தலைவர்கள் இங்கே வருகிறார்கள். பிரதமர் மதுரைக்கு வந்தார்கள். யாரோ ஒருவர் சிறு கட்சியைச் சேர்ந்தவர்கள் கருப்புக் கொடியைக் காட்டலாம் என்று நினைக்கிறார்கள் என்றால் அவர்கள் தடுக்கப்படலாம் என்று சொல்லலாம். ஆனால் வரவேற்கக் கூடியவர்கள் ஊர்வலமாக வந்தால் அவர்களைக் கைது செய்வது என்பது சரியல்ல. செப்டம்பர் மாதத்திலே மதுரையிலே இது நடந்தது. பண்டாரநாயகா வந்தார்கள். எப்படிப்பட்ட விரோதியாக இருந்தாலும்கூட இங்கே வந்தார்கள் என்றால் மரியாதை காட்டவேண்டுமென்ற முறையிலேதான் முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் வரவேற்றார்கள். சில பேர்கள் கருப்புக்கொடி காட்ட நினைத்திருக்கலாம், அதற்காக யாருமே அந்தப் பக்கமாகப் போகக்கூடாது என்று சொல்வது சரியல்ல. இந்த 41-வது பிரிவு இருக்கிறதே, அது வந்ததும் போதும், மதுரை நகரத்திலும் சரி, சென்னை நகரத்திலும் சரி நினைத்தால் 41-வது பிரிவைப் பயன்படுத்துகிற முறை இருக்கிறது. ஜெனரல் இன்ஷூரன்ஸ், எல்.ஐ.சி. கூட அல்ல, அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்ற முறையிலே எல்.ஐ.சி.யை வைத்தே அந்தப் பகுதி பூராவிலும் 41-வது பிரிவை போட்டிருக்கிறார்கள். indiscriminate use of the prohibitory order இது கண்டிப்பாக நிறுத்தப்படவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, 7 ஆயிரம் ஏக்கர் நிலம் சிறைக்காடு என்ற இடத்திலே சேத்தூர் ஜமீன்தாரைச் சேர்ந்தது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஏற்கனவே சில பகுதிகள் வன நிலம் என்று டெக்ளேர் செய்யப்பட்டிருக்கிறது. 31—12—1973-ஆம் தேதியன்று ஊர்வலமாக வந்து தாசில்தாரிடம் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள், அதன் மீது நடவடிக்கை எடுத்து அந்த 7 ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் அங்கே பாடுபட்டு உழைக்கின்ற விவசாயிகளுக்கு, அங்கேயிருப்பவர் எல்லாம் ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் தான், அவர்களுக்கு கொடுத்து உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோதுமையும், கோதுமையைச் சேர்ந்த பொருட்களும் வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று இருக்கிறது. 5 லாரிகள் வீட் அண்ட் வீட் புராடக்ட்ஸ் 12-ஆம் தேதியன்று திருச்சியிலிருந்து மைசூரை நோக்கிச் சென்றன அதைப்பற்றி ஐ.ஜி.க்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டு இப்பொழுது அந்த லாரி நாமக்கல்லுக்குப் போய் இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஐந்து லாரிகளைப் பிடித்தார்களா? என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் ஐ.ஜி.யிடம் விசாரித்தேன். போன்மூலம் அவர்கள் தலைவர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள், மைசூர் பார்டர்கள் முழுமையும்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 சனவரி 24

எல்லா இடங்களிலும் போலீஸ் போட்டு சோதனை செய்து பார்த்தோம், ஐந்து லாரிகளில் அப்படியில்லை என்று சொன்னார் கள். 5 லாரிகளுக்கு கோழுமையும் கிடையாது, அப்படி போனதாகவும் தெரியவில்லை. லாரி நம்பர் கொடுத்ததாகச் சொன்னார்கள். நான் ஐ.ஜி.யிடம் கேட்டதில் லாரி நம்பர் கொடுக்கப்பட வில்லையென்றும் பரிசோதனை செய்து பார்த்த பொழுது அப்படியொன்றும் தெரியவில்லை என்றும் சொல்லி யிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

**திரு. கே. டி. கே. தங்கமணி**: எனது திருத்தத்தில் ஊழல் சம்பந்தமாக குறிப்பிட்டிருக்கிறேன். அது குறித்து ஒன்றிரண்டு விஷயங்கள் கூற விரும்புகிறேன். பத்திரிகையில் இரண்டு செய்திகள் வந்திருந்தன. பத்திரிகை என்று சொன்னால் நான் எல்லாப் பத்திரிக்கைகளையும் குறிப்பிட வில்லை. சில 'யெல்லோ' ஜர்னல்ஸ் இருக்கின்றன. நான் அவற்றைக் குறிப்பிட வில்லை. பொதுவாக, தினசரிப் பத்திரிகையில் வந்த விஷயத்தை வைத்துக்கொண்டே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உதாரணமாக, 'மக்கள் குரல்' பத்திரிகை— வெளியூர்—9-1-1974-இல் வெளியான செய்தி:

"சேலத்தில் இரும்பு கர்டர்கள் மாயமாய் மறைந்தன. ஒரு பாங்கில் நடந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. சில இரும்பு கர்டர்கள் மீதமாகிவிட்டன. பல ஆண்டுகள் கட்டிடத்தின் பின்புறம் ஆடாமல் அசையாமல் கிடந்தது. யாருக்கும் விற்கவும் இல்லை. சில வாரங்களுக்கு முன்னால் அது 'மாயமாய்' மறைந்து விட்டது. இன்றைய மதிப்பு சுமார் ரூ. 26 ஆயிரத்திலிருந்து ரூ. 27 ஆயிரம் இருக்கும்." என்று பத்திரிக்கை செய்தி வெளியாயிருக்கிறது. இது உண்மை தானா? அது ஒரு கூட்டுறவு வங்கி என்று தெரிகிறது. அப்படி யானால் விசாரணை செய்யப்பட்டதா?

அதேபோல இன்னொரு செய்தி, 21—1—1974—வெளியூர்— பத்திரிகையில் வெளியானது.



1974 சனவரி 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

புதிய ஊழல்—

"புதிய ஊழல்—அண்ணா காலத்தில் எடுக்கப்பட்ட நட-
வடிக்கை அடுத்த காலத்தில் ரத்து செய்யப்பட்டது—எம்.எல்.ஏ.-
யின் மாமனார்—இவருக்குச் சொந்தமான ஆயில் மில் ஒன்றுக்கு
கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடி நிலக்கடலை சப்ளை செய்த
வகையில் பல லட்சம் பாக்கி. அண்ணா உத்தரவுப் படி மில்
யந்திரங்கள் சொஸைடியில் பிரித்து எடுத்துக்கொண்டு போகப்
பட்டது. ஆனால் அடுத்த காலம் திருப்பி கொடுத்து சொஸைடி-
செலவில் பொருத்திக் கொடுக்கப்பட்டது. ஆனால் பாக்கி
வரவில்லை. தர்மபுரி மலையிலுள்ள கருப்புக் கல் ஜப்பானுக்கு
ஏற்றுமதி செய்து சம்பாதித்தவர், ரெண்ட் 2¾ கொடுத்து டன்
ரூ. 500-க்கு விற்றார். ரெண்ட் கொடுக்கவில்லை என்று ரூ. 80,000
அபராதம் விதிக்கப்பட்டது."
இதுவும் பத்திரிகையில் வந்த செய்தி. இப்படிப்பட்ட செய்தி
களை, அதில் என்ன விஷயம் இருக்கிறது என்று பார்ப்பதற்காக,
பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம்**: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்
தினர் அவர்கள் சேலம் கூட்டுறவு மத்திய வங்கியில் ஏதோ ரூ. 25
ஆயிரம் மதிப்புள்ள கர்டர்கள் காணாமற்போய் விட்டது என்று
புகார் சொல்கிறார்கள். இந்த கர்டர்கள் ஏற்கனவே வாங்கப்
பட்டு உபயோகிக்கப்படாமல் இன்னும் அந்த இடத்திலேயே,
இருக்கின்றன. வேண்டுமென்றே பத்திரிகையில், மாயமாய்
மறைந்து விட்டதாக பொய் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.
கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட புகார்களைப்
பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் அறிகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: நடவடிக்கை எடுத்திருந்தால்
ரொம்ப நல்லது. கர்டர்களை யாரும் மறைக்க முடியாது. அந்த
கர்டர்கள் வேறு ஏதாவது இடத்தில் இருந்து, திரும்பி வந்திருக்
கலாம். எப்போது திரும்பி வந்தது என்று பார்க்க வேண்டும்.
இது எப்படியிருந்தாலும், இப்படிப்பட்ட புகார்கள், குற்றச்
சாட்டுகள் பத்திரிகையில் வரும்போது, அரசு என்ன நடவடிக்
கைகளை எடுத்தது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[கே. டி. கே. தங்கமணி] [1974 சனவரி 24

போலீஸ் சம்பந்தமாக ஒரு சிறு விஷயம். போலீசாரை சரியான முறையில் பழக்கப்படுத்தியிருக்க வேண்டுமென்பதற்காக சொல்கிறேன். மேட்டூர்-புதுச்சாம்பள்ளியில் எஸ்.ஐ. சாட்டை வைத்துக்கொண்டு கூடியிருந்த பெண்களை அடித்தது, தங்கச்சி மடத்தில் அந்தோணியம்மாள் சாவு, காரைக்குடியில் ராமையா லாக்கப்பில் மரணம் போன்ற பல சம்பவங்கள். இப்படிப்பட்ட சம்பவங்களில் போலீசார் அத்து மீறி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது பொதுமக்கள் மத்தியில் நிலவி வருகிற கருத்து. அந்தக் கருத்தை மாற்ற தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்பதே என் அவா.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடைசியாக ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இது இந்த சபை சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் இதை விவாதிப்பது, இதற்கு எந்த அளவுக்கு அனுமதி அளிக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. இந்த சபை அவமானப்படுகிற படி, இந்த சபையிலிருந்து சபா நாயகர் 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி அன்று நீக்கப்பட்டார். அப்படி அவர் நீக்கப்பட்டது தவறு என்ற முறையிலே அவர் ஹைகோர்ட்டுக்கு மனு செய்தார். அவரை நீக்கியது தவறு என்று எங்கள் கட்சி சார்பாக நானும், ஆளுங் காங்கிரஸ் கட்சி சார்பில் திருமதி அனந்தநாயகி அம்மையாரும் ஒவ்வொரு துணை அஃபிடவிட் கொடுத்திருந்தோம். அதன் பேரில் விசாரணை நடந்தது. விசாரணை நடந்து அவரை வெளியேற்றியது சரி என்று ஹைகோர்ட் தீர்ப்புச் சொன்னது. அதற்குப் பிறகு, இது அரசியல் சட்டத்தை சரியான முறையில் அப்ளை செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய விஷயமென்ற காரணத்தால், இதை விரிவாக பரிசீலித்து பார்ப்பதற்காகவும், இதற்கு சுபரிம் கோர்ட்டிலே ஒரு முடிவு கிடைக்குமென்ற நோக்கத்துடனும் அவர் சுப்ரிம் கோர்ட்டில் ஒரு வழக்கை தாக்கல் செய்தார். ஆனால் அந்த கேஸ் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர் வேறு கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்குப் போய் விட்டிருக்கிறார் என்பதற்காக வாபஸ் வாங்கப்பட்டதா . . .

(குறுக்கீடு)

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது
விவாதம்

1974 சனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு இந்த அவை எப்படி சம்பந்தப்பட்டது? வேண்டுமானால் அப்படி வாபஸ் வாங்கியது தவறு என்று சுப்ரீம் கோர்ட்டுக்கு நீங்கள் ஒரு அஃபிடவிட் போடுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதில் நாங்களும் தவறு செய்திருக்கிறோம். ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர் ஆளுங்கட்சிக்குப் போய், வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வது என்பது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கும், அவை நிகழ்ச்சிக்கும் சம்பந்தமில்லை. வழக்குப் போடுவதும், வாபஸ் பெறுவதும் தனிப்பட்டவருடைய சொந்த விருப்பம். இதில் இந்த அவை சம்பந்தப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒரு சபாநாயகரை ரிமூவ் பண்ணக் கூடிய பிரச்சனையில், இதற்கு ஒரு முடிவு கிடைக்குமென்று எதிர் பார்த்த நிலையில் இப்படி ஏற்பட்டு விட்டதே என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். வாபஸ் வாங்குவது என்பது என்னவோ, அவருடைய இஷ்டம். ஆனால், இதில், அவர் வாபஸ் வாங்கியிருக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட அவரே இதில் எழுந்து நின்று பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. உயர்நீதி மன்றம் சொன்னது சரியில்லை என்று உங்களுக்குப் பட்டதால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனீர்கள். இப்போது சுப்ரீம் கோர்ட் கூறியது சரியில்லை என்று பட்டால் இன்னொரு அஃபிடவிட் போடுங்கள். தவிர, அவர் தன்னுடைய அஃபிடவிட்டை எப்படி வாபஸ் பெற்றார் என்று இந்த அவையில் பேசுவதில் என்ன பொருள் இருக்கிறது?

**திரு. என். கணபதி:** வித்ட்ரா வாங்குவதற்கு லீவ் கேட்கும் போதே அப்ஜக்ஷன் பண்ணியிருந்தால் வித்ட்ரா செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள். எனவே, இதை கேஸ் வித்ட்ரா செய்யும் போதே செய்திருந்தால் பிரச்சனை தெளிவாகியிருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அந்தத் தவறை ஏற்றுக்கொள்கிறேன். அதுதான் சொன்னேனே, தவறு செய்துவிட்டோம் என்று. இந்த விஷயம் சபைக்கு முன்னால் வரவேண்டுமென்பதற்காக, லா மினிஸ்டருக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் கேள்வி அனுப்பியிருக்கிறேன். ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரிடம் கேள்வி கேட்டு விடை. வாங்குவது என்கிற வழக்கம் இருந்துவருகிறது. அந்த முறையில் கேள்வி கேட்டிருக்கிறேன். இதில் அவர்களுடைய நிலை என்ன என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** லா மினிஸ்டருடைய பதில் இதுதான் அலைபிடவிட் போடுவது என்பதும் வாபஸ் வாங்குவது என்பதும் அவரவர்களுடைய விருப்பம். இதிலே எனக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த சுப்ரீம் கோர்ட் வழக்கை திரும்பப் பெற்றுக்கொள்வது பற்றி ஏதாவது முன் அனுமதி வாங்கப்பட்டதா? அது சம்பந்தமாக ஏதாவது தகவல் சட்ட அமைச்சரிடம் இருந்தால் அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது ஒரு தனி நபர் வழக்கை வாபஸ் வாங்கியது சம்பந்தமானது. இதில் சிலருக்கு பெரும் ஏமாற்றம். என்ன செய்வது? இதில் சம்பந்தப்பட்டவர் வழக்கை வாபஸ் வாங்கியதற்கும் இந்த அவைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு முக்கியமான விஷயம். அந்த நபர் வழக்கை வாபஸ் பெறுவதற்கு ஏதாவது நிபந்தனைகள் இருந்தனவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாணவர்களைப் பற்றி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். மாணவர்கள் இப்போது கல்லூரிகளுக்குத் திரும்பி படிக்க ஆரம்பித்து விட்டார்கள். தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன, அரசாங்கக் கல்லூரிகளும் இருக்கின்றன. இவற்றில், தனியார் கல்லூரிகளில் என்ன நடக்



கிறது என்பதற்கு ஒரு உதாரணம். எம். ஜி. என். கல்லூரி, சங்கரன்கோயில், திருநெல்வேலி—இந்தக் கல்லூரியின் செயலாளர் செய்திருக்கக்கூடிய காரியங்களைப் பற்றி பச்சை பச்சையாக செய்திகள் வந்திருக்கின்றன. அரசுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒன்று. இரண்டாவது, அரசாங்கக் கல்லூரிகள். 24—1—1973 அன்று இந்து பத்திரிகையில் லெட்டர் டு தி எடிட்டர் காலத்தில் ஒரு செய்தி வந்தது. மாணவர்கள் கல்லூரிக்குத் திரும்பியும் கூட, அந்தக் கல்லூரியில், பேராசிரியர்கள் இல்லை என்று புகார் செய்யப்பட்டிருக்கிறது. பாட்டனி புரொபசர் இல்லை. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதையெல்லாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

போரூரணியில் ஒரு ஹைஸ்கூல் கட்டிடம் கட்டிய ஒரு மாதத்திற்குள்ளாகவே விழுந்து விட்டது. மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போனால் உத்தரவாதம் எழுதிக் கேட்கக்கூடிய நிலையெல்லாம் வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** போரூரணி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டிய ஒரு மாதத்திற்குள்ளாக சரிந்து விட்டது என்று பத்திரிகையில் செய்தி வந்தது. இது தவறான செய்தி. கட்டிடம் விழவில்லை. அதற்கு முன்னால் இருந்த ஒரு ஷெட் மட்டும் புயலில் விழுந்து விட்டது. அது சீர் செய்யப்பட்டு, பழுது நீக்கப்பட்டு, சீர் செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கவர்னர் அவர்களின் உரையில் இன்றைய தினம் மக்கள் மத்தியில் உள்ள பிரச்சனைகள் எதுவும் வராமல், It is an address which evades the main issues. இது சர்க்காரின் கொள்கையாக இருந்தால் மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே, கொள்கையைச் சொல்லாத அறிக்கையாக வந்திருக்கிறது என்று ஏற்கெனவே அண்ணா அவர்கள் சொன்னதை சொன்னேன் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையின் முன்னால் விவாதிக்கப்படுகின்ற இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை வழிமொழிந்து நான் சில

மனுப்போடுவதிலோ யாரும் பின் வாங்கக் கூடாது, அதற்காக எங்களையெல்லாம் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளுங்கள், உங்களுக்குத் தொல்லை தருகிறோம், போராட்டம் நடத்துகிறோம் என்று அவர்களிடத்தில் சொல்லி, மத்திய அரசிடத்திலேயிருந்து ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் அதிகத் தொகையைக் கேளுங்கள், இங்கே நிறையக் கேட்பதாகச் சொல்லிச் சொல்கிறீர்கள், ஆனால் குறைவாக வாங்கி வருகிறீர்கள், எனவே எங்களை நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று அண்ணா அவர்கள் சொன்னார்களே தவிர மத்திய அரசைக் கேட்காதீர்கள், குறை சொல்லாதீர்கள், கேட்பதுதான் உங்கள் தொழிலா என்று அண்ணா அவர்கள் சொல்லவில்லை என்பதை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அதற்காக ஒரு உதாரணத்தையே கவர்னர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டிருப்பது அந்த உதாரணத்திலிருந்து தெரிய வரும். 1973-1974-இல் இந்தியா முழுவதுமிருக்கும் மாநிலங்களுக்கு ரூ. 1,500 கோடி ரூபாயில் மத்திய அரசின் சார்பில் தொழிலுக்காக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால் நமக்கு வெறும் 40 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 40 கோடி ரூபாய் என்பது, 18 மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 1,500 கோடி ரூபாயிலே எவ்வளவு சிறிய தொகையாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவ்வளவு பெரிய அக்கிரமம் நமக்கு இழைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக கவர்னர் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பது உண்மையிலேயே மத்திய அரசின் கவனத்தை நல்லமுறையில் ஈர்க்கும் செய்தியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் மத்திய அரச பாரபட்சமில்லாமல் நடந்து கொள்கிறதா? உதாரணத்திற்குச் சொல்கிறேன், கல்பாக்கம் அணு ஆலை எப்பொழுதோ துவங்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ அது மந்தமாக இருக்கிறது. எப்பொழுது அங்கே உற்பத்தியாகும் என்ற நிலைமை தெரியவில்லை. ஆனால் உத்தரப் பிரதேசத்திலே, இந்த நாட்டின் பிரதம மந்திரி பிறந்த மாநிலத்திலே தேர்தல் வருகிறது என்ற காரணத்தினால், நான்காவது அணு வேலை மிக வேகமாகத் துவங்கப்படுகிறது. நரோரா என்ற





இடத்தில் சென்ற வாரம் பிரதம மந்திரியவர்கள் ஓடோடிப்போய் அதைத் துவங்கியிருக்கிறார்கள். இங்கேதான் நாம் நியாயம் கேட்கிறோம். நான்காவது அணுமின் நிலைய உற்பத்தியைத் துவங்குகிறார்களே, அப்படியானால் பல ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்ட இரண்டாவது அணு மின் நிலையை உற்பத்தி துவங்குகின்ற அந்த வேலைகூட நிறைவேறாமல் இருக்கிறதே அதைப்பற்றிக் கவலைப்பட்டார்களா? இங்கேயுள்ள அகில இந்தியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போடுகிறார்களா? டெல்லிக்குப் போகும் நேரத்தில் வற்புறுத்துகிறார்களா என்றால் இல்லை. இங்கேயுள்ள தொழிலமைச்சரும், மற்ற அமைச்சர்களும்தான் டெல்லிக்கு போகும் பொழுது வற்புறுத்துகிறார்களே தவிர இங்கே தொழில் வளம் பெருகவேண்டுமென்று சொல்லும் எதிர்க்கட்சிகள் இதை வற்புறுத்தாதது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் பத்திரிகையிலே எழுதுகின்றனர், உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் தொழிற்சாலை துவங்கப்படுகிறது என்று. மத்திய அரசு முதலீடு செய்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்திலே துவங்கப்பட்ட, மத்திய அரசால் துவங்கப்பட்ட ஆலையில் வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. சேலம் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, கல்பாக்கம் அணு மின் நிலையமாக இருந்தாலும் சரி, மற்றவைகளாகயிருந்தாலும் சரி அவைகள் மிகமிக மந்தமாக இருக்கும் சூழ்நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசுகிறபொழுதும் சரி, திருத்தத் தீர்மானங்களிலும் சரி நம்முடைய எதிர்க்கட்சியினர் கூறியிருக்கிற பிரச்சனைகளில் ஒரு கருத்தை ஒட்டுமொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். உணவு நிலைமையிலே சீராக இல்லை. உணவு பங்கீடு சரியாக இல்லை, விலைவாசி ஏறி இருக்கிறது. கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது, தொல்லையாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நாம் கொஞ்சம் நடுநிலைமையோடு சிந்திக்க வேண்டும். இந்தியாவிலேயிருக்கும் எவ்வளவு மாநிலங்களிலே இன்றைக்குப் படும் பாட்டைப் பார்க்கிறோமே அப்படி ஏதும் தமிழகத்திலே பார்க்கிறோமா? இங்கே உணவு நிலைமை சீர்கேடடைந்திருக்கிறதா? 'கரீபி ஹதாவ் கரீபி ஹதாவ்' என்ற வார்த்தைகளைத் துவங்கி,

[திரு. கா. வேழவேந்தன்] [1974 சனவரி 24

கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். நிலையான, ஒளிமயமான ஒரு ஆட்சிக்கு நல்லதொரு முன்னுரையாக, முகப்போவியமாக இந்த ஆண்டு துவக்கத்தில் கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை பஞ்சாங்கம் என்று யாரோ சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன். உண்மையிலே இது பஞ்சாங்கம்தான் என்பதையும், இந்த நாட்டின் முன்னேற்றத்தை அங்குலம் அங்குலமாகக் கணித்துக் கூறுகிற ஏடு என்பதையும் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த உரையின் துவக்கத்திலேயே நம்முடைய பகுத்தறிவுப் பகலவன், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் பெரியார் அவர்களுக்கு கவர்னர் அவர்களும் தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியார் அவர்களைப்பற்றி இங்கே பேசிய எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒருமித்த கருத்தைத் கூறி அவர்கள் வழியில் நடப்போம் என்று கூறினார்கள். இந்த நேரத்தில் நான் ஒரு பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குச் சமுதாயத்திலே ஜாதியற்ற ஒரு முறை உருவாக வேண்டும். மூடைநாற்றமுடைய மூடப் பழக்கங்கள் ஒழிய வேண்டுமென்று அவர்கள் ஓய்ச்சல் இல்லாமல் பாடுபட்டார்கள். இதை எல்லாக் கட்சிக்காரர்களும் மனத்திற் கொண்டு, நாட்டிலே ஜாதீய முறையே இருக்கக்கூடாது என்ற முறையில், "Peoples Representation Act", போன்ற சட்டங்கள் திருத்தப்பட வேண்டும், வாக்காளர் பட்டியலில் ஜாதிப் பெயரை விளக்கும் வால் இருக்கக் கூடாது என்ற விரசபதத்தை நாம் ஏற்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு மேலே செல்ல விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் கருத்துரையாற்றிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோழுது, இங்கே நிலச்சுவான்தார்களுக்கும், நிலத்திலே பணியாற்றுகின்ற விவசாயிகளுக்கும் போராட்டம் வந்தால் அதிலே தண்டனை பெறுகின்றவர்கள் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் எப்பொழுது, எங்கே அவர்கள் சொன்னார்கள் என்பது எல்லோருக்குமே நினைவு இல்லை என்று

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது
விவாதம்

1974 சனவரி 24] [திரு. கா. வேழவேந்தன்]

சொன்னாலும், இன்னொன்றையும் ஜெயபிரகாஷ் நாராயணன் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபொழுது அவர்கள் சொன்ன ஒரு வியப்பான செய்தியை இப்பொழுது நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலேதான் அடிமட்டத்திலேயுள்ள, கீழ் மட்டத்திலேயுள்ள குடிசை வாழ்வோருக்கும், சேற்றிலே வாழ்வோருக்கும் சீரிய திட்டம் வகுக்கப்பட்டு, பல கோடி ரூபாய் செலவிலே, ஏறத்தாழ 60 கோடி ரூபாய் அளவில் செலவழித்து குடிசை மாற்றுத் திட்டம் நடைபெறுகிறது, இதை நான் இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களுக்கும் சிபாரிசு செய்கிறேன் என்று அதே ஜெயபிரகாஷ் நாராயணன், நேருவின் நெருங்கிய நண்பராக இருந்தவர் தமிழ்நாட்டின் திட்டத்தைப் பாராட்டியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் கவர்னர் அவர்களின் உரையைப்பற்றி பத்திரிகைக்குச் செய்தி தருகின்ற பொழுது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது மத்திய சர்க்காருக்கு மனுப்போடும் நிலையாக இருக்கிறது, It is a petition என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் சொன்னது வேண்டுமென்றால் ஒருவேளை கவர்ச்சியாக இருந்தாலும்கூட, அதிலே என்ன தவறு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசின் பிரதிநிதியாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தமிழகத்தின் ஆள உரிமையை ஏற்று தமிழக அமைச்சரவை, அதேபோல் அதற்கு உறுதுணையாக இருக்கும் ஆளுநர் மத்திய அரசுக்கு 4½ கோடி மக்களுக்காக என்னென்ன திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று அதைக் கோரிக்கையாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதில் தவறு எதுவுமில்லை. அப்படி கேட்பதிலே நியாயம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. நான் அவர்களுக்கெல்லாம் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்களெல்லாம் எதிர்க்கட்சியிலே பணியாற்றிய நேரத்தில், அண்ணா அவர்கள், அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயிருந்து பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசைத் தட்டிக் கேட்பதிலோ,

வறுமையே போ, வறுமையே வெளியே போ என்று வேகமாகக் கூறிய காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களில் வறுமை போயிற்று. குஜராத்தில் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது?

Gujarat is under flames.

என்று யாரோ அல்ல, குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் சிமன்பாய் படேல் அவர்கள் மத்திய அரசுக்கும், வெளி உலகத்திற்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 15 நாட்களாக அங்கே குருஷேத்திரமாக இருக்கிறது. குருஷேத்திர யுத்தம் கூட 18 நாட்களில் முடிந்துவிட்டது. ஆனால் குஜராத்தில் நடைபெறும் நிகழ்ச்சி அதற்குள்கூட முடியாது போலிருக்கிறது. அண்ணல் காந்தியார் பிறந்த அந்த மாநிலத்திலே இன்றைக்கு உணவிற்காகப் படுகொலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதேபோல மராட்டியத்திலே நிலைமைகள் இருக்கின்றன. பீகாரிலே துப்பாக்கி பிரயோகம் நடக்கிறது. உத்தரப்பிரதேசத்திலே பிரதம மந்திரியவர்கள் பேச முடியாமல் அங்கே கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது தமிழகம் சீராக இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? இதையும் மீறி தமிழகத்திலே உணவுத்துறையிலே புரட்சியை உருவாக்கி நாம் மற்ற மாநிலங்களுக்கு பல்லாயிரம் டன்கள் உணவு அனுப்பினால், அது அரிசியாக இருந்தாலும், கம்பாக இருந்தாலும், வேறு தான்யமாக இருந்தாலும், நம்முடைய கைகள் கட்டப்படுகின்றன. அனுப்பக் கூடாது என்று தாக்கீது வருகிறது. அதைப்பற்றி அதிகமாக இங்கே மற்றவர்கள் சொல்ல வேண்டுமென்று விரும்பாவிட்டாலும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அவர்களாவது குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்பொழுதுதான் செய்தி வந்திருக்கிறது. நேற்று யார் யாருக்கோ அபராதம் போடப்படுகிறது என்று பேசினார்கள். ஆனால் ஒருநாட்டின் முதலமைச்சருக்கு போடப்பட்டிருக்கிறது மத்திய அரசால்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்த செய்தியை இந்த அவை உணரும் என்று அறிகிறேன். டில்லியில் இருக்கும் கேரள மாளிகைகளில் இருக்கிற அறைகளில் சிலவற்றை அலுவலகத்திற்குப் பயன்படுத்தினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இந்த நாட்டில் இருக்கும் ஒரு மாநில முதலமைச்சருக்கு திரு. அச்சுத மேனன் அவர்களுக்கு 14 லட்சம் ரூபாய் அபராதம் போடப்பட்



டிருக்கிற காட்சியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இது எங்கே போய் முடியும்? திரு. தங்கமணி அவர்கள் எங்கோ ஓரிடத்திலிருந்து லாரி போவதைப் பற்றி எல்லாம் பேசினார்கள். ஒரு இடத்திலிருந்த கர்டர் மற்றொரு பகுதிக்கு மாற்றப் பட்டது பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் இவ்வளவு பெரிய கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் சில பிரிவுகளுக்காக இவற்றையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கின்ற ஒரு கருத்தே வந்திருக்கிறது. அவர்கள் இதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கோடிட்டுக் காட்டாமல் விட்டது வருந்துதற்குரியது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றுகிற நிலையில் இன்னும் செழுமையான நிலை உருவாக வேண்டுமானால் போதிய அளவு உரம் ஒதுக்கப்பட வேண்டும். கவர்னர் அவர்கள் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு உரம் கூட ஒதுக்கப்படவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் கவலைப்பட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். வயிறுக்கு நாம் உணவு கொடுக்க வேண்டும். வயல்களுக்கு மத்திய அரசு உரமாகிய உணவைக் கொடுக்க வேண்டும். இதிலே மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எல்லோரும் ஒருமித்துக் குரல் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் பல்வேறு சீரிய திட்டங்களைப் பற்றியெல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அடுத்து வரப் போகிற வரவு-செலவுத் திட்ட உரையில் முதல்வர் அவர்கள் அறிவிக்கப் போகிற திட்டங்களைப் பற்றி முகப்புரையாக, நல்ல செய்திகளை எல்லாம் தெரிவிக்கிற முகப்புரையாக கவர்னர் உரை அமைந்திருக்கிறது. மத்திய அரசை எது எதற்கெல்லாம் தட்டிக் கேட்க வேண்டுமோ அவற்றைப் பற்றிய குறிப்புகளை எல்லாம் வரவேற்று, இந்த நாட்டில் இருக்கும் எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் எங்களுடைய குரலுக்கு இணை குரலாக, கூட்டுக் குரலாக எழுப்ப வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[திரு. கா. வேழவேந்தன்] [1974 சனவரி 24

வறுமையே போ, வறுமையே வெளியே போ என்று வேகமாகக் கூறிய காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களில் வறுமை போயிற்று. குஜராத்தில் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது?
Gujarat is under flames. என்று யாரோ அல்ல, குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் சிமன்பாய் படேல் அவர்கள் மத்திய அரசுக்கும், வெளி உலகத்திற்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 15 நாட்களாக அங்கே குருஷேத்திரமாக இருக்கிறது. குருஷேத்திர யுத்தம் கூட 18 நாட்களில் முடிந்துவிட்டது. ஆனால் குஜராத்தில் நடைபெறும் நிகழ்ச்சி அதற்குள்கூட முடியாது போலிருக்கிறது. அண்ணல் காந்தியார் பிறந்த அந்த மாநிலத்திலே இன்றைக்கு உணவிற்காகப் படுகொலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதேபோல மாராட்டியத்திலே நிலைமைகள் இருக்கின்றன. பீகாரிலே துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது. உத்தரப்பிரதேசத்திலே பிரதம மந்திரியவர்கள் பேச முடியாமல் அங்கே கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது தமிழகம் சீராக இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? இதையும் மீறி தமிழகத்திலே உணவுத்துறையிலே புரட்சியை உருவாக்கி நாம் மற்ற மாநிலங்களுக்கு பல்லாயிரம் டன்கள் உணவு அனுப்பினால், அது அரிசியாக இருந்தாலும், கம்பாக இருந்தாலும், வேறு தான்யமாக இருந்தாலும், நம்முடைய கைகள் கட்டப்படுகின்றன. அனுப்பக் கூடாது என்று தாக்கீது வருகிறது. அதைப்பற்றி அதிகமாக இங்கே மற்றவர்கள் சொல்ல வேண்டுமென்று விரும்பாவிட்டாலும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அவர்களாவது குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்பொழுதுதான் செய்தி வந்திருக்கிறது. நேற்று யார் யாருக்கோ அபராதம் போடப்படுகிறது என்று பேசினார்கள். ஆனால் ஒருநாட்டின் முதலமைச்சருக்கு போடப்பட்டிருக்கிறது மத்திய அரசால்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்த செய்தியை இந்த அவை உணரும் என்று அறிகிறேன். டில்லியில் இருக்கும் கோளமாளிகைகளில் இருக்கிற அறைகளில் சிலவற்றை அலுவலகத்திற்குப் பயன்படுத்தினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இந்த நாட்டில் இருக்கும் ஒரு மாநில முதலமைச்சருக்கு திரு. அச்சுத மேனன் அவர்களுக்கு 14 லட்சம் ரூபாய் அபராதம் போடப்பட்



1974 சனவரி 24] [திரு. கா. வேழவேந்தன்]

டிருக்கிற காட்சியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இது எங்கே போய் முடியும்? திரு. தங்கமணி அவர்கள் எங்கோ ஓரிடத்திலிருந்து லாரி போவதைப் பற்றி எல்லாம் பேசினார்கள். ஒரு இடத்திலிருந்த கர்டர் மற்றொரு பகுதிக்கு மாற்றப் பட்டது பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் இவ்வளவு பெரிய கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் சில பிரிவுகளுக்காக இவற்றையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கின்ற ஒரு கருத்தே வந்திருக்கிறது. அவர்கள் இதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கோடிட்டுக் காட்டாமல் விட்டது வருந்துதற்குறியது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றுகிற நிலையில் இன்னும் செழுமையான நிலை உருவாக வேண்டுமானால் போதிய அளவு உரம் ஒதுக்கப்பட வேண்டும். கவர்னர் அவர்கள் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு உரம் கூட ஒதுக்கப்படவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் கவலைப்பட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். வயிறுக்கு நாம் உணவு கொடுக்க வேண்டும். வயல்களுக்கு மத்திய அரசு உரமாகிய உணவைக் கொடுக்க வேண்டும். இதிலே மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எல்லோரும் ஒருமித்துக் குரல் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் பல்வேறு சீரிய திட்டங்களைப் பற்றியெல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அடுத்து வரப் போகிற வரவு-செலவுத் திட்ட உரையில் முதல்வர் அவர்கள் அறிவிக்கப் போகிற திட்டங்களைப் பற்றி முகப்புரையாக, நல்ல செய்திகளை எல்லாம் தெரிவிக்கிற முகப்புரையாக கவர்னர் உரை அமைந்திருக்கிறது. மத்திய அரசை எது எதற்கெல்லாம் தட்டிக் கேட்க வேண்டுமோ அவற்றைப் பற்றிய குறிப்புகளை எல்லாம் வரவேற்று, இந்த நாட்டில் இருக்கும் எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் எங்களுடைய குரலுக்கு இணை குரலாக, கூட்டுக் குரலாக எழுப்ப வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1974 சனவரி 24

* திரு. ஏ. சுவாமிதாஸ்: மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கும் திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தில் கூற முற்படுகிறேன்.

ஐந்து நாட்களாக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆளும் தரப்புக் கட்சியினர் அரசைப் பாராட்டியும், எதிர் வரிசையில் இருக்கும் உறுப்பினர்கள் அரசு செய்யத் தவறிய காரியங்களை எடுத்துக் கூறியும் விவாதங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதில் விசேஷமாக நான் குறிப்பிட விரும்புவது ஆளும் தரப்பில் இருந்து பேசுகின்ற உறுப்பினர்கள் முடிவாகத் தங்கள் உரையை முடிக்கும் போது ‘தங்கள் தொகுதியில் அரசு செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்ன இருக்கின்றன, இவற்றை எல்லாம் செய்து தர வேண்டும்; இதுகாறும் செய்து தரப்படவில்லை, அரசு கவனம் செலுத்த வேண்டும்’ என்று கூறி உரையை முடிக்கிறார்கள். ஆக, எல்லாவற்றையும் நாம் தொகுத்துப் பார்த்தால் அரசு செய்யத் தவறிய பல காரியங்கள் இன்னும் உள்ளன என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இன்றைக்கு முக்கியமான பல பிரச்சினைகளைப் பற்றி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கூறியிருக்கிறார்கள். விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், நெசவாளர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை, மாணவர்கள் பிரச்சினை, எல்லாவற்றுக்கும் மேலாக கார்ப்பரேஷன் ஊழல் இவற்றைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். பண்டைய தமிழகத்தில்கூட நாட்டில் ஏற்படும் எல்லா விளைவுகளுக்கும் காவலரே பொறுப்பு என்ற அடிப்படையில் கவிதைகளை இயற்றி இருக்கிறார்கள்.

“மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
காவலன் பழிக்கும் கண்ணகன் ஞாலம்” என்பது புலவர் கூற்று.

இயற்கையால் ஏற்படும் விளைவுகளுக்கும் கூட அரசின் மீது மக்கள் பழிசுமத்துவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்று அரசுதான் அத்தனைக்கும் பொறுப்பேற்றுக்



1974 சனவரி 24] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

கொள்ள வேண்டும். ஜனநாயக நாட்டில் வேலை கிடைக்கவில்லை என்றால் அரசாங்கத்தைத்தான் நாடுகிறார்கள். மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பு என்றாலும் அரசைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் இங்கு ஏற்படுகின்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் மக்களும், மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் உறுப்பினர்களும் அரசாங்கத்தைக் குறை சொல்லுகிறார்கள் என்றால் அரசாங்கம் அதைத் திசை திருப்பி விடுகிறது. தங்கள் மீது சுமத்தப்பட்ட பழிகளுக்கெல்லாம் நாங்கள் பொறுப்பல்ல. மேலே இருக்கும் மத்திய அரசாங்கந்தான் பொறுப்பு என்று சொல்லி திசை திருப்பி விடுகிறார்கள். ஆளுநர் அறிக்கையும் கிட்டத்தட்ட அப்படித்தான் அமைந்திருக்கிறது. நன்றாகக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் ஆளும் கட்சியினர் கொஞ்ச காலமாக எழுப்பிக் கொண்டிருக்கும் மாநில சுயாட்சி கோரிக்கைக்கு வழி கோலுவதாக அமைந்திருக்கிறதே தவிர வேறல்ல. எங்களுக்கு வேண்டியதெல்லாம் எங்கள் தொகுதி மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள், விலைவாசி குறைந்திருக்கிறதா, பண்டங்கள் எளிதாகக் கிடைக்கின்றனவா, மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிகளுக்குப் போய்வருகின்ற சூழ்நிலை இருக்கிறதா, நெசவாளர் பிரச்சினை தீர்ந்திருக்கிறதா என்பதைத்தான். இவற்றுக்கெல்லாம் அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை பல பிரச்சினைகள் இருக்கின்றன. திருவிதாங்கூர்—கொச்சியுடன் இணைந்திருந்தபோது பெருவாரியான மக்கள் மலையாள மொழி பேசுகின்ற மக்களாக இருந்தார்கள். கன்னியாகுமரியிலுள்ள நாங்கள் மட்டுந்தான் தமிழ் பேசக்கூடியவர்கள். எந்தப் பிரச்சினைக்கும் அன்று சரியான பரிகாரம் கிடைக்காது. எங்களைப் பார்த்து பாண்டிக்காரன், தமிழன் என்று ஒதுக்கிக் கொண்டே வந்தார்கள். நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமைகள் கூட கிடைக்கவில்லை. ஆகவே, தமிழ் நாட்டோடு இணைந்தால்தான் நம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். ‘தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!’ என்ற அடிப்படையில் பத்து ஆண்டுகள் போராட்டம் நடத்தி இந்தத் தமிழ்ப் பகுதிக்கு வந்தோம். இங்கே நியாயமான உரிமைகள் கிடைக்கும், உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று நினைத்தோம்.

ஆனால் இங்கே என்ன சொல்லுகிறார்கள்? எங்களைப்பார்த்து 'மலையாளத்தான்' என்று எளிதாகச் சொல்லிவிடுகிறார்கள். இன்றும் எங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை.

சென்ற ஆண்டு—1973-74-ம் ஆண்டு பட்ஜட்டைப் பார்த்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள் ஒன்றும் இல்லை. ஐந்து லட்சம் ரூபாய் செலவிட்டு ஒரு திட்டத்தைக் கூட நிறைவேற்றவில்லை. ஒரு பாலமோ, தொழிற்சாலையோ அமைக்கப்படவில்லை. அதை விட ஒரு வேடிக்கை. துரதிருஷ்டவசமாகவோ, நாங்கள் செய்த பாவத்தின் பயனாகவோ, கேரள எல்லையோடு ஒட்டியிருக்கும் பகுதி எங்கள் பகுதி. மதுரை மாவட்டம், கோவை மாவட்டத்தின் அருகிலும் கேரள எல்லை இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் அருகிலும் கேரளப் பகுதி இருக்கிறது. அங்கிருந்தெல்லாம் அரிசியைக் கேரளத்திற்கு எடுத்துச் செல்லுகிறார்கள். லாரியிலே போகிறது, கழுதை மேலே வைத்துக் கடத்திச் செல்லுகிறார்கள். மற்ற மாவட்ட மக்களுக்கெல்லாம் சூட்டப்படாத சிறப்புப் பட்டம் கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்ட மக்கள் கடத்தல்காரர்கள், கன்னியாகுமரி எம்.எல்.ஏ. க்கள் கடத்தல்காரர்கள், வியாபாரிகள் கடத்தல்காரர்கள் என்ற பட்டமாகும். எங்களுக்கு மட்டும் தனியாக இந்தப் பட்டத்தை உணவுத்துறை அதிகாரிகள் சூட்டியிருக்கிறார்கள். பல பகுதிகள் வழியாக அரிசி கேரளத்திற்குப் போகிறது. பொள்ளாச்சி வழியாக, போடி கம்பம் வழியாக, செங்கோட்டை வழியாக எல்லாம் போகிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மட்டுந்தான் கடத்தல்காரர்கள். நாங்கள் என்ன பாவம் செய்தோம்? எங்கள் பகுதியில் வாழும் மக்களுக்குப் போதுமான அரிசி கிடைக்கவில்லை. வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு அங்கு நிலைமை இருக்கிறது.

(நண்பகல் 12.00)

ஒரு படி அரிசி விலை ரூ. 4.50. சென்னை அல்லது திருநெல்வேலியில் உள்ள மக்கள் ஒரு படி அரிசிக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் கொடுத்து வாங்காத நிலை இருக்கும்போது எங்கள் பகுதியில் மட்டும் இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன? இதைத் தடுப்



பதற்கு இந்த அரசு முற்படக்கூடாதா? எங்கள் பேரில் சிறிது அக்கறை காட்டக் கூடாதா? என்று கேட்கிறேன். கடத்தல் என்பது எல்லாப்பகுதிகளிலும்தான் இருக்கிறது. சென்னையில் உள்ள மக்கள் எங்குள்ள அரிசியை சாப்பிடுகிறார்கள்? என்று கேட்கிறேன். நெல்லூர் அரிசிதானே. ஆந்திராவிலிருந்து அது வருகிறது. தமிழ்நாட்டுக்கு ஆந்திராவிலிருந்து எப்படி அரிசி கடத்தப்படுகிறது என்பதை எங்கள் கண்ணால் பார்த்தோம். ஆந்திராவை விட இங்கு விலை சற்று அதிகம் கிடைக்கிறது என்று அங்குள்ள சில மக்கள் அதை ஒரு தொழிலாக வைத்து அரிசியை சென்னைக்குக் கொண்டு வந்து விற்கிறார்கள். ஆக, எல்லாயிடங்களிலும் கடத்தல் இருக்கத்தான் இருக்கிறது. நாம் ஆந்திரா அரிசியை சாப்பிடவில்லை என்று சொல்லமுடியாது.

ஆகவே, அரசாங்கம் கன்னியாகுமரி மாவட்டமும் தமிழ் நாட்டின் ஒரு பகுதி, அங்குள்ள மக்களும் தமிழர்கள், அவர்களும் வயிறாரச் சாப்பிடவேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு போதிய அளவிற்கு அரிசி கிடைக்கச் செய்யவேண்டும். அங்கிருந்து அரிசி கடத்தப்பட்டால் நீங்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுங்கள். ஒதுக்கொள்கிறோம். அரிசிக் கடத்தல் இருக்கக் கூடாது என்றுதான் நாங்களும் சொல்கிறோம். ஆகவே அரசு இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

எங்கள் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஜாஸ்தியாக இருக்கிறது. எங்கள் பகுதி ஒரு சிறிய நிலப்பகுதி. அங்கு மக்கள் தொகையோ அதிகம். நான்கு தாலுக்காக்கள்தான் உள்ளன. 14 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கு படித்தவர்கள் அதிகம். இந்தியாவிலேயே இரண்டாவதாக அதிகக் கல்வி கற்கிற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம், வேலைவாய்ப்பு குறைவு. முதல் அமைச்சர் அவர்களிடம் கூடச் சொன்னேன். சென்ற ஆண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் செலக்ஷன் நடந்தது. பெக்டர்கள் தேர்வு நடந்தது. நாங்கள் கிடைக்கும் என்று ஒருவரையாவது எங்கள் பகுதியில் இருந்து எடுக்கக்கூடாதா? ஒருவரைக் கூட எடுக்கவில்லை. இந்த ஆண்டும் சப்-இன்ஸ் எதிர்பார்த்தோம், கிடைக்கவில்லை. இந்த ஆண்டும் ஒருவர் கூட அத்தேர்வில் எங்கள் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொன்னேன்,

நாங்கள் 14 லட்சம் பேர்கள் இருக்கிறோம், எங்களுக்கு கிடைக்க வேண்டிய விகிதாசாரத்தையாவது கொடுக்க வேண்டுமென்று, கிடைக்கவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் வந்து பார்த்தால், எங்கள் அறைகளில் பார்த்தால் பட்டம்பெற்ற பல இளைஞர்கள், எம்.ஏ. படித்தவர்கள், பி.ஏ. பட்டதாரிகள், பி.எல். படித்தவர்கள் எல்லோரும் படைஎடுத்து வருகிறார்கள். இங்கு வந்தாலாவது வேலை கிடைக்கும் என்று பார்த்தால் கன்னியாகுமரிக்கு போ என்று விரட்டுகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எங்கள் பேரில் சிறிது கருணை காட்டவேண்டும்.

எங்கள் பகுதியில் ஒரு தொழிற்சாலையாவது—ஒரு ரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டோம். அது இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்றுவிட்டது அங்கிருந்து ஒரு அமைச்சர் இருப்பதால். எங்கள் பகுதியிலிருந்து ஒரு தொழில் அமைச்சர் இருந்திருந்தால் எங்களுக்குக் கிடைத்திருக்கும், ஆனால் அப்படியில்லாதது எங்கள் துரதிருஷ்டம். கன்னியாகுமரிக்சென்று வந்த தொழிற்சாலையை எங்கேயோ ஒதுக்கிக் கொண்டு போய்விட்டார்கள் ரப்பர் இராமநாதபுரத்தில் விளைகிறதா என்று கேட்கிறேன். ரப்பர் வேண்டுமென்றால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரவேண்டும். ரப்பர் விளைகிற அந்த மாவட்டத்திற்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை கிடையாது. இது வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. இதுபற்றி பல முறை சொல்லியாகிவிட்டது. ஆகவே அதில் சிறிது கவனம் செலுத்தவேண்டும்.

**திரு. க. சோணையா :** தலைவர் அவர்களே, ரப்பர் இல்லாத இராமநாதபுரம் மாவட்டம், அங்கு ரப்பர் தொழிற்சாலையைக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் சென்னையில் ரப்பர் மரம் கிடையாது. ஆனால் சென்னையில் ரப்பர் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதையெல்லாம் பற்றி குறை கூறாத உறுப்பினர் அவர்கள் பஞ்சப் பிரதேசம், வரட்சிப் பிரதேசமான இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் போனதுபற்றி அவர்கள் வருந்துவானேன்? என்று கேட்கிறேன்.



**திரு. ஏ. சுவாமிதாஸ்:** எங்கள் மாவட்டத்திற்கு வர இருந்த தொழிற்சாலையை அங்கு கொண்டு போனதால் சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் எவ்வளவு தொழிற்சாலைகள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். என்னென்ன வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ அதற்கான தொழிற்சாலைகளைத் தொடங்கட்டும், கோடி கோடியாக கொட்டி வைத்துக்கொள்ளுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. எங்கள் பகுதிக்கு வர இருந்த தொழிற்சாலையை அங்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என்பது தான் எங்கள் குற்றச்சாட்டு.

அடுத்தபடியாக, லா ஆன்ட் ஆர்டர் நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொன்னால் மக்கள் மத்தியில் ஒழுக்கம் மிகவும் அவசியம். அரசியல்வாதிகளானாலும்சரி அல்லது அதற்கு அப்பாற்பட்டவர்களானாலும்சரி ஒழுக்கத்தைப்பற்றி கவலைப் படுபவர்களாக இல்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பேரறிஞர் அண்ணா கூறியுள்ளார்கள், அதன்படிதான் நடக்கிறோம், அதன்படிதான் ஆட்சி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த மூன்று வார்த்தைகளை எடுத்துக் கொண்டால், கடமை, கண்ணியம் இவை நாட்டில் தட்டுப்பாடு என்றுதான் பொருளே தவிர, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அது, எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி. அரசு செய்கிற எல்லாக் காரியங்களிலும் ஒழுக்கத்திற்கு முதல் இடம் கொடுத்தாக வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஏகப்பட்ட கூட்டம் இருக்கிறது. என்னவென்று கேட்டால் சிபார்சுகள். ஒரு பேப்பர் போகவேண்டுமென்று சொன்னால், அதை நடத்தித் தர வேண்டுமென்று சொன்னால் இயல்பாகவே ஒரு வழிமுறையை வகுத்து அதன்படி பைசலானால் கூட்டம் இருக்காது. காரியங்கள் நடக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் விடுதி முன்னால் கூட்டம் காத்துக் கிடப்பதைக் காண்கிறோம். இந்நிலை மாறி கட்டுப்பாடான ஒரு நிலை ஏற்படவேண்டும்.

அடுத்தபடியாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைச் செலவில் கூடுதல் செலவாகிற மூன்று இடத்தில் அதிகம் செலவாகிற நகரம் நாகர்கோவில். அதைவிட சற்று செலவு குறைந்த இடம் கோவை. அதைவிடக் குறைவாகச் செலவாகிற இடம் சென்னை நகரம். இந்த அடிப்படையில் பார்த்தால்—நகரங்களில் வேலை செய்கிற ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி கொடுக்கிறோம்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 சனவரி 24

வாழ்க்கைச் செலவின் அடிப்படையில், காஸ்ட் ஆப் லிவிங்
இன்டக்ஸ்படி கொடுக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது
கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவு அதிகமாக
இருக்கிறது. ஆகவே அங்கு பணியாற்றுகிற ஊழியர்களுக்கு
மற்றயிடங்களில் பணியாற்றுகிற ஊழியர்களை விட கூடுதல்
சம்பளம் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். ஊதியம்
கொடுப்பது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில்தான்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் 4.50
ரூபாய் கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலையில்
இருக்கிறார்கள். சென்னையில் படி அரிசி இரண்டு ரூபாய்க்குக்
கிடைக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி
யாற்றுகிற ஊழியர்களுக்கு அதிகப்படியான ஊதியம் கிடைக்கச்
செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் ஒரு பெரிய கல்லூரி
லக்ஷ்மீபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரி ஏறத்தாழ நான்கு மாதங்
களாக மூடிக்கிடக்கிறது. அங்குள்ள மாணவர்களும், பொது
மக்களும் சேர்ந்து அந்தக் கல்லூரி மானேஜ்மென்டார் செய்கிற
காரியங்கள் ஒழுங்கானதாக இல்லை, ஊழல்கள் அதிகம் இருக்
கின்றன, ஆகவே அதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்று
தொடங்கப்பட்ட பிரச்னை தீராமல் கல்லூரி முதல்வரை
நீக்கிவைத்து அப்பிரச்னை தீர்க்கப்படாமல் அந்தக் கல்லூரி
நிர்வாகிகள் பிரச்னையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதன்
காரணமாக ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகப் பரீட்சைக்குப்
பணம் கட்டமுடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அது
பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். இந்த
ஆண்டு மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கேற்றவகையில் அப்
பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், இப்போது பெட்ரோல் விலை ஏறிப்போய்விட்டது.
அரசாங்கத்தின் கையில் ஆயிரக்கணக்கான ஜீப்கள் இருக்கின்றன.
எல்லாம் தமிழக அரசு, தமிழக அரசு, எங்கு பார்த்தாலும்
ரோட்டில் ஒரே தமிழக அரசு ஜீப்கள்தான் ஓடுவதைப் பார்க்
கிறோம். அந்த ஜீப்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன
என்பதைப் பற்றி அரசு சிறிது கண்காணிக்கவேண்டும். ஏறத்
தாழ இருபது கோடி ரூபாய் கூட மிச்சம் கிடைக்கும். அவை



1974 சனவரி 24] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

களுக்கு பெட்ரோல் வீணுகச்செலவழிக்கப்படுவதாகப் பலர்
சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உடனடியாக ஆதாரம்
இருக்கிறதா என்று கேட்டுவிடக் கூடாது. தினசரி முப்பது
லிட்டர் பெட்ரோல் ஆகிறது என்றால் பத்து லிட்டர் ட்ரைவர்
அட்ஜஸ்ட் செய்து கொள்வார். அதுவும் இப்போது நல்ல
வாய்ப்பு. ஐந்து லிட்டர் பெட்ரோல் ரூ. 13-75 ஆகிறது. பத்து
லிட்டர்கள் தவறாக எடுப்பது என்ற நிலைமை இருப்பதாகக்
கேள்விப்படுகிறோம். ஆதாரம் இல்லை. இது உறுப்பினர் அனை
வருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் புதிதாக ஒன்றும்
சொல்லவில்லை. இதைப்பற்றி கவனம் செலுத்தப்படவேண்டும்.
ஜீப் கார்கள் எதற்குப் போகவேண்டுமோ அதற்குத்தான் போக
வேண்டும். காலையில் 9-30 மணி அளவில் ஹைஸ்கூல் பக்கம்
சென்றால் ஒரே ஜீப் கார்களாக இருக்கும். எல்லா அதிகாரிகளும்
இங்கு வந்து காம்ப் போடுகிறார்களோ என்று தோன்றும்.
அப்படியில்லை. அவர்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு
அனுப்ப அதைப் பயன்படுத்துகிறார்கள். சந்தைக்குச் சென்றால்
அங்கு மரக்கறி வாங்க, காய்கறி வாங்க ஜீப் கார்கள் வரிசையாக
க்யூவில் நிற்பதைக் காணலாம். அரசாங்க அதிகாரிகள் சில
சந்தர்ப்பங்களில் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. ஏன்
அதைச் சொல்கிறேன் என்றால் அதை ஒரு கட்டுப்பாட்டிற்குள்
கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான். உதாரணத்திற்குச்
சொல்ல வேண்டுமானால், எங்கள் [illegible] இருக்கும் மத்திய
கூட்டுறவு வங்கிக்கு ஒரு கா[illegible] ஒரு ஜீப்பும் [illegible]ந்தமாக இருக்
கின்றன. அந்தக் கார் [illegible]போதும் தலைவ[illegible] [illegible]ட்டிலேதான்
இருக்கும். தலைவர் வீட்[illegible]ம் வங்கிக்கும் 3 ப[illegible]கு தூரம்
தான் இருக்கும். இந்தக் [illegible]ர, துணைத் தலைவர், [illegible]லைவர் ஆகிய
இரண்டு பேர்தான் [illegible]யோகிக்கிறார்கள். [illegible] மத்திய
வங்கியின் தலைவருக்கு [illegible] தேவையா, இவற்[illegible]றயெல்லாம்
சிந்தித்துப்பார்க்கவேண்டு[illegible]று கேட்[illegible]கொள்[illegible]ன்.

மூன்று ஆண்டுக்காலமாக [illegible] ஒரு பேப்பர்
அப்படியே தூங்கிக்கொண்டு [illegible] திக்கணம்கோடு
கால்வாயிலிருந்து கோடியூருக்கு அருகில் ஒரு கிளைக் கால்வாய்
வெட்டுவது சம்பந்தமாக உள்ள பேப்பர் அது. அந்தப் பகுதியில்
அந்தக் கால்வாய் வெட்டினால் ஒரு 50 எக்கர் நிலம் சாகுபடிக்கு
கொண்டுவர முடியும். அதற்கு பூர்வாங்க வேலைகள் எல்லாம்

வாழ்க்கைச் செலவின் அடிப்படையில், காஸ்ட் ஆப் லிவிங் இன்டக்ஸ்படி கொடுக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கு பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மற்றயிடங்களில் பணியாற்றுகிற ஊழியர்களை விட கூடுதல் சம்பளம் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். ஊதியம் கொடுப்பது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில்தான். கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் 4.50 ரூபாய் கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சென்னையில் படி அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி யாற்றுகிற ஊழியர்களுக்கு அதிகப்படியான ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் ஒரு பெரிய கல்லூரி லஷ்மீபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரி ஏறத்தாழ நான்கு மாதங் களாக மூடிக்கிடக்கிறது. அங்குள்ள மாணவர்களும், பொது மக்களும் சேர்ந்து அந்தக் கல்லூரி மானேஜ்மென்டார் செய்கிற காரியங்கள் ஒழுங்கானதாக இல்லை, ஊழல்கள் அதிகம் இருக் கின்றன, ஆகவே அதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்று தொடங்கப்பட்ட பிரச்னை தீராமல் கல்லூரி முதல்வரை நீக்கிவைத்து அப்பிரச்னை தீர்க்கப்படாமல் அந்தக் கல்லூரி நிர்வாகிகள் பிரச்னையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகப் பரீட்சைக்குப் பணம் கட்டமுடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். இந்த ஆண்டு மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கேற்றவகையில் அப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், இப்போது பெட்ரோல் விலை ஏறிப்போய்விட்டது. அரசாங்கத்தின் கையில் ஆயிரக்கணக்கான ஜீப்கள் இருக்கின்றன. எல்லாம் தமிழக அரசு, தமிழக அரசு. எங்கு பார்த்தாலும் ரோட்டில் ஒரே தமிழக அரசு ஜீப்கள்தான் ஓடுவதைப் பார்க் கிறோம். அந்த ஜீப்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி அரசு சிறிது கண்காணிக்கவேண்டும். ஏறத் தாழ இருபது கோடி ரூபாய் கூட மிச்சம் கிடைக்கும். அவை



களுக்கு பெட்ரோல் வீணுகச்செலவழிக்கப்படுவதாகப் பலர் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உடனடியாக ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டுவிடக் கூடாது. தினசரி முப்பது லிட்டர் பெட்ரோல் ஆகிறது என்ருல் பத்து லிட்டர் ட்ரைவர் அட்ஜுஸ்ட் செய்து கொள்வார். அதுவும் இப்போது நல்ல வாய்ப்பு. ஐந்து லிட்டர் பெட்ரோல் ரூ. 13-75 ஆகிறது. பத்து லிட்டர்கள் தவருக எடுப்பது என்ற நிலைமை இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆதாரம் இல்லை. இது உறுப்பினர் அனை வருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. இதைப்பற்றி கவனம் செலுத்தப்படவேண்டும். ஜீப் கார்கள் எதற்குப் போகவேண்டுமோ அதற்குத்தான் போக வேண்டும். காலையில் 9-30 மணி அளவில் ஹைஸ்கூல் பக்கம் சென்ருல் ஒரே ஜீப் கார்களாக இருக்கும். எல்லா அதிகாரிகளும் இங்கு வந்து காம்ப் போடுகிறார்களோ என்று தோன்றும். அப்படியில்லை. அவர்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப அதைப் பயன்படுத்துகிறார்கள். சந்தைக்குச் சென்ருல் அங்கு மரக்கறி வாங்க, காய்கறி வாங்க ஜீப் கார்கள் வரிசையாக க்யூவில் நிற்பதைக் காணலாம். அரசாங்க அதிகாரிகள் சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. ஏன் அதைச் சொல்கிறேன் என்ருல் அதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல், எங்கள் [illegible] இருக்கும் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஒரு கா[illegible] ஒரு ஜீப்பும் [illegible]ந்தமாக இருக் கின்றன. அந்தக் கார் [illegible]போதும் தலைவ[illegible] [illegible]ட்டிலேதான் இருக்கும். தலைவர் வீட்[illegible]கும் வங்கிக்கும் 3 ப[illegible]கு தூரம் தான் இருக்கும். இந்தக் [illegible]ரை, துணைத் தலைவர், [illegible]லைவர் ஆகிய இரண்டு பேர்தான் [illegible]யோகிக்கிறார்கள். [illegible] மத்திய வங்கியின் தலைவருக்கு [illegible] தேவையா, இவற்[illegible]றையெல்லாம் சிந்தித்துப்பார்க்கவேண்டு[illegible]று கேட்[illegible]கொள்[illegible]ன்.

மூன்று ஆண்டுக்காலமாக [illegible] ஒரு பேப்பர் அப்படியே தூங்கிக்கொண்டு [illegible] திக்கணங்கோடு கால்வாய் கால்வாயிலிருந்து கோடியூருக்கு அருகில் ஒரு கிளைக் கால்வாய் வெட்டுவது சம்பந்தமாக உள்ள பேப்பர் அது. அந்தப் பகுதியில் அந்தக் கால்வாய் வெட்டினல் ஒரு 50 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு கொண்டுவர முடியும். அதற்கு பூர்வாங்க வேலைகள் எல்லாம்

முடிந்து, மாவட்ட கலெக்டர் கூட அனுமதி தந்து விட்டார்கள். ஆனால் அந்தப் பேப்பர் சீப்-இன்ஜினீயர் அலுவலகத்தில் மூன்றாண்டுகாலமாக தூங்கிக்கொண்டிருக்கிறது. நானும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டேன். அது நகருகிற மாதிரி இல்லை. காரணம் அது கன்னியாகுமரி மாவட்டத்தில் செய்யப்படவேண்டிய வேலையாக இருப்பது தான். மலையாளத்தானுக்கு ஏன் செய்யவேண்டுமென்று இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இது மிகவும் முக்கியமான பிரச்னை. உணவுப் பிரச்னையை ஒட்டிய பிரச்னை. ஆகவே, உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் போலீஸ் இலாகாவை குறை சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. சில அதிகாரிகள் அந்த இலாகாவிற்கு எப்படி அவப்பெயர் வாங்கித் தருகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். எங்கள் பகுதியில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவருக்கு கை எப்போதும் துடிதுடிப்பாக இருக்கிறது. ஆகவே, அவர் யார் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாலும் அவரை அடிக்கிறார். அந்த மாதிரி ஒரு பழக்கத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார். ஒரு தடவை ஒரு கட்சிக்காரனை அடித்த காரணத்தால், அவன் எங்கள் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடாரிடத்தில் வந்து சொல்லியிருக்கிறான். அவர் உடனே வழக்கு தொடரச்சொல்லியிருக்கிறார். அப்படி வழக்குத் தொடர்ந்த காரணத்தால் அந்த வழக்குத் தொடர்ந்த நபர் எந்த இனத்தைச் சேர்ந்தவரோ, அந்த இனத்தைச் சேர்ந்தவர் யார் ஸ்டேஷனுக்கு வந்தாலும், அந்த இனத்தின் பெயரைச் சொல்லி அவர்களை "பொன்னப்ப நாடாரிடம் போய் சொல்" என்று கூறி நையப்புடைத்து விடுகிறார். இப்படிப் பட்ட ஒரு எஸ்.ஐ. மற்ற இடங்களில் இருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது, எங்கள் பகுதியில் இருக்கிறார். அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் பல பிரச்னைகள் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்து இருக்கின்றன. உணவுப்பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இரண்டு பிரச்னைகள் மிகவும் முக்கியமானவை. அதோடு இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் எங்கள் மாவட்டத்திற்கு எவ்வளவு வரவேண்டுமோ அதை கவனத்தில் கொண்டு நியாய [illegible] முறையில் வாய்ப்புகள் வழங்குவதற்கு அரசு வழிவகை



செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்கள் பகுதியில் இருக்கும் ரெவின்யூ இலாகாவில் இருப்பவர்களுக்கு முறையாகக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த ஈரோடு தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தமிழ் சமுதாயம் சீர்திருந்துவதற்காக தன்னுடைய சீர்திருத்தக் கருத்துக்களை அஞ்சாது எடுத்துக்கூறி, பகுத்தறிவு எண்ணத்தை மக்களிடையே எடுத்துக்கூறி வந்த அவர்கள் நம்மிடமிருந்து மறைந்தது நம் எல்லோருக்கும் மிகவும் துன்பமாக இருக்கிறது, அதற்காக ஆறுதல் கூறும் முகத்தான் நமது ஆளுநர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு அஞ்சலி கூறிவிட்டு, இந்த உரையைத் துவக்கியிருக்கிறார் என்பதற்காக ஆளுநர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

தந்தை பெரியார் அவர்கள் நமது தமிழ்ச் சமுதாயத்திற்கு மாத்திரம் தமது சீர்த்திருத்தக்கருத்துக்களைப் புகுத்தவில்லை. பெண்களுக்கு இந்தச் சமுதாயத்தில் ஒரு தனிப்பட்ட இடத்தைக் கொடுக்கும் அளவிற்கு, அந்தப் பெண்ணின் உரிமைக்காகப் பாடுபட்ட பெருந் தலைவர் ஆவார். காலம் எத்தனை மாறினாலும் எத்தனை தலைமுறை மாறினாலும் பெண் சமுதாயம் அவர்களுக்குச் செய்த அந்தச் சீர்த்திருத்தத்திற்கு தந்தை பெரியார் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த உரையில் நமக்கு இருக்கும் மின்சாரத் தட்டுப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டு, அதை நீக்குவதற்காக பல திட்டங்களை நமது அரசு ஏற்படுத்த திட்டம் தீட்டியிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மின் உற்பத்திக்காக இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 180 கோடி ஒதுக்கியிருப்பதற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன். மேலும் அனல் மின் உற்பத்தி செய்வதற்காக

எங்கள் மாவட்டத்தில் இருக்கும் பரம்பிக்குளம்-ஆளியாறு. போன்ற திட்டங்களையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், அதன் மூலம் பெரும் அளவில் மின்சார உற்பத்தி செய்யமுடியும், அதனால் நமக்கு இருக்கும் மின்சாரத் தட்டுப்பாடு ஓரளவுக்குக் குறையும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர் திட்டத்திற்காக நமது அரசாங்கம் ஏராளமான பணம் ஒதுக்கியிருக்கிறது. நகர்ப் பகுதி, கிராமப் பகுதி எல்லாப் பகுதிகளுக்கும் விரைவில் ஏற்படுத்த நல்ல திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் தாராபுரம் வட்டத்தில் அலங்கியம் என்ற கிராமத்திற்கு குடிநீர் திட்டம் வேண்டுமென்று நாங்களும் நான்காண்டுகளாக முயற்சி எடுத்து வருகிறோம். என்ன காரணத்தாலோ தெரியவில்லை அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதையும் விரைவில் முடித்துக்கொடுக்குமாறு இந்த அரசை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பசுமைப்புரட்சி காரணமாக நம் நாட்டில் அதிகமாக உணவு உற்பத்தி ஏற்பட்டு, இப்போது நமது மாநிலம் உபரி மாநிலமாக இருக்கிறது. இருந்தாலும் விவசாயிகளுக்குத் தேவையான உரம் கிடைப்பது இல்லை. உரத்தட்டுப்பாடு நமது தமிழ்நாட்டில் மிகவும் இருக்கிறது என்பதையும் எல்லோரும் அறிவார்கள். இந்த உரத்தட்டுப்பாட்டிற்குக் காரணம் மாநில அரசுதான் என்கிற தவறான எண்ணம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. அந்த எண்ணத்தைப் போக்கும் வகையில் மாநில அரசு மத்திய அரசோடு போராடி நமக்கு வேண்டிய உரத்தை பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உரம் கொடுக்கிறபோது மத்திய அரசு ஒரு பங்கை மாநில அரசுக்கும், மற்றொரு பங்கை தனிப்பட்ட நபருக்கும் கொடுப்பதாக அறிகிறேன். அப்படியில்லாமல், மத்திய அரசு கொடுக்கும் எல்லா உரத்தையும் மாநில அரசுக்கே அளிக்கவேண்டுமென்று கேட்டு, அப்படிப் பெறும் உரத்தை கோவாபரேடிவ் சொசைடி மூலமாக விவசாயிகளுக்கு வினியோகம் செய்தால், அந்த விவசாயிகளின் பெரும் குறை நீங்கும். இப்போது உரத் தட்டுப்பாடு இருப்பதால், இந்த அரசு பசும்தழை உரம், சஸ்பேனியோ போன்ற பசுந்தழைகளைக்





கொண்டு போடும். உரங்களைப் பயன்படுத்தும் முறையை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அது மிகவும் மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பூச்சிக்கொல்லி மருந்தும் இப்போது நமக்கு வேண்டிய அளவு கொடுப்பது இல்லை. உரம் உற்பத்தி செய்வதற்கு தூத்துக்குடியில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்போவது போல், நமது அரசாங்கம் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கவும் ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப்பாங்கான பகுதிகளில் பாசனப் பணிகளை மேற்கொள்ளும் திட்டத்தை நமது அரசாங்கம் போட்டிருக்கிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். இதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய முடியும். இதனால் ஒரு சிலருக்கு வறண்டு போயிருக்கும் பாசன வழிகளிலிருந்து தண்ணீர் கிடைக்கும். மேலும் புதிய கிணறுகளைத் தோண்டுவதாலும், ஏரிகுளங்களில் தூர் எடுப்பதாலும், தண்ணீர் வறட்சி நீங்கும் என்பதில் ஐயமில்லை. எங்கள் பகுதியில் சின்னக்கரைவாடி திட்டம் இருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதி. அதை மனதில் கொண்டு அரசு அதில் கவனம் செலுத்தி நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நிறைய வாய்க்கால்கள் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றன. தாராபுரம் பகுதி அந்த இடங்களில் பல வாய்க்கால்கள் விடப்பட்டு இருக்கிறது. அந்த இடங்கயில் பல வாய்க்கால்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து வாய்க்கால் வெட்டிப் பாசனம் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்புக்காக நமது அரசு பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அதற்காக கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கியிருப்பதால் வேலைவாய்ப்பு அற்று இருக்கும் பலபேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றாலும், இப்போது செகன்டரி கிரேடு படித்திருந்த ஆசிரியர்கள் பி.டி.,

[திருமதி வி. ப. பழனியம்மாள்] [1974 சனவரி 24

முடித்து விட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு பி.டி. போஸ்டிங் கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை அதிகமாக இல்லை. மிகவும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு பி.டி. ஆசிரியர் வேலை போட்டுக்கொடுக்கவேண்டும், இல்லை யென்றால் பி.டி. ஸ்கேலாவது கொடுத்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது தவிர, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகி யோர்களை முன்னேற்றம் செய்வதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 19.50 கோடி செலவு செய்வதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது. இது மிகவும் பாராட்டத்தக்கது. குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் ஆகிய வாரியங்கள் நல்ல முறையில் செயல் பட்டு நகர்ப்புறங்களில் நிறைய வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக் கின்றன. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தி, கிராமப் பகுதிகளில் இம்மாதிரி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய வசதிக்கும் இந்தக் குடிசை மாற்று வாரியம் நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஐந்தாண்டு காலத்தில் இலங்கையிலிருந்து 57,000 அகதி குடும்பங்கள் நமது நாட்டிற்கு வர இருக்கிறார்கள். அவர்களை நாம் வரவேற்கவேண்டும். நமது மூதாதைகள் அங்கு சென்று வசதி இல்லாமல் துன்பப்பட்டு நம்மிடையே ஆறுதல் பெறுவதற்கு வருகிறார்கள் என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இருந் தாலும் அவர்களுடைய பிரச்னைகளை நினைக்கும்பொழுது, அவர்கள் தங்குவதற்கு இடம், அவர்களுக்கு வேலை வாய்ப்பு, பாதுகாப்பு போன்றவைகளைக் கொடுப்பதற்கு நாம் கட்டாயம் கிரமப்படத் தான் வேண்டும். வங்காள அகதிகள், பாகிஸ்தான் கைதிகள் போன்றவர்களை நமது நாட்டில் வைத்துக்கொண்டு, அதற்காக மத்திய அரசு ஏராளமாக செலவழித்தது. அதற்காக தனிப்பட்ட முறையில் ஏராளமாக வரிகளை வசூலித்து, அவர்களுக்குப் போதிய வசதிகளை செய்துகொடுத்தது. அப்படி அண்டை நாடுகளி லிருந்து வரக்கூடியவர்களுக்கு மத்திய அரசு உதவி செய்திருக்கும் பொழுது, நமது நாட்டைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக நம்முடைய நாட்டிற்கு வரும்பொழுது, அவர்களுக்கு வேண்டிய



1974 சனவரி 24]

வாய்ப்பு வசதிகளை செய்துகொடுக்க பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நமது அரசின் மூலம் கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பத்தில் கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிற தமிழகத்தின் தானைத்தலைவரும், ஈரோட்டுப் பெரியாரும், வைக்கம் வீரரு மான பெரியார் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக் கின்ற அந்தக் கருத்துக்களை நான் வரவேற்று, அந்தக் குடும்பத் தினருக்கும் என்னுடைய கட்சியின் சார்பிலே அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் உரையை நாம் படித்துப் பார்க்கும்பொழுது சம்பிரதாயத்திற்குக் கொடுத்த ஒரு அறிக்கை போலவே, யாரோ எழுதிக்கொடுத்ததைப் படிப்பது போலவும் அந்தத் தொனியில் இருக்கிறதே தவிர, நாட்டினுடைய நடப்புகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்ற நிகழ்ச்சியாக அது தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கவர்னர் அவர்களின் உரையை அம்மாதிரி சொல்லக்கூடாது.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்கள் சொன்னால் ரைட் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இருக்கிற உண்மை அது தான். இருந்தாலும் சொல்லக்கூடாது. அந்த உரையிலே இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய எழுச்சியை, மாணவர்களுடைய பிரச்னையைப் பற்றியோ அல்லது தொழிலாளர்கள் ஆங்காங்கு வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் இவைகளினால் பாதிக்கப் பட்டிருக்கிற பிரச்னைகளைப் பற்றியோ கவர்னர் அவர்கள் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை.

அதே நேரத்தில் அவர்களுடைய அறிக்கையில் மின்சாரம் பற்றாக்குறையாக இருந்தாலும் 1,770 மெகாவாட் எட்டுகின்ற திட்டத்தை தீட்டியிருக்கிறோம் என்ற ஆசை வார்த்தைகளைக் காண்பித்திருக்கிறார்கள்.

[திரு. முனு ஆதி] [1974 சனவரி 24

1973-74-ல் உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் 74
லட்சம் டன் உற்பத்தியாகும் என்று நமக்கெல்லாம் ஆசையைக்
காட்டியிருக்கிறார்கள். அவர் சமர்ப்பித்திருக்கிற அறிக்கை வரு
கிற நேரத்தில் 2½ ரூபாயாக இருந்த புழுங்கல் அரிசி ரூ. 3 ஆக
உயர்ந்திருக்கிறது. மூன்று ரூபாயாக இருந்த பச்சை அரிசி
ரூ. 3½ ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் அறிக்கையிலே 74 லட்சம்
டன் எட்டலாம் என்று ஆசை காட்டியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் விவசாயிகளை உற்சாகப்படுத்தியிருக்கிறார்களா
என்றால், அவர்களுக்கு தேவைப்படுகின்ற உரம், விதைகள்
போன்றவைகள் முறையாகத் தருகிறார்களா என்றால், தருவ
தில்லை. நான் ஒரு கேள்வி கேட்டபொழுது கூட வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் வேகமாகப் பதில்
சொன்னார். பூச்சிக் கொல்லி மருந்து கடந்த ஆண்டு ரூ. 16 ஆக
இருந்தது இன்றைக்கு ரூ. 26 ஆக உயர்ந்திருக்கிறது. ரூ. 10
உயர்த்திக்கொடுக்கவேண்டிய நிலையில் விவசாயிகள் இருந்தால்,
அவர்கள் எப்படி பயிர் செய்ய முடியும்? இதை அரசு தயவு
செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே போன்று
காம்ப்ளக்ஸ் கலப்பட உரம் 1717, 1714, 1428 போன்ற
உரங்களெல்லாம் ஒரு மாதத்திற்கு முன்னால் ரூ. 66 ஆக இருந்தது
இப்பொழுது ரூ. 80 ஆக இருக்கிறது. விவசாயிக்கு வேண்டிய
பொருள்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறதே தவிர, விவசாயி
களுக்கு அனுகூலமாக நடைமுறையில் நிலைமைகளை ஏற்படுத்து
வதற்கான நிலையில் அரசாங்கம் இல்லை.

அதே நேரத்தில் குறைந்த உரத்தைத் தான் மத்திய சர்க்கார்
தருகிறது என்ற வாதத்தை அரசினர் சொல்கிறார்கள். அந்தக்
குறைந்த அளவிலே கிடைக்கின்ற உரம் கூட முறையாக விவ
சாயிகளின் கைக்குப் போய்ச் சேரவில்லை. இன்றைக்கு இதே
அரசு ரூ. 140 கையில் கொடுத்தால் ஒரு மூட்டை யூரியா வாங்கத்
தயாராக இருக்கின்றேன். ஒன்று சொல்கிறேன். அவர்கள்
ரூ. 55-க்கு யூரியா தருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால்
கள்ள மார்க்கெட்டில் எங்கு பார்த்தாலும் விற்கின்ற அவல
நிலையை நடைமுறையில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். யூரியா
முறையாக விவசாயிகளுக்குக் கிடைக்காமல் இடைத் தரகர்கள்
பதுக்கி வைத்து, ரூ. 140, 150 என்று விற்கிற அவல நிலை இருக்



1974 சனவரி 24] [திரு. முனு ஆதி]

கிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.
ஆகவே, விவசாயிகள் பிரச்னை மட்டுமல்ல. குறிப்பாக
என்னுடைய செங்கற்பட்டு மாவட்டத்தில் பருவ மழை தவறியதன்
காரணமாக பயிர்கள் காய்ந்து அறுவடைக்கு வராமலேயே போய்
விட்டது. அந்த மாவட்டத்தில் தயவு செய்து நிலவரி வஜா
செய்வதோடு கூட, கொள்முதல் செய்கின்ற நிர்ப்பந்தத்தையும்
கைவிடவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, எனக்குத் தரப்பட்டிருக்கிற நேரம் குறைவாக
இருக்கிறது. நாங்கள் சொல்கின்ற எந்த ஒரு குற்றச்சாட்டாக
இருந்தாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்ற
எண்ணம் இல்லாமல், சொல்கின்ற குற்றச்சாட்டுகளை தீவிரமாக
விசாரித்து நடவடிக்கை எடுத்தால் உங்களுக்கும் நன்மையாக
இருக்கும். ஏதோ எதிர்க்கட்சியினர் சொன்னால் செய்ய
வேண்டுமா என்ற எண்ணத்தில் இருந்தால் இப்பொழுது
இருக்கும் அரைகுறை செல்வாக்கும் அடியோடு போய்விடும்
என்பதை மறந்துவிடக்கூடாது.

என்னுடைய பகுதியில் திருமுடிவாக்கம், பழந்தண்டலம் என்ற
கிராமம் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு பாராளுமன்ற
உறுப்பினர் இருக்கிறார். நிலைமை எப்படி இருக்கிறது என்று
பாருங்கள். இதுவரையில் ஊழல் மன்னர்கள் என்று பெயர்
எடுத்தார்கள். இப்பொழுது கொள்ளை அடிக்க ஆரம்பித்திருக்
கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ஊரில் ஒரு விவசாயி 2 ஏக்கர்
நிலம் பயிரிடுகிறான். அறுவடை நேரம் அந்த ஊரில் உள்ள யாரும்
அறுவடைக்குப் போகக்கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர்
ஊரில் உள்ளவர்களை மிரட்டி இருக்கிறார்கள். ஏன் அவர்கள்
மிரளுகிறார்கள் என்று கேட்டால் இரவு பகலாக ஒரு லாரி போலீஸ்
அவர் வீட்டில் இருக்கிறது. அந்த விவசாயி வெளி கிராமங்
களிலிருந்து ஆட்களை வரவழைத்து அறுவடை செய்தான்.
பக்கத்திலேயே களம் இருக்கிறது. அங்கே போடக்கூடாது
என்று சொல்லப்பட்டுவிட்டதால் ஒரு மைலுக்கு அப்பால்
சுமைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டான். மறு நாளைக்கு
அடித்து நெல்லைக் கொண்டு போகலாம் என்று அங்கே இரண்டு
பேர்களை காவலுக்கு வைத்துவிட்டுப் போனான். அன்றிரவு 11

[திரு. முனு ஆதி] [1974 சனவரி 24

மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் 20 அடி ஆட்களைக் கொண்டு போய் அங்கு காவல் இருந்த இரண்டு பேர்களையும் பேசமுடியாமல் அடித்து, சுமையை அடித்து 15 மூட்டை நெல்லை தன் வீட்டிற்குக் கொண்டு போய் இருக்கிறார்கள்.

இதைப்பற்றி புகார் கொடுத்தாகிவிட்டது. காவல் துறையினர் 'உங்களுக்கு எங்கள் சிக்கல் தெரியாது' என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு கையை வெட்டியிருக்கிறார். மரத்தில் கட்டிப் போட்டு அடித்திருக்கிறார். வீடுகளில் புகுந்து தடி கொண்டு அடித்திருக்கிறார். அப்பேர்ப்பட்டவருக்கு இன்றைக்குப் போலீஸ் பாதுகாப்பு. 15 மூட்டை நெல்லை, மாற்றான் நிலத்திலுள்ள நெல்லை தன்னுடைய இடத்திற்குக் கொண்டு போய் இருக்கிறார். யாருடைய தைரியத்தில் கொண்டு போயிருக்கிறார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று மக்கள் தெரிந்துகொண்டிருக்க மாட்டார்களா ? இவர் சொல்வதைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டுமா என்று நினைக்கவேண்டாம். அந்த ஊருக்கு வந்து அறுவடை செய்த கிராம மக்களை வரவழைத்துச் சொல்லச் சொல்கிறேன். தி.மு.க. ஆட்சியில் எப்படி ஊழலை பெருக்குகிறார்கள், எப்படி சர்வாதிகாரப் போக்கில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க மாட்டார்களா ? தங்களுக்கு ஆதரவு இருக்கிறது என்று யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள் ? இப்படிப்பட்ட கொள்ளை அடிக்கிறார்கள், பகற் கொள்ளை அடிக்கிறார்கள். தங்களுடைய ஆட்சி இருக்கிற தைரியத்தை வைத்துக்கொண்டு. . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என்று சபாநாயகரைப் பார்த்துக் கேட்பது முறையா ?

**திரு. முனு ஆதி :** இப்படித்தான் பேசுகிறோம். இது அண்டர் ஸ்டுட். சபாநாயகர் மூலமாக கேட்கிறேன் என்று தான் அர்த்தம். ஒவ்வொரு முறையும் சபாநாயகர் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன் என்று சொல்வதில்லை. ஏற்கனவே சபாநாயகராக இருந்த அமைச்சர் அவர்களுக்கு இது தெரிந்திருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் அவர்களைச் சொல்லுங்கள். அவர்கள் உங்களைச் சொல்லட்டும். என் மேல் தள்ளிவிடாதீர்கள்.



1974 சனவரி 24]

**திரு. முனு ஆதி :** பிரச்னைகளை நாங்கள் இங்கே எடுத்துச் சொல்லவில்லை, எங்கேயோ காவடி தூக்கிக்கொண்டு போகிறோம் என்று சொல்கிறார்கள். சட்டசபையிலும் சொல்கிறோம். அதன் மீது நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது, செய்ய மாட்டீர்கள். நான் இங்கே இப்பொழுது சொல்கிறேன். இன்றிலிருந்து 15 நாட்கள் தவணை கொடுக்கிறேன். இது பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு துணிச்சல் இருக்கிறதா ? அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் சொல்வார். அவர் எப்படி என்னைக் கேட்பது. அவரைப்பற்றிய நிலைமைகள் என்னிடம் இருக்கிறது என்று அவர் பேசிக்கொண்டே போவார். நடவடிக்கை எடுக்க முடியாது. ஒரு விவசாயினுடைய நிலத்திலிருந்து 15 மூட்டை நெல்லை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தன்னுடைய ஆட்சியினுடைய பலத்தை வைத்துக்கொண்டு, அதிகாரத்தை வைத்துக் கொண்டு, சர்வாதிகாரப் போக்கில் கொள்ளை அடிக்கிற முறையில் 15 மூட்டை நெல்லை நான்கு நாட்களுக்கு முன்னால் கொண்டு போய் வீட்டில் வைத்திருக்கிறார்கள். கிராம மக்கள் கேட்க பயப்படுகிறார்கள். வீடு புகுந்து அடிக்கிறார். போலீஸ் நடவடிக்கை இல்லை.

(பிற்பகல் 12.30)

அதைக் கண்டிக்கின்ற வகையில் நான்தான் உண்ணாவிரதம் இருந்தேன். ஆனால் என்ன நடந்து விட்டது ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இவற்றையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட அராஜக ஆட்சியை ஒழித்துக்கட்டித்தான் தீருவோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கோ. சிவபெருமாள் :** தலைவரவர்களே, இது என்ன சட்ட மன்றமா ? மக்கள் மன்றமா ? அல்லது நடுத்தெருவில் பேசக்கூடிய பிளாட்பாரம் பேச்சா ?

(குறுக்கீடு)

**திரு. அ. சின்னசாமி :** சட்டமன்றத்தில் இல்லாத ஒருவரைப் பற்றி அவர் மீது களங்கம் கற்பித்துப் பேசலாமா ? கொலை செய்தார், கொள்ளை அடித்தார் என்று பேசுவது முறையா ?

(கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. முனு ஆதி, நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள் . . . (குறுக்கீடு) பாராளுமன்றத்தில் எப்படிப் பேசுவது, சட்டசபையில் எப்படிப் பேசுவது, மேடையில் எப்படிப் பேசுவது என்று மரபு ஒன்றும் கிடையாதா? நீங்கள் பேசுவதைப் பார்த்தால் மேடையில் எப்படிவேண்டுமானாலும் பேசலாம் என்பது போல தோன்றுகிறது. மேடையில் எப்படி வேண்டுமானாலும் பேசிவிட முடியாது. கொலை செய்தார், கொள்ளை அடித்தார் என்று பேசினால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லையா ?

**திரு. முனு ஆதி :** நான் பொறுப்பேற்கத் தயார்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சபையில் ஒருவரைப் பற்றிப் பேசும்போது, அவர் பாராளுமன்றத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், யாராக இருந்தாலும் பெயரைச் சொல்லாமல் பேசுவது தான் முறை. பெயரைக் குறிப்பிட்டுக் கேட்டால் பெயரைக் கூறுவதுதான் வழக்கம்.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, நான் பேசியதிலே ஏதாவது தவறு இருந்தால் திருத்துங்கள். 15 மூட்டை நெல்லை கொள்ளை அடிக்கிறான் என்றால், அதை அனுமதிப்பது என்றால், அந்த சம்பந்தப்பட்ட கிராமங்களில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள் ? சிந்தியுங்கள். கேட்டால், பயமுறுத்துகிறான், அடியாட்களை வைத்துக்கொண்டு நெல்லை வீட்டில் கொண்டு போய் அடுக்குவது நியாயமா ? காவல் துறையினருக்கு புகார் மனு கொடுத்தால் ஏதாவது பரிசீலிக்க வேண்டாமா ? ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உங்களுக்கு வேண்டுமானால் அது சுலபமாக இருக்கலாம், வேடிக்கையாக இருக்கலாம். சிரிக்கிறீர்கள். சிரியுங்கள். ஆனால் கிராமத்திற்குப் போய் பாருங்கள். என்ன பதில் கொடுக்கப் போகிறார்கள் என்பதை பார்த்துக்கொள்ளலாம் . . .

(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு பாராளுமன்ற உறுப்பினர் 15 மூட்டை நெல்லை கொள்ளை அடித்து கொண்டுபோய் வைத்துக்கொள்வது என்பது பெரிய தவறு. ஆகவே, நண்பர் முனு ஆதி அவர்கள் அதுபற்றிய விவரங்களையும் பெயர்களையும்



சொல்வாரேயானால், போலீஸ் தரப்பில் கவனிக்கப்பட்டு அதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே விவரங்கள் இருந்தால் சொல்ல வேண்டும்.

**திரு. முனு ஆதி :** இது சரி, அதைத் தான் சொன்னேன். அதை விட்டு, சிரித்துக்கொண்டிருந்தால் ? உள்ளதும் போய்விடும். இப்போது முதலமைச்சர் கேட்கிறார். நான் சொல்கிறேன். அந்த நபரின் பெயரை. லட்சுமணன், எம்.பி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவ்வளவு தான். பிரச்னை முடிந்து விட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் பொறுப் பேற்கிறேன், கூறப்பட்ட விவரங்கள் உண்மையாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கு.

**திரு. முனு ஆதி :** இரண்டாவது, என்னை தாம்பரம் நகராட்சியிலிருந்து இறக்கிவிட்டார்கள். இப்போ என்ன வாழுது ? 20 நாட்களுக்கு முன்னால் டால்மியாபுரத்திலிருந்து 600 மூட்டை சிமெண்ட் வந்தது. நகராட்சிக்கு லாரி இருக்கிறது. பணம் மிச்சம் பண்ணியிருக்கலாம். அது இருக்கட்டும். என்ன ஆச்சு ? அந்த அறுநூறு மூட்டை சிமெண்டையும் மறுநாள் காணோம். வேலை நடக்கவில்லை. இதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டால் சரிதான். இப்படி நடக்கிறது. இது நல்லதா ? இதற்கும் சிரியுங்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த நகராட்சித் தலைவர் யார் ? அவருடைய பெயரையும், அவர் சார்ந்திருக்கிற கட்சியின் பெயரையும் கூறினால் நல்லது.

**திரு. முனு ஆதி :** அவருடைய பெயர் தனபால்—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். சரி. இது இருக்கட்டும். இது லோகல் விஷயம்—என்னை முனிசிபாலிடி தலைவர் பதவியிலிருந்து இறக்கியதால் சொல்கிறேன் என்று சொல்லலாம் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று கூறினார். அவரை காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கி விட்டார்கள் என்பது கனம் உறுப்பினருக்குத் தெரியுமா.

*அப்படியிருக்கும்போது, அவரை காங்கிரஸ் கட்சியோடு இணைத்துப் பேசுவது நல்லதல்ல என்று தங்கள் மூலம் கனம் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

***திரு. முனு ஆதி:*** *அவரை மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் கொடுத்து விட்டார்கள் அவரை ஏற்றுக்கொள்வது என்று முடிவு எடுத்து விட்டார்கள்—தாம்பரம் நகர காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஒருவேளை எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியாமலிருக்கலாம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி தந்திருப்பதாகத் தெரிகிறது.*

*அடுத்து, நீதி மன்றத்தில் நுழைகிறார்கள் என்பதற்காக ஒரு உதாரணம் சொல்கிறேன். திருச்சியில் ஒரு பீடி அதிபர்—முன்பு அண்ணா தி.மு.க. வில் இருந்தார். இப்போது தி.மு.க. வுக்குப் போய்விட்டார். அவர் அ.தி.மு.க. விலிருந்தபோது ஒரு ஊர்வலம் நடத்தினார் என்பதற்காக வழக்குப் பதிவு செய்தார்கள். அதில் இந்த பீடி அதிபர் அக்யூஸ்ட் நம்பர் ஒன். பிறகு அக்யூஸ்ட் நம்பர் 2, அக்யூஸ்ட் நம்பர் 3, என்று 16, 17 பேர்களை திடீர் திடீர் என்று போட்டு குற்றவாளிகளாக சேர்த்தார்கள். பிறகு அவரும் இன்னும் இரண்டு பேர்களும் தி.மு.க. வில் சேர்ந்து விட்டதால், கீழ்க் கோர்ட்டில் அந்த 3 பேர்களை மட்டும் விடுதலை செய்து, மற்றவர்களை கமிட் செய்திருக்கிறார்கள்.*

***திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :*** *ஒரு வழக்கிலே, ஒரு சார்ஜ் ஷீட் போட்டு, மேஜிஸ்ட்ரேட் முன்னால் நிறுத்தும் போது, கேஸை விசாரித்து, சிலரை டிஸ்சார்ஜ் செய்வதற்கு மேஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி, சிலரை டிஸ்சார்ஜ் செய்து ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஜட்ஜ்மெண்டை சட்டமன்றத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் குறைத்துப் பேசுவதை அனுமதிக்கின்றீர்களா ?*

***திரு. க. உரொ. எட்மண்ட் :*** *மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், பல குற்றவாளிகள் கமிட் செய்யப்படும் போது சிலரை விட்டுவிடுவது வழக்கம் என்று. கமிட்டல்*





*கோர்ட்டில் அத்தனை பேர்களையும் விசாரித்து முடிவெடுப்பது என்பது அசாத்தியம். ஒழுங்காக என்று சொன்னால், அத்தனை பேர்களையும் கமிட் செய்வது தான் சட்டபிரகாரம் வழக்கம்.*

MR. DEPUTY SPEAKER : I do not agree.

THIRU G. R. EDMUND : Why?

MR. DEPUTY SPEAKER : That is a big point. There is no legal necessity that everybody should be committed to Sessions. . . .

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** *தலைவரவர்களே, அவர் தி.மு.க. வில் சேர்ந்த பிறகு சர்க்கார் அவர் மீதுள்ள வழக்கை வாபஸ் வாங்கிவிட்டது என்பது குற்றச்சாட்டு. அது சரியல்ல. நான் முன்னமே கூறியது போல, லத்தீப் என்கின்ற தி.மு.க. வைச் சேர்ந்தவர் கோவையில் கொலை செய்யப்பட்டார். வழக்கு நடந்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள். ஆகவே, கோர்ட் மீது குற்றம் சாட்டுவதென்பது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

THIRU G. R. EDMUND : I am on a different point. I am not driving on this point.

MR. DEPUTY SPEAKER : I request you to be very careful in dealing with this matter.

***திரு. க. உரொ. எட்மண்ட் :*** *போலீஸார் வழக்கு பதிவு செய்கிறார்கள். பதிவு செய்த வழக்கை நீதி மன்றத்தில் தாக்கல் செய்கிறார்கள். அப்படி தாக்கல் செய்யும்போது, 14, 16, 20 குற்றவாளிகள் இருக்கலாம். போலீஸார் விசாரணை செய்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்கிறார்கள். கிரிமினல் புரொசிஜர் கோடின்படி விசாரணை பண்ணுகிற நேரத்தில், விசாரணைக்கு உதவியாக இருக்கின்றவர்களை மன்னித்து சாட்சிகளாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கமிட் செய்யப்படுவதற்கு முன்னால் என் கொயரி நடக்கிற நேரத்தில் செய்யலாமா? சாட்சி சொல்லவிடாமல் தடுத்திருக்கலாம் . . .*

[1974 சனவரி 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம். திரு. எட்மண்டு வழக்கறிஞர். க்ரிமினல் வழக்குகளில் வாதாடுகிறார்கள் என்று நினைக்கிறேன். சாட்சிகளைக் கலைத்தார்கள், திரும்பப் பெற்றார்கள், சாட்சிகளை வைத்து நீதியை மாற்றினார்கள் என்பதாக எல்லாம் நீதிமன்றத்தின் உள்விவகாரங்களில் உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேசுவது சரியல்ல. அரசாங்கம் வாபஸ் வாங்கிக்கொண்டது என்றால் குற்றம் சாட்டலாம். இதில் அப்படி எதுவும் இல்லை. நீதிபதிகளின் தீர்ப்பைப்பற்றி இங்கே விவாதம் செய்யக் கூடாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** Lower Court is not a conduit pipe. எல்லோரையும் செஷன்சுக்கு கமிட் பண்ண வேண்டும் என்று இல்லை. கோர்ட்டிலே விடுதலை செய்வதை எல்லாம் தலையீடு என்று சொன்னால் நீதிக்கே களங்கம் ஏற்படுத்தியதாகும். நீதிக்கோ, நீதிபதிகளுக்கோ களங்கம் ஏற்படாமல் நமது பேச்சுக்களை அமைத்துக்கொள்வதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும். நீதிமன்றத்தில் சில விதிகள் இருக்கின்றன. கமிட் செய்வது என்றால் விதிகளின்படி சாட்சிகளை எல்லாம் ஆராய்ந்துதான் செய்கிறார்கள். என்க்குவயரி செய்து கமிட் செய்கிறபோது சில பேர்களை விடுதலை செய்யவும் கோர்ட்டாருக்கு பரிபூரண உரிமை இருக்கிறது. அப்படி விட்டது தவறு என்றால் ரிவிஷன் பெட்டிஷன் கொடுக்கவும் மேல் கோர்ட்டுக்குப்போகவும் வசதியிருக்கிறது. சட்டபூர்வமான எல்லா வழிமுறைகளையும் கையாளாது உள்நோக்கம் கற்பிப்பது சரியாகாது. இங்கு நடக்கிற விவாதத்தில் நீதிமன்றம், நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசாமல் இருப்பதுதான் நல்லது. ஏனென்றால் அது ஒரு அமைப்பு. சட்டமன்றம் ஒரு தனி அமைப்பு. இந்த இரு பிரிவுகளுக்குமிடையே மோதல் ஏற்படாமல் இருப்பதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும். கருத்தின் அடிப்படையில் நாங்கள் எதிர்க்கட்சியில் இயங்குகிறோம் என்றாலும் நியாயமான முறையில் இந்த மன்றத்தில் நடந்துகொள்ளவேண்டுமென்றுதான் நானும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I thank the seniormost Advocate here.

**திரு. முனு ஆதி :** நீங்கள் எல்லாம் வழக்கறிஞர்கள். இப்படி ஒன்றாகச் சேர்ந்துவிட்டீர்கள் என்று கருதுகிறேன்.



1974 சனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியல்ல. நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது என்பது விதியில் இருக்கிறது. திரு. பொன்னப்ப நாடார் குறிப்பிட்டதும் அது தான்.

**திரு. முனு ஆதி :** சரி. கடந்த பதினைந்து மாத காலமாக அதே குறிப்பிட்ட உறுப்பினர் அடியாட்களை வைத்துக்கொண்டு மக்களை அடிக்கிறார். கைகால்களை வெட்டுகிறார். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் படுகிற துன்பம் கொஞ்சமல்ல. கோட்டையில் முதலமைச்சர் இருக்கிறார் என்று கூறினால் அந்த வட்டாரத்தில் ஒரு முதலமைச்சராக அவர் அங்கே இருக்கிறார். நான் விளையாட்டாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடிக்கிறார், கைகால்களை வெட்டுகிறார் என்று சொல்லிவிட்டு, கோட்டையில் முதலமைச்சர் இருக்கிறார் என்று கூறினால் அந்த வட்டாரத்தில் ஒரு முதலமைச்ச ராக அவர் இருக்கிறார் என்கிறீரே. கோட்டையிலே இருக்கும் நானும் அப்படித்தானே . . . . (சிரிப்பு)

**திரு. முனு ஆதி :** நான் தங்களைப்பற்றிக் கூறவில்லை. அந்த வட்டாரத்திலே அவர் செய்கிற அக்கிரமங்களைச் சொல்கிறேன். வேண்டுமென்றால் இதுபற்றி முதலமைச்சரே விசாரிக்கட்டும். போலீஸ் இரவு பகலாக அவர் வீட்டிலே இருக்கிறது. மக்கள் எவ்வளவு புகார்கள் கொடுத்தாலும் ஸ்டேஷனிலே கவனிப்பது இல்லை. 13 வழக்குகள் கொடுத்திருக்கிறார்கள். என்ன ஆயிற்று? சட்டம் ஒழுங்கு எங்கே? இந்த ஆட்சியைப்பற்றி மக்கள் என்ன நினைக்கக்கூடும்? அவர் போட்டதுதான் சட்டம். ஏழை எளியவர்களைத் துன்புறுத்துவதோடு நூறு, ஐம்பது என்று அவர்களுக்கு அபராதம் போடுகிறார், வசூலிக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாகச் சொல்வது சரி. ஆனாலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்—ஒவ்வொரு வீடாகச் சென்று எப்படி எந்த அதிகாரத்தின்கீழ் அபராதம் போடுவது? யார் யாருக்கு அபராதம் போட்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தைக் கொடுத்தால் அதுபற்றி விசாரிக்க வசதியாக இருக்கும்

[1974 சனவரி 24

**திரு. முனு ஆதி :** யார் யாருக்கு அபராதம் போட்டு வசூலித்திருக்கிறார் என்கிற விவரத்தை நான் கொடுக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** இப்போ சொல்லுங்க.

**திரு. முனு ஆதி :** எல்லோர் பெயரும் இப்போது என்னிடம் இல்லை. குறிப்பாக கிருஷ்ணன் மனைவிக்கு 150 ரூபாய் அபராதம் போட்டிருக்கிறார். எல்லா விவரங்களும் போலீஸ் ஸ்டேஷனில் தான் கம்ப்ளெய்ன்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஒரு எம்.பி. எப்படி அபராதம் போடுகிறார் ? அவருக்கு மாஜிஸ்ட்ரேட் பவர் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**திரு. முனு ஆதி :** உங்களை நான் அந்த ஊரிலேயே போய் விசாரிக்கச் சொல்கிறேன். முதலமைச்சரே நான்கைந்து பேர்களை ஒரு குழுவாகப்போட்டு விசாரிக்கட்டும்.

**திரு. கு. காமாட்சி :** சில கிராமங்களில் ஊர் சமுதாயம் என்று நாட்டாண்மைக்காரருக்கு அந்த அதிகாரம் உண்டு.

**திரு. முனு ஆதி :** அது எனக்குத் தெரியும். கிராம சமுதாயம் என்று நாட்டாண்மைக்காரர், பஞ்சாயத்து பிரசிடெண்ட், கணக்குப்பிள்ளை இவர்கள் அபராதம் போடுவார்கள். ஆனால் அப்படி அபராதமாகப் போட்டு வசூலிக்கப்படுகிற பணம் கிராமத்திலுள்ள கோயில், பொது ஸ்தாபனங்களுக்குத்தான் போகும். இங்கே இவர் போடுகிற அபராதம் இவர் பாக்கெட்டுக்குப் போகிறது.

**திரு. கு. காமாட்சி :** ஒவ்வொரு கிராமங்களிலே ஒவ்வொருவிதமான கட்டுப்பாடு இருக்கும்.

**திரு. சி. வே. வேலப்பன் :** அதைதான் சேர்ந்து கொள்ளை அடிப்பதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி குறுக்கிட்டுப் பேசினால் அவரவர்கள் நேரத்தைக் குறைக்க நேரிடும். திரு. முனு ஆதி பேசட்டும்.



1974 சனவரி 24]

**திரு. முனு ஆதி :** நான் பேசுவது சரியோ, தப்போ, உள்ள உண்மைகளைப் பரிசீலனை செய்தால் செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. முனு ஆதி :** நான் உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்குச் சொல்கிறேன். கவர்னர் உரையில் இந்த மாநிலத்து மாணவர்களின் கொந்தளிப்பைப்பற்றி ஓரளவு அனுதாபமோ, ஆதரவோ அளிக்கக்கூடிய வகையில் ஒன்றும் இல்லை. தொழிலாளர்களைப் பற்றியும் ஒன்றும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட உரை மக்களுக்கு நன்மை பயக்காது என்று சொல்லி, எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து அதன்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் கூறவிரும்புகிறேன். உறங்கிக் கிடந்த திராவிட இன உணர்வையும், திராவிட நாட்டு உணர்ச்சியையும் தட்டி எழுப்பி இந்த நாட்டிலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களது மறைவு திராவிட இன மக்களுக்கு, திராவிடச் சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே, இந்த நாட்டிலே 30-லிருந்து 40 அங்குலம் வரை மழை, ஆண்டொன்றுக்குப் பெய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த 30 அங்குலத்திலிருந்து 40 அங்குலம் வரை பெய்கின்ற மழையில் பாதிக்கு மேல் வீணாகச் சென்று கடலிலே கலந்து விடுகின்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பாசன வசதிகளை நாம் நல்லமுறையிலே பெருக்க, அங்கங்கு குளம், குட்டைகளை வெட்டுவது, இந்த மழைத் தண்ணீரைக் கொஞ்சம் கூட வீணாக்காமல் குளம், குட்டைகளுக்குப் பாய்ச்சுவது, போன்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதன்மூலம் இன்னும் பல ஏக்கர் நிலங்களுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும். நிலத்திற்கு அடியிலே இருக்கிற நீரைக் குழாய்க் கிணறுகள் மூலமும், கிணறுகள் மூலமும் நாம் இறைப்பதன் மூலம் சப்-சாயில் வாட்டர் லெவல் குறைந்து

அடுத்து உரம். இந்த உரத்தைப்பொறுத்தவரை, தட்டுப்பாடு இருக்கிறது. நமக்கு தேவை 3,15,000 டன். அவர்கள் கொடுப்பதோ 2,30,000 டன். எனக்கு முன் பேசிய முனு ஆதி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். மாநில அரசுதான் இதற்குப் பொறுப்பு என்று குறிப்பிட்டார்கள். இந்த நேரத்திலே, அவர்களுக்கு ஒன்றை நான் சொல்லவிரும்புகிறேன். வெளி மார்க்

(பிற்பகல் 1-00)

கெட்டிலே ரூ. 140-க்கு விற்கிறது என்று சொன்னார்கள். இதற்கு யார் பொறுப்பு? மாநில அரசா பொறுப்பு? மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் உற்பத்திசெய்கிறார்கள், அவர்கள் அரசிற்குக் கொடுப்பது மூன்றில் ஒரு பங்குதான், மூன்றில் இரண்டு பங்கு வெளிமார்க்கட்டிலே விற்கிறார்கள். கேட்டால் இந்திரா அரசின் கொள்கை என்று சொல்லப் படுகிறது. வளமாக்குவதற்கான கொள்கை என்றும் அப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். நாங்கள் கேட்கிறோம் அரசிற்கே முழுமையும் ஒதுக்கப்படவேண்டும். தனியாருக்கு ஒதுக்கப்படக் கூடாது. எப்படி உணவுப் பஞ்சம் ஏற்பட்ட நேரத்திலே எல்லா உணவுப் பொருட்களையும் அரசே எடுத்துக்கொண்டு பங்கீடு செய்யப் பட்டதோ அதைப்போன்ற முறையிலே உற்பத்தியாகிற அத்தனை உரமும் அரசின்வசம் ஒப்படைக்கவேண்டும். தனியார்களுக்குக் கொடுக்கக் கூடாது. இதைக் கேட்டால் முனு ஆதி அவர்கள் மத்திய அரசின் மீது பழிபோடுகிறீர்களா என்று கேட்கிறார்கள் . . . .

**திரு. முனு ஆதி :** விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் சொன்னது மூன்றிலே ஒரு பங்கை அரசிற்குக் கொடுத்துவிட்டு இரண்டு பங்கை கள்ள மார்க்கட்டிலே விற்கிறார்களே, அதை பிடிப்பதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறதே ஏன் பிடிக்கவில்லை என்று கேட்டேன், முழு விநியோக உரிமையை அரசிற்குக் கொடுக்கவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள், போதும்.

**திரு. முனு ஆதி :** நான் விளக்கிவிடவிரும்புகிறேன், நான் ஏதோ வேறுமாதிரியாகச் சொன்னதாகச் சொல்கிறார்கள், வேறு மாதிரியாக ரிக்கார்டு ஆகிவிடக்கூடாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்லிவிட்டார்கள், அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

**திரு. முனு ஆதி :** என்ன புரிந்துகொண்டார்கள், எனக்கே புரியவில்லையே நான் விளக்கிவிடுகிறேன். மூன்றிலே இரண்டு பாகம் வெளி மார்க்கட்டிலே விற்பது தப்புதான். கள்ள மார்க்கட்டிலே விற்பது தப்புதான். கள்ள மார்க்கட்டிலே விற்பதைக் கண்டிக்கிற அதிகாரம் மாநில அரசிற்கு உண்டு என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கொல்லைக் கதவைத் திறந்துவைத்துவிட்டு காவல் போடுவதைவிட கொல்லைக் கதவைப் பூட்டி வைக்கலாம் என்பதுதான் திரு. ராஜா அவர்களுடைய வாதம் ஆகும்.

**திரு. ஏ. எம். இராஜா :** ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எட்டு சர்க்கரை ஆலைகள் புதிதாக ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது. தமிழ்நாடுதான் சர்க்கரை உற்பத்திக்குச் சிறந்த இடம். இன்று மகாலிங்கம் போன்ற சர்க்கரை ஆலைத் தொழிலிலே அனுபவம் வாய்ந்தவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள், புராபிக்கல் ரீஜினாக இருப்பதால் நன்றாக வளரும் என்ற கருத்து இருக்கிறது. ஆகவே ஈரோட்டிலே கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும். 12 மாதங்களும் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமையும், இருபது ஏக்கர் நிலமும் இருப்பதால் 3 ஆயிரம் டன் கிரஷிங் கெப்பாஸிடி உள்ள ஆலையை ஏற்படுத்தி அந்த ஆலை 250 நாட்கள் வேலை செய்தால் அந்த ஆலை நஷ்டம் இல்லாமல் லாபத்தில் நடக்கும். ஆகவே ஈரோட்டிற்கும் கோடுமுடிக்கும் இடையிலே கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

*** திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன் :** தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தைப் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கொண்டே இருக்கிறது. இந்த சப்-சாயில் வாட்டர் லெவல் குறையாமல் பாதுகாக்கப்படவேண்டும். இல்லையென்றால், ஒரு காலத்தில் நிலத்திற்கு அடியிலிருக்கிற அத்தனை நீரும் வற்றிவிடுகின்ற அபாயநிலை ஏற்படும். அதைப் போக்குவதற்கு ஆர்ட்டிஃபிஷியல் ரீ-சார்ஜ்ஜை நாம் உருவாக்கவேண்டும். அதற்கு நாம், அங்கங்கு புதிய குளங்களை உருவாக்கவேண்டும். அப்படி செய்தால்தான், நிலத்திற்கு அடியிலிருக்கிற நீர் மட்டம் குறையாமல் பாதுகாக்கப்படும். இப்பொழுதிருக்கிற பழைய வாய்க்கால்களை எல்லாம் புதுப்பித்தால், இப்பொழுது பாசன வசதி பெறுவதைப் போல், இன்னும் 50 சதவிகிதம் அதிகமாகப் பாசன வசதியைப் பெறமுடியும். என்னுடைய தொகுதியிலுள்ள தடப்பள்ளி, அருகன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்கள் 3 ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்டன. அவைகள் இன்றுவரை புதுப்பிக்கப்படவில்லை. அவை புதுப்பிக்கப்பட திட்டங்கள் தீட்டப்பட்டன. அந்தத் திட்டங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்று தெரியவில்லை. அவற்றைப் புதுப்பிக்க உடனடியாக, நிதிநிலை அறிக்கையிலே அதற்கு நிதி ஒதுக்கி, இப்பொழுதே அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் திட்டத்தை தயவுசெய்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 25 இலட்சத்துக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்றால், அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுடைய அனுமதியை எதிர்பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் ரூ. 25 இலட்சத்துக்குக் குறைவாக இருக்கிற வகையில் மொத்த திட்டத்தையும் பகிர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ரூ. 22 இலட்சம், ரூ. 23 இலட்சம் செலவிடுகின்றவகையில் திட்டமிட்டு, 5, 6 ஆண்டுகளில் அதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேற்கு தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டக் கழகம். அது நல்ல அமைப்பு. இதை சென்ற ஆண்டு இந்திய அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அதன் மூலம், மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகி வீணாகிற நதிகள் அனைத்தையும் பயன்படுத்த நல்ல வாய்ப்பிருக்கிறது என்று எடுத்



துக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் இதைப்பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அதன்மூலம் உண்மையிலே நல்ல பலன் கிடைக்கும்.

1955-லே பாராளுமன்றத்திலே River Boards and Inter-State Water Dispute Bill பாஸ் செய்யப்பட்டிருக்கிறது. அப்பொழுது, இந்திய உபகண்டம் முழுவதும் காங்கிரஸ்தான் ஆளும் பொறுப்பிலே இருந்தது. இருந்தும் அவர்கள் இந்த நாட்டு மக்களுடைய உணவுப் பிரச்சினையிலே அக்கறை காட்டியிருப்பார்களானால், அப்பொழுதே இந்த நாட்டிலே இருக்கிற ஆறுகளை எல்லாம் நல்லமுறையிலே பயன்படுத்துகிற திட்டங்களை அவர்கள் உருவாக்கியிருக்கலாம்.

இப்பொழுது, மாநிலங்கள் ஒன்றுக்கொன்று பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஆறுகளைப் பயன்படுத்திக்கொள்ள ஒப்பந்தத்திற்கு வந்தால், அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கேரளத்தோடு நம்முடைய அரசு பாண்டியாறு-புன்னம் புழா திட்டம்பற்றி பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளுமானால் அதை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று நான் சந்தேகிக்கிறேன். காரணம் பாராமல், அண்டை மாநிலங்களுக்கு, அவர்கள் உணவுப் பஞ்சத்தைப் போக்க நமது அரசு அரிசி கொடுத்தது. அதையே, எங்களைக் கேட்காமல் நீங்கள் எப்படிக் கொடுக்கலாம் என்று மத்திய அரசு தடை விதித்தது. ஆக, எந்தவிதமான தானியத்தையும் எந்த ஒரு மாநிலமும், மற்றொரு மாநிலத்திற்குக் கொடுக்கக் கூடாது என்று தடை விதிக்கும் இந்திய அரசு, அதற்கு அடுத்தபடி முக்கியத்துவம் வாய்ந்த இந்த தண்ணீர் பிரச்சினையில் மாநிலங்கள் ஒன்றோடொன்று பேசிக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டால் அதை ஏற்றுக்கொள்ளுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் 1955-லே சட்டம் செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை இதற்கான முயற்சியை இந்திய அரசு எடுத்துக்கொள்ளவில்லையென்பதிலிருந்து தெரிகிறது.

இந்த நோக்கில் மாநில சுயாட்சி கேட்கிறோம், மாநில சுயாட்சி எதற்காக கேட்கிறோம். இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் போக்கப்படவேண்டும், தண்ணீர் பிரச்சினை, உணவுப் பிரச்சினை

மேதகு ஆளுநர் அவர்கள், நாட்டு விடுதலைக்காக, நாட்டு மக்களிடையே இருந்த மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்காக, அரும்பாடுபட்ட பெரியார் அவர்களுடைய மறைவைக் குறித்து தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு நம்முடைய அரசானது மக்களுடைய மூட நம்பிக்கைகளை ஒழிக்கப்பாடுபட்ட பெரியார் அவர்களுக்கும், இந்த நாட்டிற்கு விடுதலைக்காகப் பாடுபட்ட ராஜாஜி அவர்களுக்கும் தமிழகத்திலே அவர்களுடைய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற நல்ல திட்டத்தைத் தீட்டியிருப்பதற்காக இந்த அரசை நான் வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவரும், இந்திய நாட்டிலுள்ள மைனாரிட்டிகளின் நன்மைக்காகவும் பாடுபட்டவரும், அரசியல் வாழ்க்கையிலே எந்தவிதமான அப்பழுக்கற்ற முறையிலேயும் வாழ்ந்து எட்டு கோடி முஸ்லீம் மக்களின் இதய வேந்தன், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கும் நினைவுச் சின்னத்தை ஏற்படுத்துவதற்கும், அப்படி நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினால் மைனாரிட்டிகளின் பாராட்டு பெறுகின்ற நல்ல வாய்ப்பும் இந்த அரசிற்கு ஏற்படும். ஆகவே இதனையும் பரிசீலித்து இந்த அரசு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் சென்ற ஆண்டிலே தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் மழைக்குறைவின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளிலே வேலைசெய்கிறவர்கள் பாதிக்கப்படுகின்ற அளவிற்கு மின் தட்டுப்பாடும் ஏற்பட்டது. மின்சாரக் குறைவின் காரணமாக பல தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதனை அரசானது கவனத்திலேகொண்டு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முக்கிய துறைகளின் செலவுகளுக்காக என்று 548 கோடியை ஒதுக்கி அதிலேயும் குறிப்பாக மின்சாரத்திற்காக சுமார் 326 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது நாட்டிலே உள்ள மின் பற்றாக் குறையைப் போக்குவதற்கான சிறந்த நடவடிக்கை ஆகும், இந்த நடவடிக்கையை நான் வரவேற்கின்ற அதே நேரத்திலே வறட்சிப் பகுதியாக உள்ள இடங்கள் முன்னேற வேண்டுமென்பதற்காகவும், வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வசதி ஏற்படுத்துவதற்காகவும் வசதிப் பகுதிகளிலே பாசன வசதிகளைச்





செய்துகொடுப்பதற்காகவும் 15.9 கோடி ரூபாய் அளவில் 14 புதிய திட்டங்களையும் அது மட்டுமல்லாமல் மேலும் 15 கோடி ரூபாய் செலவில் 19 புதிய திட்டங்களையும் இந்த அரசு ஏற்படுத்தியிருப் பதற்காகவும் பாராட்டுகிறேன். இந்த நல்ல திட்டத்தை வறட்சிப் பகுதிகளுக்காகக் கொண்டுவருகின்ற நிலைமையைப் பாராட்டுகின்ற அதே நேரத்திலே ஒரு வருத்தமான செய்தியை, என்னுடைய தொகுதி பொருத்தமட்டில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என் பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்குனேரி தாலுகாவில் பக்கத்தில் பச்சையாறு திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று 20 ஆண்டுக்காலமாக மக்கள் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த அரசுகூட அதனைச் சரியான முறையிலே கவனிக்காமல் விட்டுவிட்டது. ஆனால் தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இந்த அரசினுடைய இந்த நல்ல திட்டங்களில் இது சேர்க்கப்பட வேண்டும் என்று அங்கே வாழுகின்ற மக்கள் எல்லாம் ஆர்வத் தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பச்சையாற்றுத் திட்டம் பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இரண்டு ஆண்டுக்காலமாகியும்கூட அந்தத் திட்டத்தினுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாக பரிசீலனைசெய்து அந்தத் திட்டத்தையும் இந்த ஆண்டு சேர்த்துநிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஏரிகளையும் குளங்களையும் சீர்படுத்துகின்ற காரியத்திற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கி நல்ல திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த அரசு. கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு என்னுடைய பகுதியிலே ஏற்பட்ட மழையின் காரணமாக குளங்கள் உடைந்து தண்ணீர் வெளியே செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்தக் குளங்கள் பழுதுபார்க்கப்படாத நிலைமையிலே தண்ணீர் வெளியே சென்று அதனுடைய பலன் மக்களுக்குக் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக, 15 கோடி ரூபாய் திட்டம் போடப்பட்டு இருப்பதை வரவேற்கின்றேன்,

[திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்] [1974 சனவரி 24

அது மட்டுமல்லாமல் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெற்றதோடு மட்டுமல்ல, அண்டை மாநிலங்களுக்கு உணவு விநியோகம் செய்கிறது. சூழ்நிலையில் மற்ற மாநிலங்கள் எல்லாம் இன்றைக்கு நம்மைப் பாராட்டுகின்ற அளவுக்கு இந்த அரசு சாதனையைச் செய்திருக்கிறது.

ஆனால் கடந்த இரண்டாண்டு காலமாக நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களை விநியோகிக்கும் முறையைப் பார்க்கும்பொழுது நெல்லை மாவட்டத்திலுள்ள மக்களெல்லாம் மிகவும் வருந்துகின்ற நிலைமையும், என் இந்த நிலைமைக்குக் கஷ்டப்பட வேண்டுமென்று நினைக்கின்ற நிலையிலேயும் [illegible] களாக இருக்கிறார்கள். நம்முடைய விவசாயத்துறையின் மூலம் புதிய புதிய விதைகளைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிறோம். அப்படி விவசாயத்துறை எடுத்துச் சொல்லும் அந்தப் புதிய விதைகளை அவர்கள் தங்களுடைய வயல்களிலே நட்டு இருபது நாட்களுக்கு இன்ன உரத்தைப் போட வேண்டும், 40 நாட்களுக்கு இன்ன உரம் போட வேண்டுமென்று விவசாயத் துறையால் அறிவிக்கப்படுகிறது. அந்த உரத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. ஆனால் இப்பொழுது அங்கேயுள்ள நிலைமை என்னவென்றால் உரம் கொடுக்கும் நிலையே மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த இரண்டாண்டு காலமாக உர விநியோகமானது கிரெடிட் சொசைட்டிகளின் மூலமாகவும், பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும், மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. இந்த மூன்று இடங்களின் மூலமும் கொடுக்கப்படும் உரங்களெல்லாம் சரியான முறையிலே விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது ரெவின்யூ துறையின் மூலம் இந்த உரம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த ரெவின்யூ துறை இந்த உரத்தை, சரியான நேரத்திலே, விவசாயிகள் வேண்டுமென்று கேட்கும் நேரத்திலே கொடுக்காத நிலை இருப்பதால் அந்த உரத்தின் கட்டுப்பாடு



1974 சனவரி 24] [திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்]

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசு திட்டவட்டமான ஒரு முடிவை எடுத்தால்தான் மக்களுக்கு உரம் கிடைக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பு அமையும். இந்த நல்ல வாயப்பை அமைக்க வேண்டுமென்றால், எந்தத் துறையிலேயும் அவர்கள் இந்த உரத்தை விநியோகிக்கும் முறையைக் கொடுக்காத நிலையிலே தனியாக டெப்போக்கள் அமைத்து, அந்த டெப்போக்களை மேற்பார்வையிடும் முறையை விவசாயத் துறைக்குக் கொடுத்துவிட்டால் அந்த விவசாய இலாக்காவின் மூலமாக அந்த உரங்கள் மக்களுக்குச் போய்ச் சேருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதை ஏற்படுத்தினால்தான் ஓரளவாவது உரம் மக்களுக்குக் கிடைக்கின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிகொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்கள் மிகுதியாக வாழ்கிறார்கள். என்னுடைய மேலப்பாளையம் சட்டமன்றத் தொகுதி நெசவாளர்கள் அதிகமாக வாழும் தொகுதி. அதிலே வாழும் மக்களுக்கு ஓரளவு நூல் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் அந்த நூல் விநியோகமானது அவர்களுக்குச் சரியாக விநியோகிக்கப்படாமல் பல தறிகளில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் பெயர்களெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட அவர்களுக்குக் கிடைக்கும் நூலானது ஒருநாள், இரண்டுநாட்கள் கூட வாழ்க்கையைக் கழிக்க முடியாத நிலையில் நூல் விநியோகம் செய்யப்படுகிறது. இதனை மாற்றியமைத்து நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு வேண்டிய நூல்களை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் முஸ்லீம் சமுதாயத்தினுடைய சில கோரிக்கைகளை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலே உயர் மட்ட அதிகாரிகளாக முஸ்லீம்கள் இருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, சீனியர் மோஸ்டாக இருந்து

[திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்] [1974 சனவரி 24

மேதகு ஆளுநர் அவர்கள், நாட்டு விடுதலைக்காக, நாட்டு
மக்களிடையே இருந்த மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்காக,
அரும்பாடுபட்ட பெரியார் அவர்களுடைய மறைவைக் குறித்து
தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.
அதோடு நம்முடைய அரசானது மக்களுடைய மூட நம்பிக்கை
களை ஒழிக்கப்பாடுபட்ட பெரியார் அவர்களுக்கும், இந்த நாட்டிற்கு
விடுதலைக்காகப் பாடுபட்ட ராஜாஜி அவர்களுக்கும் தமிழகத்திலே
அவர்களுடைய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற
நல்ல திட்டத்தைத் தீட்டியிருப்பதற்காக இந்த அரசை நான்
வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற
நேரத்திலே இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவரும், இந்திய
நாட்டிலுள்ள மைனாரிட்டிகளின் நன்மைக்காகவும் பாடுபட்ட
வரும், அரசியல் வாழ்க்கையிலே எந்தவிதமான அப்பழுக்கற்ற
முறையிலேயும் வாழ்ந்து எட்டு கோடி முஸ்லீம் மக்களின் இதய
வேந்தன், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கும்
நினைவுச் சின்னத்தை ஏற்படுத்துவதற்கும், அப்படி நினைவுச்
சின்னத்தை ஏற்படுத்தினால் மைனாரிட்டிகளின் பாராட்டு பெறு
கின்ற நல்ல வாய்ப்பும் இந்த அரசிற்கு ஏற்படும். ஆகவே
இதனையும் பரிசீலித்து இந்த அரசு நல்ல முடிவு எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் சென்ற ஆண்டிலே தமிழகத்தைப் பொறுத்தவரை
யிலும் மழைக்குறைவின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்ட
தோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளிலே வேலைசெய்கிறவர்கள்
பாதிக்கப்படுகின்ற அளவிற்கு மின் தட்டுப்பாடும் ஏற்பட்டது.
மின்சாரக் குறைவின் காரணமாக பல தொழிற்சாலைகள் எல்லாம்
மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதனை அரசானது
கவனத்திலேகொண்டு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே
முக்கிய துறைகளின் செலவுகளுக்காக என்று 548 கோடியை
ஒதுக்கி அதிலேயும் குறிப்பாக மின்சாரத்திற்காக சுமார் 326
கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது நாட்டிலே உள்ள மின் பற்றாக்
குறையைப் போக்குவதற்கான சிறந்த நடவடிக்கை ஆகும்,
இந்த நடவடிக்கையை நான் வரவேற்கின்ற அதே நேரத்திலே
வறட்சிப் பகுதியாக உள்ள இடங்கள் முன்னேற வேண்டு
மென்பதற்காகவும், வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வசதி
ஏற்படுத்துவதற்காகவும் வசதிப் பகுதிகளிலே பாசன வசதிகளைச்



1974 சனவரி 24] [திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்]

செய்துகொடுப்பதற்காகவும் 15.9 கோடி ரூபாய் அளவில் 14 புதிய
திட்டங்களையும் அது மட்டுமல்லாமல் மேலும் 15 கோடி ரூபாய்
செலவில் 19 புதிய திட்டங்களையும் இந்த அரசு ஏற்படுத்தியிருப்
பதற்காகவும் பாராட்டுகிறேன். இந்த நல்ல திட்டத்தை வறட்சிப்
பகுதிகளுக்காகக் கொண்டுவருகின்ற நிலைமையைப் பாராட்டுகின்ற
அதே நேரத்திலே ஒரு வருத்தமான செய்தியை, என்னுடைய
தொகுதி பொருத்தமட்டில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்
பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கு
னேரி தாலுகாவில் பக்கத்தில் பச்சையாறு திட்டம் ஆரம்பிக்க
வேண்டுமென்று 20 ஆண்டுக்காலமாக மக்கள் கோரிக்கையை
வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த அரசுகூட அதனைச் சரி
யான முறையிலே கவனிக்காமல் விட்டுவிட்டது. ஆனால் தமிழக
அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இந்த
அரசினுடைய இந்த நல்ல திட்டங்களில் இது சேர்க்கப்பட
வேண்டும் என்று அங்கே வாழுகின்ற மக்கள் எல்லாம் ஆர்வத்
தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பச்சையாற்றுத்
திட்டம் பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொதுப்பணித்
துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது மத்திய
அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று
குறிப்பிட்டார்கள். இரண்டு ஆண்டுக்காலமாகியும்கூட அந்தத்
திட்டத்தினுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள
முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை
உடனடியாக பரிசீலனைசெய்து அந்தத் திட்டத்தையும் இந்த
ஆண்டு சேர்த்துநிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஏரிகளையும்
குளங்களையும் சீர்படுத்துகின்ற காரியத்திற்காக 15 கோடி ரூபாய்
ஒதுக்கி நல்ல திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த அரசு.
கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு என்னுடைய பகுதி
யிலே ஏற்பட்ட மழையின் காரணமாக குளங்கள் உடைந்து
தண்ணீர் வெளியே செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்தக்
குளங்கள் பழுதுபார்க்கப்படாத நிலைமையிலே தண்ணீர் வெளியே
சென்று அதனுடைய பலன் மக்களுக்குக் கிடைக்காத சூழ்நிலை
இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக, 15 கோடி
ரூபாய் திட்டம் போடப்பட்டு இருப்பதை வரவேற்கின்றேன்,

[திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்] [1974 சனவரி 24

உயர் நியமனங்களுக்கு உரியவர்களாக இருந்தும்கூட அவர்களுடைய நியாயமான உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பது இன்றைக்குத் தமிழகத்திலே வாழும் முஸ்லீம்கள் மத்தியிலே வருத்தமான செய்தியாக இருக்கிறது. இதனை இந்த அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து சிறுபான்மை சமுதாயத் தினருக்குரிய உரிமைகளைக் கொடுப்பதிலே எந்தவிதமான காலமும் தாழ்த்தாத நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் இன்றைக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், முன்பு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலேயிருந்து படித்து வெளியே வந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலையிலே சில காலமாக அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி செயல்படாமல் இருந்தது. அதேபோல் உருது பேசும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் சில ஆண்டுகள் தன்னுடைய பணியைச் செய்யாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது மற்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கப்பட்ட பிறகும் உருது பேசும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மட்டும் திறக்கப்படாமல் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். உருது பேசும் ஆசிரியர்கள் தேவைப்படும் பள்ளிகள் அதிகமாக இருப்பதால் நம்முடைய மாநிலத்திலே உருது பேசும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே புளியங்குடி என்ற பெரிய நகர்மன்றம் இருக்கிறது. இதிலே மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே அரசாங்கத்தின் மருந்தகம் மட்டும்தான் இருக்கிறது. 40,000 மக்கள் வாழும் பகுதி அது. அவர்களுக்கு நல்லமுறை யிலே செயல்படுகின்ற வேறு எந்தவிதமான அரசாங்க மருத்துவ மனையும் இல்லை. பிரசவ விடுதிகூட ஒன்றுமில்லாததால் அங்கே யுள்ள மக்கள் பிரசவத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 10 மைல், 15 மைல்களுக்கு மேலாகச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே



1974 சனவரி 24] [திரு. எஸ். முகம்மது கோதர் முகைதீன்]

அங்கே வாழும் மக்களுடைய நலனைக் குறித்து இந்த அரசு அங்கே நல்ல அரசாங்க மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். இறுதியாக நான் ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

குமாரபாளையம் சம்பவம்பற்றி நாங்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் தகவல் கொடுத்தபொழுது அவர்கள் உடனடியாக அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் இப்பொழுது அங்கே மக்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. விசாரணையின்போது சில அரசியல் குறுக்கீடுகள் நடைபெறுவதாக அங்கேயுள்ள மக்கள் பேசிக்கொள் கிறார்கள். ஆகவே, அந்தக் குறைகள் இல்லாத முறையிலே அங்கே நடந்த உண்மையான சம்பவங்களை வைத்து யார் தவறு செய்தார்களோ அவர்களுக்குத் தண்டனை கொடுக்க இந்த அரசு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. எம். முத்தையா** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் வாசித்தளித்த உரையின்மீது என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை ஆரம்பிக்கிறேன். இயற்கை எய்திய பெரியார் அவர்கள் அஞ்சா நெஞ்சமுடைய வர்கள், பெரிய சமூக சீர்திருத்தவாதியாகச் செயல்பட்டவர்கள். அவர் செய்த அரிய சேவையினால்தான் என்னைப் போன்ற தாழ்த் தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற முடிந்தது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர் செய்த சேவையை எல்லோரும் நினைவில் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு தலைவர் நம்மை விட்டுப் பிரிந்தது குறித்து என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்திலேயுள்ள எல்லாத் தலைவர்களாலும் சொல்லமுடியாத ஒரு பொன்மொழியை அவர்கள் சொன்னார்கள். அதை நாம் மறக்க முடியாது. எப்படிப்பட்ட விஷயமாக இருந்தாலும்

## (4) பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

57. Notification issued with G.O. Ms. No. 2036, Rural Development and Local Administration, dated the 20th September 1973, in regard to preliminary notification for declaration of the areas forming the Coonoor Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

58. Notification issued with G.O. Ms. No. 1764, Agriculture, dated the 31st July 1973, in regard to regulation of trade for the purchase and sale of paddy at the markets at Ethamoly, Kallikkavilai, Vadasery, Monday Market and Thoduvatty in Kanyakumari district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

59. Notification issued with G.O. Ms. No. 2055, Agriculture, dated the 26th September 1973, in regard to regulation of trade for the purchase and sale of paddy at twelve markets in Ramanathapuram district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

60. Notification issued with Roc. No. 211828/72-E-4, dated the 26th April 1973, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the area covered by certain town panchayats in North Arcot district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

61. Notification issued with G.O. Ms. No. 1326, Rural Development and Local Administration, dated the 6th June 1973, in regard to an amendment to the rules relating to the inspection and test check by higher technical authority in the case of municipal works. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



### B. Reports, Notifications and other papers.

@ 15. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974 (L.A. Bill No. 1 of 1974) (with Annexure).

@ 16. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 2 of 1974) (with Annexure).

---

**@ Despatched to Members on 23rd January 1974.**

இரண்டு பொருள்பட சாதாரணமாக விஷயத்தைச் சொல்லி வந்தார்கள். அவர் உபயோகித்த அந்த வார்த்தைதான் வெங்காயம் என்பது. அந்தப் பொன்மொழியை யாரும் மறக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு தலைவர் மறைந்ததற்காக நானும், என்னுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலேயும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு உரையை ஆரம்பிக்கின்றேன்.

எனது தொகுதி கோயில்பட்டியைச் சேர்ந்த ஒட்டைப் பிடாரம். மானாவாரி பூமி. மானாவாரி சாகுபடித் திட்டத்தின் கீழ் 1973-ம் ஆண்டு வேளாண்மைத் துறையினரால் எச்.பி. 3 வீரிய ஒட்டுக் கம்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அரசுத் துறையிலிருந்து அதற்கு விளம்பரங்கள் செய்யப்பட்டன. விளம்பரங்களைப் பார்க்கும்போது கவர்ச்சிகரமாக இருந்தது. அந்த வீரிய விதைகளைப் போட்டால் ஒரு ஏக்கருக்கு 4 குவிண்டால் 5 குவிண்டால் வரும் என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ வரை விதை தேவை. ஒரு கிலோ 8 ரூபாய் வீதம் 24 ரூபாய் ஆகிறது. உரம் மற்ற உழவுச் செலவுகள் ஏக்கருக்கு 200 ரூபாய் ஆகிறது. அதைப் போட்ட நிலத்தில் ஒட்டுக் கம்பு வரவில்லை. சந்துபோல் உருண்டையாக இருக்கிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுமானாலும் கொண்டு வந்து காட்டுகிறோம். அதை விதைத்தவர்கள் யாரும் பயன்பெறவில்லை. அதைப் போட்ட விவசாயிகள் அனைவரும் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி:** நான் அங்கு சென்றிருக்கும்போது அதைப் பற்றி விசாரித்தேன். விதையிலே பழுது இல்லை. மூன் மழை இல்லாத காரணத்தால் விளைச்சல் சரியில்லை. நஷ்டம் ஏற்படாத அளவுக்கு வழி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எம். முத்தையா:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இப்போது பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு விவசாய விளைப் பண்ணையிலிருந்தோ அரசோ நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்.



ஏகப்பட்ட நிலங்களில் அதைப் போட்ட ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேரடியாக நானும் பாதிக்கப் பட்டவன்தான். எங்கள் வட்டாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு எவ்வளவோ நன்மைகளைச் செய்கிறது. எங்கள் பகுதியில் எவ்வளவு நஷ்டம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி கிராம அதிகாரியிடமிருந்து அறிக்கை வாங்கி யாவது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

எங்கள் தொகுதியிலுள்ள 'எப்போதுவென்றால்' அருகிலுள்ள குளத்தை வெட்ட நிலம் எல்லாம் சர்வே செய்யப்பட்டு எஸ்டிமேட் தயாரித்தும் அது நிறைவேற்றப்படாமல் கடந்து கொண்டே போகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரி யிடம் கேட்டால் அடுத்த வருஷம் என்று சொல்லுகிறார். இப்படி நாலைந்து ஆண்டுக் காலமாக தட்டிக் கழிக்கிறார்கள். அந்தக் குளத்தை உடனடியாக வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரியில் கல்வி பயிலுகின்ற அரிசன மாணவர்கள் முன்பணமாக ஹாஸ்டல் பில்லைக் கட்ட வேண்டு மென்று சொல்லுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். எது உண்மை என்று தெரியாது. முன்பெல்லாம் அப்படி முன்பண மாகக் கட்டுவதில்லை. அப்படி முன்பணமாகக் கட்ட வேண்டு மென்று வார்டன் கூறுவதாகக் கூறுகிறார்கள். அப்படி இருந்தால் அதை மாற்றி முன்பணமாகக் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் தாழ்த்தப் பட்ட மாணவர்கள், அரிசன மாணவர்கள் பயன்பெற முடியும் என்று கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

**மாண்பமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

# இணைப்பு I

[7-ம் பக்கத்தில் 123-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

## தொழில் நுட்பத் தேர்வு
### மே 1973

| வரிசை எண். | பாடப் பிரிவின் பெயர். | | அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. | தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | முதல் வகுப்பு. | இரண்டாம் வகுப்பு. | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) |
| 1 | ஆங்கிலம் தட்டெழுத்து | இளநிலை | 21,739 | 550 | 6,673 | 7,223 |
| 2 | ,, | முதுநிலை | 13,462 | 131 | 3,126 | 3,257 |
| 3 | ,, | மிகவேகம் | 116 | 8 | 32 | 40 |
| 4 | தமிழ் தட்டெழுத்து | இளநிலை | 3,984 | 474 | 2,321 | 2,795 |
| 5 | ,, | முதுநிலை | 2,887 | 177 | 1,366 | 1,543 |
| 6 | ,, | மிகவேகம் | 48 | 1 | 18 | 19 |
| 7 | ஆங்கிலம் சுருக்கெழுத்து | இளநிலை | 3,298 | 25 | 267 | 292 |
| 8 | ,, | இடைநிலை | 432 | 13 | 150 | 163 |
| 9 | ,, | முதுநிலை | 387 | 1 | 67 | 68 |
| 10 | ,, | மிகவேகம் (150 எழுத்துக்கள் நிமிடத்திற்கு) | 18 | .. | 5 | 5 |
| 11 | ,, | (180 எழுத்துக்கள் நிமிடத்திற்கு) | 6 | .. | .. | .. |
| 12 | ,, | (200 எழுத்துக்கள் நிமிடத்திற்கு). | .. | .. | .. | .. |
| 13 | தமிழ் சுருக்கெழுத்து | இளநிலை | 266 | 37 | 102 | 139 |
| 14 | ,, | முதுநிலை | 105 | .. | 72 | 72 |
| 15 | ,, | மிகவேகம் (100 எழுத்துக்கள் நிமிடத்திற்கு). | 32 | .. | 11 | 11 |
| 16 | ,, | (120 எழுத்துக்கள் நிமிடத்திற்கு). | 9 | .. | 4 | 4 |
| 17 | கணக்காய்வு இயல் | இளநிலை | 1,334 | 13 | 667 | 680 |
| 18 | ,, | முதுநிலை | 850 | 3 | 130 | 133 |
| 19 | வணிகப் பயிற்சி இயல் | இளநிலை | 121 | .. | 26 | 22 |
| 20 | ,, | முதுநிலை | 75 | .. | 22 | 26 |
| 21 | வணிகப் புவியியல் | இளநிலை | 81 | .. | 16 | 16 |
| 22 | ,, | முதுநிலை | 54 | .. | 20 | 20 |
| 23 | வங்கியியல் | இளநிலை | 135 | .. | 37 | 37 |
| 24 | ,, | முதுநிலை | 88 | .. | 74 | 74 |

[1974 சனவரி 24

## இணைப்பு II

*[16-ம் பக்கத்தில் 127-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கு உரிய விடையைக் காண்க.]*

காற்றுத் தூய்மை கெடுதல் பற்றி விரிவாக ஆய்வு செய்து சென்னை மாநகரில் காற்றுத் தூய்மை கெடுதலினால் ஏற்படக்கூடிய தொல்லைகளைக் குறைப்பதற்கான திட்டவட்டமான கருத்துரைகள் வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு, குழு ஒன்றை அமைத்தது. காற்றைத் தூய்மை கெடுதல் பற்றிய குழு, பல்வேறு கூறுகள் பற்றிய தனது பரிவுரைகளைப் பணிந்தனுப்பியது. காற்று தூய்மை கெடுதலைத் தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

(1) ரயில் இன்ஜின்களால் காற்றுத் தூய்மை கெடுதலைப் பொறுத்தவரையில், குறிப்பாக பலத்த காற்று அடிக்கும் காலங்களில் காற்றினால் தூசு பரவுவதைத்தடுக்க, நிலக்கரி, சாம்பல், ஆகியவற்றை நீர் தெளிப்பான் மூலமாக ஈரமாக வைத்திருக்கலாம் என்று குழு பரிவுரைத்துள்ளது. அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு தென்னிந்திய ரயில்வேயின் பொது மேலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(2) மாநகரில் வண்டிகள் போக்குவரத்து காரணமாகக் காற்றுத் தூய்மை கெடுதல் பற்றி காற்றுத் தூய்மை கெடுதல் பற்றிய குழு பரிசீலித்தது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் வகையில் புகை அளவுமானி ஒன்றை உருவாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. அத்தகைய கருவி ஒன்றை உருவாக்குவதற்கான ஆய்வுகளை இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அரசுப் போக்குவரத்துக்கழகமும், இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தின் உடனுழைப்புடன் கீழ்க்கண்டவை குறித்து ஆய்வு செய்யும் :—

(அ) டீசல் இயந்திரங்களின் எரிப்பொருள் அமைப்பை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை பழுதுபார்த்துச் சீரமைப்பது என்பதை நிர்ணயித்தல்.

(ஆ) இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் உதவியுடன் புகையின் அளவை வரையறுத்தல்.



1974 சனவரி 24]

(இ) புகையைக் குறைக்க கிரியாஊக்கி catalyst பேரியம் அடங்கிய எரிபொருள் கூட்டுப் பொருள்கள் போன்ற பிற முறைகள் பற்றி ஆய்வு செய்தல்.

இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தின் இயக்குநரும் போக்குவரத்துத் துறையும் இது தொடர்பான அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இதுபற்றி வல்லுநர் குழு ஒன்று விரிவாக ஆய்வு செய்து வருகிறது என்று இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மணலியில் உள்ள எண்ணெய்த் துப்புரவு ஆலை, எண்ணெய்த் துப்புரவுப் பணியின்போது, ஹைட்ரஜன் ஆவி, ஹைட்ரஜன் சல்ஃபைடு மற்றும் மெர்காப்டன் (Mercapton) போன்ற முடைநாற்றமுள்ள வாயுக்களையும் மற்றும் அமோனியா போன்றவற்றையும் வெளி விடுகிறது. இதுபற்றி மிகவும் நுணுக்கமாக ஆய்வு செய்ய வேண்டியிருப்பதால், திட்டவட்டமான முறை எதையும் குழு பரிவுரைக்க முடியவில்லை. எனவே, இப்பிரச்சினை குறித்து, துப்புரவு ஆலையைச் சேர்ந்த விஞ்ஞானிகளாலும் தொழில் நுட்ப வல்லுநர்களாலும் நன்கு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்கேற்ப அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு மணலி, சென்னை எண்ணெய்த் துப்புரவு ஆலையின் நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

4. பேசின் பிரிட்ஜில் உள்ள மின்சக்தி நிலையம் சென்னைமாநகரின் முக்கியமான பகுதியில் அமைந்துள்ளது. அந்நிலையம் நுண்ணிய தூசு, புகை மற்றும் சல்ஃபர்-டை-ஆக்ஸைடு ஆகியவற்றை வெளிவிடுகிறது. இவ்வாலை வெளிவிடும் வாயுக்களை ஈரப் பதம் சேர்த்து தூய்மைப்படுத்துவது (Wet scrubbling) பற்றி மின்சார வாரியம் பரிசீலிக்கலாம் என்று இக்குழு பரிவுரை செய்துள்ளது. மின்சக்தி நிலையத்தைச் சேர்ந்த நிலக்கரியைப் பொடியாக்கும் இடத்திற்கு அருகிலும் நிலக்கரி சேமித்து வைத்திருக்கும் இடத்திற்கு அருகிலும் கணிசமான அளவுக்கு நிலக்கரித் தூசு படிந்துள்ளதும் அடிக்கடி லாரிகள் சென்று வரும்போது அவை மேலெழுப்பப்பட்டு காற்றுடன் வரும்போது அவை மேலெழுப்பப்பட்டு, மின்நிலையத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். மேற்சொன்ன வகையில் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

தெரிவித்துள்ளார். மாநகரில் புதிய சுண்ணாம்பு காளவாய், மட்
பாண்டச் சூளை போடுவதற்கு உரிமங்கள் கொடுக்க வேண்டாம்
என்பதற்கான கட்டளைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. கந்தக அமில தொழிற்சாலைகள் எண்ணூரில் இரண்டும்
காடுவெட்டியில் ஒன்றும் மணலியில் ஒன்றும் ஆக நான்கு தொழிற்
சாலைகள் சென்னை மாநகரைச் சுற்றிலும் அமைந்துள்ளன இந்தத்
தொழிற்சாலைகளிலிருந்து வாயுக்கள் வெளிப்படுகின்றன. வாயுக்கள்
வெளிப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, பிழ்க்காணும்
நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு பரிவுரை செய்தது :—

(அ) உயர்ந்தது எவ்வளவு அளவுக்குத் தொழிற்சாலையின்
உயரத்தை உயர்த்தக்கூடுமோ அவ்வளவு அளவுக்கு உயர்த்தப்பட
லாம்.

(ஆ) கந்தக அமிலம் தயாரிப்பாளர்களுள் எண்ணூரிலுள்ள
திருவாளர்கள் கோதாரி அண்டு சன்ஸ் லிமிடெட் நிறுவனம், எண்
ணூரிலுள்ள திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் நிறுவனத்தின்
ஒத்துழைப்புடன் ஸ்கரப்பர் (scrubbar)'கரி, வளி இவற்றைப் பிரிப்ப
தற்கான இயந்திரம் ஒன்றை நிறுவுவது குறித்த சாத்தியக்கூறு
பற்றி ஆய்வு செய்யுமாறு கேட்கப்படலாம். ஏனெனில், அவை
ஒன்றுக்கொன்று அருகாமையில் அமைந்துள்ளன. திருவாளர்கள்
ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் அவர்களுக்கு அம்மோனியாவை வழங்கி
விட்டு பதிலுக்கு, வணிக ரீதியாக அந்தத் தொழிற்சாலையில்
படிந்திருக்கும் அம்மோனியம் சல்பேட்டை எடுத்துக் கொள்ள
லாம். இது, அவர்களுக்கு நடைமுறையில் இயலக்கூடியதாய்
இல்லாவிடின், கடல் நீரினை விட்டுப் பிரித்தெடுக்குமாறு
ஆலோசனை வழங்கப்படலாம். ஏனைய தொழிற்சாலைகளின்
நேர்வில், துப்புரவு செய்து பிரித்தெடுப்பதற்கு நீருடன் காரத்
தன்மை இருப்பதற்குச் சுண்ணாம்பும் பயன்படுத்தப்படலாம்.

(இ) தொழிற்சாலைகள், வேலை செய்யத் தொடங்கும்போதும்,
திடீரென நிறுத்தப்படும் போதும் சல்பர்-டை-ஆக்ஸைட் வெளி
யாவதனால் ஏற்படும் கெடுதல்களை அம்மோனியாவைச் சேர்ப்ப
தன் மூலம் குறைக்கவேண்டும். அப்போதுதான், இந்தச் சமயங்
களில் வாயு அதிகமாக வெளிப்படுவதைக் குறைக்க இயலும்.
தகுந்த ஏற்பாட்டின் மூலம், சிலிண்டர்களிலிருந்து அம்மோனி
யாவை, வாயு வெளிப்படும் அமில இயந்திரத்தின் வாய்க்கருகில்





வெளியே எடுத்துவிடுவது மூலம் வாயு வெளிப்படுவதைக் குறைக்க
லாம். இதற்காக அம்மோனியா நிரப்பப்பட்ட ஒரு சில
சிலிண்டர்கள் இருப்பில் எப்போதும் வைத்து வரப்படலாம்.

(ஈ) புதிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், உரிமம்
வழங்கும் சமயத்திலேயே தகுந்த இடத்தைக் குறிப்பிடப்பட
வேண்டும். அமிலத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும்
வாயுவைத் தூய்மைப்படுத்துவதற்காக உள்ள சாதனங்கள்
(Scrubber) அத் தொழிற்சாலைகளின் இணைந்த ஒரு பகுதியாக
இருக்கவேண்டும். இது தொடர்பாக, பெரிய தொழிற்சாலை
களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுவது பற்றி கருதப்பட
லாம். அப்போதுதான், இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள
இயலும்.

சுகாதாரப் பணிகள்—குடும்பநலத் திட்ட இயக்குநர், சம்பந்தப்
பட்ட தொழிற்சாலைகளுக்கு மேற்சொன்ன கருத்துக்களின் அடிப்
படையில் அவசியமான கட்டளைகளைப் பிறப்பிக்குமாறு கேட்கப்
பட்டுள்ளார்.

9. வருங்காலத்தில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படும்
போது, வானியல், புவியியல் கூறுகள் கருத்திற் கொள்ளப்பட
வேண்டும் என்று ஆணைக்குழு பரிவுரை செய்தது. மேற்சொன்ன
பரிவுரையைச் செயல்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை
மேற்கொள்ளுமாறு தொழில்துறை கேட்கப்பட்டுள்ளது.

10. போக்குவரத்து நெரிசல் மிகுந்துள்ள இடங்களிலும்,
வண்டிகள் சிறிது நேரம் நிற்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற
போக்குவரத்து முனைகளிலும், புகையும், தூசியும் மண்டி, காற்றை
தூய்மை கெடச் செய்கின்றன. போக்குவரத்தைப் பரவலாக்கு
வதும், நெரிசலைக் குறைப்பதும், காற்றுத் தூய்மை கெடுதலைக்
குறைக்க வகை செய்யும். நெரிசலைக் குறைப்பதற்கான முறைகள்
குறித்து, ஆய்வு செய்வதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்
கொள்ளுமாறு பொதுப்பணித்துறையும், உள்துறையும் கேட்கப்பட்
டுள்ளன.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

## வெள்ளிக்கிழமை, 1974 சனவரி 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 151, 152, 153, 154, 155 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

***156 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஸ்ரீரங்கம் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) ஸ்ரீரங்கம் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் 4—3—1971-ல் அமைப்புச் செலவு ரூ. 19.61 லட்சத்திற்கும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 70,000-க்கும் அரசு ஒப்புதல் அளித்தது. மக்கள் தொகை வளர்ச்சியை முன்னிட்டு மேற்படி மதிப்பீடு திருத்தப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி திட்ட அமைப்புச் செலவு ரூ. 28.75 லட்சம் மற்றும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 95,000-க்கும் 16—9—1973-ல் அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் திருவானைக்கோவில் மற்றும் மேலூர்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஏன் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது? என்று கேட்டால்தான் பொருத்தமாக இருக்குமே தவிர, ஆய்வுச் செலவை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மூக்கணாங் கயிறு செலவையா அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்பது? மாடு வாங்குவதற்கு ஆகும் செலவை ஏன் அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது? என்று கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

*158 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மணப்பாறை நகருக்கு காவிரியிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரவேண்டும் என மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன முடிவு எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது எனக்கும் தெரியும். இல்லை என்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இனிமேலாவது பரிசீலனை செய்து, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** காரியம் தான் முக்கியமே தவிர, வீரியம் முக்கியம் அல்ல என்று ஒரு பழமொழி சொல் வார்கள். அதைப்போல, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி "மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா?" என்பதாகும். பரிந்துரை செய்து அனுப்பியிருந்தால்தான் அரசாங்கத்திற்குத் தெரியும். மாவட்ட ஆட்சியாளரைக் கேட்ட போது, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே பரிந்துரை எதும் செய்யப்



படவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக இந்தப் பிரச்சினை மூடப்படவில்லை. இந்தப் பிரச்சினை மணப்பாறை நகராட்சி மன்றம் கேட்டுக்கொண்ட அடிப்படையில் வெவ்வேறு கட்டத்தில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. மணப்பாறைப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் பிரச்சினை இதிலே இல்லை என்று சொல்லப் படவில்லை. தீர்மானம் போட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலிருந்து வராத காரணத்தால் அங்கே பரிந்துரை செய்யப்பட வில்லை என்று மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கும் போது அதைத்தான் நாங்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கு. காமாட்சி:** மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் போடவில்லை என்றாலும், மணப்பாறை வறண்ட பகுதி, குடி நீருக்கு மக்கள் கஷ்டப்படும் பகுதி என்பது தெரிந்ததே, காவிரியி லிருந்து கொண்டுவராவிட்டாலும், பக்கத்தில் ஓடும் காட்டாற்றில் கிணறு அமைத்து, அதிலிருந்து குடி தண்ணீர் வழங்குவதற் காவது ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. 40 கிலோ மீட்டர் தூரம் தண்ணீர் வரவேண்டும். அதற்கு ஆகும் செலவு ரூ. 100.85 லட்சம் என்றும், இதற்குப் பராமரிப்புச் செலவு ஆண்டுக்கு ரூ. 3.06 லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டது. இதன்படி 1,000 லிட்டர் குடிநீர் வழங்கு வதற்கு 0.93 பைசா நடை முறைச் செலவு ஆகிறது. இந்த செலவை மணப்பாறை நகராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவது கடினம் என்று கருதப்பட்டது. மற்றொரு திட்டம் ஆலோசிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு நிர்மாணச் செலவு எண்பது லட்ச ரூபாய். பராமரிப்புச் செலவு ரூ. 74,000 என்றும். இதன்படி ஆயிரம் லிட்டருக்கு 52 பைசா செலவாகும் என்றும் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு ஓடையிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டியிருப்பதால் பாசன தலைமைப் பொறியாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஏனென்றால், வேறு சிலர் பாதிக்கப்படுவோர் என்று விண்ணப்பங்கள் செய்திருக்கிறார்கள். பல்வேறுவிதமான வேண்டுகோள்களுக்கிடையே பொருத்தமான முடிவை அரசு செய்ய ஆலோசனை நடத்தி வருகிறது.

ஆகிய இரு ஊர்களுக்கும் விரிவு படுத்தப்படும். இத்திட்டத்திற்கான எல்லா வேலைகளுக்கும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பணியாக, தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் பல கட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தலைப்பிடப் பணிகள் வேலை துவக்கப்பட்டு, வடிகிணறு 5.75 மீட்டர் ஆழத்திற்கு இறக்கப்பட்டு, மேற்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. நீர்த்தேக்கத் தொட்டி பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 13.34 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகள் 97 சதவீதம் முடிவடைந்துள்ளன. இன்னும் ஒரு சிறு பகுதிதான் முடிவடைய வேண்டும். நீரேற்றுக் குழாய் வேலை வருகிற ஆண்டில் பெருமளவு முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் எவ்வளவு தண்ணீர் வழங்குவது என்ற புள்ளிவிவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

* 157 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்மலை நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) பொன்மலை நகராட்சி, ஆலத்தூர் பேரூராட்சி மற்றும் வழியிலேயுள்ள கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தில், அமைப்புச் செலவு ரூ. 87,50,000 எனவும் பராமரிப்புச் செலவு ரூ. 2,95,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, பொன்மலை நகராட்சி ஆய்வுச் செலவிற்காக எவ்வளவு ரூபாய் கட்டியுள்ளது? இந்தப் பணி எப்பொழுது துவங்கும் என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆய்வுச் செலவு ரூ. 24,500 ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தப் பணம் கட்டப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இது இன்னும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வுக்குப் பின்னர் ஆகும் செலவு தொகையை எப்படி எப்படி வழங்குவது என்பதை பேரூராட்சி மன்றம் முடிவு செய்ய வேண்டும். இந்தத் தண்ணீர் திட்டத்தினால் இடையிலே பயன் பெறுகிற ஊராட்சிகள் திட்டச் செலவில் ஒரு பங்கினையும் பராமரிப்புச் செலவில் ஒரு பங்கினையும் ஏற்றுக்கொள்வதாகத் தீர்மானம் போட்டுத் தரவேண்டும் என்ற முறைப்படி அந்தத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் இந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாத பகுதி தவிர, ஏற்றுக்கொண்ட பகுதிக்கு நிறைவேற்றுவதற்கான நிதி நிலை வசதி வாய்ப்புக்கூறுகளுக்கு ஏற்ப இவை விரைவுபடுத்தப்படும்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் ஆலத்தூர் பஞ்சாயத்தும் மேலக்கற்கொண்டார் கோட்டை பஞ்சாயத்தும் தனியாக எங்களுக்கு அந்தத் திட்டம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை ஏதாவது அனுப்பியிருக்கிறதா? அது பற்றி அரசு ஏதாவது பரிசீலனை செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆலத்தூர் பேரூராட்சி, பொன்மலை நகராட்சி ஆகிய இரண்டும் இந்தக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பங்குச் செலவைத் தருவதாக ஆமோதித்துத் தீர்மானங்கள் அனுப்பியுள்ளன. ஆகவே, இக்கேள்வி எழவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, நகரப் பகுதிக்கும் கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவது அரசின் கொள்கையாகும். ஆகவே, ஆய்வுக்கு ஏற்படுகின்ற செலவில் பாதித் தொகையை அரசு ஏற்றுக்கொள்வதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா ?

*159 வினா—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை மற்றும் மேட்டுப் பாளையம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் குறித்து திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றம் கூட்டத்தின் பரிந்துரை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டங்கள் எப்போது நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு ஏற்கெனவே பரிசீலனையில் உள்ளது. மேட்டுப்பாளையம் பஞ்சாயத்திற்கான திட்டம் எதுவும் இல்லை.

**திரு. கு. காமாட்சி:** மேட்டுப்பாளையம் தாத்தையங்கார் பேட்டை, துறையூர் போன்ற பகுதிகளுக்கெல்லாம் புளியஞ்சோலையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து குடிநீர் வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? இல்லாவிட்டால் அதை மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒவ்வொரு திட்டமும், எந்த இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும், எவ்வளவு தொலைவு தண்ணீர் வரவேண்டும், எந்த அளவுக்கு நீடிக்க முடியும், எந்த அளவுக்குப் பல்வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க முடியும் என்று பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டுதான் மேற்கொள்ளப்படுகிறது. இப்பொழுது தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில், ரூ. 22,000 செலவில் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீட்டை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதலுக்காக வாரியத் தலைமைப் பொறியாளர் அனுப்பியிருக்கிறார். மேலும் தொடர்ந்து அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விகள் 160, 161, 162, 163, 164, 165 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.



*Declaring river water as National Asset*

*166 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the views of this Government were sought by the Government of India during 1973 on the declaration of the river waters in all the States as an asset of the Nation; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) ஆற்று நீர் அனைவருக்கும் பொதுவான நாட்டுடைமை என்று அறிவிப்பதற்காகவும், மாநிலங்களுக்கிடையே ஆற்று நீர் குறித்து எழும் தகராறுகளுக்கு சமரசம், நடுவர் தீர்ப்பு அல்லது ஏனைய முறைகளினால் தீர்வு காண்பதற்கு வகைசெய்யும், இந்திய அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 262(1) பிரிவையும், 56-வது பதிவையும் திருத்தியமைக்கக் கருதியுள்ளது. எல்லாத் தண்ணீரையும் நாட்டுடைமையாக அறிவிப்பதால், மாநிலங்களுக்குள்ளேயே ஓடும் ஆறுகளின் நீரைப் பொறுத்தவரை மாநில அரசின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டுவிடும் என்ற காரணத்தால் இந்திய அரசின் அச்செயற்குறிப்பை நாம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆறுகளைப் பொறுத்த மட்டில் சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குத் தொடர்ந்திருப்பதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆற்று நீர்த் தகராறுகளை மூன்று நிலைகளில் தீர்த்துக்கொள்ளலாம் என்று நாம் கருத்துத் தெரிவித்துள்ளோம். அவையாவன: முதலாவதாக மாநிலங்கள் அளவிலான பேச்சுவார்த்தை; இரண்டாவதாக இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது இந்தியத் தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட தேசிய நீர் வாயில்கள் குழுவின் நடுவர் தீர்ப்பு இறுதியாகத் தலைமை உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்துகொள்வது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். இந்தக் கேள்விகள் நமக்கு வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில அமைச்சர்கள் கேள்வி நேரத்திற்கு வராமல் இருக்கலாம். அப்படியானால் மற்றொரு நாள் அவை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்வது சரியாக இருக்கும். ஆனால் சில அமைச்சர்கள் பின்னால் வருகிறார்கள் என்ற முறையில் அவைகளை

ஒத்திப்போடுவது என்றால் அதுபற்றி கேள்வி கேட்க இருக்கக் கூடிய உறுப்பினர்களுக்கு அது பாதகமாக இருக்கிறது. ஆக, இன்று ஹரிஜன வெல்பேர் அமைச்சர் அவர்கள் வருகிறார்களா? கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது வந்திருக்கிறார்கள். ஆகவே எந்த முறை கையாளப்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த அமைச்சர் வருகிறார்.

**திரு. என். கே. பழனிசாமி :** இந்தத் தண்ணீர் பங்கீட்டு விவகாரம் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைகளில் தீர்ப்பது என்றிருக்கிறது. இன்று கேரளாத் தண்ணீரைக் கேட்டால் 150 வருடகாலமாகும். எங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும், எவ்வளவு தண்ணீர் உபயோகத்திற்கு வேண்டும் என்று தீர் மானித்ததற்குப் பிறகுதான் தர முடியும் என்று அவர்கள் சொல் கிறார்கள். ஆகவே, எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தண்ணீர் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்று இந்த சர்க்கார் நம்புகிறது? சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம் என்றிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் நாட்டின் அரசியலில் தலை யிடாது. இந்தத் தண்ணீர் பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டிடம் குறிப்பு ஏதாவது இருக்கிறதா? மத்திய சர்க்காரிடம் இந்தத் தண்ணீர் ஒதுக்கீடு சம்பந்தமாக ஏதாவது யோசனை இருக்கிறதா? ஒரு போர்ட் ஏற்படுத்த, அதற்கு ஒரு ஸ்டாச் சூட்டரி பவர்ஸ் கொடுப்பதில் சர்க்காருக்கு எந்த விதத்தில் பாதகம் ஏற்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் படித்தவிடையில் விளக்கமாகப் படித்தேன். மாநிலங்களுக்கு மாநிலங்கள் இடையே ஓடுகிற ஆறுகளைப் பற்றி சட்டம் இயற்றுவதற்கு மத்திய அரசு இயற்றுவதற்கு நாங்கள் அவர்கள் இயற்றலாம் என் பதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் சொல்லி யிருக்கிற லஜஷன் மாநிலத்திற்குள்ளே ஓடுகிற ஆறுகளை அவர்கள் கட்டுப்படுத்துவது என்பது. அது கூடாது. அது தேவை இல்லை என்பது நம் வாதம். மாநிலங்களுக்கு மாநிலங்கள் இடையே ஓடுகிற ஆறுகளைப் பொறுத்தமட்டில் சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருப்பதை ஒத்துக்கொள்கிறோம். அதைத் தான் படித்தேன். மீண்டும் வேண்டுமானால் அதைப் படிக்கிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பாலாற்றின் குறுக்கே அணைகட்டுவது குறித்து, நீர்த்தேக்கங்கள் கட்டுவது குறித்து சில திட்டங்கள் அரசின் கையில் இருக்கிறது. வேண்டிய நதி குறுக்கே குடியாத்தம் தாலுகாவில் ஒரு அணை கட்ட ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு சுமார் 112 லட்சம் ரூபாய் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல் கோவில்மலையார் என்ற ஊரில் மேலசம்பட்டில் ஒரு அணை கட்ட திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்கு 56 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லி யிருக்கிறார்கள். பில்லூரில், திருப்பத்தூர் தாலுகாவில், ஒரு அணைகட்டும் யோசனை வந்து அதுவும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** பாலாற்றின் குறுக்கே பல அணைகள் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற் கத்தக்கது. ஆனால் ஒரு காலத்தில் ஜீவ நதியாக இருந்த பாலாறு இப்போது பாழாறாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, மைசூர் அரசோடு பேசி அதிகப்படியான உபரி நீரை இதில் விடு வதற்கு தக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது 1927-ம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் தகராறு ஆகும். பாலாற்றின் தண்ணீரைப் பயன்படுத்தி நாம் 2 லட்சம் ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறோம். மைசூர் 54,000 ஏக்கர் நிலங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறது. இருப்பினும் அவர்கள் மிகவும் அதிகமான நீரைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை ஓரளவிற்கு நாம் ஒப்புக்கொள் கிறோம். எந்த அளவிற்கு நீர் நமக்கு வந்து கொண்டு இருந்தது என்பதற்கு ஏதாவது ரிக்கார்டுகள் இருக்கிறதா என்று பார்த்தால் ஏதும் இல்லை என்று தான் குறிப்பு இருக்கிறது. மைசூர் அரசு என்ன சொல்கிறதோ அதைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. மாண்புமிகு பழனிசாமி அவர்கள் சொன்னது போல் ஏற்கனவே ஒரு மாநாடு இரண்டு மாநில தலைமைப் பொறியாளரும் சேர்ந்து நடத்தி, பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்தப் பேச்சு வார்த்தை 1955-56-ல் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தை யின் முடிவு என்ன என்று பார்த்தால்-மைசூர் அரசாங்கம் எந்தத் தவறும் செய்யவில்லை என்று தான் இருக்கிறது. இப்போது எதுவும் செய்வதற்கு இல்லை.

நாடாளுமன்றத்தின் அதிகாரவரம்பு மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆறுகளின் நீரைப் பயன்படுத்துதல், அந்த ஆறுகளின் நீர் குறித்த தகராறுகள் ஆகியவற்றிற்கு மட்டுமென வரையறுக்கப்படலாம், மாநிலங்களுக்கிடையே ஓடும் ஓர் ஆறு குறித்த நீர்த் தகராறு ஏதேனுமிருந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகள் இடையே அல்லது அவர்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அத்தகைய பேச்சுவார்த்தைகளினால் உடன்பாடு ஏற்படாவிட்டால் பிறகு இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசிய நீர்வாயில்கள் குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளை தீர்த்து வைக்கலாம். இந்த இறுதி முடிவுக்கு எதிராக தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்; அந்த மேல் முறையீடு நீதிபதிகள் ஐவருக்குக் குறையாத நீதிபதிகள் குழுவினால் முடிவு செய்யப்படவேண்டும். மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் ஆற்று நீர்த்தகராறு கடன் குறித்து அறிக்கைகள் தயார் செய்ய, தேசீய நீர்வாயில்கள் குழுவிற்கு தொழில் நுட்பப் பிரிவு ஒன்றிருக்கலாம். ஆற்றுநீர் குறித்த ஆணைக்குழு என்ற தனிப்பட்டதொரு குழு அமைப்பது அவசியமற்றதாகும். ஏனெனில் அது வட்டார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொள்ளமுடியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும், மேற் சொன்ன திருத்தங்களையொட்டி சட்டம் ஒன்று இயற்றுவதற்கும் நாடாளுமன்றத்தில் சட்டவரைவு எதுவும் கொண்டுவரப்படுவதற்கு முன் சட்ட அமைப்பு, அதன்விவரங்கள் ஆகியவை முதற்கண் தலைமைச் செயலர்கள் மாநாட்டளவிலும் பின்னர் அதைத் தொடர்ந்து முதலமைச்சர்கள் மாநாட்டளவிலும் விரிவாக விவாதிக்கப்படவேண்டும். இந்த யோசனைகளைத் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : காவிரி ஆற்றுப் பிரச்னை சம்பந்தமாக நாம் மைசூர் அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் ஹேமாவதி போன்ற ஆறுகளின் குறுக்கே அவர்கள் அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட இழப்புகள் ஏற்படாதவாறு தடுப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா? அதற்கான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டுள்ளன?





THIRU K. S. KOTHANDARAMIAH : Though it is called Palar, there is neither 'Pal' பால் nor water in it. Unless water is brought from other sources, water will not flow in Palar. Will the Hon. Minister for Public Works tell us whether he would try to bring in waters of Godavari or Krishna via Dharmapuri district and then divert the water to Palar?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, இது வேறு தனிப்பிரச்னை. உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடவும்.

## சேத்தூர் வாய்க்கால் திட்டம்

* 168 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுகா சேத்தூர் வாய்க்கால் வெட்டப்பட டெண்டர் விட்டு 2 வருட காலமாகியும் வெட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : நில ஆர்ஜிதத்திற்கான சில புலன்களின் சர்வே எண்களில் முரண்பாடு இருந்ததால் இத் திட்டம் செயலாக்கத்திற்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளப் படாமல் இருந்தது. தற்சமயம் இத்திட்டத்திற்கான வேலைகளில் 95 விழுக்காடு முடிக்கப்பட்டுவிட்டன. மார்ச் 1974-க்குள் மீத முள்ள வேலைகள் யாவும் முடிவடைந்துவிடும்.

## கூட்டுறவு நூற்பாலைகள்

* 169 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுள் லாபத்தில் இயங்கி வருபவை எவையெவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதுபற்றி வழக்கு தொடரப்பட்டு பின்னர் மத்திய அரசு யோசனைப்படி அது திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முன்பு அமைச்சராக இருந்த கே. எல். ராவ் அவர்கள் மாநாடு ஒன்றைக் கட்டி அதுபற்றி பேசப்பட்டது. விரைவில் காவிரி பற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்த மீண்டும் கூட்டப்படும், பேச அழைப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அநேகமாக இந்த மாதம் அல்லது அடுத்த மாதம் அந்த மாநாடு தொடர்ந்து நடைபெறும்.

**திரு. கே. என். குமாரசாமி:** அமைச்சர் அவர்கள் நதி நீர் பிரச்னையில் ஏற்படுகிற விவகாரங்கள் பற்றி தீர்க்கிற முறைகள் பற்றிச் சொன்னார்கள். இந்த முறைகளில் இந்தப் பிரச்னையில் தீர்வு காண நமது அரசாங்கம் ஏதாவது முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறதா? ஒவ்வொரு மாநிலத்தினுடைய நதிநீர் பிரச்னையிலும் இவ்வளவு சிக்கல்கள் ஏற்படுமானால், இந்த நீர் மூலம் நமக்கு ஏற்படுகிற பாதகம், வருங்கால சமுதாயத்திற்கு பாதகம் ஏற்படும் என்று அரசு அறிகிறதா? அல்லது மாநில சுயாட்சிக் கோரிக்கை காரணமாகத்தான் இதில் ஏதாவது சிக்கல்கள் இருக்கின்றன என்று மற்றவர்கள் அஞ்சுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** காவிரி நீர் பொறுத்த மட்டில் இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டிய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டாகிவிட்டது. அதற்குத் தடையாக இருப்பது மத்திய அரசு போட்டிருக்கிற சில உத்தரவுகளே தவிர வேறு எதுவும் அல்ல. இருந்தாலும் அவைகளைத் தீர்க்கவேண்டுமென்பதற்காக மத்திய அரசின் யோசனையின் பேரில் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தப் பேச்சுவார்த்தைகள் வெகு விரைவில் சுமுகமாக முடியும் என்ற நம்பிக்கையோடு டெல்லிக்கு அழைத்தால் மீண்டும் செல்ல இருக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாநிலங்களுக்கிடையே ஓடுகிற ஆற்று நீர் சம்பந்தமாக எழுகிற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காருக்கு இந்த மாநில சர்க்கார் சில யோசனைகள் கூறியிருக்கின்றன. ஆகவே இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண மத்திய



சர்க்காருக்கு அதிக அதிகாரங்கள் இருந்துதான் ஆகவேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஏற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசின் இந்த எண்ணத்திற்கும் இந்த அரசு விரும்புகிற மாநிலச் சுயாட்சிக்கும் அது விபரீதமாக இருக்கிறதல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையொட்டி துணைக் கேள்விகள் போடவேண்டும். அதை விட்டு விட்டு இன்னொரு இடத்திற்கு போகக்கூடாது.

THIRU B. VENKATASWAMY: Sir, in the Governor's address it has been stated that Water and Power should be on a regional basis. What is the opinion of this Government?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் சொல்வது எனக்கு சரியாக விளங்கவில்லை. மாநிலத்திற்கு மாநிலம் ஓடுகிற ஆறுகள் குறித்து சட்டம் இயற்றுகிற உரிமை நாடாளுமன்றத்திற்கு இருப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு மாநிலத்திற்குள்ளே ஓடுகிற ஆற்று நீரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அந்தந்த மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம்.

*Letting of rain water in Palaru*

* 167 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to let out water into Palaru river during the rainy seasons; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மழைக் காலங்களில் தண்ணீரை பாலாற்றில் கொண்டு வந்து விடுவது குறித்து திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த பாலாறு விஷயம் 1952-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. இதுபற்றி ஒரு குழு சென்று பரிசீலனை செய்து, ஏராளமான குளங்கள் இதன் மூலம் பாசன வசதி பெறுவதன் காரணமாக மழைக் காலங்களில் அதிகப்படி வரும் தண்ணீரைத் தேக்கி இன்னும் அதிகக் குளங்களுக்கு தண்ணீர் கிடைக்கக் கூடிய முறையில் பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1972-73-ம் ஆண்டில், மொத்தம் 12 நூற்பாலைகளில் கீழ்க்கண்ட 10 ஆலைகள் இலாபத்தில் இயங்கின :—

1. தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை, பேட்டை.
2. திருவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, திருவில்லிபுத்தூர்.
3. சேலம் கூட்டுறவு நூற்பாலை, சேலம்.
4. வடாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, வேலூர்.
5. தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு.
6. மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர்.
7. கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம்.
8. திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, கரூர்.
9. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரம்போலி.
10. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சிபுரம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, 12 நூற்பாலைகளில் 10 நூற்பாலைகள் 1972-73-ல் லாபம் ஈட்டியிருப்பதாகச் சொன்னார்கள். மற்ற ஆலைகளை விட கூட்டுறவு நூற்பாலைகளில் கூலி குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அப்படி இருந்தும் 10 ஆலைகளில்தான் லாபம் கிடைத்து இருக்கிறது. மற்ற இரண்டு ஆலைகளில் லாபம் கிடைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அரசு ஆராய்ந்து இருக்கிறது, அப்படியானால் என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1968-ம் ஆண்டில் அந்த ஆலையின் மொத்த நஷ்டம் 207 லட்ச ரூபாய். இப்போது மொத்த நஷ்டமும் 'அக்யூமுலேடட் லாஸ்' 59 லட்சம். அந்த அளவிற்கு முன்னேற்றத்தை நோக்கிப்போய்கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த 12 ஆலைகளில் 10 ஆலைகள் லாபகாரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிலே சில மில்களிலே 12,500 கதிர்கள்தான் இருக்கின்றன. அதை 25,000 கதிர்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் வழி வகை செய்யுமா ? அதிலே





'வொர்க்கர்ஸ் பார்ட்டிசிபேஷன்' என்ற முறையில் தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நஷ்டத்திற்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதும் ஒரு காரணம். அரசாங்கம் கொள்கை அளவில் எல்லா ஆலைகளும் 25,000 கதிர்களாக மாற்ற வேண்டுமென்று ஒப்புக்கொண்டு, படிப்படியாக அதை நிறைவேற்றி வருகிற முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், 'கன்ஸ்யூமர்ஸ்' அதாவது நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் தான் இதிலே அங்கத்தினர்களாக, பங்குதாரர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர்களைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலிலே எத்தனை சதமானம் 'ஹேங்க் யார்ன்', எத்தனை சதமானம் 'கோன் யார்ன்' என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் பெரும்பாலும் கைத்தறிக்குத் தேவையான நூலை நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூலைக் கொடுத்து விட்டு, மீதி நமக்கு இருப்பதைத்தான் பவர் லூம்களுக்குத் தேவையான கோன் யார்ன் உற்பத்தி செய்கிறோம்.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, 10 மில்களிலே லாபம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த மில்கள் அமைக்கப்படுகிற பகுதிகள் எல்லாம் ஓரளவிற்கு முன்னேற்றம் அடைந்த பகுதிகளிலேயே இருக்கின்றன. ஓரளவிற்குப் பின்தங்கிய பகுதிகளில், முன்னேற்றம் அடையாத பகுதிகளில் இந்த மில்களை இனிமேலாவது அமைக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, ஒவ்வொரு மில்லிலும் எவ்வளவு லாபம் கிடைத்தது ? டிவிடெண்ட் எந்தெந்த முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டிவிடெண்ட் கொடுத்து இருக்கின்ற மில்கள் சௌத் இந்தியா, வடாம்காடு, சேலம் நூற்பு ஆலைகள். அதே போல் 1972-73-ல் சேலம், திருவில்லிப்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கொடுத்து இருக்கிறோம்.

*170 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கைப் பகுதியில் நூற்பாலை ஒன்று துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிவகங்கையில் தனியார் துறையில் நூற்பாலை ஒன்றைத் துவக்க மத்திய அரசு ஒரு உரிமம் வழங்கியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்த நூற்பாலை எப்போது துவங்கப்படும், இப்போது எந்த அளவில் ஆக்கப் பணி இருந்து கொண்டிருக்கிறது என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விரைவில் தொடங்கப்படும்.

**விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழிற்சாலை**

*171 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—.

வடார்க்காடு மாவட்டத்தில் விண்ணமங்கலம் அரசு தோல் பதனிடும் ஆலை இதுவரை ஈட்டிய லாபம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1971-72-ம் ஆண்டு முடிய நட்டம் போக கிடைத்த லாபம் ரூபாய் 1.14 இலட்சம்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அந்த விண்ணமங்கலம் தோல் பதனிடும் ஆலை நல்ல லாபம் பெற வாய்ப்பு பெற்று இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதை விரிவுபடுத்த செயற் குறிப்பு இருக்கிறதா ? மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிற தோல் கட்டுப்பாடு கொள்கையின் காரணமாக இது போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், தனியாரும் மிகவும் பாதிக்கப்





பட்டு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அரசு இது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன ? அவர்களுக்கு நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து நம்முடைய தோல் வெளிநாடுகளுக்கும் சரளமான முறையில் அனுப்ப வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் கொள்கை குறித்து பிரதம அமைச்சரிடத்திலும், மற்ற அமைச்சர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன் நடைபெற்ற தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் கூட இது பற்றி விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. ‘பினிஸ்ட் லெதர்’ உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டுமென்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கை. நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அந்தக் கொள்கை நிறைவேற்றப் படவேண்டுமானால் அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் மத்திய அரசாங்கம் செய்யவேண்டும். இப்படிப்பட்ட அடிப்படையில் கொண்டு வந்தது, ஒரு சில பெரிய முதலாளிகளுக்குச் சாதகமாகவும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள்—குறிப்பாக முஸ்லீம் தொழிலாளர்கள்—வேலை செய்யும் ஸ்மால் டானர்ஸ் மத்திய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தவறு என்று சுட்டிக் காட்டினோம். அதற்கு யோசனையும் தெரிவித்தோம்.

இந்த ஸ்மால் டேனர்ஸ்க்கு பினிஷ்ட் கூட்ஸ் சென்டர்கள் அமைத்துத் தர மாநில அரசாங்கம் தயாராக இருக்கிறது. மத்திய அரசு இதற்கு நிதி உதவி அளிக்கவேண்டுமென்று யோசனை சொல்லி இருக்கிறோம். இந்த யோசனை நிறைவேற்றப்படும் வரை இந்த மாநிலத்தில் ஸ்மால் டேனர்ஸ் உற்பத்தி செய்யும் பினிஷ்ட் கூட்ஸை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். அந்த உரிமை மாநில அரசுக்குத் தரவேண்டும். அப்படித் தருகிற அளவிற்கு பெரும் முதலாளிகளுக்குத் தருகிற சலுகைகள் நிறுத்தப்படவேண்டுமென்று நாம் யோசனை தெரிவித்தோம்.

ஜெயிலில் நல்ல முறையில் நடந்து கொண்டால், அதற்கென்று இருக்கிற கமிட்டி பரிந்துரை செய்தால் அந்த அடிப்படையில் விடுதலை செய்வதற்கு வழிவகைகள் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுது அப்படித் தான் செய்து கொண்டு வருகிறோம். ஒரு நபர் 2/3 தண்டனை அனுபவித்து விட்டால், கிட்டத்தட்ட அது 9, 10 ஆண்டுகள் வரும். உடனே அது கமிட்டிக்குப் போகிறது. இந்தக் கமிட்டி சிபார்சு செய்தால் பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. சில சமயங்களில் 'கிரேவ் அஃபென்ஸஸ்', பட்டப் பகலிலே நேரடியாக 'டேலைட் கோல்ட் பிளடட் மர்டர்' இப்படிப்பட்ட கேஸ்களைப் பொறுத்தவரைக்கும் மட்டும் நாம் அதை மறுக்கிறோம்.

**திரு. எம். முத்தையா:** கீழவெண்மணி சம்பவத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து அவர்களுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எற்கெனவே அப்பீல் செய்து இருப்பதாக மன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன்.

### *Honorarium for inmates of Thanjavur Chatram*

* 173 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for the stoppage of honorarium to the inmates of Thanjavur Chatram during September 1973?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தஞ்சாவூர் சத்திரம் நிருவாகத்திலுள்ள எவருக்கும் மதிப்பு ஊதியம் (honorarium) வழங்கப்படுவதில்லை.

**திரு. எஸ். வடிவேல் : தலைவர்** அவர்களே, தஞ்சாவூர் சத்திரம், ஒரத்தநாடு சத்திரம் எந்த நிர்வாகத்தின் கீழ் வருகிறது ? ஆண்டு ஒன்றுக்கு அரசுத் தரப்பில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது. வருவாய் எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசு தொகை வழங்குவதில்லை. சத்திரத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து உலுப்பைத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. உலுப்பைத் தொகை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இது இயங்கி வருகிறது.

### சின்னமருதூர் கிராமத்தில் நில ஆக்கிரமிப்புகள்

* 174 வினா—**திரு. மு. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூர் வட்டாரம், சின்ன மருதூர் கிராமம், போதூரில் க.ச. 210 புறம்போக்கு நிலம் எத்தனை ஆண்டுகளாக யாருடைய ஆக்கிரமிப்பில் இருக்கிறது ?

(இ) அந்த நிலத்துக்கு பட்டா கேட்டு யாராவது விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) சின்னமருதூர் கிராமத்தில் 210 ஆம் சர்வே எண்ணில் உள்ள 2.35 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 1377 பசலி வரை ஏறத்தாழ 14 ஆண்டுகளாக திரு. கருப்பண்ண கவுண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்தது. 1378 பசலியிலிருந்து 1383 பசலி வரை அந்த நிலம் திரு. பழனிசாமி கவுண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து வந்துள்ளது.

(இ) அந்த நிலத்தை ஒப்படை செய்யுமாறு கேட்டு மூவர் விண்ணப்பித்தனர்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இப்படி வசதி படைத்தவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு பல் வேறு இடங்களிலே அந்த நிலங்களை விடுவதற்கு மறுக்கிறார்கள். அரசாங்கம் ஏதாவது பொது விதி ஏற்படுத்தி, இந்த நிலங்களையெல்லாம் பிடுங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமா ?

## மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் தண்டனை குறைக்கப் பட்டவர்கள்

* 172 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இவ்வாண்டு (1972-73) தூக்கு தண்டனை பெற்றவர்களுள் எவருக்கேனும் மன்னிப்பு கொடுத்து ஜென்ம தண்டனையாக மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ)

**1972**

| | | |
|---|---|---|
| 1. | மரண தண்டனை விதிக்கப்பெற்றவர்கள் .. | 32 பேர் |
| 2. | கருணை அடிப்படையில் தண்டனை குறைக்கப் பெற்றவர்கள் :— | |
| | மாநில அரசால் .. | 11 பேர் |
| | இந்திய அரசால் .. | 23 பேர் |
| 3. | இவர்களில், சுதந்திர தின வெள்ளி விழாவையொட்டித் தண்டனை குறைக்கப்பெற்றவர்கள் :— | |
| | மாநில அரசால் .. | 6 பேர் |
| | இந்திய அரசால் .. | 23 பேர் |

**1973**

| | | |
|---|---|---|
| 1. | 1973 நவம்பர் வரையில் மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் .. | 20 பேர் |
| 2. | கருணை அடிப்படையில் தண்டனை குறைக்கப் பெற்றவர்கள் :— | |
| | மாநில அரசால் .. | 31 பேர் |
| | இந்திய அரசால் .. | 16 பேர் |
| 3. | இவர்களில், சுதந்திர தின வெள்ளி விழாவையொட்டித் தண்டனை குறைக்கப்பெற்றவர்கள் :— | |
| | மாநில அரசால் .. | 31 பேர் |
| | இந்திய அரசால் .. | 16 பேர் |





**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த ஜன்ம தண்டனைப் பெற்றவர்களுக்கு வெள்ளி விழா சமயத்தில் கிடைக்கக்கூடிய மார்க்குகள் ஏற்கனவே அவர்களுக்கு 'ரெமிஷன்' க்காக கிடைத்த மார்க்குகளோடு சேர்க்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் 10 ஆண்டுகளுக்கு மேலும் சிறையில் இருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த 'ரெமிஷனை' மாநில அரசோ மத்திய அரசோ கொடுக்கிறபோது, அதைப் பயன்படுத்தி விடுதலை செய்வதாக இருந்தால் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் கூட வெளியேறி விடுகிறார்கள். அதனால் தான் 'மினிமம் 10 வருஷம் அல்லது 2/3 சென்டென்ஸ்' என்று கொண்டு வந்தோம். அந்த விதி அவர்களுக்குப் பயன்படுமானால் நிச்சயம் விடுதலை செய்யலாம்.

(முற்பகல் 9-30)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஜன்ம தண்டனை பெற்றவர்களை ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றுகிறார்கள். ஆனால், ஜன்ம தண்டனை பெற்ற அவர்கள் அப்பீல் செய்து கொண்டிருந்தாலும் கூட அவர்கள் மாற்றப் படுவதாக சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு ஏதாவது தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மத்திய சிறை கனிலே மாற்றம் செய்வது எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. மாற்றம் கேட்பவர்கள் தென் மாவட்டத்திலிருந்து வருபவர்கள். தென் மாவட்டத்தில் குறிப்பாக மதுரை மத்திய சிறையில் இடப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் வேறு சிறைக்கு மாற்றப் படுகிறார்கள். அவர்கள் கேட்ட சிறைக்கு மாற்றுவதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. வசதிக்கு ஏற்றபடி அவரவர்கள் ஊருக்குப் பக்கத்தில் உறவினர்கள் சென்று பார்க்கக்கூடிய நிலையில் சிறையிலே வைக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஜன்ம தண்டனை பெற்ற கைதிகள் 10 வருஷங்களுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என்ற ஒரு நியதி இருக்கிறது. அதே மாதிரி அவர்களுடைய காண்டக்ட் அடிப்படையில்,

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஓர் புகார் வரப்பெற்றது.

(இ) விஷயம் புலனாய்வில் உள்ளது.

***177 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதம் கோவையிலிருந்து கேரளாவிற்கு அரிசி கடத்திச் செல்வதற்கு போலீசார் எவரேனும் ஈடுபட்டனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) 1973 ஆகஸ்ட் மாதம் 5-ந் தேதியன்று கோவையிலிருந்து கேரளாவிற்கு போலீஸ் லாரியில் அரிசி கடத்திச் செல்ல முயன்ற கேரள போலீசைச் சேர்ந்த ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட்கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள் மற்றும் ஒரு ஹவில்தார் டிரைவர் ஆகியோர் மதுக்கரை அருகே கோவை நகர் காவல் துறைப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, பின்பு பாலக்காடு டி.எஸ்.பி. யின் ஜாமின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தப் போலீஸார் மீது ஏதாவது வழக்குப் பதிவு செய்யப்பட்டதா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** முதலில் வழக்கு தொடர ஏற்பாடு செய்யப்பட்டு அங்குள்ள கேரள தலைமை போலீஸ் அதிகாரிகளும் நம்முடைய தலைமை போலீஸ் அதிகாரிகளும் பேசி, அண்டை மாநிலத்தில் நடக்கிற அதிகாரிகள் செய்த குற்றங்களை அந்த மாநிலத்திலுள்ள தலைமை அதிகாரிகள் அந்த அதிகாரிகள் மேல் குற்றத்தை எடுத்துக்கொண்டு அந்தந்த சர்க்கார் அதைப் பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி அந்த வழக்குகள் ராஜி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இது சம்பந்தமாக கேரள மாநில அரசு அதிகாரிகள் மீது ஏதாவது வழக்கு தொடரப்பட்டுள்ளதா? அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே விட்டிருக்கிறோம்.

**திரு. எம். தேவராசன்:** இதைக் காரணமாகக் கொண்டு தமிழ் நாட்டுப் போலீஸாரை வேண்டுமென்றே கேரள போலீஸார் கைது செய்து உள்ளனரா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி:** பாலக்காட்டில் ஒரு குற்ற விசாரணை சம்பந்தமாக கோவை சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்குள்ள குற்றவாளியைக் கைது செய்து விசாரணை செய்வதற்காக கேரள எல்லைக்கு சென்றிருந்தார். முதலில் நாம் பிடித்தது 5—8—1973 மதுக்கரை பக்கத்தில் கேரள போலீஸார் அரிசியைக் கடத்திச் சென்ற அந்த வேனைப் பிடித்து வழக்கு போட்டோம். அது தான் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். தலைமை போலீஸ் அதிகாரிகள் அவரவர்கள் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் மீது உள்ள வழக்குகளை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்முடைய ஐ.ஜி. அவர்கள் விட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 10 நாள் கழித்து நம்முடைய போலீஸ் அங்கே சென்று வேறு ஒரு திருட்டு வழக்கில் ஒருவரைப் பிடித்து விசாரணை நடத்தியபொழுது, அங்கு இருக்கிற போலீஸாரும், மற்ற போலீஸாரும் சேர்ந்து நம்முடைய அதிகாரிகளைப் பிடித்து, அவர்கள் மீது அவர்கள் அங்கிருந்து அரிசி கடத்துகிறார்கள் என்று இரண்டு மூட்டை அரிசியை நமது வேனில் வைத்து. அப்படி வழக்குப் போட்டார்கள். அவர்கள் அதையும் இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** குறிப்பிட்ட போலீஸ் அதிகாரிகள் தம் சொந்தத்துக்காக, தம்முடைய சொந்த லாபத்துக்காக அரிசி கடத்தியிருக்கிறார்களா? அல்லது தமிழ் நாட்டில் இருக்கிற வேறு இதர வியாபாரிகள் சார்பாக ஏஜெண்டாக இருந்து அரிசி கடத்தியிருக்கிறார்களா? இதைச் செய்வதற்கு உதவியாக இருந்தவர் யார்? அப்படியிருந்தால் தமிழ் நாட்டிலிருந்து வியாபாரி யார் யார், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வியாபாரிக்கு உடந்தையாக இருந்து, ஏஜெண்டாக இருந்து போலீஸார் இந்தக் காரியங்களைச் செய்தார்களா? இது விசாரணை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். ஜோசாதிக் பாட்சா: ஏற்கெனவே விதி முறைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரை யில், திரு. கருப்பண்ண கவுண்டர் என்பவர் 14 ஆண்டுகளாக இந்த ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு திரு. பழனிசாமி கவுண்டர் ஆக்கிரமிப்பில் இது இருந்தது. திரு. பழனிசாமி கவுண்டர் பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதைப் பரிசீலித்த பிறகு பழனிசாமி கவுண்டர் வசதி படைத்தவர் என்றும், பண்ணையாளாகிய அவருக்குக் கொடுப் பதற்கில்லை என்று கூறப்பட்டுவிட்டது. கருப்பண்ண கவுண்டரும், மற்றும் இரண்டு பேர்களும் விண்ணப்பம் செய் தார்கள். கருப்பண்ண கவுண்டர் பழனிசாமி கவுண்டரிடம் பண்ணையாள். இது பற்றி பரிசீலனை செய்து, பண்ணையாள் பேரில் வாங்கிக் கொண்டு பழனிசாமி கவுண்டர் உரிமை கொண்டாடுவார் என்று அதுவும் மறுக்கப்பட்டது. திரு. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்கு அந்த நிலத்தை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கருப்பண்ண கவுண்டர் வேறு இடத்தில் கொடுத்தால் போதும் என்று எழுதிக் கொடுத்து விட்டார். பழனிசாமி கவுண்டருக்கும் கிடையாது. கருப்பண்ண கவுண்டருக்கும் கிடையாது. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்குக் கொடுப்பதற்கு குறிப்பு இருப்பதாகத் தெரிவித் துக்கொள்கிறேன்.

### கூட்டுறவுத் துறை நிர்வாகம்

*175 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் கூட்டுறவுத்துறையின் நிர்வாகம் புதிய முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) ( ) 1—9—1972 முதற்கொண்டு, நிலவள வங்கிகளின் துணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள் (மும்முரவேளாண் மைப் பகுதித்திட்டம்) ஆகியோரது அதிகார வரம்புப் பகுதியை ஒன்றாக இணைத்து வட்டத் துணைப்பதிவாளர்களது அதிகார வரம்புப் பகுதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.





(ii) தென் ஆர்க்காடு மாவட்டத்திற்காக, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இணைப்பதிவாளர்களது தனிவட்டாரம் ஒன்று 15—12—1972 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iii) தவிரவும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் தணிக்கை வட்டங்கள் மேற்கு கோயம்புத்தூர், கிழக்கு கோயம்புத்தூர் எனவும் மேற்கு தஞ்சாவூர், கிழக்கு தஞ்சாவூர் எனவும் பிரிக்கப் படவேண்டும் என 1973 ஆகஸ்டில் அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தக் கூட்டுறவு சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் அடிக்கடி பரிந்துரை செய்து வருகின்றன. அண்மையில் கூட இண்டர் நேஷனல் கோஆபரேடிவ் அலயன்ஸ் என்ற ஒரு அமைப்புடன் மூன்று நபர் ஆராய்ச்சிக் குழு ஒன்று இங்கு இருக்கிற கூட்டுறவு சட்டத்தையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஆராய்ந்து விரிவான அறிக்கையை தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? ஆமெனில் அந்த அடிப்படையில் கூட்டுறவு சட்டத்தை திருத்துவதற்கான எண்ணம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. பரந்தாமன்: கூட்டுறவுத் துறையில் பல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று சந்தானம் கமிட்டி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைப்பற்றி மாற்றம் செய்வதற்கான பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

### தமிழ்நாடு கேரள எல்லையிலுள்ள சோதனைச்சாவடி

*176. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு-கேரள எல்லையில் பணி புரிந்த செக்போஸ்ட் அதிகாரிகளைப்பற்றி புகார்கள் ஏதும் தமிழ்நாடு அரசுக்கு கேரள அரசு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தில் சென்னை அருங்காட்சியகத்தின் பகுதியான குழந்தைகள் அருங் காட்சியகம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

*Archaeological excavations in Karur*

* 152 *Q.*—THIRU N. K. PALANISWAMY :
THIRU R. R. MUNUSWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether the State Department of Archaeology has undertaken excavations in Karur in Tiruchirappalli district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். இங்கு அகழாய்வு தொடர்ந்து நடந்து வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** பரிசீலனையின் ஆரம்பத்தில் பாண்டியர் காலத்து நாணயங்களும், சேரர் காலத்து நாணயங்களும் கலந்து கிடைத்திருப்பதாகத் தகவல் வந்திருக் கிறதே, 'அந்த நாணயங்களைத் தவிர ரேர் பைண்டிங்ஸ்— அதிசயமான பொருள் கண்டுபிடிப்பு இருக்கிறதா? எதை எதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கரூர் நகராட்சியினர் நீர்த்தொட்டி அமைக்கும் பொருட்டு ஒரு சோதனைக் குழியை வெட்டினபோது மண்ணில் கறுப்பு, சிவப்பு நிறம் கொண்ட பழமையான பானை ஓடுகளும், சுட்ட செங்கற்களும் கண்டெடுக்கப்பட்டன. அதன்மேலும் இரண்டு குழிகளை தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்ந்தெடுத்து ஆய்வு நடத்தியது. அப்போது குழியில் மூன்று செப்புக் காசுகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவைகளில் ஒரு செப்புக்காசு ரோமானியருடைய காசாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இக்குழியில் ரோமானிய மதுக்குடத்தின் பகுதிகளும், சங்கு வளையல் துண்டு களும், கண்ணாடி வளையல் துண்டுகளும், சுடுமண் மணிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இக்குழியின் தரையில் ஆழத்தில் செங்கல்லாலான தரைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இதில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்விரண்டு குழிகளிலுள்ள கட்டட அமைப்பையும்



கழிவு நீர் கால்வாயையும் நோக்கும்போது இவை ஒரு பெரிய வீட்டின் பகுதிகளாக இருந்திருக்கவேண்டுமென்று கருதப் படுகிறது. இக்குழியில் ரோமானிய மதுக்குடத்தின் கைப்பிடி ஒன்று கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. இவைகளே அன்றி கல் மணிகளும், பச்சைக்கல் மணி ஒன்றும் கண்டுபிடிக்கப்பெற்றது. மழை காலம் முடிந்ததும் மேலும் இவ்விடத்தில் அகழாய்வு நடத்த தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு, தமிழகத்தின் வரலாற்றை அறிய உதவும் வகையில் புத்தக வடிவில் தொகுத்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முழுவதும் இந்தப் பணி முடிந்த பிறகு இதில் கிடைக்கின்ற பொருள்கள் தமிழக வரலாற்றின் ஆராய்ச்சிக்கு பெரிதும் பயன்படும் என்றே கருதுகிறேன். இந்நகரை சோழர்களும் சில காலம் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள். சேரர்களும் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள் என்கிற குறிப்புகள் நம்மிடத்தில் இருக்கின்றன. அதற்கு ஒத்த வகையில் இந்த அகழாய்வுக் கண்டு பிடிப்புகளும் மேற்கொண்ட ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடும்.

**திரு. கு. காமாட்சி :** திருச்சி மாவட்டம் புதுக்கோட்டைப் பகுதியில் அகஸ்ட் சீசர் ரோமாபுரி மன்னர்களின் காலத்து நாணயங்களும். பிறகு அபூர்வ நாணயங்களும் கிடைத்ததை, இன்றைக்கும் பிரிட்டிஷ் ம்யூசியத்தில் வைத்திருப்பதாக அறிகிறேன். அவற்றைத் திரும்பப்பெற முயற்சிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1898-லே நடந்த அந்த அகழாய்வில் 500-க்கும் மேற்பட்ட நாணயங்கள் கிடைத்தன. அவற்றைத் தொண்டைமான் அரசர் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கொடுக்க, அவர்கள் அதை பிரிட்டிஷ் மியூசியத்தில் வைத்திருக் கிறார்கள். ஒரு ம்யூசியத்தில் இருக்கும் பொருள்களைத் திரும்பப் பெறுவது என்பது சங்கடமாக இருக்கும். கேட்டுப் பெறுவது சாத்தியமாக இராது என்றே கருதுகிறேன்.

[1974 சனவரி 25

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: நண்பர் எட்மண்ட் அவர்கள் திங்கட்கிழமை வரை காத்திருக்கவேண்டியதில்லை. இப்போதே சொல்லிவிடுகிறேன். இக்கட்டான நிலைமையில், அப்போது மதுரை மாநாட்டில் உங்கள் தலைவர் சொன்னார், மாநில சுயாட்சிக்காக ராணுவத்தையும் சந்திக்கத் தயாராயிருப்பதாக. அப்படி இக்கட்டான நிலைமை வந்து ராணுவத்தை அவர்கள் சந்திக்கிற நேரத்தில் நானும் சிறை செல்லத் தயாராயிருப்பேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்**: அதை எங்கள் கட்சித் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது தமது சொந்தக் கருத்தாகச் சொல்லியிருக்கலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: தலைவரை இப்படி விடக்கூடாது அல்லவா.

**திரு. க. உரொ. எட்மண்ட்**: அவர்கள் அ.தி.மு.க. கட்சியை ஆரம்பித்ததற்குப் பின்னால் எங்கள் லட்சியம், கொள்கைகள் பற்றி திட்டவட்டமாக நாங்கள் அறிவித்திருக்கிறோம்.

We are neither for dependence nor for independence. We are for interdependence.

என்று நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

ஆனால் மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று சொல்லி நீங்கள் ஆளும் கட்சிக்குள்ளேயே எவ்வளவு பெரிய கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து வைத்திருப்பீர்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சி பற்றி விளக்கம் கூறும்போது என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், மாநில சுயாட்சி என்பது நாங்கள் தனித் தமிழ்நாடு கேட்கவில்லை. நம் மாநிலத்திற்குக் கூடுதல் அதிகாரங்களைத்தான் கேட்கிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த, மாநகராட்சித் தலைவராக இருக்கிற ஒருவர், அவர் மேல் சபையிலும் உறுப்பினராக இருக்கிறார், அவர் என்ன சொல்கிறார் என்றால் மாநில சுயாட்சி





என்பது தனித் தமிழ்நாடு பெறுவதுதான் என்று அவர் சொல்லியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் அங்கம் வகிக்கிற ஒரு அமைச்சர் பெரியாருடைய வழிதான் எங்கள் வழி, பெரியார் அவர்கள் தனித் தமிழ்நாடு கேட்கிறார் என்றால் அவர் வழியை நாங்கள் பின்தொடருவோம் என்று ஒரு பொதுக்கூட்டத்தில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே மாநில சுயாட்சி பற்றி உங்களுக்குள்ளே நீங்கள் குழம்பிக் கொண்டிருக்கிறீர்கள். அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில் நாங்கள் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

We are neither for dependence nor for independence We are only for interdependence '

என்றும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். மிகத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்கள் கட்சியில் உள்ள தலைவர்களுக்குள்ளே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: யூனிட்டரி சிஸ்டம், ஒற்றை ஆட்சி முறை இருக்கிறது. பெடரல் சிஸ்டம், கூட்டாட்சி முறையும் இருக்கிறது. மாநில ஆட்சி முறை இருக்கிறது. அவர்கள் கேட்கும் ஆட்சி முறைக்கு என்ன பெயர் என்று தெரிந்துகொள்ளலாமா ?

**திரு. க. உரொ. எட்மண்ட்**: நாங்கள் சொல்கிற ஆட்சி முறை கூட்டாட்சி முறைதான். அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இதை விட இன்னும் தெளிவாக எங்களால் சொல்ல முடியாது. அதைப் புரிந்து கொள்வதற்குண்டான சக்தி உங்களுக்கு இல்லையென்றால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: அவர்கள் குறிப்பிடுகிற அந்தக் கூட்டாட்சி முறையில் மாநில சுயாட்சி முறை உண்டா, இல்லையா ?

**திரு. க. உரொ. எட்மண்ட்**: மாநில சுயாட்சி தேவை இல்லை என்று எங்கள் தலைவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கேட்கிற மாநில சுயாட்சி எங்களுக்குத் தேவையில்லை இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது. அதை நீங்கள் புரிந்துகொள்ளாதது உங்கள் தவறாகும். நாங்கள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு வாழமாட்டோம், ஆனால் தனித்துப் பிரிந்து போவதற்கு விரும்பவில்லை. நாங்கள்

[திரு. க. உரொ, எட்மண்ட்] [1974 சனவரி 25

விரும்புவது சம அதிகாரங்களோடு ஒருவருக்கொருவர் சேர்ந்திருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இதில் மாநில சுயாட்சிக்கு எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவேண்டிய தேவையில்லை.

ஆனால் உங்களுக்குள்ளே குழம்பிக்கொண்டிருக்கிறீர்கள். முதலமைச்சர் சொல்கிறார், மாநில சுயாட்சி என்றால் எங்களுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும். நாங்கள் பிரிந்து போக விரும்பவில்லை என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் ஒரு அமைச்சர் சொல்கிறார், பெரியார் கொள்கை எங்களுடைய கொள்கை என்று. பெரியார் அவர்கள் தனித் தமிழ் நாடு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாநகராட்சியின் தலைவர், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எங்களுக்கு தனித் தமிழ் நாடு வேண்டும், அதற்காகப் போராட வேண்டும், பதவியில் இருக்கும் அமைச்சர்கள் தங்களுடைய பதவியை ராசினாமா செய்யவேண்டும், தனித் தமிழ்நாடுக்காகப் போராடவேண்டுமென்று உங்களுக்கு அறைகூவல் அனுப்பியிருக்கிறார்கள். உங்களுக்குள்ளே தெளிவு இல்லாவிட்டாலும் கூட, எதற்கெடுத்தாலும் இதைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். மாநில சுயாட்சி பெறுவதற்காக முதலமைச்சர் அவர்கள் போராடுவார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திட்டவட்டமாக திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்துக்களைத் தெளிவாகக் கூறியிருக்கிறது. தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிட்டு இருக்கிறோம். அவர்கள் குறிப்பிடுவது போன்று மேயர் அவர்கள் கூறியதைப்பற்றி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அப்படி அவர்கள் கூறவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

**திரு. க. உரொர். எட்மண்ட் :** அதை ஒருவர் சொல்லி, அது பத்திரிக்கையில் வந்த பிறகு, சொன்னவரே நான் அதைச் சொல்லவில்லை என்று மறுக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மறுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அதை எப்படி எடுத்துக்கொள்வது என்று எங்களுக்குப் புரியவில்லை.



1974 சனவரி 25]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஒரு கட்சியின் கொள்கைப் பற்றி கட்சியின் தீர்மானங்கள் தான் கட்டுப்படுத்தும். அப்படி அல்லாமல் தனிப்பட்டவர்கள் பேசியதாகப் பத்திரிகைகளில் வந்ததெல்லாம் கட்சியைக் கட்டுப்படுத்தாது. அவர்கள் அப்படிப் பேசியதாகவும் எந்தத் தகவலும் இல்லை. அது மாத்திரமல்ல, அவர்கள் அப்படிப் பேசியிருப்பதாக நிருபர்கள் சிலர் வந்து என்னைக் கேட்டார்கள். பத்திரிக்கையில் வந்த செய்தி எல்லாவற்றையும் நம்பிவிட முடியாது என்று சொன்னேன். அப்படி வந்திருந்தாலும் அது எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று குறிப்பிட்டு இருந்தேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் நீர்ப்பாசன வசதியைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு அரசாங்கம் தான் எந்தெந்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமோ அந்தந்த திட்டங்களை நிறைவேற்றி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இங்கேயிருக்கும் குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தவும், செம்மைப்படுத்தவும், குளங்களைத் தூர் எடுக்கவும் நம்முடைய அரசாங்கம் எந்தவிதமான முயற்சிகளை எடுத்து இருக்கிறார்களா என்றால், எந்த விதமான முயற்சிகளையும் இது வரை எடுத்ததாகத் தெரியவில்லை. இன்று அரிசி விலை ஏறியிருக்கிறது என்று சொன்னால், பம்பாயில் பாருங்கள், அங்கே ஒரு படி அரிசி ரூ. 12-க்கு விற்கிறது என்று கூறுகிறார்கள். கேரளாவைப் பாருங்கள் அங்கே படியரிசி ரூ. 8-க்கு விற்கிறது என்று கூறுகிறார்கள். எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது, நீங்கள் தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிறீர்களா அல்லது மகாராஷ்டிராவையும், கேரளத்தையும் ஆண்டுகொண்டிருக்கிறீர்களா என்று தெரியவில்லை.

தமிழ்நாட்டு மக்கள் இன்னும் 2 ஆண்டுகளுக்கு இந்த நாட்டை ஆளுகிற பொறுப்பை உங்களிடத்தில் ஒப்படைத்து இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் விலைவாசியைக் குறைக்க முயற்சி எடுக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் சொல்கிறீர்கள், இன்று விவசாயத்தில் முன்னேற்றம் இல்லை, ஆகவே விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கேயிருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1974 சனவரி 25

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு
முதல் 1969-ம் ஆண்டு வரையில் ஏறத்தாழ 23 மாதங்கள் இந்த
அரசாங்கத்தில் முதலமைச்சராக ஆட்சி நடத்தி இருக்கிறார்கள்.
1967-க்கு முன்னால் தமிழகத்தில் ஒரு படியரிசியின் விலை 2¾
ரூபாயாக இருந்தது. அண்ணா அவர்கள் தேர்தல் நேரத்தில்
சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை
ஏற்றால் நாங்கள் ரூபாய்க்கு ஒரு படியரிசி போடுவோம் என்று
சொன்னார்கள். விலைவாசியைக் குறைப்போம் என்று சொன்னார்
கள். அப்படிச் சொன்ன அண்ணா அவர்கள் ஆட்சி பீடம் வந்த
வுடனே. அதை நிறைவேற்றிக் காட்டினார்கள். செய்து காட்டி
னார்கள். 1967-ல் இருந்த உற்பத்தி தான் அண்ணா அவர்கள்
முதலமைச்சராக வந்த நேரத்திலும் இருந்தது. 1966-ம் ஆண்டு
டிசம்பரில் அல்லது 1967-ம் ஆண்டு ஆகஸ்டில் அரிசியின் உற்பத்தி
தமிழகத்தில் எவ்வளவு இருந்ததோ அதே அளவு உற்பத்தி தான்
அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்த போதும் இருந்தது.
ஒன்றும் அதிகமாகவில்லை, ஆனால் அண்ணா அவர்கள் முதலமைச்ச
ராகப் பொறுப்பேற்றுக் கொண்ட உடனே, ஏறத்தாழ மார்ச்
மாதம் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்கள், ஏப்ரல்
மாதத்தில் அரிசி விலை குறைந்தது. படியரிசி 2¾ விற்றது
ரூ. 1¼ ஆக குறைத்து விட்டது. அதை யாரும் மறுக்க முடியாது.

அதே போன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு
ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் முதல் தமிழகத்தில் சென்னையிலும்,
கோவையிலும் இருக்கும் லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறும்
விதத்தில் ரூபாய்க்கு ஒரு படியரிசி போட்டார்கள். காங்கிரஸ்
கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அப்போது கேட்டார்கள், ஒரு
கண்ணிற்குச் சுண்ணாம்பும், ஒரு கண்ணிற்கு வெண்ணெயுமா
என்று கேட்டார்கள். சென்னையில் போட்ட ஒரு படியரிசியை
ஏன் மற்ற பகுதிகளுக்கும் போடவில்லை என்று கிண்டல் செய்தார்
கள். ஆனால் சென்னையிலும், கோவையிலும் படியரிசி போட்ட
தன் விளைவாக மற்ற பகுதிகளில் அரிசியின் விலை 2¾ ரூபாயி
லிருந்து 1¼ ரூபாயாக, 1.05 ரூபாயாக விற்றது என்பதை
யாரும் மறுக்க முடியாது. அந்த அளவிற்கு அண்ணா அவர்கள்
படியரிசித் திட்டத்தை நிறைவேற்றினார்கள். அப்போதும்



1974 சனவரி 25] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அரிசி விளைச்சல் குறைவாகத்தான் இருந்தது. அரிசி விலை குறைந்ததன் விளைவாக மற்ற பண்டங்களின் விலையும் கட்டுக் கடங்கியே இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்று நிலை என்ன? அரிசி விலை ஏறியிருக்கிறது. அதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அரிசி விலை ஏறுவதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். 1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இருந்த அரிசி உற்பத்தியைவிட 1973-ஆம் ஆண்டில் விளைச்சல் கூடியிருக்கிறது. விவசாயிகள் பகுதிகளில் பேசுகிறார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே தான் உணவு விளைச்சலைப் பெருக்கியிருக்கிறோம். புதியரக நெல் கண்டுபிடித்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள், ஆனால் விளைச்சல் பெருகிய பிறகும், உற்பத்தி கூடிய பிறகும் அரிசி விலை இறங்கி இருக்கிறதா என்றால் இறங்க வில்லை. மாறாக ஏறியிருக்கிறது. காரணம் என்ன என்று பார்த்தால் அண்ணா அவர்கள் கொண்டுவந்த படியரிசித் திட்டத்தை நீங்கள் குழி தோண்டிப் புதைத்தீர்கள்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : அரிசியை நெல்லிலிருந்து தான் உற்பத்தி செய்கிறோம். நெல்லின் விலை குவிண்டாலுக்கு ரூ. 75 என்று வாங்கி ஒரு படியரிசி உற்பத்தி செய்ய ரூ. 2 ஆகிறது. எப்படி அரிசி விலையைக்குறைத்து விடமுடியும்? தனியாக ஏதாவது வழி இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் கூறினால் நன்றாக இருக்கும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** அப்படியானால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த படியரிசித் திட்டத்தைக் குறை கூறு கிறீர்களா என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** அன்றையதினம் நெல் விலை குறைவாக இருந்தது.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 சனவரி 25

விவாசாயின் சார்பிலே அது பற்றி எனக்கு மகஜர் வந்திருக்கிறது. என்ன நடக்கிறது விவசாய அமைச்சர் அவர்களின் சொந்த ஊரில் என்று அங்கே இருப்பவர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் உரம் கிடைக்கவில்லை, உரம் போதவில்லை என்று மத்திய சர்க்கார் பேரில் குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால், கிடைக்கின்ற உரத்தை ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்குத் தேவையான அளவு அல்லது ப்ரபோர்ஷனேட்டாக, விகிதாசாரத்தில் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்களா என்றால் நிச்சயம் இல்லை. அந்த அளவுக்குச் செய்யவேண்டிய தவறுகளையெல்லாம் செய்துவிட்டு, எதற்கெடுத்தாலும் மத்தியசர்க்கார் மீது பழியைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் அதே நேரத்தில் ஒரு விஷயத்தை நம்முடைய அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதாவது ஒரு சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் அல்லது பின்தங்கிய சமுதாயம் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சொன்னால், நம்முடைய அரிசன நலத் துறை அமைச்சர் சொல்கிறார்கள், எல்லாம் மத்திய சர்க்கார் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நம்முடைய நிதி நிலை ஆண்டு அறிக்கையை விவாதிக்கின்ற நேரத்தில் உருது பேசுகின்ற முஸ்லிம் மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். எப்படி அவர்களை மாத்திரம் சேர்த்தார்கள் ?

**திரு. என். கணபதி :** பாக்வேர்டு கிளாஸ், ஷெட்யூல்ட் டிரைப் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. கான்ஸ்டிட்யூஷன் படி ஷெட்யூல்ட் டிரைபை சேர்க்கவேண்டுமென்றால் சென்டிரல் கவர்ன்மெண்டு செய்கிறது. பாக்வேர்டு கிளாசைச் சேர்க்க வேண்டும் என்றால் நம்முடைய கவர்ன்மெண்டு செய்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** 'ஐ ஸ்டாண்ட் கரெக்டட்'. உருது பேசும் முஸ்லிம்களை பாக்வேர்டு கிளாசில் சேர்த்திருக்கிறார்கள். ஆர்டிகில் 15 ஆஃப் தி இண்டியன் கான்ஸ்டிட்யூஷன் . . . .

**திரு. நா. வீராசாமி :** முஸ்லிம்களை பாக்வோர்டு லிஸ்டில் சேர்த்தது தவறு என்று சொல்கிறீர்களா ?



1974 சனவரி 25]

**திரு. க. உரொ. எட்மண்ட் :** உடனே எப்பொழுதுமே உங்களுக்கு இந்தக் கண்ணோட்டம் தான். ஒன்றைக் காட்டி இன்னொரு சமுதாயத்திற்குக் கேட்கிறேன். அதில் தவறு இல்லை. அவர்களுக்குச் செய்திருக்கிறார்கள். அதைப் போலவே உண்மையில் பின்தங்கிய சமுதாயத்திற்குச் செய்தால் என்ன ? சட்டநாதன் குழு என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு தமிழகம் பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு மீனவர் (பரவன்) சமுதாயம் எங்கு போய் பார்த்தாலும் அந்த சமுதாயம் 100-க்கு 99 பேர்கள் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியிருக்கிறார்கள். சமுதாத்தில் கீழ் நிலையில் தள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் அரசாங்க உத்தியோகம் வகிப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அந்த அளவுக்கு அவர்கள் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமைகளை தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து அவர்களை பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சட்டநாதன் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை நிறைவேற்றவில்லை. மாறாக என்ன செய்திருக்கிறார்கள் ? சட்டநாதன் குழு சிபார்சு செய்யாத உருது பேசுகிற முஸ்லிம்களை பின் தங்கியவர்கள் பட்டியலில் எதற்காகச் சேர்க்கவேண்டும் ? திண்டுக்கல்லில் தேர்தலுக்குப் போகவேண்டும்.

(Thiru M. A. Latheef rose)

THIRU G. R. EDMUND : I am not yielding. Let me finish my point.

THIRU M. A. LATHEEF : Let me say this. The hon. Member is giving a wrong information to the House. So far as recommendations of Backward Classes Commission are concerned, it has categorically stated that urdu-speaking Muslims are far backward socially and economically. After the appointment of that Commission, the matter was raised before this House. The Hon. Chief Minister was kind enough to accede to our demand to include urdu-speaking Muslims as belonging to backward class.

Then afterwards legal questions were raised and this Government approached the issue very carefully to appoint a Committee for the specific purpose. An Economic Committee was appointed to go into the conditions, social conditions and economic, backwardness of these people and a proper survey was made . . . . . . .

THIRU G. R. EDMUND : If the hon. Member wants to make a clarification, let him do so briefly and not make a speech.

THIRU M. A. LATHEEF : A survey was made and that survey disclosed that urdu-speaking muslims were backward. It is very very wrong to say that Backward Class Commission has not recommended to include urdu-speaking Muslims as backward. I am very sorry to note that the hon. Member is against the inclusion of urdu-speaking Muslims as 'backward community'. We are taking note of that.

THIRU G. R. EDMUND : Don't take too much of advantage unnecessarily. It is very bad on the part of an Hon. Member to speak like that.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, சட்டநாதன் கமிட்டியின் சிபார்சின் அடிப்படையிலே மீன்வர்கள் சமுதாயத்தை பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் வாதாடுகிறார்கள். அப்படி வாதாடுவதில் எந்தவிதமான தவறும் இருக்காது என்று தான் நான் கூறுகிறேனே ஒழிய வேறுவிதமாக அல்ல. அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை அரசாங்கம் கொடுத்தால் எங்கள் கட்சியைப் பொறுத்தவரைக்கும் முழுமனதோடு ஆதரிக்கிறோம்.

THIRU M. A. LATHEEF : We also support the hon. Member's contention. We do not oppose it. But let him not oppose the inclusion of urdu-speaking Muslims as 'backward'.

THIRU G. R. EDMUND : I am not opposing. I have no idea of opposing it.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்பொழுதே மீனவர்கள் பின்தங்கிய சமுதாயத்தில் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.



**திரு. க. உரொ. எட்மண்ட் :** மன்றத்திற்கு தவறான கருத்துக்களைச் சொல்கிறார்கள். நானே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் தான். எனக்குத் தெரியாமல் அமைச்சர் அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? எனக்குத் தெரியும். தவறான கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

(மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து எழுந்திருந்தார்)

**திரு. க. உரொ. எட்மண்ட் :** 'ஐ ஆம் நாட் ஈல்டிங்'. கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை தாலுக்காவில் உள்ள மீனவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் தான் பின் தங்கிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, ஜி.ஓ. எண் 90. ஆனால், அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறார்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களின் நிலைமை என்ன? அவர்கள் ஏன் முன்னேறியவர்கள் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்? இதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்களெல்லாம் கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பின்தங்கியவர்கள் என்ற நிலையில் அப்படித்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மீனவர் சமுதாயம் 100-க்கு 100 மீனவர்கள் கிறிஸ்துவர்கள், எனக்குத் தெரியும். திருநெல்வேலி மாவட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற மீனவர்கள் பரவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் 100-க்கு 100 கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்கள். ஒரு ஆள் கூட வேறு மதத்தவர் என்று கூற முடியாது. அத்தனை பேர்களும் ரோமன் கத்தோலிக்ஸ். கன்னியாகுமரியில் இருக்கிற அதே மீனவர்கள் அதே மதத்தைச் சார்ந்தவர்கள் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். செங்கோட்டை தாலுகாவில் அதே மீனவர்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, 1967-ல் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு மதிப்பு இருந்தது, இன்றைக்கு 1974-ஆம் ஆண்டில் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை மத்திய அரசாங்கம் வெளியிட்டு இருக்கிறது. 1967-ம் ஆண்டில் 100 பைசாவிற்கு மதிப்பு இருந்தது என்றால் இன்றையதினம் அதற்கு 60 அல்லது 65 பைசாதான் மதிப்பு இருக்கிறது. ஆகவே, அன்றைக்கு 1.25 ரூபாய்க்கு விற்றது என்று சொன்னால் இன்றைக்குக் கிட்டத்தட்ட 1.75 ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்றால், ரூபாய் நாணயக் கணக்கில் பார்த்தால் சமநிலைப் பெற்று இருக்கிறது. இது பற்றி பத்திரிக்கையில் வந்து இருப்பதை அங்கத்தினர் தெரிந்து இருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இப்போது இவ்வளவு விளைச்சல் கூடிய நேரத்தில் கூட விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வீராசாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் கூட மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிற்குத் தேவையான உரம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நான் ஒன்று கேட்கிறேன், தேவையான அளவுக்கு உரம் கொடுக்கவில்லைதான். கொடுத்த உரத்தையாவது ஊழல் இல்லாமல் ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்து இருக்கிறீர்களா என்றால், நிச்சயமாக இல்லை.

விவசாயமே தெரியாதவர்கள், கழனியில் இறங்கி உழவு பிடிக்காதவர்கள், கலப்பை பிடிக்காதவர்கள் இன்றையதினம் உரம் பெற்று இருக்கிறார்கள். எனது தொகுதியில் நடந்து இருக்கிறது. சென்ற ஆண்டு 2 லாரி நிறைய உர மூட்டைகள் ஒன்றியத்திற்கு வந்து இருக்கிறது. ஒன்றியத்திற்கு வந்த உடனே விவசாயிகள் அவர்களுக்கு உரம் கிடைக்கும் என்று சொல்லி கார்டுகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆணையாளரைக் கேட்டபோது உரம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இது எங்கே நடந்து இருக்கிறது என்றால் ஆழ்வார் திருநகரியில் நடந்து இருக்கிறது. அங்கேயிருக்கிற பெரும் தலைவர் அந்த உரத்தை எல்லாம் இன்னொருவருக்கு விற்று விட்டார்கள். விவசாயிகள் கோபம் அடைந்து ஆணையாளரை கெரோ செய்து இருக்கிறார்கள். கலெக்டருக்குத் தகவல்



தெரிவித்தார்கள். இது வரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆணையாளர் உடந்தையாக இருந்துதான் இந்த உர விற்பனை நடைபெற்று இருக்கிறது. இதற்கு முன்பு இருந்த ஆணையாளர் பேரில் குற்றச்சாட்டு சாட்டப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஊழியர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு போட்டார்கள். வழக்கு பதிவு செய்து மூன்றாண்டுகள் ஆகியிருக்கிறது. ஆனால் இன்றுவரையில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அந்த ஒன்றியத்தின் பெரும் தலைவரும், அந்த ஆணையாளரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேரும் சேர்ந்து கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒன்றியத் தலைவரின் இடையீட்டின் பேரில் 3 வருடங்களாகியும் அந்த வழக்கு இன்னும் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல் இருக்கிறது.

(முற்பகல் 11-00)

அதைப்போலத்தான் நேற்று கூட எனக்குப் பதிவுத் தபாலில் என்னுடைய தொகுதியிலிருந்து ஒரு மனு வந்திருக்கிறது. எனது தொகுதியில் காயாமொழி என்று ஊர் இருக்கிறது. அது நமது விவசாய அமைச்சர் ஆதித்தனார் அவர்களுடைய ஊர். அந்த ஊரில் என்ன நடந்திருக்கிறது? விவசாயம் செய்யாதவர்களுக்கெல்லாம் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதித்தன் அவர்களின் சொந்த ஊரில் இப்படி நடந்திருக்கிறது. அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அந்த ஊரில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியும், நஞ்சை வயலே கிடையாது. எல்லாம் பனைமரம் நிறைந்த காடுகள், உடை மரம் நிறைந்த காடுகள். என்ன செய்திருக்கிறார்கள் என்றால், பனை மரக்காடுகள், உடை மரக்காடுகளையெல்லாம் நஞ்சைக் காடுகள் என்று சொல்லி கரிகாலன் போன்ற நெல் ரகங்களை பயிர் செய்திருக்கிறார்கள் என்று பொய்யாக கார்டுகள் தயார் செய்து, ஒரு கார்டுக்கு 65 கிலோ, 130 கிலோ என்ற அளவுக்கு யூரியா கொடுப்பதற்குக் கார்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக என்ன நடந்திருக்கிறது? ரூ. 55-க்கு விற்கவேண்டிய உரம் இன்றைக்கு ரூ. 150-க்கு விற்றுக்கொண்டிருக்கிறது.

சலுகையா? அதே மதத்தைச் சார்ந்தவர்கள், அதே மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் இருப்பவர்களையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருப்பவர்களையும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்காமல், அவர்களை மாத்திரம் முன்னேறியவர்கள் பட்டியலில் சேர்த்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச்சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** செங்கோட்டை தாலுகாவிலும், கன்னியாகுமரியிலும் இருக்கும் மீனவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். அவர்கள் திருவிதாங்கூர்-கொச்சியுடன் இணைக்கப்பட்டிருந்த காலத்தில் இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதிகள் தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட்ட பிறகு இவர்கள் கிறிஸ்துவர்களாக இருக்கிற காரணத்தினால், மீண்டும் அவர்கள் நமது மாநிலத்தோடு சேர்ந்த பிறகு, அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். எனவே தான், தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவராக இருந்தால், அவர்கள் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள். மத்திய அரசின் பட்டியல்படி, இன்னும் தான் இந்த மாநிலத்தில் எல்லா இடங்களிலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் பின்தங்கிய சமுதாயத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற மத்திய அரசு உத்தரவு இருக்கிறது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட கிறிஸ்த வர்களுக்கு எந்தச் சலுகைகள் தரப்படுகிறதோ, அவர்கள் பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் என்ற விளக்கத்தை ஒட்டி, மத்திய அரசினால் நிதி ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. அதே நோக்கில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட கிறிஸ்த வர்களுக்குக் கூட மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செய்கின்ற சலுகைகள் அத்தனையும் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூட மீனவர் சமுதாயத்தைப் பற்றி ஆலோசனைக் குழு கூட்டத்தில் பேசியிருக்கிறார். அதற்கு நானும் பல விளக்கங்களைத் தந்திருக்கிறேன். இது தான் உரிய விளக்கமாகும்.





**திரு. க. உரோ. எட்மண்ட்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுகிறநேரத்தில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ சமுதாயம் என்று சொல்கிறார்களே தவிர தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவ சமுதாயம் தான், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற அதே சமுதாயத் தினர்தான் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாட்டத்திலும் இருக் கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இதே கருத்தை அவர்கள் வேறு பல சந்தர்ப்பங்களிலும் சொல்லியிருக்கிறார்கள், நானும் விளக்கம் அளித்திருக்கிறேன். திருவிதாங்கூர்-கொச்சியோடு கன்னியாகுமரி பகுதி சேர்ந்திருந்த காலத்திலேயே அங்கே இருக்கிற கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த மீனவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பட்டியலில் மத்திய அரசாங்கத் தினாலேயே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் அந்தப் பகுதி சேர்ந்த பிறகும் அதேநிலை இங்கே நீடிக்கிறது. அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நான் அந்த விஷயத்தைப்பற்றி மேலும் சொன்னால் அமைச்சர் அவர்கள் அதே விளக்கத்தைத் தான் அளிப்பார்கள். மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் செய்கிற கொடுமைகளை தாங்க முடியவில்லை. மாநில சுயாட்சி கொடுத்தால் தமிழ் நாட்டில் எதிர்க் கட்சிகளே வாழ முடியாது. இன்றைக்கு எதிர்க் கட்சிகள் தவறு செய்தால் போலீசார் வேகம் வேகமாக நட வடிக்கை எடுக்கிறார்கள். அதேநேரம் ஆளும் கட்சிக்காரர்கள் தவறு செய்கிறபோது கையும் களவுமாகப் பிடித்துக்கொடுத்தால் கூட, அவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கிறார் களா என்றால் இல்லை. இதற்குப் பல ஆதாரங்கள் கொடுக்க முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிக அதிகாரம் வேண்டு மென்று மத்திய அரசாங்கத்திடம் கேட்பது தி.மு.க. அரசுக்கு அல்ல, மாநில அரசுக்குத்தான்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நீங்கள் மாநில சுயாட்சியை நாட்டு மக்களின் நன்மைக்காகக் கேட்பதாகத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் நன்மைக்காகத்தான் கேட்கிறீர்கள்,

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 சனவரி 25

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் மாநில சுயாட்சி கேட்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்து வருகிற பல தவறுகளை மறைப்பதற்காகத்தான் கேட்கிறீர்கள். இதற்குப் பல உதாரணங்களை என்னால் காட்ட முடியும்.

முகவை மாவட்டம்—இளையான்குடி ஒன்றியம் ஆனந்தூரில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்—அவர் 30 ஆயிரத்திற்கும் மேல் பொதுப் பணத்தைக் கையாடல் செய்திருக்கிறார். தணிக்கை செய்த அதிகாரிகளே அதுபற்றி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். நிர்வாகம் அவர் மீது என்ன நடவடிக்கை எடுத்தது? நீண்ட காலம் பரிசீலனை செய்து கடைசியில் ஐந்தாயிரமாவது கையாடல் செய்திருக்க வேண்டுமென்று வழக்குப்போட்டு, நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிபதி அந்த ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரை—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரை கைது செய்வதற்கு வாரண்டு பிறப்பித்திருக்கிறார். அந்த வாரண்டு அந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் இருக்கிற ஆனந்தூர் காவல்துறை அதிகாரியினிடத்திலேயே இருக்கிறது. என்றாலும் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதனால் அவரை இன்னமும் கைது செய்யாமல் இருக்கிறார். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னேயே போய் வந்து கொண்டிருக்கிறார்.

அடுத்து, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்—எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது—அதற்குப் பெரும் தலைவராக இருக்கிறவர் மலஜலம் கழிக்க கக்கூஸ் கட்டியிருப்பதாக பொய்யாக ஐயாயிரம், பத்தாயிரம் கணக்கு எழுதியிருக்கிறார். அதுபற்றி புகார் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டு, அதுபற்றி அசிஸ்டெண்ட் கலெக்டரே வந்து விசாரணை நடத்தி—கக்கூஸ் கட்டிய இடத்தைக் காட்டு என்றால் கட்டியிருந்தால் அல்லவா காட்டுவதற்கு? அதுபற்றிய வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இருக்கிறது. இன்னும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாக மாவட்டச் செயலாளர் குறுக்கீடு—இப்படி பொதுமக்களின் பணத்தைக் கையாடல்



1974 சனவரி 25] [திரு. க. உரொ. எட்மண்ட்]

செய்தவர்களைக் கூட கட்சியைச் சேர்ந்தவர், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று அதிகாரிகளைத் தடை செய்கிறார்கள் என்றால் இன்னும் கூடுதலான அதிகாரம் கொடுக்கப்பட்டால் எந்த அளவுக்கு காவல்துறையினரை இவர்கள் ஆட்டிவைப்பார்கள் என்று சொல்ல முடியாது.

நமது மாநில காவல்துறையினரின் திறமை நமக்கெல்லாம் தெரியும். உலகிலேயே 2-வது இடம் வகிக்கிறது நமது காவல்துறை. அவ்வளவு திறமை வாய்ந்த நமது காவல் துறையையே நீங்கள் முடமாக்கி வைத்திருக்கிறீர்கள். It is crippled and fettered. சுயேச்சையாக, சுதந்திரமாக, சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் எதையும் செய்ய முடியவில்லை. இதற்குக் கூட ஒரு உதாரணம் காட்ட முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு, திண்டுக்கல் தேர்தல் நிதி சேகரிக்க, எங்கள் கட்சியின் தலைவர் திரு. எம். ஜி. இராமச் சந்திரன் ஒரு சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந் தார். அந்தச் சிறப்புக் கூட்டத்திற்கு லட்சக்கணக்கான மக்கள் வரக்கூடும், கலவரங்கள், திருட்டு போன்றவை நடக்கா திருக்க போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்பதாக அந்தப் பகுதி அமைப்பாளர் என்ற முறையில் நானே போலீஸ் அதிகாரி யினிடம் சென்று தெரிவித்தேன். கூட்டத்தன்று மாலை 5 மணி வரையில் தருகிறேன் என்றவர் கூட்டம் நடக்கிற சமயத்தில் ஒரு வரைக்கூட அனுப்பிவைக்கவில்லை. லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். தொலைபேசி மூலம் கூட்டத்திற்கு பந்தோபஸ்து அளிக்கப்படவில்லையே என்று நான் கேட்டதற்கு "மன்னிக்க வேண்டும், ஒருவரைக்கூட அனுப்பிவைக்க முடியாத நிலைமையில் நான் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

எம்.ஜி.ஆர். இந்தச் சட்ட மன்ற உறுப்பினர் மாத்திரம் அல்ல. அவருக்குப் பின்னால் லட்சக்கணக்கான இளைஞர்கள் அணிவகுத் திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் அவர் பேசுகிற சிறப்புக் கூட்டத்திற்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அதேசமயம் உங்கள் கட்சியைச் சேர்ந்த வட்டச் செயலாளர் பேசுகிறார் என்றால் 50 போலீஸ்காரர்களை பாதுகாப்புக்கு அனுப்பு கிறீர்கள், மாவட்டச் செயலாளர் பேசுகிறார் என்றால் 500 போலீஸ் காரர்களை அனுப்புகிறீர்கள். அமைச்சர்களது கூட்டத்திற்குப்

பாதுகாப்பு அளிக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. பாதுகாப்பு கொடுக்க வேண்டியது கடமை. எந்த ஒரு மன்றத்திற்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவர்—கட்சியில் உள்ளவர்கள் பேசுகிற உங்கள் கட்சிக் கூட்டங்களுக்கு எல்லாம் பாதுகாப்புக்காக போலீஸ்காரர்களை அனுப்பிவைக்கிறீர்கள். எம். ஜி. இராமச்சந்திரன் அண்ணா தி.மு.க.வின் தலைவர், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்—அவரது கூட்டத்திற்கு காவல்துறையில் இருந்து ஒருவர் கூட பந்தோபஸ்துக்கு வரவில்லை. அந்த அளவுக்கு நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் பத்து நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இன்றைக்கு இரண்டு சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது சாட்டப்படுகிற ஊழல் புகார்களைத் தடுக்க கொண்டுவரப்பட்ட சட்டம் பற்றி என்ன சொல்கிறார்கள்? நாங்கள் விசாரணைக்குத் தயார் என்கிறார்கள். சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாவிட்டால் குற்றம் சாட்டியவருக்கு 3 ஆண்டுகாலத் தண்டனை, நமக்குத் தெரியும். எவ்வளவு பெரிய வழக்காக இருந்தாலும், உண்மையான சாட்சிகளைக் கூட ஒரு வழக்கறிஞர் தமது வாதத் திறமையினால் முறியடித்துவிடுவதை. உண்மையான குற்றவாளியை தம் வாதத் திறமையினால் தப்புவிக்கவிட்டதும் உண்டு. நிரபராதியை தண்டனை பெறச் செய்ததும் உண்டு. குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாவிட்டால் 3 ஆண்டுகாலத் தண்டனை என்பது . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். நிரூபிக்கப்படாவிட்டால் 3 ஆண்டு தண்டனை என்று சட்டத்தில் இல்லவே இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் படித்த அளவு அந்தச் சட்டத்தில் அப்படித்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டத்தில் "false, frivolous and vexatious charge என்றுதான் இருக்கிறது. இது சட்ட நிபுணர்களுக்கு எல்லாம் தெரிந்த வார்த்தைகள். இப்போதுள்ள



சட்டத்தில் நிரூபிக்கப்படாவிட்டால் 3 ஆண்டு தண்டனை என்று சொல்லவேயில்லை. காரணம் இவர்கள் சொல்வது எதுவும் நிரூபிக்க முடியாதது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதை நீங்கள் ஆட்சியிலே இருக்கிறவரைக்கும் நிரூபிக்க முடியாது. நீங்கள் போய் வேறு கட்சி ஆட்சிக்கு வரும்போது அத்தனையையும் நிரூபிக்கமுடியும். ஆக, எங்களுக்குத் தெரியும் false, frivolous and vaxatious என்பது. ஆனால், பாமர மக்களுக்கு என்ன தெரியும்? வழக்கறிஞர் தன்னுடைய வாதத் திறமையாலே எப்படி வேண்டுமானாலும் முடிவைக் கொண்டு வரலாம். சட்ட அமைச்சர் கூட ஒரு வழக்கறிஞர். சட்ட அறிஞர் false, frivolous and vexatious charge என்று எதையும் நிரூபிக்கமுடியும், நிரூபித்துவிடலாம். வழக்கறிஞர் தன்னுடைய வாதத் திறமையாலே, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்கிற நேரத்தில், எவ்வளவு பெரிய சாட்சிகளையும் சுக்குநூறுக்கிவிடலாம். குற்றச்சாட்டைக் கொண்டு வருபவர், குற்றத்தை நிரூபிக்க வில்லையென்றால், 3 ஆண்டுகள் சிறை என்று வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே பல சட்டங்கள் இருக்கின்றன. prevention of Food Adulteration Act, Suppression of Immoral Traffic Act.

அதைப்போல, பல சட்டங்கள் இருக்கின்றன. மாநில அரசு கொண்டுவருகிற கிரிமினல் சட்டங்கள் ஏராளம் இருக்கின்றன. நீங்கள் அதிலே, திருத்தங்களைக் கொண்டுவாருங்கள் If the charge is tc be proved false, frivolous or vaxatious, there to is punishable. என்று கொண்டு வந்தால், குற்றச்சாட்டை நிரூபிக்காவிட்டால், குற்றச்சாட்டைக் கொண்டு வருகிறவருக்கு 3 ஆண்டு தண்டனை என்று ஒரு திருத்தம் கொண்டு வந்தால், பாலில் கலப்படம் செய்யப்படுவதை எந்த சானிட்டரி இன்ஸ்பெக்டரும் பிடிக்க மாட்டான். நமக்கு எதற்கு வம்பு, நிரூபிக்காவிட்டால் 3 ஆண்டு தண்டனை என்று பயப்படக்கூடிய . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தச் சட்டத்திலே மட்டுமல்லாமல், இப்பொழுதிருக்கிற சட்டத்திலேயே எந்த அதிகாரியும் தனிப்பட்ட குடிமகன்மீது இப்படிப்பட்ட பொய்யான வழக்கைப் போடுவாரானால், அந்த அதிகாரிமீது வழக்கு தொடர இப்பொழுதே அதிகாரம் இருக்கிறது, சட்டத்திலே வழி இருக்கிறது. அதை எப்படி திரு. எட்மண்ட் அவர்கள் மறந்தார் என்று தெரியவில்லை.

ஆகும். ஸ்லாப் போட்டு 30 கடைகளைக் கட்ட ஒப்பந்தம் பேசி, அதிலே யாரெல்லாம் பங்கு போட்டுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? ஒரு ஸ்டீல் பங்க் ரூ. 1,200 ஆகும். அதைவிட பக்கா செங்கல் கட்டிடம் கட்ட ரூ. 2,200 ஆகும். இவ்வளவையும் விட்டு விட்டு ஸ்லாப் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 3,500-ல் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார். அதைக் கூட விசாரிக்கவேண்டும்.

அடுத்து, நெல்லை மாவட்டத்திலே சமீபத்திலே ஒன்று நடந்திருக்கிறது. அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் கொதித்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற வண்ணாரப்பேட்டையில் சப் மாஜிஸ்டிரேட் அலுவலகம், சர்க்யூட் ஹவுஸ் பக்கத்தில் ஏறத்தாழ 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் இருக்கிறது. அந்த நிலத்திற்கு எவ்வளவு தாராளமாக விலைபோட்டாலும்கூட ஒரு ஏக்கர் நிலம் ரூ. 10,000-க்கு மேலே போகாது. ஆக, ரூ. 30,000-க்கு வாங்கக் கூடிய அந்நிலத்தை ரூ. 3 இலட்சத்திற்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்காக வாங்கியிருக்கிறார்கள். . .

**திரு. நா. வீராசாமி**: தலைவர் அவர்களே, ஏற்கனவே, ஜேம்ஸ் அவர்கள் அதைச் சொல்லும்போது போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சரியான விளக்கங்களைச் சொல்லி, இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது, எந்தக் கழகம் நிலத்தை வாங்குவதானாலும் இங்கே இருக்கக் கூடிய ரெவின்யூ ஆபீசர்களுடைய சான்றிதழ்களைப் பெற்றுத்தான் . . .

**திரு. க. உரோ. எட்மண்ட்**: நான் அந்த மாவட்டத்திலே இருந்து வருகின்றவன். அந்த நிலத்துக்குப் பக்கமாக, தினமும் நீதிமன்றத்திற்குப் போகிறவன். அந்த நிலத்திலே நெல் விளையாது. சாதாரண புஞ்சைப் பயிர் கூட விளையாது காட்டுப் பயிர்களைத்தான் அங்கு விளைவிக்க முடியும். 'பேரன்' நிலம் அது. எதற்குமே உதவாது. தண்ணீர் தேக்கி வைக்கலாம். அதனுடைய மதிப்பு ஏக்கருக்கு ரூ. 10,000 பெறும். அதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 3 இலட்சம் கொடுத்து அந்நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். இதுபற்றி அங்கே மக்கள் என்ன பேசுகிறார்கள்? அதையும் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இதிலே ஆளும் கட்சி பிரமுகர்கள் தலையிட்டு, ரூ. 30,000 தான் 3 ஏக்கருக்குப் பெறுமானமுள்ளது, அதை நிலச் சொந்தக்காரர்களிடம் ரூ. 3 இலட்சத்துக்கு வாங்கி,



என்ன ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள பெரிய புள்ளிகளிடம் அவர், ரூ. 3 இலட்சத்துக்குக் கிரயம் வாங்கியிருக்கிறோம், ரூ. 1 இலட்சத்தை இப்பொழுது தந்துவிடுகிறோம்; ரூ. 2 இலட்சத்தை வரப்போகிற நகராட்சித் தேர்தல்களின்போது தந்துவிடுகிறோம் என்று பேசி வாங்கியிருப்பதாகப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே, பேசுவது என்றால், எதை வேண்டுமானாலும் பேசலாம். எந்தப் பொருளை வாங்குவதைப்பற்றிகூட, அதிக விலை கொடுத்து வாங்கிவிட்டார்கள் என்று குறை கூறலாம். ஆனால், போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த நிலம் வேண்டுமென்று வாங்கியது அரசாங்கம், அரசாங்கத் துறையின்மூலம் வாங்கியிருக்கிறோம். அதிலே நிச்சயமாக, எங்கள் கட்சிக்காரர்கள் என்று மட்டுமல்ல, தனிப்பட்டவர்களுடைய தலையீடு கூட கிடையாது. அந்த நிலத்தினுடைய மதிப்பு அவ்வளவு பெறுமா, பெறாதா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்றாக அறிவார்கள். மெயின் ரோடுக்கு அருகாமையிலேயே அந்த இடம் இருக்கிறது. ஆனால், அந்த இடத்தை வாங்கக் கூடாது என்பதற்காக சிலபேர் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். வேறு நிலங்களை அவர்களுக்குத் தரலாம் என்கின்ற வகையிலே பலபேர் முயற்சி செய்தார்கள் என்பதை மட்டும் நான் அறிவேன்.

நிலத்தைப் பொறுத்தவரையிலே, விலையைப் பொறுத்தவரையிலே, அதனுடைய மதிப்பைப் பொறுத்தவரையிலே, வருவாய்த் துறையினர் அதற்கு அருகிலே இருக்கிற நிலங்கள் எந்த விலைக்குப் போயிருக்கின்றன என்று பார்த்து, எப்படி ரெவின்யூ இலாகா மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ, அதே அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே ஏதோ தவறுகள் நடந்திருக்கின்றன என்று நாமாகவே கற்பித்துக்கொள்வது நல்ல பழக்கம் அல்ல.

**திரு. க. உரோ. எட்மண்ட்**: நான் சிவில் வழக்குகள் நடத்தி பழக்கப்பட்டவன் அல்ல. ஆனால், அந்த வழக்குகள் நடக்கும் போது இருந்து பார்த்திருக்கிறேன். இந்த நிலக் கிரயம் சம்பந்தமாக ஏதாவது இப்படிப்பட்ட தகராறுகள் நீதிமன்றத்திலே வருகிறபொழுது எப்படி நீதிமன்றங்கள் பெரும்பாலும். விலை

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அப்படியானால் இதற்கும் அது பொருந்துகிறது. இந்தச்சட்டத்திலே மாத்திரம் ஏன் அப்படி ஒரு கிளாஸைப் போடவேண்டும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** காரணம் அது கலப்படம், இது 'க்ரப்ஷன்'.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இரண்டும் கலப்படம்தான். அதிலே பாலிலே கலப்படம், இதிலே நாணயத்திலே கலப்படம். கொலை செய்வதும் குற்றம்தான், அடித்து, கையை உடைப்பதும் குற்றம்தான். இரண்டும் குற்றம்தான். செக்‌ஷன்கள்தான் வெவ்வேறு இருக்கின்றன குற்றத்திற்குத் தகுந்தவாறு. அந்த வழக்கில், குற்றத்தை நிரூபிக்கவில்லையென்றால், அதைக் கொண்டு வருகிற அதிகாரிக்கு ஓராண்டு தண்டனை, அல்லது மூன்றாண்டு தண்டனை என்றால், எந்த அதிகாரியாவது எந்தக் குற்றத்தை யாவது கண்டு பிடிப்பார்களா? கண்டுபிடிக்கமாட்டார்கள். அதிகாரிகளே பயப்படுவார்களானால், சாதாரண பாமர மக்கள், ஊழல் குற்றச்சாட்டைக் கொண்டு வர வேண்டும் என்றால் . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தைவிட, மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல இன்னொரு இடம் இல்லையென்று அறிவார்கள். ஆகவே, எந்தக் குற்றச்சாட்டையும் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லலாம். இந்தச் சட்டமன்றத்திலே சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயாரா என்று கேட்கிறபொழுது, நீதிமன்றத்திற்குப் போனால்தான் அந்தப் பிரச்னை தீரும் என்றாலும்கூட, சட்டமன்றத்திலே அந்தக் குற்றங்களைச் சொல்லவும், குறைகளைச் சொல்லவும் அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கின்ற அப்படிப்பட்ட இந்த மன்றத்திற்கு வரத் தயாராக இல்லாதவர்களுக்காகத் தான் அந்த நீதிமன்றம் ஏற்பட இருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எத்தனைக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன எங்களிடம்? நாங்கள் சொல்லத் தயார். அதற்கான ஆதாரம் இருக்கிறது எங்களிடம். ஆனால், சொல்லப்பட்ட எத்தனை குற்றச்சாட்டுகள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? இப்பொழுது தான் காயாமொழியிலே ஊழல் நடந்திருக்கிறது என்று நான் சொல்லி இருக்கிறேன். விசாரிப்பீர்களா? . . .



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இங்கு சொல்லப்படுகின்ற எந்த விவரங்களும் புறக்கணிக்கப்பட்டுவிடுகின்ற விவரங்கள் அல்ல. எது சொல்லப்பட்டாலும் உடனடியாக அவைகள் விசாரிக்கப்படுகின்றன. இப்பொழுது உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிற அந்த விஷயங்களும் நிச்சயமாக விசாரிக்கப் படும். உரிய நேரத்தில், விவரங்கள் கிடைத்தபிறகு, இந்த அவையிலே நிச்சயமாக விவரங்கள் தரப்படும்.

இப்பொழுது உறுப்பினர் அவர்கள் பேசுவதிலிருந்து இச் சட்டம் தமிழ்நாட்டிலே மாத்திரம் கொண்டு வந்திருப்பதாக ஒரு தோற்றம் தெரிகிறது. அது சரி அல்ல. ஏற்கனவே ராஜஸ் தான் மாநிலத்திலும், மகாராஷ்டிர மாநிலத்திலும் லோக் ஆயுக்த் என்ற பெயரில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கேயும் இதே 3 வருஷம் தண்டனை, குற்றத்தைச் சாட்டி நிரூபிக்காதவர்களுக்கு உண்டு. மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், குற்றம் சாட்ட வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டால் 3 வருஷம் தண்டனை என்று ராஜஸ்தானிலே கொண்டு வரப்பட்டிருக் கிற சட்டத்திலே இருக்கிறது, மகாராஷ்டிராவிலே கொண்டு வந்தி ருக்கின்ற சட்டத்திலே இருக்கிறது. ஆனால், அங்கெல்லாம் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அமைச்சர்களானாலும் சட்டமன்ற உறுப்பினர்களானாலும் 7 ஆண்டு சிறை தண்டனை என்று அந்தச் சட்டங்களிலே இல்லை. நாம்தான் போட்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அங்குள்ள சட்டங்களிலே, அமைச்சர் என்றால், முதலமைச்சரைத் தவிர என்று இருக்கிறது—முதலமைச்சர் அதிலே தப்பித்துக்கொள்ளலாம். ஆனால், இங்கே நாம் சொல்லி யிருப்பது அமைச்சர் என்றால் முதலமைச்சர் உட்பட என்று முதலமைச்சரையும் இணைத்துச் சட்டம் போட்டிருக்கிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதைப்போல் பல்லவபுரம் நகராட்சி. அங்கே ஒரு ஸ்பெஷல் ஆபீசர் இருக்கிறார்கள். அவருடைய பெயரை வேண்டுமானால் சொல்கிறேன், வரதராஜன் என்பது அவர் பெயர். அங்கே சில பெட்டிக் கடைகளைக் கட்ட வேண்டும். ஸ்டீல் பங்க் கட்ட ரூ. 1,200 ஆகும்: செங்கல்லில் கட்ட ரூ. 2,200 ஆகும்: அவர் இரண்டையும் விட்டுவிட்டு, ஸ்லாப் போட்டு கட்டியிருக்கிறார். ஸ்லாபிலே ஒரு கடை கட்ட ரூ. 3,500

[1974 சனவரி 25

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அடுத்தாற்போல் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி அதிகாரத்தை கொடுத்து விட்டால் என்ன நடக்கும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** "கேட்டிருக்கிறார்கள்" என்று சொல்வது சரியில்லை. நீங்களும் சேர்ந்தேதான் கேட்டிருக்கிறீர்கள், வாக்களித்திருக்கிறீர்கள். ஆகவே, "கேட்டிருக்கிறோம்" என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

மேலும், இப்போது அதைப்பற்றி நீங்களாகவே கேட்பதாகத் தெரியவில்லை. உங்கள் பெரும் தலைவர் அப்படிக் கேட்பது தப்பு என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. அதையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதை நான் ஒப்பிடத் தயாராக இல்லை. என்னுடைய கருத்தெல்லாம், இப்போது இருக்கின்ற அதிகாரங்களே துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. அத்தோடு கறுப்புப் பணத்தைப் பிடிக்கின்ற அதிகாரத்தையும் மாநில அரசுக்குக் கொடுத்தால் கண்டு பிடிப்பது யார்? தமிழ் நாடு போலீஸ் தானே! மகாராஷ்ட்டிர மாநில போலீஸார் கண்டு பிடிக்கப் போவது கிடையாது. கேரள மாநில போலீஸார் கண்டு பிடிக்கப்போவதில்லை. தமிழ்நாடு போலீஸ்தான் கண்டுபிடிக்கப் போகிறது. அப்படியானால், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருக்கும் கறுப்புப் பணத்தை அவர்கள் கண்டுபிடிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மன்னிக்கவேண்டும், அடிக்கடி குறுக்கிடுவதற்கு. நாம் கேட்டிருப்பது "மாநில அரசுக்கு" என்று அல்ல. "மாநில அரசுக்கும்" அதிகாரம் இருக்கிறது. மாநில அரசுக்கும் அதிகாரம் இருக்க வேண்டுமென்று கேட்கிறோம். கறுப்புப் பணம் ஆளுங்கட்சிக்காரர்கள் வைத்திருந்தால் மத்திய அரசு பிடிக்கட்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளுங்கட்சியின் தயவோடு வைத்திருந்தால், மாநில அரசு கண்டு பிடிக்கட்டும்.

1974 சனவரி 25]

**திரு க. உரொ. எட்மண்ட்:** மாநில அரசுக்கு கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தால், ஆளுங் கட்சிக்காரர்கள் கறுப்புப் பணம் வைத்திருந்தால், கண்டு பிடிப்பார்களா? அல்லது பாதுகாப்பு தருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆளுங்கட்சிக்காரர்கள் வைத்திருந்தால் மத்திய அரசின் போலீஸ் கண்டுபிடிக்கலாமே! அதுவும் தவிர, இதை, தீர்மானம் கொண்டு வரும்போதே திரு. எட்மண்ட் கேட்டிருக்கவேண்டும். தலைவர் சொன்ன பிறகு கேட்பது சரியல்ல. சந்தேகமாக இருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாநில அரசுக்கு கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்கிற அதிகாரத்தைக் கொடுத்தால், காவல் துறையினர் அதைச் செய்வார்களா? கையாடல் செய்திருப்பதாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, வாரண்ட் அனுப்பியிருக்கிறார்கள், காவல் துறை எஸ். ஐ. வாரண்டை கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும் குழப்பப் படுகிறது. கள்ளப் பணத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கும் இருக்கிறது. அந்த அதிகாரத்தை இப்போது போலவே தொடர்ந்து செயல்படுத்தலாம். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் வேண்டுமென்று சொல்வது, எதிர்க் கட்சிக் காரர்கள் கறுப்புப் பணம் வைத்திருந்தால், கண்டுபிடிப்பதற்கு; ஆளுங்கட்சிக்காரர்கள் கறுப்புப் பணம் வைத்திருந்தால், அதை மாநில அரசு கண்டுபிடிக்காது என்பது உங்களுடைய வாதம். அதைக்கூட வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும், அந்த அதிகாரம் மத்திய அரசுக்கும் தொடர்ந்து இருக்கிறது. அப்படி ஆளுங்கட்சிக்காரர்கள் வைத்திருந்தால் மத்திய அரசு கண்டு பிடிக்கலாம். அதைப் போல எதிர்க்கட்சிக்காரர்கள் வைத்திருந்தால் மாநில அரசு கண்டுபிடிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10-42-க்கு ஆரம்பித்தீர்கள், ஒரு மணி ஆகப்போகிறது. முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** சீக்கிரம் முடித்து விடுகிறேன். என்ன செய்வது? பல இண்டரப்ஷன்கள். இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

நிர்ணயம் செய்கிறார்கள் என்றால், பக்கத்திலே இருக்கிற நிலம் என்ன கிரயம் விற்றிருக்கிறது என்று பார்ப்பார்கள். அதே நிலத்திற்குப் பக்கத்திலே என்ன என்று விசாரித்துப் பாருங்கள். பக்கத்து நிலத்திற்கு என்ன கிரயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ரூ. 3 இலட்சம் நியாயம்தானா அல்லது மிகமிகப் பெரிய அநியாயமா என்பதை நீங்களே உணர்வீர்கள். ரெவின்யூ அதிகாரிகள் நிச்சயிக்கிறார்கள் என்றால் அவர்கள் சொல்கிற அளவுக்கு பணத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் இல்லை.

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ரெவின்யூ அதிகாரிகள் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றால் வேறு யார் சொல்வதை ஏற்றுக்கொள்வது?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்த ரெவின்யூ அதிகாரிகள் அந்த நிலச் சொந்தக்காரர்களுடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அரசாங்க வருவாய்த்துறை என்பது ஒரு நிலத்தினுடைய மதிப்பை எடுத்துச் சொல்வதற்காக இருப்பது. எப்படி ஒரு பி. டபிள்யூ. டி. என்ஜினீயர் ஒரு கட்டிடத்திற்கு இவ்வளவு விலை என்று சொன்னால் அதை சரி என்று ஏற்றுக்கொள்கிறோமோ, அதேபோல ஒரு நிலத்தின் விலையை, அந்த நிலத்தின் அருகாமையிலுள்ள நிலங்கள் ஏற்கனவே விற்ற பத்திரங்களை வைத்தோ அல்லது மற்ற காரணங்களை வைத்தோ நிர்ணயிக்கிறார்கள். அப்படிச் சொல்கின்ற ரெவின்யூ அதிகாரிகள் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமல், திரு. எட்மண்ட் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பொருளா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மூன்று ஏக்கர்—மூன்று லட்சம் என்று மட்டும் சொன்னால் போதாது. ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கிரவுண்ட், அங்கே எத்தனை கிரவுண்ட் போக்குவரத்துக் கழகத்துக்கு வேண்டுமென்று வாங்கப்பட்டது என்ற விவரங்களையெல்லாம் சொன்னால்கூட தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.





**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்கள் மாவட்டத்தில் கிரவுண்ட் கணக்கில் நிலங்களை விற்பதில்லை. இவ்வளவு ஏக்கர், இவ்வளவு சென்ட் என்ற கணக்கில்தான் விற்கப்படுகின்றன. சென்னையில்தான் கிரவுண்ட் கணக்கில் வாங்குவது விற்பது என்ற வழக்கம் இருக்கிறது. எப்படியிருந்தாலும், 3 ஏக்கர் என்று சொன்னால் எங்கேயும் 3 ஏக்கர்தான், ஒரு ஏக்கர் ஒரு ஏக்கர்தான். இதிலே நான் கூற விரும்புவதென்னவென்றால், அதைப் பற்றி ஒரு விசாரணை நடத்துங்கள். போக்குவரத்துக் கழகத்தினர் எவ்வளவுக்கு வாங்கினார்கள், அந்த நிலத்திற்குப் பக்கத்திலிருந்த நிலங்கள் எப்போது, எவ்வளவு ரூபாய்க்கு விற்கப்பட்டன. அதன் விஸ்தீர்ணம் என்ன, விலை என்ன, என்பவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து அதற்குப் பிறகு ரெவின்யூ அதிகாரிகள் மூன்று லட்சத்திற்கு சிபாரிசு செய்தது சரிதான். போக்குவரத்துக் கழகத்தினர் வாங்கியது சரிதான் என்று சொன்னால், அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ரெவின்யூ இலாக்காவினர் சொல்வதை ஏற்றுக் கொள்வதா, எட்மண்ட் சொல்வதை ஏற்றுக்கொள்வதா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். எட்மண்ட் சொல்வதை நிச்சயமாக நம்ப வேண்டும். காரணம், இந்த நாட்டின் முன்னேற்றத்தில் எனக்கு அக்கறை, இணக்கம் உண்டு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** திரு. எட்மண்ட் வாங்கிக் கொண்டுவிட்டார் என்று சொன்னால், பாவம் நண்பருக்கு கெட்ட பேர் வந்து விடுமே என்பதால்தான் சொன்னேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்தக் கெட்ட பெயர் நிச்சயமாக எனக்கு வராது. நான் சொல்லும்போது அந்தப் பகுதி மக்களின் சார்பாகச் சொல்கிறேன். அங்கே உள்ள பொது மக்களைக் கேட்டுப் பாருங்கள். மூன்று லட்சம் கொடுத்தது நியாயம்தானா? ரெவின்யூ அதிகாரிகள் சிபாரிசு பண்ணியது நியாயம்தானா என்று அங்கே உள்ள மக்கள் ஏகோபித்த குரலில் சொல்வார்கள். அங்கே உள்ள மக்கள் கண்ணீர் வடித்து . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நண்பர் சொல்வது ஒரு வேளை 'மக்கள் சுயாட்சியில்' சரியாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கிற ஜனநாயக முறையில் அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 சனவரி 25

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அடிக்கடி ஒன்றைச் சொல்வார்கள். ஆட்சி வேறு--கட்சி வேறு நிர்வாகம் வேறு, கட்சி வேறு என்று அடிக்கடி சொல்வார்கள். நிர்வாகத்தில் தலையீடு அந்தக் காலத்தில் இருந்தது. ஆகவே அண்ணா அவர்கள் அதை சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு இருந்ததை விட இன்றைக்கு கூடுதலாக தலையீடுகள் நிர்வாகத்தில் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அண்ணா காலத்திலும் சரி, நான் முதலமைச்சராக இருக்கும்போதும் சரி கலெக்டரை மாற்ற வேண்டுமென்று தந்தி கொடுத்தது எட்மண்ட் தான்.

**திரு. க. உரொ. எட்மண்ட்**: தந்தி கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன்? தவறு நடந்தால் சுட்டிக்காட்ட வேண்டிய உரிமையும் கடமையும் சட்ட மன்ற உறுப்பினருக்கு இருக்கிறது. ஒரு அதிகாரி செய்கின்ற காரியம் நியாயமான முறையில் இல்லை என்றால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் அந்த உரிமை இருக்கிறது. ஆனால் ஒரு கட்சியின் வட்டச் செயலாளர் அல்லது மாவட்டச் செயலாளர் செய்கிறார் என்றால் அது தவறு. நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்ற வேண்டுமென்று நான்தான் முதலமைச்சருக்கு தந்தி கொடுத்தேன். ஏனெனில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைநகரத்தில் இருப்பதில்லை. எப்போதும் மணிமுத்தாறு, குற்றாலம் போன்ற உல்லாஸமான இடங்களில் இருந்து வருகிறார். மாவட்ட தலைநகரில் ஆட்சித்தலைவரைப் பார்க்க முடிவதில்லை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: நியாயமான விஷயமாக இருந்தால் தலையிடுவதற்கு உரிமை இருக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொள்கிறாரா?

**திரு. க. உரொ. எட்மண்ட்**: மாவட்ட ஆட்சித் தலைவர் தவறு செய்தால் அவரை மாற்றுவதற்கு அதிகாரமுள்ள முதலமைச்சருக்கு அதைச் சுட்டிக்காட்டினேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஒரு அதிகாரி தவறாக நடந்திருந்தால், அங்கே சட்ட மன்ற உறுப்பினர் அல்லது மாவட்ட செயலாளர் தலையிடலாம் என்ற உரிமையை தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா?



1974 சனவரி 25]

**திரு. க. உரொ. எட்மண்ட்**: இதில் நான் வேறுபட்ட கருத்து உடையவன். ஒரு அதிகாரி தவறு செய்கிறார் என்றால் சட்ட மன்ற உறுப்பினர் தலையிடலாம், ஏனென்றால் அவர் ஆட்சியின் ஒரு அங்கம். ஆனால் மாவட்ட செயலாளர் அப்படி அல்ல. அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்ல. அவர் ஒரு கட்சிக்குப் பிரதிநிதியே தவிர பொதுமக்களுக்குப் பிரதிநிதி அல்ல. சட்டமன்ற உறுப்பினர் தலையிடலாம். இன்றைக்கு என்ன நடக்கிறது? எந்த அதிகாரியைப் போய் பார்த்துக் கேட்டாலும், இதை செய்யக் கூடாது என்று வட்டச் செயலாளர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்று சொல்கின்ற அளவுக்கு நிர்வாகத்தில் தலையீடு இருக்கிறது. என்னுடைய தொகுதியில் சுகாதார அமைச்சர் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இரண்டு நிமிடத்தில் முடிக்கிறேன் என்று சொன்னீர்களே . . . தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்**: லாஸ்ட் பாயிண்ட். முடிக்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஆள்வார் திருநகரியில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திறப்பு விழா நடைபெற்றது. அதிலே சுகாதார அமைச்சர் கலந்துகொள்கிறார். சட்டமன்ற உறுப்பினர் பெயர் அதிலே கிடையாது. இப்போது எதிர்க் கட்சியாகி விட்டேன். ஆகவே, போட மாட்டார்கள். முன்பு ஆளுங் கட்சியில் இருந்தபோதே போடவில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: அதிலே, ஆளுங்கட்சி உறுப்பினர், எதிர்க் கட்சி உறுப்பினர் என்று பார்த்து போடுவது கிடையாது. அந்த விழாவை ஏற்பாடு செய்கிறவர்கள் தொடர்புடையவர்கள் பெயர்களைப் போடுகிறார்கள். சில சமயம் விடப்பட்டிருக்கலாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்**: ஆளுங்கட்சியா எதிர்க்கட்சியா என்பது அல்ல. ஆளுங் கட்சியிலேகூட எந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி**: என்னைக்கூட விட்டுவிட்டார்கள்.

[1974 சனவரி 25

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் பிரச்சினையைப்பற்றி ஏற்கெனவே உறுப்பினர் துரை கோவிந்தராசன் அவர்கள், தான் மருத்துவக் கல்லூரி நிகழ்ச்சிக்கு அழைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான்கூட அதுபற்றிக் கேட்டபொழுது மருத்துவ கல்லூரியில் அட்வைசரி கவுன்சில் என்ற கவுன்சில் இருக்கிறது என்றும், அந்த கவுன்சில்தான் இந்த ஏற்பாடுகளைக் கவனித்தார்கள் என்றும் அவர்களுக்கு தொடர்பு இல்லாத காரணத்தினால் அவரது பெயரைச் சேர்க்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. என்னுடைய பி.ஏ. மூலமாக எந்த எம்.எல்.ஏ. ஆக இருந்தாலும் வரலாம் என்று தெரிவிக்கப்பட்டு அழைக்கப்பட்டதற்குப் பின்னாலே கூட அவர் வரவில்லை. மருத்துவக் கல்லூரி நிர்வாக அதிகாரிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு ஏற்படக்கூடிய நிலைமை இல்லாததால்தான் அது விடப்பட்டது. ஆகவே அப்படி விடப்பட்டதைப் பற்றி சட்டமன்றத்திலே செல்வது அவ்வளவு பொருத்தமில்லை. என்று நான் கருதுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** எல்லா எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் அனுப்பப்படாமல் விடப்படுகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கோயம்புத்தூரிலே உறுப்பினர்கள் திரு. சுப்பிரமணியம், திரு. குமாரசாமி ஆகியவர்கள் எல்லாம் என்னோடு பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே உள்ளவர்களை அழைக்கவேண்டுமென்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிருவாக முறையிலே இப்படிப்பட்ட தொடர்பு சில பேர்களுக்கு இருக்கிறது, சில பேர்களுக்கு இல்லை. அதனால்தான் விடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இது அரசாங்க நிகழ்ச்சி. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை, அவருடைய பெயர் கூட அழைப்பில் போடப்படவில்லை. ஆனால் வட்டச் செயலாளர் பெயர் போடப்படுகிறது, மாவட்டச் செயலாளர் பெயர் மறக்காமல் போடப்படுகிறது. ஆளுங்கட்சியிலே உள்ள கட்சிக்காரர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையான மரியாதையைக் கொடுக்கத் தயங்குகிறார்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



1974 சனவரி 25]

***திரு. செ. கந்தப்பன் :** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் தாங்கள் மாநில சுயாட்சியை வலியுறுத்தவில்லை என்று சொல்லிவிட்டதற்குப் பிறகு நான் அதைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு மேற்கொண்டு விளக்கங்கள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள், அவற்றையொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

விலைவாசியேற்றத்தைப்பற்றி கடந்த காலத்திலே பல முறைகள் தெளிவான விளக்கங்கள் மாண்புமிகு முதல்வரால் தரப்பட்டன. நோட்டு நோட்டடிக்கிற உரிமையைப் பெற்றிருக்கிறவர் யாரோ, நோட்டு புழங்குகிற அல்லது நோட்டுப் புழக்கத்தை அதிகப்படுத்தக்கூடிய உரிமையைப் பெற்றிருக்கிறவர் எவரோ, அவர்களால்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற பொருளாதாரத் தத்துவத்தை திரு. எட்மண்ட் அவர்கள் அறியாதவர்கள் அல்ல.

இதுபோன்ற நிலைமையில் மாநில சுயாட்சி கேட்டால் அதைத் தன்னாட்சி அல்லது தனியாட்சி கேட்கிறார்கள் என்றும் சுயாட்சி அல்ல என்றும் திசை திருப்பக்கூடிய முறையிலே சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழகத்திலே உபரியாக உற்பத்தியாகின்ற சர்க்கரை, சிமெண்டு, நூல் போன்ற பொருட்கள்கூட பற்றாக்குறையாக இருக்கின்றன என்றால், அதற்குக் காரணங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் ஆயிரம் தடவைகள் மதிப்பிற்குரிய அமைச்சர் மாதவன் அவர்கள் அடுக்கடுக்காகக் காரணங்களைச் சொல்லி வருவதால் கூறியும்கூட அதைப்பற்றி மீண்டும் மீண்டும் சொல்லி ஈடுபடலாமே மக்களைத் திசை திருப்பக்கூடிய முயற்சிகளிலே, தமிழ்நாட்டைத் தவிர தமிழ்நாட்டிலே உள்ள தமிழர்களின் நலன்களை, தமிழ்நாட்டுடைய நலனைப் பாதுகாப்பதற்கு அது உகந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து இன்றைய தினம் மாநில சுயாட்சியை தமிழக அரசு தவறாகப் பயன்படுத்தும் என்ற வாதம் பேசப்படுகிற நிலையைக் கண்டு நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். தமிழர்களுடைய நலன் கருதி, தமிழ்நாட்டின் நலன்களைக் கருதி, டெல்லியிலிருந்து நாம் பெறவேண்டிய நியாயமான வரித் தொகையைப்

தலையீடுகள் எப்படி இருந்தன என்பதைக் காட்டுவதற்கு ஏற்ற 'கிளாஸிக் கேஸ்' என்று சொல்வார்களே அதைப் போன்று இருப்பதைக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஊழல் பட்டியலிலே, என்னுடைய மாமனார் தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்திலே கடன் வாங்கினார் என்று சொல்லியிருக்கிறார்கள். டில்லியில் கொடுக்கப்பட்ட முதல் குற்றச்சாட்டில், அந்த கடன் பூராவையும் வாங்கினார்; கள்ளுக்கடையிலே செலவழித்துவிட்டார்; எம்.எல்.ஏ.யின் செல்வாக்குப் பயன்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது குற்றச்சாட்டில் ஒன்றே முக்கால் லட்சத்திலே முக்கால் லட்சம் மட்டும் வாங்கிக் கொண்டு ஒரு லட்சம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்று கொடுத்து இருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் அரசு பதில் அளித்து இருக்கிறது. தொழில் வணிகர்கள் வாங்குகிற அதே அடிப்படையிலே கடனுக்காக அவர் விண்ணப்பம் போட்டது 19—5—1970. இரண்டு லட்சம் கடனைக் கேட்கப்பட்டது. அதற்கு செக்யூரிட்டி கேட்டார்கள், சொத்து, நிலம் மில் எல்லாம் காட்டப்பட்டது.

இதைத் தக்க அதிகாரிகள் பரிசீலித்து மொத்த மதிப்பீடு 2,86,699 ரூபாய் என்று போட்டார்கள். அதன் அடிப்படையில் 75 சதவீதம் தரலாம் என்று ஒன்றே முக்கால் இலட்சத்தைக் கடனைத் தர ஒத்துக்கொண்டு 25—8—1970-ஆம் தேதி அனுமதி செய்தார்கள். கடலை எண்ணெய் தொழில் செய்யும் அவர் விண்ணப்பம் போட்டிருந்தபொழுது இருந்த நெருக்கடியிலேயிருந்து மீண்டுவிட்டதால் கடன் அனுமதிக்கப்பட்டபொழுது அதை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை. அந்த வங்கியிலிருந்து 15—9—1970-ஆம் தேதியன்று கடிதம் வந்தது பணத்தைப் பெறச் சொல்லி. ஆனால் அவர் பணத்தைப் பெறவில்லை. பிறகு 22—1—1971-ஆம் தேதியில், 25—2—1971-க்குள்ளே கடனைப் பெற வேண்டும். இல்லையென்றால் அதை மறுபடியும் வழங்க முடியாது என்ற தகவலைக் கொடுத்தார்கள். பிறகு 23—2—1971-ஆம் தேதியன்று 64,550 ரூபாயைப் பெற்றுக்கொண்டார்கள். 4—6—1971 அன்று 6,000 ரூபாய் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. 3—9—1971 அன்று 4,000 ரூபாய் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மிச்சப் பணத்தை



வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். வியாபார நிலைமை சீர்பட்டு விட்டதால் இன்னும் தான் கடனாளியாக வேண்டியதில்லை என்று வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு அனுமதிக்கப்பட்ட கடனை வேண்டாமென்று புறக்கணித்து, தன்னுடைய தேவைக்காக கொஞ்சம் எடுத்து தொழில் செய்த ஒருவரை அக்கிரமம் செய்தார், வேறொருவர் செல்வாக்கை பயன்படுத்தினார் என்று கொஞ்சம்கூட கூச்சமற்று, மனச்சாட்சியில்லாமல் பேசினார்கள், எழுதினார்கள், இன்றைக்கும் பேசுகிறார்கள் என்றால், மாண்புமிகு தலைவரவர்களே, எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்குக் கொஞ்சம் பாதுகாப்பு கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது எந்தளவு மறைமுகமாகத் தாக்குவதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அண்ணா பெயரையும், கலைஞர் பெயரையும் அநாவசியமாக இழுத்து, ஒரு ஜப்தி செய்த விவரத்தைச் சொல்கிறார்கள். அது ஒரு சுவையான விவரம். ஆர்.கே. ஆயில் மில் என்று சேலத்திலே துவாரகா ஹோட்டலுக்குப் பக்கத்தில் மார்க்கெட்டிங் பகுதியில் 4 எக்கர் நிலத்தில் ஒரு மில்லை நடத்துகிறார்கள். நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னாலேயே, நான் அவருக்கு மருமகனாக ஆவதற்கு முன்னாலேயே, காங்கிரஸ் கட்சி ஆளுங் கட்சியாக இருந்த காலத்திலேயிருந்து சுமார் 18 அல்லது 20 ஆண்டுக் காலமாக அத்தகைய பெருந் தொழிலை நடத்தி வருமான வரி கட்டிக் கொண்டிருப்பவர் என்னுடைய மாமனார் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆர். கே. ஆயில் மில் என்ற அந்த நிறுவனம் ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டியோடு—சேலத்திலேயிருக்கும் சொசைட்டியோடு—24—8—1968-ம் தேதியிலிருந்து 19—9—1970-ம் தேதி வரையில் வியாபாரம் செய்த வகையில் 5.28,878 ரூபாய் கொடுக்கப்பட வேண்டியதில் 4.80.000 ரூபாய் கொடுக்கப்பட்டு மிச்சம் 48,000 ரூபாய் பாக்கியிருந்திருக்கிறது. இது சம்பந்தமாகக் கணக்கு வழக்குகள் இரு தரப்பிலும் தீர்க்கப்படவில்லை. இதற்கிடையில் ஆர்பிட்ரேஷன் கேஸ் என்று, டெப்டி., ரெஜிஸ்தார், சேலம் அவர்களிடம் கூட்டுறவு சங்கத்தினர் 8—4—1971-ல் கொடுத்திருக்கிறார்கள். இந்த கேஸ் பதிவானவுடன்

[திரு. செ. கந்தப்பன்] [1974 சனவரி 25

பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வது சர்வ கட்சியினருடைய கடமை, தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகின்ற அத்துணை பேர்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசு தவறு செய்கிறார்கள் என்றால் ஐந்தாண்டுகளுக் கொருமுறை மக்கள் பெற்றிருக்கிற வாக்குரிமையைப் பயன்படுத்துவார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இப்படிப் பட்ட அடிப்படை அரசியல் காரணங்களை மறந்துவிட்டு, மக்களைத் திசை திருப்புவது நம்முடைய மாநில நலனை வெகுவாகப் பாதிக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்னை குறித்தும் அதிகமாகப் பேசிவருகிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்களுக்கு ஒரு மணி நேரம் தாராளமாக வழங்கியிருக்கிறீர்கள்; எனக்கு குறைந்தது அரை மணி நேரமாவது வழங்கவேண்டுமென்று தலைவர் அவர்களே தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றும் சரி, நேற்றும் சரி, அதற்கு முன்பும் சரி திரும்பத் திரும்பக் கூறப்படுகிற ஒன்று ஊழல். மாக்கியவெல்லி என்பவன் அரசியல் சாகஸத்திலே அரசியல் தந்திரத்திலே திறமை வாய்ந்தவன் என்பதைப் பற்றியெல்லாம் நூல்களைப் படித்து, தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட மாக்கியவெல்லிக்குத் தெரியாத தந்திரம், திறமை இவையெல்லாம் சில பத்திரிகைகாரர்களுக்கு, எதிர்க்கட்சிக்காரர்களுக்குத், தமிழகத்திலே தெரிந்திருக்கிறது; அதை அவர்கள் சாமர்த்தியமாகக் கையாள்கிறார்கள் என்பதை பார்த்து நான் வேதனைப்படுகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு 'மக்கள் குரல்' என்ற பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். எட்டிலே வந்த செய்தியும் சரி, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதிலும் சரி, யார் சம்பந்தப் பட்டவர் என்று தெரிவிக்கவில்லை, பேசவில்லை. பெயரைப் போடாமலேயே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். யார் அவர் என்பதை யூகித்துக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே விட்டுவிட்டிருக்கிறார்கள். 'புதிய ஊழல்' என்ற தலைப்பிலே ஒரு பரபரப்பான தலைப்பைப் போட்டு தீரே. தாப்பட்டிருப்பதை தங்களுடைய அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.



1974 சனவரி 25] [திரு. செ. கந்தப்பன்]

"தமிழ்நாட்டில் அண்ணா காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை கருணாநிதி காலத்தில் ரத்து செய்யப்பட்ட புதிய ஊழல் பற்றி மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஏற்கனவே ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்ட ஊழல் பட்டியலில் உள்ள ஒருவருக்குத்தான் இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை மத்திய அரசு அதிகாரிகளிடையே திகைப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நபர் ஒரு எம்.எல்.ஏ.யின் மாமனார், வாரியத் தலைவர் என்ற பதவியையும் வகிக்கும் இந்த எம்.எல்.ஏ.யின் மாமனாரைப்பற்றி எம்.ஜி.ஆர். கொடுத்த ஊழல் பட்டியலில் புகார் கூறப்பட்டது. இவ்வாறு புகார் இருக்கும்போதே அவருக்கு புதிய சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நபருக்குச் சொந்தமான ஆயில் மில் ஒன்றுக்கு கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி நிலக்கடலை சப்ளை செய்த வகையில் லட்சக்கணக்கில் பாக்கி இருந்தது. மூன்று ஆண்டுக் காலம் பணம் கொடுக்காமல் சால்ஜாப்பு கூறி வந்த இந்த ஆசாமி மீது நடவடிக்கை எடுக்க அப்போது முதலமைச்சராக இருந்த அண்ணா உத்தரவிட்டார். அதன்படி ஆயில் மில் யந்திரங்கள் எல்லாம் கூட்டுறவு மார்க்கட்டிங் சொசைட்டியினரால் பிரித்து எடுத்துக்கொண்டு போகப்பட்டது. இதற்கிடையே அண்ணா மறைந்து கருணாநிதி ஆட்சி ஏற்பட்டது. கருணாநிதி ஆட்சி தலையிட்டதால் பறிமுதல் செய்யப்பட்ட யந்திரங்கள் எல்லாம் திருப்பிக் கொடுக்கப்பட்டன. மார்க்கெட்டிங் சொசைட்டி செலவில் யந்திர சாதனங்கள் பொருத்திக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு சலுகை அளித்து இத்தனை ஆண்டு ஆகியும் நிலக்கடலை சப்ளை செய்த வகையில் உள்ள லட்சக்கணக்கான ரூபாய் பாக்கி திருப்பிக் கொடுக்கப்படவில்லை" என்று போடப்பட்டிருக்கிறது.

இன்னொரு பகுதி பின்னாலே வருகிறது, அதற்கு நான் பிறகு வருகிறேன். நான் மிகச் சாமர்த்தியமாக என்று சொல்வதற்குக் காரணம், வாரியத் தலைவரின் மாமனார், எம்.எல்.ஏ.யின் மாமனார் என்று போட்டவர்கள் இன்னும் ஒரு வரி சேர்த்து கந்தப்பன் என்று பெயரையும் போட்டிருக்கலாம். அப்படிப் போடுவதற்கு அவர்களுக்குத் துணிவில்லை. நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன், என்னுடைய மாமனார், நான் அந்த வழக்கு என்ன என்பதைப்பற்றிப் பேசுகின்ற கட்டம் வந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் அரசியல் குறுக்கிடுகள்,

காலத்திலேயோ, அண்ணா அவர்கள் காலத்திலேயோ நடந்தது அல்ல, நான் சொன்ன தேதிகளிலிருந்து நீங்கள் அந்தக் காலத்தை நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் நான் செய்த ஒரே ஒரு தவறு என்னவென்றால், அசையாச் சொத்துக்கள் அட்டாச்மெண்ட் செய்யப்பட்டபோதே அரசிடம் முறையிடாதததுதான், அந்தத் தவறைத்தான் நான் செய்தேன். இத்தோடு பிரச்சினை முடியவில்லை என்னுடைய மைத்துனர்—பி.யூ.சி. படிக்கின்ற இளைஞர்—சேகர் என்ற இளைஞரும், அங்கேயிருந்த ஒரு எழுத்தரும் போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டார்கள். தொடர்ந்து இப்படிப்பட்ட கொடுமைகள் நீடித்ததால் நான் மாண்புமிகு முதல்வரவர்களின் கவனத்திற்கு இப்படிப்பட்ட நிலவரங்களைச் சொன்னேன். பிறகு அவர்கள் விசாரித்து, அந்த இயந்திரங்களைத் திருப்பிக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். தவறு திருத்தப்பட்டது. ஆனால் தவறுக்குக் காரணமாக இருந்தவர்கள்மீது என்ன நடவடிக்கை என்பதை ஆராய வேண்டுமென்று முதல்வரவர்களின் கவனத்திற்குத் தெரிவித்தேன். நிச்சயமாக அதைக் கவனித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் மைத்துனர்மீது தொடரப்பட்ட வழக்கு பிறகு வாபஸ் வாங்கப்படவில்லை. குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல், குழியையும் பறித்ததைப்போல், டிகிரி ஆகாமல் சிவில் வழக்குகளுக்குள்ளே நுழையக்கூடாது என்று இருந்தும் காவல் துறையினர் அதில் நுழைந்தார்கள்.

'Immovable property attachment ex parte and movable property attachment again ex parte'

எல்லாமே ஒவ்வொரு கட்டத்திலும், சட்டத்திற்குப் புறம்பாக நடந்துள்ளது. இவ்வளவுக்குப் பிறகும் கணக்கு வழக்குகள் தீர்க்கப்படவில்லை. சேலத்திலே போடப்பட்ட வழக்கும் காவல் துறையிலிருந்து தள்ளுபடி செய்யப்படவில்லை. பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தில்

Criminal Miscellaneous petition was filed under Section 561 (a) of the Criminal Procedure Code.

இதற்காக இங்கே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.





வேண்டுமென்றே அபாண்டமாக வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்கிற வாதத்தை உயர்நீதிமன்ற நீதிபதி ஏற்று, கீழே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தது தவறு என்று கீழேயிருந்த வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

(நண்பகல் 12.00)

உங்களுக்கு இதை நம்புவது கடினமாக இருக்கும், எனக்கும் கடினமாக இருக்கிறது. என்னுடைய குடும்பத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஆக, யார், எங்கே தலையிட்டு என்பது ஒருவேளை அரசுக்குத்தான் தெரியும். நிர்வாகத் துறை ஏன் இப்படி நடந்து கொண்டது என்பது ஒருவேளை அரசுக்குத் தெரிந்திருக்கலாம். தெரியாமலும் இருக்கலாம். அப்படி இருக்கும்போது இப்படி ஒரு அபாண்டத்தைப் போட்டு பாதிக்கப்பட்ட ஒருவனை மேலும் களங்கப்படுத்துகின்ற சூழ்நிலையை மக்கள் மத்தியில் உண்டாக்கினால், இந்த விபரீதத்தைத் தொடர்ந்து அனுமதிக்க போகிறோமா? இதற்கு மேல் இருக்கும் விவரங்களுக்குப் போக விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புவேன்.

இது தொடர்பான விஷயங்கள் அரசின் கவனத்தில் ஏற்கனவே இருக்கிற காரணத்தால் அதைக் குறித்து நான் பேசவிரும்பவில்லை. பத்திரிகையிலிருந்து சுட்டிக்காட்டுகிற நண்பர்கள், பத்திரிகையில் இதை எழுதுகிற நண்பர்களுக்கு ஒரு கடமை இருக்கிறது. யாரைப் பற்றி எழுதுகிறார்களோ, அவர்களுக்கு இந்தத் தகவல்களைக் கேட்டு அனுப்ப வேண்டுமென்ற நாகரிகத்தை நம்முடைய ஏடுகள் கடைப்பிடிப்பதில்லை. அதை எடுத்துக் கொண்டு வந்து சொல்லுகிற உறுப்பினர்களும் அது சரியானதுதானா என்று சரிபார்த்துச் சொல்லுகிற பெருந்தன்மையை மேற்கொள்வதில்லை. நான் ஏராளமாகச் சொல்ல வேண்டுமென்றாலும் அருமைத் தலைவர் நேரம் இல்லை என்று சொல்லுகின்ற காரணத்தால் ஒன்றைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் தலைமை)

குற்றச்சாட்டுகளைக் கல்வியில் ஆரம்பித்து கல்வியில் கொண்டு வந்து முடித்திருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கருங்கல்லைப் போலவுக்கவை விசித்திரமான ஒரு நிலைமை இருக்கிறது. அதைப்

இங்கே சொல்லப்படும் என்னுடைய மாமனார், 20—10—1971-ல் கணக்குகளைத் தனக்குத் தரவேண்டுமென்றும் பதில் தர வாய்ப்பிருக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் கணக்குகள் தரப்படவில்லை. எந்த விசாரணையும் நடத்தப்படவும் இல்லை. ஜட்ஜ்மெண்ட் தராமலேயே 14—12—1971-ல், 'attachment before judgement ex parte' என்ற அடிப்படையில் சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அசையாச் சொத்துக்களை 14—12—1971-ல் அட்டாச் செய்திருக்கிறார்கள். எதற்காகச் செய்கிறோம் என்று சொல்லவில்லை. நான் ஆளுங் கட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்; அங்கே இருப்பது என்னுடைய மாமனார்; இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் தான் நிர்வாகத்தை நடத்துகிறது. கூட்டுறவுத் துறையிலே தான் எடுத்திருக்கிறார்கள். டெப்டி-ரிஜிஸ்தார் ஆஃப் கோவாப்பரேட்டிவ், சேலம் நடவடிக்கை எடுத்திருக்கிறார். 'attachment before Judgment நடந்திருக்கிறது. எதற்காக அட்டாச்மெண்ட் செய்திருக்கிறீர்கள் என்று கேட்கப்பட்டதற்குக்கூட தஸ்தாவேஜ் எதுவும் தரவில்லை.

இந் நிலையில் மார்ச் 13-ம் தேதியன்று விசாரணைக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. 17—3—1972-ம் தேதியில் கேஸ் போட்டிருப்பதாகவும், அதற்காக தஸ்தாவேஜோடு வர வேண்டுமென்றும் என்னுடைய மாமனாருக்கு 13—3—1972-ல் ஒரு நோட்டீஸ் வழங்கப்பட்டது, 17-ம் தேதியன்று அவர் வரவேண்டுமென்று வழங்கப்பட்டது. ஆனால் அதற்கிடையில் 15—3—1972-ல் டெப்டி ரிஜிஸ்த்தார் ஆஃப் கோவாப்பரேடிவ் என்பவர் மீண்டும் எக்ஸ் பார்ட்டியாக—ஏற்கனவே அசையாச் சொத்துக்களை ஜப்தி செய்துவிட்டார்கள்—அசையும் சொத்துக்களையும் எக்ஸ்-பார்ட்டியாக 'அட்டாச்' செய்து, எந்த ஆர்டரும் தராமல், 13—3—1972-ல் நோட்டீசைக் கொண்டுவந்த கதவில் ஒட்டிவிட்டு, காசி விஸ்வநாதன் என்ற சேல்ஸ் ஆபீசரும், வேறு அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களும், மார்க்கெட்டிங் சொசைட்டி செயலாளரும், ஹெட் கிளார்க்கும் அங்குள்ள வேறு சில அலுவலர்களும் அவர்களுக்குத் துணையாக இருந்து . . . . (மணியடிக்கப்பட்டது) உட்காருங்கள் என்று சொன்னால், நான் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. இதை ஒரு பெர்சனல் எக்ஸ்பிளனேஷனாகக் கூட நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் நேரத்திலேதான் பேச வேண்டும் தவிர, தனியாக நேரம் கொடுக்க முடியாது.

**திரு. செ. கந்தப்பன் :** மன்னிக்க வேண்டும். பெர்சனல்-எக்ஸ்பிளனேஷன் கொடுக்கக்கூட உரிமையில்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 12 மணிக்குள் முடித்து விடுங்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நான் அந்த அடிப்படையில் உட்காருவதாக இல்லை. நீங்கள் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் கட்டுப்படுகிறேன். வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற அமைச்சர்களிடத்திலே கொடுத்து சொல்லச் சொல்லுங்கள். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் நேரத்தைதான் கொடுக்க முடியுமே தவிர, தனியாக கொடுக்க முடியாது. உங்கள் சப்ஜெக்டிலே பேசுங்கள். இதில் நேரத்தைச் செலவழிக்க வேண்டாம்.

**திரு. செ. கந்தப்பன் :** அங்கே அந்த அதிகாரிகளுக்கு உடந்தையாக போலீஸ் இலாக்காவிலிருந்து 3 சப்-இன்ஸ்பெக்டர்களும், ஒரு இன்ஸ்பெக்டரும், 20 ரிசர்வ் போலீசாரும் வந்திருக்கிறார்கள். பகல் 1½ மணியிலிருந்து அங்கேயிருந்த சொத்துக்கள், அசையும் சொத்துக்கள் ஜப்தி என்று இருந்தாலுங்கூட அசையாச் சொத்துக்களையும் சேர்ந்து மெஷின் போன்றவற்றை எடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரவு 7 அல்லது 7½ மணிவரையில் இந்தக் காரியம் நடந்திருக்கிறது. ஆறு மணிக்கு மேல் ஜப்தி எடுக்கக் கூடாது என்பார்கள். ஆனால் 7 மணிக்கு இரண்டு லாரிகளில் சாமான்களைக் கொண்டு போயிருக்கிறார்கள். இது சட்டத்திற்குப் புறம்பானது மட்டுமல்ல.

'Machineries are permanently fixed to earth and they are immovable property, as decided by the High Court'.

என்றே நான் அறிகிறேன். இப்படி ஒரு அக்கிரமம் அங்கே நடந்தது மட்டுமல்ல, இது நடந்ததைத் தொடர்ந்து அரசின் கவனத்திற்கு அது கொண்டுபோகப்பட்டது. இந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல் கலைஞர் அவர்கள்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** இன்னும் ஆறு பேர் பேசவேண்டும். தலைவர்கள் எல்லாம் பேசவேண்டும்; இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** முடிக்கப் போகிறேன். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் பழி தூற்றுகிற காரணத்தால் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அல்லது அவர்களுடைய குடும்பத்தினர் நிர்வாகத்தால் தவறாக பாதிக்கப்படுகிற சில நேரங்களில் கவனிக்கப்படாமலே விடப்படுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. எனவே, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் பற்றிப் பேசும்போது ஆதார பூர்வமாகப் பேச வேண்டுமே தவிர, அருள்கூர்ந்து மண்ணை வாரித் தூற்ற வேண்டாம், மண்ணை வாரித் தூற்றுகின்ற முறையில் அரசியல் லாபம் கருதி யார் பேசினாலும் தவறு.

இந்தப் பிரச்சினை குறித்து தலைவர் அவர்களே—சபாநாயகர் இல்லை; என்றாலும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்--நியாயத்தைப் பெறுவதற்காக இந்த மூன்று பிரச்சினைகளையும் இங்கே சுட்டிக்காட்டினேன். நான் சொல்லியிருக்கும் மூன்று பிரச்சினைகளிலும் அரசிடத்தில் இருந்து நியாயத்தை எதிர்பார்க்கிறேன். ஆதாரங்கள் தேவைப்பட்டால் தரத் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஐயப்பாடு இருக்குமானால் ஆதாரம் தரத் தயாராக இருக்கிறேன். சபாநாயகர் விசாரிக்கட்டும். அரசு விசாரிக்கட்டும். சர்வகட்சித் தலைவர்கள் விசாரிக்கட்டும். அல்லது எந்த விசாரணையாக—ரகசிய விசாரணையாகவோ, பகிரங்க விசாரணையாகவோ இருக்கட்டும். எப்படிப்பட்ட விசாரணைக்கும் தயாராக இருக்கிறேன். அருள் கூர்ந்து நாணயம் உள்ளவன், ஒழுக்கம் உள்ளவன் அரசியலில் வாழமுடியாது என்ற நிலைமையைத் தொடர்ந்து உருவாக்கக் கூடாது என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இங்கு மேதகு ஆளுநர் அவர்களால் இந்தச் சபையிலே கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்தை நான் சொல்ல முன்வந்துள்ளேன்.



ஆளுநர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே இந்த நாட்டிலே இருக்கின்ற பலமுக்கியப் பிரச்சினைகளைப்பற்றி அணுகாமல் ஏதோ ஒரு சில பிரச்சினைகளைப் பற்றி மட்டும் அணுகி அவர்களுடைய உரையை முடித்திருக்கிறார்கள். சாதாரணமாக பட்ஜட் கூட்டத் தொடர் ஆரம்பத்திலே ஆளுநர் அவர்களுடைய உரையின்போது அவர்களுடைய அறிக்கையிலே அடுத்து வரும் ஆண்டிலே செய்யப்பட இருக்கிற கொள்கைகளை எல்லாம் ஓரளவு தெளிவாக விளக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி விளக்கியிருப்பார்களேயானால், அதன்பேரில் உறுப்பினர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களை வைத்துக் கொண்டு இதற்குப் பின்னாலே இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட இருக்கும் பட்ஜட்டிலே ஏதாவது சிறிது மாறுதல்களைச் செய்வதற்கான வழிவகைகள் இருக்குமா என்பதை அடிப்படையாக கொண்டுதான் பட்ஜட் கூட்டத்திற்கு முன்னால் ஆளுநர் உரை என்ற ஒன்றை வைத்து உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்டுக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் இங்கு கொடுத்திருக்கிற உரை, ஒரு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட உரையாக இருக்கிறதே தவிர, குறுகிய காலத்தில் அதாவது அடுத்த ஆண்டு அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாக எதுவும் இதில் குறிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். அடுத்து வரக்கூடிய பட்ஜட்டில் என்னென்ன காரியங்களைச் செய்யப்போகிறோம் என்பதை ஓரளவிற்கு இதில் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

இன்று மத்திய அரசால் தயாரிக்கப்பட்டிருக்கிற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து 2,250 கோடி ரூபாய்க்கு மேல் புதிதாக வரிவகைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்து கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய்க்கு மேல் புதிதாக வழிவகை காணவேண்டிய ஒரு நிலையில் நாம் இருக்கிறோம். ஆனால் இன்றுள்ள நிலையில் புதிய வரிகள் ஏதாவது வர இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி ஓரளவிற்கு குறிப்பிட்டு இதில் தெரிவிக்கப்பட்டிருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படி இந்த வரி வகைகள் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி தெளிவாகக் கருத்துக்கள் இங்கு கூற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அதுபற்றி இதில் குறிப்பிடப்படாதது வருந்தத்தக்கதாகும்.

பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 17—8—1971-ம் ஆண்டில் என்னுடைய உறவினர்—மைத்துனர், மாமனார் அல்ல— எஸ். ஆர். ஆசைத்தம்பி என்பவர் தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு சர்வே நம்பர்களில் இரண்டு கற்குன்றுகளை அரசிடத்திலிருந்து இனமாக அல்ல; குத்தகையாக அல்ல; ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள். தமிழகத்தில் நாலைந்து ஆண்டுகளாக ஆந்திர மாநிலத்தவரும், மைசூர் மாநிலத்தாரும் அதிகமாக ஈடுபட்டிருக்கும் தொழிலில் முதல்முறையாக தமிழர்கள் ஈடுபட்டு ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள். 17—8—1971-ல் இரண்டு கற்குன்றுகள் ஏலத்தில் எடுக்கப்பட்டு தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக அதைப் பல தொழில்களுக்குப் பயன்படுத்துகிறார்கள்; ஏற்றுமதி செய்கிறார்கள். மேலும் குத்தகைக்குக் கற்குன்றுகள் பல மாவட்டங்களில் பலருக்கு வழங்கப்படுகிறது என்று தெரிந்து அவர்களும் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, அந்த நிறுவனத்தின் சார்பில் சில விண்ணப்பங்களைப் போட்டிருக்கிறார்கள். அதன்படி நாலைந்து குன்றுகளைக் கேட்டு ஒன்று மட்டும் கிடைத்திருக்கிறது. வேறுபல குன்றுகள் கிடைக்கவில்லை. பிறகு மீண்டும் மூன்று குன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளுக்காக மறுபடியும் இரண்டாவது தடவையாக விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். அதன்மீது இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. 1973-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதியன்று—ஏறத்தாழ மூன்று நான்கு குன்றுகள் கேட்டதில் ஒன்று மட்டுமே தரப்பட்டு மீத முள்ளவை போக்குவரத்து நிறுவனத்தை நடத்துகிற ஒருவருடைய குடும்பத்தாரைச் சேர்ந்தவர்கள் பெயரிலும் வேறு சில பெயர்களிலும் ஏராளமான கற்குன்றுகள் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவந்தது. பின்னர் வேறு சில குன்றுகளைக் குத்தகைக்காக இரண்டாவது தடவையாக அனுமதி கேட்டபோது அதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர்களுடைய 'ஃபேவரை'ப் பெற அல்ல என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஒருவருக்கு நியாயம் கிடைக்கவில்லை என்ற நிலையில், சம்பந்தப்பட்ட தொழிலமைச்சர் அவர்களிடத்தில் பிரச்சினையைச் சுட்டிக்காட்டினேன். அதிலே அவர்கள் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்று நம்புகிறேன். பல கட்டங்களில் நான் அறிந்த வரையில் நியாயம் இருக்கிறது, ஏற்கனவே ஏலத்தில் எடுத்துச் செய்கிறார்கள் என்ற முன்னுரிமை உள்ளது. வேறு பல பேருக்குப் பல்வேறு மாவட்டங்களில் எல்லாக்



கட்சிக்காரர்களுக்கும் குன்றுகள் தரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் அவருக்குத் தரப்படலாம் என்று எல்லோரும் கருதினாலும் ஏதோ காரணத்தால் தொடர்ந்து அவருக்கு மட்டும் கிடைக்கவில்லை. ஆரம்பத்தில் 'பாதை தகராறு—அது தீர்ந்தபிறகு கிடைக்கும்' என்று சொல்லப்பட்டது. பின்னர் 'சட்டச் சிக்கல் இருக்கிறது. அதைப் பற்றி விளக்கம் கேட்டிருக்கிறோம். சிக்கல் தீர்ந்த பிறகு கிடைக்கும்' என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் சொல்லப்பட்டது. பின்னர் 'உங்களுக்குக் கொடுப்பதை ஆட்சேபிக்கிறார்கள், ஆட்சேபனை தீர்ந்த பிறகு கிடைக்கும்' என்று சொல்லப்பட்டது.

விண்ணப்பத்தைப் போட்டு ஆறு மாதங்கள் கழித்து—மார்ச் மாதத்தில் போடப்பட்ட விண்ணப்பத்திற்கு செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் 'இது சம்பந்தப்பட்டவர்கள் அனுமதி இல்லாமலே ஒரு இடத்தில் கல்லை உடைத்தார்கள்' என்று வழக்கு ஜோடிக்கப்பட்டு அதன்மீது ஏன் அபராதம் போடக்கூடாது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. பத்திரிகையில் சொல்லப்பட்டது போன்ற அபராதம் அல்ல; உங்கள் சமாதானம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். நோட்டீசுக்குச் சமாதானம் தரப்பட்டிருக்கிறது, பதில் தரப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அரசிடத்தில் முறையீடு வைத்திருக்கிறோம். மார்ச் மாதத்தில் விண்ணப்பம் கொடுக்கிறார். ஆறு மாதங்கள் பேசாமல் இருந்துவிட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு கேஸ் ஜோடிக்கப்பட்டு நோட்டீஸ் வருகிறது. இதிலிருந்தே உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும். அரசுக்கு உண்மை நிலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை.

இதற்கிடையில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அபாண்டமாக என் மாமனார் பெயரைக் குறிப்பிட்டு 'சில மாதங்களுக்கு முன்னால் தர்மபுரி மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் பத்து, பதினைந்து இடங்களில் தவறான முறையில் கல்லை உடைத்து எடுத்திருக்கிறார்கள்' என்று முதல்வருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். முதல்வர் அவர்கள். கட்சிக்காரன் பற்றி இருக்கும் காரணத்தால் உண்மை தெரிய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார். அரசு பதிலைப் பெற்றிருக்கக்கூடும். (மணி அடிக்கப்பட்டது)

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 சனவரி 25

இந்த நாட்டில் இருக்கிற நிலப் பிரச்சினைபற்றி ஒன்றும் இதில் குறிப்பிடப்படவில்லை. அடுத்து நம் பொதுத் துறையில் ஏதாவது தொழில்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றனவா என்பது பற்றியும் இதில் குறிப்பிடப்படவில்லை. அத்தியாவசியப் பண்டங்களின் விலையேற்றம் பற்றியும் எதுவும் இதில் குறிப்பிடப் படவில்லை. இம்மாதிரி நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினை எல்லாம் ஒதுக்கிடு வைத்துவிட்டு கொண்டுவர இருக்கும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி--இம் மாநிலத் திற்குத் தனியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிற ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இந்தச் சபை தனியாக விவாதிக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக, நாடு பூராவிலும் மின்சாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற கருத்து மத்தியிலும் இருக்கிறது, மாநிலங் களிலும் இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு திட்டத் திலும் அதில் அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். இது அடுத்த ஆண்டில் முடியக்கூடிய காரியம் அல்ல. ஐந்து, பத் தாண்டுகள் நடக்கக்கூடிய காரியங்கள் பற்றி இதில் விவரிக்கப்பட் டிருக்கிறது.

சென்ற ஆண்டு மின்சாரப் பற்றாக்குறையினால் நாட்டில் எந்தளவிற்கு தொழில் மந்தம் ஏற்பட்டது, விலையேற்றப் பிரச்சினை, வேலையில்லாத நிலை இவை எல்லாம் நாட்டில் ஏற்பட்டதை உணர்ந்திருக்கிறோம். பருவமழை பெய்யும் இந்தக் காலத்திலேயே இந்த 15 சதவிகிதம் மின் வெட்டு வைத்துக்கொண்டிருக்கிறோம். கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் நமக்குப் போதிய அளவு மின்சாரம் அவர்கள் கொடுத்திருக்கிற இந்தக் கட்டத்தில் கூட 15 சதவிகிதம் மின் வெட்டை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்றால் வருங்காலத்தில் இந்த ஆண்டுச் சொச்சப் பகுதியில் கோடைகாலத்தில், பருவமழை இல்லாத நேரத்தில் நீர்தேக்கங்களில் தண்ணீர் இல்லாத நேரத்தில் எந்த அளவிற்கு மின்வெட்டு வரும் என்று எதிர்பார்த்து காரியங்கள் செய்திருக்கவேண்டும்.

சென்ற ஆண்டு மாதிரி இந்த ஆண்டும் 75 சதவிகிதம் மின் வெட்டு கொண்டு வந்து தொழில் துறையில் மோசமானதொரு நிலையை ஏற்படுத்த அரசு அனுமதிக்க இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே குறுகிய காலத்தில், பின்னால் பற்றாக்குறை ஏற்படுமானால் அதைத் தவிர்ப்பதற்கு



974 சனவரி 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

சென்ற ஆண்டு ஏற்பட்ட சிரமங்கள் ஏற்படாமல் இருக்கக்கூடிய அளவிற்கு, முன்கூட்டியே குறுகிய கால நடவடிக்கையாக அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் இந்த உரையில் குறிப்பிடப்படவில்லை. அது தெரிவிக்கப் படவேண்டும்.

இன்று கிராமங்களில் உள்ள தெருக்களுக்கெல்லாம் மின் விளக்குகள் போடப்பட்டு அவை பிரகாசமாக எரிவதைப் பற்றி மிக அதிகமாக இந்த அரசு வலியுறுத்திக்கொண்டு வருகிறது. கிராமங்களிலுள்ள மக்கள் மின்சக்தியால் ஏற்படுகிற மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமென்பதில் எந்தவிதக்கருத்து மாறுபாடும் இல்லை. ஆனால் நம் வசதி, பண வசதிக்கேற்ற முறையில் திட்டமிட்ட முறையில் காரியங்கள் செய்ய வேண்டும். ஒரு பக்கத்தில் நூற்றுக்கணக்கான கிணறுகளுக்கு மின் வசதிகள் அளிக்கப்படாமல் இருக்கும்போது கிராமங்களில் உள்ள தெரு விளக்குகளுக்கு நாம் மின்சாரம் வழங்கி விட்டோம் என்று பெருமைக்காகச் சொல்லிக் கொள்ளக்கூடிய அளவிற்கு மின்கம்பிகளை இழுத்து தெருவிளக்குகளுக்கு மின்சாரம் வழங்குவது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

உற்பத்திப் பெருக்கைப் பற்றியும் நாம் எண்ணவேண்டும். கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும்போது அந்தக் கிராமத்தில் எவ்வளவு பம்ப் செட்கள் இருக்கின்றன, அப்படி மின்சாரம் வழங்குவதினால் உற்பத்தி பெருகுமா என்பதைக் கருத்தில் கொண்டு மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டுமே தவிர, தெரு விளக்குகளுக்கு மட்டும் லைனை இழுத்து விடுவதில் பணத்தை முடக்குவது சரியல்ல. ஆயிரக்கணக்கான பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். ஆகவே அதில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாசன வசதி பொறுத்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருக் கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே பாசன வசதி விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தியதன்மூலம் அதிகப்படியான நிலங்களுக்கு பாசன வசதி ஏற்பட்டு அதன் காரணமாக நமது உணவு சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டு நாம் ஒரு உபரி மாநிலமாக இருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் மேலும் பாசனத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ்நாட்டில் மொத்தத்தில் 73 லட்சம் ஹெக்டர் சாகுபடி நிலங்கள் இருக்கின்றன. ஆனால் இதுவரையில் 35 லட்சம் ஹெக்டர் நிலங்களுக்குத்தான் பாசன வசதி கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட 38, அல்லது 40 லட்சம் ஹெக்டர் நிலங்களுக்கு பாசன வசதி மேலும் அளிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் இந்தக் குறுகிய காலத்தில், ஐந்தாறு ஆண்டுகளில் எந்தளவிற்கு நிலங்களுக்கு பாசனவசதிகளை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒரு லட்சம் ஹெக்டருக்கு மேல் நாம் பாசன வசதியை அதிகப்படுத்தியது கிடையாது.

ஆக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாகத்தான் இதைச் செய்யமுடியுமே தவிர, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் செய்வதற்கு வாய்ப்பில்லையென்று ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த அளவிற்கு சிறிய பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள் என்று பார்த்தால் இன்னும் அதிகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அதிக நிதி, போதிய நிதி வசதி செய்திருக்க வேண்டும். வருங்காலத்தில் அதற்கு போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும். சென்ற ஆண்டு ஒன்பது கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்காக காத்துக் கொண்டிருந்தது. மூன்று கோடிக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆறு கோடி ரூபாய்க்கு மேலான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் கையில் இருக்கிற திட்டங்களுக்காக அடுத்துவரும் நிதி ஆண்டிலாவது நிச்சயமாக அவற்றிற்கு அனுமதி வழங்கி அந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எல்லாம் அமலுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியேற்றம் பற்றி, இன்ப்ளேஷன் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்கு அரசு சொல்கிற காரணம் மத்திய அரசுதான் விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் என்று சதா சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு மட்டுமல்ல, மாநில அரசும் சேர்ந்துதான் காரணம் என்று நாங்கள் இங்கே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மின்பற்றுக்குறை காரணமாக விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் மான்யம் ஆயில் பம்ப் செட்களுக்கு வழங்க அரசு



முன்வந்தது. அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் எந்தளவிற்கு அதைப் பயன்படுத்தக்கூடியவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒரு பகுதி உபயோகப்படுத்தாதவர்களுக்கு கிடைத்திருக்கிறது என்பது அனுபவத்தில் தெரிய வருகிறது.

இம்மாதிரி மின் தட்டுப்பாடு இருக்கும் நிலையில் இந்தப் பம்பு செட்டுகளை வைத்து இருந்தால் நாட்டில் எப்படி உற்பத்தி அதிகமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு இலக்கு என்று வைத்து விட்டால் அந்த இலக்கை எப்படி வேண்டுமானாலும் அடைந்து விடவேண்டுமென்று நினைத்தால், விலையேற்றம், இன்பிலேஷன் தான் வரும். அந்த மாதிரி இல்லாமல் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட பம்ப செட்கள் எந்த அளவுக்கு உபயோகப்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அந்த மாதிரி உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அவற்றை சரியான வகையில் உபயோகிக்கச் செய்யவேண்டும். நாம் டார்க்கட் 1,000 என்று வைப்பதற்குப் பதிலாக 500 என்று வைத்து கூடச் செய்யலாம் ஆனால் அந்த 500-ம் பயன்படத்தக்க வகையில் இருக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்கலாம். உபயோகிக்காதவர்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எங்கே கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் தனியாக அமைச்சரிடத்தில் அதைப் பற்றித் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நோக்கில் அரசு தரப்பைச் சார்ந்தவர்கள், மத்திய அரசு, மாநில அரசை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறது, தமிழகம் புறக்கணிக்கப்பட்டு விட்டது, ஆகவே, மாநில சுயாட்சி வேண்டுமென்று நேரடியாகவே பேசியிருக்கிறார்கள். ஒன்றை நான் இங்கே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். தமிழகத்திற்கு மத்திய அரசு இதர மாநிலங்களுக்கு அளித்துள்ள சலுகையை விட அதிக

சலுகையைத் தான் அளித்து கவனித்து வந்திருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். இதை நான் சாதாரணமாகக் குறிப்பிட வில்லை. தெரிந்து கொண்டு தான் சொல்கிறேன்.

பொதுவாக தமிழகத்திற்குத் தேவையான உரம் 3.15 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் என்றால், அதில் 70 சதவிகிதம் உரத்தை மத்திய அரசு நமக்குக் கொடுத்து இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு 2.3 இலட்சம் டன் உரம் வழங்கியிருக்கிறது. ஆனால் இதர மாநிலங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் அவர்களுடைய தேவையில் 30 சதவிகிதம், 40 சதவிகிதத்துக்கு மேல் எந்த மாநிலத்திற்கும் வழங்கியதாகத் தெரியவில்லை. இன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையில் வந்தது. உ.பி.-யில் தேர்தல் வந்ததால் அங்கே கொண்டுபோய் போட்டு விட்டார்கள் என்று பேசப் பட்டது. அவர்களுடைய தேவை 5½ லட்சம் டன் என்றால் அவர்களுக்குக் கொடுத்து இருப்பது 1.80 இலட்சம் டன் தான். பொதுவாக 30 சதவிகிதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்திரிக்கையில் வந்திருக்கிறது. இப்படி நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் நாட்டில் ஒட்டு மொத்தமாகப் பற்றாக்குறை இருக்கிறது என்று பார்க்கவேண்டுமே தவிர, மத்திய அரசு இந்த மாநிலத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுக்கவேண்டு மென்ற ஆர்வத்தில் கேட்பது வேறு, நம்முடைய மாநிலம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது, மாற்றாந்தாய் பிள்ளைபோல் செய்கிறது என்ற எண்ணத்தை வளர்த்து, இங்கே சுயாட்சி வலியுறுத்துவதற்காகச் செய்யும் பிரசாரம் சரியல்ல, அது தவறு என்று நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். உரங்கள் சரியான முறையில் வினியோகிக்கப்பட வில்லை. அது உண்மைதான். தமிழகத்திற்குக் கொடுக்கப்பட்ட உரத்தில் ஒரு பகுதி வெளி மாநிலங்களுக்குத் திருட்டுத்தனமாக கொண்டு செல்லப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய அரசால் முடியவில்லை. தடுத்து நிறுத்தும் அதிகாரம் நம் கையில் தான் இருக்கிறது. மத்திய அரசின் கையில் இல்லை. அதோடு இந்த உர வினியோக இயந்திரம் சரியாக இயங்கவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஒரு கேள்வி நீங்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளி மாநிலங்களுக்குச் சென்றது என்று சொல்கிறீர்கள். எங்கே சென்றது என்று சொல்ல முடியுமா? வினியோக இயந்திரம் சரியாக இல்லை என்று சொல்கிறீர்கள். எப்படி வினியோகம் செய்ய வேண்டும்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லவில்லை. லாரி எங்கே போகிறது என்பதை நான் பார்த்துச் சொல்ல முடியுமா? நீங்கள் தான் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் கேட்டதில் 70 சதவிகிதம் கிடைத்து இருக்கிறது. விவசாயிகளின் தேவையை 70 சதவிகிதம் பூர்த்தி செய்து இருக்கவேண்டும். ஆகவேதான் சொல்கிறேன். டிஸ்டிரிப்யூஷனில் தப்பு நடந்து இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, வினியோகத்தைப் பொறுத்தவரையில் டிஸ்டிரிக்ட் கவுன்சிலில் வைத்து வினியோகிக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழு இருக்கிறது. அதிலே அக்ரிகல்சுரல் அதிகாரிகள், மாவட்டக் கலெக்டர் ஆகியோர் இருக்கின்றனர். மாவட்டத்திற்கு எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து, எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு ஏக்கருக்கு இவ்வளவு உரம் என்று அங்கே பயிர் செய்யப்படும் தூரத்தைப் பொறுத்து வினியோகிக்கப்படுகிறது. அப்படி வினியோகிக்கப்படுவதும் கூட்டுறவுத் துறையின் மூலம்தான் வினியோகிக்கப்படுகிறது. அவர்கள் சொல்கிற 70 சதவிகிதம் பொதுக் கோட்டாவிற்குக் கிடைக்கவில்லை. மத்திய சர்க்கார் பொதுக் கோட்டாவில் கொடுப்பது 33-1/3 சதவிகிதம்தான். மீதி 66-2/3 சதவிகிதம் அவர்கள் தனியாரிடத்தில் கொடுக்கிறார்கள். அந்தத் தனி ஏஜெண்டுகள் வெளி மாநிலத்திற்கு அனுப்பலாம். அதைக்கட்டுப் படுத்த நம்மால் முடியவில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அமைச்சரவர்கள் வெளிக்கோட்டாவில் கொடுக்கப்படுவது போகலாம் என்று சொல்கிறார்கள். தனியாரிடத்தில் உரம் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசிடத்தில் சொல்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. அதை

இப்பொழுதுதான் மத்திய அரசு சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். ரசாயன உரம் வேண்டிய அளவு தர முடியாது என்று காரணத்தினால் அப்படிச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அதை விவசாயிகள் ஒத்துக்கொள்வார்களா என்று புரியவில்லை என்று தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அது கட்டாயம் நல்லது.

ஆர்கானிக் மென்யூரை அபிவிருத்தி செய்வதற்கு நாம் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ரசாயன உரத்தைப் போட்டு நம்முடைய தலைமுறையை தள்ளிவிடலாம். ஆனால் 20 வருஷம் கழித்து நம்முடைய சந்ததியார் வரும்பொழுது ஒன்றுமே இல்லாத பூமியாகப் போய்விடும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு பூச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். இயற்கை உரங்களையும், தழை உரங்களையும் வேகமாக விவசாயிகள் கைக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நில சீர்திருத்தச் சட்டத்தை நாம் இங்கே கொண்டு வந்து அமுலாக்கிக் கொண்டிருக்கிறோம். இதனை ஒட்டி நாம் பல சட்டங்களை கொண்டுவந்திருக்கிறோம். நில உச்ச வரம்புச் சட்டம், குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம், பப்ளிக் டிரஸ்டு ஆக்ட், நியாய வாரச் சட்டம், குடியிருப்பு மனைச் சட்டம், குத்தகைதார் நில உரிமை அளிப்புச் சட்டம் இப்படி பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். இவ்வளவு சட்டங்களைக் கொண்டு வந்த பின்பும் நாட்டில் உள்ள நிலைமை என்ன என்றால், யார் யார் பெரிய நிலக்காரர்கள் டிரஸ்டுகளை வைத்திருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களும் அந்த நிலங்களை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, நமது முதல் அமைச்சர் அவர்களிடத்தில் இந்த விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் அதைப்பற்றி அறிக்கை வந்திருக்கிறது. என்ன தெரிகிறது என்றால், பல கோவில்களிலும் நிலங்களை பினாமியாக வைத்துக்கொண்டு அந்த சொத்துக்களை உண்மையான குத்தகைதார்களுக்கு கொடுக்காமல் அவர்களை நேரிடையாக வைத்துக்கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களை வைத்து சாகுபடி செய்கிறார்கள், பினாமி டிரான்சாக்



ஷன்ஸ் மிக அதிகமாக இருக்கின்றன. இது மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டது தானே? நாம் ஏற்படுத்திய சட்டம்தானே? நாம் இந்தச் சட்டங்களை சரிவர அமுல் நடத்துவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்திருக்கிறோம்?

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹைபவர் கமிட்டி ஒன்றை அமைத்து எந்த அளவுக்கு இந்தச் சட்டங்கள் அமுலாகியிருக்கின்றன என்பதை கவனித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் கமிட்டி ஏதோ ஒரு தடவை மாத்திரம் கூடியது என்று நினைக்கிறேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சட்டத்தை சுலபமாக இயற்றிவிடலாம். இயற்றப்பட்ட சட்டம் ஒழுங்காக அமுல் படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றி கவனித்து, ஒழுங்கான முறையில் அமுலாக்குவதற்கு, சாதாரண மக்களுக்கு, எளியோர்களுக்கு பயன்படுவதற்கான முயற்சி செய்யப்படவில்லை. ஏழைகளுக்காக சட்டம் செய்து விட்டோம், பல நல்ல காரியங்களைச் செய்து விட்டோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் பலன் இல்லை. சட்டத்தினுடைய பலன் சாதாரண மக்களுக்கு, பாமர மக்களுக்கு கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு கிடைக்கிறதா என்று பார்த்து, அப்படிக் கிடைக்கின்ற வகையில் அமுல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் சம்பந்தமாக ஜாயின்ட் செக்டார் பற்றி ரொம்ப அதிகமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தினமணி கதிரில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதில் ஜாயின்டு செக்டரை சிலாகித்து இந்த நாட்டில் ஒரு பெரிய சமதர்ம சமுதாயத்தை உண்டாக்கும் என்ற கருத்தை அதில் கூறியிருக்கிறார்கள். ஜாயின்டு செக்டார் சமதர்மத்தைக் கொண்டுவரும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: அப்படிப்பட்ட ஒரு வார்த்தை கூட கிடையாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து**: மத்திய சர்க்காரில் கூட ஜாயின்டு செக்டாரை ஓரளவுக்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 'ஃபார் தி டைம் பீயிங்' தற்காலிகமாக, தொழில் அபிவிருத்திக்கு சில காரியங்களைச் செய்யவேண்டும் என்று ஒத்துக்கொண்டிருக்

வழ்புறுத்துங்கள். இருப்பினும் மத்திய சர்க்கார் தனியாருக்குக் கொடுத்ததையும் இன்ன விதத்தில் வினியோகிக்க வேண்டுமென்று சொல்கிற அதிகாரம் நமக்கு இருக்கிறது. மாநில அரசு அதை ஏன் அனுமதிக்கிறது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நாங்கள் அனுமதிக்கவில்லை. கட்டுபடுத்துவதற்கு, நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. பொதுக் கோட்டாவில் கொடுக்கப்படுவதை மாவட்டக் கலெக்டரிடத்தில் கொடுத்து இன்னின்ன பயிர்களுக்கு இன்னின்ன அளவுக்கு உரங்கள் கொடுங்கள் என்று சொல்லிவிடுகிறோம். அந்த முறையில் வினியோகம் செய்யப்படுகிறது. ஆனால் தனியாருக்குக் கொடுக்கப்படும் உரத்தை அந்த மாதிரி செய்ய முடியவில்லை. அவர்கள் யார் யாருக்கோ கொடுத்து விட்டு ஏதோ கணக்கு எழுதுகிறார்கள். அவர்கள் ரூ. 50 வாங்குகிறார்களா, ரூ. 100 வாங்குகிறார்களா என்று எங்களுக்குத் தெரியவில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அவர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லையென்றால், எசன்சியல் கம்மாடிடிஸ் ஆக்டின் கீழ் அதைக் கொண்டுவந்து வினியோகம் செய்யும் பொறுப்பை அரசு ஏன் மேற்கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்குத்தான் அதிகாரம் கேட்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இருக்கிற அதிகாரத்தைப் பயன் படுத்த வில்லை என்பதுதான் எங்களுடைய வருத்தம்.

அடுத்ததாக, பெஸ்டிசைட்ஸ். இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன ? நைட்ரஜன் உரத்தை அதிகமாகப் பயன்படுத்துங்கள் என்று விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து உபயோகத்தில் கொண்டு வந்து விட்டோம். இந்த மாதிரி அதிகப்படி உரங்கள் உபயோகித்தால் பூச்சிகள் அதிகமாக வந்து விடுகின்றன. ஆனால் பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்கவில்லை. பி.எச்.ஸி. 10 கிடைக்கவில்லை. அது வெளி மாநிலத்திலிருந்து வருவது அல்ல. நம்மாநிலத்திலேயேதான் உற்பத்தி செய்யப்படுகிறது. விவசாயிக்குத் தேவையான நேரத்தில் தேவையானவற்றைக் கொடுப்பதற்கு இந்த அரசில் இயந்திரம் கிடையாது. நாம்



எவ்வளவுதான் சிறந்த முயற்சிகள் எடுத்தாலும் இம்மாதிரியாக காரியங்கள் நடப்பதால் சரியான பலனை அடைய முடியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடம் ஆகிறது. இன்னும் 5 நிமிடங்களில் முடித்து விடுங்கள். இன்னும் 6 பேர் இன்றைய தினம் பேசுவதற்குப் பெயர் கொடுத்து இருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் பேசுவதற்காக 25 பாயிண்டுகள் வைத்து இருக்கிறேன். இது வரையில் 3 பாயிண்ட் தான் முடித்து இருக்கிறேன். தயவு செய்து பேசுவதற்கு எனக்கு எவ்வளவு நேரம் உண்டோ அவ்வளவு நேரத்தையும் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெஸ்டிசைட்ஸ் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் மூலமாக அதிக மூலதனம் போட்டு இதைச் செய்யலாம். என்ன காரணத்தால் அதைச் செய்ய வில்லை என்று எனக்குத் தெரியவில்லை. இந்த பெஸ்டிசைட்ஸ் அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் விரைவில் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 12-30)

நம்முடைய பூச்சாரம் குறைந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மறந்து விடுவதற்கில்லை. நம்முடைய காலத்தில் இயற்கை உரத்தை உபயோகப் படுத்தாமல், வெறும் ரசாயன உரத்தையே உபயோகித்தால், பின்னால் இயற்கையான பூச்சாரம் குறைந்து கொண்டே போவது நீடித்துக்கொண்டே போகும். பூமி பிற் காலத்தில் ஒன்றும் சத்தும் இல்லாத சாரம் இல்லாத பூமியாகப் போய் மோசமான நிலை ஏற்பட்டு விடும். இன்றைக்கு கஷ்ட காலத்திலும் ஒரு நல்ல காலம். மத்திய அரசுக்கு ஒரு நல்ல எண்ணம் வந்திருக்கிறது. மாநில அரசின் கவனத்திற்கும் அதைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மதிப்பு மிக்க தொழில் அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபொழுது மத்திய அரசின் சார்பில் நடந்த ஒரு கூட்டத்தில் இயற்கை உரங்கள் அதிகப்படுத்தவேண்டும் என்று

னேன். எல்லா மாநில அமைச்சர்களும் நமக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற கடனுக்கு ரிபைனான்ஸ் ஃபெஸிலிடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் 7½ லட்சம் அல்ல, 7 கோடி ரூபாய் ஒரு ஆண்டுக்குக் கொடுக்கிற வாய்ப்பு நமக்கு இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஆகவே, மத்திய அரசினிடம் கேட்டு அந்தச் சங்கடத்தைப் போக்கிக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தொழில்கள் வளரவேண்டும் என்று நாம் சொல்கின்றபொழுது பாக்டரீஸ் ஆக்ட் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். நண்பர் சுரேந்திரன் அவர்களை இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வைப்பீர்களானால், நான் நாளைக்கே திருத்தம் கொண்டு வருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் சொல்வது பாக்டரீஸ் ஆக்ட், அதாவது ஜன்னல் பக்கம் ¼ அங்குலம் குறைந்தால் அப்ரூவல் கொடுக்க மாட்டேன் என்றால், எப்படி தொழிலை ஆரம்பிப்பது? 12"-க்கு 11¾" இருந்தால், ஆசாரி செய்கிறபொழுது குறைவு ஏற்பட்டிருக்கும், அதற்குக் கூட அப்ரூவல் கொடுக்க மாட்டேன் என்ற சாதாரண விஷயங்களில்கூட அதிகாரிகள் கடுமையாக இருந்து, எழுத்துக்கு எழுத்து வரிக்கு வரி படித்து அதன்படி இருக்கவேண்டுமென்றால், ஏதோ தொழில் வராமல் பண்ண வேண்டும் என்ற நிலைமை தான் ஏற்படும். இந்த நிலைமை இருப்பதைத் தான் நடைமுறையில் காண்கிறோம். இதெல்லாம் போகவேண்டும்.

அடுத்து, மத்திய அரசு நமக்கு வேண்டிய நிதி உதவிகளையெல்லாம் கொடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு. மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் நமக்கு போதிய அளவு கொடுக்கவில்லை என்ற ஒரு கருத்து பேசப்படுகிறது. மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதில் எனக்கு ஒரு கருத்து மாறுபாடும் இல்லை. நீங்களும் கேளுங்கள். நாங்களும் சேர்ந்து கேட்கிறோம். அது வேறு விஷயம். ஆனால் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று சொல்வது தவறு, அது பிரிவினை எண்ணத்தைத் தூண்டிவிடும் என்ற காரணத்தினால் நான்





அதை எதிர்க்கிறேன். ஆறாவது நிதிக் குழு சிபாரிசில் கிராண்ட்ஸ்-இன்-எய்ட் இல்லை. ஐந்து ஆண்டுகளுக்குக் கிடையாது. போன திட்டத்தில் இருக்கிறது. இந்த திட்டத்தில் இல்லை என்று சமீபத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஏழு மாநிலங்களுக்குக் கிடையாது. வளர்ச்சியுற்ற மாநிலம் என்ற காரணத்தால். தமிழ் நாடு மாத்திரமல்ல, மற்ற பல மாநிலங்களும் இருக்கின்றன. தொழில்கள் ஆரம்பிப்பதில் பின்தங்கிய மாநிலங்களில் கவனம் செலுத்தலாம். நமது மாநிலத்திலேயும் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும். ஆனால் பின்தங்கிய மாநிலத்திற்கென்றால் அதை எதிர்ப்பதற்கில்லை.

மத்திய அரசு நெய்வேலி 2-வது சுரங்கத்தை அமைக்கப் போவதாக தீர்மானம் போட்டு பத்திரிகையில் அறிக்கை வந்திருந்ததைப் பார்த்தேன். மத்திய அரசு ஒத்துக்கொண்டு விட்டது என்று பத்திரிகை செய்தி வந்தது. இப்போது ஒத்துக் கொள்ளவில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். எது உண்மை எனக்குப் புரியவில்லை. எனினும், நமது மாநில தொழில் வளர்ச்சிக்கு நெய்வேலி 2-வது சுரங்கம் வெட்டுவது தேவை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை. இதைப் பற்றி ஆளுநர் உரையில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இது தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சினை. ஒரு பக்கத்தில், முதலாளிகள் வேண்டுமென்றே கூறுகிறார்கள் என்று கூறுவார்கள். கூடியவரையில் முதலாளிகள்-தொழிலாளிகள் பிரச்சினையை தவிர்ப்பதற்கான முயற்சியை அரசு செய்ய வேண்டும். என்னிடத்தில் அதிகாரம் இல்லை என்பதைவிட, கூடிப் பேசி பார்க்க வேண்டும். உற்பத்திப் பெருக்கத்திற்காக இந்தக் காரியத்தை செய்யவேண்டும்.

சிம்சன் பிரச்சினை ரொம்பப் பெரிய விஷயம். அதைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாதென்றாலும் அந்தப் பிரச்சினையை நாள் கடத்திக்கொண்டு போவது என்பது நல்லதல்ல. தேசத்தின் பாதுகாப்புக்கான பல சாதனங்களை அங்கே எஞ்சினியரிங் யூனிட்டில் செய்கிறார்கள். எனவே, அந்தத் தொழிற்சாலை அமைதியாக நடந்தால்தான் நாட்டில் பல காரியங்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இருக்கும். பழி வாங்கப்பட

கிறார்கள். ஜாயிண்டு செக்டார் இந்தக் காலத்தில் கொண்டுவர வேண்டும் என்று சொல்லவும் முடியாது. சாதாரணமாக எல்லா மனிதர்களுக்கும் உழைக்காமல் பணம் பண்ணவேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த எண்ணம் ஏற்பட்டால் சமதர்ம சமுதாயம் நாட்டில் ஏற்படாது. இந்த எண்ணத்தை விட்டு, உழைக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

கம்யூனிஸ நாட்டில் சோஷலிஸம் இருக்கிறது. கம்யூனிஸம் இல்லை. கம்யூனிஸம் இருந்தால், அரசாங்கமே இருக்காது என்பது தான் மார்க்ஸ் லெனின் சொன்னது. காந்திஜி ராமராஜ்யம் என்று சொன்னார். அரசாங்கம் எங்கு இருக்கிறதோ அங்கு சோஷலிஸம் நடக்கிறது. எல்லோரும் உழைக்கவேண்டும். தனியார் அதிகமாக சம்பாதித்து அப்படியே எல்லாவற்றையும் சாப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டும் என்ற எண்ணத்தை தடுத்துக் குறைக்கவேண்டும். அதை வேகமாகச் செய்யவேண்டும் சில பேர்கள் அதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள், போராட்டம் நடத்துகிறார்கள். ஜாயிண்டு செக்டார் என்பது தற்காலிகமாகத்தான். என்றுமே நிலையாக இருக்க முடியாது ஜாயிண்ட் செக்டார். ஜாயிண்டு செக்டாரினால் நாட்டிலே சோஷலிசத்தை ஏற்படுத்திட முடியும் என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளாததைப் பற்றி நான் பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் தொழில்கள் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதைப்பற்றி பார்க்கவேண்டும். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் பொறுத்த வரையில் ஸிட்கோ என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி நாட்டில் சிறு தொழில் வளர்ச்சி அடைவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் 4, 5 தினங்களுக்கு முன்பு பதில் சொல்லியிருக்கிறார்கள்.

1972-73-ம் ஆண்டுக்கு என்று நான் கருதுகிறேன். ஸிட்கோ மூலம் கடன் வழங்கியது. சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு கடன் வழங்கியது ரூ. 7 லட்சத்து சொச்சம். ஒரு ஸ்தாபனம் ஒரு ஆண்டில் ரூ. 7 லட்சம் தான் கடன் கொடுக்க முடிந்தது என்றால் எந்த அளவுக்கு சிறு தொழில்கள் வளர்ச்சி அடைந்து இருக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.





அரசுத் துறையில் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் நேரடியாக லோன் கொடுக்கிறார்கள். இதிலே இருக்கிற சிக்கல் சாதாரண தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு இருக்கிற மனப்பான்மை. ஏதோ வியாபாரத்தில் லாபம் வருகிறது, இப்படி ஒரு சாமானை வாங்கி அப்படி விற்றால் போட்ட முதல் வந்துவிடுகிறது. அந்த மாதிரி எண்ணம் அதிகமாக வளர்ந்துகொண்டிருப்பதால்தான் இண்டஸ்ட்ரீஸ் வளரவில்லை. அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அவர்கள் படுகின்ற தொல்லைகள் ரொம்ப அதிகம். அரசாங்க உதவி வெகுவாக கிடைக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். உதவி வெகுவாக கிடைக்கவேண்டும். ரூ. 5,000, 10,000 வைத்துக்கொண்டு அரசாங்கம் உதவி செய்கிறது என்ற விளம்பரங்களை பத்திரிகையில் பார்த்துவிட்டு, உதவி தேடி வந்தால், முதலே போய்விடுகிறது. முதலே போய்விட்டு உட்காரக் கூடிய நிலைமை பல பேர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி நிலைமை ஏற்படக்கூடாது. அப்படியிருந்தால் சிறு தொழில் வளராது.

அரசாங்க உதவி சுலபமாகக் கிடைக்கும்படிச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கஷ்டம் எனக்குத் தெரியும். நான் ஒரு தொழில் நடத்தி பெரிய நஷ்டப்பட்டவன். ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்றால், அதற்கு லேபர் ஆபீசர், பாக்டரி இன்ஸ்பெக்டர், ஹெல்த் ஆபீசர் போன்றவர்கள் முட்டுக் கட்டை போடுகிறார்கள். அவர்களுடைய அப்ரூவல் வந்து விட்டால் ஒரு பெரிய காரியத்தை சாதித்துவிட்டது போல் ஆகிறது. சிரமம் இல்லாமல் அவர்களுக்கு அப்ரூவல் கிடைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதிகாரம் ஏன் கேட்கிறோம் என்று இது வரையில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அருமையான வாய்ப்பு சொல்வதற்கு, அதற்காகத்தான் சொல்கிறேன். ஸிட்கோ வாரியத்தின் மூலம் நாம் கொடுக்கின்ற பணத்தைப் பொறுத்த வரையில் நம் மாநிலம்தான் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், உண்மை என்னவென்றால், அந்த வாரியம் ஆரம்பித்த காலத்திலிருந்து அப்படியிருந்தாலும் கூட, அந்த வாரியத்தின் மூலம் பொதுமக்களுக்குக் கொடுக்கிற பணத்தைத் திருப்பி ரிசர்வ் பாங்கு கொடுக்கிற அதிகாரம் நமக்குத் தரப்படவில்லை. அதாவது ரிபைனான்ஸிங், நேற்று முன்தினம் மகாநாட்டில் இதைச் சொன்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 சனவரி 25

மாட்டார்கள் என்று கூறப்பட்டது. இருந்தும் சில தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை என்று தெரிகிறது. எப்படியாவது தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பச் செய்கின்ற முயற்சிகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் லஞ்சம் இல்லாமல் எந்த காரியமும் நடப்பதில்லை. வசதியானவர்களுக்கு இது ஒரு பெரியதல்ல. ஆனால் சாதாரண மக்களுக்கு முடியாது. ஒரு சிறு காரியத்திற்கும் பணம் கொடுக்காமல் காரியம் நடக்காது என்ற முறை வளர்ந்திருக்கிறது. அதைத் தடுப்பதற்காக முயற்சி செய்யவேண்டும்.

பரமக்குடியில் ஒரு கோவபரேடிவ் ஸ்டோர், ஸ்டோர் என்று பேரளவுக்கு இருக்கிறது, வியாபாரம் ஒன்றும் செய்யவில்லை, சீனி வாங்கி விற்பதைத் தவிர. அந்த ஸ்டோர் நிர்வாகி கள்ள மார்க்கெட்டில் அதிகமாக ஈடுபடுவதாக கூறப்பட்டது. அது சம்பந்தமாக கூட்டுறவு அமைச்சரிடம்—அவர் இப்போது அவையில் இல்லை—கொடுத்தேன். அதிலே போதிய கவனம் செலுத்தி, கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அருப்புக்கோட்டையில் 2 பஸ்காரர்கள் அடித்துக்கொண்டு, கடைசியில் துப்பாக்கிச் சூடு நடைபெற்று ஒருவர் இறந்தார் என்று பார்க்கிறோம். போலீஸ் அத்து மீறலால் அது நடந்ததாக தெரியவருகிறது. இறந்தவர் குடும்பத்திற்கு நிதி உதவி அளித்ததாக அறிகிறோம். ஆனால் யார் பக்கத்தில் கஷ்டம்-நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதோ, சம்பந்தப்படாமலிருந்தார்களோ, அவர்கள் மீதுதான் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது போடப்பட்டிருக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பேப்பரில், தஞ்சையில் ஒரு டெபுடி தாசில்தாரை மிரட்டி, நான்கைந்து பேர்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட, சர்க்கார் அதிகாரிகளுக்கு பந்தோபஸ்து இல்லை என்ற நிலைமை ஏற்படாமல் தகுந்த நடவடிக்கை எடுத்து அம்மாதிரி தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.



1974 சனவரி 25]

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அரை நூற்றாண்டு காலமாக தமிழ் சமுதாயத்திலிருந்த சமூக இழிவுகளை நீக்குவதற்காகவும், பகுத்தறிவுப் புரட்சி ஏற்படவேண்டுமென்று காரணத்திற்காகவும் இந்த நாட்டிலே உழைத்து கடைசி வரையிலே சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தமிழகத்திலே ஒரு சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய தந்தை பெரியார் அவர்களின் மறைவுக்கு நமது மேதகு ஆளுநர் ஆரம்பத்திலேயே இரங்கலைத் தெரிவித்ததற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரையின் ஆரம்பத்திலே சென்ற ஆண்டு பருவ மழை தவறியதன் காரணமாக நீர்நிலைகளில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால், சென்ற ஆண்டு மின்வெட்டை கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட நிலையைத் தொடர்ந்து 55 சதவிகித மின் வெட்டு ஏற்பட்ட நிலையினை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே இருக்கின்ற விவசாய நிலத்திலே 40 சதவிகிதம் தான் இன்று பாசன வசதி பெற்றிருக்கிறது. மீதி 60 சதவிகிதம் இன்னும் பாசன வசதி பெறாத நிலையிலிருக்கிறதைக் காண்கிறோம். தமிழக அரசு வேளாண்மைத் துறையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி மேலும் 60 சதவிகிதம் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற எதிர் காலத்தில் நாம் தீட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் கூடியவரையில் புதிய நீர்ப்பாசன திட்டங்களை அமைப்பது என்ற முறையில் அமைந்தால் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். அப்போது தான் நீர்ப்பாசன வசதி பெறுகின்ற நிலப்பரப்பை அதிகப்படுத்தமுடியும், அந்த முறையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று இங்கே பேசிய ஒரு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது, ஆளுகின்ற கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே கூட, கடைசியில் தங்கள் தொகுதியில் பல்வேறு காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற பட்டியலை போட்டுக் காட்டினார்கள். இதிலேயிருந்து இந்த நாட்டில் ஒன்றுமே செய்யப்படவில்லை என்பது தெரிகிறது என்ற முறையிலே ஒரு பழைய காங்கிரஸ்காரர் பேசினார். மனிதனின் சமுதாயத்

தேவைகள் எண்ணற்றவை. அவற்றிற்கு என்றும் முற்றுப்புள்ளி வைத்துவிட முடியாது. அறிவியல் துறையில் வளர வளர, தேவைகள் அதிகரித்துக்கொண்டே போகும். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களின் குறைகளையும் தேவைகளையும் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே தேவைகளைச் சொல்கிறார்கள். அதனால் இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்பதல்ல. அந்த அளவுக்கு மக்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தான் பொருள். எனவே, சட்ட மன்ற உறுப்பினர்கள் இன்னென்ன வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே தான் அந்தக் குறைகளை இங்கே சுட்டிக் காட்டுகிறார்கள் என்பதைத் தவிர, வேறல்ல என்பதை அந்த உறுப்பினருக்கு மிகப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் பேசிய திரு. ஏ. எம். ராஜா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவருடைய தொகுதி என்னுடைய தொகுதிக்கு பக்கத்திலிருப்பதால், நீர்ப்பாசன நிலை பற்றி அவர் கூறிய ஒன்றை நான் இங்கே மீண்டும் வலியுறுத்திக் கூற கடமைப் பட்டிருக்கின்றேன். எங்கள் பகுதியில் அரசன் கோட்டை தடப்பன் ஏரி 200 ஆண்டுகளுக்கு முன்னிருந்து நீர்ப்பாசன வசதி அளித்து வருகிறது. அதிலிருந்து நீர்ப்பாசன வாய்க்கால்கள் பல வெட்டப் பட்டிருக்கின்றன. அவைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. ஒரு சிறு வெள்ளம் அல்லது சிறு மழை வந்தாலும் அந்த வாய்க்கால்களில் உடைப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் எண்ணற்ற கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாக ஏற்படுவதால் தண்ணீர் வீணாகாம லிருக்கவும், உடைப்பு ஏற்படாமலிருக்கவும் அந்த வாய்க்கால்களை சீரமைக்கின்ற பணியை வருகிற நிதிநிலை அறிக்கையில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தமிழ்நாட்டில் 6½ லட்சம் பம்ப் செட்டுகள் இருக் கின்றன. இந்திய உபகண்டத்திலேயே மொத்தம் 18 அல்லது 19 லட்சம் பம்ப் செட்டுகள்தான் இருக்கின்றன. ஆக, மொத்தத்தில் 3-ல் ஒரு பங்கு பம்ப் செட்டுகள் தமிழ்நாட்டிலிருக்கின்றன. இன்னும் எண்ணற்ற விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து பம்ப் செட்டுகள் வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்து கொண் டிருக்கின்றன.



புள்ளிவிவரங்களைப் பார்த்தால் இவர்களுக்கு எல்லாம் நாம் எதிர்காலத்தில் மின் இணைப்புக் கொடுக்க முடியுமா என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. நாம் கொடுத்திருக்கின்ற மின் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டாலும் கூட அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நமக்கு மின்பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும். அதற்காகத்தான் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதும், அதன் மூலம் ஆயிரம் மெகாவாட் உற்பத்தி யாகக்கூடிய அனல் மின்நிலையத்தை ஏற்படுத்தவும் மிகவும் அவசியமாகும் என்கிறோம். உடனடியாக இவற்றை ஏற்படுத்தினால் தான் எதிர்காலத்தில் நாம் ஓரளவாவது நம்முடைய மின்சாரத் தேவையைச் சமாளிக்க முடியும்.

அது விவசாயத்துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும் நம்முடைய எதிர்கால மின்சாரத் தேவையைக் கருத்திற்கொண்டு நாம் போட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற மத்திய அரசு முன்வந்தாகவேண்டும்.

கல்பாக்கம் அணுமின்நிலையத்தை எடுத்துக்கொண்டால் 1971-72-லேயே அதில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் 1975-76-லே கூட அது கிடைக்குமா என்கிற ஐயப்பாடு வந்துவிட்டது. அப்படி நமது மாநிலத்தில் அமைக்கப்பட்ட அணுமின்திட்டம் தாமதப்படுகிற நேரத்தில் தேர்தலைக் கருத்திற்கொண்டு, உத்தரப்பிரதேசத்தில் அவசரம் அவசரமாக மத்திய அரசாங்கம் அணுமின்நிலையத்தை அமைத் திருக்கிறது. எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டத்தை விட்டு, புதிய திட்டங்களை எடுத்துக்கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் ஒன்றும் இல்லை என்கிறார்கள். ஏன் இல்லை? இந்த அரசு கடந்த காலத்தில் செய்த காரியங்களையும், எதிர்காலத்தில் செய்ய இருக்கிற காரியங்களையும் ஆளுநர் அவர்கள் அங்கங்கே கோடிட்டுக்காட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களின் மேம்பாட்டுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 92 கோடி ரூபாய் செலவிட அரசு கருதி யுள்ளது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற குடிநீர்ப்

அடுத்து, மத்திய அரசாங்கம் அவ்வப்போது தங்களுடைய ஊழியர்களின் சம்பளத்தை மாநில அரசுகளையும் கலந்து கொள்ளாது உயர்த்திக்கொடுப்பதன் மூலம் அதேபணிகளில் ஈடுபடுகிற மாநில அரசு ஊழியர்களிடையே கசப்பை ஏற்படுத்துகிற நிலைமை உண்டாகிறது. மாநில அரசுகளும் சம்பளம் உயர்த்துகிறபோது நிதி நெருக்கடிக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. ஆகவே எதிர்காலத்திலாவது மத்திய அரசாங்கம் தங்கள் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு முன்னால் மாநில முதலமைச்சர், நிதி அமைச்சர் ஆகியவர்களையும் கலந்து கொண்டு செய்கிற ஒரு தேசியக்கொள்கையை உருவாக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அது நிச்சயமாக எதிர்காலத்தில் மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையாக இருக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆறாவது நிதி ஆணைக்குழு பரிந்துரைகளில் நமது மாநிலம் வற்புறுத்திய கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பது பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று. உண்மையாக, சிக்கனத்தோடு நடந்து வருகிற நமது மாநிலத்தைப் பழிவாங்கக்கூடிய வகையில், செலவைச் செய்துவிட்டு கேட்கிறவர்களுக்கு எல்லாம் நிதியை ஒதுக்கி, நமக்குக் கொடுக்க வேண்டியதைக்கூட கொடுக்காமல் இருப்பது—பற்றாக்குறையை நிறைவு செய்கிற அவர்களது போக்கு சரியல்ல. உண்மையாக, சிக்கனமாக நடந்து கொள்கிற மாநிலத்திற்குச் சேர வேண்டிய பங்கினையாவது ஒதுக்கித்தர முன்வந்தால்தான் மாநில அரசு தாம் போகிற முற்போக்கான திட்டங்களை எல்லாம் நல்லமுறையில் எதிர்காலத்தில் நிறைவேற்றிட முடியும்.

(பிற்பகல் 1.00)

அடுத்து, நம் நாட்டிற்கு வர இருக்கிற இலங்கை வாழ் மக்களுடைய பிரச்சினையிலே ஏறக்குறைய 55,000 குடும்பங்கள் இந்த நாட்டிற்கு வரும் என்று சொல்கிறார்கள். இந்திய அரசாங்கம் 60 கோடியிலிருந்து 70 கோடி வரை செலவு செய்யும் என்று சொல்கிறார்கள். இதை ஒரு தேசியப் பிரச்சினையாக, இந்த நாட்டுப் பிரச்சினையாகக் கொண்டு, செலவழிக்கப்படுகின்ற முழுத் தொகையையும் மத்திய அரசாங்கமே கொடுத்து, வருகின்ற அந்த



மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான ஒரு பொறுப்பினை ஏற்று, அதற்காக அவர்கள் ஒரு திட்டம் தீட்ட முன்வரவேண்டுமென்றும் இந்த நேரத்திலே கூறி, மேதகு ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

DR. M. MOSES : Mr. Deputy Speaker, may I bring to your notice that in Family Planning Operation, no minimum age is fixed for males and there are not any signs to find out whether a male is a father or not when such people come for vasectomy. They get into trouble ultimately and at times by mistake an operation is carried on a person of under-age or an unmarried individual. Therefore, I request that a rule be made that anybody who comes for vasectomy operation should produce a certificate from the Tahsildar or the village officer regarding his parenthood.

Weavers are not given any protection in our district. There are so many places with 400 or 500 persons working and they get no benefit like medical aid, provident fund, etc., from the managements. They have to live in the mercy of the managements. Something should be done to help them.

There is acute shortage of drinking water in Nagercoil town. This has been repeatedly brought to the notice of the Government, but action has not been taken. I request the Government that speedy action may be taken in this matter.

Large-scale theft of timber is going on in the forests of Kanyakumari district. I request the Hon. Minister to take very strict action against the culprits. Thank you.

MR. DEPUTY SPEAKER : Have you finished ?

DR. M. MOSES : Yes, Sir.

* திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெருமையாகக் கருதி, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அவருக்கு நன்றி தெரிவிக்கும் முதல் காரணம், அவர் நம்முடைய தந்தை பெரியார் அவர்களுக்கு முதலில் இரங்கல் தெரிவித்து தன்னுடைய உரையை ஆற்றியிருக்கிறார்கள்.

பிரச்சினையில் இந்த அரசு எவ்வளவு தீவிரமாகச் செயலாற்றி வருகிறது என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இரண்டு மாநகராட்சிகளின் குடிதண்ணீர் தேவைபற்றிக் குறிப்பிட்டு சென்னைக்கு எதிர்காலத்தில் வீராணம் திட்டம் மூலமாக நாளொன்றுக்கு 4 கோடி காலன் நீர் கிடைக்க இருப்பதையும் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல கோவை மாநகரத்திற்கு பல்லாண்டுகளாக கேரளத்திற்கும், தமிழகத்திற்கும் இடையே ஏற்படாதிருந்த ஒப்பந்தம் நிறைவேறி காரியங்கள் வேகமாக நடைபெறுகின்ற காரணத்தினால் 10 கோடி அளவில் சிறுவாணித் திட்டம் நிறைவேற்றப்பட்டு, நாள் ஒன்றுக்கு 235 இலட்சம் காலன் கிடைக்க இருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரூராட்சி, ஊராட்சி ஆகியவற்றிலும் நாம் தீவிரமான கவனம் செலுத்தியாகவேண்டும். இன்றையதினம் 650 பேரூராட்சிகள் இருக்கின்றன என்றால் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி ஏறத்தாழ 100 பேரூராட்சிகள்தான் பெற்றிருக்கின்றன. ஐந்தில் ஒரு பங்கு தவிர பாக்கியுள்ளவற்றுக்கும், சிறிய ஊர்களாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் குடிப்பதற்காக—பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை நாம் தீட்டியாகவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், எதற்கெடுத்தாலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்திய அரசாங்கத்தை குறை கூறுகிறார்கள், மத்திய அரசாங்கம் மற்ற மாநிலங்களுக்குச் செய்வதைப் போலத்தான் தமிழகத்திற்கும் செய்கிறது என்று குறிப்பிட்டார். ஆளுநர் அவர்கள் தம் உரையிலேயே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நாம் கேட்ட நைட்ரஜன் உரம் எவ்வளவு, கிடைத்தது எவ்வளவு, அதையாவது முழுவதும் அரசாங்கத்திற்குக் கொடுத்தார்களா என்றால் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 1973-74-க்கு நமக்குத் தேவை என்று நாம் கேட்டது 3.15 இலட்சம் டன் நைட்ரஜன் என்றால் அவர்கள் நமது மாநிலத்திற்குக் கொடுத்தது 2.3 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் தான். அதிலும் பெரும்பகுதியை தனிப்பட்டவர்கள் கையில்



ஒப்படைத்துவிட்டார்கள். இந்த நிலையில் அரசாங்கம் எப்படி தான் நினைக்கிற அளவில் விவசாயிகளுக்கு தானே உதவ முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

நமது மாநிலத்தில் பற்பல தொழில்களும் பெருகி, வளம்பெற வேண்டும் என்று நமது அரசு கருதுகிறது. அதேநேரத்தில் மத்திய அரசு நாடு முழுவதற்கும் தொழில் முதலீட்டிற்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கியதில் தமிழகத்திற்கு 40 கோடியே கொடுத்திருக்கிறது. எல்லா மாநிலங்களுக்கும் சமமாகப் பிரித்துக்கொடுப்பது என்றால்கூட நமக்கு எண்பது, எண்பத்தைந்து கோடி கிடைத்திருக்கும். மற்ற மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் நூறு, நூற்றைம்பது கோடி என்று ஒதுக்கிவிட்டு நமக்கு 40 கோடி மட்டுமே ஒதுக்கியிருக்கிறது என்றால், மத்திய அரசு நம்மை வஞ்சிக்கிறார்கள் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1,500 கோடியில் 4½ கோடி மக்கள் வாழ்கிற தமிழகத்திற்கு 40 கோடியை மட்டும் ஒதுக்கியது நியாயம் தானா என்பதை காங்கிரஸ் உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினையில் கடந்த ஆண்டு நூல் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் ஆங்காங்கே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்படும் ஆலைகள் ஆகியவற்றில் உற்பத்தி செய்த நூல்களை, நெசவாளர்களுக்கு விநியோகம் செய்தார்கள். இந்த இரண்டு அமைப்புகளின் மூலமும் நமக்குக் கிடைத்த நூல் நமது தேவைக்குப்போதுமான அளவு இல்லாத காரணத்தினால் ஓரளவு தட்டுப்பாடு இருந்தது. எதிர்காலத்தில் இந்தக் கைத்தறித் துறை வளர்ச்சிக்காகவே ஏறத்தாழ 18 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்க இருப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 19,200 கோடி ஒதுக்கத் திட்டம் இருக்கிறது. இந்தத் தொகையில் தமிழகத்திற்குரிய பங்கினை அவர்கள் ஒதுக்கித்தந்தாகவேண்டும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளபடியே, பெரியார் அவர்களுக்கு எங்கோ பிறந்து, வளர்ந்து, இங்கே ஆளுநராக வந்திருப்பவர் நன்றி கூறுவதையும், அதைப் போலவே இந்த மாநிலத்திற்குப் போதுமான அதிகாரம் இல்லையென்பதை ஆளுநர் அவர்களே ஒத்துக்கொள்வதாகச் சொல்லி இருப்பதையும் இங்கே இருக்கிற ஒரு சிலர் கூட ஒத்துக்கொள்ளாமல் இருப்பதைப் பார்க்கும்போது நமக்கு வருத்தத்தைத் தருகிறது.

தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தமிழகத்திலே பிறந்ததினாலேதான் என்போன்றவர்களெல்லாம் ஒருகாலத்திலே ஆடுமாடு மேய்த்துக்கொண்டுத் திரிய வேண்டிய சூழ்நிலையிலே இருந்தவன் எல்லாம் நாட்டிலே, மனிதன் மனிதத் தன்மையோடு வாழவேண்டுமென்ற மனிதாபிமானத்தைப்பற்றிக் கற்பித்தார்கள். அப்படிக் கற்பித்த பெரியார் இந்த மாநிலத்தில் தமிழ் சமுதாயம் எப்படி சீரோடும் சிறப்போடும் ஒருகாலத்திலே வாழ்ந்திருந்தாலும் கூட, இடையிலே எப்படி கேடுகெட்ட சூழ்நிலையிலே இருந்தது என்பதை விளக்கியுள்ளார்.

தமிழ் சமுதாயம் இடையில் எப்படி இருந்தது என்பதை யோசித்துப் பார்ப்போமானால், ஜாதியால், மதத்தால், வேதனைப் பட்டுக் கிடக்கும் தமிழன் தரணி இழந்து, பாணி மறந்து, ஏசுதலைத் தாங்கி தவிக்கும் தமிழன் களம் இழந்து, வளம் மறந்து, வாழ்வு கசந்து, தாழ்வடைந்துள்ள தமிழன், மொழி சிதைந்து, பழி மிகுந்து, களி கொண்டோன் காட்டும் குழியிலே குதித்திடும் குணம் கொண்டோன் தமிழன், வளப்பம் இழந்து, அரசு இழந்து, அணைந்த விளக்காய், கதியிழந்த களமாய், தாழ்ந்த தகலாய் கிடக்கும் தமிழன், ஆங்கிலேயனுக்கு அடிமை, ஆரியனுக்குத் தாசன், வடநாட்டானுக்கு எடுபிடி எனும் வெட்கப்படும் நிலையிலே இருந்த தமிழன், கூலியாக ஆகி, வெளிநாடு செல்லும் ஏழைகளிலே பிறந்தோம், கர்மவினையை அனுபவிக்கிறோம் என்று கருதும் கோழை, நம்மால் ஆகாது . நாதன்விட்ட வழி என்று நம்பிய நடைப் பிணம், வாள் ஏந்தி இருந்த தமிழன், மாற்றானின் தாள் ஏந்திக் கிடக்கிறான். அந்தத் தமிழகத்திலே தன்மானத்தை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்கள், தமிழா, இது உன் நாடடா, இது உன்னுடைய மொழி, உன்னுடைய கலாச்சாரம், உன்னுடைய நாகரீகம், இன்று நாட்டை ஆளப் பிறந்தவன் நீ அல்லவா, மாற்றானிடத்திலே தாளிட்டுக் கிடக்கிறாயே என்று தமிழன் சமுதாயத்தைத் தட்டி எழுப்பினார். அதனுடைய விளைவாக இன்றைக்கு அறிவுலக மேதை, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் சமுதாயத்தைக் கொண்டு தமிழர் அரசு அமைத்தார்கள். அதற்குப் பிறகுதான் தமிழகத்தின் முதல்வர் அவர்களாக டாக்டர் கலைஞர் அவர்கள் வீற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அமைச்சரவையையும் அமைச்சர்களும் தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டவர்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. அவர்கள் இந்த நாட்டிற்காக பெரும் பாடுபட்டிருக்கிறார்கள். அன்னியன் இந்த நாட்டை ஆளக்கூடாது, ஆங்கிலேயன் வெளியேறவேண்டும் என்பதற்காகவும், இந்த நாட்டிற்கு வடக்கே உள்ள லோகமானிய பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, எல்லைப் புற காந்தி, சர்தார் வல்லபாய் படேல், நேருஜி, காந்தியடிகள், நேதாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்கள் உழைத்த நேரத்திலே, தென்னாட்டிலே உழைத்த பெரும் தியாகி, வட நாட்டிலே உழைத்தவர்களுக்குச் சமமாக, ஈடாக உழைத்தவர் தந்தை பெரியார் என்று சொன்னால் அது மிகையாகாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



தந்தை பெரியார் அவர்கள் இந்த மண்ணிலே பிறந்ததால்தான் தமிழ்ச் சமுதாயத்திலே மறுமலர்ச்சியை இந்த மண்ணிலே உருவாக்க முடிந்தது. அப்படிப்பட்ட பெரியாரை, நம்மையெல்லாம் ஆளாக்கிய பெரியாரை மனிதன் மனிதனாக இருக்க வேண்டுமென்று தெரிவித்த பெரியாரை, ஆளுநர் அவர்கள், அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்ததைபற்றி அனைவரும் நன்றி சொல்ல நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஆளுநர் உரையிலே, கூறியிருப்பதில், பெரியார் மேம்பாடு திட்டம் 23,000 ஏக்கருக்குப் பலன் அளிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த 23,000 ஏக்கரிலே சிவகங்கைக்குப் பக்கத்திலே சேர்க்கப்பட்டிருக்கிற பகுதிக்குத் தண்ணீர் தீர்வை கூட விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி தண்ணீர் தீர்வை வந்தாலும்கூட, இன்னும் அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை.

அந்தப் பெரும் குறையைத் தமிழக அரசு தீர்க்கும் என்ற பெரும் நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் புதிதாக 8 சர்க்கரை ஆலைகள் உருவாக இருக்கின்றன. அந்த 8 சர்க்கரை ஆலைகளில் ஒன்றை இராமநாதபுரம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியாக இருக்கிற என்னுடைய பகுதியான மானாமதுரை தொகுதியிலே உருவாக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்புவனத்திலே நீண்ட நெடுநாட்களாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லையென்ற பெருங் குறை இருக்கிறது. ரூ. 10,000 கட்டினால் உயர்நிலைப் பள்ளிக் கட்டித் தருவதாகச் சொல்லப்பட்டு, அதிகாரிகளிடத்திலே ரூ. 10,000 கட்டப்பட்டது. சென்ற ஆண்டே அந்தப் பள்ளி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. திருப்புவனத்து மக்கள் தங்கள் குறை இந்த ஆண்டாவது தீரும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள் என்று நான் கூறவிரும்புகிறேன்.

அடுத்து, வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம். இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு அதுவும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு அது ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அந்த வைகை கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைகள் அவ்வளவு வெற்றிகரமாக நடைபெறுகின்றன. இன்றைக்குச் சிக்கனமாகத் தண்ணீரை நாம் பயன்படுத்தினால், பாசனத்திற்கு அப்பாற்பட்ட கண்மாய்கள் 10, 12 இருக்கும், அப்படிப்பட்ட கண்மாய்கள் அணைக்கட்டுக்குச் சேரவில்லையென்று சொல்லி, தண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட நேரிடுகிறது. அப்படி இருக்குமானால் வைகை சீரமைப்பு திட்டத்திலிருந்து கிடைக்கக்கூடிய அந்தத் தண்ணீரை சின்னக் கண்ணனூர், ராங்கியன், மாங்குடி, மேலவெள்ளூர், அம்பழத்தாடி போன்ற பகுதிகளுக்கு விட வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, திருப்புவனத்தில் நீண்டகாலமாக ஒரு தாலுகா ஆபீஸ் இருந்து வந்தது. அந்த ஆபீஸ் சமீபகாலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே அகற்றப்பட்டது. அது ஒரு பெரும்



குறையாக திருப்புவனத்திற்கு இருந்து வருகிறது. ஆக, தமிழக அரசு, அதிலே கவனம் செலுத்தி, திருப்புவனம் பகுதியில் ஒரு தாலுகா ஆபீஸ் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ஆளும் காங்கிரஸைச் சேர்ந்த தலைவர் மாரிமுத்து அவர்கள் மத்திய சர்க்கார் செம்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கிறது, அதிலே ஒருசில குறைபாடுகள், குற்றங்கள் இருக்கின்றன என்று ஆளும் கட்சியினர் சொல்கிறார்களே என்று சொன்னார்கள். 'அவர்கள் சொல்வதைப் பார்த்தால் இன்றையதினம் பிரிவினை வளர்ந்துவிடும் போல் இருக்கிறது. மத்திய சர்க்கார் இப்படிச் செய்கிறது என்று சொல்வது பிரிவினைக்கு வித்தாகுமோ என்பதற்காகத்தான் இதை எதிர்க்கிறேன்' என்று சொன்னார்கள். நாங்கள் கேட்பதே, பிரிவினை வளர்ந்து விடுமோ என்ற அளவுக்கு ஆளும் கட்சிக்கு சந்தேகம் கிளப்பிவிட்டிருக்கிறது. அவருக்கு நான் அத்தனையும் சொல்லாமல் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல ஒன்றை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டத்திலே தொழில் மேம்பாட்டிற்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, 1,500 கோடி ரூபாயிலே நமக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 40 கோடி ரூபாய்தான். இந்த 40 கோடி ரூபாய் சமமான பங்கா? நியாயமான பங்கா? ஒப்புக்கொள்ளக்கூடியதா? இருக்கின்ற மாநிலங்களுக்கு எல்லாம் சரியாகப் பிரிப்போமானால் இது சரிதானா? இதையெல்லாம் ஆளும் காங்கிரஸ்காரர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்கிறோம். ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பிடத்தகுந்த தலைவர்கள்தான், அவர்கள் நம்முடைய கருத்துக்களில் இருக்கின்ற உண்மைகளைப் புரிந்துகொள்ளவேண்டும்.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உரம் உற்பத்தியாகிறது. ஆனால் உரப் பற்றாக் குறையினால் விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது ஒப்புக்கொள்ளவேண்டிய பிரச்னைதான், காரணம் என்ன? தமிழ் நாட்டிலே உற்பத்தியாகக்கூடிய உரத்தில் பெரும்பகுதியைத் தமிழ் நாட்டு மக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிக் கொடுத்தால் நிச்சயமாக எத்தனை மாநிலங்களுக்கு நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரிசியை அள்ளி

அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இன்னும் உரம் கொடுத்தால் பன்மடங்கு அள்ளிக்கொடுக்க முடியும். நமக்குப் போதுமான உரமும் தண்ணீரும் கிடைக்குமானால் இந்தியாவையே காப்பாற்றுகின்ற அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிற, நமக்குத் தேவையான, செய்யப்படவேண்டிய, செய்யப்போவதாகச் சொல்லியிருப்பது, அதாவது நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல், கல்பாக்கம் அணுமின் உற்பத்திச் சாலையை விரிவு படுத்துதல், தூத்துக்குடியில் இன்னொரு அணுமின் உற்பத்திச் சாலையை நிறுவுதல், காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ்நாட்டின் கடற்பகுதிகளிலும் எண்ணெய் வளம் குறித்த ஆய்வினை முடுக்கப்படுத்துதல், சென்னை-தூத்துக்குடி ரயில் பாதையை அகலப்பாதையாக மாற்றுதல், சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்தல், சென்னைப் பெருநகரப் பகுதியில் சுரங்க ரயில் ஏற்பாட்டினை நிறுவுதல், தூத்துக்குடியில் கப்பல் தளம் ஒன்றை அமைத்தல், நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான தொழிற்சாலைகளை நிறுவுதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் இந்த நாடு சீரோடும் வளத்தோடும் இருக்கும், நிச்சயமாக தமிழ்நாடு வளமாக இருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஒரு உதாரணத்தைச் சொல்லிக் காட்டினால், எதிர்க்கட்சிக் காரர்கள் அங்கே, இங்கே என்று காட்டுகிறார்களே என்று சொல்கிறார்கள், ஆனால் அவர்கள் பேசும்பொழுது வேறு மாநிலங்களைச் சுட்டிக்காட்டிபேசினார்கள். உணவு நிலைமையிலே விலைவாசி வேறு மாநிலங்களைவிட இங்கே எப்படி குறைந்திருக் கிறது என்பதைப் பார்க்க வேண்டும். என்னுடைய நண்பர் ஒருவர் வட இந்தியாவிற்குப் போய்விட்டு வந்தார். அங்கே சாப்பாட்டுக்கு அவர் பட்ட கஷ்டத்தைச் சொன்னார். உணவு பஞ்சம் அந்த அளவிற்கு இருக்கிறது என்றும் சொன்னார். தமிழ் நாட்டிலே ஒரு ரூபாய்க்கு சாப்பாடு, ஒன்றரை ரூபாய்க்குச் சாப்பாடு, இரண்டு ரூபாய்க்கு நல்ல சாப்பாடு என்ற நிலைமை இருக்கிறது, ஆனால் வட இந்தியாவிலே 18 ரூபாய் ஒரு சாப்பாடு, போபாலில் 7 ரூபாய், பம்பாயில் 6 ரூபாய், ஆக்ராவில் 9 ரூபாய், குவாலியரில் 11 ரூபாய், கான்பூரில் 9 ரூபாய், ஜெய்ப்பூரில் 8 ரூபாய்—இப்படி வட மாநிலங்களில் 10 ரூபாய், 15 ரூபாய் என்று



சாப்பாடு விற்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆனால் 1 ரூபாய் 2 ரூபாய் என்ற அளவிற்கு கொடுத்து சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கிற நாம் வட நாட்டிலே ஒரு வேளை சாப்பாட்டிற்கு சாப்பாடு டிக்கட் அட்வான்ஸாக வாங்கக் கூடிய நிலைமை இருக்கின்றது என்பதை உணரவேண்டும்.

இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய அண்ணன் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள், தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்போன்று எந்த மாநிலம் கேட்டாலும் இந்த மாநிலத்திலிருந்து தாராளமாக அள்ளிக்கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம் என்று சொல்லிக் கொண்டு இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. இ. எஸ். தியாகராசன்:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய மறைவைப்பற்றி இந்த அறிக் கையிலே ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சமுதாய சீர்திருத்தம், ஏழை எளியோர் முன்னேற்றம், கீழ்த்தட்டிலே உள்ள வர்கள் எல்லாம் முன்னுக்கு வரவேண்டுமென்ற முறையிலே நல்ல கருத்துக்களை வழங்கி இந்த நாட்டிலே 72 ஆண்டுக் காலம் அரசியல் வாழ்க்கை வாழ்ந்தார் பெரியார் அவர்கள். பிற்பட்டோர் சமூகத் திற்காக வாழ்ந்த பெரியார் அவர்களைப் பாராட்ட தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்களுடைய உரையில் அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

உணவு உற்பத்தியிலே நம்முடைய மாநிலம் மற்ற மாநிலங்களை விட மிக நல்ல முறையிலே முன்னேற்றமடைந்திருக்கிறது. அதன் விளைவாக தமிழகம் சோறுடைத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துக் கூறுவதிலே நான் பெருமைப்படுகிறேன். இந்த அறிக்கையிலே கூறியிருப்பதைப் போன்று தமிழகத்திலே

பற்றி அறிக்கை தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது, அந்த சந்தானம் கமிட்டியின் அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, அதில் சிபாரிசு செய்திருப்பதைப்போல் கைத்தறி வாரியம் ஒன்று அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்து கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள நெசவாளர்களுக்கும், வெளியிலே உள்ள நெசவாளர்களுக்கும் நல்ல முறையிலே நூல் வழங்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்கவும் நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கு ஏற்கனவே வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்தது. ஆனால் தற்பொழுது அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து கிராமப்புறங்களிலுள்ள நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்தைப்பற்றி ஆளுநர் உரையிலே 91½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நம்முடைய தமிழகத்திலே பிற்பட்டோர் நலன் வளர்ச்சி பெறுவதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே ஒரு தனி அமைச்சரே அமர்த்தப்பட்டிருக்கிறார். ஆகவே, இந்த 91½ கோடி ரூபாயும் நல்ல முறையிலே செலவு செய்யப்பட்டு பிற்பட்ட மக்கள் வாழ்வு பெறுவதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தந்தமைக்காக உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக இன்றைக்குத் தமிழகத்திலே பெரிய நகரங்களிலேயெல்லாம் வீட்டு வசதி செய்து தரப் பட்டு வருகிறது. ஆனால் நகரங்களில் மட்டும் வீட்டு வசதி செய்து கொடுத்தால் கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்கு வந்து விடுவார்களோ என்று நினைக்கிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களுக்கு ஒரு வீட்டு வசதி வாரியத்தை உண்டாக்கி, அதனால் கிராமங் களிலே இருக்கக்கூடியவர்களுக்கு வீட்டு வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பாதை செப்பனிடுவது சம்பந்தமாக நமது அரசு பல கோடி ரூபாய்கள் ஒதுக்குவது குறித்து ஆளுநர் உரையிலே சொல் லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் 1967 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது இந்த மன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதில் அளித்துள்ளார்கள். திருத்தணி தொகுதியிலே பள்ளிப்பட்டு பகுதியிலே குசஸ்தலி ஆற்றில் பாலம் கட்டப்படும், அதற்காக மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்ட வசமாக ஏழாண்டுக் காலமாகியும் அந்தப் பாலம் துவக்கப்பட வில்லை, அந்த வேலை இன்னும் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்ற வருத்தமான செய்தியைச் சொல்லி, மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த ஆண்டாவது அதை ஏற்று அந்த ஆற்றுக்குப் பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி கவர்னர் உரையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இங்கே பெருவாரியான சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே என்ன இருக்கிறது என்றெல்லாம் பேசினார்கள், குறிப்பாக எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் பேசினார்கள். இந்த கவர்னர் உரையைப் படித்தவர்கள் நல்ல முறையிலே உணர்வார்கள். இதற்கு முன்னால் எத்தனையோ கவர்னர்கள் இருந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்தில் உரையாற்றி இருக்கிறார்கள். அந்த உரைகளிலே அவர்கள் சொல்லியிருந்த கருத்துக்களுக்கும், இந்தக் கருத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அந்த நிலைமையை இங்கே யுள்ள கவர்னர் உரையிலே புகுத்தியிருக்கும் நிலைமை உண்மையி லேயே தமிழகத்தின் ஆட்சிக்கு ஒரு நல்ல சான்றிதழாகும்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 சனவரி 25

இந்த ஆண்டு ஓரளவு ஏற்பட்ட மழைக்குறைவின் காரணமாக திருத்தணி வட்டத்திலே தண்ணீர் அதிகமாக இல்லாத காரணத்தினாலே அங்கே பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தக்க நேரத்திலே அரசு வரிவஜா செய்து உதவி செய்வார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்வெட்டு இப்பொழுது 15 சதவீதம் இருக்கிறது, அதனையும் விரைவிலே நீக்கிவிடவேண்டுமென்றும் அதற்கு முன்னெச்சரிக்கையாக தக்க நடவடிக்கைகளை எடுத்தால் ஏழை எளியவர்களை வாழ வைக்கின்ற பயிர்த் தொழிலுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மின் வளர்ச்சிக்காக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் 326 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதுபற்றி அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 326 கோடி ரூபாய் அதற்காக செலவு செய்வதன் மூலம் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களானால் தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை மிக விரைவிலே நீங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பாசன வசதிக்காக 129 கோடி ரூபாய் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே பாசன வசதிகள் தமிழகத்திலே எல்லா மாநிலங்களையும் விட முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மைனர் இரிகேஷன் ஸ்கீம்ஸ் என்ற தலைப்பிலே 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சிறிய ஏரிகளைச் சீர்படுத்துவது பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது, நிதி வசதியில்லாத நிலையில் பஞ்சாயத்து யூனியன்கள் இருப்பதால் அரசாங்கமே அவற்றைச் செப்பனிடுவதற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமை, கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் குடிநீர் வழங்குகிற திட்டத்தை அமல் நடத்த 93 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதன் விளைவாக கிராமங்களிலே குடிநீர்ப் பிரச்சனை தீருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்



1974 சனவரி 25] [திரு. இ. எஸ். தியாகராசன்]

தப்படுகிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். 93 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிற நேரத்தில் பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு போன்ற பகுதிகளிலே மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப் படுகிறார்கள், ஆகவே அந்தத் திட்டத்திலே இந்த பஞ்சாயத்துக்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக்கு வேண்டிய உரம் கொடுக்கக்கூடிய முறையிலே சிறிய சிறிய தொழிற்சாலைகளை அமைத்து அதன் மூலமாக உரங்களையும், பூச்சிகொல்லி மருந்துகளையும் தயார் செய்து உரப்பஞ்சம், பூச்சிக்கொல்லி மருந்து பஞ்சம் இவற்றைப் போக்குவதற்கு நம்முடைய அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தொழில் துறை வகையிலே எட்டு சர்க்கரை ஆலைகளைத் தமிழகத்திலே திறப்பதாக இருக்கிறது. திருத்தணி, திருவள்ளூர் பகுதியிலே இன்றைக்குச் சர்க்கரை ஆலைகள் இல்லாமல், விளைகின்ற கரும்புகளையெல்லாம் வெகு தூரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்காக, துவக்கப்படவிருக்கும் எட்டு சர்க்கரை ஆலைகளில் ஒரு ஆலையை திருத்தணியிலே அமைக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். திருத்தணி பகுதி ஆந்திரத்திலே பல நாட்களாக இருந்து பிறகு தமிழகத்தோடு சேர்ந்த பகுதி, அது மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பது நமது அரசுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆகவே அங்கே ஒரு சர்க்கரை ஆலையைத் துரிதமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில், அடுத்த ஐந்தாண்டுகளில் 18 கோடி ரூபாய் செலவு செய்வதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று அறியும்பொழுது உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். தமிழகத்தில் கைத்தறித் தொழிலுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு பெரும்பாடு பட்டு வருகிறது என்பதை இந்த 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்தே நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்களுக்காக இன்னும் பல வகைகளில் செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமானால், தமிழகத்திலே நெசவாளர்களைப்

இந்த மாநிலத்து மக்களின் ஆதரவால் அவர்களுக்கு நன்மை
செய்வதற்காக வந்திருக்கும்பொழுது நிச்சயமாக அதற்குப் பாடு
பட வேண்டுமென்றால் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்ல
வேண்டும். இன்னின்னவற்றில் பாரபட்சம் காட்டப்படுகிறது,
வேறு அபிவிருத்திகளைச் செய்ய வேண்டும், ஆனால் மத்திய அரசு
இங்கே வரும் வரிப் பணத்தை நல்ல முறையில் ஒதுக்கீடு செய்ய
வில்லை என்று நிச்சயமாகக் கேட்க வேண்டியதுதான். இதனால்
மத்திய சர்க்காரைக் குறை கூறுவதாக ஆகாது. மாநில மக்களின்
அன்பைப் பெற்று, மாநிலம் வளர வேண்டுமென்ற ஆசையின் அடிப்
படையிலே கேட்கிறோமே தவிர பிறரைக் குறை சொல்ல வேண்டு
மென்ற அடிப்படையில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இங்கே பார்க்கிறோம். வறட்சிப் பகுதிகளில் பல நல்ல திட்டங்
களைத் தீட்டியிருக்கிறார்கள். இருபதாண்டுக் கால ஆட்சியில்
இவற்றை அவர்கள் செய்திருக்கக் கூடாதா? குடிநீர் வசதியை
அவர்கள் செய்திருக்கக் கூடாதா? அவர்களுக்கு இருந்த சௌக
ரியங்களைக் கொண்டு அதைச் செய்திருக்கலாமே. இவை அத்தனை
யையும் நாங்கள்தான் செய்கிறோம். கேபிடல் சிட்டியாக இருக்கும்
சென்னைக்கு இதுவரையில் தண்ணீர் கொண்டுவரப்படவில்லையே.
வீராணம் திட்டத்தை நாங்கள்தானே கொண்டுவந்திருக்கிறோம்.
இவைகளெல்லாம் பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள். இங்கே
பேசிய அங்கத்தினர்கள் அத்தனைபேரும் இதை ஓரளவு சிந்தித்துப்
பார்க்க வேண்டும்.

[பிற்பகல் : 1-30]

இந்த ஆட்சியினுடைய கொள்கை மீது யாராவது குறை சொன்
னார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஒருவர் கூடச் சொல்ல
வில்லை. கிளைவ் ஹாஸ்டல், மற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொன்
னார்கள். அதெல்லாம் ஆட்சியின் கொள்கைகளால் ஏற்பட்ட
தல்ல. ஏதோ இருவர் சண்டை போட்டுக் கொண்டார்கள்.
அதனால் சில நிகழ்ச்சிகள் நடந்தன என்றால் அதற்கு இந்த
ஆட்சியின் கொள்கை காரணமாக துப்பாக்கிப் பிரயோகம்
நடந்தது போலவும் அதற்காக மாணவர்கள் இந்த ஆட்சியை
எதிர்ப்பது நியாயம் என்பது போலவும் பேசுகிறார்கள். இந்த
ஆட்சிக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? நிர்வாகத்தில் இருப்ப



வர்கள் தவறு செய்திருக்கலாம். நியாயமான நடவடிக்கைகளை
ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் எடுக்கிறார்கள். இன்றைக்கு
நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கலாம். வேறு ஒரு காலத்தில்
அவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வரமுடியாது என்ற நினைப்பிலே
பேசுகிறார்கள். ஆட்சி நல்ல முறையில் நடக்கிறதா என்று
பார்க்க வேண்டும். பலர் பல துறைகளிலே இருக்கலாம்.
அதிகாரிகளாக இருக்கலாம், வியாபாரிகளாக இருக்கலாம்,
தொழில் துறையிலே இருக்கலாம், வேறு பல துறைகளிலே
இருக்கலாம். ஆட்சி கொள்கைகளை வைத்து நாட்டு மக்களுக்
கான நல்ல காரியங்களைச் செய்ய முடியும். எல்லாவற்றையுமே
ஆட்சியிலுள்ள மந்திரிகள் நேரடியாகச் செய்ய முடியுமா?

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வேறு ஒன்றும் பேசுவதற்கு விஷயம்
இல்லை. லஞ்சம், ஊழல் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.
அந்தக் காலத்தில் 35 லட்சம் டன் நெல் உற்பத்தியான காலத்தில்
அன்று அவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டார்களே,
இன்று 74 இலட்சம் டன் உற்பத்தியாகும்போது நீங்கள் போட
வில்லையே என்று கேட்கிறார்கள். இது தவறா? இப்போது அரிசி
தாராளமாகக் கிடைக்கிறது. ஏழை மக்களுக்குப் பல வசதிகள்
செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழை மக்களுக்காக
வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பாராட்டு
கிறார்களா? அந்தக் கொள்கை தவறா?

கவர்னர் உரையிலே, ஒன்பது திட்டங்களைத் தொடங்குவதற்கு
மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கி
றார்கள். இதுவரை எந்த கவர்னர் உரையிலாவது இப்படி மாநில
கவர்னர் சில திட்டங்களை மத்திய சர்க்கார் உடனடியாக ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று ரெகமண்ட் செய்கிற முறையில் பேசி
யிருக்கிறார்களா? கிடையாது. அப்படி எல்லாம் பேச
வைத்தது இந்தத் தமிழக ஆட்சி. இந்த ஆட்சிக்கு தமிழ் மகனாக
பிறந்த ஒருவன் நிச்சயமாக நன்றி சொல்லுவான். இதுபோன்ற
ஆட்சி எப்போதும் நமக்குக் கிடைக்காது. அந்த அளவுக்குத்
தமிழக முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் நல்ல
முறையில் பணியாற்றி வருகிறார்கள். எல்லாத் துறைகளிலும்
நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1974 சனவரி 25

ஆளும் கட்சியிலுள்ளவர்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பல லட்சக் கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். பல பிரச்சினைகள் வருகிற நேரத்தில் அதிகாரிகள் இரண்டு மூன்று நாட்களில் தீர்த்து விடுவதில்லை. நூற்றுக்கு 90 அதிகாரிகள் அவர்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை. அதற்கு ஆட்சி பொறுப்பா? அமைச்சரே ஒவ்வொரு ஃபைலையும் பார்த்து ஆர்டர் போட முடியுமா? மக்களின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் அதிகாரிகளைப் பார்த்து அவர்களுடைய கோரிக்கைகளைச் சொல்லவேண்டியிருக்கிறது, பிரச்சினைகளைச் சொல்லித் தீர்க்க வேண்டியிருக்கிறது. கட்சியின் செயலாளர் அதிகாரியிடம் செல்லுகிறார் என்று சொல்லுகிறார்கள். அவர் அதிகாரியிடம் செல்லக்கூடாதா? அவரும் ஒரு குடிமகன்தானே. ஜனநாயகத்தில் பல கட்சிகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு குடிமகன் அதிகாரிகளைக் கண்டு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுவதில் தவறு இல்லை. கட்சியின் செயலாளரே ஆர்டர் போடுகிறார் என்று சொல்லுகிறார்கள். என்ன புளுகு? இப்படி உண்மையற்ற விஷயங்களைச் சொல்லுகிறார்கள். சாதாரண குடிமகன் அதிகாரிகளை அணுகி தங்களுடைய பிரச்சினைகளைச் சொன்னவுடன் கேட்டு நியாயமான முறையில் பதில் சொல்லி அவன் கொடுக்கும் மனுக்களின் பேரில் உடனடியாக உத்தரவுகளைப் போட்டால் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் அதிகாரிகளை நாடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், நம்முடைய அதிகாரிகள் அதிகாரத்தில் உள்ளவர்கள் யாராவது சொன்னால்தான் கேட்கிற நிலைமை இருக்கிறது. பல அதிகாரிகள் எங்களுடைய ஆட்சியையே கூடக் குறை சொல்லுகிறார்கள். சில பேர் என்னவோ பெரிய உதவி செய்வது மாதிரி செய்கிறார்கள். பல அதிகாரிகள் அவர்களுடைய மரியாதை போய்விட்டது போல் நினைக்கிறார்கள். இதுவரை மக்கள் போய் அதிகாரிகளை பார்க்க வேண்டிய நிலை இருந்தது. இப்போது மக்களைப் போய் அதிகாரிகள் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்க்க வேண்டுமென்று நாங்கள் செய்திருக்கிறோம். ஆகவே, பெரும் பெரும் அதிகாரிகள் மறைமுகமாக இந்த ஆட்சிக்கு எதிராக இருக்கிறார்கள். நடைமுறை அனுபவத்தில் பார்க்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).



1974 சனவரி 25] [திரு. எம். ஆர். கண்ணன்]

இந்த ஆட்சி மிகவும் சிறப்பான ஆட்சி. இதனை கவர்னர் பெருமான் உரையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருப்பது பற்றியெல்லாம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிற கவர்னர் பெருமான் உரையை வரவேற்று நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் 28—1—1974 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.38 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

62. Notification issued with G.O. Ms. No. 1870, Agriculture, dated the 20th August 1973, in regard to regulation of trade over the purchase and sale of paddy in Coimbatore district. [Laid on table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

63. Notification issued with G.O. Ms. No. 1245, Rural Development and Local Administration, dated the 15th August 1973 in regard to certain amendments to the Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Town Panchayats) Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

64. Notification issued with G.O. Ms. No. 6226, Revenue, dated the 4th October 1973, in regard to an amendment to the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964).]

65. Notification issued with G.O. Ms. No. 1744, Agriculture, dated the 28th September 1973 in regard to amendments to notification issued under section 5 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 relating to change of place of five regulated markets in Coimbatore district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

66. Notification issued with G.O. Ms. No. 2475, Rural Development and Local Administration, dated the 17th November 1973 in regard to preliminary notification for inclusion of certain villages within the jurisdiction of the Madurai City Municipal Corporation. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

*B. Reports, Notifications and Other Papers.*

@ 17. Draft of certain amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965.

@ 18. Annexure to the Draft amendments to the Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965.

19. Draft Fifth Five-Year Plan, Tamil Nadu—Memorandum to the Union Planning Commission.

---

@ Despatched to members on 23—1—1974.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1974 சனவரி 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கல்லூரிப் பேராசிரியர்களிடையே ஆராய்ச்சிப்பணி

* 181. வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி பேராசியர்களிடையே ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்லூரி பேராசியர்களிடையே ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஆண்டிற்கு இரு பேராசிரியர்களை ஆராய்ச்சி வாயிலாக டாக்டர் பட்டம் பெறுவதற்கு அரசு தம் செலவில் அனுப்புகிறது. மேலும், 15–11–1973-லிருந்து பி.எச்.டி. பட்டம் பெற்ற பேராசிரியர்களுக்கு ஒரு திங்களுக்கு ரூ. 100 தனிச் சம்பளமாக கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, "ஆண்டுக்கு இரண்டு பேராசிரியர்கள்" என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் அரசுக்கும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972–73ம் ஆண்டு நாம் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை. 1973–74ம் ஆண்டில் ஐந்து பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஆண்டுக்கு நான்கு பேராசிரியர்களையாவது தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: For getting Ph.D. thesis have to be submitted to University and the persons have to work under some Professors. For private persons who want to do research, it is difficult. Therefore will the Hon. Minister see to the removal of such restrictions?

இதற்கு முன்னாலிருந்த கவர்னர்களெல்லாம் யாரும் மத்திய அரசு இன்னின்ன துறைகளிலே மாநிலங்களைக் கவனிக்காமல் இருக்கின்றார்கள், இப்படியிப்படி கவனிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கின்றார்களா என்றால் அப்படிக் கூறிய கவர்னர் வேறு ஒருவர்கூட இருக்க மாட்டார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். அந்த அளவிற்கு ஒரு மாநிலத்தினுடைய நன்மைகளைக் கருத்திற்கொண்டு, இந்த மாநில கவர்னராக இருப்பவர் நல்ல கருத்துக்களோடு, பெருந்தன்மையோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த உரையைப் பற்றிப் பேசுபவர்கள் சிலர் இதிலே ஒன்றுமேயில்லை என்று சொல்கிறார்கள். ஏதோ எதிர்க்கட்சியிலே இருப்பதால் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமா ? மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், எதிர்ப்பதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது மிக மிக தவறான வாதம். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், ஏதாவது தவறுகள், அக்கிரமங்கள் நடந்தால் அவைகளை எதிர்க்க வேண்டுமே தவிர, ஆளுங்கட்சி சொல்வது எல்லாவற்றையும் குறை சொல்லிக்கொண்டிருப்பது நல்லதல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் இந்தத் தமிழகம் போற்றி வணங்கும் தலைவர் பெரியார் அவர்களுடைய மறைவு குறித்து இங்கே சொல்லி, அவருடைய தொண்டுகளைக் குறித்து மிகவும் நல்ல முறையிலே பேசி, அதற்காக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் இந்த நிலையைப்பற்றித் தமிழக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னால் இதே கவர்னர்கூட, இந்தத் தமிழக ஆட்சி எந்தக் கட்சியினுடைய பொறுப்பிலே இருக்கிறதோ அந்தக் கட்சியின் பொறுப்பிலே இல்லாமல், பெரியார் அவர்கள் இறந்திருந்து இங்கேயுள்ள கவர்னர் பாராட்டியிருந்தால் நிச்சயமாக அதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த அளவிற்கு தமிழக அரசு மிக மிக சிறப்பாக நடக்கிறது. அதனுடைய எண்ணத்தை இந்த கவர்னர் அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொல்லி, தந்தை பெரியார் அவர்களின் இறப்பிற்கு அனுதாபம் தெரிவித்திருப்பது எல்லோராலும் பாராட்டுதற்குரியது, எல்லாத் தமிழர்களும் பெருமையடையக்கூடியது, அந்தச் சிறப்பு இந்த



ஆட்சிக்கு இருக்கிறது என்று எண்ணினால் எந்தத் தமிழ் மகனும் இந்த ஆட்சியின் மீது குறை சொல்ல மாட்டான். அந்த அளவிற்குச் சிறப்பாக நடக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், மின் சக்தி நம்முடைய நாட்டிலே குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏறத்தாழ நமக்குத் தேவை 2,000 மெகாவாட் என்றால், 1,400 மெகாவாட் தான் உற்பத்தியாகிறது. ஆண்டுக்காண்டு மின் சக்தித் தேவை 12½ சதவீதம் அதிகமாகி வருகிறது. ஆகவே, தமிழக அரசு தன்னுடைய பொறுப்பிலேயுள்ள அத்தனை காரியங்களையும் ஆற்றியிருக்கிறது. ஆனால் இதைச் செய்வதோடு வேறு பல திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். நெய்வேலி அனல் மின் நிலையம் ஏற்பட வேண்டுமென்று தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. பல்லாண்டுகளாக வற்புறுத்தி வருகிறது. அதைப்போல் மேட்டூர், தூத்துக்குடியிலே அனல் மின் நிலையம் வேண்டுமென்று கேட்டு வருகிறது. இந்த ஆட்சி கேட்டு வரும் பொறுப்பிலே இருக்கிறதே தவிர நடத்தக்கூடிய பொறுப்பிலே இல்லை.

நமது மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், நீங்களெல்லாம் மத்திய சர்க்காரின்மீது பழி போடுகிறீர்கள், என்று. உண்மையிலேயே கேட்கிறேன், என்ன பழி போடுகிறோம். நியாயத்தைக் கேட்கிறோம். பல அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அதன் மூலம் மாநிலம் வளர்ந்திருக்கிறது, அதற்கு நீங்கள் நியாயமாக உதவ வேண்டுமென்று கேட்டால், இல்லையில்லை, நீங்கள் வளர்ந்துவிட்டீர்கள், ஆகவே வளராத மாநிலங்களுக்குப் பணத்தை ஒதுக்குகிறோம் என்ற ரூலை வகுத்து அவர்களுக்குத்தான் உதவுகிறோம் என்று சொல்கிறார்கள். இது வாதங்களுக்கு உதவலாமே தவிர, ஒரு நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பையேற்று, உங்களுக்கு உதவப் போகிறோம் என்று சொல்லி வந்ததற்குப் பிறகு, அந்தப் பணத்தை அங்கே செலவு செய்கிறோம் என்று மத்திய அரசு சொல்வது என்றால் மத்திய அரசேகூட எல்லாவற்றையும் நடத்திக் கொள்ளட்டும். எங்களுக்கு இந்தப் பொறுப்பு தேவையில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதைப் பல்கலைக்கழகம்தான் செய்ய வேண்டும். பல்கலைக்கழகத்தி னிடத்தில் விண்ணப்பித்தால் அவர்கள் ஆராய்ந்து, சிண்டிகேட் மூலமாக முடிவு செய்வார்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி : பி.எச்.டி. பட்டம் பெற்ற பேராசிரியர் களுக்கு 15-11-1973லிருந்து ரூ. 100 அதிக ஊதியம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இது எல்லாக் கல்லூரிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் எத்தனை பேருக்குக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இது எல்லாக் கல்லூரிகளுக்கும் தரப்படுகிறது. ஆனால், அதனுடைய எண்ணிக்கைக் குறிப்புகள் இப்பொழுது இல்லை.

திரு கு. காமாட்சி : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? எப்படி அவர்கள் மதிப் பிடப் படுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்காக விண்ணப்பம் பெறப்பெற்று, பேராசிரியர்களாக இருப்பவர்களில் குறைந்தது 35 ஆண்டு வயதுக்குமேல் போகாமலிருப்பவர்களாகப் பார்த்து, அவர்களில் சிறந்தவர்களை முதல் வகுப்பில் தேறியவர்களை பி.எச்டி. இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு செய்ததன் மூலமாக அவர்கள் உறுதி யாகப் பட்டம் பெறக்கூடும் என்று யார் யாரை அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் சிபார்சு செய்கிறார்களோ அவர்களிடத்திலிருந்து பெறுகிற குறிப்புகளை வைத்துக்கொண்டு அரசு தேர்ந்தெடுக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, தனியார் துறையில் வேலை பார்க்கிறவர்களுக்கு, 100 ரூபாய் தனி ஊதியம் கொடுக்கப்படுவதில்லை. இன்றைய "இந்து" பத்திரிகையில் "லெட்டர்ஸ் டு தி எடிட்டர்" என்னும் தலைப்பிலே கூறியிருக்கிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் கொடுக்கப்படுகிறது. தனியார்த் துறைக் கல்லூரிகளில் கொடுக்கப்படவில்லை என்று புகார் இருக்கிறது, அதற்கு ஒரு அரசாங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அந்த அரசாங்க ஆணையில் அது வரவில்லையென்றால், தனி அரசாங்க ஆணையினைப் பிறப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி விவரக்குறிப்புகள் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கு மானால், தனியாக ஆராய்ந்து தக்க முடிவெடுக்க அரசு முயலும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது கல்லூரிப் பேராசிரியர்கள் ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளுவதற்கு சென்னை யில் அதிக வசதி வாய்ப்பு இருக்கிறது. மாவட்டங்களில் ஏராளமான கல்லூரி கள் இருக்கின்றன. அங்குள்ள பேராசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கு அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வகுத்திருக்கிறதா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஆராய்ச்சிப் பணி புரிவதற்கான வசதி வாய்ப்பு சில குறிப்பிட்ட கல்லூரி களில்தான் இருக்க முடியும். சென்னை நகரத்தில் உள்ளவர்கள் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதல்ல. அவர்கள் மாநிலத்தில் இருக்கும் எந்த கல்லூரிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படலாம். அவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு சென்னை மாநிலக் கல்லூரி போன்ற சிலபல இடங்களில்தான் முழு வசதி வாய்ப்பு இருக்கிறது. பல்கலைக்கழகம் சில பேரை வேறு வேறு மாநிலங்களுக்கும் வேறு இடங்களுக்கும் அனுப்ப வேண்டியிருக்கும். இன்னும் சில பேரை வெளிநாட்டுக்குக்கூட அனுப்பும் சூழ்நிலை ஏற்படுமானால் அந்த அளவில் அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆனால், தேர்ந்தெடுக்கபடுகிறவர்கள் எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் படிப்புக் காக படிக்கும் மாணவர்கள் திரும்பத் திரும்ப தமிழ் வரலாறு போன்ற வற்றைத்தான் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். விஞ்ஞான உலகத்தில் இருக்கும் நாம் விஞ்ஞானத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். யூனிவர்சிடி அவ்வாறு முக்கியத்துவம் நம்முடைய கல்லூரிகளில் கொடுப்பதில்லை. விஞ்ஞானப் பாடத்தில் அதிக ஆராய்ச்சிப் பணி செய்வதற்குப் புதிய ஆராய்ச்சியை மேற்கொள்ள நம்முடைய அரசு யூனிவர்சிடிகளுக்கு ஏதாவது உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது எந்தெந்த துறைகளில் அதிகமான எண்ணிக்கையில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். எந்த எந்த துறைகளில் டாக்டர் பட்டம் பெறாமல் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டுப்பார்த்து, குறைவான எண்ணிக்கையில் இருக்கும் துறையிலுள்ளவர்களுக்கு அதிக ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, கணித இயலில் ஒருவர், இயல்பியலில் ஒருவர், வேதியலில் ஒருவர், வரலாற்று இயலில் ஒருவர், ஆங்கிலத்தில் ஒருவர், ஆக ஐந்து பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

### *Post-Graduate study by elementary school teachers*

* 182 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that graduate-teachers serving in Elementary and Higher Elementary schools are not allowed to appear for M.A. degree examination; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இத்தகவல் சரியான தல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என், கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது பி.ஏ. முடித்து விட்டு, எம்.ஏ. படிக்க வேண்டுமானால், உயர்நிலைப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்குமட்டும்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது. துவக்கப் பள்ளி, உயர்துவக்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு அத்தகைய அனுமதி அளிப்பதில்லை. ஆகவே, ஆசிரியர்கள் எந்தப் பள்ளியில் பணி புரிந்தாலும், அவர்கள் பி. ஏ. பாஸ் செய்திருந்தால் எம்.ஏ. படிக்க அனுமதியளிக்க அரசு ஆவன செய்யுமா?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட தடை எதும் இல்லை என்று குறிப்பிட்டேன். இப்பொழுது பி.ஏ. பட்டத் தேர்வுகளுக்கு எப்படி அனுமதிக்கப்படுகிறதோ அதேமாதிரித்தான் எம்.ஏ. பட்டத் தேர்வுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. இவைகளிலே எந்தத் தடையும் இப்பொழுது விதிக்கப்படவில்லை. சென்னை பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அப்படிப் படித்து எழுத வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது ரெசிடென்சியல் யூனிவர்சிடியாக இருப்பதால், அங்கே எம்.ஏ. பி.ஏ., பட்டப் படிப்பு பெறுகிறவர்கள் அங்கே சேர்ந்து படிக்க வேண்டும். அந்த பல்கலைக் கழகம்தான் அப்படி வைத்திருக்கிறது. மற்ற இரண்டு பல்கலைக் கழகங்களிலும் இப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தேர்வு எழுதலாம். துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பொழுது அந்தத் தடை எதும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அரிசன நல இலாக்காவின் மூலம் நடத்தப்படும் நடுநிலை பள்ளிகளுக்கு எம்.ஏ. பட்டதாரி, பி.ஏ. பட்டதாரி போன்றவர்களை தலைமையாசிரியர்களாக நியமித்துப் பணியாற்றச் செய்யும் சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பொதுவாகவே, உயர்துவக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக பி.ஏ. பி.டி. படித்தவர்களை நியமிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு இப்பொழுது மெல்ல மெல்ல அதற்காக எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அரிசன நலப் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, தனியார் பள்ளி ஆகிய எல்லாவற்றிலும் அந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எல்லா உயர்துவக்கப்பள்ளிகளிலும் தலைமையாசிரியர்கள் பி.ஏ. பி.டி. படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாக வைத்துத்தான் ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையை அரசாங்கம் தந்துவருகிறது.

கன்னிகைப்பேர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*183 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி- சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம் கன்னிகைப்பேர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குரிய கட்டடம் கட்டித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டு சில ஆண்டுகளாகியும் பள்ளிக் கட்டடம் இல்லாமல், இன்னும் மாணவர்கள் மரத்தடியில் படித்து வருகிறார்கள். ஆகவே, பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கி, ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த ஒரு உயர்நிலைப் பள்ளியானாலும், அதற்காக ஐந்து ஏக்கரா நிலம் தரவேண்டும். பத்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கட்டடத்திற்காக ரூ. 12,500 தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால், எங்களிடத்திலிருந்து அனுமதி பெறும்போது, "நாங்கள் எப்படியும் கட்டடம் கட்டிவிடுகிறோம், அனுமதி தாருங்கள்" என்று கேட்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதி தந்திருந்தால் இப்படிப் பட்ட சங்கடங்களுக்கு இடம் ஏற்படாது. ஆனால், அந்த இடத்திலுள்ளவர்கள் 12,500 ரூபாய் கட்டட நிதியாகத் திரட்டித் தருவதாகச் சொன்ன தொகை இன்னும் கட்டப்படவில்லை. ஆகவே, அதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தின் அளவில் ஒரு பங்கோ அல்லது இரண்டு பங்கோ கூட செலுத்தி, கட்டடங்களைக் கட்டும் முயற்சியை மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியின் மூலமாக மேற்கொள்ளலாம்.

மாயூரம் நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள்

*184 வினா : திரு. என். இட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972-73-ஆம் ஆண்டில், மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிகள் கட்டிக்கொள்வதற்கென அரசு வழங்கிய கடன் மற்றும் மானியத்தொகை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73-ஆம் ஆண்டில் மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிக் கட்டிக் கொள்வதற்கென கடன் மற்றும் மானியத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

*Islamic contribution for Tamil*

*185 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to conduct any research into the Islamic contribution for Tamil in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : To create greater interest among all sections of the people and to make the language richer, may I know whether such all-round, consolidated research would be conducted?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசின் சார்பாக இப்படிப்பட்ட முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. நான் முன்பு ஒரு வினாவிற்கு விடையளிக்கும்போது கூறியதைப்போல் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளுகிறது. தனியாக பி.எச்டி. பட்டம் பெற விரும்புகிறவர்கள் தனித் தனி தலைப்பை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பட்டம் பெறுகிறார்கள். அந்த வகையிலும் கூட இதை ஒரு பொருளாக எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்ய வழிவகை இருக்கிறது. இலக்கியத் துறை ஆராய்ச்சிக்கென்று மூன்று பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சித் துறைக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு சங்க இலக்கியங்கள், வேறு பல தமிழ் இலக்கியங்கள் இவற்றை எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அந்த வகையிலும் மேற்கொள்ளலாம். இது தவிர ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் தமிழ் ஆராய்ச்சித் துறை தனியாக இருந்து வருகிறது. அந்த ஆராய்ச்சித் துறைகளில் இப்படிப்பட்ட பொருள்களை மேற்கொண்டு இப்பொருள்கள் பற்றி ஆராய்ச்சி நூல்கள் வெளியிட முயற்சி செய்யலாம்.

திரு. கே. எ. வகாப் : நம்முடைய தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் கவிஞர்கள் பொதுவாக நல்ல சேவை செய்திருக்கிறார்கள். உமருப் புலவர், குன்னக்குடி மஸ்தான் புலவர் போன்றவர்களின் நூல்களை எல்லாம் ஆராய்ச்சி செய்ய பல்கலைக் கழகங்களிலிருந்து முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ? அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிற அந்த ஆராய்ச்சிக் குழுவில் நல்ல முஸ்லிம் அறிஞர்கள், தமிழ் நூல்களை வெளியிட்டுள்ள அப்துல் ரகீம் போன்ற இலக்கிய கர்த்தாக்கள் போன்றவர்கள் இடம் பெற அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை இப்பிரச்சினைகளை மேற்கொள்ளலாம். இப்படிப்பட்ட ஆராய்ச்சி வேண்டுமென்ற எண்ணத்தைக்கூட பல்கலைக் கழகத்திற்கு தெரிவிக்கலாம். அதை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைப்பதில் அரசுக்கு தடை இல்லை. இருந்தாலும் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை செய்யவேண்டியது பல்கலைக் கழகங்களும் அதற்கென்று இருக்கிற தனியார் துறைகளுமாகும். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் தனியார் யாராவது செய்து நூல் வெளியிட விரும்பினால் கூட அதற்கு என்று ஓரளவு குறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில் நிதி உதவி செய்ய தனியாக முயற்சி இருக்கிறது. அப்படிச் சில பேர்கள் நூல்கள் எழுத நிதி உதவி வேண்டுமென்று கோருகிறார்கள். அதற்கு என்று ஒரு குழு இருந்து ஆராய்கிறது. அப்படி யாராவது





ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்றால் அவைகளை அரசுக்கு அனுப்பி வைத்தால் குழுவினர் ஆராய்ந்து எந்த அளவிற்கு உதவி செய்யலாம் என்பது பற்றிக்கூட யோசிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இதுவரையிலும் இஸ்லாம் மதத்தின்மூலம் தமிழுக்கு என்ன காண்ட்ரிப்யூஷன் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. புத்தமதம், ஜைன மதம், அதேமாதிரி கிருத்துவ மதம் இவற்றைச் சார்ந்தவர்கள், அம் மதங்களை சார்ந்த புலவர்கள் பலர் தமிழுக்கு நல்ல சேவை செய்திருக்கிறார்கள். இம்மாதிரி முஸ்லிம் மதத்தைத் சார்ந்தவர்கள்—மஸ்தான் என்று சாதாரணமாகச் சொல்கிறார்கள்—அப்படி காண்ட்ரிப்யூட் செய்ததாக பி.எச்டி. பட்டம்பெற யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா ? இதுவரை அந்தமாதிரி ஏற்பாடு ஏதாவது உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. பல்கலைக் கழகத்தினிடம்தான் அந்தத் தகவலைக் கேட்டுப் பெறவேண்டும். கிருத்துவம்—தமிழ், ஜைனம்—தமிழ், சமணம்—தமிழ், இஸ்லாம்—தமிழ் என்று மயிலை வேங்கடசாமி அவர்கள் ஒரு தனி நூல் எழுதியிருக்கிறார்கள். அப்படி யாராவது இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு நிதி உதவி கேட்டால் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக சில ஏற்பாடுகள் இருக்கின்றன. பல்கலைக் கழகங்களில் இப்படிப்பட்ட முயற்சிகள் இருக்கின்றனவா என்று அறிந்து சொல்லலாம் தனிக் கேள்வி போட்டால்.

திரு. கே. எ. வகாப் ; உமருப் புலவரின் சீராப் புராணம் பாடப் புத்தகங்களில் அதிகமாக இடம் பெற்று வந்தது. ஆனால் அண்மையில் அது அவ்வளவாக அதில் இடம் பெறுவதில்லை. ஆகவே, முன்போல அது பாடப் புத்தகங்களில் அதிக அளவிற்கு இடம் பெறுவதற்கு அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. பாட திட்டங்கள் வகுப்பதில் அரசு தலையிட இயலாது. அதற்கென்று ஒரு வல்லுநர் குழு இருக்கிறது. அவர்கள் எந்தெந்த அளவில் தேர்ந்தெடுக்கிறார்கள், எந்தெந்த வகுப்புக்களுக்குப் போட்டிருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் எந்தெந்த வகுப்புக்களுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், என்ன முறையைக் கையாளுகிறார்கள் என்று தெரிந்து கூறலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : முஸ்லிம் சமுதாயத்தில் தமிழில் நல்ல பாண்டியத்துவம் பெற்ற புலவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நல்ல பல புத்தகங்களை வடித்துத் தருவார்களானால் அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதற்கு என்று தனியாக உதவி செய்வதற்கு தமிழ் வளர்ச்சித் துறை இருக்கிறது. அதில் ஒரு குழுவினர் இருக்கிறார்கள். அந்த நூல்கள் எல்லாம் வைக்கப்பட்டு அவர்கள் ஆராய்ந்து எந்தெந்த

திரு. என், கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது பி.ஏ. முடித்து விட்டு, எம்.ஏ. படிக்க வேண்டுமானால், உயர்நிலைப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்குமட்டும்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது. துவக்க பள்ளி, உயர்துவக்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு அத்தகைய அனுமதி அளிப்பதில்லை. ஆகவே, ஆசிரியர்கள் எந்தப் பள்ளியில் பணி புரிந்தாலும், அவர்கள் பி. ஏ. பாஸ் செய்திருந்தால் எம்.ஏ. படிக்க அனுமதியளிக்க அரசு ஆவன செய்யுமா?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட தடை ஏதும் இல்லை என்று குறிப்பிட்டேன். இப்பொழுது பி.ஏ. பட்டத் தேர்வுகளுக்கு எப்படி அனுமதிக்கப்படுகிறதோ அதேமாதிரித்தான் எம்.ஏ. பட்டத் தேர்வுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. இவைகளிலே எந்தத் தடையும் இப்பொழுது விதிக்கப்படவில்லை. சென்னை பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அப்படிப் படித்து எழுத வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது ரெசிடென்சியல் யூனிவர்சிடியாக இருப்பதால், அங்கே எம்.ஏ. பி.ஏ., பட்டப் படிப்பு பெறுகிறவர்கள் அங்கே சேர்ந்து படிக்க வேண்டும். அந்த பல்கலைக் கழகம்தான் அப்படி வைத்திருக்கிறது. மற்ற இரண்டு பல்கலைக் கழகங்களிலும் இப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தேர்வு எழுதலாம். துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பொழுது அந்தத் தடை ஏதும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அரிசன நல இலாக்காவின் மூலம் நடத்தப்படும் நடுநிலை பள்ளிகளுக்கு எம்.ஏ. பட்டதாரி, பி.ஏ. பட்டதாரி போன்றவர்களை தலைமையாசிரியர்களாக நியமித்துப் பணியாற்றச் செய்யும் சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பொதுவாகவே, உயர்துவக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக பி.ஏ. பி.டி. படித்தவர்களை நியமிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு இப்பொழுது மெல்ல மெல்ல அதற்காக எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அரிசன நலப் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, தனியார் பள்ளி ஆகிய எல்லாவற்றிலும் அந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எல்லா உயர்துவக்கப்பள்ளிகளிலும் தலைமையாசிரியர்கள் பி.ஏ. பி.டி. படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாக வைத்துத்தான் ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையை அரசாங்கம் தந்துவருகிறது.

கன்னிகைப்பேர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*183 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி- சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம் கன்னிகைப்பேர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குரிய கட்டடம் கட்டித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டு சில ஆண்டுகளாகியும் பள்ளிக் கட்டடம் இல்லாமல், இன்னும் மாணவர்கள் மரத்தடியில் படித்து வருகிறார்கள். ஆகவே, பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கி, ஒரு தனிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த ஒரு உயர்நிலைப் பள்ளியானாலும், அதற்காக ஐந்து ஏக்கரா நிலம் தரவேண்டும். பத்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கட்டடத்திற்காக ரூ. 12,500 தரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால், எங்களிடத்திலிருந்து அனுமதி பெறும்போது, "நாங்கள் எப்படியும் கட்டடம் கட்டிவிடுகிறோம், அனுமதி தாருங்கள்" என்று கேட்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு அனுமதி தந்திருந்தால் இப்படிப்பட்ட சங்கடங்களுக்கு இடம் ஏற்படாது. ஆனால், அந்த இடத்திலுள்ளவர்கள் 12,500 ரூபாய் கட்டட நிதியாகத் திரட்டித் தருவதாகச் சொன்ன தொகை இன்னும் கட்டப்படவில்லை. ஆகவே, அதற்கான முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தின் அளவில் ஒரு பங்கோ அல்லது இரண்டு பங்கோ கூட செலுத்தி, கட்டடங்களைக் கட்டும் முயற்சியை மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியின் மூலமாக மேற்கொள்ளலாம்.

மாயூரம் நகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள்

*184 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972-73-ஆம் ஆண்டில், மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிகள் கட்டிக்கொள்வதற்கென அரசு வழங்கிய கடன் மற்றும் மானியத்தொகை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73-ஆம் ஆண்டில் மாயூரம் நகராட்சிக்கு துவக்கப்பள்ளிக் கட்டிக் கொள்வதற்கென கடன் மற்றும் மானியத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

*Islamic contribution for Tamil*

*185 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to conduct any research into the Islamic contribution for Tamil in this State; and

(b) if so, the details thereof?

நூல்களை ஏற்றுக்கொள்ளலாம், எவற்றைத் தள்ளலாம், எவை புதுமையாக உள்ளன, எந்தளவிற்கு உதவி செய்யலாம் என்று கண்டறிந்து அதற்கேற்றபடி உதவி செய்ய பரிந்துரை செய்திருக்கள். அதை அரசு ஏற்று அதற்கு ஓரளவு உதவி செய்துகொண்டு வருகிறது.

## தஞ்சை மருத்துவ மனை

*186 வினு—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள பி வகுப்பு அறைகளில் குளிக்கும் அறைகளை இணைத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

## சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*187 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது.

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இவ்வினவுக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: சிவகங்கை பகுதி தண்ணீர் வறட்சியான பகுதி. அங்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு அந்தப் பகுதிக்கு வருகிற ஆண்டிலாவது குடிதண்ணீர் கொண்டு வருவதற்கு செயல்பட இருக்கிற திட்டங்களை விரைவில் கொஞ்சம் வேகமாகக் கொண்டுவர முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வறட்சியான சிவகங்கைப் பகுதி பற்றி உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். வறட்சி குறைவாக இருக்கிற திருப்புவனம் பகுதிக்கும் குடிதண்ணீர் அவசியம் வேண்டுமென்று கருதுகிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிற்கு முழுவதும் திட்டங்கள் பரவலாக தேவைப் படுகிறது. அதில் சிவகங்கை ஊராட்சி



ஒன்றியப் பகுதிக்கு, ஏறத்தாழ 41 கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்று திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் இசைவை—அவர்கள் தருகிற திட்டம் என்ற அடிப்படையில்— கோரி அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்கள் 13, 14 தொகுப்புகளில் மூன்று, நான்கு தொகுப்புகளைத்தான் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அப்படி ஏற்றுக்கொள்கிற வேகத்தைப் பொறுத்து இத் திட்டங்களைச் செயல் படுத்தமுடியும்.

## நரிக்குடி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

*188 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1972-73, 1973-74, ஆகிய வருடங்களில் திட்டங்கள் எதுவும்எடுத்துக் கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: நரிக்குடிப் பகுதி வறட்சிக்கு பெயர்பெற்ற பகுதியாகும். அங்கு தண்ணீர் சமீபத்தில் கூட கிடைப்பதில்லை. அந்த நரிக்குடி ஒன்றியத்தில் தண்ணீர் எடுக்க மூன்று நான்கு மைல்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி மூன்று நான்கு மைல்கள் சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியிருப்பதால் பெண்கள் தலையில் இருக்கிற முடிகள் எல்லாம் உதிர்ந்துபோய் பொட்டல் விழுகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தப் பகுதிக்கு உடனடியாக வருகிற ஆண்டிலாவது அரசு குடிதண்ணீர் வழங்குவது பற்றி ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இத்திட்டம் மத்திய அரசு ஒத்துக் கொள்கிற அடிப்படையில் மட்டும் நிறைவேற்றப்படுகிற ஒரு திட்டமாக அமைந்து விட்டது. ஆனால் உள்ளாட்சித் துறை மூலம் எந்தெந்தக் கிராமங்கள் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ஒரு தனித் திட்டம் இருக்கிறது. ஒன்றியத்தில் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 20,000 அல்லது 30,000 ரூபாய் செலவிடப் படுகிறது. அத்திட்டத்தின் மூலம் எங்கு மிக நெருக்கடியாக இருக்கிறதோ, எங்கு அதிகமான பாதகம் இருக்கிறதோ, அந்தப் பகுதி கவனிக்கப் படலாம். பரவலாகப் போடுகிற திட்டங்களுக்கு ஏராளமான தொகை

ஒதுக்கப்படுகிற அடிப்படையில்தான் பரவலாக நிறைவேற்ற முடியும். இந்த ஒன்றியத்திற்கு ஏறத்தாழ 38 கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என்ற கருத்துக்கு ஏற்றவாறு மத்திய அரசின் இசைவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

## மானாமதுரை ஒன்றியத்தில் குடிநீர் வழங்குத் திட்டங்கள்

*189 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வருகிற ஆண்டு நிதி நிலைமை இடம் தருதவற்கேற்ப, மத்திய அரசு இசைவு தருவதற்கேற்ப இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : மானாமதுரை ஒன்றியத்திற்கு குடிதண்ணீருக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒரு கிராமத்துதிற்குக் கூட போதுமானதாக இல்லை. எனவே ஒன்றியத்தின்மூலம் அந்தமாதிரி வேலைகளைப் பூர்த்தி செய்துவிட முடியாது. ஆகவே மத்திய அரசிடம் போய் குடிதண்ணீர் திட்டத்திற்காக தனியாகப் பெற்று வேண்டியதைச் செய்ய நமது அரசு அவர்களை வேண்டிக் கேட்டு உடனடியாக குடிதண்ணீர் திட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைத்தான் நான் முன்னாலே குறிப்பிட்டேன். பெரும் அளவு கடன் உதவி, நிதி உதவி என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட நிதி உதவி வழங்குவதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றின் கொள்கையில் மாற்றம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது. $3\frac{3}{4}$ கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு $1\frac{3}{4}$ கோடி அளவுக்கு மத்திய அரசு இசைவு தந்து இருக்கிறார்கள். தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்ற, நிறைவேற்ற மத்திய அரசு பணம் ஒதுக்குகிறார்கள். இத்திட்டத்தை "ஆக்சிலரேட்டட் ப்ரோக்கிராம்" அடிப்படையில் நிறைவேற்ற முடியும். ஆனால் சில திட்டங்கள் குடி நீர் வாரியத்தின் மூலமாக—அதாவது ஆழக் குழாய் கிணறு அமைப்பது போன்றவற்றிற்கு—எந்த கிராமத்திற்கு எந்த அடிப்படையில் பயன்படுமோ அந்த அடிப்படையில் நிறைவேற்ற, அதை அந்த ஊராட்சித் துறையின் ஒத்துழைப்போடு நிறைவேற்ற, முயற்சிக்கலாம் என்று நான் நம்புகிறேன்.



திரு. த.சோனையா : தலைவரவர்களே, கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து வருமானத்தை வைத்து, எங்கேயாவது கடன் வாங்கி அந்தக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று பார்த்தால் பஞ்சாயத்துக்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. அதனால் அதைச் சமாளிக்க சிரமமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே முழுப் பொறுப்பு எடுத்து குடிநீர் வழங்குவதற்காவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிதி வசதி பெருகுவதற்கான வாயில்கள் காணப்பட்டால், அந்த வசதிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைப் பரவலாக நிறைவேற்ற முடியும்.

## கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களது ஊதியம்

*190 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில், நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக உள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் தரப்பட்டவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

கள்ளர் சீரமைப்புபின் கீழ் இயங்கிவரும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணி புரியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் ஆகஸ்டு 1973-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்

*191 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனுஷ்கோடிப் பகுதியில் மிகுதியிருக்கும் கரையைச் சிறுக சிறுக கடல் அரிப்பதைத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனுஷ்கோடி பகுதியில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி விரிவாக ஆய்வு நடத்துகிற சிறப்புப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் அளிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

ஒதுக்கப்படுகிற அடிப்படையில்தான் பரவலாக நிறைவேற்ற முடியும். இ
ஒன்றியத்திற்கு ஏறத்தாழ 38 கிராமங்களுக்குத் தண்ணீர் வ
வேண்டும் என்ற கருத்துக்கு ஏற்றவாறு மத்திய அரசின் இசை
எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

## மானாமதுரை ஒன்றியத்தில் குடிநீர் வழங்குத் திட்டங்கள்

*189 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு
துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி
பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றிய
தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகி
வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்
அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வருகிற ஆண்டு நிதிநிலைமை
இடம் தருதவற்கேற்ப, மத்திய அரசு இசைவு தருவதற்கேற்ப இத்திட்டங்கள்
மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : மானாமதுரை ஒன்றியத்திற்கு குடிதண்ணீருக்
காக ஒதுக்கப்படுகிற பணம் ஒரு கிராமத்துதிற்குக் கூட போதுமானதாக
இல்லை. எனவே ஒன்றியத்தின்மூலம் அந்தமாதிரி வேலைகளைப் பூர்த்தி
செய்துவிட முடியாது. ஆகவே மத்திய அரசிடம் போய் குடிதண்ணீர்
திட்டத்திற்காக தனியாகப் பெற்று வேண்டியதைச் செய்ய நமது
அரசு அவர்களை வேண்டிக் கேட்டு உடனடியாக குடிதண்ணீர் திட்டத்திற்கு
ஏற்பாடுகள் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைத்தான்
நான் முன்னாலே குறிப்பிட்டேன். பெரும் அளவு கடன் உதவி, நிதி
உதவி என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்ப
இன்றன. இப்படிப்பட்ட நிதி உதவி வழங்குவதற்காக ஆயுள் காப்பீட்டு
கழகம் போன்றவற்றின் கொள்கையில் மாற்றம் இப்போது ஏற்பட்
இருக்கிறது. 3¼ கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட
தற்குப் பிறகு 1¾ கோடி அளவுக்கு மத்திய அரசு இசைவு தந்து
இருக்கிறார்கள். தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்ற, நிறைவேற்ற
மத்திய அரசு பணம் ஒதுக்குகிறார்கள். இத்திட்டத்தை " ஆக்சிலரேட்
ப்ரோக்கிராம் " அடிப்படையில் நிறைவேற்ற முடியும். ஆனால் சில
திட்டங்கள் குடி நீர் வாரியத்தின் மூலமாக—அதாவது ஆழக் குழாய்
கிணறு அமைப்பது போன்றவற்றிற்கு—எந்த கிராமத்திற்கு எந்த அடிப்
படையில் பயன்படுமோ அந்த அடிப்படையில் நிறைவேற்ற, அதை அந்த
ஊராட்சித் துறையின் ஒத்துழைப்போடு நிறைவேற்ற, முயற்சிக்கலாம்
என்று நான் நம்புகிறேன்.



திரு. த. சோனையா : தலைவரவர்களே, கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து வருமானத்தை வைத்து, எங்கேயாவது கடன் வாங்கி அந்தக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று பார்த்தால் பஞ்சாயத்துக்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. அதனால் அதைச் சமாளிக்க சிரமமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே முழுப் பொறுப்பு எடுத்து குடிநீர் வழங்குவதற்காவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிதி வசதி பெருகுவதற்கான வாயில்கள் காணப்பட்டால், அந்த வசதிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைப் பரவலாக நிறைவேற்ற முடியும்.

## கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களது ஊதியம்

*190 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில், நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக உள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் தரப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

கள்ளர் சீரமைப்புபின் கீழ் இயங்கிவரும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணி புரியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் ஆகஸ்டு 1973–லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்

*191 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனுஷ்கோடிப் பகுதியில் மிகுதியிருக்கும் கரையைச் சிறுக சிறுக கடல் அரிப்பதைத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனுஷ்கோடி பகுதியில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி விரிவாக ஆய்வு நடத்துகிற சிறப்புப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் அளிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தனுஷ்கோடி பகுதியில் புயலால் பெரும் பகுதி கடலின் மூழ்கி இருக்கிறது. மீதி இருக்கும் பகுதியும் சிறுக சிறுக ஆழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படி ஆழ்ந்து கொண்டு இருப்பதைத் தடுக்க செயற்குறிப்பு வைத்து இருப்பதற்காக அந்தப் பகுதி மக்கள் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதில் உடனடியாக கவனம் செலுத்தி இருக்கின்ற பகுதிகளையாவது காப்பாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : இது ஒரு பெரிய திட்டமானதால், மத்திய அரசாங்கத்திற்கு இது பற்றி எடுத்துச் சொல்லி, மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்து இருக்கிறதுதா ? அப்படியானால் எவ்வளவு நிதியை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் பகுதியில் பொதுவாக கடல் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 2 கோடி செலவாகும் என்றும், அதை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்றும் நம்முடைய அரசு யோசனை சொல்லிற்று. அது ஏற்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டைச் சுற்றி கடல் அரிப்பு எந்தெந்தப் பகுதிகளில் ஏற்பட்டு வருகிறது என்பதை விரிவாக ஆய்வு செய்து, அந்தப் பட்டியலை மத்திய அரசுக்குச் சமர்ப்பித்து அதனுடைய ஒப்புதலைப் பெற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அடுத்த கேள்வியும் கடல் அரிப்பு பற்றித்தான் இருக்கிறது. அப்போது நான் விளக்கமாகச் சொல்கிறேன்.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவரவர்களே, புயலுக்குப் பின் தனுஷ்கோடி என்ற ஊரே போய்விட்டது. அதை புனர் அமைக்கச் செய்கிற திட்டத்தை சர்க்கார் ஏற்பாடு செய்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு ப.உ. சண்முகம் : தனுஷ்கோடியில் ஒரு "பியர்" (pier) கட்டப்பட்டு இருக்கிறது. சிங்களத்திலிருந்து வரும் அகதிகள் இறங்குவதற்காக அது கட்டப்பட்டு இருக்கிறது. மனிதர்கள் அங்கே போகப்பயப்படுகிறார்கள். அங்கே மனித நடமாட்டமே கிடையாது. அலுவலர்களோ, அதிகாரிகளோ அங்கே போவது கிடையாது. தனுஷ்கோடி பூராவும் தண்ணீர் இருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது. இப்போது அகதிகள்—இலங்கையிலிருந்து வருகிறவர்கள்—ராமேஸ்வரம் "பியரி" லிருந்து தான் இறங்குகிறார்கள்.





திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட அரிப்புகளைத் தடுப்பதற்காக ஹாலந்து நாட்டில் சுமார் 30 மைல் 40 மைல் தூரத்திற்கு கடல் தண்ணீரை இறைத்து விட்டு, புதிய திட்டங்களை அங்கே துவக்குகிறார்கள். இதுபோன்று இங்கேயும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : நான் இன்னும் ஹாலந்து போகவில்லை.

திரு. கே.டி.கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த இராமேஸ்வரத்தில் அடிக்கடி புயல் வருகிறது. 1964-ம் ஆண்டில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்த்துக்கொள்ளப் பட்டிருந்தாலும், இந்த ஆண்டிற்கு எந்த அளவிற்கு அந்தப் பகுதியில் "ஈ-எரோஷனைத்" தடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் தனியாக அதிகாரிகளைப் போட்டு கடல் அலைகள் எந்த அளவிற்கு உயருகிறது, எந்த மாதத்தில் எப்படியிருக்கிறது என்று கணக்கு எடுக்க வேண்டுமென்றும், அந்தக் குறிப்பு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து எடுக்கவேண்டுமென்றும், அப்போதுதான் தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அதிகாரிகள் தகவல் தந்து இருக்கிறார்கள். எனவே அந்த அதிகாரிகளை நியமித்து கடல் அலைகளின் உயரத்தைக் கணக்கெடுப்பது குறித்து அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, பெரும்புயலால் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக, அறிவுலக மேதை, அறிவுக் களஞ்சியம் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும், தடுப்புச் சுவர் கட்டி அதன் மூலம் தடுக்கலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய கருத்தை மனதில் வைத்து, இங்கே தடுப்புச் சுவர் போன்ற சுவர் எழுப்ப அரசாங்கம் ஏதாவது செயற்குறிப்பு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் அதைத் தான் தெரிவித்தேன். ஏறக்குறைய 50 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடற்கரைமருங்கும் தடுப்புச் சுவர் கட்டுவது பற்றிய திட்டம்தான் அது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, தனுஷ்கோடி பகுதிக்கு ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்கள் அங்கே சென்று குளித்து தலை முழுகினால் புண்ணியம் கிடைக்கும் என்று கருத்து இருக்கிறது. அந்த ஒரு காரணத்திற்காக மட்டும்தான் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? அல்லது வேறு என்னென்ன காரணங்களுக்காக பயன்படும் என்று அரசு ஆராய்ந்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, தனுஷ்கோடி பகுதியைப் பற்றி நான் ஏற்கெனவே தெரிவித்தேன். கடல் போக்குவரத்திற்கு இலங்கை போன்ற இடங்களிலிருந்து வரும் அகதிகள் இறங்குவதற்காக ஒரு "பியர்" கட்டப்பட்டு இருக்கிறது. அதாவது ஒரு சிறிய துறைமுகம் கட்டப்பட்டு இருக்கிறது. அதைத் தவிர அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் பக்தர்கள் போவதற்கும் இருக்கிறது. இப்போது யாரும் அங்கே போவதில்லை. போவதற்கு பயப்படுகிறார்கள்.

திரு. எம். பெரியசாமி : தலைவரவர்களே, ஹாலந்து நாட்டிற்கு அமைச்சர் போகவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை இங்கே நிறைவேற்றுவதற்காக உலக நாடுகளுக்கு அவர்கள் சுற்றுப் பயணம் செய்து, அந்தத் திட்டங்களைக் கண்டறிந்து இங்கே நிறைவேற்ற வழிவகை செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் சிபார்சு செய்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

* 192 Q.—Thiru N. Dennis : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that sea erosion near Thangapattinam in Kanyakumari district around the month of June 1973 caused damages to dwelling houses; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1973 ஜூன் மாதம் 18, 19 தேதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டிணம் கிராமத்தில் ஏற்பட்ட கடலரிப்பால் இரண்டு குடிசைகள் சேதமுற்றன. மற்றும் 50 தென்னை மரங்களும் சாய்ந்துவிட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் பல கிராமங்களின் பெரும் பகுதி கடல் அரிப்புக்குள்ளாகி 7 மீனவப் பெண்கள் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகியிருக்கிறார்கள். நிரந்தரமாக கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கேரளத்தில் கடலோரப் பகுதியில் கடலின்உள் கல்லை அடுக்கி தடுத்து இருக்கிறார்கள். அந்த முறையில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, கேரளத்தில் போடப்பட்டிருக்கும் தடுப்புச் சுவர் போன்ற ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்காகத்தான் கன்னியாகுமரி பகுதியில் ஏறத்தாழ $14\frac{1}{2}$ கிலோ மீட்டர் நீளத்திற்கு கல் போடுவது என்று திட்டமிடப்பட்டு மொத்த செலவு ரூ. 3·51 கோடியாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. அதை முழுவதும் இந்திய அரசாங்கம் மானியமாக வழங்கவேண்டுமென்று நாம் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் மானியமாகக் கொடுக்க முடியாது,



கடனாகத்தான் கொடுக்கமுடியும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் "டெக்னிகல் கிளியரென்ஸ்" கொடுக்கவில்லை. அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கடல் அரிப்பு ஜூன், ஜூலை மாதங்களில் வருஷந்தோறும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மிடாலம் என்ற கிராமத்தில் ரூ. 85,000 செலவழித்து தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. ஆனால் அந்தத் தடுப்புச் சுவர் கட்டிய ஒரு மாதத்திற்குள் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே, இம்மாதிரி பணத்தை அரசு செலவு செய்கிறபோது சரியான முறையில் நிரந்தரமாக பரிகாரம் காணும் முறையில் திட்டங்களை வகுப்பார்களா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அது போன்ற ஒரு திட்டத்தைத்தான் நான் தெரிவித்தேன். ஏறக்குறைய ரூ. 3·51 கோடி அளவில் செலவு செய்து நிரந்தரமான தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று நான் திட்டமிட்டு இருக்கிறோம். மத்திய அரசாங்கம் இன்னும் அதற்கு "டெக்னிகல் கிளியரன்ஸ்" தரவில்லை. சில தகவல்கள் கேட்டு இருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் கொடுத்து, அவர்கள் அனுமதி கிடைத்த பிறகு வேலை தொடங்கப்படலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கடல் அரிப்பு எந்தெந்தப் பகுதிகளில் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கை தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் விரிவாக அளிப்பதாகக் கூறினார்கள். அதைப்பற்றி தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இராமேஸ்வரம், கன்னியாகுமரி பகுதிகளில்தான் கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது.

முற்பகல் [9.30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கடலரிப்பினால் இரண்டு குடிசைகள் நாசமானதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்பட்டதா ? தென்னை மரங்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு நஷ்ட ஈடுதரப்பட்டதாக தகவல் இருக்கிறது. எவ்வளவு ரூபாய் என்ற தகவல் இப்பொழுது இல்லை.

## காவிரி ஆற்றில் குறுக்கே புதிய பொறிமதகு

*193—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரியில் குறுக்கே புதிய ரெகுலேட்டர் ஒன்று அமைத்து பழங்காவிரி மூலம் அதன் கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதியினை சீராக்கி அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

திரு ரா. ரா. முனுசாமி : மதுரை மாவட்டத்தில் அமைப்பது போல எல்லா மாவட்டங்களிலும் அப்பேர்ப்பட்ட தொழிற்சாலையை அமைப்பதற்கு முழு முயற்சி எடுத்து, வசதி வாய்ப்புகள் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து, மதுரை மாவட்டத்தில் ஆரம்பித்தது போல மற்ற மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப் படும்.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : இந்த புளோரின் தொழிற்சாலை துவக்குகின்ற பணி எந்த நிலையில் இருக்கிறது ? எப்பொழுது இந்த ஆலை துவக்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : இதற்குரிய அனுமதி கிடைத்ததற்குப் பின்னாலே நாம் அனைத்து முயற்சிகளையும் செய்து தொழில் நுட்ப உதவியும் பெறுவதற்கு ஏற்பாடு செய்த பிறகு மத்திய அரசு இது போன்ற தொழிற்சாலையை வேறு எங்கேயாவது ஆரம்பிக்கலாமா, இங்கே ஆரம்பிப்பது நியாயமா என்று மறு பரிசீலனை செய்து வருகிறது. விரைவிலே நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் நமக்கு ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் எவ்வளவு மிச்சமாகும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : கூட்டுத் துறையில் எந்த ஸ்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தத் துறை தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிப்பட்ட நிறுவனம் இதிலே ஈடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : கூட்டுத் துறையிலே கூட்டுத் தொழிற்சாலை ஆரம்பிப்பதில் யாருடன் கூட்டு வைத்திருக்கிறார்கள் யாருக்கு எந்த அந்தஸ்து இருக்கிறது ? நிர்வாகப் பொறுப்பு யாரிடம் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லெட்டர் ஆஃப் இன்டென்ட் கொடுக்கப்பட்டது. அதிலே இப்பொழுது தகராறு வந்துவிட்டது. ஆகவே தான் முடிவாக இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. நாராயண செட்டியார் என்பவர் மனுப்போட்டு முயற்சி எடுத்திருக்கிறார்கள். அவர் அதற்கு மேலே எந்த முடிவும் எடுக்காத அளவுக்கு மத்திய அரசாங்கம் மறு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தொழிற்சாலை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கிறதா ? அரசாங்கம் அதுபற்றி ஏதாவது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையிலே இதுபற்றி நமது அரசுத் தரப்பில் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம். அனுமதி கொடுத்ததற்குப் பின்னால் மறு பரிசீலனை செய்வது சரியல்ல. அதுவும் அரசாங்கம் ஆரம்பித்த தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறோம்.

திரு. து. சோனையா : இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிற இடம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். பிற்படுத்தப்பட்ட பகுதியாகிய மணலூரில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வற்புறுத்தி, அங்கே அந்தத் தொழிற்சாலையை உடனே ஏற்பாடு செய்வதற்கு அரசு ஏதாவது விசேஷ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்திலே ஆரம்பிக்கப் கூடாது என்ற கருத்தும் மத்திய அரசினிடம் இருக்கிறது. ஆகவே, இடமும் மறுபரிசீலனை செய்யப்படும்.

## சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன்

* 198 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டில், சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி சங்கத்துக்கு நூல் வாங்குவதற்கென அரசு கடன் தொகை ரூபாய் 10,000 வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## பீங்கான், மட்பாண்டங்கள் தொழில் பிரிவு.

* 199 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பீங்கான், மட்பாண்ட தொழிலுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் குறுக்கே பொறிமதகு கட்டும் வேலைக்காக 1973-ம் ஆண்டு ஜூன் மாத இறுதி வரை ரூ. 1,50,770 செலவழிக்கப்பட்டுள்ளது.

### கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்துதல்

*194—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் கூற்றம், கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏரிகளை புதுப்பிப்பதற்கான திட்டத்தின் கீழ்இந்த ஏரியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம்முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இந்த ஏரியை புதுப்பிப்பதற்கு "டீ ஸில்டிங் கம் ரெக்லேமேஷன் ஸ்கீமின்" கீழ் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அநேகமாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஏரியை ஆழப்படுத்துவதற்குப் பதிலாக அதில் தற்சமயம் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : ஏரியை விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைப் போன்ற திட்டம் கிடையாது.

### கோவையில் புறச்சாலை அமைப்பு

*195 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள புறச்சாலைத் திட்ட வேலை எப்போது துவங்கும்?

(இ) மேற்படி வேலை எப்போது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இவ்வேலை இன்னும் துவக்கப்படவில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.



திரு. சு. துரைசாமி : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ரூ. 36,425 இலட்சம் செலவு ஆகும் என்று திட்டமிடப்பட்டு, இதற்கான தொழில் நுட்ப ஒப்பளிப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது.

### மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம்

*196 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தில் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மார்ச் 1974 இறுதிக்குள் வேலை முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த மேம்பாலத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ? மாநில அரசு எவ்வளவு ஒதுக்கித் தந்திருக்கிறது? ரயில்வேத் துறை எவ்வளவு தந்திருக்கிறது என்கின்ற விவரம் அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

### *Factory for production of Fluorine*

* 197 Q.—Thiru R. R. MUNUSWAMY :
Thiru P. SOUNDARAPANDIAN :
Thiru N. K. PALANISWAMY :
Thiru T. SONIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any factory for the manufacture of Fluorine is to be started in the Joint Sector in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு செ.மாதவன் : (அ) and (இ) : ஆண்டு ஒன்றுக்கு 6,000 டன் அலுமினியம் புளோரைட் தயாரிக்க ரூபாய் 3 கோடி செலவில் கூட்டுத் துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவப்படும். கூட்டுத் துறைக் கம்பெனியின் பெயர் தமிழ்நாடு புளோரின் அண்ட் அல்லைட் கெமிக்கல்ஸ் லிமிடெட். மதுரை நகரிலிருந்து 8 மைலில் மணலூர் என்ற இடத்தில் தொழிற்சாலை நிறுவப்படும்.

THIRU N. DENNIS: May I know the steps taken by this Government for man-power utilisation in this State and also the steps taken by this Government to avoid competition of machine to man-power?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எந்த முறைகளில் மனித சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த முறையில் மனித சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். மனித சக்தியை எப்படிப் பயன்படுத்திக் கொண்டு வேலை வாய்ப்பை உருவாக்க முடியுமோ அந்த முறையில் ஆராய்ந்து பார்க்கப்பட்டு வருகிறது. அதே சமயத்தில், மனித உழைப்புக்கும் யந்திர உழைப்புக்குமிடையே போட்டி இல்லாமல் பார்த்துக்கொண்டு வருகிறோம். அந்த முறையில்தான் இந்த அரசு செயல்பட்டு வந்திருக்கிறது. அதையே அரசாங்கத்தின் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister what is the man-power available in Tamil Nadu?

THE HON. THIRU S. MADHAVAN: I have no statistics now.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, மனித சக்தியைப் பயன்படுத்துவது குறித்து நம்முடைய மாநிலத் திட்டக்குழு ஆராய்ந்திருக்கிறதா? அப்படி ஆராயப்பட்டிருந்தால் அந்த ஆராய்ச்சியினுடைய முடிவுகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் ஏதாவது அமைச்சரிடமிருந்தால் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, நமது மாநிலத் திட்டக் குழுவைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. இந்த மாநில அரசு கூட்டிய ஒரு மாநாட்டில் பல விவரமான பொருட்களைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள்.

The planning strategy has to be such that it ensures planned economic development.

With a view to assessing the general employment situation, it would be necessary to analyse the growth of population, labour force and its characteristics periodically.

The scope of man-power planning has to widened so as to include educted man-power.

என்று பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைப் பற்றிதான் கருத்தரங்கு நடைபெற்றது.



திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது மாநிலத்திலுள்ள மனித சக்தியில் எத்தனை சதவிகிதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது? எத்தனை சதவிகிதம் பயன்படுத்துவதற்கு வழியில்லாமல் வேஸ்டாகப் போகிறது என்ற விவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஏற்கெனவே நான் சொன்னது போல், மனித சக்தியை எந்த அளவுக்குப் பயன்படுத்தி வேலைவாய்ப்பை உருவாக்க முடியும் என்று ஆராயப்பட்டு வருகிறது. ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் உறுப்பினர் கேட்ட புள்ளிவிவரங்கள் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, நமது மாநிலத்தில், திறமையுள்ளவர்களின் மனித சக்தி பயன்படுத்தப்படவில்லை என்ற குறை இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே நமது அரசு தேர்ந்தெடுத்து திறமை உள்ளவர்களின் மனித சக்தியை பயன்படுத்திக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பது என்பது உண்மை. இப்பிரச்னை இந்திய நாடு முழுவதுமுள்ள பிரச்னை. நமது மாநிலத்தில் எப்படி இந்தத் திறமை உள்ளவர்களின் மனித சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அப்படிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு ஆலோசனைகளுக்கு ஏற்ப பல வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கி[illegible]களை உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொ[illegible]கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாநாடு [illegible]த பல முடிவுகளி[illegible] லேபர் இன்டன்ஸீவ் ஸ்கீம் என்று இருக்கிற[illegible]. அப்படியானால் 1972-ம் வருஷத்திற்குப் பின்னால் லேபர் சேவிங் [illegible]வைஸ் முறைப்படி எந்த இடத்தில் தேவையில்லாமலிருக்கிறது குறிப்[illegible] டேனரி போன்ற இடங்களில் இது உட்படுத்தப்பட்டிருக்கிறத[illegible] என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது ஒரு [illegible]கண்டிரோவர்ஷியல் இஷ்யூ. பொதுவாக வேலைவாய்ப்பு கொடுக்க வேண்[illegible] [illegible]றசி எடுத்தாலும் சில தொழிற்சாலைகளில் யந்திர சக்தியைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குகின்ற வாய்ப்பும் வசதியும் இருந்தால் அந்த இடத்தில் யந்திர சக்தியைப் புகுத்துவது என்று செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதிலே நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் யந்திரங்களைப் புகுத்துவது காரணமாக, வேலைவாய்ப்பு இழப்பு என்ற நிலை ஏற்படாமலிருக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) : திருமழிசையிலுள்ள அரசுத்துறையில் நடத்தி வரும் விசை செங்கற் சூளையை நடத்துவதற்கும் வீட்டு வசதி வாரியத்தினுடைய விசை செங்கற் சூளையையும் அமைப்பதற்காகவும் ஒரு தனி நிறுவனம் "தமிழ்நாடு ஸெராமிக்ஸ் லிமிடெட்" என்ற கம்பெனியை அமைக்க 1973-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் அரசு ஆணையிட்டது. அரசுத் துறையிலும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திலும் உள்ள பீங்கான் மற்றும் மட்பாண்ட தொழிற்சாலைகளை இந்நிறுவனத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டு அவைகளைப் பற்றிய விவரங்கள் ஆய்விலுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனத்தைத் துவக்குகின்ற நேரத்தில் நம்முடைய நாட்டில் தயார் செய்கின்ற பீங்கான் மண்பாண்பங்களுக்கு வெளி நாடுகளில் அதிக கிராக்கி இருக்கிறதே, அதைக் கருத்தில் கொண்டு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய தக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கார்ப்பரேஷன் புதியதாகத் தொடங்கப் போகிறோம். அது அல்லாமல் இப்பொழுதே டான்ஸி ப்ராக்டக்ட்ஸை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விருத்தாசலத்தில் ஒரு பீங்கான் யூனிட் இருக்கிறதே அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது. அது இயங்கிக்கொண்டு இருக்கிறதா ? அதிலுள்ள உத்தியோகஸ்தர்கள் அங்கு வேலை செய்து வருகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த யூனிட் செயல்பட்டு வருகிறது. அந்த யூனிட்டும் கார்ப்பரேஷனில் வரும் என்று நான் ஏற்கெனவே சொன்னேன்.

திரு. ஆ. பரந்தாமன் : பீங்கான் சாமான்களின் பை-பிராடக்டைக் கொண்ட ஸ்டோன் வேர் பைப்ஸ் தொழிற்சாலை ஒன்று டான்ஸி நிறுவனத்தின் கீழ் விருத்தாசலத்தில் சிறப்பாக செயல்படுகிறது. வேறு இன்னொரு தொழிற்சாலை, ஸ்டோன்வேர் பைப்ஸ் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஏற்படுத்துவதற்கு டான்ஸி நிறுவனம் மத்திய அரசாங்கத்திற்கு மனுச் செய்துள்ளார்கள். அதற்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கொடுத்துவிட்டார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : இந்தப் பீங்கான் மண்பாண்டங்கள் தயார் செய்வதற்கு மிக அடிப்படைத் தேவையான பெல் ஸ்பேர் ஸ்குவார்ட்ஸ் நம்முடைய நாட்டில் ஏராளமாக இருப்பதாகவும், ஏறக்குறைய உலகம் பூராவுக்கும் இந்தப் பொருள்கள் நம்மாலே விநியோகம் செய்யப்படலாம் என்றும் இங்கே ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல், வட ஆற்காடு மாவட்டம், கரூர் போன்ற பகுதிகளில்.



இந்தப் பொருள்களை தூள் செய்வதற்கு தேவையான இயந்திரங்கள் 1,000 மெஷ், 2,000 மெஷ் பவுடர் செய்யக்கூடிய இயந்திரங்கள் ஆசியாவில் இல்லாத காரணத்தினால் இந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஜப்பான் நாட்டிலிருந்து இந்த இயந்திரங்களைக் கொண்டு வந்து இந்தப் பொருள்களிலிருந்து இப்படிப்பட்ட தூள் தயாரிப்பதற்கு அதையும் நம்முடைய அரசாங்கம் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸிராமிக் இண்டஸ்டிரிக்கு ஒரு நல்ல எதிர் காலம் இருக்கிறது. புதியதாக வாரியம் துவங்குகின்ற பொழுது அந்த வாரியம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கருத்துக்களையும் பரிசீலிக்கும்.

திரு. த. சோணையா : தமிழ்நாட்டிலே மண் பாண்டங்கள் செய்வதிலே சிறப்பான இடமாக இருக்கிறது என்று பலராலே போற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட இடம் மானாமதுரை. மானாமதுரை மண் பாண்டங்களைச் செய்கின்ற ஆயிரக்கணக்கான நல்ல தொழில் நிபுணர்கள் இருக்கின்ற இடம். அரசாங்கம் மண்பாண்டத் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டும். ஆகவே, அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதையும் இந்த வாரியம் பரிசீலிக்கலாம்.

## *State Man-power Officers' Conference*

* 200 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether representatives of the State attended the States Man-power Officers' Conference in New Delhi about November 1972;

(b) if so, the detais thereof; and

(c) the details of the decisions taken.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), and (இ) : ஆம். புது டில்லியில் 1972-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை நடந்த மாநில மனிதத் திறன் அலுவலர்கள் மாநாட்டில், இந்த அரசின் சார்பாக முன்னாள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலாளர் திரு. எம். எம். ராஜேந்திரன், ஐ. ஏ.எஸ். கலந்து கொண்டார்.

(உ) இம் மாநாட்டில் மனிதத் திறன் பற்றி திட்டமிடும் உத்திகள், ஒவ்வொரு மாநிலத்திலும் மனிதத் திறன் ஆய்வுக்குழு அமைத்தல், இத்துறையில் பணியாற்றுவோருக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல பொருள்கள் பற்றிப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

*Meeting of Zonal Council on Sales-Tax and Excise Duties*

*201 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any meeting of the South Zonal Council on Sales-Tax and Excise Duty was held in Madras city during May, 1973;

(b) if so, the details thereof; and

(c) the views of the Government expressed at this meeting.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்த சவுத் சோனல் கவுன்சிலில் தமிழ் நாடு அரசின் சிபாரிசுகள் எவையெவை அங்கீகரிக்கப் பட்டன ? குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் யாவை ? அமுல் நடத்தப் பட்டிருக்கும் தீர்மானங்கள் எவை என்பனவற்றைக் கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: எந்தெந்த சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, புறக்கணிக்கப்பட்டன என்ற விவரங் கள் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. தற்போது கொடுக்கப்பட்ட விவரங் களைத் தவிர வேறு விவரங்கள் அரசாங்கத்திடம் இப்போது இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்த விற்பனை வரிக் குழு பரிந்துரைகளின் அமுல் சரிவர நடைபெற்று வருகிறதா ? மாநில ஆய்வுக் குழு ஏற்படுத்த வேண்டுமென்ற சிபாரிசை ஏற்றுக்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, நமது அரசாங்கத்தின் சார்பில் தரப் பட்ட சிபாரிசுகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பன போன்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

இராமநாதபுரம் மாவட்ட தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலம்

*202 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டத்தில், தியாகி மானிய நிலங்கள் எத்தனை பேருக்கு எவ்வளவு வழங்கப்பட்டு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் மாவட்டத்தில் 120 தியாகிகளுக்கு ஆக மொத்தம் 591·83 ஏக்கரா நிலம் வழங்கப்பட்டது.

(* 384-392-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.)



திரு. த. சோனையா: தலைவரவர்களே, தியாகிகளுக்காக நிலம் வழங் கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றுக்கொண்ட தியாகிகள் அந்த நிலத்தைக் குறைந்த விலையில் விற்றுவிடுகிறார்கள். ஆகவே, தியாகிகளுக்காகக் கொடுக்கப்பட்ட நிலத்தை அவர்களுடைய ஆயுள்பரியந்தம் விற்கக்கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டு, இதற்கு முன்பு விற்றிருந்தால் அப்படி வாங்கியது செல்லாது என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தியாகிகளுக்குக் கொடுக் கப்பட்ட நிலம், நிலமற்றவர்களுக்கு என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. சில விதிமுறைகளை அனுசரித்துத்தான் கொடுக்கப்படுகிறது. சில நிபந் தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளை மீறினால் அரசு நடவடிக்கை எடுத்து மீண்டும் கைப்பற்றுவதற்கு அதிகாரம் உண்டு. ஆனால் நிபந்தனை களுக்குட்பட்டு அவர்கள் செயல்பட்டிருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

கிராமங்களில் பொதுக் களங்கள்

*203 வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவு தானியங்கள், வைக்கோல் முதலியவைகளைக் காயப் போட கிராமங்களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரி சீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) and (இ): கிராமங் களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டோ அல்லது பரிசீலனையிலோ இடையாது. ஆனால் ஊராட்சி ஒன்றியக் குழு தீர்மானம் நிறைவேற்றினால் விவசாய மானியத்தை உபயோகித்து ஒரு பொதுக்களம் கட்ட ஊராட்சி ஒன்றியங்களை அரசு அனுமதித்துள்ளது. மேலும் ஊராட்சி கள் ஆங்காங்கே இருக்கும் சட்ட உரிமையுடைய அல்லது ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைக் கிராமத்தில் பொதுக்களம் கட்டத் தேவையானால் அனுமதிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணையிட் டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றி யத்தின் மூலமாக பொதுக் களம் எங்கேயாவது கட்டப்பட்டிருக்கிறதா ? லால்குடி பகுதியில் பொதுக்களம் இல்லாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். அதை அனுசரித்து அந்தப் பகுதியில் களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் பொதுக் களங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. லால்குடி பகுதியில் புறம்போக்கு நிலங்களே இல்லாத காரணத்தாலும், அங்கே நிலம் வைத்திருப்பவர்களே களங்களை அமைத்திருக்கின்ற காரணத்தாலும், தனித்தனியாக களங்கள் இருப்பதாலும் அங்கே பொதுக் களம் கட்டுவதற்கு யாரும் முன்வரவில்லை.

திரு. கு. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கின்ற ரூ. 3 ஆயிரம் போதவில்லை. ரூ. 3 ஆயிரம் செலவில் களம் அமைத்தால் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லாதிருப்பதால் ரூ. 10 ஆயிரம் செலவு செய்து அமைப்பதற்கான ஒரு முறை இருப்பதால் ரூ. 10 ஆயிரம் பஞ்சாயத்துக் களங்கள் அமைப்பதற்கு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த நடப்பு ஆண்டில் 22,066 களங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3-இல் இரண்டு பங்கு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள திட்டம் இருக்கிறது. இந்த ரூ. 10 ஆயிரம் திட்டம் இப்போது நடைமுறையில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தனி நபர்கள் களம் அமைக்க முன்வந்தால் பாதித் தொகையை மானியமாகத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி யோசனை ஒன்றுமில்லை.

திரு. கு. பெரியசாமி : சில கிராமங்களில் களம் கட்டுவதற்குப் புறம்போக்கு நிலங்கள் கிடையாது. நிலச்சுவான்தார்களிடமிருந்து களத்திற்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து கிராம மக்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கான திட்டம் அரசிடம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிலத்தை ஆர்ஜிதம் செய்து களம் அமைக்க முன் வந்தால் மூன்றில் இரண்டு பங்கு அரசு தரத் தயாராக இருக்கிறது.

### கடலாடி ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களது ஊதியம்

* 204 வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி, திருப்புல்லாணி, பரமக்குடி, மண்டபம் ஆகிய ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு 1973 ஆகஸ்டு மாதத்தில் இரண்டு மாதச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பது உண்மையா ?



கடலாடி ஊராட்சி ஒன்றியம்
மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1973 ஜூலை ஆகஸ்டு மாதங்
சம்பந்தப்பட்டவரை மட்டும் ஆசிரியர்களுக்கு 22—9—1973-ல் வழங்கப்
களின் ஊதியம் நிதி பற்றுக்குறை காரணமாக, ஜூலை மாதத்திய
பட்டது. மற்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும், வழங்கப்பட்டது.
ஊதியம் குறித்த தேதியில், அதாவது 1—8—1973-லும்

### *Gratuity scheme for labourers*

* 205 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any scheme under consideration to provide for the payment of gratuity to the Industrial Labour; and

(*b*) if so, the details thereof?

1972-ஆம் ஆண்டு
மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) — (இ) : 39/1972) படி
பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் மலைத் தோட்டங்
தொழிற்சாலைகள், சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள், கடைகள் மற்றும்
கள், துறைமுகங்கள், இருப்புப் பாதை நிறுவனங்கள், ஒரு வருடத்
இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்கப்
திற்கு 15 நாட்கள் ஊதிய வீதம் கணக்கிடப்பட்டு வந்துள்ளது.
படும். இந்தச் சட்டம் 16—9—1972 முதல் அமுலுக்கு

ஓட்டலிலே வேலை
திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சட்டம் செய்யக்கூடிய
செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் கட்டிடத்தில் வேலை தொழிலாளி
தொழிலாளிகளுக்கும் இன்னும் சின்கோனா பிளான்டேஷன் சேர்க்கக்கூடிய
களுக்கும் அமுலில் இல்லையே, அவர்களையும் இச்சட்டத்தில் விரும்புகிறேன்.
அளவில் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய

இந்தச்
மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பீடித் தொழி
சட்டத்தினுடைய வரம்பை விஸ்தரிக்கின்ற தன்மையில் மோட்டார் தொழிலாளர்
லாளர்களுக்கும் கேட்டரிங் தொழிலாளர்களுக்கும் மத்திய அரசு ஆலோசித்
களுக்கும் விஸ்தரிக்கலாமா என்பதைப் பற்றி கொள்கிறேன்.
துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு வருஷ சர்வீசுக்கும் 15 நாள் கிராச்சுவிட்டி கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இன்றைக்குப் பல முதலாளிகள், 15 நாட்கள் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக 13 நாள் என்று கொடுக்கிறார்கள் ; ஆகவே, 13 நாள் அல்ல, 15 நாள் கொடுக்க வேண்டுமென்று அரசு அம்முதலாளிகளுக்கு சுற்றறிக்கை விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள இந்தச் சட்டத்தின்படி, 15 நாள் தந்தாக வேண்டும். அப்படிக் கொடுக்காமல், யாராவது தவறு செய்வாரானால், அது அரசு கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதற்காகத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த வருஷத்திற்கு 15 நாள் என்பது கடைசி வரையிலும் அவர்கள் எவ்வளவு வருஷங்கள் சர்வீஸ் செய்கிறார்களோ, அதுவரையிலும் அளிக்கப்படுமா அல்லது ஏதாவது "சீலிங்", இவ்வளவுக்கு மேல் இல்லையென்று சட்டத்திலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இந்த பணிக்கொடை அளிக்கப்படுகின்ற பல ஸ்தாபனங்களிலே ஓய்வு பெற்ற உடனே, பணிக்கொடை அளிக்கப்படுவதில்லையென்று மின்சார வாரியம் போன்ற இடங்களிலிருந்தெல்லாம் புகார் வருகிறது. அவைகளை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, உடனுக்குடன் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இவைகளை அரசு கவனத்திலே கொண்டு ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Rural Housing Project*

* 206 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to invest rupees one crore in each district in this State on rural housing projects; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, மாவட்டங்களுடைய நிலைமைகளை உத்தேசித்து, மாவட்ட வாரியாகவாவது, மறு பரிசீலனை செய்து ரூ. 1 கோடி என்பதை இன்னும் குறைத்தாவது அரசு அமுல் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் இதுவரையிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 27 லட்சம் செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் விளைவாக, 332 கிராமங்களிலே, ரூ. 77 லட்சத்துக்கு வீடுகள் கட்டுவதற்குத் தற்போது கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதை 1,150 கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டிய அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது வீடு கட்டக்கூடிய திட்டங்கள் பூராவும் முனிசிபாலிட்டிகள் அல்லது மாநகரங்கள் இப்படிப்பட்ட இடங்களில்தான் இருக்கிறது—வீடுகள் அதிகமாகக் கட்டப் படுகின்றன. கிராமங்களிலே அறவே அவர்கள் வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தை அமுல் செய்ய முடியாததற்குக் காரணம் அங்குள்ளவர்கள் மொத்தமாக, தங்களுடைய வீடுகளைக் கட்டக்கூடியச் செலவை ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்வதன் மூலமாகவோ, அல்லது இந்தத் திட்டத்தில் வீட்டு அடமான சொஸைட்டிகளை விஸ்தரித்தோ அவற்றை அதிகப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வீடு கட்டுகின்ற சங்கங்களுக்கு இந்த ஆண்டு நிறையப் பண உதவி செய்யப்பட்டிருக்கிறது. அதன்மூலம் ஏராளமான கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. கிராமங்களைப் பொறுத்தவரையில் ரூ. 4,000 வரையில் கடன் தருவதற்காகத்தான் நான் ஏற்கெனவே சொன்ன ரூ. 77 இலட்சத்தில் 3 செண்ட் நிலம் யாருக்கு இருந்தாலும், ரூ. 4,000 கடன் தரப்படுகிறது. அதை 20 ஆண்டுத் தவணைகளில் வட்டி யோடு திருப்பித் தரலாம் என்ற திட்டமிருக்கிறது. அதைப் பலபேர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தத் திட்டத்திற்கு ஏராளமான பணம் தேவைப்படுகிற காரணத்தினால், பொதுமக்களிடத்திலிருந்து கடன் எழுப்பி, நீண்டகாலக் கடன் என்கின்ற வகையில் கடன் எழுப்பி, அதன் மூலம் இந்தத் தொகையைச் செலவழிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதைப் பொறுத்து, அடுத்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடி வீதம் உயர்த்தலாம் என அரசிடம் கோரப் பட்டுள்ளது. தற்போது உள்ள அளவு வேலைகள் நடைபெறும். கடன் கோரி ஏராளமான விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்பது உண்மை. அதற்குத் தனியான நிதி உதவியில்லை. தனிப்பட்ட முறையிலே அதற்குப் பொது மக்களிடமிருந்து நிதி பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோலையா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு புதிது புதியதாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. ஆனால், ஏற்கெனவே, சிலர் வசதி வாய்ப்பு இருந்தபோது, பர்மா, மலேயா போன்ற இடங்களில் சம்பாதித்து இங்கு வந்து பல வீடுகளைக் கட்டினார்கள். அப்படி கட்டிய வீடுகளில் பல தற்போது பழுதுபார்க்க முடியாத அளவு இருப்பதால், அந்த வீடுகள் இடிந்துவிடுமோ என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட வீடுகளை அடமானம் வைத்துக்கொண்டு கடன் கொடுப்பதற்கு அரசு ஏதாவது ஒரு ஏற்பாட்டை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட முறைகள் எதுவும் தற்பொழுது இல்லை. வேறு பல வசதிகள் நாட்டிலே இருக்கின்றன. அதை அந்த வீட்டுக்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே வீடு கட்டுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அதனால் மத்திய அரசாங்கத்திலிருந்து 2 செண்ட் நிலம் தருவது என்று முடிவெடுத்து அப்படியே செய்கிறார்களே, கேரளத்தில் அதை 4 செண்ட் என்று மாற்றியிருப்பதாகக் கேரளத்தில் இருப்பவர்கள் கூறினார்கள். அம்மாதிரி நிலத்தை மத்திய அரசாங்க உதவி பெற்று, அங்கே கேரள அரசாங்கம் சிமெண்டும் மரமும் தருகிறது. வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்து செலவை, ஏற்று, வீட்டைக் கட்டிக் கொடுக்கிறது—வீட்டை இலவசமாகக் கொடுத்து ரூ. 100 மட்டும் பெற்று வீடுகளை அளிக்கிறார்கள். அம்மாதிரியான திட்டத்தை நம்முடைய கிராமங்களிலே கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன். அத்துடன், கிராமங்களிலே கடன் தந்து வீடு கட்டுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதையும் உணர்ந்து அரசாங்கம் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கேரளத்திலே 1 இலட்சம் வீடுகள் தருவது என்று திட்டம் போட்டு, வீடுகளும் கட்டினார்கள். அத்துடன், 100 வீடுகளை பிரதமர் 'இந்திரா காந்தி அவர்கள் சாவி தருவதன் மூலமாகத் திறந்து வைத்தார்கள். அந்த வீடுகளை அந்த அம்மையார் பார்க்கவில்லை. அந்த வீடுகள் எப்படிக் கட்டப்பட்டன என்பது தெரியும். கேரளாவில் மழை அதிகம் என்பது நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு அந்த வீடுகளில்லை. அதேபோல், வீடுகளைக் கட்டித் தர தமிழக அரசுத் தயாராக இல்லை. அதை நான் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது 3 செண்ட் நிலம் வைத்திருப்பவர்களுக்கு ரூ. 4,000 கடன் கொடுத்து, வீடு கட்டித்தர, நிலக் குடியிருப்புச் சட்டத்தின் மூலமாக வழி வகை இருக்கிறது. இன்றைக்கு ஆதித் திராவிடர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், தஞ்சை மாவட்டத்திலே 548 ஏக்கர் நிலப் பரப்பைக் கையகப்படுத்த ரூ. 25,07,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மனையைச் சீர் செய்ய ரூ. 150 என்ற வீதத்தில் 33,692 வீட்டு மனைகளைச் சீர்செய்வதற்கான செலவு ரூ. 50,44,000 ஆக, ரூ. 75,51,000 தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் தொகை. இது குடியிருப்புச் சட்டம் மூலம் செய்யப்படுவது. இந்தச் சட்டம் இன்றைக்கு சென்னை, நீலகிரி தவிர மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கமே, மாதிரி வீடுகளை மாதவரம் பகுதியிலே கட்டியிருக்கிறது. அதைத் கிராமப் பகுதியிலே உள்ள மக்கள் விரும்புவார்களானால், இப்படிப்பட்ட வீடுகளை வீட்டு வசதி வாரியம் அத்தகைய வீடுகளைக் கட்டித் தாலாம் என்ற எண்ணம் அரசிடம் இருக்கிறது.

கேரளாவில் 100 வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அங்கே சிமெண்ட், மரம் காணாமல் போய்விட்டது என்று, அதை ஒரு பெரிய குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அது காரியசாத்தியம் ஆகாது என்பதை கேரளம்



நமக்குக் காட்டியிருக்கிற காரணத்தால், அதிலே நாம் கவனத்தைச் செலுத்தாமல், நிலையான வீடுகளைக் கட்டித் தர இந்த வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.00

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த கிராமப்புறப் வீட்டுவசதித் திட்டத்தின் பிரகாரம் கிராமங்களுக்குத்தான் நான்கு ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கக்கூடிய இடங்களில் உள்ள ஏழைகளுக்கும் இப்படிப்பட்டக் கடன்களை கொடுக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையிலே வீடுகள் கட்டித் தருகிற கூட்டுறவு சங்கங்கள் உருவாகி வருகின்றன. ஏற்கெனவே இருந்த கூட்டுறவு சங்கங்கள் வேலை செய்யாமல் இருந்தால் மீண்டும் அவை வேலை செய்யக் கூடிய அளவில் உதவி செய்யப்பட்டு அவையெல்லாம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு சங்கங்கள் இல்லாத இடங்களிலே அவற்றை உருவாக்கிக் கொள்வதன்மூலமாக வீடுகளைக் கட்டிக் கொள்வது ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கிராமங்களிலே வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தின் அடிப்படையிலே கேரளத்திலே செய்யப்படுவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் இரண்டாவது தடவையாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒரு லட்சம் வீடுகள் என்ற திட்டமிட்டு ஒரு பஞ்சாயத்துக்கு 100 வீடுகள் என்ற முறையிலே திட்டம் போட்டார்கள். ஆனால் ஒரு லட்சம் வீடுகளும் கட்டப்பட்டு பிறகு விழுந்துவிடவில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது ஒரு லட்சம் வீடுகளும் விழுந்துவிட்டன என்பது மாதிரியாகப் பதில் சொன்னார்கள். எத்தனை வீடுகள் விழுந்துவிட்டன, எத்தனை கட்டிக் கொடுக்கப்பட்டன என்று அவர்கள் சொல்லவேண்டும். இன்னொரு மாநிலத்தைப் பற்றிய செய்தியாக இருப்பதால் பார்த்து மற்ற விவரங்களையும் அவர்கள் சொல்லவேண்டும். ஒரு லட்சம் வீடுகளும் அமைக்கப்பட்டனவா ? அமைச்சர் அவர்கள் எல்லா வீடுகளும் விழுந்துவிட்டதாகச் சொன்னார்களே, எத்தனை வீடுகளைக் கட்டினார்கள், எத்தனை வீடுகள் விழுந்திருக்கின்றன என்ற விவரத்தைச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நான் அண்டை மாநிலத்தைப் பற்றிப் பேசக்கூடாது என்றுதான் நினைத்திருந்தேன் ஆனால் சுரேந்திரன் அவர்களுடைய கேள்விதான் என்னை அப்படிப் பேச வைத்து விட்டது. அமைச்சர் குஜ்ரால் அவர்கள் அந்த விழா வைத் துவக்கி வைத்தார்கள், நான் வாழ்த்துரை வழங்குவதற்காக அங்கே போய் இருந்தேன். எல்லா வீடுகளும் விழுந்துவிட்டதாக நான் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தை அமைத்துக் கொடுத்த திரு. கோவிந்தன் நாயர் அவர்கள் மிக நல்ல முறையிலே திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள், அது பாராட்டக்கூடிய திட்டம்தான். அந்தத் திட்டத்தை அமலாக்குவதிலேதான் சில தவறுகள் நடந்திருக்கின்றன.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்துவதற்கு முன்பே பெர்மனெண்ட் தியேட்டர்கள் கட்டுவதற்காக என்.ஓ.சி. யெல்லாம் வாங்கி அரைகுறையாகக் கட்டி முடிக்காமல் வைத்திருக்கிறார்களே, அவர்களுக்கும் இப்படிப்பட்ட திட்டத்தை அரசு விஸ்தரிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது இருக்கின்ற விதிமுறைகளின்படி அது ஒத்துவராது என்று கருதுகிறேன். அதுபோன்ற முடிவை யோசித்துத்தான் எடுக்கவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியாக திரையரங்குகள் கட்டுவதற்கு அரசாங்கம் கடன் கொடுப்பதால் வசதி படைத்தவர்களுக்குத்தான் போய்ச் சேருகின்றது, இதன் காரணத்தினால், வசதி படைத்தவர்கள் மேலும் வசதி படைத்தவர்களாக ஆவதற்கு வசதி இருப்பதால் சமதர்ம சமுதாயம் அமைப்பதற்கு அது இடையூராக இருப்பதால் அம்மாதிரிக் கடன்களைக் கொடுக்காமல் அரசாங்கமே திரையரங்குகளை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது அரசுக்கு ஒரு நல்ல யோசனை.

திரு. எம். சுரேந்திரன் : திரையரங்குகளைக் கட்டுவதற்குக் கடன் தருவதற்கான நிறுவனத்தை அமைத்து அதற்கான கடன்களை வழங்கிக் கொண்டு இருக்கின்ற நேரத்திலே திரையரங்குகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளப்போகிறது என்ற கொள்கையை அறிவித்திருப்பது ஒன்றுக்கொன்று முரணாகத் தெரிகின்றதே, இதிலே எது சரியானது, எது தவறானது, எந்தக் கொள்கையை அரசாங்கம் வைத்துக்கொள்ளப்போகிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசாங்கம் கொள்கையளவிலே முடிவு எடுத்திருக்கிறது. கட்டி முடிக்கப்பட்டாலுங்கூட அதையெல்லாம் அரசாங்கம் எடுக்கவேண்டுமென்றால் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : செமி பெர்மனெண்ட் தியேட்டர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கடன் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்பொழுது விலையேற்றத்தின் காரணமாக அந்தத் தொகை போதாது என்பதால் அந்த உச்ச வரம்பை ஒரு லட்சத்திற்கு மேலாக அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்சமயம் இல்லையாது. அது மாதிரி விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன, அதையும் பரிசீலிக்கலாம்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஓரளவு நிலையான திரையரங்குகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் கடன் வழங்க என்ன என்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன ? இலங்கை வாழ் அகதிகளுக்கு அந்த விதிகளைத் தளர்த்திக் கடன் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கடன் பெறுவதற்கு நிறைய விதிமுறைகள் இருக்கின்றன. தனிக்கேள்வி போட்டால் அச்சடித்துக் கொடுக்கலாம். இப்பொழுது இருக்கிற விதிமுறைகளுக்கு உட்பட்டு யார் கேட்டாலும் வழங்கப்படும்.

திரு. மு. முத்தையா : தலைவர் அவர்களே, பெர்மனெண்ட் தியேட்டர் கட்டுவதற்கு சொத்து ஈட்டின்பேரில் கடன்கொடுக்கப்படுகிறதா ? அல்லது கட்டிக்கொடுக்கிற தியேட்டரை வைத்துக் கடன் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கட்டிக்கொடுக்கிற தியேட்டரையும் வைக்கவேண்டும். சில நிபந்தனைகளைப் பொறுத்த வரையில் சொத்தும் வைக்க வேண்டும்.

## *Felling of trees in the Nilgiri hills*

* 208 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether it is a fact that climatic conditions and natural scenery are badly affected due to indiscriminate felling of trees in the Nilgiri hills?

திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே நீலகிரி மலையிலே பொதுவாக மரங்களை வெட்டுவதை அனுமதிப்பது இல்லையாது.

திரு. என். கே. பழனிச்சாமி : தனிப்பட்டவர்கள் வெட்டாவிட்டாலும் பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டுக்கு, மற்ற துறைகளுக்கு என்று வெட்டுகிறார்கள், இப்படி கண்டபடி வெட்டுவதன் காரணமாக அழகும் கெட்டுவிடுகிறது, கிளைமேட்டும் கெட்டுவிடுவதாகப் பேசப்படுகிறது. ஆகவே வெட்டிய மரங்கள் இருந்த இடங்களிலே மறுபடியும் மரங்களை வைப்பதற்கும் மீண்டும் அழகுபடுத்துவதற்கும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நீலகிரியில் பொதுவாக புளூகம், வேட்டில் ஆகிய இரண்டு மரங்களும் ஆறேழு ஆண்டுகளில் வெட்டும் பதத்திற்கு வந்துவிடுகின்றன. உடனேயே மீண்டும் மரத்தை வைக்க வேண்டுமென்று நிபந்தனையோடு செய்யப்படுகிறது. வெட்டும் இடங்களில் மரங்கள் உடனடியாகப் பயிரிடப்படுகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நல்ல காட்டு மரங்கள் இருந்த இடத்திலே புளூகம் மரங்கள், விஸ்கோஸுக்கு உபயோகிக்கும் மரங்களைப் போட்டு விட்டார்கள். எனவே, "இன்டிஸ்கிரிமினேட் கட்டிங்" கூடாது என்று செய்யப்படுமா ?

அப்படிப்பட்ட தவறுகள் நம்முடைய மாநிலத்திலேயும் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் அதைச் சொன்னேன். அண்டை மாநிலத்தைத் தவறாகச் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. கோவிந்தன் நாயர் அவர்கள் என்னுடைய சிறந்த நண்பர், அது மட்டுமல்ல நாடாளுமன்றத்திலே நீண்டகாலமாக என்னோடு பழகியவர். ஆகவே அந்த எண்ணத்திலே நான் சொல்லவில்லை. குறைந்த வீடுகள்தான் கட்டப்பட்டன. கட்டப்பட்ட வீடுகள் பச்சை செங்கல்லை வைத்து கட்டியதால் சில வீடுகள் விழுந்துவிட்டதாகச் சொன்னார்கள். ஆகவே அந்த மாதிரியான முறையை நாம் விட்டுவிட்டு புது மாதிரியான நல்ல மாதிரியான வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்ற முறையிலேதான் மாதவரத்திலே இரண்டு வகையான மாதிரி வீடுகளை 10, 10 வீடுகள் என்ற முறையிலே வரிசைவரிசையாக அமைத்து இருக்கிறோம், வீடுகளைக் கட்டித் தருகின்றவர்களிடமே அப்படிப்பட்ட பொறுப்புகளை விட்டுவிடுவதுதான் நல்லது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. கு. அ. பொம்மன் : அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலிலே சென்னை, நீலகிரி தவிர இந்தத் திட்டங்கள் எல்லா இடங்களுக்கும் அமல் படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். சென்னையிலாவது குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் நீலகிரியிலே அப்படிப்பட்ட திட்டங்கள் ஒன்றுமே இல்லை. ஆகவே மலைப் பிரதேசமாக இருப்பதால் அதற்கு அமைச்சர் அவர்கள் சலுகை காட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : குடியிருப்பு சட்டப்படி மலைவாழ் பகுதியாக இருந்தால் அந்தப் பகுதிகளை அவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறேன். மலிவான குடியிருப்புகளாக இருந்தால் அவர்களுக்கே சொந்தம் என்று இருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. நீலகிரிக்கு வேறு ஏதாவது புது மாதிரியான திட்டங்களை அரசாங்கம் ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மலிவான வீடுகளைக் கட்டித் தருவதற்கு ஆர்கிடெக்ட் திரு. சீனிவாசன் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றதாக அறிந்தேன். அவர்களுடைய ஆலோசனை பெறப்பட்டு இருக்கிறதா? அந்த அடிப்படையிலே வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலிவான வீடுகள் கட்டித் தருகின்ற திட்டங்களையெல்லாம் வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் ஆராய்ந்து பார்த்தன. தமிழகத்திலே வீட்டு வசதி வாரியம் கட்டித் தருகின்றதைவிட நல்லதாக வேறு எந்தத் திட்டமும் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## *Loans for construction of theatres*

* 207 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state the total amount of loan advanced for the construction of semi-permanent theatres in Tamil Nadu during 1972–73?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்பட அரங்குக் கழகம், 17 விண்ணப்பதாரர்களுக்கு மொத்தம் ரூ. 17 லட்சம் கடன் வழங்குவது என்று தீர்மானித்துள்ளது. ஆனால், அடைமானப் பத்திரங்களை எழுதிப் கொடுப்பது, பதிவு செய்வது போன்ற குறிப்பிட்ட சில நடைமுறைகள் முடிக்கப்படாததால் 1972–73 நிதியாண்டில் இத் தொகை மேற்சொன்ன விண்ணப்பதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டிலே உள்ள பேரூராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் தாமாகவே முன்வந்து செமி பெர்மனண்ட் தியேட்டர்களைக் கட்டுவதாக இருந்தால் அவர்களுக்குக் கடன்கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிக் கொடுப்பதாக இல்லை. அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திரையரங்குகளைக் கட்டுவதற்குப் பெரும்பாலும் செல்வம் படைத்தவர்கள்தான் முன்வருகிறார்கள். அப்படியின்றி சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களும் ஓரளவு வசதி படைத்தவர்களாயிருந்தால் திரையரங்குகளைக் கட்டிக்கொள்வதற்காகப் பணம் கேட்டால் கடன் இல்லாமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதைப் பொறுத்த வரையில் சில நிபந்தனைகள் இருக்கின்றன. நிபந்தனைகளுக்கு உட்பட்டு யார் கேட்டாலும் கடன் வழங்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : திரையரங்குகள் கட்டுவதற்காக கடன்களைக் கொடுக்கத் தயாராக இருந்தாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள பலர் முன்வராமல் இருக்கின்றதாகவும் அதற்குக் காரணம் திரையரங்குகளை நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்று அறிவிப்புச் செய்யப்பட்டதுதான் என்றும் சொல்லப்படுகிறதே, அப்படியில்லாமல் இந்த அரசு இதிலே ஒரு திட்டவட்டமான கொள்கையை அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கடன் கேட்டு விண்ணப்பித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள், அதிலேயிருந்து அப்படியொன்றும் தெரியவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பனை வெல்ல உற்பத்தியாளர்கள் சம்மேளனத்திற்கு அரசாங்கம் எந்தெந்த வகைகளில் உதவுகிறது. இதை உடனடியாகக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் மூலம் அவர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறோம். அவர்கள் ஆங்காங்கேயுள்ள கிராமங்களி லுள்ள சங்கங்களுக்கு, அதிலேயிருக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் உதவி செய்து, அவைகளை வசூல் செய்து திருப்பிச் செலுத்து கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான சங்கங்கள், குறிப்பாக எல்லா மாவட்ட சம்மேளனங்களுமே ஏராளமான நஷ்டத்தில் நடப்பதால் அவைகளைக் கலைத்துவிட்டு, மாவட்ட அளவில் இருப்பதை மாற்றி, ஒவ் வொரு வட்டார அளவிலே, "ரீஜினல் அட்வைசரி கமிட்டி" என்று அமைத்து, அதேபோல் மாநில அளவில் "ஸ்டேட் அட்வைசரி கமிட்டி" என்று அமைத்து, அதிகாரிகள், அதிகாரப் பற்றற்றவர்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் போன்ற இவர்களை வைத்து அந்தத் தொழிலின் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து, தற்பொழுது அதற்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வாரியத்தின் முதன்மை அதிகாரி அவர்கள் 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் தேதியில் ஒரு ஆணையிட்டு 1974-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 8-ம் தேதியிலே கன்னியாகுமரியிலே இருக்கும் அந்த "ஃபெடரேஷனை" "லிக்குடைட்" செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிலே பயிற்சி பெற்றவர்கள், எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி. போன்ற வகுப்பிலே தேறிய வர்கள் பலரும் பல்லாண்டுகளாகப் பணி புரிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை அளிக்க அரசாங்கம் ஏதாவது நட வடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த சம்மேளனங்கள் ஏராளமான நஷ்டத்தில் நடப்பதற்குக் காரணம், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அதிலே ஏராளமாகப் பணிபுரியும் ஊழியர்கள், அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் இவைகளால் தான். கொடுக்கக்கூடிய கடன் அளவைவிட இந்தச் சம்பளங்கள் அதிகமாகப் போய் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. முன்னால் இந்தத் துறையின், கதர் வாரியத்தின் தலைவராக இருந்த உணவுத் துறை அமைச்சரவர்களால் ஒரு குழு நிறுவப்பட்டது. அந்தக் குழுவில் அந்தத் தொழில் சம்பந்தமான நிறுவனங் களும் இருந்து அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளை ஏற்றுத்தான் செய்கிறோம். வேலையிழப்பவர்களுக்கு மாற்று வேலை அளிக்க வாய்ப்பு வரும்பொழுது தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.



திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத் திலுள்ள "பாம்கர் பெடரேஷன்" லிக்குடேட் செய்யப்பட்டதால் அதிலே வேலை செய்துகொண்டிருந்தவர்கள் இப்பொழுது வேலை யிழந்து இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு ரெப்ரசெண்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரெப்ரசண்டேஷன் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ? அவர்களுக்கு வேலை கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. ஆனால் வேலை யிழந்தவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வரும்பொழுது அவர்களுக்கு முதல் சலுகை அளித்து வேலைகளைக் கொடுக்கலாம்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, இந்த மாவட்ட சம்மேள னங்கள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அது மாதிரி ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு நஷ்டம் என்று வரிசைப்படுத்தி சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்ட வாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 1951-52-ம் ஆண்டு திரு நெல்வேலி மாவட்டத்திலும், பிறகு மற்ற மாவட்டங்களிலும் ஆரம்பித்தார் கள் அதிலே ஒவ்வொரு ஆண்டும் நஷ்டமாக வந்திருக்கிறது. 1972-73-ல் மட்டும் 3,90,100 ரூபாய் கோவை மாவட்ட சம்மேளனத்தில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்னை மாவட்டத்தில் 1,88,244 ரூபாய் நஷ்டம். திருச்சியில் 5,79,846 ரூபாய் நஷ்டம். திருநெல்வேலியில் 17,32,002 ரூபாய், இது 1972-73-ஆம் ஆண்டில். அதேபோல் இராமநாதபுரம், மதுரை மாவட்டத்தில் 24,575 ரூபாய் அந்த சம்மேளனத்தில் இந்த ஆண்டு மட்டும் லாபம் வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 96,277 ரூபாய் நஷ்டம். சேலம் மாவட்டத்தில் 10,75,000 ரூபாய் நஷ்டம். இப்படி எல்லா மாவட்டங்களிலுமுள்ள சம்மேளனங்களிலே நஷ்டக் கணக்கைத்தான் காண்பித்திருக்கிறார்கள்.

*Cows secured by Dairy Development Corporation*

* 210 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether bulls and cows have been secured by the Tamil Nadu Dairy Development Corporation from foreign countries during the calendar year 1973 ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கன்று போடாத பதினைந்து இளம் பசுக்களும், பதினான்கு காளைகளும் அயல் நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு அவை உதக மண்டலத்தில் வளர்த்து வரப்படுகின்றன. கன்று போடாத பதினைந்து இளம் பசுக்களும், இரண்டு காளைகளும் டென்மார்க் நாட்டிலிருந்தும், பன்னிரண்டு காளைகள் அமெரிக்க நாட்டிலிருந்தும் பெறப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : அவை என்ன விலைக்கு வாங்கப்பட்டன? இப்போதும் டெய்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் உபயோகத்தில் தான் இருக்கிறதா? சில விற்கப்பட்டனவாகக் கூறப்படுகிறது. என்ன விலைக்கு விற்கப்பட்டன? தனிப்பட்டவர்களுக்கா, பொது நிறுவனங்களுக்கா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வாங்கப்பட்ட விலையின் விவரம் இல்லை. பால்வளப் பெருக்குத் திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழகப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வாங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கால்நடைகளை வாங்குவதற்கும் பொலி காளைப் பண்ணை வைப்பதற்கும் பால் பண்ணைத் திட்டத்தின்கீழ் 4 லட்சம் ரூபாய் நிதியாக ஒதுக்கி இருக்கிறார்கள். விற்கப்பட்டவையைப் பொறுத்தவரை பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் விற்கப்பட்டிருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்கு விற்கப்பட்டனவா இல்லையா என்று தகவல் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ப்யூர் ஜெர்சி, ப்யூர் ப்ரீஷியன் போன்ற வெரைட்டிகளை வரவழைப்பதற்கும் இன விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளுக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறதா ? எல்லா மாவட்டங்களிலும் அமல் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வெளிநாட்டிலிருந்து ஜெர்சி இனங்களைத்தான் இறக்குமதி செய்கிறோம். சராசரி 5 முதல் 6 லிட்டர் பால் வரை கொடுக்குமென்ற நோக்கோடு இறக்குமதி செய்கிறோம். இன்னும் தீவிரமான முறையில் "ஃப்ரோஸன் செமன்" என்ற திட்டத்தினை கொடைக்கானல் பகுதியில் இங்கிலாந்து நாட்டின் உதவியோடு அமைத்திட மத்திய அரசாங்கத்தோடு கலந்து முயற்சிகள் செய்து வருகிறோம். இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் நல்ல இனங்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற நோக்கோடு தமிழ்நாடு பால்வளத் துறை அக்கறை செலுத்தி வருகிறது.

திரு. எ. ஆர். சுப்பையா : இவைகள் ஊட்டியில் கார்ப்பரேஷன் நேரடிப் பார்வையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ? எப்போது சர்விசுக்கு வரக்கூடிய நிலைமை இருக்கும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கார்ப்பரேஷனுடைய நேரடிப் பார்வையில்தான் ஊட்டி பண்ணையில் வைத்திருக்கிறோம். எப்போது வரும் என்று தெரியவில்லை.



THIRU B. VENKATASWAMY : We are in dearth of high-breed bulls ? May I know from the Hon. Minister whether this frozen semen will be distributed throughout the State so that we could have very good breed of animals ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : "ஃப்ரோஸன் செமன்" தயார் செய்வதைப் பொறுத்தவரை தற்போது இங்கிலாந்து நாட்டிலிருந்து நம்முடைய அமுல் பால் பண்ணையில்தான் முதலாவதாக வாங்கி விநியோகம் செய்தார்கள். தமிழ்நாட்டிலும் சில பகுதிகளுக்கு முன் மாதிரியாக விநியோகம் செய்வதற்கு பால் பண்ணைக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பூராவும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டிருப்பது குறித்துப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடங்குமுன் பேரவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய பேரவை உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களுக்கு "பத்மஸ்ரீ" விருது நம் நாட்டு குடியரசுத் தலைவரவர்களால் அளிக்கப்பட்ட செய்தி நம் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும். இதை இம்மாமன்றம் மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. (கரவொலி).

திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கடந்த 30 ஆண்டு காலத்திற்கும் மேல் பொதுவாழ்விலே ஈடுபட்டு அருந்தொண்டு ஆற்றி வருபவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சேரிவாழ் மக்களுக்கும் அவர்கள் சிறந்த சேவை புரிந்துள்ளார்கள். இப்பேரவையில் அனுபவம் ஆற்றலும் மிக்க உறுப்பினராக இருந்து அவர்கள் அரும்பணி ஆற்றி வருகிறார்கள். இனிமையாகப் பழகி எல்லாருடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக அன்னார் விளங்குகின்றார்கள். இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் அவர்களுக்கு நல்வாழ்த்துதலையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். மரங்களை அனுமதியில்லாமல் வெட்ட முடியாது, அரசாங்க அளவில் கொடுப்பதும் இல்லை. அரசு அளவிலே "க்விக் க்ரோயிங் ட்ரீஸ்", விரைவாக வளரும் மரங்களைப் பயிரிட்டு இந்தத் தொழிற்சாலைகளில் கொடுக்கப்படுகிறது. வெட்டியவுடனே அடர்த்தியான காடுகள் மரம் வளர்ப்புத் திட்டத்தினால் வளர்க்கப்படுகிறது. எனவே, முறையில்லாமல் வெட்டப்படுகிறது என்பது உண்மையற்ற கூற்று.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, வியாபார நோக்கத்தோடு வன இலாக்காவானது இயற்கை மரங்களை அழித்துவிட்டு செயற்கை மரங்களை உற்பத்தி செய்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, இயற்கை மரங்களைப் பாதுகாப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லோருக்கும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். ஒவ்வொரு ஆண்டும் ஒரு திட்டம் தயாரித்து மரங்களை வளர்ப்பதற்குச் சரியான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மரங்களை வெட்டக்கூடாது என்பது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், பக்கத்திலேயிருக்கும் கேரள மாநிலமும், மைசூர் மாநிலமும் அங்கேயுள்ள காடுகளிலிருக்கும் மரங்களை நிறைய வெட்டுவதால் நாட்டினுடைய பொருளாதாரம் குறைந்துகொண்டேயிருக்கிறது. ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு, புதிய மரங்களை உற்பத்தி செய்தால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் வளரும் என்ற வகையில் உற்பத்தியைப் பெருக்க முன்வருமா ? அல்லது மரங்களை வெட்டக்கூடாது என்றால் அகில இந்திய அடிப்படையிலே எல்லா மாநிலங்களும் ஒரே கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை இந்த அரசு மத்திய அரசிடத்தில் வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வனத்தை அழிக்கக்கூடாது என்பது வேறு, மரங்களை வெட்டக்கூடாது என்பது வேறு. சில சோலைகளை 60, அல்லது 70 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டினால் மரம் நன்கு வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பது ஒரு கூற்று. எனவே, "ஓல்ட் ட்ரீஸ்" என்று ஆங்காங்கு 60 ஆண்டு, 70 ஆண்டு ஆகியவற்றை "மேப்"களில் குறித்து வைத்திருக்கிறார்கள். அவைகளைச் சீராக வெட்டி புதிய மரங்களை வளர்க்க வேண்டும். எந்தெந்த ஆண்டுகளுக்குப் பிறகு எந்தெந்த இடத்திலே வெட்டவேண்டுமோ அங்கெல்லாம் வெட்டப்பெற்று புதிதாக வளர்க்கப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும் பொழுது நீலகிரி மலைகளிலே மரங்களை வெட்டுவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகக் கூறினார்கள். நமது தமிழ் நாட்டிலுள்ள பிற மலைகளில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைப் பிரதேசத்தில் அரசாங்கம் இப்பொழுது வெட்டிக்கொண்டேயிருக்கிறது. ஆகவே





அந்தப் பிரதேசத்தில் மழை குறைந்துகொண்டு வருகிறது. அதனால் மலைப்பிரதேசங்களில் மண் மூடி தண்ணீர் பெறாமல் போகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்பகுதியிலே உள்ள காட்டு மரங்களை வெட்டுவதைத் தடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொதுவாக எங்கேயுமே வெட்டக்கூடாது என்பது அரசின் கொள்கை. இருந்தாலும் பெரிய தேக்கு மரங்கள் அரசின் ஒவ்வொரு துறைக்கும் தேவைப்படும் நேரத்தில் வெட்டுகிறோம். இத்தனை ஆண்டுகளுக்கு மேலேயிருந்தால் தேக்கு மரங்கள் வெட்டப்பட வேண்டுமென்ற நிலையிருப்பதால் முதிர்ந்த மரங்கள் அரசாங்கத்தால் வெட்டப்படுகிறதே தவிர பொதுவாகத் தடுக்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையிலிருந்து கேரளாவிலுள்ள மாவூர் தொழிற்சாலைக்கு பிர்லாவினால் ஏராளமான மரங்கள் வெட்டி எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள விஸ்கோஸ் போன்ற தொழிற்சாலைகளுக்கு மரங்கள் பற்றாக் குறையாக இருக்கும் நேரத்தில் நம் மாநிலத்திலுள்ள தொழில்கள் பாதிக்கும் அளவில் பிர்லா எடுத்துச் செல்வதைச் தடுக்க இந்த அரசு ஏற்பாடுசெய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நமது மாநிலத்திலிருந்து கேரளத்திற்கு மரம் வெட்டி செல்லப்படுவது உண்மை அல்ல. நம் மாநிலத்திலுள்ள இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு விரைவாக வளரும் மரங்களை நாம் கொடுக்கிறோம். தொழிற்சாலைகள் அதிகமாகப் பெருக வேண்டுமென்பதற்காக 65,000 ஹெக்டேரில் தனியாக "ஃபாரஸ்ட் கார்ப்பரேஷன்" வைக்க வேண்டுமென்ற பரிசீலனை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து இன்னும் முடிவெடுக்கவில்லை, கூடிய சீக்கிரம் முடிவெடுக்கப்படும்.

## பனைவெல்ல சம்மேளனங்கள்

* 209 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை பனைவெல்ல உற்பத்தியாளர் சம்மேளனங்கள் உள்ளன ?

(இ) இவைகளைக் கலைத்துவிடும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாட்டில் தற்போது 8 மாவட்ட பனைவெல்ல சம்மேளனங்களும் ஒரு மாநில பனைவெல்ல சம்மேளனமும் உள்ளன.

(இ) ஆம். எல்லா மாவட்ட சம்மேளனங்களையும் கலைத்துவிட்டு அவைகளின் நடவடிக்கைகளை மாநில சம்மேளனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## (3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

பொதுவாக ஆளுநர் உரை பூராவையும் படித்துப் பார்க்கும் காலத்தில் இன்றைக்குள்ள நிலையில் ஒரு நம்பிக்கையற்ற தொனி தான் உரை பூராவிலும் தென்படுகிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதற்காக யாரையும் நான் குறைகூற விரும்பவில்லை. இன்றைக்குள்ள நிலையை தமிழ்நாட்டில் உள்ள பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்துக் கொண்டு பார்க்கிற காலத்தில் வருகிற வருஷத்தில், இன்னும் சில வருஷங்களுக்குக்கூட நாம் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் வாழ்வில் வளம் காணாத அளவில் இருக்கக்கூடிய தெம்பற்ற நிலை தென்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதைச் சமாளிப்பதற்கு இந்த அரசு எடுத்துக் கொள்ளக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக கூறப்பட்டிருக்கிறது. நெருக்கடியின் மையமாக தமிழ்நாட்டில் இன்றைய தினம் பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அற்றுப் போய்விட்டன என்பதையும் பார்க்கிறோம். இதற்கு யாரையும் குறை கூற முடியாது. இயற்கை வளத்தால் அளிக்கப்பட்ட தண்ணீர் அவ்வளவுதான் இருக்கிறது. மின்சாரம் பெரிய அளவுக்கு, நம்முடைய நாட்டின் வளத்தை நிலை குலைக்கும் அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். மின்சாரத்தின் நெருக்கடி நிலைமையில் தன்னுடைய திறமையின் மூலமாக, சிக்கனச் சீரமைப்பு மூலமாக எந்த அளவுக்கு சமுதாய நல்வாழ்வுக்குப் பயன்படுத்த முடியும் என்ற வகையில் இந்த அரசு திட்டமிட்டுச் செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கண்ணோட்டம் இல்லாமல் வெறும் ஆசையினால் மட்டும் வாழ்க்கையை வளப்படுத்திவிட முடியாது. ஆசையோடு கூடிய அஸ்திவாரங்கள், தேவைகளுக்கேற்ற நிதி வாய்ப்புகள் அத்தனையையும் கருத்திற்கொண்டு யதார்த்த நிலைமையில் திட்டமிட வேண்டும்.

எந்த வகையில் பார்த்தாலும் வரப்போகிற வருஷம் கடினமான வருஷமாக இருக்கும். இந்த கடினமான வருஷத்தை எதிர்நோக்கும் போது எந்த அளவுக்கு ஆட்சியில் இருக்கும் அதிகார வர்க்கத்திற்கு மக்களுடைய ஒத்துழைப்பு, எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு தேவையாக இருக்கும் என்பதைப் பற்றி குறைத்து மதிப்பிடக்கூடாது இந்த அரசு என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பாசன வசதிகளைப் பொறுத்து புதிதாகச் சில திட்டங்கள் தீட்டப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விஸ்தரிப்பு அதிகப்படியாக இல்லாவிட்டாலும் கூட இருக்கக்கூடிய தண்ணீரை,



இருக்கக்கூடிய நீர்ப்பாசனத்தை எவ்வளவு தூரம் சேமிக்க முடியும், திட்டமிட்ட வகையில் விநியோகம் செய்ய முடியும் என்பதை மிகவும் கூர்ந்து கவனிக்க வேண்டும். தஞ்சை ஜில்லாவில் பாசனத் திட்டங்கள் மேம்பட வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாலும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மிகவும் மிதமான அளவுக்கு வேகமாக இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏழாயிரம் குளங்களை வெட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். பழைய ஜமீன் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு சாகுபடி செய்ய பயன்பட்டுவந்த குளங்கள் எல்லாம் மேடிட்டுக் கிடக்கின்றன. ஏற்கெனவே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே கூட அவற்றைத் தூர் எடுக்க வேண்டுமென்ற முயற்சி செய்யப்பட்டது. வெற்றி பெறவில்லை. நீங்கள் பல கோடி ரூபாய் அதிலே முடக்கப் போகிறீர்கள். அப்படிப்பட்ட பகுதிகள் அதிகமாக இருக்கக் கூடிய இராமநாதபுரம் ஜமீன் பிரதேசங்கள் எந்த அளவுக்கு வளப்படுத்தப்பட இருக்கின்றன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. ஏற்கெனவே, ராஜாஜி அவர்கள் நீண்ட நாளைக்கு முன்னாலேயே "பொதுப்பணித்துறை என்னுடைய இரண்டாவது எதிரி" என்று குறிப்பிட்டார்கள். காழ்ப்புணர்ச்சியோடு அவ்வாறு சொல்லவில்லை. அந்தத் துறையின் இயல்பான கண்ணோட்டமே ஊழல் மிக இருக்கக்கூடியது. அந்த அடிப்படையில் பார்த்தால் பொதுப்பணித் துறையை எந்த அளவுக்கு ஸ்ட்ரீம்லைன் செய்து, மட்டம் போட்டு ஒழுங்கு படுத்துகிறார்களோ அந்த அளவுக்குத்தான் செலவழிக்கக்கூடிய பணம் எல்லாம் செம்மையாக நாட்டுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும்.

[முற்பகல் 10 30]

மண் அள்ளிக் கொட்டி கணக்கு எழுதுவது, பின்னர் ஒரு ஆண்டு கழிந்து மறுபடியும் மண் அள்ளிக்கொட்டி கணக்கு எழுதுவது என்ற நடைமுறைதான் இந்த பொதுப்பணித் துறையில் இருந்து வருகிறது. இப்படிக் கூறுவதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது.

பொதுப்பணித் துறையைப் பற்றி எனக்கு ஒரு ஆழமான கருத்து உண்டு. சில உதாரணங்களைச் சொல்லி அனாவசியமான ஒரு வாதத்தை நான் கிளப்ப விரும்பவில்லை. இத்துறையில் சில அதிகாரிகள், செல்வாக்கு உள்ளவர்களாக அந்தப் பகுதியில் உள்ள காண்ட்ராக்டர்கள் அவர்கள் கையில் இருப்பதால், சில அநீதிகள் விளைகின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு கூறிக் கொள்ளவிரும்புகிறேன் பொதுப்பணித் துறையில் உள்ள அஸிஸ்டண்ட் என்ஜினியர்கள், எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர்கள், இவர்களுக்கு, இப்படி மேல் தட்டில் இருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு ரிக்கார்ட் இருக்க வேண்டும். அவர்கள் எங்கெங்கே இருந்திருக்கிறார்கள், எவ்வளவு ஆண்டுகளாக இருந்திருக்கிறார்கள், அவர்கள் காலத்தில் எவ்வளவு பணத்திற்குண்டான

வேலைகள் நடைபெற்றிருக்கின்றன, செய்த வேலைகள் எப்படி எப்படி இருக்கின்றன, எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்கின்றன, போன்ற விஷயங்களை எல்லாம் கூர்ந்து கவனித்தால் அவர்களைப் பற்றி ஓரளவிற்கு கணிக்க முடியும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று கணிக்கக்கூடிய முறையில் ஒரு நிர்ணயம் இருக்க வேண்டும்.

ஒரு அஸிஸ்டண்ட் என்ஜினியர் எனக்குத் தெரிந்து 12 ஆண்டுக் காலமாக சென்னையைச் சுற்றிக் கொண்டிருக்கிறார். அவரை மாற்ற வேண்டும் என்று சொல்லும்போது கூவம் திட்டத்திலிருந்து சேப்பாக்கில் உள்ள என்ஜினியரிங் ஆபீஸுக்கு சென்றுவிடுகிறாரே தவிர சென்னையை விட்டுச் செல்ல மறுக்கிறார். அப்படி போவதற்கு மறுக்கக் காரணம் அவருக்கு ஒரு பிடிப்பு இருக்கிறது. அவரிடம் ஒரு ஹானரரி மாஜிஸ்ட்ரேட் காண்ட்ராக்டராக இருக்கிறார். அவர் செல்வாக்குள்ளவர். ஆக, இங்குள்ளவர்களுக்குத் தெரியாமல் பல காரியங்கள் நடைபெறுகின்றன.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்திற்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதைப் பயன்படுத்தி சந்தர்ப்ப அரசியல்வாதிகள் கூட பல்வேறு விதத்தில் தாறுமாறான கோஷங்களை எழுப்பி உடனே கீழே இறங்க வேண்டும் என்று சொல்கிற அடிப்படையில் காரியங்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். இதை நான் விரும்பவில்லை. ஆகவே, இந்த என்ஜினியரிங் டிப்பார்ட்மெண்டுக்கு ஒரு தனி ரிக்கார்டு ஷீட் வேண்டும். ஒவ்வொருவரும் எங்கெங்கு வேலை செய்திருக்கிறார்கள். எவ்வளவு கோடி ரூபாய் மதிப்பிற்கு வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன, அவற்றின் தரம் என்ன, அவை எவ்வளவு ஆண்டுகளில் செய்யப்பட்டிருக்கின்றன, என்பது போன்ற விவரங்கள் அடங்கிய ரிக்கார்ட் ஷீட்டை தொடர்ச்சியாக வைத்துக் கொண்டிருந்தால் அந்த ரிக்கார்ட் ஷீட்டை வைத்துக்கொண்டு ப்ரமோஷன் அல்லது அவர்களைப்பற்றிய ஒரு கணிப்பை வைத்துக்கொள்ள முடியும்.

<u>மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :</u> ஒவ்வொரு என்ஜினியரும் அவர்கள் எந்தெந்த வேலைகள் செய்தார்கள் என்பதற்கு—அவர்கள் எவ்வளவு செக் மெஷர்மெண்ட் செய்கிறார்கள் என்பதற்கு—எம்.புக்கில் ரிக்கார்ட் செய்யப்படுகிறது. கட்டட வேலை அல்லது மண் வேலை எல்லாம் ரிக்கார்டாகிறது. வாழ்நாள் உள்ளவரையில், அதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் ரிட்டயரான பிறகும்கூட பிடிப்பதற்கான வழிமுறைகள் நிச்சயமாக இருக்கின்றன. எம். புக் என்ற ரிக்கார்ட் செய்கிற புத்தகம் இருக்கிறது.

மண் வேலைகள் பற்றிச் சொன்னார்கள். மண் வேலை அதிகமாக தஞ்சை மாவட்டத்தில்தான் ஒவ்வொரு ஆண்டும் செய்யவேண்டியிருக்கிறது. ஆண்டுதோறும் கரையை உயர்த்தவேண்டியிருக்கும். மழை பெய்யும்போது அது கரையும். அப்போது மறுபடியும் அடுத்த ஆண்டு அதைச் சரி செய்யவேண்டும். வீட்டுக்கு சுண்ணாம்பு அடிப்பதுபோல் ஆண்டுக்கு ஒருமுறை மண் அள்ளிப்போடுவது தவிர அதை ஒரு நிரந்தர வேலையாக எடுத்து எஸ்டிமேட்கள் போடுவதில்லை.



<u>திரு மணலி சி. கந்தசாமி :</u> அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. எம். புக். இருக்கலாம், பலன் என்ன என்று கேட்கிறேன், எல்லாப் புக்குகளும்தான் இருக்கின்றன. அதன் பலன் என்ன என்பது தான் கேள்வி. எவ்வளவு என்ஜினியர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கிறேன்.

<u>மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :</u> ஒரு அஸிஸ்டெண்ட் என்ஜினியர் இருக்கும்போது ஒரு கட்டடத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டு கட்டடமும் எழுப்பியாகிவிட்டது. அவர் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியராகி ரிட்டயராகியும் விட்டார். பின்னர் வந்த என்ஜினியர் பார்க்கும்போது அஸ்திவாரம் முக்கால் அடிதான் இருந்தது. முதலில் இருந்தவர் கொடுத்த சர்டிபிகேட் தவறு என்று தெரிந்து ரிட்டயரான பின்னர் கூட அவரிடமிருந்து பணத்தைப் பிடித்திருக்கிறார்கள் என்ற ஒரு சரித்திரம் உண்டு. எம். புக்கில் ரிக்கார்ட் செய்வது ரெஜிஸ்தர் செய்வதை விட உறுதியான ரிக்கார்ட்.

<u>திரு மணலி சி. கந்தசாமி :</u> மேல் பதவிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பற்றி குறிப்பிட்ட அளவிற்காவது ஒரு சாஸனமாக ஒரு ரிக்கார்ட் ஷீட் வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒருவர் அல்லது இருவர் அகப்பட்டிருக்கலாம். பலர் தவறான வழிகளில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு நஷ்டம் ஏற்படக்கூடிய அளவிற்கு அவர்கள் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன என்பது என் அபிப்பிராயம்.

காண்ட்ராக்ட்காரர்களோடு எனக்கு பழக்கம் கிடையாது. அதுபற்றி அதிகம் எனக்குத் தெரியாது. நான் பொதுப்படையாகக் கூறுகிறேன். ஊழலை வைத்துக்கொண்டு அரசியல்வாதிகள் முதல் எடுக்கும் ஒரு அம்சம் அதிகப்படியாக இருக்கிறது. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். சட்ட சபையில் உட்காரவே நமக்கு சங்கடமாக இருக்கிறது. உருப்படியாக கொள்கைகளைப் பற்றி விவாதித்து அரசு தப்பு செய்தால் அதைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடுவதை வரவேற்கிறேன்.

ஆனால் இப்போது இங்கே என்ன நடக்கிறது என்று சொன்னால் அதிகாரத்திற்கு அடுத்தபடியாக வருவது யார் என்ற ஒரு பெரிய போட்டி அரசியல் அடிப்படையில் இருப்பதை நான் விரும்பவில்லை. யார் வேண்டுமானாலும் இருக்கட்டும்.

நான் அமைச்சர் அவர்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு என்ஜினியர், எனக்குத் தெரியும். அவருடைய பெயரை பின்னால் சொல்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள காண்ட்ராக்டரோடு கூட்டாளியாகச் சேர்ந்துகொண்டு காண்ட்ராக்டரைப் போல் நடந்து கொள்கிறார். ஆக, பொதுப்பணித்துறை அமைச்சர் சிறிது விழிப்போடு இருந்து இந்தத் துறையை கொஞ்சம் சரிப்படுத்தினால் நல்லது. அது நாட்டுக்கும் நல்லதாகும். மண் வெட்டிப் போடுகிறார்கள். பிறகு மழை வந்து மறுபடியும் மண் வெட்டிப் போட வேண்டியிருக்கிறது என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அவற்றை ஏன் கான்க்ரீட் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : ஆன்யுவல் மெயின்டெனன்ஸ் என்று சொல்லி ஒரு நான்கு மைல்களுக்கு போடுவது என்று ஆயிரம் அல்லது ரூ. 1,500க்குள்ளே செலவு செய்கிறார்கள். மழை பெய்யும்போது ஒவ்வொரு ஆண்டும் கரை அமைக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிமெண்ட் அல்லது கான்க்ரீட் போடுவது என்றால்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் காரணமாக பெரியவர் மணலி அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளை மறுப்பதாக அர்த்தம் அல்ல. அந்தக் குற்றச்சாட்டுக்கள் அப்படியே இருக்கின்றன. அவைகளை அரசு நிச்சயமாக ஆராயும். பெரும்பாலான பொறியாளர்கள் தவறு செய்யாவிட்டாலும் ஓரளவிற்கு சிலயிடங்களில் பொறியாளர்கள் தவறு செய்கிறார்கள். ஒரே இடத்தில் நீடித்திருக்க வேண்டும் என்பதற்கான நிர்ப்பந்தங்கள் எல்லாம் ஏற்படுத்துகிறார்கள். அவைகளை எல்லாம் கொள்கை அளவில் களைவதற்கு ஒரு வாய்ப்பை அல்லது ஒரு கொள்கையை நிச்சயமாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்ற அளவில் அவர்கள் அளித்தது விளக்கம். மறுப்பு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நன்றி. இதை இத்தோடு விட்டு விடுகிறேன். அடுத்தபடியாக, மின்சார விநியோகம் சம்பந்தமாக மிகப் பயங்கரமான நிலை இருக்கிறது. ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதியில் 1,185 மெகாவாட் மின்சக்தி பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, திட்டமிட்ட வகையில் மின்சாரம் விநியோகிக்கப்பட வேண்டும், சேதாரம் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த அளவிற்கு தொழில் அபிவிருத்தி செய்வது என்பதை திட்டமிட்ட வகையில் செய்யவேண்டும்.

பெரிய அளவிற்கு தொழில்கள் வளரவேண்டும் என்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் தொழில்களை ஆரம்பித்துவிட்டு மின்சாரம் இல்லாமல் அரைகுறையாக விட்டால் உடனே ஊழல் நிச்சயமாக வந்து குதிக்கும். உடனே பல்வேறு மாறுபாடுகள் ஏற்படும். அதனால் பெயரும் பாதிக்கப்படும். ஆகவே மின்சாரம் உற்பத்தி செய்வதையும், விநியோகிப்பதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். நமக்கு தேவை எவ்வளவு, உற்பத்தி எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும் என்பவற்றை எல்லாம் நன்கு ஆலோசித்துப் பார்த்து திட்டமிட்டுச் செய்ய வேண்டும். இயற்கைக் கோளாறுக்கு யாரும் சர்க்காரை கோபித்துக் கொள்ள முடியாது. இது இந்த இராஜ்யத்திற்கு மட்டுமுள்ள விஷயம் அல்ல. இது எல்லா ராஜ்யங்களுக்கும் ஓரளவிற்கு இன்றையதினம் பரிணமித்திருக்கிறது.

முந்தா நாள் கூட நான் பார்த்தேன். "ப்ராவ்டா" என்ற ருஷ்யப் பத்திரிகையில் இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றி ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்திய நாட்டிலே 3 மடங்கு உணவு உற்பத்தி இருக்கிறது என்றும், நான்கு மடங்கு தொழில் உற்பத்தி இருக்கிறது



என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படி உணவு உற்பத்தியில் 3 மடங்கு உற்பத்தி, தொழில் உற்பத்தியில் 4 மடங்கு உற்பத்தி என்று சொன்னால், இன்று நாம் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் நாம் எங்கே இருக்கிறோம் என்பது தெளிவுபடத் தெரியும். என்னதான் ஜனத்தொகை அதிகப்பட்டிருந்தாலும், இந்த 3 மடங்கு, 4 மடங்கு உற்பத்தியால் நல்ல நிலையை நாம் அடைந்து இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக 3 மடங்கு அவதியைத்தான் நாம் பெற்று இருக்கிறோம். செழுமை அதிகமாக இல்லை. இதைப் பார்க்கிற நேரத்தில், நம்முடைய மக்கள் சோம்பேறிகள் அல்ல, உற்பத்தி செய்வதில் திறமை படைத்தவர்கள், கஷ்டப்பட்டு காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய கடும் உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் இன்றையதினம் சமுதாய அமைப்பில் இருக்கும் கோளாறுகள் தான். அதற்கு தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்காததை நான் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இந்த நாட்டில் சோசலிஸ நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தவறிவிட்டதா என்றால், இவர்கள் எடுத்த சில நடவடிக்கைகளை நாம் மறந்து விடுவதற்கு இல்லை. இருந்தபோதிலும் மாற்றங்கள் ஏற்படாததற்குக் காரணம் அந்த நடவடிக்கைகள் ஒழுங்குற எடுக்கப்படவில்லை, அல்லது எடுத்த நடவடிக்கைகள் போதாது, இன்னும் எடுக்க வேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ளப்பணத்தை கண்டுபிடிக்க அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம். மத்திய அரசாங்கம் அதைக் கண்டுபிடிக்க பல நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் நிலைமை என்ன என்று பார்க்கிறபோது நாம் எவ்வளவுதான் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதை தடுத்து நிறுத்த முடியவில்லை. அதைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தால் தான் நாம் போடுகிற திட்டங்கள் பயன்பெற முடியும், நாம் போடுகிற திட்டங்களால் மக்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய முடியும். கள்ளப்பணத்தை வெளிக் கொணருவதற்கு இங்கே கொடுக்கப்பட்ட யோசனைகளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இன்கம் டாக்ஸ் ஸ்டக்சரை மாற்றினால் கள்ளப்பணம் குறையுமென்று சொல்கிறார்கள். கள்ளப்பணம் இந்த நாட்டிலே இருக்கும் பொருளாதாரத்தை கெடுக்கிறது. இதைச் சமூக விரோதிகள் செய்து வருகிறார்கள். அவர்கள் இதைச் செய்யாமல் இருக்கக்கூடிய முறையில் சட்டங்கள் இருந்தாலும், அந்தச் சட்டங்களின் கண்ணுக்கு மண்ணைத் தூவி விட்டு அவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கள்ளப்பணம் பொருளாதாரத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டு உச்ச கட்டத்தில் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த இந்த அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

பூச்சி மருந்து போதவில்லை, உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. விவசாய அமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்வேன். உர விநியோகம் பூராவையுமே தனியார் கம்பெனிகளிடத்தில் விடாமல்

அத்தனையும் சர்க்கார் மூலமே விநியோகிக்க வேண்டும். கூட்டுறவுத் துறை மூலம் அதை எடுத்துக் கொள்ளுங்கள். அப்படி எடுத்துக் கொண்டால் தான் இந்தக் தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும் என்று தோன்றுகிறது. விவசாயிகள் அல்லாதவர்களுக்கு உரம் கிடைக்க வழியிருப்பதால் அவர்கள் அதைக் கள்ள மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள்.

இப்படி கள்ளமார்க்கெட் கள்ளப்பணம் வைத்து இருப்பவர்களைக் கண்டு பிடித்தால் அவர்களைத் தூக்கில் போடவேண்டும், நாடு கடத்த வேண்டும், அவர்களிடத்தில் வேதாந்தம் பேசிக்கொண்டிருக்க முடியாது. அப்படிச் செய்தால்தான் முடியும். வரி குறைந்தால் எல்லோரும் நல்லபடியாக இருக்க மாட்டார்கள். யாராவது ஒருவர் இருவர் தான் நல்ல முறையில் இருப்பார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு விவசாயிகள் செய்யும் உற்பத்தியைப் பூராவையும் கொள்முதல் செய்து, விநியோக முறையையும் விவசாய இலாகாவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்தால் தான் ஓரளவிற்கு குறைபாடுகளைத் தீர்க்கலாம். ஆகவே, அதற்குத் தகுந்த முறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழக அரசியலில் இந்த வருஷம் நடந்து இருக்கும் கிளர்ச்சிகளைக் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதன் மூலம் சிறப்பான படிப்பினைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிச் செய்தவைகள் தப்பு என்று கூடச்சொல்லலாம். மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவில்லை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வது ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதல் அல்லது அரசியல்வாதிகள் காரணம் என்று கூடச் சொல்லலாம். ஓரளவிற்கு அதில் உண்மையிருக்கிறது. அதையெல்லாம் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவேண்டும்.

இந்தச் சர்க்காரை பதவியை விட்டு போகச் சொல்வதைப் பற்றி கவலையில்லை. ஆனால், இதே நிலைமை வேறு சர்க்கார் வந்தால் ஏற்படாது என்பது என்ன நிச்சயம்? என்ன உத்தரவாதம்? அந்த அந்த அடிப்படையில் மற்ற கட்சிகளுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே எனக்கு அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கும் சூழ் நிலையை மனதில் வைத்துக்கொண்டு தனக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது என்று அரசியலில் இறங்குவது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். நல்ல அரசியல் தெளிவை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துங்கள். பொறாமை, பொச்சரிப்பின் காரணமாக தமிழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள்.

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் நல்ல அரசியல் தெளிவு ஏற்படுத்துகிற வகையில் தங்களுடைய திட்டங்களை வகுக்க வேண்டும். மாணவர்களைப் போராட்டம் செய்யத் தூண்டுகிறார்கள். நாங்கள் பள்ளிக்குப் போக மாட்டோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் படிப்பு வீணாகி விட்டால் சமுதாயமே பாழாகிப்போய்விடும் என்று உள்ளபடியே நான் பயப்படுகிறேன். இன்றைக்குச் சொல்லலாம் ஒருவர் பதவியை விட்டு இறங்குகிற வரையில் நாங்கள் பள்ளிக்குச் செல்லமாட்டோம் என்று.



நாளைய தினம் இந்த சமுதாயத்தை எப்படித் திருத்தப்போகிறீர்கள், இன்றைய இளைஞர் சமுதாயம் எப்படி இருக்கிறது? இதுவெல்லாம் வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. இதைப்பற்றி இந்த அறிக்கை குறிப்பிடாமல் விட்டது, அதை மறந்து அறிக்கை எழுதியிருப்பது அவ்வளவு நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதையெல்லாம் எடுத்துச்சொல்லி, ஆளுநர் அவர்கள் அரசியலில் ஒழுக்கம் வேண்டும், ஒழுங்கு வேண்டும் என்ற முறையில் ஒரு அப்பீலாக விட்டு இருக்கவேண்டும். அதை விட்டு இருப்பது ஏதோ நம்மை நாமே பார்த்து பயந்து கொண்டு இருப்பதுபோல் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இதிலே பூராவும் முக்கியமாக இருந்து கொண்டிருக்கும் விஷயம் மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இடம் இருக்கும் மோதல் தான். ஒவ்வொன்றைப் பார்க்கிற நேரத்தில் மத்திய சர்க்காரின் தயவு இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது என்று சொல்லும் அளவில் நம்முடைய நிலைமை இருக்கிறது, நாம் நிச்சயமாக ஒன்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்திய ஒருமைப் பாட்டிற்கு எதிராக யாரும் தனி நாடு கேட்கமாட்டார்கள். தேசப் பிரிவினையை யாரும் நினைக்கக்கூடத் தயாரரக இல்லை. இந்தியா ஒருமைப் பாடாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனால், மத்தியில் குவிந்து இருக்கும் அதிகாரங்கள் பரவலாக விநியோகிக்கப்படவேண்டும். அப்படிச் செய்யாமல் போனால் தான் ஒருமைப் பாட்டிற்குக் குந்தகம் விளையும். இந்த சபையில் முன்னால் 10 இராஜ்யங்களின் அறிக்கையை வையுங்கள். எல்லா இராஜ்யங்களும் நிச்சயமாகச் சொல்வேன், யாரும் எங்கள் இராஜ்யத்திற்கு மத்திய சர்க்கார் அதிக உதவியை அளித்து இருக்கிறது என்று கூறியிருக்கமாட்டார்கள். நாங்கள் அவ்வளவு கேட்டோம், மத்திய சர்க்கார் அளிக்கவில்லை என்ற குறைபாட்டைத்தான் சொல்லியிருப்பார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்டத்தின் காரணமாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்டம் ஏதோ வெள்ளையர்கள் வெளியேறிய உடன் அன்றைக்கு இருந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டது. இன்றைக்கு 20 ஆண்டுகள் அதை நடைமுறையில் வைத்துப்பார்த்து இருக்கிறோம். அதிலே பல சிக்கல்கள், சங்கடங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதை அடிப்படையாக வைத்து இன்றுள்ள சூழ்நிலையில் எந்த அளவுக்கு மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டும்.

ஆகவே தான், நான் கலைஞர் அவர்களிடத்தில் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன், இன்றைக்கு மத்திய-மாநில அரசு உறவுகள் குறித்து இராஜமன்னார் கொடுத்த அறிக்கை மீது விவாதம் வேண்டும் என்று. அப்படி வைத்தால் அதன் அடிப்படையில் பேச முடியும். அப்படி வைத்து பேசினால் இந்தச் சபையின் கருத்தோட்டத்தையும் அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு மணலி சி. கந்தசாமி] [1974 சனவரி 28

தியோகஸ்தர்களுக்கும் அரசுக்கு அனுப்பக்கூடிய விதத்தில் ஓரளவுக் காவது இந்தக் கண்காணிப்பை விஸ்தரிக்கவேண்டும். அப்படிப்பட்டவர் களுக்கு தகுந்த ஊதியம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள் கிறேன்.

மாற்றுக் கட்சி அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரை யும் கேட்டுக்கொள்வேன். இன்று உத்தியோகத்தை வைத்துக் தான் எம். எல் ஏ.-யினுடைய ஸ்டாண்டர்ட் இருக்கிறது. ஒரு எம்.எல்.ஏ. நல்ல செல்வாக்கு உடையவர் என்பது அவர் எத்துணை உத்தியோகங்களை வாங்கிக்கொடுக்க முடியும் என்பதைப் பொறுத்துத் தான் கணிக்கப் படுகிறது. ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. நூற்றுக் கணக்கான பேர் கள் காலையில் எழுந்தால் வேலைவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவர்களை சமாளிக்க முடியவில்லை. நியாயத்தை எடுத்துச் சொன்னாலும், "உங்களுக்கு ஒன்றும் தெரியாது, ஐயா" என்று கூறுகிறார்கள். நாம் என்ன செய்வது என்று புரியவில்லை. ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

உத்தியோக விஷயங்களைப் பொறுத்தவரையில் திட்டவட்டமாக, தெளி வாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக அல்லது வேறு இயந்திரத்தின் மூலமாக எந்த விதமான தலையீடும் இல்லாமல் உத்தியோகங்களை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துவிடவேண்டும். அப்படிச் செய்தால் யாரும் குறை சொல்ல முடியாது. அப்படியில்லை என்றால் எங்களுக்கு கோட்டா பிரித்துக்கொடுத்து விடுங்கள். எதிர்க்கட்சிக்கு ஒரு ஸீட், ஆளும் கட்சிக்கு இரண்டு ஸீட் என்று பிரித்துக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் சொல்ல முடியாமல் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. சமாளிக்க முடிய வில்லை. இல்லாவிட்டால் வோட்டுப் போடமாட்டேன் என்று சொல்கிறார்கள். வோட்டுப் போடாவிட்டால் பரவாயில்லை என்று கூட சொல்லி விட்டா லும் கேட்கமாட்டேன் என்கிறார்கள். சமாளிப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் சீரான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது ஆளும் கட்சித் தோழர்கள் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். அரசியல் போக்கு பற்றி நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். நமக்கு எதிராக எந்த அளவுக்கு காழ்ப்பு உணர்ச்சி வளர்ந்திருக்கிறது, மக்கள் மத்தி யிலே துவேஷம் கிளப்பப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு சரியான முறையில் கண்யமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். தப்புப் தவறு இல்லாமல், தெரிந்தோ, தெரியாமலோ எந்த அளவுக்கும் கண்யம் குறையாதபடி, அது மட்டுமல்ல, கண்யமாக நடந்துகொள்கிறார்கள் என்று தோற்றம் அளிக்கக்கூடிய விதத்தில் உங்கள் நடவடிக்கை இருக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன். யாரும் தப்பாக நினைக்கவேண்டாம். இது தான் நான் சொல்ல வந்தது. இத்தோடு முடிக்கிறேன். வணக்கம்.



1974 சனவரி 28]

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையின் மீது இதுவரை நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர்களால் விவாதிக்கப்பட்டதை உடல் நலம் இல்லாத நிலையிலும் கூட நான் சிறிது அளவு அதைக் கவனிக்க முடிந்தது.

எனக்கு முன்பு பேசிய எனது நண்பர் மணலி அவர்கள் தன்னுடைய பேச்சிலே சில புத்திமதிகளையும், சில எடுத்துக்காட்டுகளையும் நமக்கு சொன்னார். அவர் அரசியலில் பழையவனா அல்லது நான் பழையவனா என்பது அல்ல. நான் தான் சிறுவன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால் கணக்குப் போட்டால் அப்படித் தான் இருக்கும்.

நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஜனநாயகத்தை எண்ணிப் பார்க்கிற பொழுது விசித்திரமாக எனக்கு ஒன்று படுகிறது. நாம் அதைப் பெறுவதற்கு பல தியாகங்களைச் செய்திருக்கிறோம். எனக்குள்ள ஐயப் பாடு எல்லாம், எங்கே இனி இதை இழந்து மீண்டும் பெறுவதற்கு எப்படிப்பட்ட தியாகங்கள் செய்யவேண்டி வருமோ என்ற எண்ணம் நமக்கு வருகிறது. எனது நண்பர் மணலி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அரசியல் காழ்ப்பு உணர்ச்சியை நாம் மக்களிடையே, குறிப்பாக மாணவர்களிடையே, நம்முடைய நலன் கருதி பயன்படுத்து வது அது நம்மை பாழ்படுத்தும் என்று சொன்னார். அது மிகவும் உண்மை. மாணவர்களுடைய அறிக்கை, மாணவர்களுடைய கிளர்ச்சி, மற்ற குழப்பங்களைப் பற்றி கவர்னர் பெருமகனுடைய அறிக்கையில் அதற்குச் சரியான விளக்கம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். விளக்கம் இல்லாது அவர்கள் விட்டதுதான் அவர்கள் அறிக்கை மிக சாதுர்யமானதும் சாமர்த்திமானதுமாகும். அதற்கு விளக்கம் கொடுத்திருந்தால் வேறு வகை திருப்பம் கொடுத்திருப்பார்கள். விளக்கம் கொடாமலே இருந்ததே நல்லதாக இருக்கிறது.

பொதுவாக ஒழுக்கம் என்பது ஒரு திரையாக இருக்கிறதே தவிர, மனிதன் அடிப்படையாக அதை ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிற நிலை யில் இருப்பதாக எனக்குத் தெரியவே இல்லை. ஒழுக்கம் வெறும் திரையாக இருக்கிறது. அந்தத் திரையை வைத்துக்கொண்டு எதைச் செய்யலாமோ அதைச் செய்யலாம் என்று எண்ணுகின்ற எண்ணம் வளருமானால் நிச்சயம் மனிதப் பண்பாடு வளரவே வளராது.

ஒன்று நெஞ்சில் இருக்கிறது. அதைச் சொல்கிறேன். அது கவர்னர் அவர்களின் உரையில் இருக்கவேண்டுமென்பது அல்ல. எந்தப் பெண்ணாக இருக்கட்டும், அதற்கு ஜாதி தேவையில்லை, குலம் தேவையில்லை, பருவம் தேவையில்லை ஆகா, பயங்கரமாக பெண்ணை பலாத்காரமாகக் கொண்டு சென்று, கற்பழித்து, அதை அங்கஹீனப் படுத்தி, அதைக் கொன்று, எத்துணை விதமான இடங்களில், அந்த சம்பவம், கோர சம்பவம் நடந்திருக்கிறது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இந்தச் சர்க்காருக்கு—மாநில அரசுக்கு, மத்திய சர்க்கார் மானியமோ உதவிகளோ வழங்குவதற்கு தானாகவே முன் வரவேண்டும். மத்திய சர்க்காரைத் தாஜா செய்து தான் பணம் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று இருக்கிற முறை மிகவும் வருந்தத்தக்கது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பது, வேண்டாதவர்களுக்கு குறைத்துக்கொடுப்பது என்ற போக்கு சரியல்ல. அப்படி வருகிற காலத்தில் பயங்கரமான ஆபத்து வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படியே நிலைமை இருக்குமானால் நாடு பூராவிலும் உள்ள மக்கள் மத்தியிலே அதிருப்தி வளரும். அதனால் சிக்கல் வரும். அப்படிப்பட்ட சிக்கல் வருவதை முன் கூட்டியே யோசித்து, அதைத் தடுப்பதற்குரிய வழிவகைகளைச் செய்யாவிட்டால் மக்கள் மத்தியிலே பிரிவினை உணர்ச்சி வளரக்கூடும். அந்த மாதிரி பிரிவினை உணர்ச்சியே மக்கள் மத்தியிலே வளரவிடக்கூடாது. அம்மாதிரி உணர்ச்சி தமிழ் நாட்டு மக்கள் மத்தியிலே அதிகமாக வளராவிட்டாலும் வேறு மாநிலங்களிலே பிரிவினை உணர்ச்சி, அப்படிப்பட்ட எண்ணம் அதிகமாக வளர்ந்தால் நாம் ஆச்சரியப்படுவதர் இல்லை.

ஆகவே தான் நான் சொல்ல விரும்புகிறேன், மாநில மத்திய சர்க்கார் உறவுகளைப் பற்றி தெளிவான அறிக்கைகளை வைத்து நாம் இங்கே விவாதிப்பது அவசியமாக இருக்கிறது. அப்படி விவாதிக்கும் பொழுது சபையில் கூறப்பட்ட பலதரப்பட்ட கருத்துக்களையும் மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அது மட்டுமல்ல, எல்லா விஷயங்களிலும் முதல் அமைச்சர்கள் மகாநாட்டிற்கு செல்லக்கூடிய நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களும், மற்றைய அமைச்சர்கள், அமைச்சர்கள் மகாநாட்டிற்குச் செல்லக்கூடிய நேரத்தில் இந்தக் கோணத்திலிருந்து பிரச்னைகளை அணுகவேண்டும். ஏதோ சொல்லி சொஞ்சம் அதிகப் பணத்தை வாங்கிவிடுவிடுவது மாத்திரமல்ல, பணத்தைப்பற்றி கூட அவசியம் கிடையாது, ஆனால் இந்தக் கோணத்தில் பிரச்னைகளை அணுகி, நிலைமை எப்படி வளர்கிறது, அதைத் தடுக்காவிட்டால் இன்னும் எப்படி நிலைமை கேவலமாகப் போகக்கூடும் என்பதைப் படம் பிடித்துக் காட்டி மத்திய சர்க்காரிடமிருந்து அதற்குரிய பரிகாரத்தைப் பெறுவது மிகவும் அவசியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

அடுத்தபடியாக, கள்ளப் பணத்தை வெளிக்கொண்டுவருவதற்கான இன்னொரு முறையையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் திடீர் திடீரென்று பணக்காரர்கள் தோன்றுகிறார்கள். நானே பார்த்திருக்கிறேன். போன வருஷம் பிச்சைக்காரனாக



இருந்தவன் இந்த வருஷம் ரூ. 50,000 பெறுமான வீடு கட்டிக் கொண்டுவிடுகிறான். போன வருஷம் பக்கிரியாக இருந்த ஒருவர் இந்த வருஷம் ரூ. 10 லட்சம் பணம் படைத்தவனாக ஆகிவிடுகிறான். அங்கே இருக்கக்கூடிய கணக்குப் பிள்ளை அல்லது தாசில்தார் ஒவ்வொரு வருஷமும் இப்படிப்பட்ட நபர்களுடைய சொத்துக்களைப் பற்றி ஒரு ரிபோர்ட் தயார் பண்ணவேண்டும். பெரிய விரிவான அளவுக்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் இவர்களை ஒன்றும் செய்ய முடியாது. டாடா, பிர்லா என்பவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமத்திலிலும் திடீர் திடீரென்று ஒரு டாடா, ஒரு பிர்லா தோன்றுகிறார்கள். கிராமத்தில் இருக்கிற இந்த திடீர் வளர்ச்சியை அரசின் கவனத்திற்குக்கொண்டு வந்து கண்காணிக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் யாரும் அவர்களை எதிர்க்க முடியாது. காரணம் பயப்படுகிறார்கள்.

ஒரு கிராமத்தில் இருக்கிற கணக்குப் பிள்ளையோ அல்லது அங்கு இருக்கிற கிராம உத்தியோகஸ்தரோ அந்த வருஷம் குறிப்பிடத்தக்க அளவுக்கு, சக்தி மீறிய அளவுக்கு சொத்து வாங்கியவர்களைப் பற்றிய ரிப்போர்ட்டை அரசுக்கு அனுப்பிவைக்குவேண்டும். ஒருவர் 5 செண்ட், 10 செண்ட் வாங்குவதென்றால் சாதாரணமாக நடக்கக்கூடிய விஷயம். ஆனால் குறிப்பிடத் தக்க அளவுக்கு, பிரமிக்கத் தக்க அளவுக்கு, சந்தேகப்படுகின்ற அளவுக்கு சொத்து சேர்க்கின்றவர்களைப் பற்றி சர்க்காருக்கு நிச்சயம் அறிக்கை அனுப்பப்படவேண்டும். இதற்காக தனியாக ஒரு விஜிலன்ஸ் செல் இருக்கவேண்டும். உத்யோகஸ்தர்களையோ அல்லது அல்லது ஒரு சிலர்களையோ மாத்திரம் கண்காணித்தால் போதாது. விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டில் ஒரு விரிவான வகையில் போலீஸில் ஒரு பெரும் பகுதி இதற்கு பயன்படுத்தினால் கூட பரவாயில்லை; அப்படிப்பட்ட அளவுக்கு விரிவான அடிப்படையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சமுதாயத்தில் ஊறிப் போயிருக்கக்கூடிய, சமுதாயத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கக் கூடிய இந்தக் கறுப்புப் பணத்தை வைத்திருக்கக்கூடிய பல பேர்கள் சமுதாயத்தில் கிராமங்களில் திடீர் திடீரென்று முளைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் அனுபவத்தால் சொல்கிறேன். இவர்களைக் கட்டுப்படுத்த கிராம அடிப்படையில் விரிவான நடவடிக்கை எடுத்துக்கொண்டால்தான் பலன் கிடைக்கும். இந்த மனப்போக்கை வளரவிடக்கூடாது. இரண்டு, மூன்று வருஷங்களில் அளவுக்கு மீறிய சொத்து வைத்திருக்கக்கூடியவர்கள் பற்றி கண்காணித்து கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டால்தான் இவர்களைக் கட்டுப்படுத்த முடியும்.

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் அமைத்துக்கொண்டு பல கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 150 சம்பளம் கொடுத்து, ஜுனியர் அசிஸ்டெண்டு கிரேடில் உள்ளவர்களைக் கணக்குப் பிள்ளையாகப் போட்டு, அவர்களுக்கு இன்னும் பல கணக்குகளையும் கொடுங்கள். சமுதாயத்தைப்பற்றிய அறிக்கை சர்க்காருக்கு வந்துகொண்டே இருக்கவேண்டும். ஒரு வருஷத்தில் எப்படி சமுதாயம் இருந்தது, அடுத்த வருஷத்தில் அது எந்த விதத்தில் மாறியிருக்கிறது என்பதற்கான புள்ளி விவரங்களோடு ரிபோர்ட்டை கணக்குப் பிள்ளையும், மற்றைய கிராம உத்

அந்த முறையில் பார்க்கும்போது அவருடைய உரையில் கூறுகிறபோது சொல்கிறார், மதுவிலக்கை மீண்டும் அமுல் படுத்தியதன் மூலம் ஏற்பட்ட பெரும் இழப்பை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டதற்கு வருந்துவதாக கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கை ரத்து செய்வதற்கு முன்னாலே மதுவிலக்கு கொள்கை பற்றி தெளிவாக நமது முதலமைச்சர் பல மேடைகளில் பேசி வந்தார்கள். அது மாத்திரமல்ல. ரத்து செய்யப்பட்ட மதுவிலக்கை மீண்டும் அமல் படுத்த இந்திய சர்க்கார் இழப்புத் தொகையை அரசுக்கு ஈடு செய்து தரவேண்டுமென்ற பெரும் கோரிக்கையை கூறி வந்தார்கள். இருந்த போதிலும் மக்கள் நலனை அடிப்படையாக வைத்து மத்திய அரசு அந்த கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது. மத்திய அரசு ஈடு கட்டித் தரவில்லை என்பது மாத்திரமல்ல. திட்டவட்டமாக அறிவிப்பே செய்து விட்டார்கள், கொடுக்க முடியாது என்று.

அடுத்தபடியாக, ஐந்தாண்டு காலத்திலே இலங்கையிலிருந்து 57 ஆயிரம் குடும்பங்கள் தமிழகத்தில் குடியேறவிருக்கின்றன. 57 ஆயிரம் குடும்பங்கள் ஐந்தாண்டு காலத்தில் குடியேறவிருக்கின்றன என்றால், ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 10, 12 ஆயிரம் குடும்பங்கள் இங்கே குடியேறப் போகின்றன. இலங்கை அரசும் இந்திய அரசும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக பாதிக்கப்படும் மாநில அரசோடு எந்த அளவுக்கு கலந்து கொண்டு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள் என்பது இன்று வரை தெரியாது. அப்படி மத்திய அரசு, இலங்கை அரசு இரண்டும் சேர்ந்து ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக 57 ஆயிரம் குடும்பங்கள் குடியேறப்போகின்றன. சமாளிக்க வேண்டிய பொறுப்பு—குடியிருப்பு வசதி, வேலை வாய்ப்பு வசதி, பொருளாதார வசதி—ஆகியவற்றில் மத்திய அரசு ஓரளவு செய்தாலும் கூட பெரும் சுமையை மாநில அரசு ஏற்க வேண்டிய கடமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைகளை ஆளுநர் உரையில் எடுத்துச் சொல்வது பொருத்தமானது. அதே சமயம், மத்திய அரசுக்கு மாநில அரசு செய்ய வேண்டிய உதவிகளை எவ்வளவு தாராளமாக செய்திருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒரே ஒரு உதாரணம். 1973–74-ஆம் ஆண்டு தொழில் முதலீட்டுக்காக மத்திய நிதி ஒதுக்கீட்டில் ஏறத்தாழ ரூ. 1,500 கோடி மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை. இந்த ரூ. 1,500 கோடியில் தமிழ் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 40 கோடி என்று சொன்னால் இந்த மாநிலம் எந்த அளவுக்கு மத்திய அரசால் அன்பால், பாசத்தால் அரவணைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆகவேதான் இப்படிப்பட்ட நிலைகள் தொடர்வதன் மூலம்தான், தொடர்கிற நிலை உருவாகிற பொழுதுதான், மாநில சுயாட்சி என்ற கோரிக்கை உருவாகிறது. இங்கே உறுப்பினர்கள் பேசுகிறபொழுது சொன்னார்கள்., மாநில சுயாட்சி என்பதே, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்று. சொன்ன உறுப்பினர் ஒருவர் படித்தவர், பட்டம் பெற்றவர், வழக்கறிஞர். மாநில சுயாட்சி மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று நான் துருவித் துருவி ஆராய்ந்தேன், எனக்குப் புரியவில்லை





இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கலாம். நாளை பின்னொரு கட்சி ஆட்சிக்கு வரலாம். மாநில சுயாட்சி ஒரு கட்சிக்காகக் கூறப்படுகிற கோரிக்கை அல்ல. இந்த மாநிலத்திற்காக மட்டும் கேட்கிற கோரிக்கை அல்ல. இந்தியாவில் உள்ள பல்வேறு அதிகாரிகள் மத்திய அரசாங்கத்திலே குவிந்திருப்பதன் காரணமாக, மாநில வேலைகள் தடைபடுகின்றன. அதனால், மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், மாநிலங்கள் சுயாட்சியோடு இயங்க ஏதுவாக, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வைத்து, பல்வேறு மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்கள் எல்லாம் மத்திய அரசை ஆள்கிற கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலே, அந்தக் கோரிக்கையை உரத்த குரலிலே பேசமுடியாமல் இருக்கலாம்.

ஆனால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மத்தியில் ஆளுகிறக் கட்சியைச் சேராமல், பின்னொரு கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால் அந்தக் கோரிக்கையைப் பற்றிப் பேசுகிறார். இந்தியா முழுவதற்கும் சேர்த்துப் பேசப்படுகின்ற பேச்சு, தமிழ் மாநிலத்திற்கு மட்டும் பேசுவது அல்ல. அந்தப் பேச்சை, வழக்கறிஞர், படித்தவர்—இங்கே உள்ள உறுப்பினர், மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றுவது என்று கூறுகிறார். அது எந்த அளவு திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றும் என்கிற அம்சங்களைத் துருவிப் பார்த்தால், அதிலே இல்லவே இல்லை. காரணம், எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம் என்ற நிலை தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான் மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காப்பாற்றுவதற்காக எழுப்பப்பட்ட கோரிக்கை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களைக் கூடுதலாக்க வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்து, அது தமிழ் மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் உரிய கோரிக்கையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே எழுப்பப்பட்ட கோரிக்கை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காலஞ்சென்ற நம்முடைய ராஜாஜி அவர்களுக்காக, அரசாங்கமே முழுப் பொறுப்பேற்று, அவருடைய கல்லறையைக் கட்டுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறது என்பது நமக்குத் தெரியும்.

அதைப்போலவே, தெய்வத் திருமகன் தேவரின் சமாதியை அரசாங்கமே முழுப் பொறுப்பேற்றுக் கட்டித் தரவேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே எதிர்க்கட்சிகளின் தரப்பிலே கடைசியாகப் பேசுவதற்கு நான் முற்படுகிறேன். இந்த விவாதத்திலே பங்கு கொண்ட எல்லா கட்சி தரப்பினரும் அவரவர்களது கருத்துக்களை இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள்.

Really it is a fact that I got married to Congress in 1926 and tried to stay with the Congress for many years. Unfortunately. I have been painfully driven to divorce congress because the congress had failed to discharge its obligations. Therefore, I felt that I cannot carry on with that wife, who had failed to discharge her duties properly. There was no consistency in its policy. I have to leave that wife and join another party.

THIRU V. KRISHNAMOORTHY: In that case, the hon. Member cannot continue to be a Hindu.

THIRU K. M. SUBRAMANIAM: Fortunately, I continue to be a Hindu because that sort of wife was not advisable acceptable to Hindu philosophy. In spite of all these difficulties, I have carried on with this wife for sometime. I have got the highest regard for my erstwhile leader and I am sure that such words are not coming from him but they are coming only from his mouth and not from his heart. In his party, there was no consistency in its policy. Consistency was the virtue of an ass according to Congress. There was no consistency in the programmes and policies of the Congress. I am not prepared to sacrifice my conscience for power. So I have changed my party affiliation. My conscience has not allowed me to accept the change. I have also come out of that party because I have found all the parties have been somehow or other not keeping up to their programmes . . . .

THIRU R. PONNAPPA NADAR: He is not asking for clarification but he is making a speech.

THIRU K. M. SUBRAMANIAM: I want to make my position clear.

(THE HON. Speaker sounded the gong and requested the member to resume his seat.)

THIRU R. PONNAPPA NADAR: Sir, I am very grateful to the clarification given by the hon. Member. He has stated that he has divorced the Congress. I would say that divorce is rather very belated. Knowing full well the price for divorce, we know what has transpired. I do not want to say anything against that hon. Member because he had joined almost all parties and he had been in those parties. Now he says that he has divorced



all of them. At least let him be virtuous to the last woman, with whom he is now having relationship. That is the only prayer which I have to make through you.

THIRU K. M. SUBRAMANIAM: I have not joined any party. I am an Independent.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த மாதிரியாக அரசியல் நாணயம், அரசியல் ஒழுக்கம் எல்லாம் குறைகின்றதைக் காணுகின்றபொழுது ஹிட்லர் ஒரு தடவை கூறினார். பிரிட்டனைப் பார்த்து யுத்தகாலத்திலே நடந்த நிகழ்ச்சியைப்பற்றி கூறும்பொழுது கூறினார், 'Britain is like an old prostitute preaching morals to her young daughter' என்று சொல்லக்கூடிய அளவிலே அவர்கள் கடுமையாகப் பேசி க் கிருர்கள். அப்படிப்பட்ட கடுமையான வாசகங்களைப் பயன்படுத்தவே டு மென்று நான் நினைக்கவில்லை. டாக்டர் ஜான்ஸன் அவர்கள் அரசியல்வாதிகளைப்பற்றி ஒரு கருதுதைக் கூறியிருக்கிறார்கள், Politics is the last refuge of a scoundrel என்று சொல்லக்கூடிய அளவிலே ஒரு பெரிய மேதை பெரிய அறிஞர் கூறி இருக்கிறார்கள்.

அத்தகைய கூற்றுகளையெல்லாம் இந்த மன்றத்திலே கூறினால் நம்மைப் போன்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் அது இழுக்காக இருக்கும் என்ற காரணத்தினாலே துணிவோடு அது வேண்டாம் என்று நினைக்கிறேன்.

அவர்கள் எங்களைப் பார்த்து காங்கிரஸ்காரர்கள் மோசமாகிவிட்டார்கள் என்று எள்ளி நகையாடுகின்ற காலத்திலே, நான் சொல்லிக்கொள்கிறேன். காந்திய வழியிலே அற வழியிலே அகிம்சா வழியிலே நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, எங்கள் தலைவர்கள் நடத்திய வாழ்க்கையானாலும் சரி அதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. காந்தியடிகள் இல்லையா, நேரு இல்லையா, சாஸ்திரி இல்லையா, நமது தலைவராக விளங்குகின்ற காமராஜர் அவர்கள் இல்லையா இவர்களையெல்லாம் பார்த்து இழித்தும் பழித்தும் பேசுகின்ற நாகரீகம் வேண்டாம் என்று அருமை நண்பர், எங்களுடைய கட்சியிலே முன்னால் இருந்தவர், இப்பொழுது பிரிந்து சென்றிருக்கின்ற திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் கூறினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கூறினார்கள். ஏதோ பாண்டிச்சேரியிலே நிறுவன காங்கிரஸ், ஆளுங் காங்கிரஸ் இரண்டிற்கும் உடன்பாடு ஏற்பட்டு இருப்பது வேதனைப்படக்கூடிய அளவிலே இருக்கிறது என்று சொல்லி வியப்பாக சில கருத்துக்களைக் கூறினார்கள்.

பொதுவாக, இந்தக் கவர்னர் உரையைப் பற்றி விமர்சனம் செய் கின்ற நேரத்திலே, பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு கட்சித் தலைவர் கள் புத்திரிகைகளிலே கொடுத்திருக்கிறார்கள். என்னை அவர்கள் கலந்ததற்கு நான் ஒரு கருத்தினை தெரிவித்திருந்தேன். அது, மத்திய அரசாங்கத்திற்கு மகஜர் சமர்ப்பிக்கின்ற நிலையிலே அமைந்திருக்கிறது என்ற கருத்துதான். அதை மாண்புமிகு உறுப்பினர் புலவர் வேழ வேந்தன் அவர்கள், நன்றாக இல்லை என்ற கருத்திலே எடுத்துக் கூறினார்கள். உண்மையிலே, இந்தக் கவர்னர் பெருமானுடைய உரை யைப் பார்த்து, அதே நிலையில் மத்திய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக கொடுத்திருக்கிற மெமோ ரண்டத்தையும் படித்துப் பார்த்தால், ஏறத்தாழ பல பகுதிகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன இதில் என்று சொன்னால் அது மிகையாகாது.

கவர்னர் பெருமானுடைய உரையிலே அவர்களது கருத்துக்களை எல்லாம் கூறி இருக்கிறார்கள். பொதுவாக, ஒரு வார்த்தை கூட மாநில சுயரட்சி பற்றி இந்த உரையிலே இல்லை. ஆனால், இங்கு வெகுவாகப் பேசும்போது பல அங்கத்தினர்களும் மாநில சுயாட்சி யைப் பற்றி பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். புலி வருகிறது புலி வருகிறது என்ற அளவிலும் பலரும் இந்த மாநில சுயாட்சி பூதத்தைக் கிளப்பி விடுகிற நிலைமையிலே பேசி இருக்கிறார்கள் என்ற வகையில் அந்தப் பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன என்று சொன்னால், அது மிகவும் வருந்தத்தக்க நிலையிலே இருக்கிறது.

அரசியல் சட்ட திருத்தம் பற்றி இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன, மாநில சுயாட்சிபற்றி இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன, என்பதுபற்றி விரிவான விவாதம் இந்த மன்றத்திலே தேவை என்று பல முறை எதிர்க்கட்சியிலே உள்ள அத்தனை பேரும் கேட்டுக்கொண்டார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்தின் தரப்பிலே கொடுக்கப்பட்ட அறிக்கை இந்த மன்றத்திலே ஏன் விவாதத்திற்கு வைக்கப்படவில்லை என்பதும் நாட்டு மக்களுக்கு நிச்சயமாக அரசாங்கத்தால் கூறப்பட்டாகவேண்டும்.

அரசியல் சட்ட திருத்தத்தைப்பற்றிய ராஜமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையிலே எப்படி அரசியல் சட்டத்தைத் திருத்தி, மாற்றியமைக்க வேண்டுமென்பது பற்றியெல்லாம் அரசாங்கத்திற்கு என்ன தெளிவான, திடமான கருத்து இருக்கிறது என்பதைக் கூறுவதற்கு அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. ஆனால், அதற்கு நேர்மாறாக ஒவ்வொரு தடவை யும் இந்தக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறாமல், அதைத் காலங்கடந்து கொண்டு போகிறார்கள் என்றால், இந்த அரசாங்கத்திற்கு இதிலே திடம் இல்லை, தெளிவு இல்லை என்றுதான் நான் குற்றம் சொல்ல விரும்பு கிறேன். மாநில சுயாட்சி என்று சொல்வது தனி ராஜ்யமா அல்லது அதிக அதிகாரமா என்பதைப் பற்றியெல்லாம் இந்த அவை கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இன்றைக்கிருக்கிற அரசியல் சட்டத்தின்படி மாநில சுயாட்சி பற்றி நாம் மட்டும் பேசித் தீர்த்துக் கொண்டால் போதாது. மத்திய அரசாங்கப் பிரதிநிதிகளும் எல்லா மாநில முதலமைச்சர்களும் சேர்ந்து இந்த அரசிய லமைப்புச் சட்டத்தை எப்படி திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டு





மென்று ஆராய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அதல்லாமல், இந்த மாநில சுயாட்சி என்ற பெயரிலே பல இடங்களில் கோஷங்களை ஏற்படுத்துவது நமக்கு நன்றாகத் தெரியும். பிரிவினை என்ற வாதம் இருக்கிறது என்று, பல அமைச்சர்கள் பேசியதைப் பற்றி மத்திய அர சாங்கம் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதையும் இந்த அவை யினர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் சட்டத் திருத்தம் நிச்சயமாகத் தேவையா என்று கேட்டால், நிச்சயமாக அதை எப்படி திருத்த வேண்டுமென்று ஆராய வேண்டும். அதல்லாமல், ஒருதலைப்பட்சமாக, நாம் நிச்சயமாக இப்படித்தான் இருக்க வேண்டும், சமஷ்டி சர்க்காரிலே செய்ய உரிமை வேண்டுமென்று, பார் வார்ட் பிளாக் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். எல்லோரும் சுய நிர்ணய உரிமை என்று சொன்னால், பிரிந்துபோகிற நிலைமையும் உட் கொள்ளும் என்பதை உணரவேண்டும்.

இந்தியா ஒரே தேசமாக இருக்கிறது. அதைத் துண்டாட அனுமதிக்கக் கூடாது. மாநில சுயாட்சி என்ற போர்வையிலே இந்த மாநிலப் பிரி வினையைத் தூண்டக் கூடாது. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக் கிறோம் எங்கள் கட்சியின் சார்பிலே என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். பிரிவினை என்ற வாதத்தை நிச்சயமாக நாம் ஆதரிக்கக் கூடாது. பிரிவினைக்கு நாம் எல்லோரும் எதிராக இருக்கவேண்டும். பெற்ற சுதந் திரத்தைப் பேணிக் காக்கவேண்டும் மென்ற பொறுப்பும் கடமையும் நமது அரசியல் கட்சிகள் அத்தனைக்கும் உண்டு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்திய அரசியல் நாணயம், அரசியல் ஒழுக்கம் என்ற கருத்தைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள். அரசியல் ஒழுக்கத்தைப் பற்றியும், அரசியல் நாணயத்தைப் பற்றியும் எங்களுக்கு எல்லாம் புத்தி மதியும் சொன்னார்கள், நல்ல உபதேசத்தையும் சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு ஊரிலே ஒரு பெண் இருந்தாளாம். அவள் 7 பேரை திருமணம் செய்து கொண்டாளாம். ஒவ்வொரு திருமணத்தையும் முடித்தபிறகு கடைசி யாக அவளை அணுகிக் கேட்ட பொழுது கூறினாளாம். 7 பேரோடு வாழ்க்கை நடத்தினேன். ஆனால், யாரும் என்னை மோசமாகக் கூற முடியவில்லை என்று சொல்லி பெருமிதப்பட்டுக் கொண்டாளாம். அதேமாதிரி திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பல கட்சிகளிலிருந்து மாறி இப்பொழுது சுதந்திரமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர் கள் எங்களுக்கு இந்த மாதிரி ஞானோபதேசத்தை தருகின்றபொழுது நான் வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I think I should give a personal explanation.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியை நான் குறைகூற நினைக்கிறேன் என்று கருதவேண்டாம். கேரளத்திலே என்ன நடக்கிறது என்பதைச் சிந்தியுங்கள். கேரளத்திலே ஆளுங்காங்கிரஸோடு நீங்கள் சேர்ந்து கூட்டு மந்திரிசபை அமைக்கவில்லையா? உத்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலே ஆளுங்காங்கிரஸோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறீர்களே, இதையெல்லாம் மறந்துவிட்டு தமிழ்நாட்டிலே பாண்டிச்சேரியிலே புதியதாகக் கூட்டு ஏற்படுகிறது என்பதன் காரணமாக வேதனைப் பட வேண்டாம், வியப்பு அடையத் தேவையில்லை, நாங்கள் மக்கள் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

1971-லே தேர்தல் நடந்தது. எங்கள் கட்சியின் சார்பாக தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாரா என்று எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் 1972-லே நடக்க வேண்டிய தேர்தலை 1971-லே நடத்துவதற்கு ஆன எல்லா வழிவகைகளையும் செய்தார்கள். அதேமாதிரி தேர்தல் காலத்திலே ஆளுங்கட்சியை சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், நீங்கள் தயாராக இருக் கிறீர்களா என்று நான் அறைகூவல் விடுக்க ஆசைப்படுகிறேன். நீங்கள் நினைக்கிறீர்கள், எங்களிடம் 174 ஸ்தானங்கள் இருக்கின்றன, எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்று கூறிக்கொண்டேயிருக்கிறீர்கள். நீங்கள் 1971-லே எடுத்த முடிவை 1974-லே எடுப்பதற்குத் தயார்தானா என்று கேட்க விரும்புகிறேன். அப்படியிருந்தால் நாங்கள் மக்களைச் சந்திப்பதற்கும் ஆளுங் கட்சியைச் சந்திப்பதற்கும் தயாராக இருக்கிறோம் என்று சவால்விடக்கூடிய முறையிலே தங்கள் மூலமாக இங்கே இருக்கின்ற அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் உரையைப் பார்த்து. . .

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> நாங்கள், எங்களோடு மோதத் தயார்தானா என்று கேட்கவில்லை. நாங்கள் அப்படிக் கேட்காத நேரத்திலே நீங்கள் சவாலை விடுவதற்குக் காரணம் என்ன?

<u>திரு ஆர். பொன்னப்ப நாடார் :</u> நீங்கள் மேலவையிலே 1972-லே பேசிய பேச்சின் அடிப்படையிலே அப்படி கூறியிருக்கிறேன். எங்களுடைய கட்சித் தலைவர் திரு. ராஜாராம் மேலவையிலே சுட்டிக் காட்டியபொழுது பதில் கூறுகின்ற முறையிலே நீங்கள் கூறியதை வைத்துத் தான் நான் கூறியிருக்கிறேன். நாங்கள் தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாராக இருக் கிறோம் என்று....

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> 1971 தேர்தலிலே ஜெயித்து வந் திருக்கிறோம். 1972-ல் தேர்தலில் சந்திப்போம் என்று எப்படிச் சொல்லி யிருக்கமுடியும் ?

<u>திரு ஆர். பொன்னப்ப நாடார் :</u> 1972-லே நீங்களே பதில் மேலவை யிலே கூறியிருக்கிறீர்கள். வேண்டுமானால் அந்தப் புஸ்தகத்தைத் தருவ தற்குத் தயாராக இருக்கிறேன். அதேமாதிரியான நிலைமைதான் இன்று



உருவாகியிருக்கிறது. பல இடங்களிலேயும் ஆளுங்கட்சிக்கு சலசலப்பு இருந்துக்கொண்டிருக்கிறது, ஆளுங்கட்சியின் செல்வாக்கு சரிந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை சட்ட மன்றத்திலே அதிக பலம் இருக்கிறது என்று வாதாடினாலும் மக்கள் மன்றத்திலே செல்வாக்கை நீங்கள் இழந்திருக்கிறீர்கள் என்பது இன்றைக்கு எல்லா எதிர்க்கட்சிகளும் வலியுறுத்திக் கூறிவரக்கூடிய விஷயமாக இருக்கிறது.

1974-ஆம் ஆண்டு மிகவும் வேதனைப்படக்கூடிய ஆண்டாக இருக்கிறது. இந்திய அரசைப்பற்றிச் சிந்திக்கக்கூடிய நேரத்திலே எல்லாம் தட்டுப்பாடாக இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அத்தியாவசிய பண்டங்கள் எல்லாம் ஓடி ஒளியக்கூடிய நிலைமை இருக்கிறது. உணவுப் பற்றுக்குறை, மின்சார வெட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, அத்தியாவசியப் பண்டங்கள் விலை விஷம்போல் ஏறிக் கொண்டே இருக்கிறது. வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையிலே நாம் கணித்துப் பார்த்தால் இந்த ஆண்டு மிகவும் மோசமாக இருக்கிறது. பெட்ரோல் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை, எரிபொருட்கள் எல்லாம் தட்டுப்பாடு, சிமிண்ட் தட்டுப்பாடு இந்த நிலைமையில் நாட்டிலே நடக்கின்ற முற்போக்குத் திட்டங்களையும் நடத்துவதற்குப் போதிய வசதியில்லை என்ற கருத்தை வலியுறித்திக் கூற விரும்புகிறேன்.

இதைக் கூறினால் மாநில அரசாங்கங்கள் அத்தனையும் இப்பொழுது மத்தியிலே அதிகாரம் குவியலாக இருப்பதால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஒப்பாரி என்று நான் சொல்லவில்லை, இந்த மன்றத்திலே பலரும் அப்படிக் கூறினார்கள், ஆனால் நான் அந்தப் பதத்தை உபயோகிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இம்மாதிரியான கஷ்டங்களைத் தவிர்க்க மாநில அரசாங்கங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற அதிகாரங்கள் அத்தனையையும் கையிலே வைத்துக் கொண்டு நீங்கள் இந்த அதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால், ஆள்வதற்கு லாயக்கில்லாதவர்களாக இருக்கிறார்கள், கையாலாகாத தன்மையைத்தான் இது காட்டுகிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

ஹோல் சேல் பிரைஸ் இன்டெக்ஸைப் பொறுத்த வரையில் என்ன ஏற்பட்டிருக்கிறது. பலரும் சொல்லக்கூடும், விலைகள் குறைந்துகொண்டிருக்கிறது, பயறு விலை, எண்ணெய் விலை, அரிசியின் விலை குறைந்து கொண்டிருக்கிறது என்று பலரும் சொல்லக்கூடும். ஆனால், உண்மை என்ன என்பதை நாம் எல்லோரும் உணர்வோம். இந்த ஹோல் சேல் பிரைஸ் இன்டெக்ஸைப்பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழிந்த வருஷம் 38 புள்ளி என்று இருந்த வாழ்க்கைப்புள்ளி உயர்ந்திருக்கிறது என்று மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட அந்த உரையிலிருந்து நமக்குப் புலப்படுகிறது.

'Based on March 1962 as 100, in December 1973 it was 265.9. The average for 1973 worked out at 239.3. When compared to 1972 when it was 200.7, the present rise is phenomenal.'. இப்படிப் பார்க்கும் பொழுது மொத்தமாக இந்த விலைகளெல்லாம் கிடுகிடு என்று உயர்ந்துகொண்டேபோகின்ற தன்மையைப் பார்க்கிறோம்.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியை நான் குறைகூற நினைக்கிறேன் என்று கருதவேண்டாம். கேரளத்திலே என்ன நடக்கிறது என்பதைச் சிந்தியுங்கள். கேரளத்திலே ஆளுங்காங்கிரஸோடு நீங்கள் சேர்ந்து கூட்டு மந்திரிசபை அமைக்கவில்லையா? உத்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலே ஆளுங்காங்கிரஸோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறீர்களே, இதையெல்லாம் மறந்துவிட்டு தமிழ்நாட்டிலே பாண்டிச்சேரியிலே புதியதாகக் கூட்டு ஏற்படுகிறது என்பதன் காரணமாக வேதனைப் பட வேண்டாம், வியப்பு அடையத் தேவையில்லை, நாங்கள் மக்கள் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971-லே தேர்தல் நடந்தது. எங்கள் கட்சியின் சார்பாக தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாரா என்று எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் 1972-லே நடக்க வேண்டிய தேர்தலை 1971-லே நடத்துவதற்கு ஆன எல்லா வழிவகைகளையும் செய்தார்கள். அதேமாதிரி தேர்தல் காலத்திலே ஆளுங்கட்சியை சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று நான் அறைகூவல் விடுக்க ஆசைப்படுகிறேன். நீங்கள் நினைக்கிறீர்கள், எங்களிடம் 174 ஸ்தானங்கள் இருக்கின்றன, எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்று கூறிக்கொண்டேயிருக்கிறீர்கள். நீங்கள் 1971-லே எடுத்த முடிவை 1974-லே எடுப்பதற்குத் தயார்தானா என்று கேட்க விரும்புகிறேன். அப்படியிருந்தால் நாங்கள் மக்களைச் சந்திப்பதற்கும் ஆளுங் கட்சியைச் சந்திப்பதற்கும் தயாராக இருக்கிறோம் என்று சவால்விடக்கூடிய முறையிலே தங்கள் மூலமாக இங்கே இருக்கின்ற அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் உரையைப் பார்த்து. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள், எங்களோடு மோதத் தயார்தானா என்று கேட்கவில்லை. நாங்கள் அப்படிக் கேட்காத நேரத்திலே நீங்கள் சவாலை விடுவதற்குக் காரணம் என்ன?

திரு ஆர். பொன்னப்ப நாடார் : நீங்கள் மேலவையிலே 1972-லே பேசிய பேச்சின் அடிப்படையிலே அப்படி கூறியிருக்கிறேன். எங்களுடைய கட்சித் தலைவர் திரு. ராஜாராம் மேலவையிலே சுட்டிக் காட்டியபொழுது பதில் கூறுகின்ற முறையிலே நீங்கள் கூறியதை வைத்துத் தான் நான் கூறியிருக்கிறேன். நாங்கள் தேர்தலைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971 தேர்தலிலே ஜெயித்து வந்திருக்கிறோம். 1972-ல் தேர்தலில் சந்திப்போம் என்று எப்படிச் சொல்லியிருக்கமுடியும் ?

திரு ஆர். பொன்னப்ப நாடார் : 1972-லே நீங்களே பதில் மேலவையிலே கூறியிருக்கிறீர்கள். வேண்டுமானால் அந்தப் புஸ்தகத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அதேமாதிரியான நிலைமைதான் இன்று



உருவாகியிருக்கிறது. பல இடங்களிலேயும் ஆளுங்கட்சிக்கு சலசலப்பு இருந்துக்கொண்டிருக்கிறது, ஆளுங்கட்சியின் செல்வாக்கு சரிந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை சட்ட மன்றத்திலே அதிக பலம் இருக்கிறது என்று வாதாடினாலும் மக்கள் மன்றத்திலே செல்வாக்கை நீங்கள் இழந்திருக்கிறீர்கள் என்பது இன்றைக்கு எல்லா எதிர்க்கட்சிகளும் வலியுறுத்திக் கூறிவரக்கூடிய விஷயமாக இருக்கிறது.

1974-ஆம் ஆண்டு மிகவும் வேதனைப்படக்கூடிய ஆண்டாக இருக்கிறது. இந்திய அரசைப்பற்றிச் சிந்திக்கக்கூடிய நேரத்திலே எல்லாம் தட்டுப்பாடாக இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அத்தியாவசிய பண்டங்கள் எல்லாம் ஓடி ஒளியக்கூடிய நிலைமை இருக்கிறது. உணவுப் பற்றுக்குறை, மின்சார வெட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, அத்தியாவசியப் பண்டங்கள் விலை விஷம்போல் ஏறிக் கொண்டே இருக்கிறது. வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையிலே நாம் கணித்துப் பார்த்தால் இந்த ஆண்டு மிகவும் மோசமாக இருக்கிறது. பெட்ரோல் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை, எரிபொருட்கள் எல்லாம் தட்டுப்பாடு, சிமிண்ட் தட்டுப்பாடு இந்த நிலைமையில் நாட்டிலே நடக்கின்ற முற்போக்குத் திட்டங்களையும் நடத்துவதற்குப் போதிய வசதியில்லை என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இதைக் கூறினால் மாநில அரசாங்கங்கள் அத்தனையும் இப்பொழுது மத்தியிலே அதிகாரம் குவியலாக இருப்பதால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஒப்பாரி என்று நான் சொல்லவில்லை, இந்த மன்றத்திலே பலரும் அப்படிக் கூறினார்கள், ஆனால் நான் அந்தப் பதத்தை உபயோகிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இம்மாதிரியான கஷ்டங்களைத் தவிர்க்க மாநில அரசாங்கங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற அதிகாரங்கள் அத்தனையையும் கையிலே வைத்துக் கொண்டு நீங்கள் இந்த அதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால், ஆள்வதற்கு லாயக்கில்லாதவர்களாக இருக்கிறார்கள், கையாலாகாத தன்மையைத்தான் இது காட்டுகிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

ஹோல் சேல் பிரைஸ் இன்டெக்ஸைப் பொறுத்த வரையில் என்ன ஏற்பட்டிருக்கிறது. பலரும் சொல்லக்கூடும், விலைகள் குறைந்துகொண்டிருக்கிறது, பயறு விலை, எண்ணெய் விலை, அரிசியின் விலை குறைந்து கொண்டிருக்கிறது என்று பலரும் சொல்லக்கூடும். ஆனால், உண்மை என்ன என்பதை நாம் எல்லோரும் உணர்வோம். இந்த ஹோல் சேல் பிரைஸ் இன்டெக்ஸைப்பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழிந்த வருஷம் 38 புள்ளி என்று இருந்த வாழ்க்கைப்புள்ளி உயர்ந்திருக்கிறது என்று மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட அந்த உரையிலிருந்து நமக்குப் புலப்படுகிறது.

'Based on March 1962 as 100, in December 1973 it was 265.9. The average for 1973 worked out at 239.3. When compared to 1972 when it was 200.7, the present rise is phenomenal.'. இப்படிப் பார்க்கும் பொழுது மொத்தமாக இந்த விலைகளெல்லாம் கிடுகிடு என்று உயர்ந்துகொண்டேபோகின்ற தன்மையைப் பார்க்கிறோம்.

மாநில அரசாங்கங்களெல்லாம் என்ன செய்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் மின்சாரத்திற்கு நமக்கு அதிகமாகப் பணம் தேவை என்று திட்டமிடப்படுகிறது. மின்சார உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்துவார்களா, உயர்த்தமாட்டார்களா என்று விவசாயிகள் பார்த்துக்கொண்டிருக்கும் நேரமாக இருக்கிறது.

இந்த நேரத்திலே நாம் மின்சாரத்தை வெளி மாநிலங்களிலிருந்து பெறுகிறோம். நாமும் உற்பத்தி செய்கிறோம். மிகவும் குறைவான விலையில் தொழிலதிபர்களுக்கு, தொழில்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை மறுக்க முடியாது. உற்பத்திச் செலவைவிட குறைந்த அளவில் மின்சாரத்தை ஒருபுறத்திலே கொடுத்துக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் நமக்கு உணவு தரும் விவசாயிகளுக்கு இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டுமா என்பதை நாமெல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அதிகமாக நமக்குப் பணம் தேவை என்று இந்த அறிக்கையிலே பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. எப்படி இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். "ஃபார்ம் செக்டாருக்கு" மத்திய அரசு சொல்வது மாதிரி கூடுதலாக வரி போடப் போகிறார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். தாங்கும் தலையிலே வரியைச் சுமத்துவதுதான் பொருளாதார அடிப்படையிலே சிறப்பான அம்சமாகும். ஆனால், இங்கே என்னென்ன புதிய வரிகள் வரப்போகிறதோ தெரியவில்லை, ஒருவேளை பட்ஜெட்டிலே கூறுவார்கள் என்று நினைக்கிறேன். கவர்னர் அவர்கள் படித்த உரையிலே வரி வரப் போகிறது என்று சாதாரணமாகச் சொல்லமாட்டார்கள். இந்த ஐந்தாண்டு திட்டத்திற்குச் செலவாகும் பணத்தை நாமும் கொஞ்சம் ஈட்டிக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மதுவிலக்குக் கொள்கை ஒரு இடைஞ்சலாக இருக்கிறது என்று கூறக்கூடும். மது ஏலத்தால் சுமார் 36 கோடியே சில்லறை ரூபாய் நமக்கு அரசாங்க வருவாய் வருகிறது என்று அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே கணக்குத் தந்தார்கள். இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மத்திய சர்க்கார் நிதி உதவி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்கம் ஜனங்களை வஞ்சித்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். பரிபூர்ண மதுவிலக்கு வரும் என்று சொல்லிவிட்டு கடைசியிலே ஒரு திங்களிலே காபினெட் கூட்டத்தைக் கூட்டி, ஏதோ மதுவிலக்குக் கொள்கை பரிபூர்ணமாக வராது, வெளிச் சாராயம் நிச்சயமாக வியாபாரத்திலே இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் மதுவிலக்கு வர வேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன், எங்கள் கட்சி அதை வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு என்பது ஏழை எளிய மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு வரப்பிரசாதம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





இப்பொழுது இரண்டு வருஷங்களாக இந்த மதுவிலக்கைத் தளர்த்தியதால் ஏழை எளிய மக்களுடைய வாழ்வு எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து பார்க்க வேண்டும். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய சிலேட்டு, புத்தகம் இல்லாமல் இருக்கின்ற நிலைமையை குடிசைவாழ்மக்களிடையே உருவாக்கியிருக்கிறது என்பதை சபாநாயகரவர்கள் மூலம் இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால்தான் இந்த மதுவிலக்குக் கொள்கையிலே இந்த அரசாங்கம் சரியான முறையிலே நடந்துகொள்ளவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன், மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து நிதி கிடைக்கவில்லை என்ற காரணத்தைச் சாக்காக வைக்க வேண்டாமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு கருத்தைக் கூற விரும்புகிறேன். விவசாயத் துறையிலே நாம் இன்றைக்கு முன்னேறியிருக்கிறோம். மின்சாரம் தட்டுப்பாடாக இருக்கிறது, 15 சதவிகித வெட்டு இருக்கிறது, 65 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன, 11 பைசாவிற்கு அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம் என்றெல்லாம் நாம் எல்லோரும் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் மின்சார உற்பத்திச் செலவு 23 பைசா என்று ஒரு அமைச்சரவர்கள் கோயம்புத்தூரில் பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த அமைச்சர் அங்கு பேசும் நேரத்தில், மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் பவர் ஆல்கஹால் உற்பத்தி எப்படிச் செய்ய முடியுமென்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பம்பு செட்டுகளை பவர் ஆல்கஹால் வைத்து ஓட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அதை இழிவுபடுத்திப் பேசவில்லை.

இப்படிப்பட்ட முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு போதிய ஊக்கம் அளிக்க வேண்டும். நமது டிரான்ஸ்போர்ட் இலாக்காவின் காரியதரிசி அவர்கள் இந்தப் பெட்ரோல் இல்லாமல் இந்த மோட்டாரை ஓட்ட வேறுவிதமான எஞ்சின்களைத் தயாரிப்பதற்காகப் பரிசீலிக்கப் போவதாகப் பார்த்தேன். நான் இதைக் குறைத்துச் சொல்லவில்லை. இதையெல்லாம் சற்று நிதானமாகச் சிந்தித்து, என்ன செய்கிறோம் என்று சிந்தித்து ஈரோடு, சிறப்போடு செய்ய முயலவேண்டும். ஏனென்றால் இது ஒரு நாளோடு முடிந்து போவதல்ல.

உலகத்திலே ஏற்பட்டுள்ள இந்த எண்ணெய் நெருக்கடியால் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இஸ்ரேல்-அரபு யுத்தத்தின் காரணமாக விபரீத விளைவு ஏற்பட்டிருக்கிறது. அதோடு அதிகமாக நமக்கு நேரடித் தொடர்பு இல்லையென்றாலும் நமது தொழில்கள் அத்தனையையும் பாதிக்கும் தன்மை இருக்கிறது. ஆகவே, வருகின்ற ஆண்டுகளிலே என்ன செய்யப்போகிறோம் என்ற கருத்தைத் திட்டவட்டமாகக் கவர்னர் அவர்களின் உரையிலே கூறியிருக்க வேண்டும். அடுத்து வேறொரு முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். நம்முடைய சிமெண்டைப் பொறுத்தவரையில் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். சிமெண்ட் தொழிற்சாலையிலே உற்பத்தி பெருக இந்த கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நாம் உற்பத்தி

செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் கூறினால் எதற்கும் குற்றம் குறை கூறி வந்திருக் கிறோம் என்று நீங்கள் கூறலாம். உண்மை நிலை என்ன என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன்.

நாங்கள் எல்லாம் கேரளாவுக்கு அரிசியைக் கடத்துகிற பேர்வழிகள் என்ற முத்திரையை இட்டிருக்கிறார்கள். நீங்கள் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறீர்கள். 75-க்கு மேலான சோதனைச் சாவடிகளை அந்தப் பகுதியில் வைத்திருக்கிறீர்கள். அரசாங்க போலீஸ் இருக்கிறது, பட்டாளம் இருக் கிறது, கலெக்டர் இருக்கிறார், சிவில் சப்ளைஸ் இலாகா இருக்கிறது. இவ் வளவு பேரும் பராமரித்த பிறகும் கேரளத்திற்கு அரிசி ஓடோடிச் செல்லுகிறது என்றால் அது உங்களுடைய நிர்வாகக் குறைவை, நிர்வாகத் திறமையின்மையைத்தான் காட்டுகிறது. ஒன்றில் நீங்கள் மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நிர்வாகத்தைவிட்டுப் போய் விடுவதே சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.

நாகர்கோயிலில் இருக்கும் என்.ஜி.ஓ. யூனியன் உணவுப் பண்டங்கள் விலை ஏறியிருக்கும் காரணத்தால் அதிக அலவன்ஸ் கொடுக்க வேண்டு மென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதை நாங்கள் ஒருவேளை தூண்டிவிட்டோம் என்று சொல்லத் தேவையில்லை. நாங்கள் எல்லாம் சென்ற 16-ம் தேதி சென்னையில்தான் இருந்தோம். நாட்டில் நடக்கிற நிலைமையை, உண்மை நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். எங்கள் ஜில்லாவை சர்ப்ளஸ் டிஸ்ட்ரிக்ட் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அங்கிருக்கும் மக்கள் பசியால், பட்டினியால் வாடி வதங்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலை நீடித்தால் நிச்சயமாக புரட்சிக் கனல் கக்கும் என்பதை இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்.ஜி.ஓ. யூனியனில் தீர்மானம் அண்மையில் போட்டிருக்கிறார்கள். வாழ்க்கைப் புள்ளி 8 புள்ளி அதிகரித்திருக்கிறது. அந்த அடிப்படையில் டி.ஏ. இன்க்ரீஸ் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அதை நம்முடைய அரசாங்கத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத் தின் அடிப்படையில் ஆகஸ்டு 1, 1973 நவம்பர் 1, 1973, ஜனவரி 1, 1974 என்ற மூன்று நிலைகளில் வாழ்க்கைப் புள்ளி அதிகரித்ததன் காரணமாக மூன்று டி.ஏ. இன்க்ரீஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இதற்கு மத்திய அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும், மாநில அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும். இதை நிச்சயமாக அவர்களைத் தூண்டி விடவேண்டுமென்றோ கிளறி விடவேண்டுமென்றோ கூறவில்லை. இப்போது விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. கவர்னர் பெருமான் உரையில் இதுபற்றிக் கூறப்படுமோ என்று பார்த்தேன். இல்லை. ஒருவேளை வருகிற பட்ஜட்டில் இதுசம்பந்தமாக வழிவகை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நிதி ஆணைக் குழுவில் நியாயம் வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இந்த மாதிரிக் குற்றச்சாட்டுகளை எல்லாம் நியாய பூர்வமாக அணுக வேண்டும். மத்திய அரசாங்கம் இன்னும் அதிகமாகச்



சலுகை செய்ய வேண்டும் என்று எல்லா மாநிலங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் பத்திரிகையைப் பார்த்தால் மராட்டிய மாநில முதலமைச்சர் திரு வி. பி. நாயக் இன்னும் அதிகமாகப் பணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தமிழக முதலமைச்சர் அவர்களும் முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இன்னும் அதிகமாகப் பணம் வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக வரவேற் போம். ஆனால் செலவழிக்கப்படுகிற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப் படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். கூவம் திட்டத்திற்கு எவ்வளவு கோடி பணம் செலவழித்தோம். நாற்றம் மாறிவிட்டதா? கூவம் ஊழலுக்கு டிஸ்ட்ரிட் என்குயரி நடத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். அது நடந்து கொண்டிருக்கிறதா? இந்தத் திட்டத்தின் ஊழலைப் பற்றி வெகுவாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

இப்போது ஊழல் சட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிரசிடெண்ட் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அதற்குத் திருத்தமும் கொண்டுவர இருக்கிறீர்கள். இங்கு கொடுக்கப்பட்ட இந்த ஊழல் புகார் அத்தனையை யும் "சுவோ மோட்டோ" ஏற்றுக் கொண்டு விசாரணைக்கு விடத் தயாராக இருக்கிறார்களா என்று அமைச்சர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நீங்களெல்லாம் நிர்தோஷி கள், குற்றமற்றவர்கள், ஒழுக்கசீலர்கள் என்று காட்டிக்கொள்ள வழி வகை இருக்கிறது. சட்டமே பிரசிடெண்ட் அனுமதி பெற்றுவிட்டது. ஏன் நீங்கள் விசாரணை நடத்தக்கூடாது என்று இந்த மன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பலவிதமான கொள்கைகள் கூறப்பட்டிருக்கின்றன. தொழி லாளர் கொள்கை பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். தொழில் கொள்கை என்னவாக இருக்குமென்று கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் தெளிவாக ஒன்றும் சொல்லவில்லை. தொழில் அமைதி பல தொழில்களில் கெட்டுக் கொண்டிருக்கிறது.

உதாரணமாகக் கூற விரும்புகிறேன். சிம்ப்ஸன் பிரச்சினையைப் பற்றி முன்பு பேசிய பல அங்கத்தினர்களும் கூறினார்கள். லேபர் கமிஷனர் முன்னிலையில் அக்ரிமெண்ட் ஏற்பட்ட பிறகும் 425 தொழி லாளர்கள் இன்னும் வேலையில் வைக்கப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். இது நீடித்தால் மறுபடியும் மோசமான நிலைமை ஏற்படும் என்பதை உணர வேண்டும். சைக்கிள் செயின் எப்படிப் பயன்படுத்தப்பட்டது. கொலைகள் எப்படி விழுந்தன என்ற பிரச்சினைகளை எல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறத் தேவையில்லை. தொழி லாளர்களுடைய நியாயமான எல்லா உரிமைகளையும் பாதுகாக்கின்ற தொழிலாளர் அரசு என்று தன்னைப் பறைசாற்றிக் கொள்ளக்கூடிய அரசு நிச்சயமாக எந்தத் தொழிலாளர் பிரச்சினையானாலும் நியாயமான முறையில் அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களைப்பற்றி ஓரிரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

செய்தாலும் சிமெண்ட் கண்ட்ரோல் இருக்கிறது, தட்டுப்பாடு இருக்கிறது, பதுக்கல் இருக்கிறது. இதனுல் நமது அரசாங்கத் திட்டங்கள் மட்டுமல்லா மல், சாதாரண வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள். அண்டை மாநிலமாகிய கேரளாவில் சிமெண்ட் கண்ட்ரோலை நீக்கம் செய்திருக்கிறுர்கள். அதேபோல் நமக்கும் இந்த சிமெண்ட் கண்ட்ரோலை நீக்கம் செய்ய என்ன வழிவகைகளைச் செய்கிறது என்பதை ஆராய வேண்டும்.

நமது நாட்டிலே இன்றைக்குப் பசுமைப் புரட்சியினுல் அடுத்த ஆண்டிலே 1973–74-ஆம் ஆண்டிலே, 74 இலட்சம் டன் உணவு தானியங்கள் நமக்குக் கிடைக்கும் என்ற ஒரு கணிப்பு இந்தக் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே இருக்கிறது. இவ்வளவு அதிகமான கணிப்பி பிலே நமக்குத் தாராளமாகப் பண்டங்கள் இருந்தும், என் விலை ஏறிக் கொண்டேயிருக்கிறது என்பதை உணர வேண்டும். பட்டணத்திலே இரண்டு ரூபாயாக இருந்த படி அரிசி 2½ ரூபாயாக ஆகியிருக்கிறது. எங்கள் பகுதியிலே 4½ ரூபாய் படி அரிசி.

இதிலே இன்னொரு வேடிக்கையான விஷயம் இருக்கிறது. எங்கள் பகுதியிலே உணவைக் கொடுக்க நமது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பொறுப்பேற்றிருக்கிறது. அவர்கள் வாங்கும் அடக்கவிலைக்கு அதிகமாக ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் அதிகமாக விலையைக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. கேட்டால் சொல்வார்கள், லாப நஷ்டமின்றி நாங்கள் இந்த கச்சவடத்தை நடத்துகிறேும் என்று சொல்வார்கள். ஒரு தனியார் வியாபாரி எடுக்காத லாபத்தை இந்தக் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண் டிருக்கிறது. உணவை வாங்கும் விலையை விட ஐந்து ரூபாய் கூடுதலாக விற்ருல் அதைப் புரிந்து கொள்ளலாம். ஆனுல், 40 ரூபாய் இடைவெளி ஏற்பட்டிருக்கிறது என்ருல் நிச்சயமாக அரசாங்கம் தான் பெரிய கறுப்பு வியாபாரத்தை நடத்துகிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். இப்பொழுது வியாபாரிகளை டி.ஐ.ஆர்.-இலும், "மெய்ன்ட்டனென்ஸ் ஆஃப் இண்டர்னல் செக்யூரிட்டி ஆக்ட்"-லும் அடைத்துப் போடுகிறேும். அண்மை யிலே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்று கார்ப்பரேஷனிலே ஓர் அதிகாரி விற்றிருக்கிறுர்.

அதன்மீது கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறுர்கள். அமைச்சர்களும் அதன்மீது நட வடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறுர்கள். ஆனுல் உண்மை நிலையை நாம் எல்லோரும் பார்க்க வேண்டும்.

(திரு கு. காமாட்சி தலைமை)

இப்போது தஞ்சையிலும், வட ஆற்காட்டிலும் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மூலமாக உணவு வாங்குவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. அவர்களை ஏஜண்டாக நியமனம் செய்திருக்கிறுர்கள். இவர்கள் வாங்குகின்ற விலையிலிருந்து எவ்வளவு லாபம் இவர்களுக்குக் கிடைக்க வேண்டும் அல்லது வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் கொடுக்க வேண்டு மென்பதைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல வேண்டும். இப்போது மாவட்டங்களுக்கிடையே கொண்டு செல்லலாம் என்ற சட்டத்தைக் கொண்டு



வருவது மிகவும் பொருத்தமாக இருக்கும். நான் அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். குஜராத்தில் நடந்தது மாதிரி தமிழ்நாட்டில் சில பகுதிகளில் நடக்க நீங்கள் உறுதுணையாக இருக்கக்கூடாது. தூண்டக் கூடாது என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் பேசும்போது தனி நபர் கொள்ளை லாபத்திற்கு விற்ருல் டி.ஐ.ஆர். மூலம் ஆர்டர் போடுகிறேும் என்று சொல்லுகிறுர்கள். அரசாங்கமே கொள்ளை லாபத்திற்கு விற்ருல் மினிஸ்டர் மீது அந்த மாதிரி டி.ஐ.ஆர். மூலம் ஆர்டர் போட வழி இருக்குமா?

திரு ஆர். பொன்னப்ப நாடார் : கார்ப்பரேஷன் செய்கிற அந்த வியாபாரத்தில் இந்தத் தவறு நடக்கிறது, அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் சுட்டிக்காட்டினேனே தவிர, அமைச்சர்கள் மீது டி.ஐ.ஆர். போடவேண்டுமென்ற முறையில் சொல்லவில்லை. எப்.சி.ஐ. பற்றி 18 கோடி ரூபாய் ஊழலைப் பற்றிப் பத்திரிகையில் எல்லாம் பார்த்தோம். (ஆர வாரம்) அதை நான் இங்கு கூற விரும்பவில்லை. அதே மாதிரி நம்முடைய ராஜ்யத்திலும் இங்கிருக்கும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடந்து கொள்ளக்கூடாது என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். இவர் களும் ஒழுங்காக இல்லை. சுத்தமாக இல்லை என்ற குற்றச்சாட்டை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவில் 18 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டினுர்கள். அந்தப் பொறுப்பை வைத்துக் கொண்டிருக்கிற மத்திய சர்க்கார் இந்திரா காங்கிரசோடு புதுச்சேரியில் இவர்கள் எதற்காகக் கூட்டுச் சேர்ந்திருக்கிறுர் கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : அதெல்லாம் எங்களுக்கும் நன்ருகத் தெரியும். நீங்கள் எவ்வளவு நெருங்கினீர்கள். எவ்வளவு வலை போட்டீர்கள் என்பதெல்லாம் பொதுமக்களுக்கு நன்ருகத் தெரியும். நீங்கள் எல்லாம் வேதாந்திகள், ஒன்றும் தெரியாதவர்கள், ஞானிகள், அரசியல் வீரர்கள் என்று எந்த வேடத்தையும் போட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாகர்கோவிலில் இருக்கும் நகராட்சியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் இருக்கும் முனிசிபல் நகரம். தலைவ ராக இருப்பவர் திரு கிருஸ்தோபர். அவர்கள் ஒரு தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறுர்கள். அரிசி விலை 4½ ரூபாயாக இருக்கிறது. ஆகையால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று போட்டிருக்கிறுர்கள். ரேஷன் மூலமாக அங்கு அரிசியை விநியோகம்

நம் டிரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த அளவில், இன்று பல கார்ப்பரேஷன்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக, இந்தக் கார்ப்பரேஷன்களுக்குத் தனித்தனி சட்ட திட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த ராஜ்யத்தில் முன்பு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இருந்தது. அதற்குப் பதிலாக பல கார்ப்பரேஷன்கள் ஏற்பட, அதிகப்படியான நிர்வாகத் திறமைக்கு ஏற்ற முறையில் அமைய வேண்டும், மக்கள் அதிக வசதி பெற வேண்டும் என்ற காரணத்திற்காகப் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் நடக்கிற நிலையை நாம் பார்க்க வேண்டும்.

இன்று பல்லவன் கார்ப்பரேஷனில் உள்ள தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கலக்ஷன் போனஸ் என்ற அடிப்படையில் கொடுக்கிறார்கள். அதனால் பெருத்த லாபம் பல்லவன் டிரான்ஸ்போர்ட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் அறிக்கை பார்த்தேன். அது ஒருபுறமிருகக, இன்று அதில் பிரயாணம் செய்கிறவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் பஸ்களில் நெருக்கடி காரணமாகப் பிரயாணம் செய்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. வேதனையாக இருக்கிறது என்ற கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் பஸ்கள் சரியான முறையில் ஓடுவதில்லை. ரேடியல் ஸிஸ்டம் என்று சொல்லி புது அமைப்புகள் போடப்போவதாக அமைச்சர் அவர்கள் பல தடவை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப் பரீட்சார்த்தமாக அவர்கள் துவக்கியிருக்கிறார்கள். ஆனால், முழுமை பெறவில்லை. அது பாதியிலே நிற்கிறது என்ற குற்றச்சாட்டு பல இடங்களில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. நெரிசல் நேரங்களில் பலர் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. இப்போது பஸ்களில் ஓரளவிற்கு இடம் கிடைக்கிறது என்று சொன்னாலும் கூட சௌகரியமாகச் செல்வதில் பல கஷ்டங்கள் உள்ளன. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையில் நாங்கள் பல கார்ப்பரேஷன்களை வைத்துவிட்டோம் என்று பெருமைப்படுவதில் எந்தவிதமான நியாயமும் இல்லை.

குறிப்பாக இன்னொரு கருத்தையும் கூறியிருக்கிறார்கள். ஒர்க்கேர்ஸ் பார்டிஸிபேஷன் என்று சொல்வது முதல் தடவையாக தமிழகத்தில் தான் நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒர்க்கேர்ஸ் பார்டிஸிபேஷன் என்று சொல்வது ஒரு போலியாக இருந்துகொண்டிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். உண்மையில் நிர்வாகத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு என்ன பங்கு இருக்கிறது என்று பார்ப்பதற்கு நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஷேர்ஸ் கொடுத்துவிட்டோம், ஆகவே ஒர்க்கேர்ஸ் பார்டிஸிபேஷன் என்று கூறிப் பெருமைப்பட்டுக்கொள்வதில் எந்தவிதமான கருத்தும் இல்லை. டைரக்டர் போர்டில் தொழிலாளர்களுக்கு எவ்வளவு பிரதிநிதித்துவம் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது தொழிலாளர் சர்க்கார், நாங்கள் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்கிறோம் என்று சொல்கிற, முற்போக்குக் காரியங்களுக்கு முன்னோடியாக இருக்கிற இந்த அரசாங்கம் ஏன் நிர்வாகப் பொறுப்பில், மானேஜ்மெண்டில் தொழிலாளர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்க



விரும்புகிறேன். அதல்லாமல் ஷேர்ஸ் கொடுத்துவிட்டோம், போனஸ், அதிக ஊதியம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : நிர்வாக போர்டில் இப்போது ஒர்க்கேர்ஸ் பார்டிஸிபேஷன் திட்டத்தில் இயக்குநர் பதவி இரண்டு தொழிலாளர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இரண்டு பேர்களும் யார் என்பது தொழிலாளர்களும் நன்கு புரிந்து கொள்வார்கள். அதில் இருக்கிற சில காரியங்களை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நமது டிரான்ஸ்போர்ட் இலாகாவில் ஒரு வேடிக்கையான, விந்தையான காரியம் நடக்கிறது. அது மதுரை-திருச்சி ரூட்டில் நடக்கிற ஒரு புதிய முறை. அதை எதற்காகச் செய்திருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. முன்பு இந்த மதுரை-திருச்சி ரூட்டில் 12 பஸ்களை ஒரு தனியார் நடத்தி வந்தார். வேண்டுமானால் அவர் பெயரையும் சொல்லி விடுகிறேன். த. பா. ரெட்டியார் அவர்கள். சொட்டாம்பட்டி வரையில் 4 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது புதிதாக நம் அரசாங்கம், தேசியமயமாக்கிய பெருமைக்குரிய அரசாங்கம் 48 டிரிப்கள் நடத்திக் கொண்டிருக்கிறது. யார் பேரில் உள்ள கோபத்தால் செய்திருக்கிறார்களோ, அந்தப் பிரச்சினையில் எனக்குக் கொஞ்சம் கூட அக்கறை இல்லை. கடந்த இருபது ஆண்டுகளாக அந்த மாதிரி ஓடிக்கொண்டிருந்தது போக இப்போது 48 டிரிப்ஸ் போட்டு இந்த 12 பஸ்கள் ஓடக்கூடிய அந்த நிறுவனத்தை ஒழிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஒழிப்பதில், என்னைப் பொறுத்தவரையில் ஆட்சேபனை சொல்ல இல்லை. ஆனால் நியாயமாக இருக்க வேண்டும். நியாய உணர்ச்சியோடு இருக்க வேண்டும்.

இன்னொரு இடத்திலும் இதுமாதிரியான நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. உங்கள் பஸ்களில் 48 டிரிப்கள் நடத்திக்கொண்டிருக்கிறீர்களே, ஆக்குபன்ஸி ரெஜிஸ்டரை சற்றுப் பார்க்க வேண்டும். இதில் தாராளமாக ஆட்கள் வருகிறார்களா என்பதையெல்லாம் இந்த மன்றத்தில் சொல்வதற்கு நீங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்.

அதேமாதிரி மதுரை-தேவக்கோட்டை ரூட்டில் 16 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன கழிந்த இருபது ஆண்டுகாலமாக அங்கு ஏன் விடவில்லை ? அங்கு விட்டால் என்ன கஷ்டம் இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சில இடங்களில் பஸ்களில் அதிகமாகக் கூட்டம் இருக்கிறது என்று சிறிது நேரத்திற்கு முன்னால் குற்றஞ்சாட்டினார்கள். ஒரு வேளை கூட்டத்தைக் குறைப்பதற்காக அதுபோன்று பஸ்களை அதிகப்படுத்தியிருக்கலாமோ என்று நான் கருதுகிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : அது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஏற்பட்டிருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 48 ட்ரிப்களிலும் முழு கப்பாஸிட்டியோடு ஓட்டுகின்றனவா அல்லது வேக்கன்டாக ஓடிக்கொண்டிருக்கின்றனவா என்று தெரிவிப்பார்களா ?.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : அடுத்தபடியாக, இதேமாதிரி காரியம் சேலத்தில் ஒரு பகுதியில் நடந்துகொண்டிருக்கிறது. அந்த விவரங்களை எல்லாம் நான் இங்கே நீண்ட நேரம் எடுத்துக் கூற வேண்டிய தேவை இல்லை.

இந்த மாதிரி ஒரு சிலரை, ஒரு சில பஸ் முதலாளிகளை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அவைகளை எல்லாம் எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனையில்லை. ஆனால் அவர்களைக் கொல்வதில் ஒரு நியாயம் இருக்க வேண்டும். இஞ்ச் இஞ்சாகக் கொல்லக் கூடாது. சித்திரவதை செய்து கொல்லக் கூடாது, நியாத்தைப் புரிந்துகொண்டு அணுக வேண்டும்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மேலும் ஒரு தகவலை இந்த மன்றத்திற்குக் கொடுப்பது உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். 1967–ல் நாட்டுடமையாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 75 மைலுக்கு மேல் உள்ள வழித்தடங்களை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மன்றத்தில்தான் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் குறிப்பிடுகிற மதுரை-திருச்சி வழித்தடம் 75 மைலுக்கு மேலான வழித்தடம். அப்போதே தேசியவுடமையாக்கப்பட்டிருக்க வேண்டிய அந்த வழித்தடத்தை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடருவதன் மூலம், இன்னும் மற்ற மற்ற வகைகளில் காலந்தாழ்த்த வேண்டும் என்றே —டெம்பரரி பெர்மிட்டில்தான் அவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள், அதுவும் அவர்களுக்கு நிரந்தர வழித்தடம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : விளக்கத்திற்கு மிகவும் நன்றி. மதுரை-புதுக்கோட்டை தேசியமாக்கப்பட்ட ஒரு வழித்தடம். அந்த வழித்தடத்தில் எவ்வளவோ பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது ஒரு பஸ் கூட ஓடவில்லை, என்ன காரணமோ தெரியவில்லை. மதுரை-புதுக்கோட்டை தேசியமாக்கிய வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் ஏன் ஓடவில்லை என்று கேட்கிறேன். பஸ்கள் மூன்று மாத காலமாக ஓடவில்லை. இதற்கு யார் பொறுப்பு. நிச்சயமாக அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு பரிகாரம் கூறித்தான் ஆக வேண்டும்.

அடுத்தபடியாக, இன்னொரு வேடிக்கையான விஷயம் தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது. சிலைகளின் தலைகளைத் தட்டுவது, தலைகளை வெட்டுவது என்ற ஒரு கொள்கை நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக அண்மையில் திருநெல்வேலியில் பாரதியாரின் சிலை உடைக்



கப்பட்டது. அதற்கு யார் பொறுப்பு என்பதைப் பற்றி தீவிரமான புலனாய்வு தேவை. அதில் சம்பந்தப்பட்டவர்களை நிச்சயமாகக் குற்றவாளிக் கூண்டில் அடைத்து அவர்களுக்குப் போதிய தண்டனை வழங்க வேண்டும்.

அண்மையில், உசிலம்பட்டியில், நேற்று முன்தினம் என்று கருதுகிறேன். காந்தியடிகளின் சிலையை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். தலையை உடைத்திருக்கிறார்கள். இது நக்ஸல்பாரி இயக்கமாக இருக்குமோ என்று பத்திரிகைகளில் பல கருத்துக்கள் கூறுகிறார்கள். ஆனால் நான் சொல்வதெல்லாம் இந்த மாதிரி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

சேலத்தில் நடந்தது ; சேலத்தில் நடந்து அதற்குப் போராட்டம் ஏற்பட்டு, அங்கு பொதுக்கூட்டம் ஏற்பட்டு அமளி ஏற்பட்டு, கேஸ் ஏற்பட்டு, எங்கள் காரியதரிசி அவர்களை இன்று நீங்கள் அதிகமாகக் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதில் ஒரு வேளை உங்களுக்குச் சந்தோஷம் இருக்கலாம். பெருமை இருக்கலாம். அதையெல்லாம் நாங்கள் தாங்கிக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். இது நாட்டுக்கு நல்லதா என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேச விடுதலைக்காகப் பாடுபட்ட, தேசப்பிதாவின் சிலையை எல்லாம் இந்தமாதிரி அவமதித்திருக்கிறார்கள், அக்கிரமங்கள் செய்திருக்கிறார்கள், இதையெல்லாம் தமிழக போலீஸும், தமிழக சர்க்காரும் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர் என்பதைக் காணும்போது உண்மையில் வேதனைப் படுகிறேன். நாங்கள் எல்லாம் நல்லாட்சி புரிகிறோம் என்று சொல்கிற இந்த நேரத்தில் இத்தகைய தீயவர்கள் எல்லாம் தீயசெயல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பது நியாயம் அல்ல, தர்மமல்ல. நிச்சயமாக இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் இந்தச் சர்க்கார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதல்லாமல் நாங்கள் துரித மான நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று சொன்னால் அது இதற்கு ஒரு பரிகாரமாகாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-30]

அடுத்தபடியாக, நாகர்கோவிலில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் செல்லத்துரை என்பவரை போலீசார் ஒரு நாள் சாயங்காலம் கைது செய்து போலீஸ் லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் என்னவென்றால் திருட்டுச் சாராயம் வைத்து இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். அது சம்பந்தமாகத்தான் போலீசார் வந்து அவர்களைக் கைது செய்து, அந்த இடத்திலேயே அவர்களைத் தாறுமாறாக அடித்து, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அந்தச் செல்லத்துரை யார் என்றால் உங்களுடைய கட்சிக்காக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக அயராது உழைத்த வாலிபன் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கட்சிக்கண்ணோட்டத்தோடு இந்தக் காரியத்தைப் பற்றிக் கூறவேண்டுமென்று நான் விரும்பவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

என்று சொன்னால், ஒரு குடும்பத்திற்கு சராசரி 5 பேர் என்று வைத்தால் கூட மிகவும் அதிகமாக இருக்கும். இவர்களுக்கெல்லாம் புனர்வாழ்வு அளிக்க பூரா உதவியையும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சாஸ்திரி—சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி அவர்களெல்லாம் வீடு திரும்ப வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இண்டியன் ஆரிஜின் என்று சொல்கிறார்கள். அவர்களெல்லாம் இலங்கையிலே பிறந்தவர்கள். அந்தப் பிரச்சினை குறித்து அதிகமாக இங்கே விவாதிப்பது பொருத்தமல்ல என்று நினைக்கிறேன். அவர்களுக்கெல்லாம் நல்ல வகையில் புனர் வாழ்வு அளிக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஜாப்னாவில் நடந்த சம்பவத்தைக் குறித்தும் மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் எழுதி அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்துப் பேர்கள் அங்கே இறந்து இருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. நாம் அவற்றைப் பத்திரிகையிலும் பார்த்து இருக்கிறோம். இதற்குப் பொறுப்பு யார் என்று நாம் இந்த நேரத்தில் கூறுவதற்கு இல்லை. இருந்தபோதிலும், "ஹ்யூமன் ரைட்ஸ்" அடக்கி ஒடுக்கப்படுகிறது என்று பார்க்கிறபோது, இதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : இந்த நடவடிக்கைகளை யார் மேற்கொள்வது என்று எதிர்கட்சித் தலைவர் சொன்னால் நன்றாக இருக்கும்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்புகொண்டுதான் செய்ய வேண்டும். எ ய திருத்தத்திலேயே இதுபற்றிக் கூறியிருக்கிறோம். நாம் தமிழர்கள் என்ற உணர்வோடு, அவர்கள் உரிமைகள் காப்பாற்றப்படவேண்டுமென்ற அடிப்படையில் நான் கூற விரும்புகிறேன்.

இங்கே பலவிதமான ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, இரண்டு நாளைக்கு முன்பு சட்ட அமைச்சர் ஒரு காரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே சென்னையில் "கார்மிக டிரான்ஸ் போர்ட் அண்டு டிரேடிங் கம்பெனி" என்ற ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டது. அவர்கள் ஷேர் என்ற அடிப்படையில் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வசூல்செய்து இருக்கிறார்கள். அவர்கள் ஸ்டாப் டிரெயினிங், டிபாசிட், ஷேர் என்ற தலைப்பில் பல லட்சக்கணக்கான பணத்தை திரட்டியிருக்கிறார்கள். நிர் வாகப் பொறுப்பில் இருந்த சுப்ரமணியம் ஆந்திராக்காரர் என்று சொல் லப்படுகிறது. மானேஜிங் டைரக்டராக இருந்த ஜி. கே. காந்தி, அவரும் ஆந்திராக்காரர் என்று சொல்லப்படுகிறது. மார்க்கெட்டிங் அண்டு அட்மி னிஸ்ட்ரேடிவ் ஆபீசர் பால் டேனியல் என்பவரும் அதற்குப் பொறுப்பாக இருந்தார்கள். பல வாலிபர்கள் ஆயிரக்கணக்கான



ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது அந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் தலைமறைவாய் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி லட்சக்கணக்கான ரூபாய்களை கொள்ளை யடித்து இருப்பவர்களை கம்பெனி சட்டத்தின்மூலம் என்னவாவது நட வடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விபரீதமான செயல்களைப் புரிந்தவர்கள் மீது அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியில் திருநெல்வேலியில் ஒரு கல்லூரியில் நடந்த விஷயத்தைப்பற்றி எனக்கு முன்பு பேசிய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சங்கரன்கோவிலில் உள்ள என். ஜி. என். கல்லூரியில் பலவிதமான ஊழல்கள் நடந்திருக்கின்றன—14 ஆசிரியர்கள் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், கிராண்டு பணம் கையாடப்பட்டிருக்கிறது என்கிற பலவிதமான குற்றச்சாட்டுகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்மீது அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். லோகல் லைப்ரரி அத்தாரிடி சரியான முறையில் இயங்க வில்லை என்று கூறுகிறார்கள். புத்தகங்களை வாங்குவதில், தேர்ந்தெடுப் பதில் ஒழுக்கக்கேடு நடைபெறுகிறதாகப் புகார்கள் இருக்கின்றன. பட்ட தாரிகள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். என்றாலும், வேண்டியவர் அதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற காரணத் தினால், தலைவருக்கு வேண்டிய ஒருவரை வைத்துக்கொண்டு அவர்கள் சரியாக நடக்கவில்லை என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னரது உரையில் எந்தவிதமான நல்ல கருத்துக்களும் இல்லை, எந்தவிதமான நல்ல காரியமும் சொல்லப்படவில்லை. எல்லாத் துறை களிலும் இந்த அரசாங்கம் மக்கள் நம்பிக்கையை இழந்து வருகிறது. தொழிலாளர்கள் உங்கள் மீது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ.—க்கள் நம்பிக்கை வைக்கவில்லை. பெண்கள் சமுதாயம் நம்பிக்கை வைக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு அத்தனையையும் கூறி, நீங்கள் தமிழகத்திற்குச் செய்கிற பெரிய சாதனையாக இருப்பது நீங்கள் பதவியில் இருந்து விலகி மறு தேர்தலை வைப்பதுதான் எனக்கூறி என் னுடைய வார்த்தையை இத்துடன் முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி</u> : நாகர்கோயிலில் அரசு அரிசி வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடிக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்கிறார்கள். டி.ஐ.ஆர். வரையில் இங்கே பேசப்பட்டிருக் கிறது. கடைசியில் அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டு மென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரமான பட்டியலையே இங்கே நான் படிக்கிறேன்.

[திரு ஆர். பொன்னப்ப நாடார்] [1974 சனவரி 28

இது சம்பந்தமான உண்மை நிலையை இந்த அரசாங்கம் விசாரிக்க
வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முதல் நாள் ஜீவனோடு சென்ற
செல்லத்துரை அடுத்த நாள் லாக்கப்பிலிருந்து பிணமாகக் கொண்டு செல்லப்
பட்டார் என்று சொன்னால், அது ஏன் அப்படி நிகழ்ந்து இருக்கிறது
என்று பார்க்க வேண்டும். அது சம்பந்தமாக ஆர்.டி.ஓ. ஏதோ விசாரணை
நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. அது என்ன ஆயிற்று என்றும்
பார்க்க வேண்டும்.

இப்போது கூறப்படுகிறது, அந்தச் செல்லத்துரை என்பவர் ஏதோ
மது அதிகமாக அருந்தியதன் காரணமாக இறந்துவிட்டார் என்று. அது
உண்மையோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படி உண்மையாக
இருந்தால், அவரை முதல் நாள் லாக்கப்பில் அடைப்பதற்குப் பதிலாக
அங்கேயுள்ள எட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைக்கு அல்லவா எடுத்துச்
சென்றிருக்க வேண்டும். அதற்கு நேர்மாறாக லாக்கப்பில் அடைத்து
இருக்கிறார்கள். அந்த லாக்கப்பில் அடித்ததால்தான் இறந்து இருக்கிறார்
கள் என்று கூறப்படுகிறது. அந்தச் செல்லத்துரையை உடனடியாகப்
புதைக்கவில்லை. பிரேத ஊர்வலம் நடந்தது. எம்.எல்.ஏ. தான்
தலைமை தாங்கி நடத்தினார். போஸ்ட்-மார்டமும் சரியாக ஒழுங்காக நடை
பெறவில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. போலீசார் எப்படி அத்து
மீறி நடந்து இருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக இது இருக்கிறது.

இதுமாதிரி நிகழ்ச்சிகள் பல தடவைகள் நடந்து இருக்கின்றன.
இப்படிப் பல இடங்களில் நடந்து இருந்தாலும், இந்த இடத்தில் அட்டூழிய
மாக, அக்கிரமமாக நடந்து கொண்டு இருக்கிறது. இப்படி போலீஸ்
அதிகாரிகள் அங்கே செல்பவர்களை அடித்துக் கொண்டிருந்தால் அதை
யாரிடத்தில் சொல்வது என்று தெரியவில்லை. அதுவும் என்னுடைய
பெயரைச் சொல்லி, நாங்கள் அடிப்போம் என்று சொல்லக்கூடிய அளவில்
தக்கலையில் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர் ஏற்கனவே
ஒரு கட்சிக்காரர் அடிக்கப்பட்டார் என்று சொன்ன காரணத்தால், வழக்கு
தொடுக்கப்பட்டது. என்னுடைய பெயரைச் சொல்லி அவர் பலரையும்
அடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் மிகவும் வேதனை
யோடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு
வேளை ஜாதி உணர்வின் காரணமாக அப்படிச் செய்கிறார்களோ என்னவோ
எனக்குத் தெரியவில்லை.

இத்தகைய அதிகாரிகள் இருந்தால், இந்த அரசாங்கத்திற்கு ஒரு
களங்கம் வந்து விடும், அந்த அளவிற்குச் செயல்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் குறிப்பாக இந்த
மாதிரி விரும்பத்தகாத காரியங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்
கின்றன.

முன்பொருமுறை வேலப்பன் என்ற ஒருவரை இரணியல் போலீஸ்
ஸ்டேஷன் லாக்கப்பில் வைத்து அடித்து, இறந்து இருக்கிறார். அது
சம்பந்தமாகக் கேஸ் நடந்து இப்போது விடுதலை ஆகிவிட்டது. இந்தப்
பிரச்சினையைப் பற்றி நான் இங்கே எடுத்துக் கூறுவதற்குக் காரணம்
ஜாதியின் அடிப்படையில் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்து கொண்டிருக்



1974 சனவரி 28] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கிறது. மேலும் நிச்சயமாகத் தமிழ்நாட்டில் இப்படி நடப்பதற்கு அனுமதிக்க
மாட்டோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

பொதுவாக, போலீசார் அடக்குமுறை கொடிகட்டிப் பறந்து கொண்
டிருக்கிறது. இளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாகவும், பாளையங்கோட்டை சம்ப
வத்தின் அடிப்படையாகவும் மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். மாண
வர்கள் தலைவர் மீது பல வழக்குகளைப்போட்டு இருக்கிறார்கள். அவர்
களுக்குப் பலவிதமான நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது
எல்லாம் இந்த அரசாங்கத்திற்கு நன்றாக இருக்கிறதா என்று பார்க்க
வேண்டும். ஒரு வேளை மாணவர்கள் கிளர்ச்சிக்கு யாரோ தூண்டி விட்டுக்
கொண்டிருக்கிறார்கள், எதிர்க் கட்சிகள் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள்
என்று குற்றம் சாட்டினால் மட்டும் போதாது, உண்மை நிலையைப் பார்க்க
வேண்டும். இன்று மாணவர்கள் பெரும் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு
இருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களுடைய வாழ்க்கையில் பல
கஷ்டங்கள், துன்பங்கள் இருக்கின்றன. அப்படி அவர்கள் கிளர்ச்சிகளில்
ஈடுபடுகிற நேரத்தில் அவற்றை மனிதாபிமானத்தோடு அணுகவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நான் குறிப்பிட விரும்புவது, இந்த லோகல் பாடீஸுக்கு
எல்லாம் எப்போது தேர்தல் வரும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க
வேண்டும். எப்ரலில் வரும் என்று கூறினார்கள். அதே மாதிரி இப்
போது ஊழல் காரணத்திற்காகக் கலைக்கப்பட்ட கார்ப்பரேஷன் தேர்தல்
எப்போது வரும் என்பதையும் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தேர்தலை ஒரு வேளை ஸ்பெஷல்
ஆபீசர் நன்றாக வேலை செய்கிறார் என்ற காரணத்திற்காகத் தள்ளிப்
போடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

நம் நாட்டில் பல ஆலை, பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்
டத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய
பல்வேறு பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. அதனால் பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசு காவேரி
மில்லை உடனடியாக ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்கள் போராட்ட
அடிப்படையில் சென்று கொண்டிருக்கிறார்கள். தருமபுரி ஊராட்சி ஒன்றி
யத்தில் உள்ள ஆசிரியர்கள் உண்ணாவிரதம் கைக்கொண்டு இருக்கிறார்கள்.
அவர்களுக்கும் வேண்டிய பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மலேசியா—சிங்கப்பூரிலிருந்து வந்தவர்களுக்கு புனர்வாழ்விற்காக
வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மேதகு ஆளுநர் உரையில் 57,000 குடும்பங்கள் சிலோனிலிருந்து
இங்கே வருவதாகச் சொன்னார்கள். முன்பு வந்தவர்களுக்கே சரியான
வகையில் உதவிகள் கிடைக்கவில்லை. அவர்களெல்லாம் திரும்பச் செல்வ
தற்குக் கூடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். 57,000 குடும்பங்கள்

ஒரு குவிண்டால் நெல் கொள்முதல் விலை ரூ. 75.00 ; மாவட்டத் திற்குள் போக்குவரத்துச் செலவு ரூ. 1·00 ; கொள்முதல் தரகு ரூ. 1·00 ; அடக்கம் நெல் விலை ரூ. 77·00 ; ஒரு குவிண்டால் அரிசி பெறுவதற்கான நெல் விலை (68 சதவிகிதம்) ரூ. 113·30 ; அரவைக் கூலி, கோணிப்பை ரூ. 5·40 ; ஆலைவாய் அரிசி விலை ரூ. 118·70 ; ஆலையிலிருந்து கிடங் கிற்கு சராசரி போக்குவரத்துச் செலவு ரூ. 3·00 ; கிடங்கு வாடகை மாத மொன்றுக்கு 25 பைசா வீதம் 8 மாதங்களுக்கு ரூ. 2·00 ; வட்டி 9 சதவிகிதம் வீதம் 8 மாதங்களுக்கு ரூ. 7·52 ; போக்குவரத்துச் சேதாரம் ரூ. 1·23 ; சேமிப்பு சேதாரம் ரூ. 1·23 ; நிர்வாகச் செலவு ரூ. 6·00 ; தஞ்சையிலிருந்து கன்னியாகுமரிக்குப் போக்குவரத்து செலவு ரூ. 5·70 ; அரிசி மொத்த விலை ரூ. 145·38 ; மொத்த வணிகரின் தரகு ரூ. 1·00 ; சில்லறை வணிகரின் தரகு ரூ. 4·00 ; கன்னியாகுமரி மாவட்டத்தில் சில்லறை விலை ரூ. 150·38 ; அல்லது ரூ. 150·00. இது தான் அந்த விவரம்.

சர்க்கார் இதில் லாபம் எதுவும் பார்க்கவில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் நெல் வியாபாரத்தின்மூலம் கோடிக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிப் பதாகச் சொல்லுவது நியாயம் இல்லை. கள்ளக்கடத்தலுக்கு உடந்தை யாக இருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று திரு. பொன்னப்ப நாடார் சொன்னார். கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளை அவர்களே பாராட்டினார்கள். இப்போது ரொம்பவும் குறைந்திருக்கிறது. மீதி மிச்சமுள்ளதையும் தடுக்க அங்கே யுள்ள மக்கள் உதவி தேவை. அதற்காகத்தான் அங்குள்ள எம்.எல.ஏ.க் களைப் கூப்பிட்டு ஒரு பீஸ் கமிட்டி போடச் சொன்னேன். பீஸ் கமிட்டியில் இருக்கப் பயப்படுகிறார்கள். அவர்களை நாங்கள் எப்படிக் காட்டிக்கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் முன்னிலையில் சொல்லியிருக்கிறார்கள். (திரு. எ. சுவாமிதாஸ் எழுந்திருந்தார்). நான் எந்தச் சட்டமன்ற உறுப்பினரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் எழுந்திருக்க வேண்டாம்.

திரு. எ. சுவாமிதாஸ் : அந்தமாதிரி பீஸ் கமிட்டி போடுவது பற்றி என்னிடத்தில் எந்த அதிகாரியும் அணுகிக் கேட்டது இல்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நானே அதிகாரி களிடத்திலும் சொன்னேன். எம்.எல்.ஏ.க்களிடத்திலும் சொன்னேன். கள்ளக்கடத்தலை நிறுத்துவது மிகக் கடினமான காரியம் என்பது எல் லோருக்கும் புரியும். கிட்டத்தட்ட 90 சதவிகிதம் தடுத்து நிறுத்தப்பட் டிருக்கிறது. மேலும் எல்லோரும் ஒத்துழைத்தால் நூற்றுக்கு நூறு வெற்றிகரமாக முடிக்கலாம். அதுபற்றி நாளைக்குக் கூடப் பேசுவதாகி இருக்கிறேன். கொஞ்சம் இருக்கிற கள்ளக்கடத்தலையும் தவிர்க்க திரு. பொன்னப்ப நாடார் தலைமையில் பீஸ் கமிட்டி போடலாம் என்று இருக்கி றேன்.....................





திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பீஸ் கமிட்டி அமைப்பதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களும் அந்தக் கமிட்டியில் இருந்து செயல்படத் தயாராய் இருந் தால் நானும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கள்ளக் கடத்தல் சம்பந்தமாக அங்கிருக்கிற எம்.எல்.ஏ.க்கள் கூட அஞ்சுகிறார்கள் என்கிற கருத்தில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சரியல்ல. கள்ளக்கடத்தல் நீடிக்கிறது என்றால் அதற்குக் கேரள அரசாங்கம் கொஞ்சம் பொறுப்பு. அண்டை மாநிலத்தின்மீது நான் புகார் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த உண்மை நிலைமை எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். என் தொகுதி கேரளாவையொட்டி இருக்கிற பகுதி. கேரளத்தில் இருக்கிற அதிகாரிகள் இதற்கு உடந்தை யாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது பத்திரிகையில் வந்து பலர் கண்டனக் குரலை எழுப்புவார்கள். இப்போது தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை அவர்களோடு விட்டுவிட்டதற்கு நாங்கள் பொறுப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாநிலங்களுக்குள்ளும் இருக் கிற உறவு முறை தகராறுக்கு உள்ளதாக ஆகவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நிச்சயமாக யார் கள்ளக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நிச்சயமாக நான் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறேன்.

எங்களுக்கு வேண்டியது எல்லாம் உணவு. கேரளத்திற்கு அரிசி கடத்தப்படுகிறது என்கிற காரணத்தினால் எங்கள் பகுதியில் உள்ள மக்கள் உணவு கிடைக்காமல் கஷ்டப்பட அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். 113 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து கன்னியா குமரி மாவட்டத்தில் ரூ. 135–க்கு விற்கிறார்கள் என்று சொன்னால், இதே மாதிரியான செலவினங்களை தனியார்களுக்கும் அளிக்கத் தயாராய் இருக் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். கொள்முதல் விலைமீது ஹல்லிங் சார்ஜ், கன்னி சார்ஜ், டிரான்ஸ்போர்ட் சார்ஜ் என்பதாக பல வற்றைச் சேர்த்திருக்கிறார்கள். இருந்தும் சப்ளை செய்யப்படுகிற அரிசி எப்படி இருக்கிறது என்றால் நான் சாம்பிள் வைத்திருக் கிறேன். கோழித் தீவனமாகக் கூட உபயோகப்படுத்த முடியாது. அதி காரிகளிடத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதுபோன்ற ரக அரிசியாக அங்கே சப்ளை செய்யக்கூடாது என்றும் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது எழு நாட்களாக நடந்து வந்துள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற வகையில் நான் இந்த மன்றத்தில் நிற்கின்றேன்.

காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு தலைவர் அவர்களும், மற்றும் வேறு கட்சிகளுடைய தலைவர்களும் கவர்னரின் உரை மீதான விவாதத்திலே பேசி முடிக்கிற நேரத்தில், ஒவ்வொரு உரையிலும் அவர்கள் கடைசியாக வைத்திருக்கிற முத்தாய்ப்பு, நாங்கள் செய்ய வேண்டிய ஒரு பெரும்

நான் பெருமைக்காகச் சொல்லவில்லை அவ்வளவு வேகமாக வாதாடிய காரணத்தினால் சேலம் உருக்காலை நமக்கு விரைவிலே கிடைத்தது என்பதையும், அதனுடைய தொடக்க விழாவை இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் நடத்தி வைத்தார்கள் என்பதையும் நாடு நன்றாக உணரும்.

ஆகவே, சேலம் திட்டத்திற்காக நாம் போராடியிருக்கிறோம். நான் காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்க இயலாது என்று கண்டிப்பாக சொல்கின்ற அளவுக்கு முதலமைச்சர்கள் கலந்துகொண்ட தேசிய வளர்ச் சிக் குழு கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

வீராணம் திட்டம் மாநில அரசினுடைய திட்டம் என்றாலும் கூட, அது பல கோடி ரூபாய் திட்டம் என்ற காரணத்தினால், இருக்கின்ற முறைப்படி மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்ற காரணத்தினால், அதற்காகவே கிட்டதட்ட ஓராண்டு காலம் மாநில அரசு மத்திய அரசோடு வாதாடி, அதைப் பெறுவதிலே வெற்றி பெற்றிருக் கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அனுமதி பெறுவதற்காக நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும், நம்முடைய அரசு அலுவலர்களும் எத்தனை முறை டெல்லியிலுள்ள அமைச்சர்களைச் சந்தித்துப் பேசியிருப்போம், பிரதம அமைச்சரை சந்தித்துப் பேசியிருப் போம், அதை அமைப்பதற்கான காரணங்கள் எவ்வளவு பொருத்த மானவை என்பதனை எடுத்துக் கூறியிருப்போம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்குப்பிறகுதான் நாம் அந்த அனுமதியை அவர்களி டத்திலே பெற முடிந்தது என்பதை யாரும் மறந்துவிட இயலாது.

அதைப்போலவே, தூத்துக்குடியில் ஜாயிண்ட் செக்டாரில் ஒரு உரத் தொழிற்சாலை ரூ. 100 கோடி அளவுக்கு இன்றைக்குத் தொடங்கப் பெற்று, அதனுடைய முதல் கட்ட வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என்றால், அதற்கும் இந்த அரசு முன்னோடியாக இருந்து, மத்திய சர்க்காரோடு வாதாடிப் போராடி அதையும் பெற்றிருக்கிறது.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம்—அந்தத் திட்டத்திற்கு நம் முடைய அரசு எத்தனை முறைகள் குரல் எழுப்பியிருக்கிறது என்பதை மறப்பது அவ்வளவு நல்லது அல்ல. பல முறை குரல் எழுப்பி யிருக்கிறோம். ஒருமுறை நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறப்போவதில்லை என்ற செய்தி பத்திரிகையில் வந்தவுடன் நம்முடைய அதிகாரிகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டார்கள். நானும் மத்திய சர்க்காரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அதற்குப் பிறகு இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டோம். நெய்வேலி இரண் டாவது சுரங்கத் திட்டம் இந்தத் திட்டத்தில் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஒரே மனதாக நாம் நிறை வேற்றினோம். அந்தத் தீர்மானத்தை அன்று மாலையே நம்முடைய அமைச்சர் திரு. இராசாராம் டெல்லிக்கு எடுத்துச் சென்றார்கள். பிரதம அமைச்சரிடம் அளித்தார்கள். அதோடுகூட முடிந்துவிடவில்லை.



அதற்குப் பிறகும் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டம் 9—12—73 அன்று நடைபெற்றபொழுது நான் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டேன், வலியுறுத்திப் பேசினேன். நம்முடைய மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படாவிட்டால் தமிழகத்தின் எதிர்காலம் வளம் மிகுந்த தாக இருக்காது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னவுடன் பதிலளித்த அமைச்சர் திரு. தார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதை அப்படியே இங்கே குறிப்பிடுகின்றேன்

"I would assure the Chief Minister of Tamil Nadu that as far as the expansion of power based on lignite is concerned, this matter has been discussed by the Finance Minister and by me with the Ministers from both the Federal Republic of Germany and also the German Democratic Republic who have great experience in exploitation of low grade coal as we have in the case of Tamil Nadu. I would also draw his kind attention to the series of meetings we have had with the Chief Minister, with his officers who have been very co-operative in ensuring that nearly a thousand mega watt of power is established at Tuticorin and for this, it will be recalled we have taken into account the supply of coal by the sea route, through considerable distance at considerable cost. We have also taken into account the establishment of Kundah and Solaiyar Projects. I mentioned this in order to allay apprehensions, if there was any room for it, for my distinguished friend, Mr. Karunanidhi, that in the matter of development, he need have no apprehensions whatso-ever from us, from the Planning Commission, because in his case, and if I may say so, in no other case, I always have an enquiry or two which I receive from the Prime Minister."

என்று இதே வாசகத்தைத் திட்ட குழுவினுடைய துணைத்தலைவர் அமைச்சர் தார் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்திலே குறிப்பிட்டார்கள்.

அது மாத்திரமல்ல. அதற்குப் பிறகு சனவரி 1-ம் நாள் நடை பெற்ற திட்டக் குழுவின் கூட்டத்தில் நானும் அமைச்சர் மாதவனும் கலந்து கொண்டபோது இதே கருத்துக்களை வலியுறுத்தி எடுத்துச் சொல்லி இதற்கு பச்சைக் கொடி காட்டப்படுகிறது என்ற அளவுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்தில் திட்டக் குழு நமக்கு அறிவித் திருக்கின்றது.

நான் இவைகளை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எத்தனை முறை நாம் இவைகளைப் பற்றி அணுகியிருக்கிறோம், நமது அணுகுமுறைகளைப் பற்றி மத்திய அரசு எந்த அளவுக்குப் பெருமைப்படுகிறது, எந்த அளவுக்குப் பாராட்டுகிறது, எந்த அளவுக்குக் கவனம் செலுத்துகிறது, அணுகுமுறை சாதாரணமானதாக இருந்தால், நாம் எடுத்துச் சொல்

இன்ற காரணங்கள் போலியானவைகளாக இருந்திருந்தால், அல்லது
எடுத்து வைக்கின்ற நிலைக்கு இயலாத அசக்தர்களாக இருந்திருந்தால்—
நமது பொன்னப்ப நாடார் அழகாக குறிப்பிட்டார்கள், கையாலாகாதவர்
கள்—ஆளா லாயக்கற்றவர்கள் என்று—அப்படிப்பட்டவர்களாக இருந்
தால், நம்முடைய அணுகுமுறையை—செய்கிருர்களோ இல்லையோ, மத்திய
சர்க்கார் பாராட்டுகின்ற அளவுக்கு இருக்கிறது எபதை யாரும் மறந்து
விட வேண்டாம்.

ஐந்து கோடி ரூபாய் பாம்பன் பால திட்டத்திற்கும் மாநில அரசு
மத்திய சர்க்காரோடு வாதிட்டுத்தான் பெற்றிருக்கிறது. ஆகவே,
அணுகு முறையிலே எந்தவிதமான தடையுமில்லை, தேக்கமுமில்லை,
திறமைக் குறைவுமில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

கவர்னர் உரையில் அடுத்து மிகமிக முக்கியமாகக் குறிப்பிடப்படுவது
ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம். இந்தத் திட்டத்தில் நாம் முதலில்
ரூ. 1,532 கோடிக்காவது நம்முடைய ஐந்தாவது திட்டம் அமைய
வேண்டுமென்று விரும்பினோம். இதற்கான காரணங்களை எடுத்துக்
கூறினோம். விவாதத்திற்குப் பிறகு, குறைந்த பட்சம் ரூ. 1,200
கோடியிலாவது நமது திட்டம் அமையவேண்டுமென்று நாம் நமது
திட்ட நகலை சமர்ப்பித்தோம். ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்
பிட்டிருப்பதைப் போல், 1974 சனவரி 1-ஆம் தேதி திட்டக் குழு
வோடு நாம் நடத்திய பேச்சு வார்த்தையின் போது ஐந்தாவது ஐந்தாண்டுத்
திட்டத்தின் முதலாண்டிற்கு ரூ. 108 கோடி அளவுக்குத்தான் வசதிகள்
தரப்படும் என்று திட்டக் குழு நம்மிடத்தில் சுட்டிக்காட்டியது. அது
முடிந்த முடிவல்ல. ஆனால், நாம் எடுத்துச் சொல்வது, நடப்பு
ஆண்டிலேயே—இப்போது நடந்துகொண்டிருக்கின்ற ஆண்டிலேயே
ரூ. 126 கோடிக்கு திட்டத்தை ஆண்டு திட்டத்தை செயல்படுத்திக்
கொண்டிருக்கிறபோது, நீங்கள் ஐந்தாவது திட்டத்தின் முதல் ஆண்டே
அதற்கும் குறைவாக ஒதுக்குவது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல
என்று எடுத்து வாதிட்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல. ஒன்றை
ஞாபகப்படுத்தினோம்.

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது தமிழகத்தின்
சார்பாக நானும், கர்நாடக முதல்வரும் மேற்கு வங்க முதல்வரும்
ஒரு கருத்தை அங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னோம்.
அதாவது, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு
திட்டக் குழுவிலிருந்து மாநில அரசுகளுக்கு ஒரு தகவல் அனுப்பப்
பட்டது. அது என்னவென்றால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்
தின் முதலாண்டுத் திட்டத்தின் அளவு நடைமுறை ஆண்டு திட்ட
அளவில்தான் இருக்கும். அந்த அளவுக்குத்தான் பார்த்துக்
கொள்ள வேண்டுமென்று அவர்கள் ஒரு தகவலை அனுப்பினார்கள்.
அதை தமிழகமும், கர்நாடகமும், மேற்கு வங்கமும் தேசிய வளர்ச்சிக்
குழுவிலே கடுமையாக எதிர்த்ததன் காரணமாக, அப்படி அனுப்பிய
தகவலை நாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம் என்று திட்டக் குழு
வினுடைய அமைச்சர் மதிப்புக்குரிய தார் அவர்கள் அங்கே எடுத்து
சொன்னார்கள்.





நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ரூ. 126 கோடி நடப்பு
ஆண்டு—அதே இந்த ஆண்டும் இருக்குமானால் tempo of
**economic activity** அதாவது பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம்
தடைப்பட்டுப் போய்விடக்கூடும். எனவே, ரூ. 126 கோடி என்பதை
ரூ. 150 கோடி என்ற அளவுக்காவது ஆக்கித் தரவேண்டுமென்று
நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இப்பொழுதும் நம்பிக்
கொண்டிருக்கிறேன், சுமார் ரூ. 150 கோடி அளவுக்காவது வரு
கின்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டம் அமையுமென்று
நாம் எதிர்பார்க்கின்றோம்.

அடுத்து, ஆறாவது நிதிக் குழு. அது பற்றிய பிரச்சினையை ஆளுநர்
அவர்கள்.......

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள்
ரூ. 150 கோடிக்கு இந்தத் திட்டமிடுவதாக எடுத்துச் சொன்னார்கள்.
நான் சொன்னது, டி.பி. தார் மீண்டும் தமிழக முதலமைச்சர் மீதே
குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார். எக்ஸ்ட்ரா இன்கம் ரூ. 188·85
கோடி கொடுக்க முடியாததால் நிதி ஒதுக்க முடியவில்லை என்று
குற்றச்சாட்டை உங்கள் அரசின் மீதே சொல்கிறார். அதற்கு என்ன
விளக்கம் தந்தீர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளுக்கெல்லாம்
விளக்கம் தரப்பட்டிருக்கிறது. நாம் வரி போடுவதைப் பொறுத்து
நம்முடைய வருமானம், வசதி பெருக்கிக்கொள்வது பொறுத்து திட்டங்
கள் அமையும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி விவரமாகப்
பேசியிருக்கின்றோம். அந்த விவாதங்கள் மிக விரிவான முறையில்
நடைபெற்றிருக்கின்றன. நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப்
பேசும் நேரத்தில் அதில் மேலும் விளக்கங்களை அளிக்க நான் தயாராக
இருக்கின்றேன்.

ஆறாவது நிதிக்குழுவினிடம் நமது கோரிக்கைகளை,மாநில அரசின்
தேவைகளைச் சரியாக எடுத்து வைக்கவில்லை என்றுகூட இங்கே பேசப்
பட்டது. நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆறாவது நிதிக்
குழுவின் அறிக்கைக்கேற்ப நம்முடைய தமிழக அரசு ஒரு பதில்
அறிக்கையைத் தயாரித்து ஆறாவது நிதிக் குழு எப்படியெல்லாம் தமிழ்
நாட்டைக் கவனத்தில் வைக்க வேண்டும், எந்தெந்த வகையில் எல்லாம்
தமிழ்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மாநிலங்களுக்காக
அந்த ஆறாவது நிதிக் குழு எந்தெந்த அடிப்படையில் தன்னுடைய
பணியினைச் செய்திட வேண்டும் என்பதற்கு, வேறு சில மாநிலங்கள்
எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்குக்கூட சில அடிப்படை வரையறைகளை
செய்து அளித்திருக்கின்றோம்.

அது மாத்திரமல்ல. மேலவை உறுப்பினர்களுக்கும்—பேரவை
உறுப்பினர்களுக்கும் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே நாம்
ஆறாவது நிதிக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள அறிக்கை, மெமோராண்டம்
அளிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்துப் பேரவையிலும், மேலவையிலும்
நாம் அனுப்பியுள்ள அந்த அறிக்கையை ஆதரித்து மாண்புமிகு உறுப்

சாதனை பதவியைவிட்டு விலகுவதுதான் என்பதாகும். பதவியில் இருந்து விலகுங்கள் என்பது கடைசி வாசகமாகும். அது ஒருவேளை இந்தத் தடவை, இந்தக் கூட்டத் தொடரில், எதிர்க்கட்சிகளின் தலைவரவர்களால் ஒருவேளை எடுத்துச் சொல்லப்படாமல் இருந்து விடுமோ என்று எதிர் பார்த்ததற்கு மாறாகத்தான் அவர்கள் அனைவருமே அந்தப் பொன்னான வாசகத்தோடு தங்கள் உரையை முடித்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 75 பேர் இந்த உரையிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களோடு 76-வது பேர் முடிந்து 77-வது நபராக நான் இப்பொழுது பேசுகிறேன். ஆக, 76-ல் மீண்டும் நாங்கள்தான் பேசிக் கொண்டிருப்போம் இந்த இடத்தில் என்பதற்கு இது ஒரு நல்ல அடையாளமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

இந்த அவையினுடைய உறுப்பினராக இருக்கிற திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் குடியரசு நாளையொட்டி பத்ம ஸ்ரீ என்ற விருதினைப் பெற்றமைக்கு தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையின் சார்பில் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறீர்கள். தாங்கள் அளித்துள்ள அந்த வாழ்த்தோடும், பாராட்டோடும் நானும் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களை ஜோதி அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை தமிழகத்தில் நேர்ந்துவிட்ட மிகப் பெரிய துயர சம்பவத்தைத் தொடக்கமாகக் கொண்டு இங்கே ஆற்றப்பட்டிருக்கிறது. தமிழ் இனத்தின் தனிப் பெரும் தலைவராகவும், உலகப் பகுத்தறிவாளர் இயக்கத்திலே முன்வரிசையிலே வைத்து எண்ணப்படத்தக்க நிலையிலே பணியாற்றியவராகவும், இந்திய சீர்திருத்தவாதிகளில் முன்னணியில் நிற்பவர்களுக்குள்ளே ஒருவராகத் திகழ்ந்தவருமான தந்தை பெரியார் அவர்களுடைய மறைவுக்கு ஆளுநர் அவர்களின் உரையின் வாயிலாக வெளியிட்டுள்ள இரங்கலோடு இந்த மாமன்றத்திலுள்ள எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய இதயத்தை இணைத்தது பெரியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதையாகும்.

மரியாதை மட்டும் போதாது. அவர்கள் எந்த சாதி சமய வழக்குகள் நாட்டைவிட்டு அகலவேண்டும் என்று கருதினார்களோ, அவைகளுக்கெல்லாம் நாமும் நம்மால் இயன்ற அளவில் நம்முடைய நேரத்தைச் செலவிடவேண்டும். அவைகளை அழிப்பதற்கு, மூடக் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு அனைவரும் ஒருமித்த கருத்தோடு உழைத்திட வேண்டும் என்கின்ற சூளுரையையும் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆளுநருடைய உரையில் மிக முக்கியமாக மாநில அரசுக்கு மத்திய அரசு நியாயமாக வழங்கவேண்டிய பங்குத் தொகைகள் அளிக்கப்படவில்லை, உதவிகள் வழங்கப்படவில்லை, அவைகளைக் கோருகின்ற தன்மையில் ஆளுநர் உரையின் வாசகங்கள் பல்வேறு இடங்களில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபற்றி இங்கே இரண்டு விதமான கருத்துக்கள் பேசப்பட்டன.



எதற்கெடுத்தாலும் மத்திய அரசிடத்திலே நீங்கள் மோதுகிறீர்கள், மத்திய அரசைக் குறை கூறுகிறீர்கள் என்கின்ற ஒரு கருத்து. வேறு ஒரு கருத்து, நீங்கள் மத்திய அரசிடத்தில் கேட்க வேண்டிய முறையில் கேட்கவில்லை, புத்திசாலித்தனமாகக் கேட்கவில்லை, திறமை காட்டிக் கேட்கவில்லை, சாதுர்யமாக வாதாடவில்லை என்றெல்லாம் இன்னொரு கருத்து இங்கே வெளியிடப்பட்டது.

மத்திய சர்க்காரோடு ஏன் மோதுகிறீர்கள் என்று கேட்ட அந்தக் கருத்தைவிட, கொஞ்சம் கடுமையாகவும் காரசாரமான வார்த்தைகளையும் கலந்து, உங்களுக்குக் காரசாரத் தன்மை இல்லை, திறமையில்லை மத்திய அரசோடு வாதாட என்று குற்றம் சாட்டப்பட்ட அந்தக் கருத்துக்களுக்கு நான் அதிக மதிப்பைத் தருகிறேன். ஏனென்றால், எப்படியோ ஒரு வகையில் மத்திய சர்க்கார் தரவேண்டிய இடத்தில் இருக்கிறது, மாநில சர்க்கார் பெறவேண்டிய இடத்தில் இருக்கிறது.

ஆகவே, இங்கே ஆற்றப்படுகின்ற உரைகள், மாநில சர்க்காரைக் குறை கூறி சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள், நீங்கள் மேலும் தீவிரமாகவும், திறமையாகவும் மத்திய சர்க்காரிடத்தில் கேட்கவேண்டும் என்று கூறி எங்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே அமைகின்ற காரணத்தினால், சொல்லிலேதான் காரசாரம் இருக்கிறதே அல்லாமல், எடுத்துக் கொண்ட பொருளில் காரசாரம் இல்லை. ஆகவே, நம்மை ஊக்கப்படுத்துகிறார்கள், உற்சாகப்படுத்துகிறார்கள் என்கின்ற அளவில் நான் இந்தக் கருத்துக்கு மதிப்பு அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இன்னும் நாம் வேகமாகவும், வலியுறுத்தியும் மத்திய சர்க்காரிடத்திலே மாநில சர்க்காருக்குத் தேவையான பல காரியங்களைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதில் இருவிதமான கருத்துக்கு இடமே இல்லை. ஆனாலும் இந்த 6, 7 ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தினிடத்தில் தட்டிக் கேட்டு, வலியுறுத்தி, வாதாடிப் போராடி பல்வேறு நலன்களை மாநிலத்திற்குப் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. மத்திய சர்க்காரைக் கேட்க துணிவு இல்லை என்று வாதாடுகின்ற நண்பர்களுக்குச் சொல்லுவேன்.

1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் டெல்லி பட்டணத்தில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதம் நடைபெற்றபொழுது நான் உரையாற்றிய நேரத்தில் குறிப்பிட்டேன். நீண்ட நெடுங்காலமாக கேட்டு வருகிற சேலம் உருக்காலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை, என்றால், தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களுடைய சார்பாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தேன்.

திட்டக் குழுவினிடத்தில் சொன்ன வார்த்தைகளை அப்படியே சுட்டிக் காட்டுவதுநலம் என்று கருதுகிறேன்.

"The Planning Commission is aware that we had been amongst the leaders in additional mobilisation during the Fourth Plan. In fact, our efforts in relation to our per capita income, is the highest in the country, and out of a total additional mobilisation of 1058 crores and odd, our State records nearly 159 crores. Unfortunately, the result of this has been that we have suffered at the hands of the Finance Commission, which rewards, a State in direct proportion to its revenue gaps." இப்படியெல்லாம் நம்முடைய குரல் திட்டக் குழுவானாலும் சரி, அல்லது நிதிக் குழுவானாலும் சரி தயவு தாட்சண்யமின்றி தட்டிக் கேட்கின்ற முறையில் எழுப்பப் பட்டிருக்கிறது.

மதுவிலக்கு பற்றியும் இங்கே பேசப்பட்டது. நமது பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் வேறுசில உறுப்பினர்களும் பூரண மதுவிலக்கு வரவேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். நாம் இன்றைய சூழ்நிலையில் 200 கோடி ரூபாயை ஐந்தாண்டு திட்டக் காலத்தில இழக்கிறோம் என்று நிதிக் குழுவிடத்தில் எடுத்துச் சொல்லியும் கூட, அகில இந்தியாவில் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டிய மத்திய அரசு, உத்தமர் காந்தியடிகளின் கொள்கையை அனைத்து இந்தியாவிலும் பரப்புவதற்கு முன்னோடியாக இருக்க வேண்டிய மத்திய அரசு நாம் எவ்வளவோ சங்கடங்களுக்கிடையே வேறுவழியில்லை என்று மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைத்து, $1\frac{1}{2}$ ஆண்டுகளில் நாற்பது, ஐம்பது கோடி ரூபாய் அதன் மூலம் மாநிலத்திற்கு வருவாய் தேடி, இப்போது அதுவும் இழந்து, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நிதிக்கமிஷன் நம்முடைய நிலையை எண்ணி உதவிடுவார்களா என்று பார்த்தால் அவர்கள் பார்க்கிற பார்வை "உன்னை யார் மதுவிலக்கை அமல்படுத்தச் சொன்னது?" என்பதுபோல் இருக்கிறதே தவிர, அவர்கள் அப்படிச் சொன்னார்களா என்று கேட்பார்கள் சொல்லவில்லை பார்வைக்குப் பொருள் கூறுகிறேன்-சிலபேர் பார்வைக்குப் பொருள் கூறுவது சுலபம் - நிதிக் குழு நாம் எடுத்துக்கொண்ட இந்த முயற்சிக்கு ஒரு அடையாள பரிசை அளிக்கின்றவகையில் கூட சிறு தொகையையும் ஒதுக்க வில்லை என்பது வருந்தத்தக்கது. அதையும் ஆளுநர் அவர்களே தம் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது நடந்த விவாதத்தில் மிக உரமாகப் பேசப்பட்ட விஷயம் உரம், உரம் பற்றி மிக உரமாகப் பேசப்பட்டது. ஆனால் உரம், உரம் என்று இங்கே பேசுகிற நேரத்தில் நாம் கேட்க வேண்டிய வரம் மத்திய சர்க்காரைப்பார்த்து என்பதைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கூட ஏனோ புரியவில்லை. நமது அருமை நண்பர் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து கூட "உங்களுக்குள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஏன் இந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது?" என்று கேட்டார்கள்.



உரத்தைப்பற்றி கொஞ்சம் கேட்பதில் தொய்வு—சலிப்புத் தட்டினாலும் கூட நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். உரம் வெளிநாட்டில் இருந்து நமக்கு இறக்குமதி செய்யப்படுகிற உரம் பூல் (pool) என்ற தலைப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பபடுகிற உரம் நான்-பூல் (Non-pool) என்ற தலைப்பில் வைக்கப்படுகிறது. நாம் இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த உரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. பிப்ரவரி முதல் ஜூலை வரை - காரிப் பருவம் - ஆகஸ்ட் முதல் சனவரி வரை ராபி பருவம் - இந்தப் பருவங்களில் வேண்டிய உர ஒதுக்கீட்டை மத்திய அரசே செய்து வருகிறது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை உரம் ஒதுக்கீடு செய்கிறபோது இறக்குமதி செய்கிற உரத்தை - பூல் (pool)-இல் இவ்வளவு என்றும், உள்நாட்டு உரத்தை நான்பூல்-(Non-pool)-இல் இவ்வளவு என்றும் நம்முடைய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒதுக்கீடு செய்கிறார்கள்.

1973-74-ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவையானது மூன்று லட்சத்து ஐயாயிரம் டன்கள். சென்ற ஆண்டு நமக்குத் தேவை இதைவிடக் குறைவுதான். அதற்கு முந்திய ஆண்டு அதைவிடக் குறைவுதான். உரம் அதிகமாகப் போட வேண்டுமென்ற ஆர்வம் விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் வந்திருக்கிற காரணத்தினால், உரத்தின் பயனை பத்திரிகையில் எடுத்துச் சொல்லி, வேளாண்மைத்துறை வாயிலாக எடுத்துச் சொல்லி, வானொலி மூலமாக விளக்கி வருகின்ற காரணத்தினால், சாகுபடிக்குப் புதியதாக ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் - விவசாய மக்களின் தேவை மூன்று லட்சத்து ஐயாயிரம் டன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டு உரம் கேட்கப்பட்டது.

ஆனால் நமக்கு மொத்தமாகக் கிடைத்தது ஒரு லட்சத்து எண்பதாயிரம் டன்கள்தான். இதை ஒதுக்கியது மத்திய அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கவர்னர் உரையில் இரண்டு லட்சம் சொச்சம் டன்கள் உரம் கிடைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே இதில் எது சரி?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இதுவரை கிடைத்திருப்பதைப் பற்றிச் சொல்லிக்கொண்டுவருகிறேன். வெளி, உள்நாட்டு உரத்தையும் சேர்த்துத்தான்.

இதிலே முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஓர் அம்சம், நமக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வெளிநாட்டு உரம் முழுவதும் (1) தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் ஃபெடரேஷன், (2) தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் ஆகியவைகளின் மூலமாக விநியோகம் செய்கின்ற பொறுப்பை 1—4—1973 முதல் ஒப்படைப்பது என்று முடிவு எடுத்து, வெளிநாட்டு உரப் பூலில் இருந்து ஒதுக்கப்பட்ட உரத்தை தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன், தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன் ஆகிய இரண்டின் மூலம் விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டது,

பினர்கள் சில பேர் பேசி இருக்கிறார்கள். ஆனால் இங்கே சில பேர் பேசுகின்ற நேரத்தில் அதை நாம் சரியான முறையில் அணுகிட வில்லை, அதன் காரணமாக ஆறாவது நிதிக் குழு நமக்கு தரவேண்டிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் இழந்து விட்டோமென்று குற்றஞ்சாட்டி னார்கள்...

ஆறாவதுநிதிக் குழு இங்கு வந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே உள்ள சிலபேர் அந்த நிதிக் குழுவைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டவுடன் நாங்கள் நிதிக் குழு சம்பந்த மாக மாநிலங்களுக்கு ஒதுக்குகிற நிதி சம்பந்தமாகப் பேசலாமா என்று அவர்களைக் கேட்டு, அப்படிக் கேட்டவர்களை அவர்கள் அழைத்துப் பேசி யிருக்கிறார்கள்.

திரு.பி. வி. ராஜமன்னார், திரு. சந்தானம், திரு. மாறன், எம். பி. ஆகியவர்கள் நிதிக் குழுவை சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அப்படி பலரும் கூட அதிலே ஆர்வம் படைத்தவர்கள் பேசியிருக்கலாம். நான் பேசாததைக் குற்றமாகச் சொல்லவில்லை.

பிப்ரவரி மாதத்தில் கமிஷனின் அறிக்கையை இங்கே வைத்த பிறகும் அதுபற்றி எதையும் சொல்லாமல் இன்றைக்கு கவர்னரின் உரையின் மீது ஆறாவது நிதிக்குழு இன்னும் அதிகமான முறையில் நியாயம் வழங்கியிருக்கலாம் என்று எடுத்துக்காட்டிய பிறகு நியாயம் வழங்கப் படாததற்குக் காரணம் நம் அணுகுமுறை சரியானதல்ல என்று கூறுவது பொருத்தமுடையதல்ல. நம் அணுகுமுறையில் ஆறாவது நிதிக் குழுவின் முன்னால் வைத்த சில முக்கியமான கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்

மத்திய அரசு மாநிலங்களுக்கு வரி, வருவாய், உதவித் தொகை, மானியங்கள் ஆகியவற்றை பிரித்து வழங்கும் ஏற்பாட்டில் பல குறைபாடு கள் இருக்கின்றன. நிதிக் குழுவும், திட்டக் குழுவும் மாநிலங்களின் தேவையைத் தனித்தனியே கருதிப் பார்ப்பதற்குப் பதிலாக மாநிலங்களின் தேவை அனைத்தையும் ஒருசேர நிதிக்குழுவே கருதிப் பார்க்கவேண்டும். இது நான் முதலில் குறிப்பிட்டது.

அடுத்து, பின் தங்கிய பகுதிகளில் பிரச்னைகளை "குறைந்த அளவு தேவையான திட்டங்கள்" நிறைவேற்றுவதன் மூலம் தீர்ப்பதெனக் கொள் வோமானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப, மாநிலங்கள் பிரிக்க வேண்டியதில்லை என நாம் அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

என்ன செய்கிறார்கள் என்றால் பின்னடைந்த மாநிலங்கள், பிற் போக்கான மாநிலங்கள் என்று தொகுத்துவைத்துக்கொண்டு அவை களுக்கு அதிக உதவிகளைச் செய்கிற ஏற்பாட்டினைத் திட்டக் குழுவும், நிதிக்குழுவும் செய்கின்றன.



அதற்காகத்தான் நாம் சொல்வது, இந்தியாவில் உள்ள பின் தங்கிய பகுதிகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, எந்த் எந்தத் துறையில் அவை பின்தங்கி இருக்கின்றன என்பதைக் கண்டு, அவற்றுக்கு என்று "மினிமம் நீட்ஸ் ப்ரோகிராம்" தீட்டுவர்களானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப மாநிலங் களைப் பிரிக்கவேண்டியதில்லை, முற்போக்கான மாநிலங்கள் பின்தங்கிய மாநிலங்கள் என்ற அந்த இக்கட்டிலே சிக்கிக்கொண்டு எங்கள் தேவைகளை இழக்க நேரிடாது என்ற கருத்தோடு இந்த முக்கியமான கருத்தை எடுததுச் சொன்னோம்.

மேலும், வளர்ச்சியுற்றது என்று குறிப்பிடப்படும் மாநிலங்களிலும், பின் தங்கிய பகுதிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு பகுதி பின்னடைந்த நிலையில் உள்ளது என்று தீர்மானிக்க "தனி நபர் வருமானம்" (பர் காபிடா இன்கம்) சரியான அளவு இல்லை என்பதையும் நாம் சுட்டிக் காட்டினோம்.

எப்படி என்றால் பர் காபிடா இன்கம் கணக்கிடுகிறார்கள் என்றால், ஒரு மாநிலத்தில் இருக்கிற 200 பணக்காரர்கள், மிச்சமிருக்கிற சாதாரண மக்களையும், கூட்டிப் பார்த்து, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, மொத்தத் தால் வகுத்து சராசரி வருமானத்தைக் கணக்கிடுகிறார்கள். "ஏ" என்பவர் ஒரு பணக்காரர்—மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார். "பி" என்பவர் ஒரு சாதாரண நிலையில் உள்ளவர். மாதம் 200 ரூபாய் சம்பாதிக்கிறார். இந்த இரண்டு பேர்களுடைய வருமானத்தையும் கூட்டி ரூ. 1,200 என்று கொண்டு, அதை இரண்டால் வகுத்து, ஆளுக்கு ரூ 600 வருகிறது என்று பார்க்கிறது என்பது, பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம். ஆனால் "ஏ" சம்பாதிப்பது ஆயிரம் ரூபாய், "பி" சம்பாதிப்பது 200 ரூபாய்தான் இந்த. இரண்டையும் கூட்டி, 1,200-ஐ இரண்டால் வகுத்தால் பர் காபிடா ரூ. 600 கிடைக்கிறது. ஆகவே, அதை அளவு கோலாக வைத்துக்கொள் ளக்கூடாது என்பதையும் ஆறாவது நிதிக் குழுவிடம் எடுத்துச் சொன்னோம். இயற்கை வளங்களைப் பொறுத்த வரையில் நமது மாநிலத்தில் அவர் கள் குறிப்பிடுகிறது போல் - மற்ற மாநிலங்களைக் காட்டிலும், இயற்கை வளங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன என்பதையும் நிதிக் குழு வுக்கு வெகு விளக்கமாக எடுத்துச் சொன்னோம்.

மேலும் ஒரு மாநில வரி வருவாயை (டாக்ஸ் எபர்ட்ஸ்) பெருக்கு வதற்கு எடுத்துள்ள முயற்சியை எண்ணிப்பாராமல் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கொண்ட மாநிலங்களுக்கு உதவித் தொகை அளிப்பதால் மாநிலங்கள் மேலும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத் தைத் தயாரிக்க தூண்டுகோலாய் அமையும். பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமாக இருந்தால் அந்த மாநிலத்திற்கு துண்டுவிழுகிற அந்த அளவுக்கு நிதி வழங்கப்படும், மிகுந்த இடைவெளி நிரப்பப்படும் என்ற சூழ்நிலை இருந்தால் நாம் பற்றாக்குறை பட்ஜெட் அளித்தால்தான் பணம் கிடைக்கும் என்ற நிலைமையை மாநிலங்களில் ஏற்படுத்தும். ஆகவே, அந்த அடிப்படை யில் நிதிக்குழு தன்னுடைய பரிந்துரையைச் செய்யக்கூடாது என்று அரசின் சார்பில் எடுத்துச் சொன்னோம்.

இதிலே கேட்கப்பட்ட உரம்—1973 ஜூலை முதல் சனவரி 1974 வரை ராபி பருவத்திற்கு ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரம். அதிலே கேட்கப் பட்ட வெளிநாட்டு உரம்—ஒரு லட்சத்து ஆறுயிரம் டன்கள். மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத் தேழு டன்கள். ஒதுக்கப்பட்ட அளவையாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. அதிலேகூட முப்பத்து மூன்றுயிரத்து தொள்ளாயிரத்து ஏழு டன்களே நமக்குக் கிடைத்தது. ஒதுக்கீடு செய்ததில் கொடுக்க வேண்டியது பதினாலாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது டன்கள். இந்த 33,907 டன் உரத்தையும் நாம் கூட்டுறவுத் துறையிலே இயங்கிவரும் 3,027 கிராமக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களின் மூலமாக விநியோகம் செய்து வருகிறோம். இதற்காக கார்டு முறைகளை உண்டு பண்ணி விவ சாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பில் உரம் விநியோகம் செய்யப்படுகிறது.

இந்தக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனத்தின் மூலம் விநியோகிப்பதில் ஓரிரு இடங்களில் தவறு நடைபெறவில்லையென்று நான் சொல்லமாட் டேன். ஆனால், எல்லா இடங்களிலும் தவறு நடைபெறுவதாகச் சொல்லக் கூடாது. ஒரு இடத்திலே தவறு நடைபெற்றால், போதாதா, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போதாதா என்று கேட்கலாம். அந்த எடுத்துக்காட்டு இதற்குப் பொருந்தாது. ஏனென்றால், வைக்கப் பட்டிருப்பது பல குடம் பால்கள். ஆனால், ஒரு குடம் பாலில் விஷம் விழுந்து விட்டது என்பதற்காக பல குடம் பால்களையும் தூக்கி எறிந்துவிட முடியாது.

அந்த வகையிலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான இடங்களில் உர விநியோகம் செய்யப்படுகிற நேரத்தில் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிற தவறுகளைக் கொண்டு ஏதோ கூட்டுறவுத் துறையே மோசமாக இயங்குகிறது, அதிலே எல்லா இடங்களிலும் ஊழல் நடைபெறுகிறது என்று நாம் கற்பனை செய்து கொள்வது நல்லதல்ல.

உள்நாட்டு உரத்தைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்திற்கு ஒவ் வொரு பருவத்திற்கும் ஒதுக்கப்படுகின்ற உரப் பங்கீட்டில் 66 சதவிகிதம் மாண்புமிகு உணவு அமைச்சர் அன்றைக்கு எடுத்துச் சொன்னதைப் போல்—தனிப்பட்ட உரத் தொழிற்சாலைகளின் ஏஜெண்டுகளால் இயங்கி வருகின்ற 6,428 சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப் படுகிறது. இப்படி உள்நாட்டு உரம் கடந்த ராபி பருவத்தில் மத்திய அரசு நமக்கு ஒதுக்கியது 60,000 டன். அதிலே நமக்குக் கிடைத்தது 45,278 டன். இன்னும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்கப்படாதது 24,000 டன். நமக்குக் கிடைத்த 45,278 டன்னில் 66 சதவிகிதம் அதாவது 3-ல் 2 பங்கு தனியார் சில்லறை விற்பனைக் கடைகளுக்குப் போகிறது. அதில், 45,000 டன்னில் 3-ல் 2 பங்கு, 66 சதவிகிதம் பங்கு தனியார் சில்லறை விற்பனை நிலையங்களுக்குச் செல்கிறது. அவர்கள் ஒழுங்காகவும், நியாயமாகவும் விற்பனை செய்கிறார்களா என்பதைக் கண்காணித்து அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.



அன்றைக்கு திரு. மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள், மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையா என்று. மாநில அரசுக்குச் சில அதி காரங்கள் இருக்கின்றன. நான் அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

இங்கே ரூபாய் 55-க்கு விற்கவேண்டிய உரம் ரூபாய் 110-க்கு விற்கிறது, ரூபாய் 135-க்கு விற்கிறது, ரூபாய் 150க்கு விற்கிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் மூலமாக விநியோகிக்கப்படுகிற உரங்கள் அப்படி விற்கப்படுகின்றன. அவைகளைக் கண்காணித்து, தீவிர நடவடிக்கை எடுக்க நம்மால் இயலாது என்று எடுத்துக்கூறி 19—11—1973-ல் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் நீண்ட கடிதம் ஒன்றை மத்திய அரசுக்கு எழுதினோம். அதைப்படித்து விட வேண்டுமென்று நான் உள்ளபடியே விரும்புகிறேன். ஏனென்றால், நாம் முயற்சியை மேற்கொள்ளுகிறோமா, இல்லையா என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

"The entire pool stocks of fertilisers are now being distributed only through the two Co-operative Federations functioning in this State, namely, the Tamil Nadu Co-operative Marketing Federation Limited, and the Thanjavur Co-operative Marketing Federation Limited, and the Thanjavur Co-operative Marketing sers secured by them, only on the strength of the indentity cards issued to the ryots; and such a course is expected to minimise any malpractices on the part of the Co-operatives. But, it has been found difficult to exercise an effective check on the distribution of non-pool stocks by the private dealers, who get their supplies from the Marketeers of the indigenous manufacturers resort to all sorts of malpractices such as black-marketing, transporting outside the State, etc. Such malpractices are on the increase day by day especially in respect of Urea, which is in great demand. Unless the State Government are equipped with the necessary powers to requisition stocks from the Producers and Private dealers in an emergent situation, when such a course is warranted, it may prove difficult to ensure a proper distribution of non-pool fertilisers and thereby meet the seasonal demands of the ryots, at the right time, and at the notified prices. Section 3 of the Essential Commodities Act, 1955, enable the Central Government to control the price, to regulate supply, etc. Section 5 of the Act deals with the delegation of these powers to the State Government."

அந்த செக்ஷன் 5 அடிப்படையில் மாநில அரசுக்கு அதிகாரங்கள் தரவேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்கு மத்திய அரசிடமிருந்து 7—1—1974-ல் கடிதம் வந்தது.

அதிலே என்ன சொன்னார்கள் ? 1966-ஆம் ஆண்டிலேயே எடுத்த மத்திய மந்திரி சபையினுடைய முடிவின்படி தனியார் உர உற்பத்தி ஆலைகள் உரங்கள் விற்கின்ற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தொழிலுக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாக வைத்திருக்கிறார்கள் என்றும் மத்திய அரசு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் சொல்கிறேன்.

"In this connection, another point that has to be reckoned with is, that uner 1966 ecision of the Cabinet, private manufactures have been given freedom of marketing, in order to factures have been given freedom of marketing, in order to invite more capital into the industry . . . We feel that all this and vigorous action under the Fertiliser (Control) Order will be sufficient to deal with most of the malpractices at present. The Government of India regret their inability to agree to your request to delegate powers of requisition and distribute fertilisers held with private manufacturers." இப்பொழுது இருக்கிற......

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : இப்பொழுது பூல் ஸ்டாக் வெளி நாடுகளிலிருந்து வருகிறதே அவை பூராவற்றையும் சர்க்கார் விநியோகம் பண்ணுகிறதா அல்லது அதிலும் ஏதாவது பிரைவேட் ஆட்களுக்குக் கொடுக்கின்றோமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், நான்-பூல் ஸ்டாக்ஸ் பற்றி அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், இப்பொழுது நான்-பூல் ஸ்டாக் சம்பந்தமாகக்கூட, மாநில அரசே விலை பிக்ஸ் பண்ணி, அந்த விலைக்கு அதிகமாக விற்றால் நடவடிக்கை எடுக்கிறார்களே, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலே, அது எவ்வாறு சாத்தியம் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : வெளிநாடுகளிலிருந்து வருகிற உரம் பொறுத்த வரையில் நான் ஏற்கெனவே சொன்னேன், அது சர்க்கார் மூலமாகத்தான் வினியோகிக்கப்படுகிறது—பூலில்தான். உள் நாட்டு உரம் என்றால்தான் நான்-பூலில் இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்டத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

மற்ற மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறதே என்று திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டர் 1957-இன் படி என்ன செய்யலாம் என்றால், கடைகளில் நுழைந்து தஸ்தாவேஜ்களைக் கைப்பற்றி ஒழுங்காக கணக்கு வைத்திருக்கிறார்களா என்று சரி பார்க்கலாம். உரத்தில் கலப்படம் இல்லாமல் தரத்தின்படி அவைகளை விற்கிறார்களா என்று கண்காணிக்கலாம். அவர்கள் ஒழுங்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்களா என்று கண்காணிக்கலாம். இந்த அதிகாரம் மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தனியார் துறையிலுள்ள சில்லறை விற்பனைக் கடைகளின்மீது இந்த நடவடிக்கைகளை எடுக்கலாம்.



ஆனால், நான் மேலே சொல்லியிருக்கின்ற அந்த 3 தலைப்புகளில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவென்றால் அவர்கள்மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் ? உரத்தைப் பறிமுதல் செய்யவோ, மற்றும் நாம் கார்டுகளைக் கொடுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யுங்கள் என்று சொல்லவோ நிச்சயமாக நமக்கு அதிகாரம் கிடையாது.

அது மாத்திரமல்லாமல், இன்று சில்லறை விற்பனையாளர்களுடைய கடைகளுக்குச் சென்றுதான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமே அல்லாமல் அவர்கள் தவறு செய்கிற நேரத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக, அந்த விநியோகத்தைச் செய்கிற உரிமையை அளிக்க இப்பொழுதுள்ள சட்டத்தின்படி அதிகாரம் கிடையாது.

அது மாத்திரமல்ல, சில்லறை விற்பனையாளர்கள்மீது வழக்குகளைப் போடலாம், இரசாயன உரத்தை உற்பத்தி செய்கின்ற உரத் தொழிற்சாலையில் நுழைந்து அவர்களிடத்தில் உள்ள இருப்புகளைக் கேட்கவோ, கலப்படம் செய்கிறார்களா என்று பார்க்கவோ அதிகாரம் கிடையாது. ஆகவேதான் அந்த அதிகாரத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறோம்.

பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டரின் கீழ் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1971–72-ல் 96 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; 1972–73-ல் 243 ; 1973–74-ல் (30—11—1973-வரை) 179 வழக்குகள் இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நாம் நடவடிக்கை எடுக்காமல் இல்லை. ஆனால், தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு நாம் அதிகாரம் கேட்டதற்கு, அவர்கள் 1966-லேயே முடிவு எடுத்து விட்டோம், தொழிற்சாலைகள் தொழில் நடத்த பணம் வேண்டுமென்பதற்காக அந்த வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்கள் நமக்குக் கறாராக பதில் எழுதி விட்டார்கள் என்பதை இந்த அவைக்குச் சொல்வதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தேவையான உரத்தைக் கேட்டால் நமக்குத் தருவதாகச் சொல்வதும் பாதி, பிறகு, சொன்னதிலே நமக்குக் கிடைத்ததும் மிகவும் குறைவு, கிடைக்கக்கூடிய குறைவான இரசாயன உரத்தையும்—உள்நாட்டு இரசாயன உரத்திலே—60 சதவீதத்தை தனியார் ஏஜெண்டுகள் மூலமாகத்தான் விநியோகிக்க வேண்டும். அந்தக் கொள்கை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தக் கொள்கை மாற்றப்படுமானால் இப்பொழுது கிடைக்கின்ற உரத்தை விநியோகிக்க நம்மால் நிச்சயமாக முடியும்.

ஒரு குறுக்குக் கேள்வி எழும். இதற்கு முன்னே அரசாங்கச் சார்பில் விநியோகிக்கும்போது கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நடைபெறவில்லையா என்று. அவை வேறோரிடத்தில் நடைபெற்றாலும் அவை உடனடியாக நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றன என்பதையும் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வார்த்தையையும் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்- அப்படி உணவு வழங்குவதைத் தடுப்பதைக் கண்டிக்கிறேன் என்று சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன், பரவாயில்லை, அவர்களை நான் அப்படிப்பட்ட ஆபத்திலே சிக்கவைக்க விரும்பவில்லை.

குஜராத்திலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டு அங்கே இதுவரையிலும் 30, 40 பேர்கள் போராட்டத்திலே இறந்திருக்கிறார்கள் என்று அரசாங்கம் தருகிற கணக்குப்படி, ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலே வருகின்ற குறிப்புப்படி தெரிகிறது. தமிழ்நாட்டிலே விவசாயிகள் போராட்டத்திலே 20 பேர்கள் இறந்தபொழுது பிரதம மந்திரி அவர்கள் தமிழக அரசின் அணுகுமுறை சரியாக இல்லை என்று சொன்னார்கள். குஜராத்தின் அணுகுமுறை தமிழக அரசிற்கு வரவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுதுகூட தமிழக அரசின் சார்பில் குஜராத்தின் கஷ்டத்தைப் போக்க நம்மால் முடிந்த அளவுக்கு அரிசி அளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் ஆளுநர் உரை விவாதத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்) பட்டினிப் போராட்டம் காந்தி பிறந்த மாநிலத்திலேயே நடைபெறுகிறது என்பதாலும், இந்தியாவிலேயே இந்தப் போராட்டத்தின்மூலம் குடியரசு நாள் விழா கூட கொண்டாட முடியாத மாநிலமாக இருப்பதாலும், குடியரசு நாளிலே கூட துப்பாக்கிச் சூடுகள் ஓயவில்லை என்ற நிலைமை இருக்கிற மாநிலமாக இருக்கிறது என்பதாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு இயன்ற உதவியை குஜராத் மாநிலத்திற்கு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் பதில் அளிக்க விரும்பவில்லை. ஏனென்றால் பல தவறுகளுக்கு வழக்கு போடப்படவில்லை, போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் விசாரித்துப் பார்த்ததில் வழக்குகள் போடப்பட்டும் அல்லது போலீஸார் புலனாய்வு நடைபெறுகின்றன என்றும் செய்திகள் வருகின்ற காரணத்தினால் அவைகளுக்கு எல்லாம் நான் விரிவான விளக்கங்கள் சொல்ல விரும்பவில்லை, நேரம் போதாத காரணத்தால். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற எந்தப் புகாராக இருந்தாலும், எந்த அதிகாரி மீது சொல்லி இருந்தாலும் சரி, வேறு யார்மீது சொல்லியிருந்தாலும் சரி, இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை திரைப்படக் கல்லூரிபற்றிப் பேசப்பட்டது. ஏதோ அந்தக் கல்லூரிக்கு 60 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும் அந்த 60 இலட்சம் எங்கே போனது என்ற கேள்வி எழுந்தது. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை மாத்திரம் வைத்துக்கொண்டு குற்றச்சாட்டுகளிலே நுழைவது சரியல்ல என்பதை எனது அன்பிற்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ 60 இலட்சம் அப்படியே கொடுக்கப்பட்டு ஏப்பம் விடப்பட்டது போல எங்கே சென்றது என்று கேள்விகளை எழுப்புவது முறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.



அறுபது இலட்ச ரூபாய்க்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அந்த மாஸ்டர் பிளான் மூலமாக ஐந்தாண்டுக் காலத்திலே திரைப்படப் பிரிவின் வளர்ச்சிக்காக 60 இலட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று திட்டமிடப்பட்டது. இது அன்னியில் பட்ஜெட் மூலமாக ஒதுக்குவது வேறு. இந்த 60 இலட்சம் ரூபாய் மாஸ்டர் பிளான் என்ற அடிப்படையிலே ஒதுக்கப்பட்டது. 1970–71-ஆம் ஆண்டில் திரைப்படக் கல்லூரிக்குக் கருவிகள் வாங்க ரூபாய் 1,89,000, மாணவர்கள் படம் எடுக்க 18,000 செலவழிக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டில் திரைப்படக் க்ருவிகள் வாங்க ரூபாய் 39,000, மாணவர்கள் படம் எடுக்க ரூபாய் 38,000, கட்டடங்கள் கட்ட ரூபாய் 28,000 செலவழிக்கப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டில் கருவிகள் வாங்க ரூபாய் 2,66,000, மாணவர்கள் படம் எடுக்க 58,000 ரூபாய், கட்டடங்கள் கட்ட 6,00,000 ரூபாய் செலவழிக்கப்பட்டது. இப்பொழுதுதான் நாங்கள் சென்று அந்தக் கட்டடங்களைத் திறந்துவைத்தோம். 6 இலட்ச ரூபாய் கட்டடம். ஆகவே 1970–71-ஆம் ஆண்டு முதல் 1973–74-ஆம் ஆண்டுவரையிலே கருவிகள் வாங்குவதற்காக 4,94,000 ரூபாயும் மாணவர்கள் படம் எடுக்க 1,14,000 ரூபாயும், கட்டடங்கள் கட்டுவதற்காக 11,11,000 ரூபாயும் ஆகமொத்தம் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது.

ஆனால் 60 இலட்சம் எங்கே என்றும் கருணாநிதி பாக்கெட்டிலே போட்டுக் கொண்டாரா? வீடு கட்டிக்கொண்டாரா? எங்கே சென்றது? யார் எடுத்துக் கொண்டார்கள் என்றெல்லாம் கேட்பது சரியல்ல. 60 இலட்ச ரூபாய் திட்டத்தில் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் சில கோரிக்கைகளை எழுப்பினார்கள். திரு கே. டி. கே. அவர்கள் கேட்டதற்கு அன்றைக்கே நான் விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். வெளிநாட்டிலிருந்து ஒரு கருவி 12 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவி, திரைப்படக் கல்லூரிக்கு வேண்டியிருக்கிறது, அதற்காக அன்னியச் செலாவணி கேட்டு நாம் மத்திய அரசுக்கு எழுதி சுமார் 3 நாட்கள் அல்ல, மூன்று வாரங்கள் அல்ல, மூன்று மாதங்கள் அல்ல, மூன்று ஆண்டுக்காலமாக அனுமதி மத்திய சர்க்காரிடத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். திரைப்படக் கல்லூரிக்கு 12 இலட்ச ரூபாய்க்குக் கருவி வாங்குவதற்காக அன்னியச் செலாவணி கேட்டு நாம் அனுப்பியுள்ள விண்ணப்பம் மத்திய அரசிடம் தேங்கிக்கிடக்கிறது. ஆகவே மாணவர்களுடைய தேவையை நாம் நிறைவுசெய்ய முடியாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரகண்டநல்லூரைப்பற்றி நம்முடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது கூறினார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் அதிகமான விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனாலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 1972 ஜூன் மாதத்தில் அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. ஷேக் ராவுத்தர் என்பவர் லெவி நெல்லை வாங்கி அரிசியாக்கும் முகவராக—ஏஜெண்டாக—நியமிக்கப்பட்டார். 1972 டிசம்பரில் நெல்

பிற்பகல் 1.00

நம்முடைய ஜோதி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சில முக்கியமான பிரச்சினைகளை இங்கே எழுப்பினார்கள். அதிலே மிக முக்கியமாக சிறுவாணித் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் எப்படி, எப்படி ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள், ஏனென்றால் ஏற்கெனவே மிகப் பயங்கரமாக விதிகளைப் போட்டார்கள், இப்போது எவ்வாறு ஒப்பந்தம் அமைந்திருக்கிறது என்று கேட்டார்கள். சில பேர் கோயம்புத்தூர் தேர்தலுக்காக சிறுவாணித் திட்டம் வருவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 10—5—1969-இல், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் நானும் நண்பர் மதி அவர்களும் திருவனந்தபுரத்திற்குச் சென்று அங்கே திரு. ஈ. எம். எஸ். அவர்களோடு—அவர் அப்பொழுது முதலமைச்சராக இருந்தார்—பேச்சுவார்த்தைகளை நடத்தி அதன் தொடர்பாக பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கேரள மாநிலத்து அமைச்சர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று, 19—8—1973-இல் இரு அரசுகளுக்கிடையே நல்ல ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்கள் என்ன என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(1) கோயம்புத்தூர் நகராட்சி நகருக்கும் அதனை அடுத்துள்ள பகுதிகளுக்கும் தேவைப்படும் குடிநீரினை வழங்குவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சிறுவாணித் திட்டத்திலிருந்து 1,300 மில்லியன் கன அடிக்கு மேற்படாத நீர் (சராசரியாக அன்றாடம் வழங்கப்படும் நீர் அளவு 223 இலட்சம் காலன்) திருப்பிவிடப்படும். இதில் வீடு, சமுதாயம், தொழிற்சாலை தேவைகளுக்கு நீர் வழங்கப்படுவது அடங்கும், ஆனால், பாசனத்திற்கு நீர் வழங்கப்படுவது அடங்காது.

(2) இந்த அணை, தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசால் கேரளப் பகுதிக்குள்ளேயே கட்டப்பட்டு பேணிவரப்படும்.

(3) நீர்த் தேக்க நீரை முறைப்படுத்தி வழங்கும் வகையில் இவ்விரண்டு அரசுகளையும் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட கூட்டுக் கட்டுப்பாட்டுக் குழு ஒன்று செயல்படும்.

(4) இந்த அணையை ஏறத்தாழ நான்காண்டு கால அளவில் முடிப்பதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள கேரள அரசு ஒப்புக்கொள்கிறது.

(5) இந்த ஒப்பந்தம் 99 ஆண்டுக் காலத்திற்கு முழுமையாகச் செயலில் இருந்து வரும். இது தமிழ்நாடு அரசின் விருப்பத்தின் பேரில், இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் புதுப்பிக்கப் படத்தக்கதாகும்.



(6) இவ்விரு தரப்புகளுக்குமிடையே எச்சமயத்திலும் தோன்றக் கூடிய ஒரு தகராறு, ஐயப்பாடு, கருத்து வேற்றுமை, அல்லது பிரச்சினைகள் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்படும்.

இப்படி நல்ல முறையிலே இரண்டு அரசுகளுக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் சுமுகமான முறையிலே இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால், திரு. அச்சுத மேனனும், நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும் கோயம்புத்தூரிலே சிறப்பு விழாவிற்குச் சென்றபொழுது சிறுவாணித் திட்ட விழாவில், மக்கள் பாராட்டைப் பெற்று நடைபெறுகின்ற அந்த விழாவில் கேரளமும் தமிழ்நாடும் பக்கத்திலே பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையிலே கேரளத்திற்கு ஒரு ஆண்டிற்கு 15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருப்பதாக—பேரம் அல்ல—சொன்னேன்.

திரு. அச்சுத மேனன் பேசுகின்ற நேரத்திலே தமிழகத்திலே மின்சாரப் பற்றுக்குறை வருகிறபோது மின்சாரம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். குடியரசு நாள் விழா கூட கொண்டாட முடியாத நிலையில் உள்ள குஜராத்திற்கு உணவு வழங்கினோம், கர்நாடகத்திற்கு உணவு வழங்கினோம், மராட்டியத்திற்கு உணவு வழங்கினோம், மேற்கு வங்கத்திற்கு உணவு வழங்கினோம், பல்வேறு மாநிலங்களுக்கு உணவு வழங்கி வருகிறோம். அப்படி வழங்கிக்கொண்டிருக்கும்பொழுதே இடையிலே ஒரு உத்திரவு வந்தது; எங்களைக் கேட்காமலேயே மத்திய அரசின் வாயிலாக அல்லாமல் மாநிலங்கள் அவர்களுக்குள்ளே உணவு வழங்குவதைப்பற்றி மத்திய அரசிடமிருந்து கட்டளை வந்தது. அவற்றையெல்லாம் சொன்னால் மாநில சுயாட்சி வாதம் ஆரம்பமாகிவிடும். நம்முடைய பெரியவர் திரு மணலி அவர்கள் அதற்காக இரண்டு, மூன்று நாட்கள் தனியாக ஒதுக்கி விவாதிக்கலாம் என்றார்கள், ஆகவே அதை....

திரு மதி த. ந. அனந்தநாயகி : மற்ற மாநிலங்களுக்கு உணவு கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். உணவு வழங்குகிற முறையிலே அரசாங்கமே நெல்லை ப்ரக்யூர் செய்கிறார்களா? அல்லது தனி வியாபாரிகள் இங்கே வந்து கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எப்.சி.ஐ. மூலமாகத்தான் வழங்கப்படுகிறது.

திரு. கே. டி. கே தங்கமணி : மத்திய அரசு அந்தத் தடையை நீக்கி விட்டதாகச் சொல்லப்படுகிறதே, அப்படி பத்திரிகைகளிலேயெல்லாம் வந்ததே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தத் தடை நீங்கியதாகத் தெரியவில்லை. அம்மையார் அவர்கள் மாநில அரசுகளுக்கு உணவு வழங்குவதைப் பாராட்டுகிறேன் என்று சொன்னார்கள். அதோடு அடுத்த

மூட்டைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறினார். பிறகு, அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெய்வசிகாமணி என்பவர் கடிதம் எழுதினார். உடனடியாக அதைக் கலெக்டருக்கு அனுப்பி விசாரிக்கச் சொன்னேன். 1973 சனவரி மாதம், அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெரிய வந்தது. பிறகு மார்ச் திங்களில் கோட்டாட்சித் தலைவர்—ஆர்.டி.ஓ.—விசாரணை செய்தார். பிறகு மே மாதம் 2-ம் தேதி தாலுக்கா சப்ளை அதிகாரி காந்தராஜ் சஸ்பெண்டு செய்யப்பட்டார். தாசில்தார் அஜீஸ் கான் மே மாதம் 6-ஆம் தேதி சஸ்பெண்ட் செய்யப் பட்டார். ஜூன் மாதம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக் கையின் பேரில் உணவுத் துறைக்கும், காவல் துறைக்கும், விசாரணை செய்ய ஒப்படைக்கப்பட்டது. ஜூலை மாதத்தில், வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் அரசுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகையை ஏன் வசூல் செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஷேக் ராவுத்தருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. பிறகு ஆகஸ்டு மாதம் ஷேக் ராவுத்தர் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் வெளியே வந்தார். அதே ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி அவர் மேல் சிவில், கிரிமினல் நட வடிக்கை எடுப்பதை உயர்நீதி மன்றம் தடை செய்தது. அப்படித் தடை உத்தரவு வந்த பிறகும் வாளாவிருக்கவில்லை.

17—8—1973 அன்று ஷேக் ராவுத்தரிடமிருந்து பாக்கி வசூல் செய்வதை உயர்நீதி மன்றம் தற்காலிகமாக தடை செய்துவிட்டபடியால், மேற்படி ஷேக் ராவுத்தரின் தாவர, ஜங்கம சொத்துக்களை "கிரிமினல் லா-அமெண்ட்மெண்ட்-ஆர்டினன்ஸ்" ஆக்டின்படி ஜப்தி செய்ய அனுமதி கோரி மாவட்ட நீதி மன்றத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை மனு செய்துகொள்ளும்படி அரசு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டிருக் கிறது. ஆகவே, இது தொடர்பாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கம்பத்தில் ஏதோ போலீசார் கள்ள நோட்டைப் பிடிக்கும் விவ காரத்தில் கேரள அரசோடு ஒத்துழைக்கவில்லை என்பதாக "மலையாள மனோரமா" என்ற பத்திரிகையில் தகவல் வந்ததாக கம்பம் கோபால் அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இதிலே உள்ள விசித்திரம் என்னவென்றால், கம்பத்திலேயிருந்த போலீசார் தீவிரமாக ஒத்துழைத் தார்கள் என்பதுதான் உண்மை. 1—12—1973-ஆம் தேதியன்று கேரள போலீசை சேர்ந்த அதிகாரிகள் இந்த கள்ளநோட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சில நபர்களைப் பிடிப்பதற்காக கம்பத்திற்கு வந்திருந்தார்கள். அது சமயம் தமிழ்நாட்டு போலீசார்—அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்த தகவலின் பேரில் இந்தக் கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர் களையும், அச்சடிக்கப்பட்ட செந்தாமரை அச்சகத்தையும் கண்காணித்து வந்தார்கள். போலீசிலே ஒற்றர் முறை என்று உண்டு. சிலரோடு அணுகியே ஆராய்வார்கள். இப்படி அணுகியிருந்த நேரத்தில் இவர் களையும் குற்றவாளிகள் என எண்ணிவிட்டார்கள். இது இவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. 1-ஆம் தேதி கைது செய்ய வேண்டுமென்று வந்தார்கள். நமது போலீசார் 6-ஆம் தேதி குற்றவாளிகளைக் கண்டு பிடித்து கைது செய்து, அச்சு இயந்திரத்தைக் கைப்பற்றி வழக்கு



பதிவு செய்யப்பட்டது. எனவே, 6-ஆம் தேதி கேரள போலீசார் வந்தார்கள். 6-ஆம் தேதி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பத்திரிகையில் இப்படிப்பட்ட ஒரு செய்தி வந்து, அதில் இங்கேயுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒரு செய்தி திரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

முழுக்க முழுக்க, வழக்கிலே சம்பந்தப்பட்ட அனைவரும் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களெல்லாம் கேரள மாநிலத் தைச் சேர்ந்தவர்கள். விஸ்தாரமாக, பெரிய திட்டம் கேரளாவிலேதான் போடப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஏற்கனவே கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு, தண்டனை பெற்று அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் அப்பீலில் இருக்கும்போது அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விரோதிகள் மறுபடியும் கள்ள நோட்டு அச்சடிக்கச் சதி செய்திருக்கிறார்கள். தண்டித்தால் ஒரே தண்டனையாக வரட்டும் என்று எண்ணமோ என்னவோ தெரியவில்லை. அதற்குத் தேவையான அச்சு இயந்திரம் மற்றும் உப கரணங்களை கேரளத்தில் இருந்து கொண்டு வந்து மறுபடியும் அச்சடித் திருக்கிறார்கள். இந்தச் சதி நடந்த விரிவான ஏற்பாடுகளைப் பற்றி மேற்கண்ட பத்திரிகையோ, துண்டுப் பிரசுரமோ குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேரளத்தி லேயும், தமிழ்நாட்டிலேயுள்ள சில பத்திரிகைகளைப்போல் ஒரு பத்திரிகை இருப்பதற்காக வருந்துகிறேன். ஒருவேளை அந்தப் பத்திரிகைக்குத் தவ றான தகவல் கொடுக்கப்பட்டிருக்குமேயானால் "மலையாள மனோரமா" என்ற அந்தப் பத்திரிகை தன் தவறைத் திருத்திக்கொள்ளும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, திரு. எட்மண்ட் அவர்கள் நெல்லையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்காக வாங்கப்பட்ட நிலத்தைப்பற்றிக் கூறினார் கள். அன்றைக்கே நான் சொன்னேன். 3 எக்கர் 3 இலட்சம் என்று சொல்லிவிட்டு விடக்கூடாது என்று. எக்கர் என்றால் எவ்வளவு, அதற்கு எத்தனை கிரவுண்டுகள், எத்தனை செண்டு என்ற அந்தக் கணக்கைப் பார்க் காமல் 3 எக்கர் 3 இலட்சம் என்று சொல்வது நல்லது அல்ல. அப்படி அந்த இடத்திலே வாங்கப்பட்டது என்றால், அது எவ்வளவு மையமான இடம், பக்கத்து நிலத்தின் விலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், ஒரு எக்கர் நிலம் 10,000 ரூபாய்க்கு மேல் விலை போகாது, ஆக 30,000 ரூபாய்க்கு வாங்கக் கூடிய நிலத்தை 3 லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு பாளையங்கோட்டை நகரில் டி. எஸ். எண். 723/1எ, 723/2, 724/1, ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 3 எக்கர் 39 செண்ட் நிலத்தை கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்தின் அலுவலகம் கட்டுவதற்கும், பணிமனை கட்டுவதற்கும், வாங்க உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிலத்தினுடைய மதிப்பைத் தெரிவிக்குமாறு கடிதம் எழுதப்பட்டது. 724/1 சர்வே எண்ணில் ஒரு கட்டிடம் உள்ளது என்பதையும் நம்முடைய எட்மண்ட்

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பாளையங்கோட்டை, இளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்குப் பிற்பாடு மாணவர்கள் கிளர்ச்சியின் காரணமாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைப் புனர் பரிசீலனை செய்து வாபஸ் வாங்க இந்த அரசாங்கம் முற்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, repatriates from Burma and Ceylon are without any help and what steps the Government have taken to render assistance to them. This is a very important issue and I would like to have some sort of explanation from the Hon. Chief Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கருத்துக்கும் முதலமைச்சரிடத்தில் விளக்கம் கேட்கக் கூடாது.

(திரு. முனு ஆதி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: Sir, it is not usual to press the amendment. So I am not pressing it.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. கே.டி.கே. தங்கமணி: இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஒரே திருத்தமாக என்னுடைய பெயரிலே இருக்கின்றன. நான் மூன்றாவது பக்கத்தில் இருக்கக்கூடிய திருத்தம் 13-ஐ மாத்திரம் வற்புறுத்த விரும்புகிறேன்.

'the spiralling prices and mal-administration of essential commodities like chemical fertilisers, cement, sugar, yarn, etc.'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தம் ஒரே திருத்தந்தான். திருத்தத்திற்கு அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியாது. முழுமையாக வற்புறுத்துகிறீர்களா ? திரும்பப் பெறுகிறீர்களா ? ஒரு பகுதியை மட்டும் வற்புறுத்துகிறேன் என்று சொல்ல முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் திருத்தங்களைத் தனித்தனியாகத்தான் கொடுத்தேன். எப்படியோ எல்லாவற்றையும் ஒன்றாக "கிளப்" பண்ணியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இந்தத் திருத்தத்தை நான் வற்புறுத்த விரும்புகிறேன். அது கஷ்டமாக இருக்குமென்றால் இருக்கட்டும் அப்படியே வற்புறுத்துகிறேன்.



திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருமதி த. ந. அனந்தநாயகி: விலையேற்றம் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கிறது. உணவுப் பிரச்சினைப் பற்றிப் முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. விலையைக் குறைக்கப் போகிறாரா இல்லையா, விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப் போகிறாரா இல்லையா என்று தெரியவில்லை. ஆகவே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதைப் பற்றிப் பிரதமரைக் கலந்து கொண்டு சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தை வற்புறுத்துகிறார்களா இல்லையா என்று மட்டுந்தான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணத்தை எல்லாம் இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

திருமதி அனந்தநாயகி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. ஆ. கு. சுப்பையாவின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதலமைச்சருடைய சமாதானம் சரியாக இல்லையென்ற காரணத்தால் நான் என்னுடைய ஏழு திருத்தங்களையும் வலியுறுத்துகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. சோ. அழகர்சாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. என். கே. பழனிசாமி: நான் 1, 2, 3 திருத்தங்களை வற்புறுத்துகிறேன்.

திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—
"1974-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–28 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## (4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

67. Notification issued with G.O. Ms. No. 390, Excise and Prohibition, dated the 29th November 1973, in regard to an amendment to the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

68. Notification issued with G.O. Ms. No. 1917, Agriculture, dated the 27th August 1973, in regard to regulation of trade over the purchase and sale of chillies in Coimbatore district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

69. Notification issued with G.O. Ps. No. 6598, Revenue, dated the 31st October 1973, in regard to exemption from sales-tax on the sales of pulses, grams, groundnut oil, gingelly oil, coconut oil and sunflower oil. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

70. Notification issued with G.O. Ms. No. 1410, Rural Development and Local Administration, dated the 18th July 1973, in regard to an amendment to the Tamil Nadu Public Building (Licensing) Rules, 1966. [Laid on the table of the House under section 25 (4) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 (Tamil Nadu Act 13 of 1965).]

71. Notification issued with G.O. Ms. 1730, Home, dated the 27th June 1973, in regard to certain amendments to rule 268 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



72. Notification issued with G.O. Ms. No. 1246, Rural Development and Local Administration, dated the 27th June 1973, in regard to certain amendments to the Tamil Nadu Panchayats (Conduct of 'Election of President of Village Panchayats') Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 20. The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 (L.A. Bill No. 3 of 1974) with Annexure.

@ 21. The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 (L.A. Bill No. 4 of 1974) with Annexure.

@ 22. Draft amendments to the rules issued under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) and the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).

---

@ Despatched to Members on 24—1—1974.

அவர்கள் மறந்துவிட்டு ஒரு தவறான தகவலைக் கூறினார்கள். இவ்வளவு சம்பிரதாயங்களுக்குப் பிறகு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வெறும் நிலம் மட்டுமல்ல, ஒரு கட்டிடமும் இருக்கிறது. அந்தக் கட்டிடத்திற்குப் பொதுப்பணித்துறையின் மதிப்பீடு 50,000 ரூபாய். விற்பவர்கள் இலட்சம் ரூபாய்க்கூடச் சொன்னார்கள், ஆனால் பொதுப் பணித்துறையின் மதிப்பீடு 50,000 ரூபாய். ஆனால் பக்கத்தில் உள்ள நிலம் 64-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலம். யாரும் தனிப்பட்டவர்கள் அல்ல, ஒரு சர்ச். Indian Evangelical Luthern Church Trust Association என்கின்ற அசோசியேஷன் 1964-ஆம் ஆண்டு, 7—11—1964-இல், இப்பொழுது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வாங்கப்பட்டிருக்கும் நிலத்திற்கு அருகில், 742/1-பி, 742/3-ஏ ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 25 செண்ட் நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் வாங்கியுள்ள நிலத்திற்கும், அந்த நிலத்திற்கும் இடையிலே உள்ள தூரம் 12 அடி தான். என்ன விலை தெரியுமா? அவர்களுக்கு முதலிலே ஒரு கிரவுண்ட் என்றால், என்ன கணக்கு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 5½ செண்ட் கொண்டது ஒரு கிரவுண்டு. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு நாம் கொடுத்துள்ள விலை 5½ செண்ட் கொண்ட ஒரு கிரவுண்டுக்கு 4,031·50 காசு ஒரு கிரவுண்டுக்கு. மாதாகோவில் டிரஸ்ட், 1964-ம் ஆண்டில் 5,500 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த சர்வே எண்களில் 723/1-ஏ, 1 ஏக்கர் 30 செண்ட் இருபோக நஞ்சை நிலம், சர்வே எண் 723/2 நிலம் 41 செண்ட் புஞ்சை, சர்வே எண் 724/1 நிலம் 1 ஏக்கர் 68 செண்ட் புஞ்சை நிலம். ஆகவே, 3 ஏக்கர் 39 செண்ட் நிலம், வெறும் 3 ஏக்கர் மட்டுமல்ல, 3 ஏக்கர் 39 செண்ட், 50,000 ரூபாய் பெறுமானமுள்ளது என்று பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டிடம் இவைகளைச் சேர்த்துதான், ஏற்கனவே 5,500 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ள இடத்திற்கு 12 அடி தொலைவில்தான் வாங்கப்பட்டுள்ளது, நகரின் மையமான இடத்தில். பக்கத்தில் ஒரு வீட்டுக்காரர், பத்திரிகைக்காரர் அங்கு பத்திரிகை நடத்திக்கொண்டிருப்பவர், திருநெல்வேலி பத்திரிகைக்காரர், தினமலர் பத்திரிகைக்காரர்—அவர் இந்த இடத்தை இங்கே வாங்கிவிட்டால் தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் படிப்பட்ட ஒரு செய்தி கர்த்தாவாக இருந்து வருகிறார் என்பதால் 3 இலட்சம் 3 ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. 1964-லே ஒரு கிரவுண்டு 5,500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட இடத்திற்கு அருகில் 4,031 ரூபாய் 50 காசு என்ற கிரயத்தைக் கொடுத்துத்தான் வாங்கப்பட்டிருக்கிறது. எனவே இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காயாமொழி என்ற இடத்தில் நஞ்சை வயலே கிடையாது, அங்கு கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். காயாமொழி என்ற இடத்தில் 222 ஏக்கர் நஞ்சை நிலம் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒருவேளை அது சரியாக இல்லாவிட்டால் நான் திருநெல்வேலிக்கு வரும் நேரத்தில், எட்மண்ட் அவர்கள்—பயப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன், நாங்கள் வலை வீசுவதாகக் கருதமாட்டார்கள்



என்று கருதுகிறேன்—அந்த வகையில் அவர்களோடு போய் நிலைமையைத் தெரிந்துகொள்ள நிச்சயமாக நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிம்சனைப் பற்றி திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக் கூறினார்கள். சிம்சன் விவகாரத்தில் 45 நாட்களில் விசாரணை முடிய வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தும்கூட 160 விசாரணைக்கு மேல் நடைபெற்றதாலும், 600-க்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டதாலும் நாள் கடந்து விட்டது.

இப்போது அவர்களும் விசாரணைகளை எல்லாம் முடித்து விட்டார்கள். முதலமைச்சருக்கு விரைவில் அந்த விசாரணையினுடைய விவரங்களை அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது அனுப்பப்பட்டதும் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கப்படும் என்ற உறுதியினை நான் இங்கே இந்த விவகாரத்தை எடுத்துச் சொன்ன மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் எடுத்துச் சொல்லி, இந்த விவாதத்தில் பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன அனைவருக்கும் மனதார நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன். வணக்கம். (ஆரவாரம்).

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் சிம்சன் தொழிலாளர்கள் தலைவர்கள் வந்து பார்த்த போது 45 நாட்களுக்குள்ளாக முடித்துவிடுகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்களும் அதை நம்பினார்கள். 45 நாட்களுக்குள்ளாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கால தாமதம் எதனால் ஏற்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொன்னேன், நீங்கள் கவனிக்கவில்லை. 160 விசாரணைகள் நடந்திருக்கின்றன. 600 சாட்சிகளை விசாரிக்க தாமதம் ஏற்பட்டது. இப்போது முடித்துவிட்டார்கள், எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சொன்னார்கள். வந்ததும் தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. முனு ஆதி : நான் சொன்னவை மீது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதுபற்றி இப்போது சொல்லப்படுமா, பின்னால் சொல்லப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆதி அவர்கள் திருமுடிவாக்கத்தில் ஒருவருக்கு ஃபைன் போடப்பட்டது பற்றிச் சொன்னார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஒரு பெண்ணை பலாத்காரம் செய்தார் என்ற காரணத்தால் ஊர் மக்களே பஞ்சாயத்தில் கூடி அபராதம் போடப்பட்டதாகவும், அவரும் கட்டிவிட்டார் என்றும் தகவல் வந்திருக்கிறது. மேலும் விசாரித்துச் சொல்லுகிறேன்.

## இணைப்பு

[302-ம் பக்கத்தில் 201-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### தென் மண்டலத்திற்கான விற்பனை வரி மாநில ஆயத்தீர்வைகள் தொடர்பான மண்டலக் குழுக் கூட்டம் பற்றியதோர் குறிப்பு.

1973-ஆம் ஆண்டு மே திங்கள் 18, 19 ஆகிய நாட்களில் தென் மண்டலத்திற்கான விற்பனை வரி மாநில ஆயத்தீர்வைகள் தொடர்பான மண்டலக் குழுவின் ஐந்தாவது கூட்டம் சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் சார்பில், (வணிகவரி ஆணையாளர்,) ஆயத்தீர்வை-மதுவிலக்கு ஆணையாளர், ஆயத்தீர்வை-மதுவிலக்குத் துறை சிறப்புச் செயலாளர், வருவாய்த்துறை அரசுக் கூட்டுச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

I

விற்பனை வரி.—தமிழ்நாடு அரசின் சார்பில் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கியமான கருத்துரைகளும் அவற்றையொட்டிய பரிவுரைகளும் வருமாறு—

(i) மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படுவதும், இறுதியாக மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுவதுமான (பாறை எண்ணெய்) பெட்ரோலுக்கு மாநிலங்கள் 3 சதவீத விற்பனைவரி விதிக்க இயலும் வகையில், பெட்ரோலியம் பொருட்களின் விலையைத் திருத்தியமைப்பது குறித்த பிரச்சினையை விவாதிக்க இந்திய அரசு அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டமொன்று கூட்டப்பட வேண்டும். எண்ணெய் நிறுவனங்கள் மாநிலத்திற்குள்ளே வாங்கி பின்னர் மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யும் பெட்ரோலுக்கு அவை செலுத்தும் விற்பனை வரியை ஈடு செய்வதற்காக இந்த மாநிலத்திற்குள்ளே பெட்ரோல் பயன்படுத்துவோர் மீது நியாயமற்ற முறையில் இந்திய அரசு சர்சார்ஜ் விதிப்பது குறித்தும் அக்கூட்டத்தில் விவாதிக்கலாம். (இதுபற்றி இந்திய அரசிற்கு எழுத வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.)

(ii) விற்பனை வரிப் புள்ளி விவரம் திரட்டுதல்—வெளியிடுதல் பணியைச் செய்முறைப் பொருளாதார ஆராய்ச்சி தேசிய கழகத்திடம் ஒப்படைக்கும் திட்டத்தின் பயன் குறித்து மீண்டும் மதிப்பீடு செய்யலாம் (தற்போதைக்கு இத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதென்றும் இதற்குரிய நடைமுறைச் சீர்திருத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது).

(iii) மாநிலங்களுக்கிடையே உள்ள சோதனைச் சாவடிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க மத்திய விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துமாறு [illegible] கேட்டுக் கொள்ளப்படலாம். (இது ஏற்றுக் கொள்ளப்பட்டது),





(iv) தொழில் தொடங்கக் கருதியுள்ள தயாரிப்பாளர்கள் பதிவு செய்துகொண்டு, வரிச் சலுகையுடன் இயந்திரங்களையும் சாதனங்களையும் பெறுவதை அனுமதிப்பதற்காக, மத்திய விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்படலாம் (இது ஏற்றுக் கொள்ளப்பட்டது).

2. குழு கீழ்க்கண்ட பரிவுரைகளையும் செய்தது—

(i) விற்பனை வரி நடுவர் நீதிமன்றங்கள் தொடர்பாக (இந்திய அரசு) நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ள கருத்துரைகளை மாநில அரசுகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

(ii) மத்திய விற்பனை வரி (பதிவு-மொத்த வியாபாரத் தொகை) விதிகளைச் செயல்படுத்துவதால் வணிகர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக மாநில அரசுகளின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.

(iii) மாநிலங்களுக்கிடையிலான வணிகத்தில், உற்பத்தியாளர்களிடம் பெரிய அளவில் புழங்கும் குறிப்பிடத்தக்க வேளாண்மை விளைபொருள்கள் எவை எவை, வேளாண்மை என்பது குறித்தும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் "வணிகர்" என்னும் பொருள் விளக்கத்தில் எந்த விளைபொருளைச் சேர்த்துக்கொள்வது என்பது பற்றியும் மாநில அரசுகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

(iv) மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வணிகங்கள் முறையாகவும் சரியாகவும் நடைபெறுகின்றனவா என்பதைத் திறமையான வகையில் சரிபார்ப்பதற்காக மாநிலங்களுக்கிடையிலான புலனாய்வு குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

(v) ஊக்க வகையில் வாணிபம் செழிப்பதற்காக அளிக்கின்ற இறக்குமதி உரிமங்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

II

ஆயத்தீர்வை குறித்தவை.—முக்கிய இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய இனங்கள் குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை :—

(i) 1965-ஆம் ஆண்டு மருத்துவ—குளியலறைச் சாதனங்கள் (ஆயத்தீர்வைகள் சட்டம்—இறுதி வடிவில் சாராயம் (ஆல்கஹால்) கொண்டிராத தயாரிப்புகள் மீது ஆயத்தீர்வை—சட்டத்தின் 2(சி) பகுதியில் "தீர்வை விதிக்கப்படத்தக்க பொருட்கள்" என்ற சொற்றொடரில் திருத்தம் செய்தல்.

இது குறித்து மாநில அரசுகள் பரிசீலனை செய்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்திய அரசு மாநில அரசுகளுக்குத் தாக்கீதுகள் அனுப்ப வேண்டுமென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(xi) 1963-ஆம் ஆண்டு மருத்துவ—குளியலறைச் சாதனங்கள் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட 19, 21, 26, 27, 28, 30, 31, 37, 38, 49, 50, 51 ஆகிய விதிகளில் திருத்தம் செய்தல்.

ஆயத்தீர்வை ஆணையாளர்கள் குழுவொன்று திருத்தங்களின் தேவை குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டு அதன் பின்னர் பரிவுரைகளைப் பணித்தனுப்பலாம் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

*A note on the meeting of the Regional Council for Sales Tax and State Excise duties for the Southern Zone.*

The fifth meeting of the Regional Council for Sales Tax and State Excise Duties for the Southern Zone was held at Madras on the 18th and 19th May 1973. The Government of Tamil Nadu was represented by the Commissioner of Commercial Taxes, Commissioner of Excise and Prohibition and Special Secretary to Government, Excise and Prohibition Department and Additional Secretary to Government, Revenue Department.

I

SALES TAX.

The important proposals made on behalf of the Government of Tamil Nadu and the recommendations thereon were as follows :—

(i) A meeting of the officials of the Government of India and the concerned State Governments should be convened to discuss the question of the revision of price of petroleum products so that the States would be enabled to levy sales tax at 3 per cent on the quantity of oil sold within the State and ultimately exported outside the State. Such a meeting could also discuss the inequity in the levy of a surcharge by the Government of



India on the consumers within the State to compensate the oil companies for the sales tax borne by them on the quantity purchased by them within the State and exported outside the State. (It was resolved to move the Government of India in the matter.)

(ii) The utility of the scheme of entrustment to the National Council of Applied Economic Research of the work of collection and dissemination of sales tax data may be re-assessed. (It was resolved to continue the scheme for the present and rationalise the procedure.)

(iii) Government of India may be requested to amend the Central Sales Tax Act to permit intending manufacturers to get checkposts. (This was agreed to.)

(iv) Government of India may be requested to amend the Central Sales Tax Act to permit intending manufacturers to get themselves registered and to obtain machineries and equipments at the concessional rate of tax. (This was agreed to.)

2. The Council also made the following recommendations :—

(i) The suggestions made by the Administrative Reforms Commission (Government of India) on Sales Tax Tribunals should be examined by the State Governments.

(ii) A Committee should be constituted of officers of the State Governments to examine the difficulties faced by the Trade in the implementation of the Central Sales Tax (Registration and Turnover) Rules.

(iii) The States should examine as to what specific items of agricultural produce enter in a big way in inter-State trade at the hands of producers and which could be considered for inclusive in the definition of 'dealer' under the Central Sales Tax Act.

(iv) An Inter-State Investigation Cell should be created in the State for effectively checking the genuineness and correctness of inter-State transactions.

(v) The Ministry of Foreign Trade, Government of India should take action to prevent misuse of import permits issued by way of trade incentives.

All the State except Pondicherry were in favour of uniformity. The Pondicherry representatives were opposed to the idea of uniformity in the rates of excise duty. The Council decided that the Central Government should persuade Pondicherry Government to fall in line with the other States in the matter.

(xi) *Amendment to rules* 19, 21, 26, 27, 28, 30, 31, 37, 38, 49, 50 *and* 51 *of the rules framed under the Medicinal and Toilet Preparations* (*Excise Duties*) *Act*, 1963.

It was agreed that a Committee of Excise Commissioners could study in detail the need for the amendments and then submit recommendations.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

செவ்வாய்க் கிழமை, 1974 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்

### *Home Guards.*

* 211 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR : **Will the** Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any review of the working of the Home Guards has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*212.வினு—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

ஊர்க்காவல் படையில் தற்போது பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :—531 பெண்கள்.

திரு ஆ. [illegible]தாமன் : தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை கிராமப் புறங்களில் இன்னும் அதிகமான அளவுக்குச் செயல்படவில்லை. அதைச் செயல்படுத்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா? இந்த அறிக்கையில், டெபுடி சூபரின்டெண்ட் ஆப் போலிஸ் (ஆர்ம்டு ரிசர்வ்)க்கு ஆகும் செலவில் 50 சத வீதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற பரிந்துரை காணப்படுகிறது. அதைப்பற்றி நமது அரசு முடிவு செய்திருக்கிறதா? இது குறித்து மத்திய அரசைக் கேட்டிருக்கிறதா?

---

@ 506–507-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(ii) மருத்துவ—குளியலறைச் சாதனங்கள் (ஆயத்தீர்வைகள்) சட்டமும் விதிகளும்—தீர்வை விதிக்கப்படத்தக்க பொருட்களைப் புட்டியிலடைத்தல், சிப்பம் கட்டுதல், அவற்றின் மீது பெயர்ச் சீட்டுகள் ஒட்டுதல்—2(எப்) பிரிவில் கண்டுள்ள "தயாரிப்பாளர்" என்னும் சொல்லை 1944-ஆம் ஆண்டு மத்திய ஆயத்தீர்வை—உப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கு ஏற்றதாகச் செய்யும் வகையில் அச்சொல்லுக்குத் திருத்தம் கொண்டு வருதல்.

மாநிலங்களிடையே குறிப்பிடத்தக்க அளவில் அதிகமான போக்குவரத்து இல்லாதபோதும் விதிகளில், "சரியான எதிர்மாற்று" நடைமுறைகளைக் கொண்டு வரலாம்.

(iii) 1956-ஆம் ஆண்டு மருத்துவ குளியலறைத் தயாரிப்பு (ஆயத்தீர்வைகள்) விதிகள்—68-ஆம் விதியின் கீழ் நிலைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

நிலைக் குழுக் கூட்டங்களில் இருக்க வேண்டிய நிர்வாகக் குறைவெண்ணை வரையறை செய்து அதற்கேற்ற விதியைத் திருத்துவதன் மூலம் இயன்றவிடங்களிலெல்லாம் ஒரே தரத்திலுள்ள உறுப்பினர் ஒருவருக்கு மேல் நியமனம் செய்யப்படலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. பற்றுள்ள நபர்கள் சொல்வதைக் குழு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்திய அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் இது குறித்து பரிசீலனை செய்யும்.

(iv) நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருக்கும் ஒருங்கிணைந்த மத்திய ஆயத்தீர்வைச் சட்டவரைவின் அடிப்படையில் மருத்துவ குளியலறைச் சாதனங்கள் (ஆயத் தீர்வைகள்) சட்டத்திலும் விதிகளிலும் மாற்றம் ஏதேனும் செய்ய வேண்டுமா என்பது—மத்திய ஆயத்தீர்வை—உப்புச் சட்டத்தில் உள்ளதைப் போன்ற மருத்துவ—குளியலறைச் சாதனங்கள் (ஆயத் தீர்வைகள்) சட்டத்திலும் "மறு ஆய்வு" அதிகாரங்களை எடுத்துக்கொள்ளலாமா என்பது.

மேற்படி சட்டம், விதிகள் ஆகியவை தொடர்பான ஒருங்கிணைந்த மறு ஆய்வு மேற்கொள்ளப்படும் வரையில் இதை ஒத்தி வைக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(v) 'மதிப்பு' என்ற பொருள் விளக்கத்தைத் தனியே பரிசீலிக்க வேண்டுமா என்பதும் அக்காரியத்திற்காக சட்டத்தின் விவர அட்டவணையைச் சேர்ந்த II-வது விளக்கத்தைத் திருத்துவதும்.

இந்திய மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு இவ்விஷயத்தை அவருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் [illegible] அரசுகள் மேற்கொண்டு இதைப் பரிசீலிக்க வேண்டுமென்பதும் [illegible]கொள்ளப்பட்டது.



(vi) மருத்துவர்கள மருத்துவ மனைகள், வியாபாரிகள் ஆகியோருக்கு விநியோகம் செய்யப்படும் மாதிரிகளுக்குத் தீர்வையிலிருந்து விலக்களிக்கும் திட்டம்.

மண்டலக் குழு இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

(vii) மருத்துவ—குளியலறைச் சாதனங்கள் (ஆயத் தீர்வைகள்) சட்டத்தின் விவர அட்டவணையில் கண்டுள்ள தூய்மைப்படுத்தப்பட்ட சாராவி மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை வீதங்களைக் குறிப்பிடுதலும் 21-வது பிரிவில் திருத்தம் செய்தலும்.

விதியில் திருத்தம் எதுவும் செய்யத் தேவையில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(viii) கூடுதலான சாராயக் (ஆல்கஹால்) கழிவுப் பொருள் மீது தீர்வை வசூலித்தல். 38 (i) விதியில் திருத்தம் செய்ததால் ஏற்பட்டுள்ள தொல்லைகள்.

மாநில அரசுகளும் இந்திய அரசும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ix) கட்டுப்பாடு விதிக்கப்படாத தயாரிப்புகள் தடைக்கட்டிலிருந்து வெளிக் கொணரப்படும் சமயத்திலேயே குறிப்பிட்ட தீர்வை செலுத்தப்பட்டால் அவை தொடர்பான போக்குவரத்து, ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றிற்கு இலவச அனுமதி வழங்க வேண்டும். கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள தயாரிப்புகளின் நேர்வில், மாநிலங்களுக்குள்ளேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பப்படுதல், ஏற்றுமதி இறக்குமதி செய்தல் ஆகியவை, மாநில ஆயத்தீர்வை ஆணையாளரால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரியொருவரால் வழங்கப்படும் உரிமத்தைப் பெற்றே செய்யப்பட வேண்டும்.

இவ் விஷயத்தை மேற்கொண்டும் பரிசீலிக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(x) தென் மாநிலங்களில் இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மது வகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைச் சுமை அளவுகளில் வேறுபாடுகள் இருப்பதால் கடத்தல் நடைபெறுவது.

ஒரே மாதிரியான நிலை இருக்க வேண்டுமென்பதற்கு புதுச்சேரி நீங்கலாக எல்லா மாநிலங்களும் ஆதரவு தெரிவித்தன. ஆயத்தீர்வை விதிகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற கருத்திற்கு புதுச்சேரி பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இவ் விஷயத்தில் புதுச்சேரி அரசு ஏனைய மாநிலங்களுடன் ஒத்துப் போகுமாறு செய்ய அவ்வரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று குழு தீர்மானித்தது.

பூம்புகாரில் சுற்றுலா விடுதி.

*215 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பூம்புகாரை சுற்றுலாவுக்குரிய இடமாக அறிவித்து அங்கு சுற்றுலா விடுதியொன்றை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, பூம்புகாரின் தொன்மைச் சிறப்பை விளக்கும் வகையில் பூம்புகார் அபிவிருத்திக்காக பணியாற்றும் தனி அலுவலர் பெரும் திட்டமொன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அந்தத் திட்டம் வந்தவுடன் அதற்கான அம்சங்களை அறிந்து இறுதி வடிவம் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 216, 217, 218, 219 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*A.V.M. Canal in Kanyakumari district.*

*220 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to reconstruct the A. V. M. Canal in Kanyakumari district?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :—கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா கால்வாய்க்கு (**A.V.M. Canal**) முக்கிய சீரமைப்புகள் செய்வது குறித்து (பாசனத்) தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்து வருகிறார்.

வட்டமலைக்கரை ஓடை நீரை விவசாயத்திற்குப் பயன் படுத்தல்.

*221 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வெள்ளகோவில் வட்டாரம், நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி கடையபாளையத்துக்கு பக்கத்தில், வட்டமலைக்கரை ஓடையில் விவசாயத்திற்கான ஆய்வு வேலைகள் முடிந்து விட்டனவா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 74 லட்சம் உத்தேச மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க அரசு தீர்மானித்துள்ளது. விரைவிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.



*Pavement on Salem-Dindigul road.*

* 222 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Highways Department has undertaken the widening of the pavement on the Salem-Dindigul section; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(a) Yes.

(b) Widening and strengthening of reach from Km. 206/0 to 375/0 Salem-Dindigul section of National Highways seven have been included in the annual plan for 1971–72 and eight estimates have been sanctioned by Government of India. An expenditure of Rs. 60,16,168 has been incurred on these works upto June 1973.

பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைகள்.

*223 வினா – திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கூடலூர் பொதுப்பணித்துறை பிரயாணிகள் விடுதியை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கூடலூர் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில் ரூ. 66,000 செலவில் மேலும் இரு சூட்டுகள் கட்டுவதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்து அதை தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளவியலாது என ஆணையிடப்பட்டுள்ளது.

*224 வினா – திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்ண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் தங்கும் விடுதி ஒன்று கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :—(அ) சாத்தனூர் நீர்த்தேக்கப் பகுதியில் தங்கும் விடுதி கட்டும் உத்தேசம் ஒன்றும் தற்போது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இராமங் களுக்கு இவை விரிவாக்குவதுபற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக் கிறது. இப்பொழுது உள்ள சூழ்நிலையில் விரிவாக்குவதில் பல இடர்ப் பாடுகள் நிதி • நிலையைப் பொறுத்து இருக்கின்றன. இதில் 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் மாநில அரசும் என்ற அளவில் மொத்தமாக இதற்காக ஆகும் செலவில் பகிர்ந்துகொள்ளப் படுகிறது. ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் அதற்காக ஆன செலவு ரூ. 69,56,438. இதுவரை மத்திய அரசிடமிருந்து ரூ. 22,62,172 இதற்காக வந்திருக்கிறது. 1972–73ம் ஆண்டில் இதற்கு ஆன செலவு ரூ. 11,74,377 ஆகும். வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டால், அதற்கான செலவை 50 சதவீதம் அளவில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கோரும்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, ஊர்க்காவல் படையில் பணியாற்றுகிறவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்கிறதா என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களைப் பாராட்டுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஊர்க் காவல் படையில் பெண்கள் பணியாற்றுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த எந்த மாவட்டங்களில் இப்பொழுது அதிகமாக இருக்கிறார்கள்? இப்பொழுது ஊர்க்காவல் படையினரைக் கண் காணிக்கும் பொறுப்பை அடிஷனல் சார்ஜில் விடுவதை விட அவர்களுக் கென்று பிரத்தியேகமாக ஒரு டி. எஸ். பி. போடுவது நல்லதல்லவா? அப்படிச் செய்வதானால் எந்த அளவுக்குச் செலவு அதிகமாகும் என்று அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது சென்னையில் மாத்திரம் காவல் துறை, கூடுதல் டெபுடி சூபரின்டென்ட் பதவியொன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் இந்த பெண்கள் ஊர்க் காவல் படையினர் இருக்கிறார்கள்.

## *Salem Engineering College.*

* 213 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Salem Engineering College has been closed indefinitely in August 1973; and

(*b*) if so, the details thereof ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) ஆம்.

(இ) இரண்டு முதுநிலை வகுப்பு மாணவர்கள் வேறு இரு இள நிலை வகுப்பு மாணவர்களுக்கு இடர் விளைவிக்கும் நிகழ்ச்சிகளில் ஈடு பட்டமையால் கல்லூரி முதல்வர் அவ்விரு முதுநிலை வகுப்பு மாணவர் களுக்கும் கல்லூரி மாறுவதற்குரிய சான்றிதழ்களை வழங்கினார். கல்லூரி முதல்வரின் இச்செய்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகத்தான் மாணவர் கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. போதிய அறிவுரை கூறிய பிறகும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை ஆதலால் கல்லூரி காலவரை யின்றி 20–8–1973 முதல் மூடப்பட்டது. 27–8–1973 அன்று கல்லூரி திறக்கப்பட்டு தற்போது சரிவர இயங்கிவருகிறது.

## *Law College Hostel.*

* 214 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Law College student died in the Law College Hostel at Madras about the 20th October, 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) ஆம்.

(இ) சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்த மாணவர் திரு. நாகராஜன் 19–10–1973ம் நாள் இரவு 9-15 மணியளவில் சட்டக் கல்லூரி விடுதி மாடி உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்தார்.

திரு கே. டி. கே. தங்கமணி: விழுந்து இறந்ததாகத்தான் பத்திரி கையிலும் செய்தி வந்தது. என்ன காரணம் என்று ஏதாவது விசாரிக்கப் பட்டதா? மன நோய் காரணமாக நடந்ததா? வேறு ஏதாவது காரணமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்களே, 19–10–1973 இரவு தேர்வுக்காக படிக்க அந்த மாணவர் மூன்றாவது மொட்டை மாடியில் போய்ப் படித்துக்கொண்டிருந்தார். மாடி கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்திருந்தபோது, அவரையும் அறியாமல் அயர்ந்து தூங்கிவிட்ட காரணத்தால், அங்கிருந்து கீழே விழுந்து விட்டார். கீழே விழுந்த பிறகு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு, கொண்டுசெல்லும் வழியில் அவர் இறந்தார். அவருடைய பெற்றோர் களுக்கு இந்த நிலைமை அறிவிக்கப்பட்டு, 20–10–1973 அன்று சவம் அவருடைய பெற்றோர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

கள் இறக்குவோர்களிடமிருந்து முறையீடுகள்.

*228 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கள் இறக்குவோர் பிரதிநிதிகள் தங்களது குறைகளைத் தெரிவிப்பதற்காக 1973, ஜூலைத் திங்கள் 9-ஆம் நாள் அளவில், மாண்புமிகு அமைச்சரைச் சந்தித்தனரா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் மதுவிலக்கை மீண்டும் செயலுக்குக்கொண்டு வந்துள்ளதற்கும், குறிப்பாகக் கள்ளுக் கடைகள் மூடப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து கள் இறக்குவோர் முறையீடு செய்துள்ளனர்.

(உ) கள் இறக்குவோருக்கு மறு வாழ்வு அளிப்பது குறித்து, பனை வெல்லத் தொழிலில் முன்னாள் கள் இறக்குவோரது நல்வாழ்வுக்குரிய ஏற்பாடுகளுக்காக அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது மாநிலத்தில் மதுவிலக்கு மீண்டும் அமலுக்கு வந்துவிட்டதால் பல மது இறக்கும் தொழிலாளர் களுக்கு இப்போது வேலை இல்லாமல் போய்விட்டது. அவர்களுக்கு, பொதுவாக மதுரை போன்ற இடங்களில் தென்னையிலிருந்து பதனி இறக்குவதற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே தமிழ்நாடு பூராவிலும் உள்ள மது இறக்கும் தொழிலில் ஈடு பட்டிருந்த தொழிலாளர்களுக்குப் பதனி இறக்க வசதியும், அவர்கள் கூட்டுறவு மூலம் பனைவெல்லம் உற்பத்தி செய்வதற்கான வசதியும் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? ஏற்கெனவே கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு, அந்தத் தொழிலாளர்களுக்கு இப் பேர்ப்பட்ட வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

THE HON THIRU S. J. SADIQ PASHA: Sir, the question of amelioration of the ex-toddy tappers rendered jobless consequent on the Government's decision to close down all toddy shops in the State from 1st September 1973 was examined in the Rural Development and Local Administration Department and orders have been issued by that Department in G.O. Ms. No. 2341, Rural Development and Local Administration Department, dated 30th October 1973 as follows:—

(a) It has been proposed to take ameliorative measures to rehabilitate in Palmgur Industry about 2,03,000 ex-toddy tappers rendered jobless from 1st September 1973, the scheme costing Rs. 40.60 lakhs;



(b) The Government have decided to meet up to 25 per cent of the cost and the State Government's share comes to Rs. 10.15 lakhs and out of this Rs. 1.27 lakhs will be grant and the balance will be loan to be repaid by the Tamil Nadu Khadi and Village Industries Board which has moved the Khadi and Village Industries Commission to meet the remaining amount by way of loan and grant; and the Khadi and Village Industries Commission has also agreed to bear the remaining 75 per cent of the cost of the above scheme by way of grant and loan.

(c) The Government have sanctioned the necessary initial funds by way of grant and loan.

திருமதி. ஜோதி வெங்கடாசலம்: இந்த கள் இறக்குவோர் வேலை இல்லாதிருப்பதால் அவர்களுக்கு பனை வெல்லம் உற்பத்தி செய்யும் வேலையைக் கொடுப்பதோடுகூட இந்த் போர்வீலின் ஸெராமிக் பாக்டரி களில்—இன்னும் சில ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்று நேற்று தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்— அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப் பரிசீலித்துத் தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம்: இந்தக் கள் இறக்குவோருக்குள்ள சங்கடங் களை நிவர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்குக் குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் செய்வதற்கு அரசு கடன், வட்டியில்லாக் கடன் அல்லது மானியமாகவோ அளித்து உதவி செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கம் ஏற்கெனவே 40 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது. அதற்கு அரசு 25 சதவிகிதம் மானியமும் அதேபோல் காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷனிலிருந்து 75 சதவிகிதம் போட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிச்சாமி: நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதிலளிக்கும்போது இந்த பனைவெல்லம் உற்பத்தி செய்யும் பெடரே ஷன்கள் பூராவும் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று சொன்னார்கள். அந்தப் பெடரேஷன்கள் பூராவும் கண்டபடி செலவு செய்வதால் நஷ்டத்தில் ஓடு கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஏற்கெனவே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது இஷ்டப்படி எந்த வியாபாரம் வேண்டுமானாலும் செய்யலாம் என்று. அந்த முறையில் பனை வெல்ல உற்பத்தியையும் விற்பனையையும் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்குவதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பனைவெல்ல உற்பத்தி சம்பந்தமான பிரச்சினையை தனி இலாகா கவனிக்கிறது. தனிக்கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களைத் தரலாம்.

*New strain of wheat.*

* 229 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government of India have requested this Government to conduct research to develop a suitable strain of wheat to be grown in this State ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மாநிலத்தில் கோதுமைப் பற்றுக்குறை கடுமையாக இருப்பதோடு கூட இப்போது கோதுமை உணவு மக்களுக்கு அதிகமாகத் தேவைப் படுகிறது. இந்த மாநிலத்திலும் ஜூன் அல்லது அக்டோபரில் கோதுமையில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்பதாலும் சர்க்கார் இதற்கு ஒரு புதிய திட்டத்தை ஏற்பாடு செய்து கோதுமையை அதிகப்படியாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீலகிரி மாவட்டத்தில் ஏறத்தாழ 1,100 ஏக்கரில் கோதுமை விளைகிறது.

காலநடைப் பராமரிப்புத் துறை குற்றேவலர்கள்.

*230 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

காலநடைப் பராமரிப்புத் துறையில் தற்காலிக குற்றேவலர்களாக இருந்தவர்களை நிலையான பணியாளர்களாக ஆக்கிட வேண்டி பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி இதுவரை எத்தனை பேர்கள் பயனடைந்துள்ளார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1590.

***Animal Husbandry Sub-centres in Kanyakumari district***

* 231 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total number of Animal Husbandry Sub-Centres functioning in Kanyakumari district; and

(b) whether there is any proposal to increase their number in Killiyoor Panchayat Union area?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 18.

(இ) இல்லை.



*Veterinary clinics in Kanyakumari district.*

* 232 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the total number of Veterinary Clinics functioning in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒன்று.

*First-aid centres for cattle*

* 233 Q.—Thiru K. N. KUMARASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any scheme for the establishment of first-aid centres in each block to prevent contagious cattle diseases is pending with the Government?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

*Agro-Engineering Service Societies in Tiruttani taluk.*

* 234 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Agro-Engineering Service Society has been formed in Tiruttani taluk; and

(b) if so, the functions of the Society ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம், இரண்டு.

(இ) டிராக்டர்கள், ஆயில் இன்ஜின்கள், பம்ப் செட்டுகள் இவைகளைப் பழுது பார்ப்பது முக்கியமான வேலையாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, திருத்தணி, திருவாலங்காடு ஆகிய இடங்களில் அக்ரோ இன்ஜின் சர்விஸ் சென்டர் சொஸைட்டி உருவாக்கி இருக்கிறார்கள். இன்னும் அந்தச் சங்கங்கள் செயல்படத் துவங்கவில்லை. அதற்குப் போதுமான நிதி வசதி உடனடியாக அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் இரண்டு என்று சொன்னது ஒன்று திருத்தணி, மற்றொன்று திருவாலங்காடு. அதற்கு நிதி வசதி மத்திய அரசிடமிருந்து வருகிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து பூரா பணமும் வந்து சேரவில்லை. ஒரு சென்டருக்கு ரூ. 50,000 தருவதாக அவர்கள் ஒப்புக்கொண்டு பணம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கிறது. பூரா பணமும் வந்தவுடன் நன்றாக விரிவுபடுத்தப்படும்.

## நெல்லை மாவட்டத்தில் இறைவைப் பாசன கூட்டுறவு சங்கங்கள்.

*235. வினு திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 189 ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே 17 சங்கங்களுக்குத்தான் கடனே அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கடன் அனுமதிக்கப் பட்டதில் குட்டம் என்ற கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 2·12 லட்சம் கடன் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே என்னென்ன வேலைகள் நடைபெற்று இருக்கிறது ? அது மட்டுமல்லாமல், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டதன் நோக்கமே முன்னுள் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் தன்னுடைய கட்சியை பலப்படுத்த வேண்டுமென்பதற்காக கொண்டுவரப்பட்டது, ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்கிருர்கள். அப்படியில்லையென்ருல், அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் அப்படியே இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அவர்கள் முன்னுள் கூட்டுறவு அமைச்சர் மீது சொன்ன குற்றச்சாட்டு மறுக்க வேண்டிய ஒன்று. உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. கட்சிக் கண்ணேட்டத்துடன் எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமும் தொடங்கப்படவும் இல்லை, செயல்படவும் இல்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்த லிப்ட் இர்ரிகேஷன் சொசைடியில் 5 ஏக்கருக்குள் நிலம் வைத்து இருக்கக் கூடிய சிறிய விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிருர்கள். திறந்த கிணறு வெட்டுவதற்கு 12 ஏக்கர் சாகுபடிக்கு நிலம் வைத்து இருக்கவேண்டுமென்றும், குழாய்க் கிணறு வெட்டுவதற்கு 25 ஏக்கர் நிலம் வைத்து இருக்க வேண்டுமென்றும், அப்போதுதான் கடன் உதவி கிடைக்கும் என்றும் நிபந்தனை இருந்தது. அதனுல் 5 ஏக்கருக்குள் நிலம் வைத்து இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கடன் உதவி கிடைக்கவில்லை அவர்களுக்குக் கடன் கிடைக்கும் பொருட்டு, 5 ஏக்கருக்குள் நிலம் வைத்து

@ 507–511-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இருப்பவர்களை ஒன்று சேர்த்து, 100 ஏக்கர் அளவில் வைத்து ஒரு சொசைட்டி ஆரம்பித்து, அதன்மூலம் அவர்கள் பலன் அடைந்து வருகிருர்கள். இந்த சொசைட்டிகள் கட்சிக் கண்ணேட்டத்தோடு ஆரம்பிக்க பட்டது அல்ல என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். உறுப்பினர் குறிப்பிட்ட சொசைட்டியில் வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அந்த சொசைட்டிக்கு இப்போதுதான் பணம் கொடுத்து இருக்கிறோம். இனிமேல் சரிவர வேலை தொடங்குவார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு எஸ். நல்லசாமி : புகளூரில் லிப்ட் இரிகேஷன் சொசைட்டி என்று கேள்வி இருக்கிறது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புகளூர் அடுத்த கேள்வியில் வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடம்பத்தூர் தொகுதியில் அகரம் என்ற இடத்தில்தான் முதலில் லிப்ட் இரிகேஷன் சொசைட்டியை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய் செலவில் அது சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த சொசைட்டிக்கு ஒரு கோ-டவுன் தேவை என்று பல நாட்களாகக் கோரி வருகிருர்கள். அதற்கான நிதி வசதி அளிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது பற்றி கேள்வி இல்லையென்ருலும், அது விரைவாக கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : கோவில்பட்டி சரகத்தில் 10 கூட்டுறவு சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதில் 10-க்கு 1க்குக் கூட கடன் சாங்ஷன் செய்யவில்லை. பூமிக்குக் கீழே குழாய் கிணறுகள் அமைப் பதற்கும், மற்ற இடங்களில் உள்ள மாதிரி அங்கே தண்ணீர் அதிகம் உள்ள இடமும் அல்ல. ஆதலால் பயன் அளிக்காமல் போய்விடும் என்று தெரிந்தும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? அந்த சொசைடிகளுக்குக் கடனே மற்ற உதவிகளோ செய்யாத தற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, கோவில்பட்டி தாலுகாவில் கிழமங்கலம் என்ற ஊரில் சொசைட்டி புதிதாக ஆரம்பித்து இருக்கிருர்கள். சொசைட்டி ஆரம்பித்து, அதற்கான வேலைகள் எல்லாம் பூர்த்தியான பின்னுல்தான், தண்ணீர் இருக்கிறதா, எந்த எந்தப் பயிருக்கு அது பாய்ச்ச முடியும், தூரப் பாசனத்திற்கு வருமா என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க முடியும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அந்த லிப்ட் பாசன கோவாப ரேடிவ் கழகங்கள் அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு மனு செய்தால், ஒரு குறிப்பிட்ட காலவரையரைக்குள் அவைகளுக்குக் கடன் வழங்க வேண்டு மென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

திரு. ரா. ரா. முனுசாமி : தற்போது இல்லை என்று சொன்னார்கள் ஆனால் பொது மக்களும், பார்வையாளர்களும், மற்ற மாநிலங்களில் இருந்து சாத்தனூர் டாமைப் பார்க்க வருகிறவர்களும் தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே அதை உத்தேசித்து அத்திட்டத்தில் அதைச் சேர்க்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சாத்தனூர் பகுதியில் அணைக்கட்டு விடுதி ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. விருந்தினர் விடுதிகள் மூன்று உள்ளன. இவையில்லாமல் சீர் செய்யாத விடுதிகளும் இருக்கின்றன. ஆகவே, தற்போது கட்டவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

*225 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் நகரில் பொதுப்பணித்துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*226 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேட்டுப்பாளையத்தில் கூடுதலா பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் கவனிப்பில் உள்ளது.

### *Assignment of land in Arcotkuppam.*

* 227 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that lands were given to "Anna Anbu Illam" and "Kalaignar Karunanidhi Kai Thozhil Koodam" in Arcotkuppam village, Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ). "கலைஞர் கருணாநிதி தொழில் கூடம்" என்ற பெயரில் சங்கமெதுவும் இல்லை; அதற்கு நிலம் எதுவும் கொடுக்கப்படவுமில்லை.



திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணி வட்டத்தில் ஆர்க்காடு குப்பத்தில் அறிஞர் அண்ணா இல்லம், கலைஞர் கருணாநிதி கைத்தொழில்கூடம் இவற்றிற்கு இப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் குழு மாவட்ட ஆட்சியாளரிடம் பத்து ஏக்கர் நிலம் கோரினார்கள். அவர்கள் மூன்று ஏக்கர்கள்தான் இப்போது கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குழு கோருகிற அந்த பத்து ஏக்கர் நிலத்தையும் கொடுக்கவேண்டுமென்று அரசு மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அறிஞர் அண்ணா அனாதை இல்லம் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு பத்து ஏக்கர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த நிறுவனம் செயல்படத் துவங்கவில்லை. ஆகவே இப்போது ஒரு ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் துவங்கிய பிறகு மற்ற நிலங்களைக் கொடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்திருக்கிறார்கள். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த இடம் கொடுக்கப்படும்.

திருமதி. ஜோதி வெங்கடாசலம் : இந்த அண்ணா அன்பு இல்லத்தில் என்னென்ன தொழில்கள் செய்வதற்கு அவர்கள் கேட்டிருக்கிறார்கள் ? அந்தத் தொழில்கள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னென்ன தொழில்கள் என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்:—

அனாதை இல்லமும் தொழில் கூடமும் நடத்த மட்டுமே அந்நிலத்தைப் பயன்படுத்த வேண்டும்; வேறெந்தக் காரியத்திற்கும் அந்நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது.

மாவட்ட ஆட்சித் தலைவர் நிலம் வழங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் மேற்படி நிலம் அனாதை இல்லம் தொடங்கப் பயன்படுத்தப்பட வேண்டும். பயிர் செய்வதோ கற்களை வெட்டியெடுப்பதோ கூடாது.

விண்ணப்பதாரர், அரசின் முன் அனுமதியின்றி, மேற்படி நிலத்தின் எந்த ஒரு பகுதியையும் உரிமை மாற்றம் செய்யவோ குத்தகைக்கு விடவோ கூடாது.

நிபந்தனை மீறல் எதுவும் நடந்தால், நிலம் வழங்கியது ரத்து செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படாமலேயே அந்த நிலத்தின் சுவாதீனம் அரசால் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு மேற்சொன்ன நிலத்தை அரசே மீண்டும் எடுத்துக்கொள்ளும் நிலையில், அந்நிலத்திலுள்ள கட்டுமானங்கள் அனைத்தும் அரசுக்கே முழுமையாகச் சொந்தமாகும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வெகு சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக்கொண்டு ஒரு குழு அமைத்து இருக்கிறோம். அதிலே வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர், பொறியியல் அதிகாரி ஒருவர், மண் வள ஆராய்ச்சி நிபுணர் ஒருவர், ப்ராஜக்ட் ஆபீசர், (கூட்டுறவு டி. ஆர்.) இருக்கிறார்கள். அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்து வருகிறார்கள்.

திரு கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த லிப்ட் இரிகேஷன் சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் மிகவும் வரவேற்கத் தக்கது. ஆனால் அது பல இடங்களில் செயல்படாமல் இருக்கிறது. பொதுவாக வேறு சங்கங்களுக்கு டைரக்டர்களாகச் செல்வதற்குத்தான் இந்த சொசைட்டிகள் பயன்படுகின்றன. குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் அது நல்ல முறையில் செயல்படவில்லை. அவைகள் நல்ல முறையில் இயங்கச் செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான் முன்னாலேயே சொன்னேன். சிறு விவசாயிகளை ஒன்று சேர்த்து இந்த சொசைட்டி ஆரம்பிக்கப்படுகிறது. நம்முடைய கனம் உறுப்பினர் போன்றவர்கள் நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு 100 எக்கர் பரப்பளவில் உள்ள சிறு விவசாயிகளை ஒன்றுதிரட்ட முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பார்களானால் அது நல்ல முறையில் செயல்படமுடியும். அப்படி 100 எக்கர் பரப்பளவில் உள்ள விவசாயிகளை ஒன்று சேர்ப்பது கஷ்டமாக இருக்கிறது. 50—60 எக்கர் நிலப் பரப்பளவிற்குத்தான் சேருகிறார்கள். 100 எக்கர் பரப்பளவிற்குச் சேர்ந்தால்தான் அந்த சொசைட்டி இயங்க முடியும். இந்தத் திட்டம் நல்ல முறையில்தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டம் தொடங்கி இரண்டு மூன்று ஆண்டுகள்தான் ஆகின்றன. அங்கத்தினர்கள் நல்ல ஒத்துழைப்புத் தருவார்களானால் இந்தத் திட்டம் நல்ல முறையில் விரைவாகச் செயல்பட முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இப்போது செயல்படுகின்ற லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளுக்கு நிர்வாகிகள் தேர்தல்மூலம் எடுக்கப்பட்டார்களா அல்லது நியமனம் செய்யப்பட்டவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை. ப. நாராயணசாமி : புதிதாகத் தொடங்கப்படுகிற சொசைட்டிகளுக்கு முதலில் நியமனம்தான் கூட்டுறவுத் துறையில் செய்யப்படுகிறது. அது எப்போது தேர்தல் நடத்தத் தகுதி பெறுகிறதோ அப்போது தேர்தல் நடத்தப்படும்.

திரு எம். தேவராசன் : தலைவரவர்களே, இந்த லிப்ட் இரிகேஷன் சொசைடிகள் வீக்கர் செக்ஷனுக்கு உதவி செய்கிற விதத்தில் அமைந்து இருக்கின்றன என்று உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பில் கூறியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?



மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : அந்தத் தீர்ப்பு சென்ற திங்களில்தான் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, 100 எக்கர் பரப்பளவு சேர்ந்தால்தான சொசைட்டி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய தொகுதியில் குன்னம், ஆத்தூர் என்ற பகுதியில் 300 எக்கர் நிலத்தை ஒன்றாக இணைத்து ஒரு சொசைட்டி ஆரம்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் போட்டு இருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு மிகுந்த நாளாகிறது. அதற்கு அரசாங்கம் இன்னும் அனுமதி அளிக்காததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தனியாகக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். அது பரிசீலனையில் இருக்கும் என்று கருதுகிறேன்.

## *Lift Irrigation Scheme at Pugalur*

* 236 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether Pugalur Lift Irrigation Scheme in Karur area has been sanctioned; and

(*b*) if so, the number of villages that will be benefited ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :

(அ) ஆம்.

(இ) இதனால் பயன்பெறும் கிராமங்களின் எண்ணிக்கை 15 (பதினைந்து).

திரு என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, அந்தப் புதிய திட்டம் தெளிப்பான் முறையில் "ஸ்பிரிங்கிளிங் திட்டமாக" ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதா ? அதிக நாள் தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலில் பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு பாசனத்திற்கு என்று வைத்தால் பெருமளவு பரப்பளவிற்கு உபயோகப்படாது என்று கருதியதால், அதிக பரப்பளவிற்குத் தண்ணீர் அளிக்கிற வகையில் அதைத் தெளிப்பான் திட்டமாக இப்போது துவக்கி இருக்கிறார்கள். இது இப்போதுதான் சாங்ஷன் ஆகியிருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு எஸ். நல்லசாமி : தலைவர் அவர்களே, புகளூர் ஏரியாவில் இருக்கக் கூடிய தெளிப்பான் முறை திட்டம் ஆரம்பித்து எவ்வளவு நாள் ஆகிறது ? அதற்காகப் பொறியாளர் அமைத்து எத்தனை வருஷம் ஆகிறது? அட்மினிஸ்டிரேஷன் ஆரம்பித்து எவ்வளவு வருஷம் ஆகிறது? இதையெல்லாம் ரெவியூ பண்ணி எவ்வளவு வேலை நடந்திருக்கிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா ? அதோடு தெளிப்பான் முறையை அந்தப் பகுதி மக்கள் வரவேற்கின்றார்களா அல்லது கோவப்ரேஷன் டிபார்ட்மெண்டால் திணிக்கப்பட்டிருக்கிறதா ? இதைப் பற்றி பரிசீலனை செய்திருக்கிறார்களா என்பதை அரசு ஆராய்ந்திருக்கிறதா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு எத்தனை ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது தெளிப்பான் முறையில் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை கேள்விகள் ஒரே நேரத்தில் கேட்பது ?

திரு எஸ். நல்லசாமி : இது எங்கள் பிரச்னை. அந்தக் கடன் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விகிதாச்சாரம் வருகிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா ? அதோடு தெளிப்பான் முறையை உபயோகப்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு ஏதாவது மான்யம் வழங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : இந்தத் திட்டத்தின் கீழ் 1—10—1972-ல் ஐந்து திட்டங்கள் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக் கின்றன. இது ஆரம்பமானது நவம்பர் 1968-ல், தெளிப்பான் முறையை அந்தப் பகுதியில் பயன்படுத்தினால் நலமாக இருக்கும். தண்ணீர் இல்லா மல் வறண்டு கிடந்த இப்படிப்பட்ட பகுதிக்கு காவேரித் தண்ணீரை வாய்க்கால்மூலம் கொண்டு வந்தால் தண்ணீர் உறிஞ்சிப் போய்விடும். ஆகவே, தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு அந்தப் பகுதியில் தெளிப்பான் முறையில் செய்யலாம் என்று செய்யப்பட்டிருக் கிறது. அதற்கான என்ஜினியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு நம்முடைய மாநில சர்க்கார் ஊக்குவிப்பதற்காக சர்க்கார் பணத்தைக் கொடுத்து அவர்களை முதலில் செய்யச் சொல்லி யிருக்கிறார்கள். முதலாவதாக கிட்டத்தட்ட 7 அதிகாரிகளை இலவசமாகக் கொடுத்து அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கின்ற வகையில் அந்தத் திட்டத்தில் பணி புரிவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட ஐந்து திட்டங்களில் வேலைகள் முக்கால்வாசி நடந்துகொண் டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் புகளூர் கூட்டு இறைவைப் பாசனத்திற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் திட்டமிடப்பட்டுள்ளது ? எவ்வளவு ரூபாய் கடன் தரப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு மன்னை. ப. நாராயணசாமி : மொத்தம் 3,679 ஏக்கருக்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதன்மூலம் பாசனத்திற்காக தெளிப்பான் முறையில் கிட்டத்தட்ட 10,000 ஏக்கருக்குச் சரியாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.



திரு எம். சுரேந்திரன் : தெளிப்பான் முறை சில நாட்களுக்கு முன்னால் சர்க்கார் பண்ணையில் காய்கறி பயிர் செய்வதற்காக கையாளப்பட்டு வந்தது. தெளிப்பான் முறையில் காய்கறிகள் உற்பத்தியாகவில்லை என்ற முறையில் பேசப்பட்டது. இப்பொழுது அந்த முறை அங்கேயிருந்து கைவிடப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். தெளிப்பான் முறை எவ்வளவு தூரம் பயன் அளிக்கிறது, அதற்கு எவ்வளவு தூரம் செலவழிக்கலாம் என்று மதிப்பிட்டு, கணக்கிட்டு இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தெளிப்பான் முறை திருச்சி, புதுக்கோட்டை பகுதியிலுள்ள அண்ணா பண்ணையில் கையாளப்பட்டு, துவரை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு நல்ல பலன் தருகிறது என்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். ஆகவே இது பலன் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் புதிய வீட்டு வசதித் திட்டங்கள்.

*237 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வீட்டு வசதியைப் பெருக்க, திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தஞ்சை திருச்சி மாவட்டங்களில் வீட்டு வசதியைப் பெருக்க, நடப்பாண்டியல் ரூ. 76.59 இலட்சம் செலவில் திட்டங்கள் உள்ளன.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே. திருச்சியில் மத்தியப் பகுதியிலே மத்திய அரசுக்குச் சொந்தமான டவுன் நகர் நிலங்கள் இருக்கின்றன. அதை அவர்கள் உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று மாநில வீட்டு வசதி வாரியத் தினுடைய வேலைகளைப் பெருக்குவதற்கான திட்டம் இருக்கிறதா? அதிலும் லோ காஸ்ட் ஸ்கீமின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : பாதுகாப்புத் துறைக்கு சம்பந்தப் பட்ட நிலங்கள் ஏராளமாக திருச்சி மையப் பகுதியிலே இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம் இவைகளை வாங்குவதற்கு முயற்சி மேற்கொண்டிருக் கிறது. நிலம் கிடைத்த பிறகு, அந்த யாருக்குக் கொடுப்பது என்பது தீர்மானிக்கப்படும்.

திரு வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : இந்தத் திட்டமானது தற்பொழுது நகராட்சி, தாலூக்கா தலைமை இடம், தொழிற்சாலைப் பகுதி ஆகிய இடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று நினைக்கிறேன். ஊராட்சிப் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏதேனும் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தற்பொழுது போடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்படி திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஏறக்குறைய 12 ஆண்டு காலத் திட்டம் என்ற அளவில் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக ரூ. 23 கோடிக்கு அந்தத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தற்பொழுது தாலூக்கா தலைநகரங்கள் வரையில் இப்படிப்பட்ட வீடுகள் கட்டுவதற்கு ரூ. 23 கோடி 891 லட்சம் வரையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 12 ஆண்டுகளுக்குள் முடிவடையும். இந்தத் திட்டத்திற்கு பணம் கிடைத்தவுடன் இந்த வேலைகள் துவக்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் இல்லை, தாலூகா நகரங்கள் வரையில் தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே.ஆர். கிருஷ்ணன் : தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியத்தின் ஆக்க பணிகள் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : திருச்சி, தஞ்சை சம்பந்தப்பட்ட கேள்வி இது. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு சி. ஆறுமுகம் : நம்முடைய வீட்டு வசதி வாரியம் கட்டுகின்ற வீடுகளை வீடுகள் இல்லாத ஏழைகள் எத்தனை பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்? அதிகாரிகள் எத்தனை பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம்: தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த வீட்டு வசதி வாரியத்தின் முக்கியமான நோக்கமே ஏழை மக்களுக்கு, தாங்களாகவே சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள முடியாதவர்களுக்கு, வீடு கட்டித் தரவேண்டும் என்பது தான் என்று நம்புகிறேன். அந்த அடிப்படையில் பார்த்தால் இது தாலூக்கா நகரங்கள் வரையில் தான் விஸ்தரிக்கப்படும். சிறிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படாது என்றால், அந்தக் கொள்கைக்கு முரணாக இல்லையா ? இனியாகிலும் இதைப் பரிசீலித்து அதிகமாக ஏழை மக்கள் வாழக்கூடிய சிறிய பகுதிகளுக்கு, கிராமப் பகுதிகளுக்கு இம்மாதிரி வீட்டு வசதிகள் விஸ்தரிப்புக்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : வீட்டு வசதி வாரியம் ஏழை மக்களுக்கு மட்டுமல்ல, நடுத்தர மக்களுக்கும் இருக்கிறது. அந்த வகையிலே தாலூக்கா நகரங்கள் வரையில் இந்த வீட்டு வசதி வாரிய வேலைகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குப் போவதற்கு பொருளாதாரம், நிதி வசதி பெரிய அளவுக்கு வேண்டும் என்பதை



உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்த வகையிலே வீட்டு வசதி வாரியம் இப்பொழுது வேலைகளை வேகமாகச் செய்துகொண்டு வருகிறது.

திரு சாதர்பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது தாலுக்கா தலைநகரங்களுக்கு மட்டும் தான் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று சொன்னார்கள். துணை தாலூக்கா தலைநகரங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தாலுகாவிற்கு வருகின்ற திட்டம் துணைத் தாலூக்கா வரையில் வரும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

திருபதி ஜோதி வெங்கடாசலம் : வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வந்திருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதிலே எந்த அளவிலே எந்த இடங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : வீடு இல்லாதவர்களுக்கு வீடு நான் சொல்லவில்லை. வீடு கட்டவேண்டும் என்று மனுப் போடுபவர்கள் பணம் கடனாக பெற்று, வீடு வாங்கவேண்டும், பிறகு தவணை முறையில் அதை திருப்பித் தரவேண்டும். அதற்கான வருவாய் இருப்பவர்களுக்கு வீடு கட்டித் தருவது வீட்டு வசதி வாரியத்தின் வேலை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு கே. ஏ. வகாப் : பேரூராட்சி மன்றங்களுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அதுவும் குறிப்பாக கூட்டுறவு சங்கங்கள் செயல்படுவதிலே அவர்களுடைய பொருளாதார நிலை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின் கிளையாகவே அங்கே அந்த சங்கங்களை அமைத்து, அதன் மூலம் பேரூராட்சி மன்றங்களிலும் இப்படிப்பட்ட திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : பேரூராட்சி மன்றங்கள் அல்லது கிராமங்களில் வீடு கட்டிக் கொடுப்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைக்கு ரூ. 10,000 முதல் ரூ. 25,000 வரையில் கடன் தருவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த வகையில் அந்த சங்கங்களை கொண்டு வீடுகள் கட்டிக்கொள்ளுவது நல்லது. வீட்டு வசதி வாரியம் பேரூராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் போன்ற பகுதிகளிலே பெரிய வீடுகளைக் கட்டினால், வீடு விலைக்கு விற்க முடியாது. வாங்குவதற்கு ஆள் இல்லாமல் போனால் நாடே பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடன் வாங்கி வீடுகள் கட்டிக்கொள்வதற்கு சங்கங்கள் ஆங்காங்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் நல்ல அளவுக்கு உதவிகள் செய்யப்படுகின்ற நேரத்தில், அதை உபயோகப்படுத்தி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## குடிசைப் பகுதி மாற்றுப் பணிகளுக்கு மத்திய உதவி

*238 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அமைத்திட 1971-72-ம் ஆண்டில் மத்திய-அரசு வழங்கியுள்ள கடன், மானியத் தொகைகள் முறையே எவ்வளவு?

மாண்புமிகு திரு க. இராசாராம் : 1969-ம் வருஷம் ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து இந்திய அரசு மாநில அரசுக்கு மொத்த கடனாகவும், மொத்த மானியமாகவும் உதவி வழங்கி வருகிறது. தனித் திட்டங்களுக்கென மத்திய உதவி வழங்கப்படுவதில்லை. எனவே, அந்த நாளிலிருந்து குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் கடனும், மானியமும் மாநில அரசே கொடுத்துதவுகிறது.

திரு வை. பாலசுந்தரம் : குடிசைப் பகுதிகளைச் சீரமைக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களான பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங்களை எடுத்துக்கொண்டு பார்க்கும் பொழுது நம்முடைய மாநிலத்திற்கு மத்திய சர்க்கார் பாரபட்சம் காட்டுகிறது என்று கூறப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : மற்றைய மாநிலங்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் எதுவுமே இல்லை. தமிழ்நாடு ஒன்றில்தான் குடிசை மாற்று வாரியம் என்ற திட்டம் இருக்கிறது. இதில் மத்திய சர்க்காரினுடைய உதவி எந்தவிதமான குறிப்பிட்ட பகுதிக்கும் இல்லை. அந்த வகையிலே இதில் மத்திய சர்க்கார் பாரபட்சம் காட்டுவதற்கு ஏதுக்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கு. காமாட்சி : உலக நாடுகளினால் போற்றப்படக்கூடிய அளவில் குடிசை மாற்று வாரியம் நம்முடைய தமிழகத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இதற்கு மத்திய சர்க்கார் உதவித் தொகை, கடன் தொகை எவ்வளவு சதவிகிதம், மானியம் எவ்வளவு சதவிகிதம் கொடுக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : இந்தக் குடிசை மாற்று வாரியம் திட்டத்தைப் பொறுத்த அளவில் மத்திய சர்க்காரினுடைய உதவி எதுவுமில்லை என்பதை ஏற்கனவே எடுத்துச் சொல்லிவிட்டேன். குடிசைகளை சீரமைப்பதற்கு அவர்கள் ஓரளவுக்கு உதவி செய்கிறார்கள். சென்ற ஆண்டு ரூ. 2½ கோடி வரையில் உதவி செய்திருக்கிறார்கள். அதைத் தவிர வேறு எதுவும் குறிப்பாக இல்லை. குடிசை சீரமைப்பை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். குடிசை மாற்றுவதை மத்திய சர்க்கார் இது வரையில் ஒத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு த. சோனையா : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகளை மற்ற மாநிலத்தவர்கள் அமைச்சர்கள் இம்மாதிரி திட்டத்தை அங்கேயும் செயல்படுத்துவதற்கு என்று வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்களா ? அப்படியானால் எந்தெந்த மாநிலத்தவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள்? மற்ற மாநிலத்தவர் மத்திய சர்க்காரால் தூது அனுப்பி இங்கே வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தத் திட்டங்களையெல்லாம் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திர மாநில அமைச்சர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை தங்கள் மாநிலங்களில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Labour, the rate of interest that is charged for the loans from the Central Government and the time given for repayment ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : மத்திய அரசிடமிருந்து கடன் எதும் நமது மாநிலம் பெறவில்லை. எனவே திருப்பித் தரவேண்டிய பிரச்சினையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். சுப்பையா : ரூ. 2½ கோடி தொகை கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இதில் என்னென்ன திட்டங்கள், வேலைகள் அடங்கியிருக்கின்றன என்பதை கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த ரூ. 2½ கோடியில் செய்ய வேண்டிய காரியங்கள், குடிசை சுற்றுப் புறங்களில் துப்புரவு வேலை, விளக்கு போடுவது, முடிந்தால் ரோடு போடுவது ஆகியவைகளாகும். நமது நாட்டிலுள்ள பிரச்சினை, குடிசை பகுதிகளில் பாதை அமைப்பது என்பது முடியாது—இது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே, இந்த ரூ. 2½ கோடியை நேரடியாக பயன்படுத்த முடியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் அடிப்படையில் சில மாதங்களுக்கு முன்பு திரு கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான Santhome சாலையிலுள்ள நிலத்திலே கட்டப்பட்டிருந்த குடிசைகளை அப்புறப்படுத்தி, அங்கே வாழ்ந்து கொண்டிருந்த குடிசை வாழ்மக்களை கடற்கரையோரத்தில் அவர்களுக்கு இடம் கொடுத்து குடியமர்த்தியிருக்கிறார்கள். அந்த இடத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை. குறிப்பாக விளக்கு இல்லை. கக்கூஸ்

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தஞ்சையில் ஒரு துணைத் தாசில்தார் கொலையுண்டதும் அதனால் அதிகாரிகளிடையே ஏற்பட்டுள்ள பீதியும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. மாரிமுத்து ஆகிய இருவரும்,

Failure of the Government to protect its officials as seen by the murder in his residence at Thanjavur of R. Krishnan, Deputy Tahsildar on 23rd January 1974 and panic among officials.

என்ற பொருள் பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவையை ஒத்தி வைத்து விவாதிக்க இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்பொழுது விளக்குவார்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி : சார், 23 ஆம் தேதி இரவு தஞ்சையில் ஆர். எம். எஸ். காலனி என்ற சர்க்கார் உத்யோகஸ்தர்களும் மற்றவர் களும் குடியிருக்கக்கூடிய பகுதியில் குடியிருந்து வந்த டெபுடி தாசில்தார் கிருஷ்ணன் என்பவரை சிலர் வீட்டுக்குள்ளே புகுந்து படுகொலை செய்த தாக செய்தி வந்திருக்கிறது. பொதுவாக, அந்த அதிகாரியைப் பொறுத்தவரையில், அவர் ஒரு நல்ல அதிகாரி என்றும் அவர் நேர்மை யாக நடத்தக்கூடியவர் என்றும் அந்த வட்டார மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. அப்படிப்பட்டவருடைய வீட்டுக்குள்ளே புகுந்து கொலை நடந்திருக்கிறது. பல காரணங்கள் சொல்லப்படுகிறது. நான் இதைப் பற்றி விசாரிக்கின்ற போது அந்த கொலைக்கு வேறு சிலர் சம்பந்தப்பட் டிருக்கின்ற மாதிரி சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியாது. போலிஸார் இன்வெஸ்டிகேஷன் ஆரம்பித்திருக்கிறார் கள். இதிலே என்னுடைய பாயிண்ட் என்னவென்றால், இம்மாதிரி அதிகாரிகளைப் பொறுத்தவரையில்,

We must disabuse any fear which officials may have for putting straightforward acts in favour of the people.

என்ற ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் தான் சொன்னேன். எனக்கு முதலில் கிடைத்த தகவலில், அவர் ஒரு நல்ல அதிகாரி என்று சொன்னார்கள். மேற்கொண்டு போலீஸார் இன்வெஸ்டிகேஷன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சம்பவத்தினுடைய முறைகளைப் பார்த்தால், திட்டமிட்டு கொலை செய்தவர்கள் அதற்கு வேறு ஏதாவது ஒரு காரணத்தைக் காண்பிக்க வேண்டுமென்ற முறையில் செய்திருப்பார்கள் போல தோன்றுகிறது. ஒரு நகையைத் திருடியதாக அதிலே சேர்த்திருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் நடக்கிற காரணத்தால் இதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை. அதே நேரத்தில், வேறு முறையில் தான் நடந்திருக்கிறது என்ற முறையில் சொல்வார்களேயானால், அது நான் எழுப்பிய விஷயத்திற்கு பதிலாக ஆகாது என்பதையும் இந்த இடத்தி



தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அதிகாரிகள் நேர்மையாக நடத்தக் கூடிய அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் கேட்ப தெல்லாம். வந்திருக்கிற விஷயங்களைப் பார்த்தால், நம்ப முடியாதபடி, 7, 8 குழந்தைகளுக்கு தாயானவள், தவறாக நடந்தாள் என்பது மாதிரி செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட விஷயத்தில் விவரங் களுக்குள் போவதற்கிடையே இந்த அதிகாரியைப் பற்றி அரசாங்கத்திற்கு என்ன கருத்தோட்டமிருக்கிறது, மேலதிகாரிகள், எப்படிப்பட்ட விவரங்களை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இதை விவாதிப் பதன் மூலமாக, நேர்மையான அதிகாரிகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என்ற தைரியம் ஏற்பட உதவிகரமாக இருக்கும். நல்ல நேர்மையாக செயல்படும் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வேண்டு மென்ற கருத்தோட்டம் எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சட்டமன்றத்தில் உள்ளவர்களுக்கும் இருக்கும். எனவே, அந்த முறை யில் இதை விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேர்மையான அதிகாரிகள் கொல்லப்படுகிறார்கள் என்பது போன்ற ஒரு வாதத்தை எழுப்புவது சரியல்ல. நேர்மையான அதிகாரிகளுக்கு இன்று நாட்டில் வேலை இல்லை, அவர்கள் இருக்கக் கூடாது என்று யாரோ கருதுவது போலவும் அதற்காக காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்காமலிருப்பது போலவும் சொல்வதும் சரியானதல்ல. ஒவ்வொரு அதிகாரியின் வீட்டுக்கும் போலீஸ் காவல் போட்டு வைப்பதில்லை முன்கூட்டியே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதாவது சம்பவங்கள் நடக்கப் போவதாக போலீசாருக்கு—அதிகாரியானாலும், அல்லது வேறு தனிப்பட்ட மனிதர் களானாலும்—முன்னெச்சரிக்கையாக எடுத்துச் சொல்வார்களானால் அப்போது போலீசார் அதில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பார்கள். இந்த நடந்த சம்பவத்தைப்பற்றி நான் இங்கே விவரமாகக் கூற இயலாதவனாக இருக்கிறேன். கொல்லப்பட்ட உதவி தாசில்தாரைக் கொன்றதாக அவருடைய சகோதரர்—தம்பி சந்திரன், சந்திரன் நண்பர் வீராசாமி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். 22-ஆம் தேதி பிற்பகல் 12 மணிக்கு. அன்று மாலை 6 மணிக்கு அவரது மனைவி மீனாட்சி என்ற நளினி கைது செய்யப்பட்டிருக் கிறாள். கொல்லப்பட்டவருடைய தம்பி கைது செய்யப்பட்டிருக்கிறார்— மனைவி கைது செய்யப்பட்டிருக்கிறார். இதற்கு மேல் நான் இந்த வழக்குக்குள் போக விரும்பவில்லை. வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதா னால், இந்த அவையை ஒத்தி வைத்து, இதைப்பற்றிய விவாதத்திற்குள் போக வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிப்பதற்குத் தேவையில்லை என்ற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

ஏற்கெனவே இந்தச் சர்க்காரைப்பற்றி அண்ணா தி. மு. க.வும், கம்யூனிஸ்டுக் கட்சியும் மத்திய சர்க்காருக்கு குற்றச்சாட்டுகளைக் கொடுத்திருந்தன. அதற்குப் பதிலும் சர்க்கார் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் குற்றச் சாட்டு சாட்டுகின்ற சமயத்தில் அது உண்மையா, உண்மையில்லையா என்று யார் பார்ப்பது ? குற்றஞ்சாட்டப்பட்டவர் பதில் சொன்னவுடனேயே குற்றம் இல்லாமல் போகுமா ?

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் * * * * என்று இங்கே பேசும்போது சொன்னார்களே, * என்பதை அப்படி இந்தச் சபையில் சொல்லலாமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிற போது—இங்கே வள்ளுவர் படம் வைத்திருக்கிறோம்—இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய் கவர்ந் தற்று என்பார் வள்ளுவர். பொருளிலே கடுமையிருக்கலாம். ஆனால் இனிய சொற்களாக இருப்பது நல்லது—திரு பழனிசாமி கூறிய அந்தச் சொல்லைத் திரும்பப் பெற்றுவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

திரு என். கே. பழனிசாமி : சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு பழனிசாமி அவர்கள் கூறிய அந்த உதாரணத்தை அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு என். கே. பழனிசாமி : வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்துவிட்டதாலேயே, அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. குற்றச் சாட்டுகளில் உண்மையிருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு நடுவர் தேவை. ஆகவேதான் சென்டிரல் கவர்ன்மெண்ட்டு அந்தச் சட்டப் பிரகாரம் ஒரு கமிஷன் போட்டு விசாரணை செய்யவேண்டுமென்று சொல்வது மிகவும் பொருத்தமானது. சர்க்கார் மீது குற்றம் இல்லை என்கிறார்கள். அப்படி இருக்கும்போது விசாரணை நடந்தால் என்ன ? சென்டிரல் என்குவயரி கமிஷன் விசாரணை செய்து சிபார்சுதான் செய்ய முடியும். ஒரிசாவில் நான்குதரம் விசாரணை நடந்தது. நான்குதரம் விசாரணை நடந்து பட்நாயக் மீது 2 கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டு இருப்பதாக சொல்லப்பட்டது. காஷ்மீரை எடுத்துக்கொண்டாலும் என்குவயரி கமிஷன் போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் தப்புத் தப்பாகச் சொல்கிறார்கள். அதில் போடப்பட்டிருக்கிற என்குவயரி கமிஷன் அதிகாரம் அற்றது. வெறும் சிபார்சுதான் என்பதற்காகவேதான் அந்தச் சட்டமே. இந்தச் சட்டப்படி ஒரு சிபார்சு இருக்குமானால் அரசாங்கம்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



கட்டாயம் பிராசிக்யூட் பண்ணும்—கடுங்காவல் தண்டனை உண்டு என்ற அடிப்படையில் நாம் போட்டிருக்கிறோம். நீங்கள் போடவில்லை என்று சொல்வதும் சரியல்ல.

(முற்பகல் 10–00)

திரு என். கே. பழனிசாமி : கனம் மந்திரி அவர்கள், சென்ட்ரல் என்கொயரி கமிஷன் மூலமாக இந்த விசாரணை கமிஷன் போடவில்லையா என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்பொழுது சென்ட்ரல் என்கொயரி கமிஷனிலே போடக் கூடிய நடவடிக்கை இல்லையா என்று கேட்கிறார்கள். அது உண்மை. அதற்காக நாம் இப்படி ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று விளக்கம் தந்திருக்கிறேன்.

**In the 1952 Commission of Enquiry Act, there is no power to pun'sh.**

திரு என். கே. பழனிசாமி : அப்படி என்றால், நம் பேரிலே தான் தப்பிதம் இல்லையே, நாமெல்லாம் சரியாகச் செய்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது, இந்த கமிஷன் போட்டு விசாரணை செய்தால் என்ன செய்துவிட முடியும் ? ஆகவேதான் மத்திய சர்க்கார் கூட எல்லை, கட்சிகளும் விசாரணை கேட்டும், ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்தியும் கூட, இன்றையதினம் இந்த கமிஷன் ஆப் என்கொயரி போடாமல் இருப்பதற்குக் காரணம் ஒரிஸ்ஸாவிலே பட்நாயக் இன்னும் மற்ற மாநிலங்களிலே இதைவிட மோசமாக இருக்கிறதோ, என்னவோ தெரியவில்லை. ஆகவே, அவர்கள் கமிஷன் போடுவதற்குக் தயங்குகிறார்கள். சர்க்கார் தங்கள் பேரிலே குற்றம் இல்லையென்று சொல்கிறார்கள். வாஸ்தவம். குற்றம் இல்லையென்று ஜனங்கள் முன்னால் ருசுவ் செய்வது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் சர்க்கார் பேரில் இருக்கிற கெட்ட பெயர்கள் போகும்.

அதற்கு மேல் பல சம்பவங்கள், கிளைவ் ஹாஸ்டல் சம்பவம், பாளையங் கோட்டை சம்பவம், கார்ப்பரேஷன் சம்பவம். அதற்கு சர்க்கார் சம்பந்தம் இல்லாவிட்டாலும், ஊழலினால் சர்க்கார் பெயர் கெட்டுள்ளது. அது மட்டுமல்ல, சமீபத்தில் இராயப்பா வழக்கு தீர்ப்பு. அந்த தீர்ப்பின் பிரகாரம், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் பிரகாரம்—சந்தேகத்திற்கும் கவலைப்படுவதற்குமான அம்சங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு கூவம் திட்டம் அவ்வகையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி சர்க்கார் பேரிலே பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் வரும்போது விரிவாகப் பேசியிருக்கிறோம். சுருக்கமாகப் பேசுங்கள். இப்போழுது 5 பில்கள் இருக்கின்றன, 3 தீர்மானங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பில்லையும் நிறைவேற்றுவதற்கு இவ்வளவு நேரம் என்று குறிப்பிட்டுவிடுவது கூட நல்லது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

இந்த திருத்த மசோதா பொதுமக்களுடைய அபிப்பிராயத்துக்கு விடப் பட வேண்டுமென்பதுதான் நம்முடைய கருத்தாகவும் இருக்கிறது. ஏற்கனவே, இந்த மன்றத்தில், பல்வேறு பிரிவுகள் வந்த நேரத்தில், இந்தப் பிரிவுகளில் இருக்கக்கூடிய கோளாறுகளை இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துக் காட்டி இருக்கிறோம். இப்பொழுது, ஒரிஜனல் ஆக்டிலே இருக்கிற செக்ஷன் 8-க்குப் பதிலாக புது செக்ஷன் கொண்டு வருகிறீர்கள். அதைக் கொண்டு வருகிற நேரத்திலே, அடிப்படையிலேயே ஒரு வித்தியாசம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

அதிலே இன்னொரு கருத்து என்னவென்றால், நிர்மாண சட்டத்திலே போட்டிருப்பது, கன்கரன்ட் லிஸ்டிலே வரக்கூடிய மசோதாவை, ஜனாதிபதியினுடைய முன் அனுமதி பெற்றுத்தான் இந்த மன்றத்தில் திருத்த வேண்டுமென்று இருக்கிறது. அதையெல்லாம், நாங்கள் பார்க்கிற நேரத்திலே, பொதுவாக இந்தத் திருத்த மசோதா ரொம்ப குழப்பமாக இருக்கிறது என்று நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏதோ நாங்கள் இந்த மசோதாவைப் பார்த்து பயப்படுவதாக முதல் அமைச்சர் அவர்களும் மதிப்பிற்குரிய சட்ட மமைச்சர் மாதவன் அவர்களும் அடிக்கடி இந்த மன்றத்திலே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாங்கள் எந்த மசோதாவிற்கும் பயப்படவில்லை. குறிப்பாக, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை. ஏனென்றால், எவ்வளவோ கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவைக் கொண்டு வந்து எங்களைப் பிடித்துவிடலாம் என்று முதலமைச்சர் அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார் என்றால், நிச்சயமாக அவர்கள் ஏமாற்றம் அடையப்போகிறார்கள். ஏனென்றால், திட்டவட்டமாக நாங்கள் சொல்கிறோம், அவ்வளவு துன்பங்களையும் நாங்கள் சமாளிக்கத் தயாராக இருக்கிறோம். சந்திக்கத் தயாராக இருக்கிறோம். வயலன்ஸ் வந்தாலும் சரி, நம்மை அடித்தாலும் சரி, பல தொல்லைகள் கொடுத்தாலும் சரி, நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

செக்ஷன் 8ஐ அடியோடு எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எங்களுடைய கட்சியின் சார்பிலே நாங்கள் சில குற்றச்சாட்டுகளை இந்த அரசாங்கத்தின்மீது சுமத்தியிருக்கிறோம். அதற்காக என்குயரி கமிஷன் தேவை என்று வலியுறுத்தி வருகிறோம், என்குயரி கமிஷன் தேவை என்று சொன்னவுடனே, இந்த மன்றத்தில் அதை விவாதிக்கலாம் என்று அமைச்சர் மாதவன் அவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். இங்கே விவாதித்தால் என்ன பொருள் கிடைக்கும். என்ன உண்மை கிடைக்கும் என்பதைப் பார்க்க வேண்டும்.

என்னுடைய ஆர்க்யுமெண்டை வலியுறுத்துவதற்காக நான் சொல்கிறேன், இதே மன்றத்திலே ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு



வந்தோம், முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளித்தார்கள். அப்பொழுது இருந்த சபாநாயகர் அதற்கு என்ன சொன்னார் என்றால் அந்தப் பதில்தான் கடைசியான பதில், இறுதியான பதில் என்று சொன்னார்கள். மீண்டும் கிளர்ச்சி செய்ததற்குப் பிறகு என்குயரி கமிஷன் வைத்தார்கள். அதற்குப் பிறகு பல உண்மைகள் வெளி வந்தன. மன்றத்திலே பேசித் தீர்த்துக்கொள்ள முடியாத காரணமாகத் தான் உண்மைகள் வெளிவந்தன.

அன்றைக்கு திரு சௌந்தரபாண்டியன் எழுதியதாக முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தார்கள். அது இங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கிறது, ஆனால்—நான் சபாநாயகர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் சொல்லவில்லை—அதற்குப் பிறகு திரு காளிமுத்து அவர்கள் ஒரு கடிதத்தை இங்கே படித்தார்கள், அதை எக்ஸ்பஞ்ச் செய்தார்கள், நான் அதனுடைய கண்டன்ட்ஸ்க்குள்ளேயெல்லாம் போகவில்லை, நாங்கள் மைனாரிட்டியாக இருக்கிறோம், மெஜாரிட்டியாக இருக்கிறவர்கள் சொல்வதுதான் நிறைவேறுகிறது. இந்த மன்றத்தில் மைனாரிட்டி தீர்மானம் நிறைவேறுவதில்லை. ஆகவே மெஜாரிட்டியாக இருந்து நிறைவேற்றினாலும் கூட அது உண்மை இல்லை என்பதை கிளைவ் ஹாஸ்டல் என்குயரி கமிஷன் நிரூபிக்கிறது.

நான் அமைச்சர் மாதவன் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், கிளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக இந்த மன்றத்திலே சொன்னதை ஏற்றுக் கொண்டிருந்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்குமா? எந்த அளவிற்கு மிருகத்தனமாக அடித்தார்கள் என்று அவர்கள் சொல்லவில்லையா? அண்ணா தி.மு.க.வின் சார்பிலே நான் மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஐந்து ஆண்டுகளாக இருந்தாலும்சரி, ஏழு ஆண்டுகளாக இருந்தாலும்சரி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் உயிருக்கே கவலைப்படவில்லை, பயப்படவில்லை, அண்ணா தி.மு.க. தொண்டர்கள் உயிருக்கு ஆபத்து வந்தாலும் கவலைப்படப் போவதில்லை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதாவைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எப்படிப் பேசவேண்டுமென்பது எனக்குத் தெரியும். நீங்கள் இங்கே எதிர்க்கட்சியிலே உறுப்பினராக இருந்த நேரத்திலே எப்படி எப்படியெல்லாம் பேசியிருக்கிறீர்கள் என்பதை எடுத்துப் பாருங்கள், நாங்கள் சொல்வது சுசப்பாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு திருத்தம் வரும்பொழுது அந்தத் திருத்தத்தைப்பற்றி மட்டும்தான் பேசவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பத்து ஆண்டுக் காலமாக நான் திருத்தங்களைச் சந்தித்தவன். நீங்கள் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. முழுச் சட்டத்தைப் பற்றியும் கூட நீங்கள் முன்னாலே விவாதித்து இருக்கிறீர்கள். அதிகாரிகளைக் கேட்டுப் பாருங்கள், எடுத்துக் கொடுப்பார்கள்...................

திரு என். கே. பழனிசாமி : நான் கொடுத்த திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் நான் பேசவேண்டியதேயில்லை. நான் என்னுடைய திருத்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிற வகையில் "கன்வின்ஸ்" செய்ய வேண்டும். ஆகவே, இதற்கு டைம் லிமிட் போட்டால் முடியாதுங்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் புது விவாதமாக இருக்கக் கூடாது. ஏற்கனவே பில்லில் பேசியாகிவிட்டது.

திரு என். கே. பழனிசாமி : ஏற்கனவே, சர்க்காருடைய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கினாலும் கொடுத்தாலும் கொடுக்க முயற்சித்தாலும் அதற்கென சட்டம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, டெஃபமேஷன், மான நஷ்ட வழக்கு போடுவதற்கும், இண்டியன் பீனல் கோடிலே புரவிஷன் இருக்கிறது. பிரிவின்ஷன் ஆஃப் கரப்ஷன் என்ற அந்த சட்டத்தின் மூலம் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியும். அப்படி இருக்கக் கூடிய நேரத்தில் கவர்ன்மெண்ட் சர்வண்ட் என்பவர் சர்க்காரின் கீழ் வேலை செய்யக்கூடியவர்—பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்யக்கூடியவர்—அவர்கள் இன்ன இன்ன வேலைகள்தான் செய்யவேண்டும், இப்படி செய்தால் நல்லதல்ல என்றிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில், இதைச் செய்வது சரியா? உதாரணமாக, லஞ்சம் வாங்கக் கூடாது, கேட்கக் கூடாது. இன்று பெரிய உத்தியோகத்திலே இருக்கக்கூடியவர்கள், பொதுப் பணியிலே இருக்கக்கூடியவர்கள், எம்.எல்.ஏ.வாகவோ, மந்திரியாகவோ இருக்கக் கூடியவர்கள் வேலையிலே போய் சேரலாம் சட்டப்படி. ஆனால், இந்தச் சட்டப் பிரகாரம் மந்திரி என்ற உத்தியோகத்தை வைத்துத்தான் அவர்களுக்கு வேலை, எம்.எல்.ஏ.-வினுடைய அந்தஸ்தை வைத்துத்தான் வேலை என்ற முறை வரும்—அது நியாயமாக இருந்தாலும் இந்தச் சட்டப் பிரகாரம் விரோதம். அதே மாதிரி வெளி நாடுகளுக்குப் போவதில், சிலபேருக்குச் சலுகை கொடுப்பது, அப்படி அந்தஸ்தை வைத்துச் சலுகை கொடுப்பது என்று ஆகும். ஆகவே, கவர்ன்மெண்ட் சர்வண்ட்ஸ்ஸுக்கும் மற்றவர்களுக்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. அந்தப் புரவிஷனை எடுத்து இதற்கும் போடுவது சரியாகாது.

அது மட்டுமல்ல, என்கொயரி செய்யக்கூடிய அதிகாரிகள், கமிஷனர் யார்? 10 வருஷம் பார் கவுன்சில் மெம்பராக இருந்தால், ஹைகோர்ட் ஜட்ஜாக வரமுடியும். அதே மாதிரி 7 வருஷ காலம், லாயராக டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மொஃபஸலில் பிராக்டிஸ் செய்து கொண்டிருந்தால், டிஸ்டிரிக்ட் ஜட்ஜாக வரமுடியும். அதைப் போல், சர்க்கார் இஷ்டம் போல் இந்த கமிஷனர்களை நியமிக்கத்தான் இது இருக்கிறது. அது மட்டுமல்ல, ஒரு ஹைகோர்ட் ஜட்ஜை நியமித்து விடுகிறது அரசு; அந்த விசாரணையை செய்துவிட்டு, விசாரணை முடிவில், நடவடிக்கை எடுப்பதற்கு சாதாரண மாஜிஸ்டிரேட்டிடம் செல்கிறோம். ஹைகோர்ட் அந்தஸ்து இருக்கிற ஜட்ஜ் விசாரித்த பிறகு, நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல், சாதாரண மாஜிஸ்ட்டிரேட்டிடம் செல்வது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று அறிய விரும்புகிறேன்.



அது மட்டுமல்ல, சபார்டினேட் உத்தியோகஸ்தர்கள்—சர்க்காருடைய துயவிலே இருக்கிற மாஜிஸ்டிரேட்டோ, டிஸ்டிரிக்ட் ஜட்ஜோ, ஹைகோர்ட் ஜட்ஜோ எப்படி மந்திரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களால் முடியும்? ஆகவே, இந்தச் சட்டத்தால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை.

அது மட்டுமல்ல, விசாரணை செய்யக்கூடிய காலத்தில் எவருடைய கேஸை வேண்டுமானாலும் ஒருவர் ரெஃபர் பண்ணலாம். பிடிக்காத ஆள் போடும்போது லஞ்சம் வாங்கினார், ஆகவே, கமிஷனுக்கு ரெஃபர் பண்ணி தண்டனை பெற்றுத் தரக்கூடிய முறை இதில் இருக்கிறது. ஆகவே, சுவோ மோட்டோவாக பார்க்கும்போது எந்தக் கேஸையும் ரெஃபர் செய்து எடுத்துச் சொல்லமுடியும். அப்படி பிடிக்காதவர்கள் யார் இருந்தாலும், அவர் கட்சியிலே இருந்தாலும் கூட, கேஸ் போடலாம். யாராவது பொய்யாக இருந்தால் இதை உபயோகப்படுத்தி தடை செய்ய முடியும். எந்தச் சட்டத்திலும் ஃபைனும் இம்பிரிசன்மெண்டும் இல்லை. ஆனால், இந்தச் சட்டத்திலும் ஃபைனும்—ஃபிரிவலஸ்—பொய்யாகச் சொன்னால் பல பேர்கள் உண்மையாக நடந்திருந்து பப்ளிக் இண்டரஸ்டுக்காக ஒருவர் பேரில் புகார் கொடுத்தால், அதற்குக் கூட அந்த ஃபைனும் 3 வருஷ தண்டனையும் கொடுப்பது என்பது கடுமையான சட்டம், எதிலேயும் இடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது பொது விவாதம் தேவையில்லை. மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே வந்திருப்பது, "ஒன் இயர்" என்பதற்குப் பதிலாக "ஃபைவ் இயர்ஸ்" என்பது. 6 மாதங்கள் என்பதற்குப் பதிலாக, ஒரு வருஷம் என்பது. அவைதான் இந்த மன்றத்தில் வந்திருக்கின்றன. அவைகளைப் பற்றித்தான் பேச வேண்டும். பொது விவாதத்தில் பேசுவது போல பேசுவது நல்லதல்ல.

'For 'Secretary to Government', is it said 'Secretary to Government of Tamil Nadu or of the Government of India.'

என்ற இந்த திருத்தமும் இருக்கிறது. இந்தத் திருத்தங்கள் பற்றித்தான் பேசவேண்டுமே தவிர, பொது விவாதம் போல பேசுவது முறையல்ல.

திரு என். கே. பழனிசாமி : சார், ஒரு கிரிமினல் குற்றம் என்றால், அவர்களுக்கு எல்லா பாதுகாப்பும் கொடுத்தால்தான் சாட்சி சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையெல்லாம் இந்த மசோதா வந்த நோக்கிலே விரிவாகப் பேசியாகிவிட்டது. திருத்தம் வருகிறபொழுது பொது விவாதத்திற்குப் போவது முறையல்ல. வந்திருப்பது என்ன திருத்தமோ அதைப்பற்றி மட்டிலும் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக மசோதாவைப் பற்றிப் பேசாமல் திருத்தத்தைப் பற்றி மட்டிலும் பேசுங்கள் என்றுநான் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஐந்து நிமிடத்திலே முடிந்து விடுகிறேன். உங்களிடத்திலேயிருந்து கற்றுக்கொண்டு பேச வேண்டிய துர்பாக்கியமான நிலைமையில் நான் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஹாண்டே அவர்கள் முறையாக, ஒரு உறுப்பினர் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சபாநாயகர் முறையாக நடந்து கொண்டால் சட்ட மன்ற உறுப்பினர்களும் முறையாக நடந்துகொள்ளலாம். அடுத்தபடியாக............

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, ஒரு சபைத் தலைவரைப் பார்த்து உங்களைக் கேட்டு தெரிந்துக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்வது சரிதானா? எல்லோருமே அவையிலே அப்படிப் பேசி விட்டால் முறைகள் என்ன ஆவது?

திரு. ஏ. சி. நரசிம்மன் : சபாநாயகர் முறையாக நடந்து கொள்ளுங்கள் என்று உறுப்பினர் உங்களை அறிவுறுத்துவது பொருத்தமாக இல்லை, ஆகவே அவர்களைத் திருத்திக்கொள்ளுமாறு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : டாக்டர் ஹாண்டே அவர்கள் உங்களை பார்த்து உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று கடுமையான சொற்களைப் பயன்படுத்தியிருப்பது இந்த மன்றத்திலே உள்ள மற்ற உறுப்பினர்களின் மனதைப் புண்படுத்தும்படி இருக்கிறது. தொடர்ந்து அவர்கள் இப்படிப் பயன்படுத்துகிறார்கள், காரணம் சபை முடிவதற்கு முன் எதேனும் சிறு தவறுகளை எற்படுத்த வேண்டுமென்ற முறையிலே எப்பொழுதும் இவ்வாறு நடந்துக் கொள்கிறார்கள், ஆகவே அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றம் நல்ல முறையிலே நடைபெறவேண்டுமானால், இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடத்திலே சில விதிமுறைகளைக் கொடுத்திருக்கிறீர்கள், அந்த விதிமுறைகளுக்குட்பட்டு நடந்துகொண்டால்தான் அவையை நல்ல முறையிலே நடத்தமுடியும். நீங்களே விதிமுறைகளை இயற்றிக்கொடுத்து விட்டு, நீங்கள் கொடுத்த விதிமுறைகளையே மீறினால், நீங்கள் இயற்றிய விதிமுறைகளை நீங்களே மீறுவதுபோல்தான் ஆகும். உறுப்பினர்கள் எப்படி சட்ட மன்றத்திலே நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கான விதிமுறைகளையெல்லாம் போட்டிருக்கிறோம். அந்த முறையிலேதான் நடந்து



கொள்ள வேண்டும். அந்த வகையிலேதான் உறுப்பினர் அவர்கள் பொதுவாக பேசக்கூடாது, திருத்தத்தைப்பற்றி மாத்திரம் பேச வேண்டுமென்று சொன்னேன், பொதுவாக மசோதாவைப்பற்றிப் பேசக்கூடாது. உறுப்பினர் ஹாண்டே அவர்கள் சில காலமாகவே மாண்புமிகு உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைக்கு மாறாகத்தான் நடந்துகொண்டிருக்கிறார்கள........

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னைப் பற்றி ஒரு ரிமார்க் பாஸ் செய்தால் நானும் உங்களைப்பற்றி ரிமார்க் பாஸ் பண்ணக்கூடிய நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். சபாநாயகர் ஒரு உறுப்பினர் மீது அது சரியல்லாது அவருக்கு படியானாலும் ரிமார்க் பாஸ் செய்யலாம், ஆனால் உறுப்பினர் சபாநாயகர் மீது 'ரிமார்க் பாஸ் செய்யக்கூடாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் நானும் சபாநாயகர் பற்றி ரிமார்க் பாஸ்' செய்வேனென்று சொன்னார்கள்..........

டாக்டர் எச். வி. ஹாண்டே : செய்யலாம் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் சொல்கின்றவரையில் அவர்கள் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். செய்யலாம் என்று சொல்வதே சட்டமன்றத்தை அவமதிப்பதாகும், செய்யலாம் என்ற முறையிலே அவர்கள் சொன்ன கருத்துக்களையே நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அடியோடு நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : 'In the case of Amending Bills, the discussion is confined to the provisions of the amending Bill and other substantive provisions of the principal Act are not touched upon unless the clauses of the amending Bill necessarily lead to the amendments or modifications of any other section of the parent Act'.

இப்படி தெளிவாக இருக்கிறது முந்தைய தீர்ப்பு. அதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பேரவைத் தலைவரைக் குறை கூறக் கூடாது என்று. குறை கூறக்கூடாது என்று நான் சொல்லவில்லை, அதற்கு உறுப்பினர்களுக்கு வேறு வாய்ப்பு இருக்கிறது, அதற்கு சட்ட மன்ற விதிமுறைகள் இடம் கொடுக்கின்றன, அந்த நேரத்திலேதான் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், ஆகவே நானும் கூறுவேன் என்று சொல்வது சரியல்ல.' பேரவைத் தலைவருக்கு நீங்கள் எல்லாம் சேர்ந்து கொடுத்திருக்கிற விதிமுறைகளின்படி செயல்பட்டால்தான் அவை நல்ல முறையிலே நடைபெறும். இல்லாவிட்டால் உங்களை நீங்களே குறை கூறுவது போலாகும்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: கட்சியை விட்டு ஓடுவது இல்லை, தலைவர் பதவியை அலட்சியமாகக் கருதி தொண்டனாக வந்திருப்பதற்காகப் பெருமைபடுகிறேன். ஆனால், திரு. மாதவன் அவர்கள் கட்சிக்குள்ளேயே இருந்து கட்சியையே உடைத்துக் குட்டிச் சுவராக்கி இருக்கிறார்களே, அதைத்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்கள் வந்தால் சரிசமமாக எனக்கும் நேரம் கொடுத்துப் பாருங்கள். நீங்கள் அத்தனை பேரும் பேசுங்கள், நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். கட்சியை உடைக்கிறார்கள், குட்டிச்சுவராக்குகிறார்கள், அது வேறு விஷயம்.

இங்கே நான் கேட்பதெல்லாம் இது எதற்காக வந்தது, திருத்த மசோதா எதற்காக வந்தது? நம்மைப் பொறுத்தவரையில் என்கொயரி கமிஷன் கேட்டவுடனே திசை திருப்புவதற்காக, பொது மக்களின் எண்ணத்தைக் வேறுவகையிலே திசை திருப்புவதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதா அன்று, கொண்டு வரப்பட்ட திருத்தம் இன்று. அந்த மசோதாவை எப்படித் தூக்கி எறிய வேண்டுமென்று சொன்னோமோ அதைப்போல் இந்தத் திருத்தத்தோடு கூடிய இந்த மசோதாவையும் தூக்கி எறிய வேண்டுமென்று சொல்லிவிட்டு, நீங்கள் மீண்டும் தைரியம் இருந்தால் இந்த என்கொயரி கமிஷனைச் சந்திக்க வேண்டுமென்று....

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : நீங்கள் கேட்பது என்கொயரி, விசாரணை, போலீஸ் விசாரணை, தண்டனை, நீதிமன்றம், பெரிய நீதிபதி இவைகளையெல்லாம் தினந்தோறும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காகத் தான் இப்படிப்பட்ட சட்டம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதில் நீங்கள் விரும்பும் விசாரணையும் வரும். குற்றம் என்றால், அது நிரூபிக்கப்பட்டால் தண்டனை வரும். இந்திரா காந்தியின் தயவு இல்லாமலேயே வரும். யாரும் டெல்லிக்குப் போக வேண்டிய அவசியமில்லை, விமானத்தில் போகவேண்டிய அவசியமில்லை. இரகசியமாகக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. நேரடியாக வரும். இவ்வளவு நல்ல சட்டத்திற்கு என்ன ஆட்சேபணை என்று அறிய விரும்புகிறேன்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: இவர்கள் விமானத்தில் போவதும், இரகசியமாகப் போவதும் இப்பொழுதுதான் புரிகிறது. அது வேறு விஷயம். நாங்கள் குற்றச்சாட்டைச் சொன்னவுடனேயே இந்த மசோதாவைக் கொண்டுவந்து பெரிய தோற்றத்தைக் கொடுத்து......................

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u>: நான் புரிந்துகொள்வதற்காகத் தான் கேட்கிறேன். இந்த மசோதாவிலே நாம் விசாரிப்பதற்கு நீதிபதி கேட்கிறோம். குற்றம் என்றால், அது நிரூபிக்கப்பட்டால் அரசாங்கத்தைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்கிறோம். 7 ஆண்டுக் காலத் தண்டனை என்று சொல்கிறோம், முதலமைச்சர் உட்பட எல்லா அமைச்சர்களுக்கும். இப்படிப்பட்ட சட்டத்தை எதிர்க்கிறீர்களே, அதைக் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் நல்லது. நல்ல நோக்கத்தோடு கொண்டுவரும் இந்தச் சட்டத்திற்காக ஏன் பயப்படுகிறீர்கள் ?



<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: உங்களை எந்த இடத்திலேயும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். உங்களுடைய வன்முறைகளையே சந்தித்துக்கொண்டிருக்கிற நாங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை.

<u>திரு. எஸ். வடிவேல்</u>: பாய்ன்ட் ஆப் ஆர்டர் சார், இந்த அவையிலே கொண்டுவரப்படுகிற ஒவ்வொரு சட்டமும் சமுதாயத்திற்கு எப்படிப் பயன்படுகிறது. நீதி நிர்வாகத்திலே, மாசு தூசற்ற, மருவற்ற ஆட்சி நடக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட வேண்டும். அதில் பேசும் பொழுது, கட்சியிலேயிருந்து இங்கே ஓடுவது, இதைப்பற்றியும், அதைப்பற்றியும், பேசுவது நம்முடைய நாட்டிற்குப் பயன்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அது உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய முறை, உறுப்பினர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: சென்டென்சை முடிப்பதற்குள் எழுந்து எழுந்து பேசினால் எப்படிச் சொல்வது ? **I gave him an opportunity because he is a good friend of mine.** சென்டென்சை முடிப்பதற்குள் எழுகிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். **'the context of time and the idea with which it was brought'**—இதில் ஒன்றும் மோட்டிவ் இல்லை என்று சொல்கிறார்கள். மோட்டிவ் இருக்கிறது என்று நான் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : விவாதத்திற்கு விளக்கம்தான் கேட்கிறேன். அவர்கள் கோபப்படக்கூடாது. நீங்கள் சொல்வது பொருத்தமான டையத்திலே கொண்டுவந்து விட்டீர்களே, எங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்வது புரிகிறது, நான் கேட்பது, கொண்டு வந்த சட்டத்திலே நீங்கள் கேட்பதைத்தானே கொண்டு வந்தோம். விசாரணை வேண்டுமென்று கேட்டீர்கள், கொடுக்க மாட்டேன் என்று சொல்பவரிடம் கேட்கிறீர்கள். இப்பொழுது முதலமைச்சர் நீங்கள் கேட்காமலேயே கொடுக்கிறார். இந்தச் சட்டத்தில் என்ன குறை?

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: கொண்டுவந்த நேரத்தைத்தான் நாங்கள் சொல்கிறோமே தவிர நாங்கள் பயப்படவே இல்லை. கொஞ்சம்கூடப் பயப்படவேண்டிய தேவை இல்லை. எற்கெனவே நீங்கள் கொண்டு வந்தீர்களே அப்பொழுதும் பயப்படவில்லை. இப்பொழுது இந்தத் திருத்தத்திற்காகவும் பயப்படவில்லை. நீங்கள் திசை திருப்புவதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தீர்கள், உங்களுடைய உள் நோக்கத்திற்காகக் கொண்டு வந்தீர்கள் என்று இந்த அவையில் சொல்வது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடமை என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : இந்தச் சட்டத்தில் என்ன தவறு இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேசாமல் என்ன பாடிக்கொண்டா இருக்கிறேன் ? நான் பேசுவது புரியவில்லையா ? தமிழில்தானே பேசு கிறேன். திரு வீராசாமி நாயுடுவுக்கு தமிழ் புரியவில்லை என்ருல் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசப் போகிறீர்களா அல்லது வாக் அவுட் பண்ணப் போகிறீர்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : பேசிவிட்டுப் பிறகுகூட வாக் அவுட் பண்ணலாம். பேசக்கூடாது என்று ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Before staging a walk-out Members should not make lengthy speeches.

திருமதி த. ந. அனந்தநாயகி : I am not making a lengthy speech இதைப் பொறுத்த வரையில் பொதுப்பணியில் இருக்கக்கூடியவர்களைப் பற்றி குற்றச்சாட்டுக் கூறிப் பேசினுல் அதைப்பற்றி விசாரிக்க அதிகாரம் தேவை என்று அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிருர்கள். இது நல்லெண்ணத்திஞல் கொண்டு வரப்பட்டதல்ல. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிருர்கள். ஏதோ தங்களைத் தாங்களே பரிசுத்தப்படுத்திக்கொள்வது போல் அதற்கு முந்திக் கொண்டு போவது மாதிரி இதனைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இன் றைக்கு உங்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தால் நீங்கள் இதைத் கொண்டு வரலாம். மத்திய அரசாங்கச் சட்டத்திலேயே உங்களுக்கு முழு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு செ. மாதவன் : அந்தச் சட்டத்தில் இந்த மாதிரி ப்ரொவிஷன் கிடையாது என்ற காரணத்தால் மத்திய அரசாங்கம் ஒரு மாடல் பில்லைத் தயாரித்து மாநில அரசுகள் இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வரலாம் என்ற யோசனையைச் சொன்ன பிறகுதான் மாராட்டியத் திலே ஏற்றுக்கொண்டு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள், ராஜஸ் தானிலே ஏற்றுக்கொண்டு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். அம்மையார் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே ஏற்றுக் கொண்டு வந்திருக்கும்போது நாங்களும் அதை ஏற்று சட்டத்தைக் கொண்டு வரும்போது கோபப்படக் காரணம் என்ன ?

திருமதி த. ந. அனந்தநாயகி : யார், எதை ஏற்றுக் கொள்ளுகிருர்கள் என்பதல்ல விஷயம். மராட்டியம், ராஜஸ்தான் நிலைமை வேறு. உங் களைப்பற்றிப் புகார்கள் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்குச் சென்றிருக் கும்போது நாங்கள் முந்திக்கொள்கிருேம் என்று நிரூபித்துக்கொள்வது மாதிரி, எங்களைப்பற்றி யாராவது சொன்ஞல் என்ன கதி ஏற்படும் என்று பயமுறுத்துவது மாதிரி மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைக் கண்டிக்கிருேம்.



மாண்புமிகு திரு செ. மாதவன் : நம்முடைய மசோதாவில் மட்டு மல்ல. அவர்கள் கொண்டு வந்த மசோதாக்களிலும் இந்தப் பிரிவுகள் இருக்கின்றன. சந்தானம் கமிட்டி அறிக்கையிலே கூட இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிருர் கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முழுக்க முழுக்க ஒத்துக்கொள் கிறேன். யார் எடுத்து நடத்துகிருர்கள் என்பதுதான் முக்கியம். நீங்கள் எப்படி நடத்துவீர்கள் என்பது தெரியும். இப்போதே எதிர்க் கட்சியினர் எப்படி நடத்தப்படுகிருர்கள் என்பது தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தால் ஒரு வகையாக சட்டம் இருக்க வேண்டும். வேறு கட்சிகள் ஆளும் கட்சியாக இருந்தால் சட்டம் வேறு வகையாக இருக்க வேண்டும். சட்டமே கட்சிக்குத் தகுந்தாற்போல் இருக்க வேண்டுமென்று விரும்பு கிருரா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : எந்தக் கட்சி எந்த மாதிரி சட்டத்தை அமுல் நடத்தும் என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்த ஆட்சி நல்ல முறையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் என்று கருதித்தான் மத்திய அரசாங்கம், அம்மையார் கட்சி ஆளுகின்ற மத்திய அரசாங்கம் அங்கீகாரம் தந்து, அனுமதி கொடுத்து, ஆலோசனை கூறி சட்டத்தை நிறைவேற்ற வேண்டு மென்று சொல்லியிருக்கிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கீகாரம் கொடுத்திருக்கலாம். இதை நீங்கள் ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கி, இதற்குக் கூட அனுமதி கொடுக்கவில்லை என்று கூறி மாநில சுயாட்சி கேட்கக்கூடும் என்ற எண்ணத்தில் கொடுத்திருக்கலாம். இதிலே, எப்படி அமல்நடத்தப் போகிருர்கள் . . . . . . . . . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : இதைத் நாங்கள் இப்போது அங்கீகரிக்கவில்லை. மத்திய சர்க்காரைக் கண்டிக்கிறீர்களா, பாராட்டு கிறீர்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : மத்திய சர்க்காரை ஆதரிக்கவும் இல்லை, பாராட்டவும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : நீங்கள் ஆதரிக்கவும் வேண்டாம், பாராட்டவும் வேண்டாம். இந்த சட்டத்துக்கு மத்திய அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன ?

திருமதி த. ந. அனந்தநாயகி : அதை யார் மறுக்க முடியும். அங்கீகாரம் செய்துவிட்டார்கள். நீங்கள் இதைக் கொண்டு வர வேண்டிய அவசியமே கிடையாது என்பதுதான் எங்கள் நிலை. அமைச்சர்கள்மேல் அவதூறுகப் பேசினுல் அவர்கள் மேல் வழக்குகள் போட்டு என்ன தண்டனை வேண்டுமானுலும் வாங்கிக் கொடுக்கலாம். ஏற்கனவே அதற்கு வழி இருக்கும்போது சட்டப் புத்தகத்தில் இந்த ஒரு சட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு திரு செ. மாதவன் : குற்றம் செய்தவர்கள் தண்டனைக் குள்ளாக வேண்டுமென்பதை ஆட்சேபிக்கவில்லை. பொய்க் குற்றம் சாட்டினுல், அவதூறு செய்தவர்கள் மூன்று ஆண்டு சிறைத்தண்டனை என்று போட்டிருப்பதைத்தான் ஆட்சேபிக்கிறீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்ட அமைச்சர் அவர்கள் சிக்கலை விளக்குவதில் தேர்ந்தவர். அதைப் பற்றியா பேசினேன் ? இந்தச் சட்டமே தேவையில்லை. யார் அமைச்சர்களைப் பற்றி அவதூறுகப் பேசினுலும் வழக்குத் தொடர்ந்து தண்டனை வாங்கித் தரலாம். அதற்கு வழி இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எங்களைப் போன்றவர்கள் வழக்குப்போட்டுத் தண்டனை வாங்கித் தரலாம். உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தைப்பற்றிச் சொல்லுகிருர். எங்களைப் பற்றிச் சொல்கின்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு நாங்கள் தண்டிக்கப் பட வேண்டாமா ? அதற்காகத்தான் இந்தச் சட்டம். அம்மையார் ஆதரிக்கிருரா ? எதிர்க்கிருரா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்களே ஏதோ தண்டனையை வரவேற்பதுபோல் பரந்த மனப்பான்மையோடு வரவேற்பது போல் பேச்வதைக்காண சிரிப்பு வருகிறது. நீங்கள் நல்லவர்கள், மாசு மறுவற்றவர்கள் என்பதைக்காட்டிக்கொள்ள இப்போதே வசதிகள் இருக்கின்றன. இப்போது வசதிகள் இருக்கும்போது தீவிரமான சட்டத்தைக் கொண்டு வந்து நீங்கள் நல்லவர்கள் என்று மக்கள் பாராட்ட வேண்டுமென்று சொன்னுல் அது சரியல்ல. இன்றைக்கு இங்கு இருக்கிற " காண்டக்ட் " பொருத்தமாக இல்லை. உங்கள் மேல் எவ்வளவோ புகார்கள் மத்திய அரசாங்கத்திற்குப் போயிருக்கின்றன. மத்திய அரசாங்கம் கமிஷனை ஏற்படுத்திவிடுமோ என்ற பயத்திலோ என்னவோ................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய சர்க்காரிடம் போயுள்ள புகார்கள் என்னென்ன? அதிலே அம்மையார் சம்பந்தப்பட்ட புகார்கள் என்னென்ன?

திருமதி த. ந. அனந்தநாயகி : கொடுக்கப்பட்ட புகார்கள் அச்சடித்து கொடுக்கப்பட்டு விட்டன. அம்மையார் எந்தப் புகாரிலும் சம்பந்தப்பட வில்லை. ரொம்ப நாட்களாக இப்படிச் சொல்லி வருகிறார்கள். அம்மை



யார் என்ன அதிகாரத்திலா இருக்கிருர்கள், புகாரிலே சம்பந்தப்பட ? நான் எதிர்கட்சி எம்.எல்.ஏ. நீங்கள் அதிகாரத்திலே இருக்கிறீர்கள். புகார்கள் வருகின்றன. எதிர்கட்சியிலே இருப்பவர்கள் மீது புகார்கள் கூறினுல் ஊரிலே உள்ளவர்கள் நம்புவார்களா ? அதிகாரம் உங்கள் கையில் இருக்கிறது. எங்கள் கையிலா இருக்கிறது ? என் மீது எந்தப் புகார் கொடுத்தாலும், எந்த நீதி விசாரணை வைத்தாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். இது எதிர்க்கட்சியைப் பயமுறுத்தும் வேலையை தவிர வேறல்ல. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையில் இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. நீங்கள் பிரச்சினையைத் திசை திருப்பி விடுவதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்களே தவிர, நல்லெண்ணத்துடன் அல்ல.

ஆகவே, இது ஒரு கருப்பு மசோதா, இதற்கு அவசியமே கிடையாது. அது யாரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது, யார் அதை அமல்படுத்துகிருர்கள்..................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடியரசுத் தலைவர் ஒரு கருப்பு மசோதாவிற்கு கையெழுத்து இட்டிருக்கிருர்கள். அது தங்கள் அபிப்பிராயம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : குடியரசுத் தலைவர் அவர்கள் அங்கீகாரம் கொடுத்திருக்கிருர்கள். நாங்கள் சொல்கிறோம் இது ஒரு கருப்பு மசோதா என்று. உங்கள் கையால் கொண்டுவரப்பட்டால் நல்ல மசோதா கூட கருப்பு மசோதாவாக மாறிவிடும். ஆகவே இதைக் கொண்டு வரவேண்டிய அவசியம் கிடையாது என்று கூறி இதைக் கண்டித்து எப்படி இந்த மசோதா முதலில் வரும்போது எல்லாக் கட்சியினரும் ஆட்சேபித்து வெளிநடப்பு செய்தார்களோ—அதற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள், இதையும் நாங்கள் எதிர்த்து, ஆட்சேபித்து எங்கள் கட்சி சார்பில் வெளிநடப்பு செய்கிறோம் என்று கூறி நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு ஏ. சி. நரசிம்மன் : இது மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட திருத்தம். அப்படியிருக்க மத்திய அரசாங்கத்தை எதிர்த்து அவர்கள் வெளிநடப்பு செய்திருகிருர்களா ?

Thiru K. M. SUBRAMANIAM : Mr. Speaker Sir, I am surprised to note that heat has been generated on a useful amendment that has been brought before the House. The original Bill has been passed by the House and the President has also given his assent. Now nobody can shake the Bill, because the Bill has been approved and assent has been given by the President and it has become an Act.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சென்டென்சை முடிப்பதற்குள் தாங்க முடியவில்லையே, என்னுடைய வாதத்தைத் தாங்க முடியவில்லையே, தாங்க முடியாமல் வாக்கியம் முடிவதற்குள்ளாகவே (குறுக்கிடு) **I am going to yield the floor after finishing my sentence.**

அவ்வளவு பயம் எதற்கு ? நான் வாக்கியத்தை முடித்துவிட்டால் ஆபத்து வராது. நான் முடித்துவிட்டு உட்கார்ந்து விடுகிறேன். நாங்கள் இதைப்பற்றிக் கவலைப் படவோ, பயப்படவோ இல்லை.

மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எங்களுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், நாங்கள் என்கொயரி கமிஷன் மூலமாக நிரூபிக்க முடியுமென்று சொல்லும் நேரத்தில், நீங்கள் அவையின் மூலம் முடியும் என்று சொல்கிறீர்களே, அது முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எனவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பொறுத்த வரையில், ஒரிஜினல் மசோதாவைத் தூக்கியெறிய வேண்டுமென்று சொன்னோம், அதைப்போல இந்தத் திருத்தத்தையும் தூக்கி எறிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 3 மணி நேரம் இருக்கிறது. இப்பொழுது 10-30 மணி ஆகப்போகிறது. 1-30 மணிக்கு முடிய வேண்டும். 5 பில்கள் இருக்கின்றன. 3 ரிசல்யூஷன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் நேரம் வகுத்துக்கொண்டு, நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள். என்னிடத்திலே நேரம் வகுத்துக் கொடுத்து விடுங்கள்.

(முற்பகல் 10.30)

திரு. கே. டி கே. தங்கமணி : சார், இந்த மசோதாவைப்பற்றி தாங்கள் போட வேண்டிய நேரத்திற்கு அவசியம் இருக்காது என்று நினைக்கிறேன், நான் பேசிய பிறகு. இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் எங்கள் கட்சி ஒரு குறிப்பிட்ட நிலையை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே, இந்த சட்டமன்றத்திலே இந்த மசோதா வந்த சமயத்தில், பொதுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட நேரத்தில்கூட, பொதுக் குழுவில் பங்கெடுக்க மாட்டோம் என்று நான் சார்ந்துள்ள கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆளுங் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திராக் கட்சி ஆகிய 5 கட்சிகளிலே உள்ள உறுப்பினர்கள் எங்கள் கருத்துக்களைத் தெரிவித்து, நாங்கள் வெளியே வந்து விட்டோம். பிறகு இங்கு சட்டமன்றத்திலே அது விவாதிக்கப்பட்ட பொழுதும்கூட பங்கெடுக்காமல் வெளியே வந்து விட்டோம். என்றாலும் இப்பொழுது இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையிலே இந்தத் திருத்தத்தினுடைய மெரிட்டுக்குள்ளே போனால் வரவேற்கக்கூடிய அம்சங்கள் இருக்கலாம்.

ஆனால் ஒரு அரசியல் நிலை எடுக்கிறபோது இம்மாதிரியான மசோதா அவசியமில்லாத நேரத்தில் கொண்டுவந்தார்கள். உண்மையில் இந்த மசோதாவுக்கு ஜனாதிபதியின் ஒப்புதல் கேட்ட சமயத்தில் கொடுக்காமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். நேரடியாக மாநில அரசே எல்



லாம் செய்து விடுவோம் என்று நினைக்கவோ, இறுதி முடிவு எடுக்கவோ அதிகாரமே கிடையாது. இந்தத் திருத்தத்தையும் அவர்கள் வற்புறுத்தியதின்பேரில் கொண்டுவந்திருக்கிறார்கள்.

விவாதத்திற்குள்ளே, போகும்போது சிலவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கிறோம். என்றாலும் இந்த மசோதாவை நிறைவேற்றக்கூடாது, மக்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பில் திருத்தம் கொடுத்திருக்கிறோம். இந்த மசோதாவை இங்கு இருக்கக்கூடிய மெஜாரிடியை வைத்து நிறைவேற்றும்போது எங்களுக்குப் பங்கு இல்லை என்ற முறையில் இந்த விவாதம் முடிகிறவரையில் இந்தச் சபையில் பங்கெடுத்துக்கொள்வதில்லை என்று தெரிவித்துக்கொண்டு வெளியேறுகிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த மசோதா தூக்கி எறியப்பட வேண்டிய மசோதா. இதை எதிர்த்து நாங்களும் வெளியேறுகிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேறினர்.)

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த மசோதா கொண்டுவந்தபோதே இது ஒரு கறுப்பு சட்டம், இதைகொண்டு வருவது கூடாது என்று எதிர்க்கட்சிகளின் சார்பாக ஆட்சேபித்தோம். எங்கள் கட்சியின் சார்பாகவும் ஆட்சேபித்தோம். இன்றைக்கு மத்திய அரசு கூறி திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசு இதற்கு உடந்தையாக இருந்தாலும், மற்ற சில மாநிலங்களில் இது ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டிருந்தாலும் இங்கே எங்களுடைய ஆட்சேபனையைச் தெரிவிக்கிறோம் என்ற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அமைப்பு காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இந்தச் சபைக்குக் கொண்டு வந்தபோதே எல்லாக் கட்சியினரும், இது ஒரு கறுப்பு மசோதா, இது அவசியம் இல்லையென்று சொன்னார்கள் ஏற்கெனவே கமிஷன் ஆப் என்கொயரி சட்டம்—மத்திய அரசாங்கச் சட்டம் இருக்கிறது. எந்தக் குற்றத்தை விசாரிப்பதாக இருந்தாலும் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் நீதிபதியைப் போட்டு விசாரிப்பதற்கு முழு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் இரண்டும் விசாரணைக் கமிஷன் போடலாம் என்றாலும் மாநில அரசாங்கம் விசாரணைக் கமிஷன் போடுவதில் முந்திக்கொண்டால் மத்திய அரசாங்கம் விசாரணைக் கமிஷன் போட முடியாது என்று இருக்கிறது. ஆகவே, மாநில சுயாட்சி என்று சொல்லி எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுவதற்கு இடம் கிடையாது.

திரு. நா. வீராசாமி : அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றாரா........

To set right certain bad things in the Bill, the President has suggested certain amendments. The most important amendment that has been suggested is that it should not clash with the Anti-Corruption Act that has been passed by the Centre.

I think that every body should welcome this amendment because there are two functions, namely, one by the Central Government and one by the State Government. I am not able to understand the objection to this amendment by the Opposition parties. I can understand if there was something basically wrong with the amendment.

The amendment says 'The provisions of this Act shall be in addition to, and not in derogation of, any other law for the time in force, and nothing contained herein shall exempt any public man from any proceeding by way of investigation or otherwise which might, apart from this Act, be instituted against him.'.

There is such a good saving clause. This is a most important amendment. I am not able to understand why the Opposition parties should stage a walk out on this most important amendment. It is the most healthy amendment /I can ever think of. I support this amendment.

(Mr. Deputy Speaker in the Chair.)

**THIRU B. VENKATASAMI**: Sir, on behalf of the Swatantra Party, we have already staged a walk-out at the time of introduction of the main Bill. Now also we oppose this amendment. While opposing this amendment, I wish to make a few remarks.

Now under this amendment, the State is having powers to punish those who were involved in corruption cases and at the same time to punish persons who give false allegations. The Central Government must have full powers on such matters; that is what I feel on this matter. Now-a-days, it is quite common in all the States.

Now I would like to give an example.

Normally, the fence is expected to guard the garden. In order to protect the garden, we are having the fence. If the fence itself is going to ruin the garden, who is going to protect the garden? The entire Nation is afcing this crisis. All the Govern-



ments are going towards this principle. When the fence itself starts doing away with the garden, there must be some superficial body to check it and also to protect the garden. Therefore, I appeal that the Central Government must have the whole authority to see that this kind of mistake does not happen.

We oppose this measure to give powers to the State Government to enquire on such matters. The Centre must have the power to institute inquiry into such matters about the States. Then only the administration in the States and in the Nation will be all right. We oppose this amendment.

I would also like to suggest that public opinion should be elicited on this Amending Bill.

With these words, I conclude, Sir.

**திரு. கே. எ. வகாப்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை ஆதரித்து வரவேற்கிற முகத்தான் எனது கட்சி சார்பில் இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டம் இங்கு கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அங்கு ஜனாதிபதி அவர்களும் கையெழுத்திட்டு அதற்கு சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று அவர்கள் ஆலோசனையின்பேரில், அதுவும் மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இங்கு இப்போது வெளிநடப்பு செய்திருக்கிறவர்கள் மத்திய அரசை எந்தக் கட்சி ஆளுகிறதோ அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து வெளிநடப்பு செய்திருக்கிற ஒரு விநோதமான அரசியல் சூழ்நிலையை நம் நாட்டில்தான் பார்க்கிறோம். அரசியலை வைத்துக் கொண்டு அரசாங்கத்தின் பேரில் குற்றம் சொல்லவேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஒரு சட்டம் வருகிறது என்றால் அதைக் கண்டு என் பயப்பட வேண்டும்? குறிப்பாக நாட்டில் சட்டதிட்டங்கள் அதிகமாக ஆக, ஆக, எப்படி பயிருக்கு வேலி அவசியமாக இருக்கிறதோ அதேபோல் அது நாட்டுமக்களின் பாதுகாப்பிற்கு என இருக்கின்றன. அதிலும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றையதினம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். பொது வாழ்வில் இருப்பவர்கள் மட்டுமல்ல, உத்தியோகத் துறையில் இருப்பவர்களுக்குக் கூட இச்சட்டங்கள் கொண்டுவரப்படவேண்டுமென்று அரசாங்கம் முனைந்திருக்கிறது என்றால் நிச்சயமாக இந்த நாட்டின் பொது வாழ்க்கையில் தூய்மை, ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை இவற்றிற்கு அது வழி செய்யும் என்றால் அதை வரவேற்காத முறையில் இன்றைய தினம் இப்படிப்பட்ட நல்ல சட்டங்கள் அல்லது திருத்தங்களுக்கு எதிர்ப்பு தெரி

is my contention So far as the object of this Bill and the object of parent Act are concerned, we have accepted it. I expect the Hon. Minister to clarify the points that have been raised by me.

With these observations, I support the amending Bill.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த மசோதாவிலே மூன்று அம்சங்களைத் திருத்தமாகக் கொண்டு வருகின்றோம்.

முதலாவதாக, செக்ரட்டரியின் அனுமதியைப் பற்றிய ஒரு திருத்தம், அது மிகச் சாதாரணத் திருத்தம்.

இரண்டாவதாக, நம்மால் ஏற்கெனவே இந்தச் சட்டத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றைப் பற்றியதாகும். அதைக் கொஞ்சம் தெளிவாக்கியிருக்கிறோம். நம்முடைய சட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டது,— இந்தச் சட்டத்தைத் தவிர வேறு சட்டம் தண்டனை கொடுப்பதற்கு இருக்குமானால், அவைகளை இந்தச் சட்டம் பாதிக்கவில்லை என்று— அதை தெளிவாக்கவேண்டுமென்று அதை மாற்றிப் போட்டு இருக்கிறோம். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது.

மூன்றாவது திருத்தம், கால அளவை நீட்டிக்கொடுத்து இருக்கிறோம். அது முக்கியமான திருத்தம்.

திரு. லத்தீப் அவர்கள் நம்முடைய அதிகாரத்தை அவர்கள் கையிலே கொடுக்கலாமா என்று கேட்டார்கள். நாம் அவர்கள் சொல்வதை முக்கியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைவிட நல்ல யோசனைகள் வருகிறபோது அது எந்தக் கோணத்திலே சொல்லப்படுகிறதோ அதை நாம் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

வேறு சட்டத்தில் இருக்கிறதா என்று கேட்டார்கள், அது உண்மை. மத்திய அரசாங்கம் கொடுத்து இருக்கிற மாடல் பில்லைச் சுட்டிக் காட்டினார்கள். ராஜஸ்தானில் 5 ஆண்டு, மராட்டியத்தில் 3 ஆண்டு என்று இருப்பதைக் கூடச் சுட்டிக் காட்டினார்கள். அதை விட முக்கியமான ஒன்று, திரு வகாப் அவர்கள் சொன்னது போல் இது நம்மை பாதிக்கிற திருத்தம், ஆட்சியில் உள்ளவர்கள் தண்டனைக்கு உட்படுத்திக்கொள்வதற்கு காலத்தை நீட்டிக்கொடுக்கிற சட்டம். அப்படி அவர்கள் சொல்கிறபோது நாம் மாட்டோம் என்று சொன்னால், இவர்கள் பயப்படுகிறார்கள் என்று சொல்வார்கள். ஆகவேதான் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இந்த சட்ட மன்றத்தில் யார், நாங்கள் உங்கள் சொத்துக்களை பறிமுதல் செய்யப்போகிறோம், நாங்கள் ஆட்சிக்கு வரப்போகிறோம், என்று பேசிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் இந்தச் சட்டத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கவேண்டிய ஒரு சட்டம்,



[முற்பகல் 11-00]

அமைச்சர்களை ஒரு ஆண்டிற்குள் தண்டிக்கலாம் என்று இருந்த சட்டத்தை மாற்றி, 5 ஆண்டுகள் வரையில் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பதற்காக ஒரு புதிய சட்டத் திருத்தத்தை, எதிர்க் கட்சிகளுக்கு சாதகமாக கொண்டு வந்திருக்கிறோம். இதைப் படித்துப் பார்க்காமலே அல்லது படித்து விட்டு வேண்டுமென்றே எதிர்க்கவேண்டுமென்ற அவல நிலை இந்த நாட்டில் இருப்பதைப்போல் வேறு எந்த மாநிலத்திலும் இருக்காது என்று கருதுகிறேன்.

இன்னொரு விசித்திரத்தையும் கண்டோம். மத்திய அரசாங்கம் ஆதரிக்கிறது, ஆலோசனை கூறுகிறது. மத்திய அரசாங்கத்தில் இருக்கும் ஆளும் காங்கிரஸ் கட்சி இருக்கின்ற மாநிலங்கள் எல்லாம் இந்தச் சட்டத்தை ஆதக்கின்றன. அவர்கள் அதை ஒத்துக்கொண்டாலும் நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்கிற விசித்திரத்தை நம்முடைய மாநிலத்தில் தான் பார்க்கலாம்.

சட்டத்தில் தவறு இருப்பதாக அவர்களால் சொல்ல முடியவில்லை. அந்தக் கருத்தில் தவறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. திருப்பித் திருப்பி இந்த மன்றத்தில் கேட்டோம். சொல்ல மறுத்து விட்டு, வெளியேறினார்கள். அவர்களுக்கு இருப்பதெல்லாம் இப்படி ஒரு நல்ல சட்டம், மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஊட்டுகின்ற சட்டம், அவதூறு கூறி, வெளியில் கூறி, ஆதாரம் இல்லாமல் பேசிவிட்டே காலத்தைக் கடத்திவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற தலைவர்களுக்கு ஆபத்தான சட்டம், அந்த சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்துவிட்டதே என்ற கவலைதான். அதற்கு நான் என்ன செய்வது ?

நம்முடைய மாநில அரசு எது நியாயம் என்று கருதுகிறதோ அதைச் சட்டமாகக் கொண்டு வருகிறது. இந்தச் சட்டத்தைப் பற்றியும், இருக்கின்ற சட்டத்தைப் பற்றியும் ஏற்கெனவே இந்த மன்றத்தில் விவரமாக பதில் தரப்பட்டிருக்கிறது. இங்கே விசாரணை வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தவர்களே டெல்லியைக் கேட்டார்கள். டெல்லி பதில் பேசமாட்டேன் என்கிறது என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் எந்தச் சட்டத்தின் கீழ் கேட்டார்களோ அந்த சட்டம் எந்தவிதமான அதிகாரம் இல்லாத சட்டம் என்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். நாம் அவர்கள் கேட்ட நீதி விசாரணை செய்வதற்கரக யாருடைய தயவும் இல்லாமல் நடைபெறுவதற்கு, தண்டனை கொடுக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்தால், அந்தச் சட்டத்தை கறுப்புச் சட்டம் என்று சொல்லி, அரைகுறையாகச் சொல்லி, வெளியேறிய காட்சியை இங்கே காண்கிறோம். அவர்களுக்கு இருப்பதெல்லாம் இந்த ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மந்திரிகள் இவைகளெல்லாம் தான் முன்னால் இருக்கிறதே ஒழிய,

விக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்றால் உண்மையிலே தாங்கள் ஆண்டால் ஒரு சட்டம் இருக்க வேண்டும், வேறு யாராவது ஆண்டால் அந்தச் சட்டம் தங்களுக்குப் பாதமாக வருமோ என்று அஞ்சக்கூடிய நிலையில் இன்றையதினம் இந்த நாட்டில் இருக்கிற பெரிய அரசியல் கட்சிகள் கூட இருக்கின்றன என்றால் உண்மையில் அரசியலில் இன்னும் நாகரிகமும் பண்பும் வளரவேண்டும் என்பதைத்தான் இது தெளிவாகக் காட்டுவதாக இருக்கிறது. தாலி கட்டியாகி விட்டது. திருமணம் நடந்து விட்டது. அந்தத் திருமணத்திற்கு ரெஜிஸ்ட்ரார்ரான ஜனாதிபதி அவர்களும் கையெழுத்துப்போட்டு விட்டார்கள். இப்போதிருப்பதெல்லாம் சீர் வரிசை கேட்பதில் கொஞ்சம் ஏறத்தாழ ஒரு ஆண்டு என்பதை ஐந்தாண்டுகள் என்று மாற்றலாம் அல்லது ஆறு மாதம் என்பதை ஒரு ஆண்டு என்று மாற்றலாம் என்பதுதான்.

(திரு ச. சங்கமுத்து தேவர் அவர்கள் சபையில் வந்து உட்கார்ந்தார்.)

திரு எம். ஏ. லத்தீப் : திரு தேவர் அவர்கள் சபைக்கு வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் அந்த வெளிநடப்பில் கலந்து கொள்ளவில்லையா ? அவர்கள், அவர்கள் தலைவர் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லையா ?

(திரு. ச. சங்கமுத்து தேவர் அவர்கள் சபையைவிட்டு வெளியேறினார்.)

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்களது கட்சித் தலைவர் கூறியதை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்களா என்பதைச் சுட்டி காட்டுவதற்காகத்தான் அதைச் சொன்னேன்.

திரு. கே. ஏ. வகாப் : ஆக, திருமணம் நடந்துவிட்டது. திருமணம் நடந்த பிறகு கட்டிய தாலியை அவிழ்க்கச் சொல்வது போன்ற முறையில் நடக்கிற ஒரு சூழ்நிலை இன்று சட்டமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

பொதுவாக இந்தச் சட்டம் பொது வாழ்க்கையில் உள்ளவர்களின் தூய்மையை அதிகப்படுத்துவதற்கு பாதுகாப்பளிப்பதாக இருக்கிறது. இதை எதிர்த்திருக்க வேண்டுமென்றால் ஆளும் கட்சியில் உள்ளவர்கள், அரசுத் தரப்பில் இருக்கிறவர்கள் எதிர்த்திருக்க வேண்டும், ஏனெனில் ஒரு ஆண்டு என்பதை ஐந்தாண்டுகளாக மாற்றிவிட்டார்கள். இன்றைய தினம் குற்றஞ்சாட்டப்பட்டு ஐந்தாண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றிருக்கிறது. ஒரு ஆண்டு என்பது குறுகிய காலம், பழி சுமத்தப்பட்டால் ஒரு ஆண்டு காலத்திற்குள் எல்லாம் தீர்ந்துவிடும். அதைக் கண்டு ஒரு வேளை எதிர்கட்சியினருக்கு அது நம்மையெல்லாம் பாதிக்கக் கூடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்குமானால் அந்த அச்சம் வரவேண்டியதற்குக் காரணம் என்ன ? அரசியலுக்குக்காகத்தான் வேண்டாம் என்று சொல்கிறார்களே தவிர நாட்டில் நாணயம், ஒழுங்கு இவற்றைக் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லவில்லை என்று எண்ண வேண்டியிருக்கிறது.



ஆக, இந்தச் சட்டம் பொது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த, நாட்டில் நாணயம், ஒழுக்கம் இவற்றைக் காப்பாற்றவும் அவற்றிற்கு நல்ல ஆதரவும் வலிவும் ஊட்டுவதாக இருக்கிறது என்று கூறி இதை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு எம்.ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இதன் மூலச்சட்டத்தை
நாம் ஏற்கனவே விரிவாக விவாதித்து இந்த அவையில் நிறைவேற்றி
யிருக்கிறோம். மூலச் சட்டத்தின் மீது பேசும்போது இந்தச் சட்டத்தின்
நோக்கங்களை நாம் ஏன் ஆதரிக்கிறோம் என்பதைப் பற்றி நாம்
எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்போது இந்தத் திருத்தச் சட்டத்தைப்
பொறுத்தவரையில் விதி 8-யையும், 14 -யையும் திருத்தும் வகையில்
இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இதன்
நோக்கங்களை விளக்கியிருக்கிறார்கள். ஏன் இந்தச் சட்டத்தை நாம்
கொண்டுவந்திருக்கிறோம் என்ற நோக்கங்களை இந்த மசோதாவில்
விளக்கியிருக்கிறார்கள். அப்படி விளக்கும்போது மத்திய அரசோடு
மாநில அரசு செய்துகொண்டிருக்கிற பரிமாற்றங்களின் அடிப்படை
யில்தான், மத்திய அரசு வெளிப்படுத்திய சில கருத்துக்களின்
அடிப்படையில்தான் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்
என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மத்திய அரசு இத்தகைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது என்றால்
எந்த அடிப்டையில் சொல்லியிருக்கிறது. ஏற்கனவே இத்தகைய
சட்டம் வேறு மாநிலங்களிலே இருப்பதாக நாம் அறிகிறோம்.
அந்த மாநிலங்களிலே இத்தகைய ஒரு முறையை அதாவது ஒரு ஆண்டு
என்று இருப்பதை 5 ஆண்டு என்றும், 6 மாதம் என்று இருப்பதை
1 ஆண்டு என்றும் அவர்கள் விதிமுறையிலே சட்டத்திலே இடம் அளித்து
அவர்கள் சட்டம் இயற்றியிருக்கிறார்களா ? மற்ற மாநிலச் சட்டங்களை
ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அதற்கும் இதற்கும் இசைவாகவும், ஒத்துப்
போகக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் சொல்லியிருக்
கிறார்களா என்று அறிய நான் ஆசைப்படுகிறேன். மேலும், மாநில
அரசு சட்டங்களை, மாநில சட்ட மன்றத்தின் முன் வைத்து நிறை
வேற்றும்போது, அந்த சட்டத்தின் நோக்கத்தை விவரிக்கும்போது
மத்திய அரசு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்
படையில் தாங்கள் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்
வதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் மாநில
அரசு ஒரு மாநிலத்திற்குத் தேவையான சட்டத்தை எந்த அடிப்படையில்
இருக்கவேண்டுமோ அந்த அடிப்படையில் தான் செய்யும். அந்தப்
பொறுப்பு மாநில அரசுக்குத் தான் உண்டு.

"That is the entire responsibility and prerogative of the Executive of the State Government and it has to be decided by the State Government"

என்ற அடிப்படையில்தான் சொல்லவேண்டுமே தவிர மத்திய அரசு சொல்லிஇருக்கிறது, மத்திய அரசு சொல்லிய கருத்தின் அடிப்படையில்

## தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74)



மக்களிடத்தில் சொல்லி, மத்திய சர்க்கார் அப்படி ஐந்தாண்டு போட வேண்டும் என்று சொல்லிய உடனே, அதை எற்றுக்கொண்டு இந்த அரசு திருத்தம் கொண்டு வந்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு, இப்படிப் போடுவது நியாயம் தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். கே. பழனிசாமி அவர்கள் இருக்கையில் இல்லாததினால் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தம் திரும்பப் பெற்றதாகக் கருதப்படும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது. பேரவையின் முன்னுள்ள கேள்வி ;

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"முகப்புரை கூட்ட முன் வடிவின் உரிய பகுதியாக் ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

In the enacting formula of the Bill, for the words "Twenty-fourth year" *substitute* the words "Twenty fifth year"

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது

முகப்புரை திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move that the bill as amended be passed.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன் வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



## (இ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமையுரிமை வழங்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) எங்கெல்லாம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதோ அப்பகுதிகளில், 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் நாள் நிலவரப்படி உழவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் அனுபோகத்திலிருந்த குடியிருப்புகளை அவர்களுக்கு உரிமையாக்குகிறது. இச்சட்டம் தற்போதுள்ளபடி, மலைத் தோட்டங்களுக்கும், மலைத் தோட்டங்களில் தொடர்பான நோக்கங்களுக்காக உடைமையில் வைத்துக் கொண்டுள்ள நிலங்களுக்கும் பொருந்துகிறது.

மலைத் தோட்டங்களுக்குச் சொந்தமானவையும் தொழிலாளர் நலத் திட்டங்களின் கீழ் அரசிடமிருந்து உதவித் தொகை பெற்றுக் கட்டப்பட்டுள்ளவையுமான குடியிருப்பு இல்லங்களில் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் பலர் வசித்து வருகின்றனர். அந்தக் குடியிருப்பு இல்லங்களில் வசித்து வரும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவற்றின் உடைமையுரிமையை வழங்குவதால் அந்த இல்லங்கள் எந்த நோக்கங்களுக்காகக் கட்டப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேறாமற்போகும் என்பதால், அவ்வாறு செய்வது பொருத்தமாயிராது என்று கருதப்படுகிறது.

ஆனால், இச்சட்டத்தை நீட்டிக்கும் பொழுது, நீக்கப்பட வேண்டிய பகுதி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தனித்தனி மனைகளின் அடிப்படையில் நீக்கம் செய்யப்படவியலாது. மலைத் தோட்டங்கள் அமைந்துள்ள கிராமங்கள் முழுமையும் நீக்கப்படுமானால், இந்தக் கிராமங்களில் மலைத் தோட்டப் பயிர்களல்லாத பிற பயிர்களைப் பயிரிட்டுவரும் உழவுத் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்படுவர் ; அவர்களது அனுபோகத்திலிருந்து வரும் மனைகளின் உடைமையுரிமைகளைப் பெறும் நலன் அவர்களுக்குக் கிடைக்காமற் போகும் எனவே, இச்சட்டத்தைத் தக்கவாறு திருத்தி, மலைத் தோட்டத் தொழிலாளர்களையும், மலைத் தோட்டங்களையும், மலைத்தோட்டங்களின் தொடர்பான நோக்கங்களுக்காக வைத்து வரப்படும் நிலங்களையும் சட்டத்தின் செயல்வரம்பிலிருந்து திட்டவட்டமாக நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

* 21-1-1974 தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் ஒரு குறையும் சொல்ல முடியாது, இந்தச் சட்டத்தின் கருத்துக்களில் எந்தத் தவறும் சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல முடியாத காரணத்தினால் தான் மத்திய சர்க்கார் அனுமதி தந்திருக்கிறது.

நம்மைப் பொறுத்த அளவுக்கு, எதிர்க்கட்சிக்காரர்களைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை, அவதூறு கூறுபவர்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. இப்படியே பேசி அரசியல் நடத்திவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களைப் பற்றி கவலையில்லை. இந்த ஆட்சியை வெறும் பிரச்சாரத்தினால் மாற்றிவிடலாம், அவதூறு பேசியே மாற்றி விடலாம் என்று நினைப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை.

எங்களுடைய எண்ணம் நேர்மையான எண்ணம், இந்த நாட்டைப் பற்றியது. யாராவது ஆட்சியிலிருப்பவர்கள், அதிகாரத்திலிருப்பவர்கள் தவறு செய்வார்களேயானால், அதைக் கேட்பதற்கு ஒரு அமைப்பு வேண்டும், சுதந்திரமான அமைப்பு வேண்டும், அரசியல் தலையீடு இல்லாத அமைப்பு இருக்க வேண்டும், அந்த அமைப்பைப் பற்றி எந்தக் குடிமகனும் எடுத்துச் சொல்லலாம். இன்ன தவறு நடந்திருக்கிறது என்று நிரூபிக்கலாம், தண்டனை வாங்கிக் கொடுக்கலாம் என்ற உன்னதமான நோக்கம் இந்தச் சட்டத்தில் பிரதிபலிக்கிறது.

எந்த மாநிலமும் கொண்டு வராத புதிய முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஒரு தூய சட்டம், நேர்மையான ஆட்சி, நியாயமான ஆட்சி நடைபெற வேண்டும். தவறு இழைத்தவர்களுக்கு தண்டனை கொடுக்கக்கூடிய சட்டம் என்ற அடிப்படையில் தான் கொண்டுவந்திருக்கிறோம். மக்கள் இதை ஆதரிக்கிறார்கள். நான்கு கோடி தமிழ் மக்கள் இதை ஆதரிக்கிறார்கள். இப்பொழுதே மற்ற மாநிலங்கள் எங்களைக் கேட்கின்றன, எப்படி இந்த சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள், நகலை அனுப்பிவையுங்கள் என்று கேட்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சட்டம் மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால்தான் அந்தக் காட்சியின் பிரதிபலிப்பை இங்கே பார்க்கிறோம்.

கறுப்புச் சட்டம் என்று கூறி வெளியேறியிருக்கிறார்கள். மக்களிடையே இந்த சட்டத்திற்கு வரவேற்பு இருக்கிறது, நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையை நாம் காண்கிறோம். அவதூறு கூறப்படுமேயானால், வதந்தியைப் பரப்பினால், ஆதாரம் இல்லாமல் சொன்னால், பொய்க் குற்றச்சாட்டு சொன்னால், பொய்க் குற்றச்சாட்டு என்று கூட சொல்ல முடியாது, இப்படிப்பட்ட சட்ட திட்டங்களுக்குள் வந்தால் மூன்று ஆண்டு கால தண்டனை என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் பற்றி பயப்படுவதற்கு என்ன காரணம்? இதைப் பற்றி ஏன் பயப்பட வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மூன்று ஆண்டு கால தண்டனை மற்ற மாநிலங்களின்



சட்டங்களில் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவுக்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு தருவார்கள் என்பதில் பூரண நம்பிக்கை உண்டு.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால், யார் ஆட்சியில் இருந்தாலும், நீதியும், நேர்மையும் நிறைந்த ஆட்சியை உருவாக்க பயன்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அமைச்சர்களுக்கு மட்டுமல்ல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொருத்தமாகத் தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். யார் பதவியில் இருந்தாலும், தவறு செய்தால் அதைப்பற்றி விசாரிப்பதற்கு, தண்டனை கொடுப்பதற்கு அரசு சம்பந்தப்படாத ஒரு சுதந்திரமான நீதிமன்றம் உருவாக வேண்டும் என்ற புதிய தத்துவத்தின் அடிப்படையில் தான் நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சட்டம், ஆகவே, இந்த திருத்த மசோதாவை எல்லோரும் ஆதரித்து சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் எழுப்பிய பிரச்சினை மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் இடையே எவ்வளவோ கருத்து பரிமாறல்கள் ஏற்படலாம். அதில் தவறு இல்லை. ஒரு சமஷ்டி அரசியலில் அதை ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். அவ்வாறு ஏற்படக் கூடிய ஒரு கருத்து பரிமாறலைப்பற்றி, அதன் காரணமாக மத்திய சர்க்காருடைய கருத்தின் அடிப்படையில் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்ற நோக்கத்தில் எடுத்துக்கூறுவது எவ்வளவு தூரம் நம்முடைய அதிகாரத்தை உறுதி செய்வதாக இருக்கும். அது எவ்வளவு தூரம் இந்த அவையினுடைய, இறையாண்மையை காப்பாற்றக்கூடியதாக இருக்கும் என்ற அடிப்படையில் நான் கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

இது மாதிரியாக வேறு எந்த சட்டத்திலாவது, மசோதாவின் நோக்கத்தில் இப்படி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதா? மத்திய சர்க்கார் கருத்தின் அடிப்படையில் தான் கொண்டு வருகிறோம் என்று மாநில சர்க்கார் நோக்கங்களை எடுத்துக் கூறுகிற நோத்தில் ஏன் சொல்ல வேண்டும், இது எந்த அளவுக்கு நம்முடைய அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருக்கும், இது இந்த அவையினுடைய அதிகாரத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் இருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் விளக்கம் சொல்லிக் கொண்டே இருக்கிறேன் விளக்கத்தைவிட நான் சொல்ல விரும்புவது, நம்முடைய அமைச்சர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஐந்தாண்டு வரையில் தண்டிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு எடுத்துக் கூறியிருக்கிறது. அதை

இச்சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் நிலைபெற்றுள்ள, அந்தக் குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் முழுவதையும் அல்லது அவற்றின் பகுதி எதனையும் விற்பனை செய்யவோ, அடைமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, அல்லது வேறு வகையில் உடைமை மாற்றம் செய்யவோ கூடும் எனக் கருதப்படுகிறது. எனவே, குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் நிலைபெற்றுள்ள, குடியிருப்பு அனுபோகக்காரர், அனுமதி பெற்ற அதிகாரியின் முன்னனுமதியைப் பெற்றாலன்றி அக் குடியிருப்பைப் பத்து ஆண்டு காலம் வரைக்கும் உடைமை மாற்றம் செய்வதைத் தடை செய்து, இச்சட்டத்தில் விதித்துறை இயற்றப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அனுமதி பெற்ற அதிகாரி அனுமதி மறுத்துப் பிறப்பித்த ஆணையால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமையை வழங்கவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவமளிக்க இந்தச் சட்ட முன்வடிவு விழைகிறது.

இப்பேரவை இதனை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

இப்போதுள்ள இந்தச் சட்டமே கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம், ராஜபாளையம் டிவிஷன் போன்ற மாவட்டங்களில் அமுலுக்கு வரவில்லை. அங்கே உள்ள குடியிருப்புதாரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. அதேமாதிரி, நகர பஞ்சாயத்துக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் விவசாயத் தொழில் செய்யும் பல மக்கள் நகர பஞ்சாயத்துக்களில் குடியிருக்கிறார்கள். பெரிய கிராமங்கள் பூராவும் இப்போது நகர பஞ்சாயத்துகளாக இருக்கின்றன. அங்கே குடிசையில் வாழும் விவசாயிகளுக்கு குடிசைகள் சொந்தமாக்கப்படாமல் இருக்கிறது. மலைத் தோட்டங்களில் மூதாதையர்கள்—தந்தை, பாட்டன் ஆகியோர் குடியிருந்த குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்படாமல் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிமை அளிக்கப்படவில்லை, என்பது நியாயமா என்று தெரியவில்லை. தஞ்சை மாவட்டத்தில் குடிசைகளைச் சொந்தமாக்கக்கூடிய முறை சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை.

அவர்கள் முன்பு இருந்த குடிசையின் பரப்பு 1 செண்ட், 2 செண்ட் என்று இருந்தால் அந்த இடத்தை மாத்திரம் பட்டா செய்து கொடுக்கிறார்கள். அந்த இடத்தில், காலை நீட்டிக்கொண்டு படுப்பதற்குக் கூட போதாது. என்னிடம் சில விவசாயிகள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இதுவரையில் காலை நீட்டிக்கொண்டு படுத்தது கிடையாது என்று. அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கக் கூடிய இடம் அப்படி இருக்கிறது. அவர்கள் புழங்குவதற்கு இடம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் புழங்கிக் கொண்டிருந்த கொல்லை நிலச்சுவான்தாருக்கு கொடுக்கப்படுகிறது. கிராம



அதிகாரிகள், கர்ணம், ஆகியவர்களை கைக்குள் போட்டுக்கொண்டு பல இடங்களில் இருந்த குடிசைகளை அந்த இடத்தில் குடிசையே இல்லை என்று சொல்லக் கூடிய நிலைமை வளரக் கூடிய நிலைமை எல்லாம் இருக்கிறது.

அதேபோல, நகர பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கே விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குடியிருந்த குடிசைகள் அவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும். அனுபோகம் உள்ளவர்களுக்கு, குடியிருப்பு மனை இல்லை என்று சொல்வது சரியல்ல. அந்த முறையில் இந்த சட்டம் அமுலாக்கப்பட வேண்டும். கேரளாவிலும், பாண்டிச்சேரியிலும் ஒரு சட்டம் வந்திருக்கிறது. கட்டாயமாக $7\frac{1}{2}$ செண்ட் நிலம் இருக்க வேண்டுமென்று. ஒருவனுக்கு $\frac{1}{2}$ செண்ட் இடத்தில் குடிசை இருக்கிறதென்றால், அதை பட்டா செய்து தருவதில் என்ன பிரயோஜனம் ? காலை நீட்டிக் கூட படுக்க முடியாது. அந்த இடத்தை அளந்து கொடுத்தால் போதாது. குறைந்த பட்சம் $7\frac{1}{2}$ செண்ட் இருக்க வேண்டும்.

கேரளாவில் முனிசிபாலிடி என்றால் 3 செண்ட், நகர பஞ்சாயத்து என்றால் 5 செண்ட், கிராம பஞ்சாயத்து என்றால் $7\frac{1}{2}$ செண்ட் என்ற முறையில் குடியிருப்பு பட்டாக்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த மாநிலத்தில் எங்கே குடியிருந்தாலும் சரி, விவசாயத் தொழிலாளர்களுக்கு குடி இருக்கக் கூடிய இடம் சொந்தம் ஆக்கக்கூடிய நடைமுறை அமுலாக்கப்பட வேண்டும். தஞ்சையில் பல இடங்களில் வைத்த மரங்கள் நிலச்சுவாந்தார்களுக்குப் போய்விடுகின்றன. கொல்லைப் புறம் போய் விடுகிறது. இது அவர்களுக்குப் பிரயோசனப்பட வேண்டும்.

மலைத்தோட்டத் தொழிலாளர்கள் பரம்பரையாக சர்வீஸிலிருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மனை சொந்தமாக்கப்படவேண்டும் என்று கூறி, இந்தத் திருத்தம் சரியாகாது என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு குழ. செல்லையா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்டத்தைக் குறித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் மிக நல்ல சட்டம் என்றாலும் இந்தச் சட்டத்தில் இருக்கின்ற முறையற்ற சில காரணங்களால் உண்மையிலே குடியிருந்து வருகிற குடியிருப்புக்காரர்களுக்கு நிரந்தரமாக இருக்க முடியாத சூழ்நிலை தஞ்சை மாவட்டத்திலிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால், குடியிருந்து வந்த விவசாயக் கூலிகள், இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னால் சட்டத்தில் ஏற்பட்ட ஒரு சில ஓட்டைகளின் காரணத்தால், நிர்வாக ஆட்சிப் பொறுப்பிலுள்ள

அதிகாரிகளின் காரணத்தால், தொடர்ந்து குடியிருக்க முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணியில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, கொடிவயல் விஜயபுரம், மங்கல்நாடு, அமரசிமேந்திரபுரம் என்ற கிராமங்களிலெல்லாம் மாவட்ட பொறுப்பு செயலாளர் ராஜனுடைய சொந்த கிராமங்களாகும். அங்கு பரம்பரையாக 30, 40 ஆண்டுகள் குடி இருப்பவர்களுக்கெல்லாம் குடியிருப்பு மனை வழங்கப்படவில்லை. அங்கே குடியிருப்பது என்று சொல்லக் கூடிய அதிகாரம் கையிலிருக்கிற காரணத்தால், ஒரு முறையில்லாமல், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல கிராம கணக்குப் பிள்ளை பட்டாமணியம் ஆகியவர்களை கையில் வைத்துக்கொண்டு, சிட்டா அடங்கல் ஆகியவற்றிலே பெயர்களைக் குறிப்பிடாமல் அங்கே குடியிருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பட்டா செய்திருக்கிற காரணத்தால் பல கிராமங்களில் பொய் வழக்குகள் போடப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். பல குடிகள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சீர்கேடான நிலைமைகள் எல்லாம் தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக நடைபெறுகிறது. குடியிருப்போர் யார் என்று சொல்லக்கூடிய அதிகாரம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் நியாயமாக செயல்படாமல் விவசாயப் பெருங்குடி மக்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படக் கூடிய நிலை தஞ்சை மாவட்டத்தில் காணப்படுகிறது. மேலும், ஒரு செண்ட், இரண்டு செண்ட் என்ற முறையில் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அந்த இடம் போதாது. 5 செண்டுக்குக் குறையாமல் இருக்குமாறு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, இடம் தரப்படாதது மாத்திரமல்லாமல், பொய் வழக்கு போடப்படுகிறது. எனவே விவசாயப் பெருங்குடி மக்கள் குடியிருப்பு மனைகளுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் வந்ததற்குப் பின்னால்தான் சரியான பாதுகாப்பு குடியிருப்பவர்களுக்குத் தேவைப்படுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தச் சட்டத்தில் விவசாயிகளுக்கு உண்மையிலேயே பாதுகாப்பு அளிக்கிற திருத்தங்களைக் கொண்டு வந்து, விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோருடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகிற அளவில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு எஸ். வடிவேல்</u>: மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திற்கு திரு அழகர்சாமி அவர்கள் கொண்டுவந்த திருத்தங்களை ஆதரித்து சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்,



குறிப்பாக, குடியிருப்பு மனை சம்பந்தமாக தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு வகையில் விவசாயக் கூலிகள் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பல இடங்களில் அவர்கள் குடியிருந்த இடங்களில் இருந்தே பலவிதமான காரணங்களை வைத்து வெளியேற்றுகிறார்கள்.

என்னுடைய சீர்காழி தொகுதியில் ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு உமையாள் கிராமம் என்று இருக்கிறது. ½ செண்ட் ஒதுக்குகிறோம் என்று சொல்லி, அங்கே உள்ளவர்கள் மனைகளை வேண்டாம் என்று நிறுத்திவிட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு உள்ளூர் பங்களா, தோட்ட பங்களா, குற்றால பங்களா, நீலகிரி பங்களா, என்று அங்கே முப்பது அறைகள், நாற்பது அறைகளோடு பங்களாக்கள் இருப்பதைப் பார்க்கிறோம். சாதாரண ஏழை விவசாயத் தொழிலாளிக்கு இரண்டு செண்ட், ½ செண்ட் என்று கொடுத்து வருகிறார்கள்.

திரு செல்லையா அவர்கள் சொன்னதைப்போல எங்கள் மாவட்டத்தில் நிலம் கொடுக்கிறோம் என்று, ½ செண்ட் கொடுத்து, நான்கு பக்கமும் வேலிபோட்டு அடைத்து அவர்களை முடக்குகிறார்கள். அவர்கள் வைத்த தென்னை மரம், மா மரம், புளிய மரம், வாழை மரம் எல்லாம் குடியிருப்பு மனை வழங்குவதாகச் சொல்வதன் மூலம் நிலக்காரருக்கு வழங்கப்படுகிறது என்பதை தங்களுடைய கவனத்திற்குத் தாழ்மையாகக் கொண்டுவருகிறேன்.

ஒரு விவசாயி என்றால்—விவசாயப் பொருளாதாரத்தில் அவன் கோழி, ஆடுமாடுகளையாவது வைத்துக்கொண்டால்தான் பிழைக்க முடியும். ஆகவே கிராமங்களில் நிலம் குடியிருப்புக்கு வழங்கும்போது 10 செண்ட்டாவது வழங்க வேண்டும். நகர்ப்புறங்களில் 5 செண்ட்டாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கிற இடம் ஈரம், சகதியாகவே இருக்கிறது. அந்தமாதிரி இடங்களில்தான் அவர்களுக்கு குடியிருப்புக்கு நிலத்தைச் சுற்றி வளைத்துக் கொடுக்கிறார்கள். அதுவும் கணக்குப்பிள்ளை, பட்டாமணியம் அளக்க வருகிறபோது 5 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் சட்டம் போட்டும் நடக்காது குடியிருப்புக்கு அவனுக்கு நிலமும் கிடைக்காது. கர்ணத்தால் ஆகாதது, கலெக்டராலும் ஆகாது என்கிற பழமொழியே எங்கள் பக்கத்தில் உண்டு. அரசாங்கம் இந்தச் சட்டத்திலேயே ஹரிஜனங்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 10 செண்டாவது கிராமப் புறங்களில் குடியிருப்பு மனை வழங்கவேண்டும்.

இன்னும் தேயிலை தோட்டங்களை எடுத்துக்கொண்டால்—அந்தக் காலத்திலே பண்ணைக் கொடுமை பொறுக்கமாட்டாதுதான் பலபேர்கள் பல மாவட்டங்களில் இருந்து தோட்ட வேலைக்கு ஓடினார்கள். பத்து வருஷம், இருபது வருஷமாக அங்கே வாழ்ந்தவர்களுக்கு—அங்கேயிருந்து அவர்களை வெளியேற்றி, இங்கேயும் இடமில்லாது நிற்கதியாக விட்டுவிடுவது சரியல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு மனை வழங்க அரசு தரப்பில் திருத்தம் கொண்டு வந்து பாஸ் செய்யும்படி கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

போட்டிருக்கிறார். ஆனால், 3 செண்ட் போதுமா என்று ஆராய்ந்த பொழுது, பல இடங்களிலே, பல சிக்கல்களை, சங்கடங்களை, உருவாக்கி யிருக்கிறது.

குறிப்பாக, மேட்டூரிலே 3 செண்ட்டுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று உத்தரவு. அங்கே 3½ செண்ட் நிலத்தில் வீடு கட்டியிருக்கிறார்கள். அந்த வீடுகளுக்குப் பட்டா வழங்கமுடியாமல், இந்தச் சட்டம் தடையாக இருக் கிறது. ஆகவே, 3 செண்ட் என்று போடுவதை விட்டு, சாதாரண மனிதன் வாழ்வதற்கு எவ்வளவு நிலம் தேவை என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால், எண்ணிக்கையைப் பார்த்துக் கொண்டுவரப்படுகிறது என்று மாண்புமிகு சண்முகம் அவர்கள் கூறினார்கள். எவ்வளவு பேர் ஒரு குடும்பத்தில் இருக்கிறார்களோ, எவ்வளவு பேர் சௌகரியமாக வாழ முடியுமோ, அதைக் கணக்கிட்டுத்தான் செய்ய வேண்டுமே தவிர, எண்ணிக் கையை அதிகப்படுத்துவதன் மூலம், புள்ளி விவரங்களின் மூலம் கொண்டு வருவது பயன் தராது.

இங்கே அனைவரும் கூறினார்கள், கிராமத்திலே உள்ளவர்கள் எவ்வளவு வீடுகள் வைத்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு மட்டும் அவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்ற முறை சரியானதல்ல. ஏனென்றால், அந்தஅந்த இடத்தை அவர்கள் பிடித்துக்கொள்கிற பொழுது, அங்கே இருக்கிற சூழ் நிலைகள், அங்கே இருக்கிற வசதிகள், இடத்தினுடைய வசதிகள், இவை களெல்லாம் சேர்ந்துதான் அந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. எனவே, எவ்வளவு ஆட்கள் என்ற கருத்தின் அடிப்படையில் வசதிகள் இருந்தால் குறைவான வசதிகள் ஏற்படும். அந்தக் குறைவான வசதிகளைத் தீர்ப்ப பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு, முறையான குடியிருப்பு களுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், மலையிலே இருக்கிறவர்கள் வேறு, சம தளத்திலே இருக்கிறவர்கள் வேறு என்ற நிலைமையிலே இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. மலையிலே இருப்பவர்கள் கீழே உள்ளவர்களைவிட இன்னும் இன்னும் ரொம்ப சிரமத்திற்கு ஆளாகிறவர்கள். அப்படி இருக்கக்கூடிய வர்கள் ஆதிவாசிகள். அங்கிருக்கக்கூடியவர்களுக்கு குடியிருப்பு வழங்க வேண்டியதில்லையென்று சொன்னால், அது என்ன மாதிரியான நடவடிக் கையைக் குறிக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கே இருக்கிறவர்களும் ஏழைகள்தான், இங்கே இருக்கிறவர்களும் ஏழைகள் தான். இவர்களுடைய குடியிருப்பும் அவர்களுடைய குடியிருப்புகளும் ஒரே மாதிரியானவைதான். அவர்கள் மலை மேலே இருக்கிறார்கள். என்று சொன்னால், இன்னும் அதிகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

மலைவாசிகள் பழைய காலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தான் அதிகபட்ச ஆதரவு தேவை. சட்டத்தைச் சரியான முறையிலே அலசிப் பார்க்காமல், நோக்கத்தை ஆராய்ந்து பார்க்காமல் இதை நாம் செய்கிறோம். மற்றவர்கள் இந்த சர்க்கார் ஏதோ செய்வதாக எண்ண வேண்டுமென்று தான் இதைக் கொண்டு வந்திருக்கிறதே தவிர எந்த வகையிலே ஆராயவேண்டுமோ, அந்த வகையிலே ஆராய்ந்து இந்த திருத்தம் கொண்டுவரப்படவில்லையென்பதன் காரணமாக இதை எதிர்க் கிறேன் என்று சொல்லி முடிக்கிறேன்.



திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தத் தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தை வரவேற்றாலும்கூட, இதிலே சொல்லாத முக்கியமானவைகளை அரசு ஆராய்ந்து செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் நான் பேச விரும்புகிறேன். ஏற்கனவே, இந்த 3 செண்ட் நகர்ப்புற மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருப்பது. அந்தக் குடியிருப்பு நிலத்தை வழங்கு வதிலே, ஒரு மனிதாபிமான பிரச்னையாக இருக்கிறது. அந்த அளவிலே இதை நோக்க வேண்டுமே யொழிய ஏதோ 3 செண்டும் ½ செண்டும் கொடுத்து, ஏற்கனவே குடியிருக்கிறவர்கள் வழக்கமாக ஓரளவிற்குப் பலன் அடையக்கூடிய அளவிலே, வாழை மரங்களையும் தென்னை மரங் களையும் வைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது அவர்கள் அவைகளை எல்லாம் கஷ்டப்பட்டுப் பயிராக்கியிருக்கிறார்கள்— சிலர் கிழ்ப் பயிர்கள் கூட வைத்திருக்கிறார்கள். இந்த கிழ்ப் பயிர் வைத்திருக்கிற இடங்களிலும் 3 செண்ட்டுக்கு உள்ளாக வர இயலாது. ஆகையினால், இதை உயர்த்தி குறைந்த பட்சம் 10 செண்ட்டாகக் கொடுக்கவேண்டு மென்று பல அங்கத்தினர்கள் கூறி இருக்கிறார்கள். அதை நான் ஆதரிக் கிறேன். அந்த 10 செண்ட்டாவது குறைந்த பட்சம் கொடுத்தால் தான் அவர்கள் ஓரளவு மனிதர்களாக, சுபீட்சமாக வாழ்வதற்கு, மினிமம் நெசசிட்டி என்று கூறக்கூடிய அளவிலே அவர்களுக்கு அதைச் செய்வ தற்கு அரசு முன் வரவேண்டும்.

அதுவுமல்லாமல், இந்தக் குடியிருப்பு அலாட் செய்கின்ற முறையிலே பல கோளாறுகள் இருக்கின்றன. கோளாறுகள் அடிப்படையிலே இருந் தால் அதைத் தவிர்த்தாக வேண்டும். கர்ணம் செய்வதை கலெக்டர் செய்ய இயலாது என்று கூறுவதைப் போல், அவைகளையெல்லாம், குடி யிருப்புகள் வழங்கும்போது, அங்கே, ஏற்கனவே குடியிருக்கக்கூடியவர்கள், வழங்கக் கூடியவர்களுடைய வெறுப்புக்கும் ஆளாகாமல் பெறுகின்ற, ஒரு தனிப் பட்ட முறையிலே அதைத் தீர ஆராய்ந்து கொடுத்தால்தான் அரசு எந்த நல்ல காரியம் செய்ய முன் வந்தாலும் கூட, அதை இம்பிளி மென்டேஷன் செய்யும்போது வரக்கூடிய கோளாறுகளின் காரணமாக, மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகையினால், இந்த 10 செண்ட்டை கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி, அரசு அதை ஆராய்ந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, on behalf of the Swatantra Party, I welcome this Bill. At the same time, I want to offer a few remarks regarding the actual implementation of the Bill properly. Now as it is, it is the right of a man to have some minimum requirements, that is a house to live in and it is the duty of the Government to see that at least the minimum requirement of constructing a house is fulfilled and the extent of land should be given to any man who is a citizen of the country.

Now, regarding implementation, I want to say that this Bill should be implemented properly. At the same time, in village parts, some people will be deprived of ownership due to the activities of the Karnam or other local interference. That should not take place. The poor people are suffering a lot and Government should see that such things do not take place. For this, it would be desirable to have a Committee of the village or taluk to see that such mischiefs do not take place in the implementation and proper attention is given to the needs of the people.

In certain villages people have constructed houses in poramboke lands, road porambokes and temple lands. The Government must come forward to help such people if there is no objection. In some places, eventhough there is no objection they are demolishing the houses constructed. In such cases protection should be given to the poor people. Eventhough it be the Government land, even as we ask the private people to give away such lands, Government also should follow that principle and not evict the poor people who have put up houses in poramboke lands. Such lands should be converted into house-sites and given to the people at the rate of 5 or 10 cents as Government may decide.

Coming to the Estates, as our hon. friend Thiru Surendran pointed, it is essential that every body must have house-sites. The conferment of ownership or lands is very necessary. In the Estates, I came to understand that the Government is not in a position to confer the right on the house-sites. I request that at least a block may be fixed. Just like other gentleman, the person in the Estate should have the right on house-sites. He must also have the house to live in the Estates. The Government should also bring in an amendment to that effect. For the whole area a block may be arranged and out of that at least the minimum requirement of land might be given to the Estate labourers also.

With these few remarks, I hope that the Bill will be implemented properly and every person and every citizen in Tamil Nadu will have the conferment of ownership on lands. It is the duty of the Government to see that it is done in a proper way. The Government must also see that no victimisation is made on persons who are already in possession of some poramboke lands.

Thank you, Sir.



மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய பெயரே குடியிருப்பு அனுபோகதாரர்கள் உரிமை வழங்குதல் சட்டம் என்பதுதான். ஏற்கனவே அனுபவத்தில் இருக்கிற இடங்களை அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குகின்ற சட்டம் என்ற பெயரைக் கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. எனவே தொழிலாளர்கள் எந்த அளவிற்கு அனுபவித்து வருகிறார்களோ அந்த இடத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கக் கூடிய சட்டமாகும். 10 சென்ட் ஆக இருந்தாலும் சரி, 5 சென்ட் ஆக இருந்தாலும் சரி அந்த அளவிற்குப் பட்டா செய்துகொடுக்கக் கூடிய சட்டம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 சென்ட் கொடுக்கவேண்டுமென்று கருத்தைச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், ரூரல் ஹவுஸ்லஸ், கிராமப்புறங்களிலே உள்ள வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுப்பதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக மத்திய அரசாங்கத்திற்கு நாம் சொன்னது 5 சென்ட் இடமாவது கொடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்த நேரத்திலே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சட்டம், ஏற்கனவே அவர்கள் இருக்கிற இடத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கிற சட்டமே தவிர வேறல்ல.

மூலச் சட்டத்திலே உள்ள கருத்துக்களைப் பற்றித்தான் பெரும்பாலான உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு கருத்துகள் இருக்கின்றன. ஒன்று ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டா நிலத்தில் அவர்கள் அனுபவித்து வரவேண்டுமே தவிர வேறு யாருக்கும் கொடுத்துவிடக் கூடாது என்ற முறையிலேதான் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை அநேகமாக எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்று எடுத்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்பொழுது அதிகாரிகளின் முன்னுரிமை பெற்று மாற்றலாம் என்று இருப்பது தேவையில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பதிலாக ஒரு கன்டிஷன் போட்டுவிட்டால் போதுமென்று சொன்னார்கள். சில தவிர்க்கமுடியாத நேரங்களிலே முன்னுரிமை பெறவேண்டுமென்ற அவசியம் ஏற்படுமென்ற காரணத்தில் அந்த நோக்கத்தோடு இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அடுத்த திருத்தம் மலைத்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மலைத் தோட்ட பகுதியிலே கட்டப்படுகிற வீடுகள் மத்திய அரசாங்கத்தின் மானியத்தோடும், மாநில அரசின் ஒத்துழைப்போடும் வீட்டு மனைகள், கட்டடங்கள் கட்டப்படுகின்றன. தொழிலாளர் நலத் திட்டத்தின் அடிப்படையிலே கட்டப்படுகின்றன. அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுப்பது தேவையென்று கருதித்தான் இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74)

[1974 சனவரி 29

திரு மணலி சி. கந்தசாமி : உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு, நமக்கு கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் திருத்தங்கள் கொண்டு வருவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். குடியிருப்பு மனை வழங்கு சட்டம் தஞ்சை ஜில்லாவில் அமுலுக்கு வந்துவிட்டது. அதில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள் என்ன என்பதை அலசி, ஆராய்ந்து அவற்றை நீக்கும் முறையில் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து.

நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். சில நல்ல சட்டங்கள் கூட அமுலுக்குக் கொண்டு வருகிறபோது ஓட்டைகள் தெளிவாகத் தெரிகின்றன. சட்டத் துறையும் சரி—ரெவின்யூத் துறையும் சரி—இன்றைக்கு ஓரளவு மாறியிருந்தாலும்—நிலச்சுவாந்தார்களுக்குச் சார்பாக இருக்கிற அமைப்பாகவே தலைமுறை தலைமுறையாக இருந்து வருகிறதென்பது என் அபிப்பிராயம். இம்மாதிரி சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருகிற போது அதில் ஏற்பட்டிருக்கிற ஊனங்களை வைத்துக்கொண்டு நிலச்சுவான் தார்கள் லாபம் அடைவதை, தங்களுக்கு பாதுகாப்புத் தேடிக்கொள்வதை தவிர்க்கும் முறையில் தகுந்த திருத்தங்களோடு இது கொண்டுவரப்பட்டிருந்தால் மிகவும் நல்லமுறையில் இருக்கும்.

(திரு வா. மை. அப்துல் ஜப்பார் தலைமை.)

பல அங்கத்தினர்களும் கூறினார்கள். குடியிருப்பு மனைக்கு வழங்கப்படுகிற நிலத்தின் விஸ்தீரணத்தை—நாம் உயர்ந்த பட்சம்—குறைந்த பட்சம் என்கிற அடிப்படையில் நிர்ணயித்திருந்தால் நன்றாக இருக்கும். ½ செண்டில் குடியிருக்கிறவனும் உண்டு. ஏழு செண்டில் குடியிருக்கிறவனும் உண்டு. நாம் மத்தியில் குறைந்த பட்சம் 5 செண்ட்—அதிக பட்சம் பத்து செண்ட் என்று சொல்கிற அளவில் சட்டத்தில் திருத்தம் வந்திருந்தால் பல இடங்களில் சிக்கலே ஏற்பட்டிருக்காது—நல்ல பலனை அனுபவிக்கக்கூடிய நிலைமையில் இருப்பார்கள்.

இந்த ஐந்து, பத்து செண்ட்டுகளில் உள்ள மரங்களை இவர்களுக்கே சொந்தமாக்கும் வகையில் திருத்தம் வரும் என்று எதிர்பார்த்தோம். அது இல்லை. பலயிடங்களில் இந்தச் சட்டப்படி ஒதுக்கப்படுகிற நிலத்தை வேலி வைத்து அடைத்து—ஏற்கனவே கொடுக்கப்பட்ட நிலத்தைக் கூட பறிக்கின்ற ஆபத்து ஏற்பட்டுவிட்டது. டெபுடி கலெக்டர்களிடம் எல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அடுத்து கொண்டு வருகிற திருத்தங்களிலாவது இதைப்பற்றி எல்லாம் யோசித்துச் செய்ய வேண்டும்.

தென்னை மரம் இருக்கக்கூடிய தோப்புகளை எடுத்துக்கொண்டால் தோப்புக்கு நடுவில் குடியிருந்துகொண்டு இருப்பார்கள்—பலயிடங்களில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் அங்கே குடியிருந்தாலும்—மற்றவர்களுக்கு ஒதுக்கப்படுவதைப்போல குடியிருப்புக்கு மனை ஒதுக்குவதில் இவர்களுடைய அனுபோக உரிமை பாதிக்கப்படாது பார்த்துக்கொள்ள வேண்டும். தோப்புகளில் குடியிருப்பவர்களைப்பற்றி சட்டத்தில் தெளிவான



விளக்கம் காணோம். அதுவும் எங்கள் பகுதி நிலப்பிரபுக்கள் செல்வாக்கு மிகுந்தவர்கள்—பலாத்காரத்தில் ஈடுபடத் துணிந்தவர்கள்—அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் உரிமைகளை இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதையும் கவனித்து தக்க வழிமுறைகள் சட்டத்தில் காணவேண்டும்.

அடுத்ததாக ப்ளாண்டேஷன்—தோட்டக் காடுகள்—அங்கே குடியிருப்பவர்களின் நிலைமை என்ன? நீலகிரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் சேலம் ஜில்லாவில் இருந்து—தமிழ்நாட்டில் இருந்து—பல்லாயிரக் கணக்கில் போய்க் குடியேறியிருக்கிறார்கள். அங்கே போகிறபோது விசாரித்து அறிந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் தோட்ட முதலாளியின் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இப்போது கொண்டுவந்திருக்கிற சட்டத்தை நான் ஆட்சேபிக்கத் தயாராக இல்லை என்றாலும்—எதிர்காலத்தில் கொண்டுவரப்படுகிற சட்டங்களிலாவது இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டி கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தச் சட்டம், இந்த முதன்மையான மெயின் சட்டம் கொண்டு வந்து, குடியிருப்புதாரர்கள் சட்டம் கொண்டு வந்து, அதிக நாள் ஆகவில்லை. அது இன்னும் சரியாகச் செயல்படக்கூடிய நிலைமையிலே கூட ஒரு காலகட்டம் ஏற்படவில்லை. அப்படி இருக்கிற நிலையிலே, இப்பொழுது ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலிருந்து என்ன புரிகிறது என்றால், ஒவ்வொரு சட்டத்திற்கும் அதிகமான திருத்தங்கள் வருவதிலிருந்து, சட்டங்கள் தயாரிக்கப்படுகின்றபொழுது, அவை சரியாக, ஆழமாக, சிந்தித்து, எந்த எந்தக் கோணங்களிலே ஆராய வேண்டுமோ, அப்படி ஆராய்ந்து அந்த சட்டங்கள் தயாரிக்கப்படாமல் இருக்கிற காரணத்தால் தான் அவ்வப்பொழுது வேக வேகமாக திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் இந்த திருத்தம் அமைந்திருக்கிறது.

அதோடு, இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் குடியிருக்கிறவர்கள் எல்லோருக்கும் அவர்களுக்கே அந்த இடத்தைத் தந்து விட வேண்டுமென்பது. குடியிருக்கிறவர்கள் என்று சொல்லுகின்றபொழுது, குடியிருப்பு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், எவ்வளவு இடம் இருந்தால் அந்தக் குடியிருப்புக்கு வசதியாக இருக்கும் என்று இது வரையிலும் ஆராயாமல் இருப்பதால், அது புரியவில்லை. சட்டம் வந்தும் முறையாகப் புரியவில்லை. குடியிருக்க, ஒரு குடும்பம் வாழ எவ்வளவு இட வசதி தேவை, அதிலே தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களானால், அந்தத் தொழிலுக்கு அனுசரணை யாக எவ்வளவு இடம் தேவை என்பதையெல்லாம் கணக்கிட்டு, குடியிருப்பு சம்பந்தப்பட்ட மட்டில் கணக்குத் தேவை. ஆனால், அப்படி இல்லாமல், முன்பு ரெவினியூ அமைச்சராக இருந்த மாண்புமிகு சண்முகம் அவர்கள் நகரங்களிலே 3 செண்ட்டுக்கு மேல் குடியிருப்பு தேவையில்லை யென்று ஒரு அறிவிப்பை இந்த மன்றத்திலே செய்து ஒரு உத்தரவும்

இந்தச் சட்டத்தை சரிவர நிறைவேற்றவில்லை என்று ஒரு சில உறுப்பினர்கள் கூறினார்கள். இன்னும் சிலர், கிராம கமிட்டிகள், சர்வகட்சி குழுக்கள் அமைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதும் அந்தச் சட்டம் நல்ல முறையிலே நிறைவேற்றப்படுகிறது என்பதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில குறைபாடுகள் இருக்குமானால் அவற்றையெல்லாம் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வருவார்களானால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தென்னை மரங்கள் இருக்கின்ற பண்ணைகளிலே குடியிருப்பவர்கள் நடுவிலே குடியிருந்தால் அவர்களுக்குப் பட்டா கொடுப்பதிலே இருக்கிற சிக்கல் பற்றிச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு ஓரமாக இடங்கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேவையானால் அதற்காகத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு ஆலோசித்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், இந்தச் சட்டம் டவுன் பஞ்சாயத்துக்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது டவுன் பஞ்சாயத்துக்கள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் டவுன் பஞ்சாயத்துகளுக்கும் பொருந்தும் என்று அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் நகரங்களுக்கு, சென்னை, மதுரை கார்ப்பரேஷன்கள் தவிர, விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டதற்காக நான் நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவையான திருத்தங்கள் என்ற அடிப்படையிலேதான் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

திரு. மணலி அவர்கள் பேசும்பொழுது இதிலே வருகின்ற சிக்கல்களையெல்லாம் கவனத்தில் கொண்டு அதிகமாக திருத்தங்கள் கொண்டு வந்திருக்கவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். நடைமுறையிலே சிக்கல்கள் வந்தால் எதையும் கவனித்து தேவையானால் திருத்தம் கொண்டு வரப்படுப்படும் என்று சொல்லி இந்தத் திருத்தங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி : கிராமப்புறங்களிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு 3 செண்ட் தர வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நகராட்சிகளிலே 3 செண்ட் தருவதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது. நகரமைப்பு சட்டப்படி, டவுன் பிளானிங் ஆக்ட்படி 3 செண்ட் நிலத்திலே வீடு கட்ட அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே 5 செண்ட் ஆக அதை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 3½ செண்ட் தேவை என்று நினைக்கிறேன். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மணலி கந்தசாமி : நீலகிரி மாவட்டத்திலே தோட்டத் தொழிலாளர்கள் என்று சொல்லவில்லை. அந்த வீடுகளில் குடியில்லாமல் பாக்கியிடங்களில் குடியிருந்து கொண்டு, உருளைக் கிழங்கு பயிரிடுகின்றவர்கள் இருக்கின்றார்களே, அவர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மலைத் தோட்ட தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தான் எக்ஸ்க்ளூட் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கு அந்தப் பதவி பூராவிற்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால்தான் இப்பொழுது திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### *Enacting Formula*

MR. SPEAKER : The question is—

"That the Enacting Formula do form part of the Bill".

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I move—

'That in the Enacting Formula of the Bill, for the words "Twenty-fourth Year", substitute the words "Twenty-fifth Year.".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 சனவரி 29

விவசாயிகள் இன்றையதினம் அதிகச் செலவுகள் செய்து தங்களுடைய குத்தகையை அளிக்கின்ற நிலைமையிலே இருக்கிறார்கள். ஏதோ ஒரு வருஷத்திலே குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்குள்ள சூழ்நிலையைக் கொண்டு குத்தகையாளர்களுக்கு, வார விவசாயிகளுக்கு 75-ம், நிலத்திற்குச் சொந்தக்காரர்களுக்கு 25-ம் என்ற முறையிலே நிர்ணயம் செய்வதன் மூலம்தான் குத்தகை வார விவசாயிகள் தங்களுக்குச் சாதகமான பலன்களை அடைய முடியுமென்று இந்தச் சந்தர்ப்பதில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குரிய முறையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும்.

உபரியாக இருக்கும் நிலங்களை விநியோகிப்பதில் பல மோசடிகள் நடந்திருக்கின்றன. நாங்கள் இந்தச் சட்ட மன்றத்திலே பல விவரங்களைக் கூறியிருக்கிறோம். விவசாயம் தெரியாதவர்கள் அல்லது அடுத்த மாவட்டத்தில் இருப்பவர்கள் அல்லது அடுத்த மாநிலத்தில் இருப்பவர்கள் உபரி நிலத்திற்கு மனுப்போட்டு பெற்று விடுகிறார்கள், அரசாங்க அலுவலர்கள்கூட பெற்று விடுகிறார்கள். சமீபத்தில் மகஜர் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் நகருக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் உபரியாக எடுத்த நிலத்தை அந்தக் கிராமத்திலுள்ள ஏழை அரிசனங்களுக்கு, நிலமில்லாதவர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அரசாங்க அலுவலில் இருப்பவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த நிலத்தில் வர முடியாத அளவில் தடை செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறும் ஒரு குடும்பம் உபரியாக எடுக்கும் நிலத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதனால் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உபரி நிலம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. அந்த முறையிலே இருக்கின்ற பலஹீனங்களை ஆராய்ந்து அரசாங்கம் கூட தடை செய்யலாம்.

இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு உபரி நிலங்கள், அரசாங்க உத்தியோகத்திலே இருப்பவர்கள் அல்லது அதிக வருமானம் பெறும் பணக்காரர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து அந்த நிலயங்களையெல்லாம் மீண்டும் எடுத்து நிலமில்லாதவர்களுக்கு விநியோகிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உபரி நிலங்களை விநியோகிப்பதிலே பல்வேறு தவறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. சமீபத்தில்தான், அரசாங்கம் அரிசனங்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டும், அடுத்தபடியாக மாஜி பட்டாளத்தார், இராணுவத்தினருக்கு அளிக்க வேண்டும். அடுத்து அவர்கள் இல்லையென்றால் அந்தக் கிராமத்திலே சிறு நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று திருத்தம் செய்திருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய திருத்தம். அதன் பிரகாரம், அரசாங்கம் நடைமுறையிலே அந்தத் திருத்தத்தின்படி நிறைவேற்ற முனைப்பாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் பல்வேறாக நடந்திருக்கும் நிலங்களையெல்லாம் திரும்பப் பெறுவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். திருத்தம் செய்யும் பொழுது என்னுடைய ஆலோசனை என்னவென்றால், ஒருங்கிணைந்த ஒரு நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.



1974 சனவரி 29] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஒருங்கிணைத்து ஒரே சட்டமாகக் கொண்டுவந்தால்தான் அதை முறையாக அமல்படுத்த முடியும். பல்வேறு பிரிவுகளாக இருப்பதால் பல அதிகாரிகள் அதை நிறைவேற்றுவதில் தவறுகள் செய்திருக்கிறார்கள். அப்படியில்லாமல் ஒருங்கிணைந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து உழுபவர்களுக்கு நிலத்தை சாசுவதப்படுத்தக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். நிலக் குத்தகைதாரர்களுக்கு அந்த நிலத்தை வழங்கும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டும் இன்னும் மத்திய அரசு அல்லது குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த அனுமதியை விரைவில் பெறுவிட்டால் உழுபவர்களை வெளியேற்றிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். அப்படியில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு எஸ். வடிவேல் :</u> தலைவரவர்களே, இந்த நிலச் சட்டம் சம்பந்தமாக பொதுவாக கிராமப்புற வாழ்விலே ஏதோ மாறுதல் ஏற்படவேண்டும், மறு மலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. குறிப்பாக ஏழை எளியவர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, பாடுபடும் குடியானவர்களுக்குக் கிடைக்கும் நிலம் என்ற நிலையிலே இந்தச் சட்டம் பயன்படவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நமச்சிவாய புரத்திலே வலிவலம் தேசிகர் பண்ணை இருக்கிறது. 47 எக்கர் 83 செண்ட் இருக்கிறது. அதை உச்சவரம்பில் எடுப்பதாகத் தெரிவதற்கு முன் அவற்றை விதைப் பண்ணையாக்கினார். பிறகு அதை உச்சவரம்பில் எடுத்ததற்குப் பிறகு கேஸ் போட்டு அந்த கேஸ் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. இப்படி நிலத்தை எடுத்தாலும் கூட அதைச் சமாளிக்கும் நிலையிலே சட்டம் இருக்கிறது.

(நண்பகல் 12-00)

அதே மாதிரி இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திற்குச் சொந்தமான நிலம் 102·71 எக்கரையும் டிரஸ்ட் ஆக்டிக்கு விரோதமாக ரிசீவர் பெயரால் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. மாயூரம் வக்கீலிடம் அதன் மேற்பார்வை இருக்கிறது. புதுப்பத்தூரில் 157·83 எக்கர் நிலத்தை 17 பேருக்குச் சொந்தக் குடும்பத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். குத்தகைதாரர்களை வெளியேற்றிவிட்டார்கள்.

கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்தி கொண்டேப்பமிட்டு வந்ததாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்.

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதற்கொப்பத்தான் இன்று நிலைமை இருக்கிறது. புரட்சிக் கவிஞரைக் கடவுளாகவே போற்றலாம். அவர் சொன்னது அப்படியே நடக்கிறது. இரண்டு சட்டம் போட்டும் பயன் ஏற்படவில்லை.

(5) அறிவிப்பு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/74).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்ட பேரவை சட்ட முன் வடிவு எண் 5/74) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஈ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டல்) திருத்தச் சட்ட வரைவை (சட்டமன்றப் பேரவை சட்ட வரைவு எண் 5/1974) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டல்) சட்டத்தைச் சேர்ந்த 12 அல்லது 14வது பிரிவின் கீழ் உள்ள இறுதி விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உபரி நிலம், 18வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அரசால் அறிவிப்பு வெளியிடப்படுவதன் மேல் முற்றிலும் அரசிடமே நிலை பெற்றுள்ளது. தற்போது, 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை மாற்ற அல்லது ரத்து செய்ய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கு சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை.

மேல் முறையீடு அல்லது மறு ஆய்வு மனுக்களின் மேல் எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவாக, அத்தகைய முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்ய அல்லது மாற்ற வேண்டிய நேர்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 12, 14வது பிரிவுகளின் கீழ் உள்ள இறுதி விவர அறிக்கையில் உண்மையெனத் தெரிகிற பிழைகளையும், எழுத்துப்

* 25—1—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிழைகளையும் 15-வது பிரிவின்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரி திருத்தியுள்ள நேர்வுகளும் உள்ளன; அதன் விளைவாக, 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் திருத்த வேண்டியுள்ளது. நில ஆணையாளரால் 18-எ பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்றினை யொட்டி, 18 (1) பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் மாற்றம் செய்யவேண்டிய நேர்வுகளும் எழலாம்.

எனவே, மேல் முறையீட்டில் அல்லது மறு ஆய்வு மனுவில் அல்லது பிற சட்ட நடவடிக்கையில் எடுத்த முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க அல்லது 18-எ பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு இணங்க, 18-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அரசால் வெளியிடப் பட்ட அறிவிப்பை மாற்ற அல்லது ரத்து செய்ய அரசுக்குத் தேவையான அதிகாரம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. அதிகாரம் பெற்ற அதிகாரி 15-வது பிரிவின் கீழ்ச் செய்த திருத்தங்களையொட்டி, 18 (1) பிரிவின் படியுள்ள அறிவிப்பின் விளைவான திருத்தங்களைச் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் கருதப்பட்டுள்ளது. அவசியமான துணை விதித் துறைகளையும் தொடர்புள்ள விதித்துறைகளையும் இயற்றவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட முன் வடிவு விழைகிறது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மா மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள இந்த உச்சவரம்பு திருத்த மசோதா சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உச்சவரம்புச் சட்டம் படிப்படியாகக் கொண்டுவரப்பட்டு இன்றையதினம் 15 எக்கர் வரையிலும் உச்சவரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. 15 எக்கர் உச்சவரம்பையும்கூட நிலச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 15 எக்கர் என்று சொல்லும் பொழுது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்களெல்லாம் சேர்ந்துதான் ஒரு குடும்பம் என்ற முறையில் இந்த உச்சவரம்புச் சட்டம் இருக்க வேண்டும். தனி நபரும் 15 எக்கர் வைத்துக் கொள்ளலாம். குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் 15 எக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றிருந்தால் அவர்கள் தனித்தனியாக 15 எக்கர், 15 எக்கர் என்று எழுதி வைத்துக்கொண்டு உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கத்தையே முறியடிக்கும் ஒரு நிலையில் நடந்து கொள்வார்கள். எனவே, அதற்குத் தகுந்த முறையிலே சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே வார நிர்ணயம் செய்வதில் விவசாயிகளுக்கு 60 பங்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கு 40 பங்கும் என்று ஒரு சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதன்படி பார்த்தால்

## தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்). திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74)

[திரு. எஸ். வடிவேல்] [1974 சனவரி 29

திரு. வ. எம். பி. அனந்த பத்மநாப செட்டியார் 390 ஏக்கரை தன்னுடைய குடும்பத்திலுள்ள 13 பேருக்குப் பங்கு பிரித்து வைத்து விட்டார். ஆர். கோவிந்தராஜுலு நாயுடு என்பவர் 25·27 ஏக்கர் நிலத்தை அவர் குடும்பத்தினர் பெயரில் எழுதி வைத்துவிட்டார். வேதாரண்யம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவானந்த சுவாமி மடத்துக்குச் சொந்தமான 86 ஏக்கர் நிலத்திலிருந்து சாகுபடி செய்கிறவர்களை ஓட்டிவிட்டு நேரடியாக எடுத்துக்கொண்டு விட்டார்கள். வேதபாராயண டிரஸ்ட், வடுவூர் ஒரு பாராயணமும் அங்கு நடக்கவில்லை — சொந்தமான 54·95 ஏக்கர் நிலத்தைச் சிலர் அனுபவித்து வருகிறார்கள். திருக்குவளை — முதலமைச்சர் பிறந்த ஊர் — நாகை வட்டாரத்தில் தர்மபுர ஆதினத்திற்குச் சொந்தமான 1,200 ஏக்கர் நிலம் இருக்கிறது. முதல்வர் அவர்கள் வீட்டுக்குப் பக்கத்தில் என் வீடு இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள இந்த நிலத்தை பினாமியாக நிலமற்றவர்கள் மேல் எழுதி வைத்துக் கொண்டு 15 பேர் தாங்களே சாகுபடி செய்து வருகிறார்கள். அருள்மிகு நவநீதஸ்வர சுவாமி கோயிலுக்குச் சொந்தமாக 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. மேற்படி நிலத்தைப் பண்ணையார் சாகுபடி செய்து வருகிறார். அமைச்சர் மன்னை அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: எனக்குத் தெரியாது. அவர் இப்போது சொன்னவுடன் தான் அறிகிறேன்.

திரு எஸ். வடிவேல்: காரியமங்கலம் கனகசபை பிள்ளை கல்லூரி டிரஸ்டுக்கு 102·73 ஏக்கர் நிலம் இருக்கிறது. வருஷா வருஷம் 46 வேலி நிலத்தில் 20 வேலி நிலத்தில் பயிரிடுவார், மீதியைத் தரிசாகவே வைத்து விடுவார். எந்த அமைச்சர் என்னுடன் வந்து பார்த்தாலும் காட்டத் தயாராக இருக்கிறேன். உண்மை இல்லையென்றால் என்னுடைய எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமாச் செய்கிறேன். செம்பியன் ஆத்தூர் ஏழை வெள்ளாளர் டிரஸ்டுக்கு 135·79 ஏக்கர் நிலம் இருக்கிறது. 35 நபர்களுக்குப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. "பெருமாள்" என்ற பெயர் "பெத்த பெருமாள்" என்று ஆயிற்றே தவிர உண்மையாக ஏழைகளுக்கு நிலம் கிடைக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. காங்கிரஸ் அரசு 30 ஏக்கர் வரம்பு வைத்தது; நிலம் ஒன்றும் கிடைக்கவில்லை. சாகுபடிக்காரனை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தாமல் இருக்க அரசு உத்தரவு போட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு குழ. செல்லையா: தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்த உச்ச வரம்புத் திருத்தச் சட்டத்தின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலிருக்கும் ஏழை எளிய விவசாய மக்களுக்கு நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்தச் சட்டம் கொண்டு வந்த பின்னால் உண்மையாகப் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிலம் கிடைக்கவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டாகவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

## தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74)

1974 சனவரி 29] [திரு. குழ. செல்லையா]

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டம் வந்தது. அதற்கு பின்னால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் சட்டம் வந்தது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் நிலச்சொந்தக்காரர்கள் எவ்வளவு கிராமத்தைச் சொந்தமாக வைத்திருந்தார்களோ அதில் சிறிதளவு கூடக் குறையாமல் விதிவிலக்குப் பெற்று வைத்திருக்கிறார்கள். பினாமியாக வேண்டியவர்கள், வேலை செய்கிறவர்கள் பெயரில் எல்லாம் பட்டா எழுதி வைத்திருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்காகச் சட்டங்கள் கொண்டு வரப் பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தச் சட்டங்களின் அடிப்படையில் எவ்வளவு மிச்சமான நிலங்கள் எடுக்கப்பட்டு வழங்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு இருக்கிற நிலங்களின் சரியான கணக்கை கருணிகர்கள்தான் சொல்ல முடியும். உண்மையான கணக்குத் தெரிய வேண்டுமென்றால் அவர்களை நிரந்தரமாக ஒரே இடத்தில் வைக்கக்கூடாது. அவர்களுக்கு மாற்றுதல் கொடுத்துத் தேவையான ஊதியத்தை வழங்கினால் உண்மையாகவே நிலம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது என்ற கணக்கை அறிய முடியும். உண்மையாக அந்த நிலங்கள் எல்லாம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது என்பதை அறிய சர்வ கட்சி கமிட்டி வைத்து பரிசீலனை செய்தால் யார் யார் உண்மையாகச் சொத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியும். சட்டத்திலிருந்து காடு வளர்ப்பதாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்; பிள்ளையார் கோயில் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்; மாடு மேய்ச்சல் நிலம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்; கரும்புத் தோட்டம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்.

நிலத்தை, உழைக்கின்ற மக்களுக்கு, விவசாய மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது பேராவூரணியிலுள்ள எழுத்தணி வயல் கிராமத்தில் திருவாவடுதுறை ஆதின கிராம நிலத்தில் உழைத்துக் கொண்டிருந்த விவசாயிகளை அப்புறப்படுத்திவிட்டு தி.மு.க. எம்.எல்.சி., ஒருவர் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர்களைச் சாகுபடி செய்து வருகின்ற நிலைமை இருக்கிறது. என்னுடைய ஊருக்கு அருகாமையில் அமரசிம்மேந்திரப் புரத்தில் ஒரு தி.மு.க. பிரமுகருக்கு சொந்தமான நிலத்தில் சொந்தச் சாகுபடி, பண்ணைச் சாகுபடி என்ற பெயரில் அவ்வளவு விவசாயிகளும் சாகுபடி செய்திருந்தும், குத்தகை அளந்திருந்தும், குத்தகை ரசீது கொடுப்பதில்லை. பாடுபடுகிறார்கள், ஆனால் கணக்கில் பண்ணைச் சாகுபடி என்று இருக்கிறது. ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் என்று சட்டத்தைக் கொண்டு வந்தாலும் கூட நிச்சயமாக இன்றுள்ள நிலைமையில் சரியான கணக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்ற நிலைமையை எடுத்துச் சொல்லி சர்வ கட்சி கமிட்டி அமைத்து உண்மையான வகையில் நிலம் யாரிடம் இருக்கிறது, யார் யார் பினாமியாக வைத்திருக்கிறார்கள் என்று பார்த்து உபரி நிலங்களை எடுத்து அரிசன மக்களுக்கு வழங்குவது போல் இலங்கையிலிருந்து வருகிற தமிழ் மக்களுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

திரு வ. எம். பி. அனந்த பத்மநாப செட்டியார் 390 ஏக்கரை தன்னுடைய குடும்பத்திலுள்ள 13 பேருக்குப் பங்கு பிரித்து வைத்து விட்டார். ஆர். கோவிந்தராஜுலு நாயுடு என்பவர் 25·27 ஏக்கர் நிலத்தை அவர் குடும்பத்தினர் பெயரில் எழுதி வைத்துவிட்டார். வேதாரண்யம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவானந்த சுவாமி மடத்துக்குச் சொந்தமான 86 ஏக்கர் நிலத்திலிருந்து சாகுபடி செய்கிறவர்களை ஓட்டி விட்டு நேரடியாக எடுத்துக்கொண்டு விட்டார்கள். வேதபாராயண [illegible], வடலூர் ஒரு பாராயணமும் அங்கு நடக்கவில்லை — சொந்தமான 54·95 ஏக்கர் நிலத்தைச் சிலர் அனுபவித்து வருகிறார்கள். திருக்குவளை — முதலமைச்சர் பிறந்த ஊர் — நாகை வட்டாரத்தில் தருமபுர ஆதினத்திற்குச் சொந்தமான 1,200 ஏக்கர் நிலம் இருக்கிறது. முதல்வர் அவர்கள் வீட்டுக்குப் பக்கத்தில் என் வீடு இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள இந்த நிலத்தை பினாமியாக நிலமற்றவர்கள் மேல் எழுதி வைத்துக் கொண்டு 15 பேர் தாங்களே சாகுபடி செய்து வருகிறார்கள். அருள்மிகு நவநீதஸ்வர சுவாமி கோயிலுக்குச் சொந்தமாக 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. மேற்படி நிலத்தைப் பண்ணையார் சாகுபடி செய்து வருகிறார். அமைச்சர் மன்னை அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: எனக்குத் தெரியாது. அவர் இப்போது சொன்னவுடன் தான் அறிகிறேன்.

திரு எஸ். வடிவேல்: காரியமங்கலம் கனகசபை பிள்ளை கல்லூரி டிரஸ்டுக்கு 102·73 ஏக்கர் நிலம் இருக்கிறது. வருஷா வருஷம் 46 வேலி நிலத்தில் 20 வேலி நிலத்தில் பயிரிடுவார், மீதியைத் தரிசாகவே வைத்து விடுவார். எந்த அமைச்சர் என்னுடன் வந்து பார்த்தாலும் காட்டத் தயாராக இருக்கிறேன். உண்மை இல்லையென்றால் என்னுடைய எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமாச் செய்கிறேன். செம்பியன் ஆத்தூர் ஏழை வெள்ளாளர் டிரஸ்டுக்கு 135·79 ஏக்கர் நிலம் இருக்கிறது. 35 நபர்களுக்குப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. "பெருமாள்" என்ற பெயர் "பெத்த பெருமாள்" என்று ஆயிற்றே தவிர உண்மையாக ஏழைகளுக்கு நிலம் கிடைக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. காங்கிரஸ் அரசு 30 ஏக்கர் வரம்பு வைத்தது; நிலம் ஒன்றும் கிடைக்கவில்லை. சாகுபடிக்காரனை நிலத்தை விட்டு அப்புறப் படுத்தாமல் இருக்க அரசு உத்தரவு போட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு குழ. செல்லையா: தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்த உச்ச வரம்புத் திருத்தச் சட்டத்தின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலிருக்கும் ஏழை எளிய விவசாய மக்களுக்கு நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்தச் சட்டம் கொண்டு வந்த பின்னர் உண்மையாகப் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிலம் கிடைக்கவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டாகவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.



காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டம் வந்தது. அதற்கு பின்னால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் சட்டம் வந்தது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் நிலச்சொந்தக்காரர்கள் எவ்வளவு கிராமத்தைச் சொந்தமாக வைத்திருந்தார்களோ அதில் சிறிதளவு கூடக் குறையாமல் விதிவிலக்குப் பெற்று வைத்திருக்கிறார்கள். பினாமியாக வேண்டியவர்கள், வேலை செய்கிறவர்கள் பெயரில் எல்லாம் பட்டா எழுதி வைத்திருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்காகச் சட்டங்கள் கொண்டு வரப் பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தச் சட்டங்களின் அடிப்படையில் எவ்வளவு மிச்சமான நிலங்கள் எடுக்கப்பட்டு வழங்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு இருக்கிற நிலங்களின் சரியான கணக்கை கருணீகர்கள்தான் சொல்ல முடியும். உண்மையான கணக்குத் தெரிய வேண்டுமென்றால் அவர்களை நிரந்தரமாக ஒரே இடத்தில் வைக்கக்கூடாது. அவர்களுக்கு மாற்றுதல் கொடுத்துத் தேவையான ஊதியத்தை வழங்கினால் உண்மையாகவே நிலம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது என்ற கணக்கை அறிய முடியும். உண்மையாக அந்த நிலங்கள் எல்லாம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது என்பதை அறிய சர்வ கட்சி கமிட்டி வைத்து பரிசீலனை செய்தால் யார் யார் உண்மையாகச் சொத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியும். சட்டத்திலிருந்து காடு வளர்ப்பதாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்; பிள்ளையார் கோயில் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்; மாடு மேய்ச்சல் நிலம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டர்கள்; கரும்புத் தோட்டம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டார்கள்.

நிலத்தை, உழைக்கின்ற மக்களுக்கு, விவசாய மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது பேராவூரணியிலுள்ள எழுத்தணி வயல் கிராமத்தில் திருவாவடுதுறை ஆதின கிராம நிலத்தில் உழைக்துக் கொண்டிருந்த விவசாயிகளை அப்புறப்படுத்திவிட்டு தி.மு.க. எம்.எல்.சி., ஒருவர் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர்களைச் சாகுபடி செய்து வருகின்ற நிலைமை இருக்கிறது. என்னுடைய ஊருக்கு அருகாமையில் அமரசிம்மேந்திரப் புரத்தில் ஒரு தி.மு.க. பிரமுகருக்கு சொந்தமான நிலத்தில் சொந்தச் சாகுபடி, பண்ணைச் சாகுபடி என்ற பெயரில் அவ்வளவு விவசாயிகளும் சாகுபடி செய்திருந்தும், குத்தகை அளந்திருந்தும், குத்தகை ரசீது கொடுப்பதில்லை. பாடுபடுகிறார்கள், ஆனால் கணக்கில் பண்ணைச் சாகுபடி என்று இருக்கிறது. ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் என்று சட்டத்தைக் கொண்டு வந்தாலும் கூட நிச்சயமாக இன்றுள்ள நிலைமையில் சரியான கணக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்ற நிலைமையை எடுத்துச் சொல்லி சர்வ கட்சி கமிட்டி அமைத்து உண்மையான வகையில் நிலம் யாரிடம் இருக்கிறது, யார் யார் பினாமியாக வைத்திருக்கிறார்கள் என்று பார்த்து உபரி நிலங்களை எடுத்து அரிசன மக்களுக்கு வழங்குவது போல் இலங்கையிலிருந்து வருகிற தமிழ் மக்களுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

## தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74)

[1974 சனவரி 29

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நிலச் சீர்த் திருத்தச் சட்டக் கொள்கை நிலத்தை ஓரளவுக்கு மேல் ஒருவன் வைத்திருந்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பரம்பரையாகப் பாடுபடக் கூடிய உழவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை, அந்த வாய்ப்பை உண்டாக்க வேண்டுமென்பதற்காகத்தான் உருவாக்கப்பட்டது. என்னதான் சட்டங்கள் போட்டாலும் உபரி நிலங்கள் உழவர்கள் கைக்குக் கிடைக்கவில்லை. நாம் எப்படியெல்லாம் சட்டங்களைச் செய்கிறோமோ, திருத்துகிறோமோ அதற்கேற்றவாறு நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் சட்டத்தின் மூலமாகவே தப்பித்துக் கொள்ள வழிவகைகளைக் கண்டுபிடித்து அந்த நிலங்களை எல்லாம் தங்கள் கையிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் நிச்சயமாக பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம் என்று சொல்லி திருப்திப்பட்டுக் கொள்ளமுடியாது. அதனால் சிக்கல்கள் ஏற்பட்டு, அச்சட்டத்தினால் மக்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மிச்ச நிலங்களை எப்படி விநியோகிப்பது என்ற பிரச்னையில் ஒரு தெளிவான முடிவும் இல்லாமலிருக்கிறது. கடுமையான எதிர்ப்புக்குப் பின்னர் வந்திருக்கும் சட்டத்தைக் கூட அமலாக்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது.

மிச்ச நிலம் எவ்வளவு என்ற கணக்கு பரிபூரணமாகத் தெரியாது. அந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இனாம் நிலங்கள் பட்டாக்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. நிலச்சீர்திருத்தச் சட்டம் மூலம் கிடைத்துள்ள உபரி நிலங்களைப் பார்க்கும்போது நிச்சயமாக ஒன்றுக்கும் உதவாத நிலங்களை மட்டுமே தாராளமாகக் காட்டியிருக்கிறார்கள். விளையக்கூடிய நிலங்களை மட்டும் அவர்கள் கணக்கில் காட்டுவது கிடையாது. தாராளமாகக் காட்டப்படக் கூடிய நிலங்களைப் பார்க்கும்போது கல்லும் மண்ணும் நிறைந்த விளையாத நிலங்களைத்தான் காட்டுகிறார்கள். அவை சும்மாதான் இருக்கின்றன.

ஆகவே விவசாயத் தொழில்களுக்கு, நிலமற்ற ஏழை உழவர்களுக்கு எப்படிச் செய்யப்போகிறோம் என்று பார்த்தால், அதிகாரிகள் மட்டத்தில் எல்லோரும் அமர்ந்து, அதில் அக்கறை உள்ளவர்களையும் வைத்துக் கொண்டு சரியான விதத்தில் நிலங்களை விநியோகிக்கிற முறையில் இருக்கிற கோளாறுகளைத் தீர்த்தால் அந்தப் பிரச்னை வெற்றி பெறும். இல்லாவிடில் சட்டம் போட்டுவிட்டோம் என்று திருப்திப்பட்டுக்கொள்ளலாமே தவிர அதனால் சமுதாயத்தில் சிக்கல்கள் ஏற்படுவதோடுகூட உணவு உற்பத்தியும் பாதிக்கப்படும், விவசாயக் கூலிகளுக்கு நிலம் கிடைக்காத முறையில் அமைந்துவிடும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

## தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74)

1974 சனவரி 29]

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த நில உச்சவரம்புச் சட்டத்திற்கு ஒரு வரவேற்கத்தக்க திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை அமல் நடத்துவதில் சட்டத்திற்குள்ளே எவ்வளவோ ஓட்டைகளும் சிக்கல்களும் இருக்கின்றன என்று பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். இந்த அரசாங்கமும் அவர்களுக்கு எப்போது தோன்றுகிறதோ அப்போது திருத்தங்களைக் கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள்.

1960-ல் போடப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டம் இன்று அகில இந்திய ரீதியில் உச்சவரம்பு 18 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று இருக்கவேண்டும் என்று முடிவு கட்டி அந்தந்த மாநிலங்கள் எதை விரும்புகிறதோ அதை உச்சவரம்பாக வைத்துக்கொள்ளலாம் என்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் 18 ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு மீறக்கூடாது என்ற கொள்கையைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள். 1960-ல் சட்டம் போடப்பட்டு அதற்குப் பிறகு இந்த கட்சி ஆட்சிக்கு வந்து அவர்கள் இஷ்டப்படி எதை எதை எப்போதைக்கெப்போது ரத்து செய்ய வேண்டுமோ அதை அதை அப்போதைக்கப்போது ரத்து செய்தும் மாற்றங்கள் செய்து கொண்டும் இருக்கிறது.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், ஒரு "காம்ப்ரிஹென்ஸிவ் பில் ஆன் லாண்ட் ரிபார்ம்ஸ்", புதிதாக ஒரு சட்டத்தை உருவாக்கிக் கொண்டு வந்தால் என்னென்ன மாற்றங்களை விளக்கமாக ஏற்றுக் கொள்ளமுடியுமோ அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். நம் நில உச்சவரம்புச் சட்டத்தில் ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்பதற்கு 13, 14 டெபனிஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இறிகேஷன் சோர்ஸஸ் இருப்பது, சோர்ஸஸ் இல்லாமலிருப்பது என்று இப்படி பல வகைகள் இருக்கின்றன. சிலயிடங்களில் நான்கு ஏக்கர் சேர்த்து ஒரு ஸ்டான்டேர்ட் ஏக்கர், சில ஊர்களில் இரண்டு ஏக்கர்கள் கொண்டது ஒரு ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்றிருக்கிறது. கிராப் வாரியாக இப்போது மாற்றியிருக்கிறார்கள். அதற்கு ஒரு தனி ஸ்டான்டேர்ட் ஏக்கர். அதில் பத்து ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கு மேல் வரி விதிக்கப் போகிறார்கள் என்றிருக்கிறது. அது விளை பொருட்களைப் பொறுத்து இருக்கிறது

வாழை போட்டால் அரை ஏக்கர் ஒரு ஏக்கராகும் விவசாயிகள் விவசாயம் செய்து வெளி வருவதற்கே மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் போய் இவ்வளவு சட்டதிட்டங்கள் என்றால் என்ன செய்வார்கள். இது தவிர விவசாய வருமான வரி இருக்கிறது. பதினைந்து ஸ்டான்டேர் ஏக்கருக்கு மேல் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இருக்கும்போது விவசாய வருமான வரிச் சட்டத்திலும் பல சிக்கல்களை ஏற்படுத்தி விவசாயிகளை திணறடித்துக் விடுகிறார்கள்.

சட்டத்தை ஒழுங்காக நல்ல முறையில் கொண்டு வந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, on behalf of the Swatantra Party, let me say that we have already opposed in our Party the fixation of ceiling on land.

We oppose it *in toto* because production in India has already been hampered because of the sub-division and fragmentation of land. Even economists say that because of sub-divisions and fragmentation, we are not in a position to produce more foodgrains. Sub-division, because of ceiling, will only hamper food production. This Government is interested in bringing ceiling on land to agriculturists and not in regard to urban property and monopoly in industry.

This Government knows that agriculturists are illiterates and since they are not interested in agricultural population, they have brought this measure. Fragmentation will lead only to less production. So *in toto* we oppose this Bill.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் இருக்கிற திருத்தம், 18 (1) பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவிப்பை மாற்றுவதற்கு அல்லது ரத்து செய்வதற்கு தற்போது அரசுக்கு அதிகாரம் இல்லை, அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்குத்தான் இந்தத் திருத்தம்.

இந்தத் திருத்தத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களை பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இருக்கிற கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்களே தவிர, இந்தத் திருத்தத்தைப் பற்றிய சரியான கருத்துக்களை அம்மையாரைத் தவிர வேறு யாரும் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் இந்தத் திருத்தத்தை வரவேற்று இருக்கிறார்கள். உபரி நிலம் கொடுப்பதிலே இருக்கின்ற கஷ்டங்களையும் சொல்லி, அவைகளைப்பற்றி பரிசீலிப்பதற்கு ஒரு சர்வ கட்சிக்குழு அமைக்கவேண்டும் மாவட்ட அளவில் என்றும் சொன்னார்கள்.

உபரி நிலத்தை வினியோகிப்பதற்கு விதிமுறைகள் சட்டத்திலே இருக்கின்றன. யார் யாருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறைப்படி வினியோகம் செய்யப் பட்டு வருகிறது. குறிப்பாக சில பகுதிகளில் தவறு இருக்கிறது என்று [illegible] கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நட[illegible] படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், உபரி நிலம் என்று சொல்லப்பட்டு, பிறகு உபரி நிலம் இல்லையென்றால், அதை ரத்து செய்யவோ, அல்லது மாற்றவோ அரசுக்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தை இப்போது அரசு எடுத்துக்கொள்கிறது. ஆகவே, அந்த அதிகாரத்தை அரசுக்கு வழங்கும் விதத்தில் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

*Enacting Formula*

MR. SPEAKER: The question—

"That the Enacting Formula do stand part of the Bill".

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move the following amendment:—

"In the Enacting Formula, for the words "Twenty-fourth year", substitute the words "Twenty-fifth year".

The amendment was put and carried.

The Enacting Formula, as amended, was put and carried.

பிரிவு 1, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move—

"That the Bill as amended, be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவிக்கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவு சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 2/74).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த-பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு*

* 21—1—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 2/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி-தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த-பதவிக்கால நீட்டிப்பு பற்றிய) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1971) மூலம் நகராட்சி உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மூன்றுண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் கூடுதலாக்கப்பட்டுள்ளது என்பதையும், பொதுவான ஒரு தேதியில் நகராட்சி மன்றங்கள் அனைத்திற்கும் தேர்தல்கள் நடத்துவதைக் கருத்தில் கொண்டு மேற்படி சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய நாளாக அப்போது வரையறுத்திருந்த 1971 செப்டம்பர் 21-ம் நாளிலிருந்து நகராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களின் பதவிக்காலம் 1974-மே திங்கள் 1-ம் நாள்வரை வரையறுக்கப்பட்டுள்ளது என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள்.

1974 மே திங்கள் 1-ம் நாளுக்குப் பின்னர் நகராட்சி உறுப்பினர்களின் பதவிக்கால அளவு முடிவடைகிற நேர்வுகளிலும் கூட அக்கால அளவு 1974 மே திங்கள் 1-ஆம் நாளில் முடிவடையுமாறு வரையறுக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது தான் மாநிலத்தில் உள்ள நகராட்சி உறுப்பினர்கள் அனைவரின் பதவிக் கால அளவும் ஒரே தேதியில் முடிவடையும். பேரவை முன் வைக்கப் பட்டுள்ள இச்சட்ட வரைவு இதற்கு வகை செய்கிறது. இதனை இப்பேரவை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Although this is a harmless amending Bill to rectify certain mistakes, I should take advantage of this opportunity to explain that so far as the Madras City Municipal Corporation is concerned, the Government should go slow with elections or with the proposed elections because under special circumstances the Corporation has been superseded and the Government must examine why so much of corruption has taken place.

They must examine whether it is because of setbacks of the Act or the Act has given room for such mistakes. That has to be examined. I have also pointed out in the House when the City Municipal Act was sought to be amended, that the Act of 1919 on which the present municipal system is working has been framed at a time when the city was small, when the population was less and responsibility was less. Today the city has expanded and expanded



considerably, population has risen from 6 lakhs to 24 lakhs and the responsibility which the Corporation has taken up like secondary education and many other items have increased considerably.

It was thought in 1965 or 1966 that the Act should be amended, that the administration should be decentralised, etc. On that score Thiru R. A. Gopalaswamy, I.C.S., studied this problem and we suggested certain amendments to the Act of 1919. He brought in a 'White Paper' which decentralised the administration so completely that the City was divided into 10 or 12 administrative units, each working independently in central subjects like drainage, water-supply, main roads, etc. Unfortunately this system existed only in name because the parties in power, whether it was Congress or D.M.K. though that decentralised administration would reduce their powers. With the result Circle Committees became nominal committees with no real power.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, what I am coming to is this. This Government will do well before embarking on an election to re-examine whether the White Paper should not be taken up, superseding the 1919 Act and take steps on that basis. Because, the most important factor is the City is expanding further and further and no centralised administration can do justice if in future such expansion takes place. For, everbody in Saidapet and Thiruvottiyur should not be expected to come to one place and people from Poonamallee should not be looking to Rippon Buildings for their benefits. Therefore the administration has to be decentralised and that has to be taken into consideration first, before the Government thinks of elections which is waste of time and money which any fresh election involves.

I think the Special Officer is doing a wonderful duty so far as I am concerned and I am sure that he will submit a report very soon and on the basis of his report, I request this Government very earnestly with my 22 years of experience and knowledge of administration of the City Corporation that they should seriously re-consider and bring in a new Act so that the City Administration can be made workable.

There is the Council which is the topmost executive authority. There is the second authority, the statutory Committees which are abolished under the White Paper. That was done to bring in some councillors in some committees and the result is known well and what has happened. Therefore, we want decentralised democratic administration which can be controlled and I think the Government would do well to think of the problem before rushing through a fresh election to satisfy the political public—I say political public not the general public for I do not think the general public want an election under the present circumstances. Therefore my suggestion is that though the term of office of the councillors may be over by May 1974, that should not stand in the way of thinking about what we should do for the future administration of this great City which is expanding both numerically and geographically. I request the Government not to hurry with any elections at this time.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சி திருத்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எல்லா நகராட்சிகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்படுவதாகக் கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். நகராட்சிகளுக்குத் தேர்தல் நடக்கும்பொழுது, பேரூராட்சி மன்றங்களுக்கும் சேர்த்து தேர்தல் நடக்கும் முறையிலே, இப்பொழுதே பேரூராட்சி மன்றங்களைப் பற்றியும் முடிவு கட்டி நகராட்சிகளோடு இணைந்து பேரூராட்சி மன்றங்களுக்கும் தேர்வுகள் நடக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் நான் இதை மிகவும் வரவேற்பேன்.

தேர்தல் நடப்பதற்கு முன்பு ஆங்காங்கு நகராட்சிமன்றங்களில் இருக்கக்கூடிய வார்டுகளை திருத்தி அமைப்பது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, அந்தத் திருத்தங்கள் முடிந்தபிறகு இந்தத் தேர்தல்கள் வரும் என்று நம்புகிறேன். இந்த வார்டுகளைப் பிரித்து அமைப்பதைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். முன்பே நான் இதைப்பற்றி இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். அப்பொழுது அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. இப்பொழுது இருக்கிற காரணத்தினால் அருள் கூர்ந்து என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு நகரத்தை எடுத்துக்கொண்டால் முஸ்லீம் மக்கள் சில பல பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட இடங்களில் அதிகமாக வசிக்கின்றார்கள். அவர்களுடைய மசூதிகள், வணக்க ஸ்தலங்கள், மதரஸாக்கள், பள்ளிகள் அமைப்பின் காரணமாக, கொடுக்கல் வாங்கல் காரணமாக, பழக்



வழக்கங்கள் காரணமாக குறிப்பிட்ட பகுதிகளில் அதிகமாக முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தேவைக்காக அது அவசியமாக இருக்கிறது. இங்கு வாழக்கூடிய முஸ்லிம் மக்கள் நகராட்சிகளுக்கு அந்தப் பகுதியிலிருந்து, அந்த குறிப்பிட்ட வார்டிலிருந்து தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள்.

இப்பொழுது வார்டுகளை வேறு விதமாகப் பிரிப்பதால், முஸ்லிம் மக்கள் நகராட்சிகளுக்கு உறுப்பினர்களாகச் செல்லக்கூடிய வாய்ப்பு வசதி பாதிக்கப்படுகிறது. முஸ்லிம்களைப் பாதிக்கக்கூடிய பிரச்னைகளைப் பற்றி வாதாடுவதற்கும், விஷேச பண்டிகை நாட்களில், ரம்ஜான், பக்ரீத் போன்ற நாட்களில் முஸ்லிம் மக்களுக்குத் தேவையான உரிமைகளைப் பெற்று வாங்கித் தருவதற்கும், அவர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் முஸ்லிம்களுக்கு அது ஒரு வாய்ப்பாக இருந்துகொண்டிருக்கிறது. ஜனநாயகத்தில் முஸ்லிம் மக்களுக்கு உண்மையில் ஏதேனும் உயர்ந்த பதவிக்குப் போகவேண்டுமென்றால் நகராட்சி உறுப்பினர்களாகப் போவது ஒன்றுதான் உள்ளது. தன் காலில் தானாகவே நின்று அடையக்கூடிய பதவி அது தான்.

சமீபத்தில் நகராட்சிகளில் வார்டுகள் பிரிக்கும்பொழுது முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளிலே ஒரு சில தெருக்களை எடுத்து, மற்ற பெருங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளோடு இணைத்தும், பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் பகுதிகளிலிருந்து ஒரு சில தெருக்களை முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியோடு சேர்த்தும், வார்டுகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. அதனால் எந்த ஒரு முஸ்லிமும் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று நகராட்சி உறுப்பினராக வர முடியாத அளவுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இனி எதிர்காலத்தில் பல முக்கியமான நகராட்சிகளில் முஸ்லிம்கள் தாங்கள் பிரதிநிதித்துவம் பெற முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ இந்த முறை ஆங்காங்குள்ள சில ஆணையர்களால், சூழ்ச்சி காரணமாக, விரோத மனப்பான்மை காரணமாக மதமாச்சர்யங்கள் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஏதேனும் பிராதுகள் வருமேயானால், அந்தப் பகுதி மக்கள் விண்ணப்பித்துக்கொண்டால், நானும் கூட ஒரு விண்ணப்பத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன், அதில் அருள் கூர்ந்து அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி முஸ்லிம் மக்களுக்கு அவர்களுக்குள்ள உரிமையைப் பெற்றுத் தரவேண்டும். முஸ்லிம்கள் நகராட்சிகளில் உறுப்பினர்களாக இடம் பெறுவதற்கு வசதி செய்து தரவேண்டும்.

ஏற்கெனவே முஸ்லிம் பகுதிகள் எப்படி தனியாக வார்டாகப் பிரிக்கப்பட்டிருந்ததோ அந்தக் கணக்குப்படி பிரிப்பதற்கு உண்டான உத்தரவை அமைச்சர் அவர்கள் உடனே பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு, திருப்பூர் முதலிய பகுதிகளிலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறைப்பட்டுக் கொள்ளக்கூடிய வாணியம்பாடியிலும் இப்படிப்பட்ட மிகப் பெரிய மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. வாணியம்பாடியைப் போன்ற சில நகராட்சிகள் தான் முஸ்லிம்கள்

ஆகவே நான் சொல்வது என்னவெனில், திட்ட வட்டமாக ஒரு நல்ல நில உச்சவரம்புச் சட்டத்தை முழுதாகவே ஆராய்ந்து அறிந்து கொண்டுவருவது சாலச் சிறந்ததாக இருக்கும். விவசாயிகளுக்கு லாண்ட் பாஸ் புக் கொடுப்போம், ஒவ்வொரு விவசாயிக்கும் எவ்வளவு நிலம் இருக்கிறது, கிஸ்தி எவ்வளவு கட்டுகிறார்கள், தண்ணீர் வரி எவ்வளவு, என்கம்பரன்ஸஸ் இவைகளை எழுதிக் கொடுக்கப்போகிறோம் என்று சொல்லி மூன்றாண்டுகளாகி விட்டன.

ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது இராமநாதபுரம் மாவட்டம் வரையில் ஆரம்பித்து வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 14 மாவட்டங்களுக்கும் இந்த லாண்ட் பாஸ் புக்குகளை ஒழுங்காகக் கொடுத்தால் பல சிக்கல்கள் ஏற்பட வழியிருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எல்லா மாவட்டங்களிலும் கொடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கிராம அதிகாரிகளின் ஒத்துழைப்பு மூலம் இந்தக் காரியங்கள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: வேகமாக நிறைவேற்றப்பட்டால் வரவேற்கிறேன். சிலயிடங்களில் பட்டா நிலங்களையே அஸைன் செய்து கொடுக்கிறார்கள், கோர்ட்டுக்கு வழக்கு கொண்டு போகட்டுமே என்று. இந்தமாதிரி சில அக்கிரமங்கள் நடக்கின்றன. சில வில்லேஜ் ஹெட் மென், கிஸ்தி கொடுக்கவில்லை நாங்கள் அட்வான்ஸ் ரசீது கொடுத்திருக்கிறோம் என்றும், சிலர் கிஸ்தி கொடுத்துவிட்டோம் ரசீது வரவில்லை என்றும் சொல்லக்கூடிய நிலைகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே இந்த லாண்ட் பாஸ் புக் கொடுப்பது அவசியம்.

இத்திருத்தம் ரொம்பவும் அவசியமான திருத்தம். நம் விவசாயிகளுக்கு, பெரும்பாலான விவசாயிகளுக்கு படிப்பு கிடையாது. அவர்களுக்கு சட்டச் சிக்கல்கள் தெரியாது. சிலயிடங்களில் பெண்கள் நோட்டீஸை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். சர்ப்ளஸ் லாண்ட் எவ்வளவு என்று கேட்கும் நோட்டீஸை சில பெண்கள் வாங்கிக்கொண்டு ஊறுகாய் ஜாடியில் போட்டு வைத்துவிடுகிறார்கள்.

நான் சில வழக்குகளைப் பார்த்தபோது கண்டுபிடித்தேன். நோட்டீஸை வாங்கி வைத்துக்கொண்டு பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று வைத்துவிடுகிறார்கள் பெண்கள். அதற்குள் டைம் பார் ஆகிவிடுகிறது. மேஜர் ஸன் இருக்கிறார், மிச்சம் வராது என்கிறார்கள் பிறகு. ஆகவே இந்தத் திருத்தம் வரவேற்கத்தக்கதுதான்.

இப்படி ஹார்ட் கேஸஸ், விவசாயிகளுக்குத் தெரியாமல் சில தவறுகள் ஏற்படுமானால், படிக்காத விவசாயிகள் அல்லது வீட்டில் உள்ள பெண்கள் தெரியாமல் சில தவறுகள் செய்துவிடுவார்களேயானால் அதைத் திருத்திக் கொள்ள இத்தகைய ஒரு அதிகாரம் எடுத்துக்கொள்வதை நான் வரவேற்கிறேன்.



அதேசமயத்தில் துண்டு துண்டாக விநியோகிப்பதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. சர்ப்ளஸை யாருக்குக் கொடுப்பது? உழுகிறவர்களுக்குக் கொடுப்பதா, லாண்ட்லெஸ் லேபருக்குக் கொடுப்பதா அல்லது ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர்கள் வைத்திருக்கும் ஸ்மால் லாண்ட் ஹோல்டேர்ஸ்க்கு கொடுப்பதா? உங்கள் ரூல்ஸ்படி சில போட்டிருக்கிறீர்கள். லாண்ட்லெஸ்ஸாக இருக்கவேண்டுமென்று இருக்கிறது. பலயிடங்களில் நிலத்தின் பக்கத்தில், அதன் நிழலில் நிற்காதவர்களுக்குக் கூட அஸைன் செய்யப்பட்டிருக்கிறது.

எக்ஸ்-சர்வீஸ்மென்னின் நிலத்தை எடுத்து வேறு ஒருவருக்கு அஸைன் செய்கிறார்கள். போர் வீரர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். போர் வீரர்கள் அவர்களாகவே உழுதுகொண்டிருக்கும் புறம்போக்கு நிலத்தை எடுத்து, அவர்களை அதிலிருந்து வெளியேற்றி விட்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அஸைன் செய்துகொடுக்கும் கொடூரமான நிலையும் இருக்கிறது. பின்னர், அரசியல் தியாகிகள் நிலத்தில் உழுதுகொண்டிருந்தார்கள். பட்டா கொடுக்கவில்லை. காங்கிரஸ் அரசு கொஞ்சம் மெதுவாகவே இருந்தது எல்லாவற்றிலும். பட்டா கொடுக்கப்படாமல் இருந்தது அவர்களுக்கு. அவர்களை அங்கிருந்து வெளியேற்றி வேறு யாருக்கோ கொடுக்கிறார்கள். பல சிக்கல்கள், பல காரியங்கள் அரசியல் காரணங்களுக்காக நடந்து கொண்டிருக்கின்றன. உழுது கொண்டிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு வேறு ஆட்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் ஒரு சர்வ கட்சிக் குழுவை அந்தந்த மாவட்டங்களில், போட்டு 'surplus lands to be distributed' என்ற அடிப்படையில் கொடுப்பது என்பதற்கு என்னென்ன ரூல்ஸ்களை பாலோ செய்வது என்று பார்த்துச் செய்தால் நியாயமான நிலை ஏற்படும். உழுகிறவர்களுக்குக் கொடுத்தால் உற்பத்தியும் பெருகும். சென்னை மாநிலத்தில் பல ஏக்கர் நிலங்கள் பல வகைகளில் சரியானபடி உற்பத்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

ஹரிஜனங்களுக்கு நாம் நன்செய்களை அக்வயர் செய்து கொடுத்தோம், கொடுத்து வீடுகள் கட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். அந்நிலத்தைத் திருத்தி வீடு கட்டிக்கொள்ள அவர்களுக்கு வசதி இல்லை. இப்படி பல விளை நிலங்கள் பாழாக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது ரெவின்யூ துறை அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து தமிழ் நாட்டில் பாழாகி இருக்கக்கூடிய நிலங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம், ஏன் அவை பாழாகியிருக்கின்றன என்பதை ஆராய்ந்து பரிகாரம் தேடிக் கொள்ளலாம். சர்ப்ளஸ் லாண்ட்ஸை வழங்குவதிலும் ஆலோசித்து நல்ல வழிமுறைகளைக் கையாண்டால் நம் மாநிலத்திலிருந்து 17,000 டன் என்ன 17 லட்சம் டன் கூட மற்ற மாநிலங்களுக்கு வழங்கக் கூடிய சக்தியைப் பெருக்கிக் கொள்ளமுடியும்.

ஆக, இந்த உணவு நெருக்கடியில் விளைபொருள்கள் விலை எல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிற போது உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் சற்று முனைந்து, இந்த நிலச் சீர்திருத்தச்

என்பதைப் பார்க்கும்போது, நாம் எவ்வளவோ பின் தங்கி இருக்கிறோம் என்பதைச் சொல்லி வருத்தப்பட வேண்டியிருக்கிறது. எனவே, தயவு செய்து பல பொறுப்புகளைக் கொடுக்காதீர்கள். why should we give them corporation schools? பள்ளிக்கூடங்களை கொடுக்கிறோம். அவைகள் ஒழுங்காகவா நடைபெறுகின்றன ? அதிலே வாத்தியார் பதவிக்கு நகராண்மை கமிஷனர் சிபாரிசு வேண்டியிருக்கிறது. நிர்வாகத்தில் குறுக்கிட வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஓட்டு வராது. பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டால் மூன்று மூன்று விதமான பள்ளிக்கூடங்கள், மூன்று விதமான வாத்தியார்கள். பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல்ஸ், கார்ப்பரேஷன்ஸ்கூல்ஸ், ஹரிஜன் வெல்பேர் ஸ்கூல்ஸ். இப்படி மூன்று ரகம். வாத்தியார்களிலும் மூன்று ரகம். பிள்ளைகளை கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினால் படிப்பைத் தவிர மற்றவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு வருகிறார்கள். எனவே வேலைப் பளுவை அதிகப்படுத்தக் கூடாது.

தண்ணீர் வாரியத்தையும் வடிகால் வாரியத்தையும் சேர்க்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தண்ணீரும் வடிகாலும் கலந்து விடுகிறது. எனவே! இவற்றைத் தனியாகப் பிரித்துவிட வேண்டும். water-supply must be different and sewage must be different இந்த மாதிரியாக தனித்தனியாகப் பிரித்து வைக்க வேண்டும். நகரசபைகளில் எவ்வளவோ ஃபெசிலிடீஸ் இல்லை. அத்தியாவசியமான தேவைகலி வளர்த்துகொண்டே வருகின்றன. பல இடங்களில் டிரைனேஜ் பெசிலிட்டி இல்லை. இப்போது தான் சீப் மினிஸ்டர் கான்ஸிட்டியூன்சியில் டிரைனேஜ் கனெக்ஷன் பண்ணியிருக்கிறார்கள் என் தொகுதியில் இன்னும் ஆரம்பிக்கவில்லை. என் தொகுதியில் பல இடங்களில் விளக்குகள் இல்லை. ஆகவே, முக்கியமான இந்த வேலைகளைச் செய்யாமல் மற்ற வேலைகளை சுமத்துவதில் என்ன பிரயோசனம் ? இப்போது தான் குப்பைகளை நகரத்திற்கு வெளியே போடுவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிராட்வே பஸ்டாண்ட் பற்றி 20 வருஷமாக ஒன்றுமே செய்யவில்லை. பேசிப் பேசி தொண்டை வற்றிப் போய்விட்டது. எல்லா நோய்களுக்கும் பிறப்பிடமே அந்த இடம் தான். சென்னை நகரத்தில், மாநில தலைமை இடத்தில் இருக்கிறதே அதை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டாமா? கொத்தவால் சாவடி எவ்வளவு மோசமாக இருக்கிறது, கவனித்தீர்களா? இந்த மாதிரியான நிலை இருக்கிறபோது ஆயுளை நீட்டிப்பது பெரிதல்ல. தேர்தல் நடந்தால் நல்லது. அத்தோடு, தவறு நடந்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டும். மின்சார இலாக்கா ஊழல்—எட்டு வருஷத்திற்குப் பிறகுதானே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது? என் இந்தக் காலதாமதம் ? சரியான முறையில் கவனிக்காததாலே தானே இது ஏற்பட்டது? அடுத்து தலைவர் தேர்தல். இது நேரடியாக நடைபெற்றால் ரொம்ப நல்லது. அதில் தானே இந்த ஆள் தூக்கும் படலம் எல்லாம். நேரடித் தேர்தல் நடைபெற்றால் யார் பிரசிடெண்ட், யார் மேயர் என்ற சிக்கல்கள், ஊழல் எல்லாம் ஏற்பட வழி இருக்காது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று இருக்கும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். டைம் ஆகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : முக்கியமான விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. முடித்துவிடுகிறேன். இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களைக் களைந்தால் தான் மக்கள் வரவேற்பார்கள். இந்த நல்ல எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு துரிதமாகத் தேர்தலை நடத்தி அத்தியாவசிய தேவைகளை கொடுப்பார்களானால், வரவேற்கிறேன் என்று கூறி, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இங்கே இந்த மன்றத்திற்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய சென்னை கார்ப்பரேஷன், முனிசிபாலிடீஸ் (திருத்த) மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்தத் திருத்த மசோதாவினுடைய பிரதான நோக்கமே 1974-ஆம் வருஷம் மே மாதம் 1-ஆம் தேதி கார்ப்பரேஷன் கவுன்சிலாக இருக்கட்டும், அல்லது முனிசிபாலிடியாக ஆகட்டும், அவர்களுடைய மெம்பர் பதவி அத்துடன் காலாவதி ஆகிவிடுகிறது என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக அந்த அளவுக்கு சரி என்று தான் நினைக்கிறேன். காரணம், ஒவ்வொரு நகரசபைக்கும் ஏதாவது ஒரு சமயத்தில் தேர்தல் நடக்கின்றது என்றால் சிரமம் என்பது மட்டுமல்லாமல் அதிலே வரக்கூடிய சிக்கல்கள் ஜாஸ்தியாக இருக்கின்றன.

எந்த நகரசபை என்றாலும் அவர்களுடைய பீரியட் 1974-ஆம் வருஷம் மே மாதம் 1-ஆம் தேதி பூர்த்தி ஆகவில்லை என்ற காரணத்தைக் காட்டி தனியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னது சரியல்ல என்ற அந்த முறையில் எல்லா நகரசபைகளையும் மே 1-ஆம் தேதிக்குள் பூர்த்தி ஆகவேண்டுமென்று சொன்னது நல்ல அம்சம் என்று கருதுகிறேன். அதேநேரத்தில் சென்னை கார்ப்பரேஷன் போன்ற முனிசிபல் கார்ப்பரேஷன்கள் இப்போதே கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசரிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த மே 1-ஆம் தேதியில் நாம் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நான் சார்ந்திருக்கக் கூடிய கம்யூனிஸ்ட் கட்சியினர் மாநில கவுன்சில் கூட்டத்தில் சென்னை கார்ப்பரேஷனில் விசேஷ அதிகாரியை போட்டு கேஸ்களை நடத்துவது வரவேற்கக் கூடிய அம்சம் என்றாலும் இதை காரணம் காட்டி தேர்தல்களை ஒத்திப் போடக் கூடாது என்று வற்புறுத்தி இருக்கிறோம். அதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

முதன்முதலாக இப்போது ஒரே தொகுதி தேர்தல் வருகிறது. முன்பு இரட்டைத் தொகுதிகள்—இரண்டு பேர் தொகுதிகள் என்று இருந்தது இப்போது அது தனித் தொகுதியாக.......

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தேர்தலை ஒத்திப் போடக் கூடாது என்று கூறுகிறார்கள். கேரளாவில் 12 ஆண்டு காலமாக கார்ப்பரேஷன் தேர்தல் நடக்காமல் இருக்கிறது. அதைப் பற்றி ஏதாவது சொல்வார்களா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 சனவரி 29

சேர்மன்களாக வரக்கூடிய தகுதி பெற்றிருக்கின்றன. இப்பொழுது வார்டு பிரிக்கக்கூடிய முறையை அனுஷ்டித்தால் எந்தக் காலத்திலும் வாணியம்பாடி போன்ற நகரசபைகளில் கூட முஸ்லிம் சேர்மனாக பதவிக்கு வரமுடியாது. இந்த மாநிலத்தில் 2, 3 நகராட்சிகளில் தான் முஸ்லிம்கள் சேர்மன்களாக வரக்கூடிய தன்மை இருக்கிறது. அதையும் கூட பிடுங்கிக்கொள்வது நல்லதல்ல, அப்படிச் செய்தால் முஸ்லிம் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்கக்கூடும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து தக்க திருத்தத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி பதவி கால நீடிப்பு திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1974 மே முதல் தேதிக்கு மேல் நகராட்சியினுடைய பதவிக் காலம் முடிந்து தேர்தல் நடக்கும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் நம்முடைய அரசு நகராட்சியின் தேர்தலில் கூட தலைவர் நேரடியான வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு திருத்தம் கூடக் கொண்டுவந்தார்கள். அது இப்பொழுது கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நேரடித் தேர்தல் மூலம் நகராட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையினை இந்த அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சியில் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் தேர்தலை உருவாக்குகின்ற நிலைமையில் அரசு இல்லையென்றாலும், எத்தனை காலத்திற்குப் பிறகு தேர்தல் நடக்கும் என்ற ஒரு வரையறையை இதுவரையில் அரசு தெரிவிக்கவில்லை. மாநகராட்சியின் நிலைமையில் சீர்திருத்தம் ஏற்பட்டு ஓர் ஆண்டுக்குப் பின்னால் அல்லது 6 மாதங்களுக்குப் பின்னால் தேர்தல் நடக்கும் என்று சொல்ல முடியாத நிலைமையில் அரசு இருக்கிறது. அதையும் வரையறுத்து ஓர் ஆண்டுக்குள்ளாக அல்லது 6 மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் நடைபெறும் என்ற நிலையைக் கூட அரசு சொன்னால் நன்றாக இருக்கும்.

அதே நேரத்தில் நமது மாநகராட்சி நிர்வாக வசதிக்காக சர்கிளாகப் பிரிக்கப்படும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் இப்பொழுது, மாநகராட்சி கலைக்கப்பட்ட பிறகு ஸ்பெசல் ஆபீஸர் ஆதிக்கத்தில் இருக்கிற மாநகராட்சியில் தனி அதிகாரி சட்டமன்றம் முடிவு எடுத்து நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்திற்குப் புறம்பாக உத்தரவு போட்டிருக்கிறார். தமிழகத்தில் சுப்ரீம் பாடியாக இருப்பது சட்டப்பேரவை தான். சட்டப்பேரவையின் தீர்மானத்திற்கு எதிரிடையாக அங்கே இருக்கிற தனி அதிகாரி ஒரு தீர்மானத்தை, உத்தரவைப் போட்டிருக்கிறார். இது நம்முடைய சட்டப்பேரவையை அவமதிப்பதாகும் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, மாநகராட்சி தேர்தல் எப்பொழுது வரும் என்ற நிலையை அறிவிக்கவேண்டும் என்பதையும், நகராட்சித் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதையும் என்னுடைய கட்சியின் சார்பில் வலியுறுத்தி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவி கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/74)

1974 சனவரி 29]

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இது வெறும் ஆயுள் நீட்டிப்புச் சட்டம் தான். ஆனால் இதற்குள்ளே அடங்கி இருக்கின்ற பல கருத்துக்களை அரசாங்கம் ஏற்கெனவே சிந்தித்துப்பார்த்திருந்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். மாநகராட்சி, நகராட்சி ஆகியவற்றை லோகல் அதாரிடீஸ் என்று சொல்கிறோம். லோகல் அதாரிடீஸ் ஏன் ஏற்படுத்தியிருக்கிறோம் என்றால் மக்களுடைய அன்றாடத் தேவைகளை தீவிரமாகக் கவனிக்கக் கூடிய வகையில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து நிர்வாகத்தைச் சீராக நடத்த வேண்டுமென்பதற்காகத் தான். இன்று மக்கள் என்ன நினைக்கிறார்கள் ? ஒரு இடம் நகராட்சியாகவோ, மாநகராட்சியாகவோ, டவுன்ஷிப் ஆகவோ ஆகிறது என்றால், வரியை அதிகமாக வாங்குவதற்காகத் தான் என்று நினைக்கிறார்கள், பயப்படுகிறார்கள். வீட்டு வரி என்ன ஆகுமோ, மற்ற வரிகள் எல்லாம் என்னவாகுமோ, எப்படி உயருமோ, என்ன செய்வது என்று பயப்படக்கூடிய நிலையில் தான் இருக்கிறதே தவிர வரவேற்கக் கூடிய நிலை இல்லை. என்ன வசதிகளைச் செய்து தருகிறோம்? மக்கள் வரிப் பணம் எக்கச்சக்கமாகப் பாழ் படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது ரிப்பன் மாளிகை நின்று கொண்டிருக்கிறது. அங்கே ஆரம்பத்தில் என்னவோ சுறுசுறுப்பாக நடந்து வந்தது. ஆனால் என்ன காரணமோ, என்னவோ, அதிலே தாமதம், தொய்வு ஏற்பட்டிருக்கின்றது. Delayed justice is denied justice. என்று சொல்வார்கள். நீதி வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறதென்றால் நீதி மறுக்கப்படுகிறது என்று தான் பொருள். அங்கே அப்படிப் பட்ட நிலை தான் காணப்படுகிறது. ஒரு நகரத்தை சுத்தமாக வைத்துக் கொண்டால் தான் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும். சென்னையை எடுத்துக்கொண்டால் சுத்தம் இருக்கிறதா? சென்னையைப் பொறுத்தவரையில் ஒரே கார்ப்பரேஷனாக வைத்திருப்பதை மாற்றி, தென் சென்னைக்கு ஒரு கார்ப்பரேஷனும் வட சென்னைக்கு ஒரு கார்ப்பரேஷனுமாக வைத்தால் சிறப்பாக இருக்குமென்று யோசனை கூற விரும்புகிறேன். சென்னையில் ஜனத்தொகை நாளுக்கு நாள் லட்சக் கணக்கில் அதிகரித்துக்கொண்டு வருகிறது. எனவே, தென் சென்னைக்கு ஒரு கார்ப்பரேஷன், வட சென்னைக்கு ஒரு கார்ப்பரேஷன் என்று வைத்தால் தீவிரமாக நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்வதில் அக்கறை காட்ட முடியும். லோகல் அதாரிடீஸின் முக்கிய வேலை நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது தான். conservancy must be the first primary duty of the local bodies. இன்று என்ன நடக்கிறது? அவைகளின் வேலைப் பளுவை நாம் அதிகரித்திருக்கிறோம். பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி ஆகிய எல்லாவற்றையும் கொடுத்தால், நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளவதில் எப்படி அதிக கவனம் செலுத்த முடியும்? இவற்றையெல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்தலாம். அப்போது தான் நகரை சுத்தமாக வைத்துக்கொள்வதில் முழு கவனம் செலுத்த முடியும். வெளிநாடுகளில் போய்ப் பார்த்தால் நகரங்களை எவ்வளவு சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ? வெஸ்டர்ன் கண்ட்ரீஸ் கூட வேண்டாம், ஆசிய நாடுகளிலுள்ள சிங்கப்பூர் மலேசியா ஆகிய நகரங்கள் எவ்வளவு சுத்தமாக அழகாக இருக்கின்றன

### 1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவி கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/74)

[1974 சனவரி 29

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கு. காமாட்சி): பேரவை முன்னுள்ள கேள்வி:

"1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) [திருத்த] சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

முகப்புரை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு கு. காமாட்சி) பேரவை முன்னுள்ள கேள்வி "முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move—

That in the Enacting Formula of the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Terms of Office) (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 2 of 1974), for the words "Twenty-fourth year", substitute the words "Twenty-fifth year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(மாண்பு மிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பிரிவு 1, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) [திருத்த] சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/74)

[1974 சனவரி 29

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill* 1974 (L.A. Bill No. 4 of 1974) be taken into consideration'

The Bill seeks to replace the Tamil Nadu Ordinance No. I of 1974 which was promulgated by the Governor on the 12th January 1974 for extending the life of the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, which was due to expire on the 25th January 1974, for a further period of five years, that is, up to and inclusive of the 25th January 1979.

With a view to conserve electrical engery for utilisation for productive purposes connected with War efforts, the Restriction and Control Orders on the supply of electrical energy were first introduced by the Government of India during the last World War under the Defence of India Rules. After the termination of the War, the Restriction and Control, Freezing, Surcharge, etc., orders relating to electricity have been continued in this State under the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, the life of which has been extended from time to time. Though the installed capacity of the Tamil Nadu Grid has progressively increased and stands to-day at 2254 M.W. including Neyveli power and the two Thermal Stations of Ennore and Basin Bridge, yet the vagaries of the monsoon have always affected effective generation. Hence, there have been spells of power shortage when a cut down on consumption becomes unavoidable. It has been our experience that in a developing economy, power demand always increases, the more the generation schemes are fulfilled. In the present power cut, the demand for power for essential services and agricultural purposes is being met on a priority basis. Hence, further restrictions on the existing supplies for non-essential purposes and loads have become necessary. At the same time, Government are

*Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 23rd January 1974.

taking all steps necessary to increase power generation by commissioning additional plants and also by redressing the imbalance between the Thermal and the Hydel content of the Grid.

It is, however, essential in the meantime, to continue in force, wherever necessary, the existing controls on electricity supply and consumption to ensure the most optimal use of the available power in the best interests of the public.

[பிற்பகல் 1-00]

As the orders relating to the supply of electrical energy and the levy of charges for the supply of electricity have been continued in the State under the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, the life of which has been extended from time to time, the Government have felt it necessary to continue the Act on the Statute Book for a further period and the Government of India have also agreed to extend the life of the Act for five more years. As the Legislature was not then in session, the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Ordinance, 1974, was promulgated to achieve the above object and the Bill now before the House is intended to replace the above Ordinance.

DR. H. V. HANDE: Sir, without wasting much of the time of the House, I would like to elicit information for two points from the Hon. Minister.

It is a fact that the Act has to be extended and it is quite clear. But how far they are going to help the farmers concerned in securing the release of electricity, is the question which has to be deeply pondered over. I hope and trust that the Hon. Minister in his reply will give us some details as to how the agriculturists are going to get proper electricity. Even now in spite of the fact that the power cut has not been to the extent it was a few months ago, a number of agriculturists are finding it difficult to conduct their agricultural operations for want of proper supply of electricity at the proper time. This particular aspect of the matter has to be gone into.

தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள்
கட்டுப்பாடு-கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) (திருத்த)
சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/74)



The other aspect of the matter is that they have got to devise ways and means to step up the production of power right now. The accent on production should be on coal-consuming thermal stations rather on hydel projects where the depth of water is not sufficient to produce more electricity. So we have to depend on thermal stations. I would like to know the steps taken by the Government to see that we do not suffer from want of enough coal for the production of power in thermal stations. I am afraid there is not sufficient coal in many of these stations.

Therefore, it is quite possible that in a short time the power cut will be more and more, in which case this particular Act will have to be implemented with full force. I have raised these points because they are directly connected with control and distribution of power. I request the Hon. Minister to reply to these points.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரம் மிக அவசியமான ஒரு தேவை என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதிலும், குறிப்பாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் தண்ணீரின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதை விநியோகம் செய்துக் கொண்டு வந்தோம். இன்றைக்கு மழை இல்லை யென்ருல், என்ன கதியிலே இருப்போம் என்பதையும் புரிந்துகொண் டோம். நம்முடைய புரடக்ஷன் எல்லாம் இரிகேஷன் அண்ட் எலக்ட்ரி சிட்டி இரண்டும் சேர்ந்திருப்பதாலேதான் நமக்குத் தேவைப்பட்ட மின் சாரம் இடைக்கவில்லை யென்று சொல்கிருர்கள்.

அடுத்தபடி, அனல் மின்சாரத்தைத்தான் நாம் சரியான முறையிலே கண்காணித்து, அதை அதிகரிக்க என்ன என்ன வழிவகைகளைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யவேண்டும். கனம் முதலமைச்சர் அவர்கள் வெற்றி நடையோடு சொன்னுர்கள், நாங்கள் எவ்வளவு செய்திருக்கிருேம் பார்த்தீர்களா? தூத்துக்குடியிலே அனல் மின்சாரம் வந்திருக்கிறது, என்று. மேட்டூர்ப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. நெய்வேலியிலே இரண்டாவது மைன் கட் வரப்போகிறது என் றும் சொன்னுர்கள். சொல்வது சரி, அதைத் துரிதப்படுத்த வேண்டும். சேலத்திலே எப்பொழுது அடிக்கல் நாட்டினுர்கள் என்பது எல்லோ ருக்கும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆனுல், இதுவரையிலே வேலை ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, மின்சாரத்திலே தமிழக அரசு அதிக கவனம் செலுத்திஞல்தான் தமிழகத்திற்கு நல்ல எதிர்காலம். இல்லா விட்டால் இருண்டகாலம்தான். நல்லவேளையாக, ஆளுநர் உரையிலே நல்ல பிரையாரிட்டீஸ் கொடுத்திருக்கிருர்கள், இரிகேஷன் அண்ட் பவ ருக்கு. வெறும் வார்த்தையோடு இருந்துவிடாமல், அவற்றை முடிப் பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி : 12 ஆண்டுக்காலம் தேர்தல் நடக்காமலிருந்தால் அதுவும் தவறு தான். கேரளாவில் தவறு நடந்தால் அந்த தவறை நீங்களும் செய்ய வேண்டுமென்று சொல்ல மாட்டேன். நான் இந்த மசோதாவை ஒரு நல்ல அம்சம் என்று குறிப்பிட்டு வரவேற்றுப் பேசுகின்றேன். அதைக் கூட அமைச்சர் அவர்கள் புரிந்துக் கொள்ளவில்லையே என்று வருத்தப்படுகிறேன்.

எல்லா முனிசிபாலிடிக்கும், கார்ப்பரேஷனுக்கும் 5 வருஷம், 4 வருஷம் 3 வருஷம் என்று இல்லாமல், அவைகளினுடைய உறுப்பினர்களுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்தான் என்று நிர்ணயித்த து நல்ல அம்சம். மற்ற மாநிலங்களும் கூட இதை காப்பி அடிக்க வேண்டுமென்று சொல்லலாம்.

(திரு கு. காமாட்சி தலைமை)

இன்னொரு விஷயத்தையும் பல உறுப்பினர்களும் சொன்னார்கள். அதையும் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். முனிசிபல் தேர்தல், கார்ப்பரேஷன் தேர்தல் நடந்த பிறகு இன்றைக்கு யார் மேயராக வருவது, யார் சேர்மெனாக வருவது என்பது சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. இன்றைக்குப் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற மாதிரி நகர சபைத் தலைவரையும், நகராட்சி மேயரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிற முறை வந்தால் நல்லது. அது சம்பந்தமாக அரசு ஏதாவது ஆலோசனை நடத்தியதா? சட்ட திருத்தம் கொண்டு வருவதற்கு யோசனை இருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஏதாவது செய்ய வேண்டும் என்கிற எனது ஆலோசனையைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தின்பேரில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு விவரங்களை இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இந்தத் திருத்தமே—ஒரு சில நகராட்சிகளுக்கு 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு தேர்தல் நடைபெற்ற காரணத்தினாலும், இந்த அரசு நகராட்சி மன்ற உறுப்பினர்களின் காலத்தை 3 ஆண்டில் இருந்து 5 ஆண்டாக மாற்றிய காரணத்தினால் 76 வரை அவர்கள் கேட்பார்கள் என்ற காரணத்தினாலே—இவற்றுக்கு எல்லாம் ஒரே காலத்தில் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொதுவாக இதை எல்லோரும் வரவேற்றதற்கு என் நன்றி.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது மாநகராட்சிச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள். ஒருங்கிணை ந்த மாநகராட்சிச் சட்டம் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலனை செய்கிறது. விரைவில் அது இந்த அவைக்குக் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கோபால்சாமி வெள்ளை அறிக்கைப்படி வட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை சரியாக இயங்காத காரணத்தினால் அவை எல்லாம் கலைக்கப்பட்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



விவாதத்தில் கலந்துக்கொண்ட திரு. ஜப்பார் அவர்கள் தனியாக முஸ்லிம்களுக்கு என்று சில வார்டுகள் ஒதுக்கப்படுவது தேவை, அப்போதுதான் நகராட்சித் தலைவர்களாக முஸ்லிம்கள் வர முடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். பெண்களுக்கு சில பிரதிநிதித்துவம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சில பிரதிநிதித்துவம் என்பதைத்தவிர பொதுவாக சாதி இன அடிப்படையில் பிரிப்பது என்பது கிடையாது. அந்த அந்தப்பகுதியில் வட்டாரங்களைப் பிரிக்கின்றபோதுகூட இயற்கை எல்லைகளை ஒட்டி பிரிக்கப்படுகின்றனவே தவிர சாதி அடிப்படையில் இல்லை. இன்றைக்குக் கூட கோவை நகராட்சியை எடுத்துக்கொண்டால் தலைவராக இருக்கிற திரு. சுக்கூர் முஸ்லிம் தான். இப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருக்கக்கூடியவர் அந்தக் காலத்திலேயே உடுமலைப் பேட்டை நகராட்சி மன்றத்தின் தலைவராக இருந்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக சாதி அடிப்படையில் பிரிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருசில இடங்களில் பிரிக்கப் பட்டிருப்பது நம்முடைய விதிகளுக்குட்பட்டு, நியாயப்படி பிரிக்கப்பட்டிருப்பதேயாகும்.

திரு முனு ஆதி அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலைப் பற்றிச் சொல்லவில்லையே என்றார்கள். அது கலைக்கப்பட்ட நேரத்தில், தனியாக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்டத்திலேயே 6 மாதம் அதன் ஆயுளை வைப்பது, தேவைப்பட்டால் இன்னும் 6 மாத காலம் நீடிப்பது என்பதற்கு இந்த அவையே அனுமதி அளித்திருக்கிறது என்பதை அவர் மறந்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

திருமதி அனந்தநாயகி அவர்கள்—எங்களையெல்லாம் பிரிவினை வாதி என்று சொல்லிக்கொண்டிருந்தவர்—இன்றைக்கு அதைப் பிரி, இதைப் பிரி என்று பிரிவினைப்பையைப் பற்றியே பேசினார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் கேட்கிற பிரிவினை வேறு—நாங்கள் சொன்ன பிரிவினைகள் வேறு.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : மாநகராட்சியில் வசதிகள் அதிகப்படுத்தப்படவேண்டும் என்பதற்கு இன்றைக்கே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட நெடுங்காலமாக அடைப்பட்டுக்கிடக்கிற துர்நாற்றத்தைப் போக்கச் செய்வது சிரமம்தான் என்றாலும் விரைவில் அவை சுத்தம் செய்யப்படும். பப்ளிக் கக்கூஸ்களை அதிகப்படுத்துவது—இன்னும் ஒவ்வொரு வட்டத்திலும் குழந்தைகளுக்காகவே மறைவிடங்கள் கட்டிக்கொடுக்கிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி மாநகராட்சியில் நல்லபல திட்டங்களைச் செயலாற்ற விரிவான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்படுகிற பகுதி வார்டு டிவிஷனில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவற்றைப்பற்றி எல்லாம் பிறகு சொல்கிறேன் என்று சொல்லி இந்தத் திருத்தச் சட்டத்தை இந்தப் பேரவை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

அதைப்போல் பழுப்பு நிலக்கரியைப் பார்க்கும்போது, இரண்டாவது சுரங்கக் கட்டை நாம் வேண்டுமென்று கேட்கும்போது, அங்கு உற்பத்தி ஆகிற மின்சாரத்தை முன்னரே ஒழுங்காகப் பயன்படுத்தி இருந்தால், சற்று முன்னரே நமக்கு இரண்டாவது சுரங்கக் கட் வந்திருக்கும். இந்த அரசாங்கத்தினுடைய தவறுதான் அது. கேரளா கொடுக்கிறது, குறைந்த விலையிலே ஆந்திரா கொடுக்கிறது, மைசூர் கொடுக்கிறது என்று சொல்லி அங்கிருந்து வாங்கிக் கொண்டிருந்தோம். கொஞ்சம் விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லையென்று ஒழுங்கான முறையிலே வாங்கிப்பயன் படுத்திக்கொள்ள தவறிவிட்டீர்கள். (குறுக்கீடு). நெய்வேலியிலே உற்பத்தியாகிற அத்தனை மின்சாரத்தையும் நீங்கள் வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருந்திருப்பீர்களானால் சரியாக இருந்திருக்கும். அங்கு விலை அதிகமாக இருக்கிறது என்று, கேரளா குறைவாகத் தருகிறது, ஆந்திரா குறைந்த விலையில் மின்சாரம் தருகிறது என்று அங்கிருந்தெல்லாம் மின்சாரம் வாங்கிக் கொண்டிருந்ததால், இரண்டாவது சுரங்கம் வாங்க இந்த அரசு தவறி விட்டது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் போட்டி போட்டுக்கொண்டு அங்கிருந்து வாங்கினீர்கள். (குறுக்கீடு) நம்முடைய தமிழ் மாநிலத்திலே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை ஒரு பைசா அதிகமாக இருந்தாலும், வாங்கியிருந்தால், இரண்டாவது சுரங்கக் கட் நமக்கு எப்பொழுதோ வந்திருக்கும். நீங்கள் அதைச் செய்யத் தவறியதால்தான் இந்நிலைமை என்று சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன்.

கல்பாக்கம் அணு மின் திட்டம் 1975-லே கிட்டிவிடும் என்று சொன்னார்கள். இன்னும் தள்ளிக்கொண்டே போகிறார்கள். காரணம், மத்திய அரசாங்கத்திலிருந்து துரிதமாக வேலையை நடத்திடவில்லை நீங்கள். எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக நடத்துகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு வேகமாக கிடைக்கும். எண்ணூர் அனல் மின்சார திட்டத்தை 6 மாதத்திலே வாங்கினார்கள். அதைப்போலவே, இதிலும் துரிதமாக வேலை நடத்தி, அக்கறை காட்டினால் அணு மின்சாரத்தை காலாகாலத்திலே, உற்பத்தி செய்ய முயற்சி செய்தால்தான் நம்மால் ஓரளவு மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுத்து சமாளிக்க முடியும்.

அடுத்து, தனியார் நடத்துகிற கம்பெனிகளை எடுத்து துரிதமாக வேலைகளைச் செய்வதற்கு ஒரு கார்ப்பரேஷன் போடப் போகிறோம், அவற்றைச் சீர்படுத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒருவர் வழக்கு மன்றத்துக்குப் போயிருக்கிறார். அவரை விட்டு விட்டு, மற்றவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வது சாலச்சிறந்ததாகும். உடனே, கனம் சட்ட அமைச்சர் வழக்கு மன்றம் போனவருக்கு எப்படி மின்சாரம் கொடுப்பது என்று கேட்பார். வழக்கு மன்றம் போனவருக்கு மின்சாரம் கொடுக்க வேண்டாம். வழக்கு போடாதவர்களுக்கு ஏன் நீங்கள் கொடுக்கவில்லை என்ற அளவுக்குத்தான் கேள்வி. இதனால் யாருக்கும் கெட்ட பெயர் வராத அளவுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும்.





இன்றைக்கு டாக்டர்கள் கான்ஃப்ரன்ஸ் போட்டு ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள், மருத்துவ மனைகளுக்கு மின்சார வெட்டு இருக்கக் கூடாது என்று. டாக்டர்களே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் தீர்மானம் போட்டு சொல்லக்கூடிய பிரச்சனையா இது? நமக்கே இது தெரிய வேண்டாமா? ஆகவே, எக்காரணத்தை முன்னிட்டும் மக்களுக்கு அவசியமான வேலைகளுக்கெல்லாம் நாம் மின்சாரம் கொடுக்கத் தயங்கக் கூடாது.

இன்றைக்கு விழாக்கள் நடக்கின்றன. விழாக்களுக்குக் குறைவான மின்சாரத்தைப் பயன்படுத்த முடியுமா என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அனாவசியமாக, பல இலட்சக்கணக்கான விளக்குகள் போட்டு, ஆடம்பரமாக விழா நடத்தித்தான் விளம்பரம் பெற வேண்டுமா? விளம்பரத்தை சாரி மின்சாரத்தால்தான் விளம்பரம் வரப்போகிறதா? விளம்பரத்தை ... விழா ... யத்திலேதான் பெற வேண்டும். தமிழகத்திலே மின்சார பூர்த்தி விழா பூர்த்தி விழா என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், இன்னும் பல கிராமங்களிலே மின்சாரம் இல்லாத குறைபாடுகளை நாம் காண்கிறோம். ஆகவே, விவசாயிகளுக்கு மின்சார வெட்டு இல்லாமல், மருத்துவ மனைகளுக்கு மின்சார வெட்டு இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். காரணம், அந்தந்த தொழில்களுக்கு கன்சம்ஷன் மிகவும் குறைவு. நான் முன்னால் சொன்னவர்களுக்குப் போவது, தொழில்களுக்கு 56 பெர்சண்ட் போகிறது. 6 சதவிகிதம் 8 சதவிகிதம், 20 சதவிகிதம் என்றுதான் வருகிறது. இந்தக் குறைந்த அளவு மின்சாரத்தை நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் தவறான முறையிலே விநியோகம் செய்யாமல், அதை ஒழுங்காகச் செய்தால் நல்லது என்று இந்த முக்கியமான பில்லிலே அதை நீட்டிப்பதோடு விட்டுவிடாமல், இது ஒரு பெரிய ஆயுதம் அந்த ஆயுதத்தைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள் என்று எதிர்க்கட்சிகளின் சார்பிலே தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, the life of the Essential Articles Control and Requisitioning Act should be extended. At the same time, I want to offer a few remarks regarding this Bill.

In the said Rules, 24 and 25 shall be renumbered as rule 25 and 26 respectively and before rule 25 as so renumbered, the following rule shall be inserted, namely:—

"24. Interest at the rate of six per cent per annum shall be charged on the disallowance, surcharge or charge amount due, with effect from the day following the last date fixed for payment of the said disallowance surcharge or charge amount in the auditors' certificate referred to in sub-rule (1) or rule 21. The interest so charged on the disallowance, surcharge or charge amount overdue shall be specified in the said certificate itself in precise terms, as laid down in section 34 of the Civil Procedure Code, 1908 (Central Act V of 1908)".

## DRAFT II.

The following draft of an amendment to the rules in Parts III and IV of Schedule III to the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) proposed to be made by the Governor of Tamil Nadu under sub-section (3) of section 431 of the said Act be approved.

### Draft Notification.

In exercise of the powers conferred by sub-section (3) of section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the rules in Parts III and IV of Schedule III to the said Act:—

*Amendment.*

In the said Rules, rules 23 and 24 shall be renumbered as rules 24 and 25 respectively and before rule 24 as so renumbered the following rule shall be inserted, namely:—

"23. Interest at the rate of six per cent per annum shall be charged on the disallowance, surcharge or charge amount due, with effect from the day following the last date fixed for payment of the said allowance, surcharge or charge amount in the auditors' certificate referred to in sub-rule (1) of rule 20. The interests so charged on the disallowance, surcharge or charge amount overdue shall be specified in the said certificate itself in precise terms, as laid down in section 34 of the Civil Procedure Code, 1903 (Central Act V of 1908)".





## DRAFT III.

The following draft of an amendment to the rules in Part II of Schedule IV to the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) proposed to be made by the Governor of Tamil Nadu under sub-section (1) of section 305 of the said Act be approved.

### Draft Notification.

In exercise of the powers conferred by sub-section (1) of section 305 of the Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the rules in Part II of Schedule IV of the said Act:—

*Amendment.*

In the said rules, rule 63 shall be renumbered as rule 64 and before rule 64 as so renumbered, the following rule shall be inserted, namely:—

"63. Interest at the rate of six per cent per annum shall be charged on the disallowance, surcharge or charge amount due, with effect from the day following the last date fixed for payment of the said disallowance, surcharge or charge amount in the auditors' certificate referred to in sub-rule (1) of rule 60. The interest so charged on the disallowance, surcharge or charge amount overdue shall be specified in the said certificate itself in precise terms, as laid down in section 34 of the Civil Procedure Code, 1908 (Central Act V of 1908)".

## EXPLANATORY NOTE.

According to the existing rules in the Schedules to the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), and the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) the auditors are empowered to disallow every item contrary to law and surcharge the same on

of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), be approved as required by the proviso to the said sub-sections :—

DRAFT AMENDMENTS.

In the said rules,—

(1) in rule 5, after sub-rule (2), the following sub-rule shall be added, namely :—

"(3) Where several persons falling under the same category apply for assignment, the Authorised Officer shall make due enquiry about the economic status of the applicants, their family commitments, etc., and select the person who in his opinion, is economically poorer or has more family commitments than others. Clear reasons shall be recorded in the order for preferring a particular person to others. Where the persons competing for assignment are more or less similarly placed and no distinction could be drawn between them, the selection of the persons eligible for assignment shall be made by drawal of lots. ";

(2) in rule 7, the following shall be added at the end, namely :—

"Every such application shall be made within thirty days from the date of the publication of the notice under rule 4 in the village or town where the land is situated ";

(3) in rule 11, for sub-rule (3), the following sub-rule shall be substituted, namely :—

"(3) (a) Any person aggrieved by the orders of the District Revenue Officer under rule 10 may, within sixty days from the date of receipt of such order, make an application for revision to the Land Commissioner :

Provided that the Land Commissioner may, admit an application for revision up to thirty days after the expiry of the period aforesaid, if he is satisfied that the applicant had sufficient reason for not making it within the said period.

(b) The Land Commissioner may, at any time, of his own motion, within a period of five years of the date of the order of assignment, set aside, cancel or in any way modify the order of assignment if he is satisfied that the order was grossly inequitable.



or there has been a material irregularity in the procedure, or that it was passed under a mistake of fact or owing to fraud or misrepresentation or that the extent assigned together with other lands, if any, held by the assignee (other than a Co-operative Society) was in excess of five standard acres. ";

(4) in Form B for paragraphs 1, 2 and 3, the following paragraphs shall be substituted, namely :—

"1. It is hereby notified that the land specified in the Schedule below, which has been acquired by the Government under section 18 (1) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), is available for disposal under section 94 of the said Act and the rules made thereunder. Any person desiring to apply for the assignment of the land may present his application in person or send it by registered post to the Authorized Officer.................... within thirty days from the date of the publication of this notice in ..................................village/town where the land is situated.

2. The following persons and societies shall be eligible for the assignment of land and shall be entitled to preference in the order given below :—

(i) A person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus as a result of the provisions of the Act;

(ii) Any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act;

(iii) A person whose extent of hlding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly has owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the act;

(iv) A landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land;

(v) A person who is, or who has been, a member of the Armed Forces including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or disbanded before the 26th January 1950;

## வரைவு வெளியீடு.

1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 305-ன் உட்பிரிவு (1)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் விவர அட்டவணை IV-ன் பாகம் II-ல் அமைந்துள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

## திருத்தம்.

மேற்கூறிய விதி 63-ஐ 64 தொடர் எண் விதியாக மாற்றவும். அவ்வாறு மாற்றும்போது தொடர் எண் 63-ன் விதி முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும்.

"63. விதி 60-ன் உபவிதி (1)-ன்படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத்தொகை பொறுப்புத் தொகை அல்லது தண்டக்கட்டணத்தொகை மீது செலுத்த வேண்டுமென்ற முடிவு செய் துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் சேர வேண்டிய இழப்புத்தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத்தொகைமீது விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத்தொகை பொறுப்புத்தொகை, தண்டக்கட்டணத்தொகை மீது விதிக்கப்படும் வட்டி, மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்."

## விளக்கக் குறிப்பு.

1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், மற்றும் 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவைகளில் ஏற்கனவே உள்ள விதி முறைகளின்படி தணிக்கையாளர்கள் சட்டத்திற்கு முரண்பாடான ஒவ்வொரு இனங்களை தள்ளுபடி செய்யவும், அவ்வாறு தள்ளுபடி செய்வதற்குக் காரணமாக இருந்த நபரின்மீது தண்டக் கட்டணமாக விதிக்க அதிகாரங்கள் உண்டு. ஆனால் மேற்கண்ட கட்டங்களில் குறிப்பிட்ட விவர அட்டவணையின்கீழ், தணிக்கை யாளர்கள் குறிப்பிட்ட தண்டக்கட்டண சான்றிதழில் குறிப்பிட்டத் தொகை கட்டப்படாவிடின் தண்டக் கட்டணத்தொகையின் மேல்வட்டி வசூலிக்கத் தக்க ஒதுக்கீடுகள் இல்லை. ஆனால், 1958-ம் வருடத்திய ஊராட்சிகளின் சட்டத்தில் தண்டக் கட்டணத்தொகை செலுத்த வேண்டுமென்று தண்டக் கட்டணச் சான்றி தழில் முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் விதிக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே விதிமுறைகள் உள்ளன. சென்னை, மதுரை, மாநகராட்சிகள் மற்றும் மாவட்ட நகராட்சிகளைப் பொறுத்தவரையில் தண்டக்கட்டணத் தொகை விதிகளில் ஒரே சீரான கொள்கையைக் கடைப்பிடிப்பதற்காக மாநில அரசு சென்னை, மதுரை, மாநகராட்சிகள் சட்டம், மாவட்ட நகராட்சிகளின் சட்டம், ஆகிய சட்டங்களின் விவர அட்டவணையின்கீழ் உள்ள தக்க பகுதிகளை திருத்துவது என முடிவு செய்துள்ளது.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### புதன்கிழமை, 1974 சனவரி 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

## *Institute of Management.*

*241 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission has recommended to the Government to set up an Institute of Management; and

(*b*) if so, the details there of?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திட்ட ஆணைக்குழுவுடனும் பிற வல்லுநர்களுடனும் கலந்தாலோசித்து விவரங்கள் அரசால் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பொதுத் துறை வளர்ந்து வரும் இந்நாளில் நிர்வாகத் திறன் படைத்தவர்கள் தேவை அதிகரிக்கும் காரணத்தால் மிக விரைவில் இன்ஸ்டிட்யூட் ஆப் மானேஜ்மென்டைத் துவக்குவதற்கான வழிவகை செய்யப்படுமா? ஏற்கெனவே தனியார்த் துறையில் 'மானேஜ்மென்ட்' கோர்ஸ் கோவையில் பி.எஸ்.ஜி. இன்ஸ்டிட்யூட் போன்ற இடங்களில் இருக்கிறது. இன்ஸ்டிட்யூட் ஆப் மானேஜ்மென்ட் துவக்கப்படுவதற்கிடையில் இத்தகைய இடங்களில் நடக்கும் மானேஜ்மென்ட் கோர்ஸில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் முயற்சி கையாளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

the person making, or authorising the making of, the illegal payment. But there is no specific provision in the relevant Schedule to the said Acts for the recovery of interest on the surcharged amount mentioned in the surcharge certificate, issued by the auditors, if the amount surcharged is not paid within the stipulated time. Whereas, provision already exists in the rules framed under the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) for the recovery of interest on the surcharged amount overdue at the rate of six per cent per annum with effect from the day following the last date fixed for payment of the surcharged amount in the surcharged certificate. In order to evolve an uniform policy in the matter of surcharge rules in the case of the Corporation of Madras and Madurai and in Municipal Councils, the State Government has proposed to amend suitably the provisions in the Schedules to the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) and the Tamil Nadu District Municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920).

## வரைவு 1.

சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) V-வது விவர அட்டவணையின் III மற்றும் IV-ம் பாகங்களில் அமைந்துள்ள விதிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் விதி 347-ன் உபவிதி (3) ன்படி கொண்டு வரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்கவும்.

## வரைவு வெளியீடு.

1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 347 உட்பிரிவு (3)-ல் அமைந்துள்ளபடி தமிழக ஆளுநர் V-வது விவர அட்டவணையில் III மற்றும் IV பாகங்களில் உள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

## திருத்தம்.

மேற்கூறிய விதிகள் 24, 25 ஆகியவைகளை 25, 26 என்ற தொடர் எண் விதிகளாக மாற்றப்படும் . அவ்வாறு மாற்றியமைக்கும்போது தொடர் எண் 25-ன் விதியின் முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும்.

" 24. விதி 21-ன் உபவிதி (1)-ன்படி தண்டக்கட்டணம் சான்றிதழில் இழப்புத்தொகை, பொறுப்புத்தொகை அல்லது தண்டக்கட்டணத்தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் சேர



வேண்டிய இழப்புத்தொகை, பொறுப்புத்தொகை அல்லது தண்டக் கட்டணத்தொகைமீது வட்டி விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத்தொகை, பொறுப்புத்தொகை, அல்லது தண்டக் கட்டணத்தொகை ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். "

## வரைவு II.

மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III-வது விவர அட்டவணையுடன் III, IV-ம் பாகத்தில் உள்ள விதிகளை தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 431-ன் உள்பிரிவு (3)-ன்படி கொண்டு வரும் வரைவு திருத்த விதிகளை ஏற்கவும்.

## வரைவு வெளியீடு

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் பிரிவு 431-ன் உட்பிரிவு (3)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் III-வது விவர அட்டவணையில் உள்ள பாகங்கள் III மற்றும் IV ஆகியவைகளில் உள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்

## திருத்தம்

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் விவர அட்டவணை III-ல் உள்ள பாகம் III-ல் உள்ள தொடர் எண் விதிகள் 23, மற்றும் 24 ஆகியவைகளை 24 மற்றும் 25 தொடர் எண் விதிகளாக மாற்றியமைக்கும் போது, விதி 24-ன் முன் கீழ்க்கண்டவைகளை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

" 23. விதி 20-ன்கீழ் உபவிதி (1)-ன் படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத்தொகை, பொறுப்புத்தொகை அல்லது தண்டக் கட்டணத்தொகைமீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக்கட்டணத்தொகைமீது விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி இழப்புத்தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக்கட்டணத்தொகைமீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். "

## வரைவு III.

மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையின் II-ம் பாகத்தில் கண்டுள்ள விதிகளுக்குத் தமிழ்நாடு ஆளுநர் மேற்படி சட்டத்தின் விதி 305-ன் உபவிதி (1)-ல் கண்டுள்ளபடி, கொண்டு வரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்கவும்.

முடிவுகள் குறித்து வெளியிடப்படும் அறிவிப்புக்கள் அனைத்தும் பொது மக்கள் அதனிடமிருந்து நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த வெளியீடு அமையும்.

**திரு. எ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்த சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு வருகின்றவர்களின் பொது அறிவு மிகவும் குறைவாக இருக்கிறது என்ற புகார் ஒவ்வொரு அறிக்கையிலிருந்தும் தெரிகிறது. அதை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது சர்வீஸ் கமிஷன் சார்பாக வெளியிடப்படுகிற புல்லடினைப் பொறுத்த விவகாரம். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மத்தியிலே யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆண்டுக்கொரு தடவை ஒரு ரிபோர்ட் சமர்ப்பித்து அந்த ரிபோர்ட் இரண்டு சபைகளிலும் விவாதிக்கப்படுகிறது. அது மாதிரியாக இங்கும் ஏற்பாடு செய்ய வழி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்தியிலே என்ன செய்யப்படுகிறது என்பதை அறிந்து அதுபோல் நாமும் பின்பற்றலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வேலைக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும் நிறுவனமாக இருக்கிறது. அதனால் அங்கிருந்து வெளியிடக்கூடிய புல்லடின்கள் சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமல்லாமல், வேலை இல்லாமலிருக்கும் கிராமப்புற மக்களுக்கும் அந்த விவரங்களை அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும்பொருட்டு, கிராம நூலகங்கள் இப்படிப்பட்ட புல்லடின்களைக் கட்டாயம் வாங்கவேண்டுமென்ற ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கிராம நூலகங்களுக்கும் இந்த புல்லடின்கள் செல்லுகின்ற அளவுக்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** இப்படிப்பட்ட சங்கடங்களைத் தவிர்ப்பதற்கு மத்திய அரசு செல் ஒன்றை அமைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போல் நம்முடைய மாநில அரசும் செல் அமைத்துச் செயல்படுமா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** "இப்படிப்பட்ட சங்கடங்கள்" என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். எப்படிப்பட்ட சங்கடங்கள் என்று சொன்னால் நான் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

## கிராமப்புறங்களில் மருத்துவர்கள் பணி

***210.வின.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) M.B.,B.S. பட்டம் பெற்ற மருத்துவர்கள் மூன்றாண்டுகளுக்கு கிராமப்புறத்தில் பணியாற்ற வேண்டுமென்ற விதியினை அமுல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. பாரத்தாமன் :** தலைவர் அவர்களே, எம்.பி., பி.பிஸ். பட்டம் பெற்றவுடனே எல்லா டாக்டர்களும் நகர்ப்புறங்களில்தான் வேலை செய்ய விரும்புகிறார்கள். ஆகவே, நல்ல திறமையான டாக்டர்களை கிராமப்புறங்களில் பெற இயலவில்லை. ஆகவே, எம்.பி., பி.எஸ்., கோர்ஸில் சேர்த்துக்கொள்ளும் நோத்திலேயே பட்டம் பெற்ற பிறகு கட்டாயமாக அவர்கள் கிராமப்புறங்களில் ஓராண்டு பணியாற்றவேண்டுமென்ற விதியை நம் அரசு விதிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் .** தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த நிலை இல்லை. எம்.பி., பி.எஸ். தேர்ச்சி பெற்றவர்கள் எல்லோருமே தகுதியான திறமையான படிப்பு பெற்றவர்கள் என்றுதான் கருதவேண்டும். அவர்களில் பல பேர் கிராமங்களுக்கு வரத் தயாராகவே இருக்கிறார்கள். கிராமங்களில் தகுந்த முறையில் மருத்துவசாலைக்கான கட்டடம், வீட்டு வசதிகள் முழு அளவுக்கு ஏற்படச் செய்ய நிதி வசதிகள் இல்லை என்று கூறலாமே தவிர, டாக்டர்கள் வரவில்லை என்று கூற முடியாது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற டாக்டர்களுக்கு அங்கு சரியான வசதிகள் செய்து கொடுக்காத காரணத்தால் கிராமங்களில் பணியாற்ற டாக்டர்கள் செல்ல விரும்பவில்லை என்று கூறப்படுகிறதே அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்து மிக நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்படும்பொழுது அந்த நிலையில் மட்டும் தகுதி உடைய டாக்டர்கள் நிலை அறிந்து பயன்படுத்தவேண்டிய ஒன்று. உயிர் காக்கும் மருந்துகள் அந்த தேர்ச்சியுள்ள டாக்டர்களைப் பெறும் சூழ்நிலை இல்லாத ஒரு சாதாரண ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைக்கப்பட்டால், தேவையில்லாதபொழுது அவற்றைப் பயன்படுத்தினால் அதன் விளைவு எல்லா நேரங்களிலும் நன்றாக இருக்காது. ஆகவே, மாவட்ட மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஆகிய இடங்களில் தான் அவை இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். வேறு எந்த அளவுக்குப் பிற மருத்துவமனைகளில் இடம் பெறச் செய்ய முடியும் என்பது எனக்கு இப்பொழுது தெரியவில்லை. அதைப்பற்றிப் பரிசீலிக்க முயற்சிப்பேன்.

திரு. நா. வீராசாமி: உயிர் காக்கும் மருந்துகள் கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் இருக்கவேண்டும். காரணம், அங்கே சில இடங்களில் பல போக்குவரத்து இருப்பதில்லை. டிரக் ஸ்டோர்கள் தனிப்பட்ட மருந்து நிறுவனங்கள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் நீண்ட தூரம் சென்று மருந்துகளை வாங்கிக்கொண்டு வந்து நோயாளிகளுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குள் நோயாளி பிழைத்திருப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமப்புறத்தில் இருக்கிற அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதுபற்றி விவரம் இல்லாத காரணத்தினால் நான் அதைப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். பொதுவாக இப்படிப்பட்ட மருந்து ஒரு நோயாளிக்கு தகுந்த சிகிச்சைகளெல்லாம் அளிக்கப்பட்டபின், கடைசி கட்டத்தில், கடைசி கட்டம் வருகிற போது வழங்கப்படுகிறது. கடைசி கட்டத்தில் திடீரென்று பிழைத்துக் கொண்டால் பிழைத்துக்கொள்ளட்டும் என்று செய்யப்படுவது இந்த சிகிச்சை. மற்ற வசதிகள் இல்லாத இடங்களில் இம்மாதிரி ஒரு மருந்தை வைத்திருந்தால், நண்பர் வீராசாமி அவர்களே திடீரென்று தலைவலி என்று அங்கே சென்றால், எம்.எல்.ஏ.-க்கு என்ன ஆபத்தோ என்று அந்த மருந்தை கொடுத்துவிடக்கூடும். அப்படிப்பட்ட நிலைமை அவசியம்தானா. இது நல்ல முறையில் பயன்படுமா என்று இந்தத் துறையைச் சார்ந்தவர்களைக் கொண்டு இதைப் பரிசீலிக்கும்படி கேட்கலாம்.



## வந்தவாசியில் சாக்கடை அமைப்புத் திட்டம்

*218 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பேரூராட்சியில் சாக்கடை அமைப்புத் திட்டத்திற்கு கடன் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த வந்தவாசிப் பஞ்சாயத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு ட்ரைனேஜ் ஸ்கீம் போட வேண்டும் என்று மனு வந்திருக்கிறதா? அது பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அதற்கு என்ன செய்தார்கள்? அமைச்சர் அவர்களிடமிருந்து இல்லை என்று பதில் கொடுத்த பிறகு, அதற்கு இனியாவது முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் சென்றபோது கூட ட்ரைனேஜ் திட்டம் தேவை என்று சொன்னார்கள். ஆறுதல் வாரியத்திற்கு அவர்கள் முறைப்படி விண்ணப்பம் செய்திருந்தால்தான், அந்த வாரியம் அதுபற்றி பரிசீலிக்க முடியும். அந்த வாரியத்திற்கு, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அவர்கள் விண்ணப்பிக்கவில்லை. ஆகவே, அது பற்றி விவரம் கேட்கிற பொழுது அவர்கள் அணுகவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

## மாயூரத்தில் சாக்கடை அமைப்புத் திட்டம்

*219 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் பாதாளச் சாக்கடை அமைப்பு திட்டத்தினை செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம். தமிழ்நாடு அரசு 3—3—1970-ல் மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமைப்பதற்கான ஆய்வு மதிப்பீடு ரூ. 31,000-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆய்வு வேலைகள் முடிவடைந்து உத்தேச திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

## குளித்தலை மருத்துவமனை

* 243 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் மருத்துவமனையில் மின் விசிறி வசதி எப்போது அமைக்கப்பட்டது?

(இ) பழைய மின் விசிறிகளை மாற்றி அமைக்கவும், கூடுதலாக மின் விசிறி வசதி செய்து தரவும் அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1957 டிசம்பர் மாதம் குளித்தலை மருத்துவமனையை மாவட்ட மன்றத்திலிருந்து அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டபோது, இரு மின்விசிறி வசதியோடு இருந்தது. மேலும் ஒரு மின் விசிறி 8—11—1971-ல் மேற்படி மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது.

(இ) மூன்று மின்விசிறிகளில் ஒன்று பழுதடைந்திருந்தது. அந்த மின் விசிறியை செப்பனிடவும் மற்ற எல்லா மின் விசிறிகளும் நன்றாக இயங்கும்படி கவனித்துக்கொள்ளவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தற்பொழுது இந்த மருத்துவமனை அமைந்திருக்கிற இடம் நகரத்தின் நடுவிலே இருக்கிறது. ஆகவே, காற்றோட்ட வசதி போதுமானதாக இல்லை. இன்னும் கூடுதலாக மின் விசிறி வசதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பழைய கட்டடத்தில் நிறைய மின் விசிறிகளைப் பொருத்துவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆனால், புதிய மருத்துவமனை கட்டுவதற்கு இடம் பெறுவதற்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

## தஞ்சை மருத்துவமனை வெளி நோயாளிப் பிரிவுக்கான கட்டடம்

* 244 வினா.—திரு. என். கிட்டப்பா. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் வெளி நோயாளிப் பிரிவுக்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.



## இரத்த தானம்

* 245 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரத்த தானம் செய்வோருக்கு தற்போது எவ்வளவு நன்கொடை தொகை வழங்கப்படுகிறது?

(இ) இது எப்போது நிர்ணயிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) அரசு மருத்துவமனைகளில் குருதி வழங்குவோருக்கு தற்போது ரூபாய் பத்து நன்கொடையாக வழங்கப்படுகிறது.

(இ) இத்தொகை 26—4—1971-ல் நிர்ணயிக்கப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ரத்தம் வழங்குவோருக்கு வழங்குகின்ற தொகையை மேலும் கூடுதலாக்க அரசு ஏதாவது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அவர்களிடமிருந்து குருதி விலைக்கு வாங்குவதாக இப்பொழுது சொல்லப்படவில்லை. குருதிக் கொடை, தானம் என்றுதான் சொல்லப்படுகிறது. தானம் தருவதற்கு ரூ. 10 தருகிறோம். தானம் தருகிற மாட்டை பல்லைப் பிடித்து எண்ணக்கூடாது.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, குருதி தானம் பெறுகிறார்கள் ஆஸ்பத்திரியில் சில ஏழை எளிய மக்களுக்கு குருதி செலுத்த வேண்டிய நேரத்தில் குருதி கிடைக்கவில்லை. வாங்கித் தாருங்கள் என்றும், குருதி கொடுப்பதற்கு இவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும் என்று கேட்கிற நேரத்தில் ஏழை எளிய மக்கள் பணம் கொடுத்து தங்கள் உடலில் குருதி செலுத்திக்கொள்ள முடியாத ஆபத்தான நிலை உண்டாகிறது. ஆகவே, ஏழை எளிய மக்களிடமிருந்து எதையும் எதிர்பாராமல் இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவமனையில் வைத்து சிகிச்சை வழங்கும் எந்த நோயாளியிடமும் குருதிக்காகக் கட்டணம் கேட்பதில்லை. ஓரேவிதமான குருதி எல்லோருக்கும் செலுத்தப்பட முடியாது. அவரவர் உடல் ரத்தத்தினுடைய குரூப்புக்கு ஏற்ப, ஒத்துக்கொள்ளக்கூடிய ரத்தத்தைத்தான் செலுத்த முடியும். அந்த குரூப் ரத்தம் மருத்துவமனையில்

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உயிர் காக்கும் மருந்து மிக நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்படும்பொழுது அந்த நிலையில் மட்டும் தகுதி உடைய டாக்டர்கள் நிலை அறிந்து பயன்படுத்தவேண்டிய ஒன்று. உயிர் காக்கும் மருந்துகள் அதிக தேர்ச்சியுள்ள டாக்டர்களைப் பெறும் சூழ்நிலை இல்லாத ஒரு சாதாரண ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைக்கப்பட்டால், தேவையில்லாதபொழுது அவற்றைப் பயன்படுத்தினால் அதன் விளைவு எல்லா நோய்களிலும் நன்றாக இருக்காது. ஆகவே, மாவட்ட மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஆகிய இடங்களில் தான் அவை இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். வேறு எந்த அளவுக்குப் பிற மருத்துவமனைகளில் இடம் பெறச் செய்ய முடியும் என்பது எனக்கு இப்பொழுது தெரியவில்லை. அதைப்பற்றிப் பரிசீலிக்க முயற்சிப்பேன்.

திரு. நா. வீராசாமி : உயிர் காக்கும் மருந்துகள் கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் இருக்கவேண்டும். காரணம், அங்கே சில இடங்களில் பஸ் போக்குவரத்து இருப்பதில்லை. டிரக் ஸ்டோர்ஸ் தனிப்பட்ட மருந்து நிறுவனங்கள் இருப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் நீண்ட தூரம் சென்று மருந்துகளை வாங்கிக்கொண்டு வந்து நோயாளிகளுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குள் நோயாளி பிழைத்திருப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமப்புறத்தில் இருக்கிற அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுபற்றி விவரம் இல்லாத காரணத்தினால் நான் அதைப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். பொதுவாக இப்படிப்பட்ட மருந்து ஒரு நோயாளிக்கு தகுந்த சிகிச்சைகளெல்லாம் அளிக்கப்பட்டபின், கடைசி கட்டத்தில், கடைசி கட்டம் வருகிறபோது வழங்கப்படுகிறது. கடைசி கட்டத்தில் திடீரென்று பிழைத்துக் கொண்டால் பிழைத்துக்கொள்ளட்டும் என்று செய்யப்படுவது இந்த சிகிச்சை மற்ற வசதிகள் இல்லாத இடங்களில் இம்மாதிரி ஒரு மருந்தை வைத்திருந்தால், நண்பர் வீராசாமி அவர்களே திடீரென்று தலைவலி என்று அங்கே சென்றால், எம்.எல்.ஏ.-க்கு என்ன ஆபத்தோ என்று அந்த மருந்தை கொடுத்து விடக்கூடும். அப்படிப்பட்ட நிலைமை அவசியம்தானா? இது நல்ல முறையில் பயன்படுமா என்று இந்தத் துறையைச் சார்ந்தவர்களைக் கொண்டு இதைப் பரிசீலிக்கும்படி வேண்டலாம்.



### வந்தவாசியில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 218 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பேரூராட்சியில் சாக்கடை அமைப்புத் திட்டத்திற்கு கடன் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த வந்தவாசிப் பஞ்சாயத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு டிரைனேஜ் ஸ்கீம் போட வேண்டும் என்று மனு வந்திருக்கிறதா? அது பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அதற்கு என்ன செய்தார்கள்? அமைச்சர் அவர்களிடமிருந்து இல்லை என்று பதில் கேட்டதற்குப் பிறகு, அதற்கு இனியாவது முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் சென்றபோது கூட டிரைனேஜ் திட்டம் தேவை என்று சொன்னார்கள். ஆனால் வாரியத்திற்கு அவர்கள் முறைப்படி விண்ணப்பம் செய்திருந்தால்தான், அந்த வாரியம் அதுபற்றி பரிசீலிக்க முடியும். அந்த வாரியத்திற்கு, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அவர்கள் விண்ணப்பிக்கவில்லை. ஆகவே, அது பற்றி விவரம் கேட்கிறபொழுது அவர்கள் அணுகவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

### மாயூரத்தில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 219 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் பாதாளச் சாக்கடை அமைப்பு திட்டத்தினை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். தமிழ்நாடு அரசு 3—3—1970-ல் மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமைப்பதற்கான ஆய்வு மதிப்பீடு ரூ. 31,000-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆய்வு வேலைகள் முடிவடைந்து உத்தேச திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

## திருநெல்வேலியில் விமான நிலையம்

* 247 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் விமான நிலையம் துவக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருநெல்வேலியில் விமான தளம் அமைக்க இனிமேலாவது உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இனிமேலும் என்று அல்ல, ஏற்கனவே பல முறை எழுதி கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒத்துக் கொள்ளவில்லை.

## தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுப் பணிகள்.

* 248 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை ரூ. 397.00 இலட்சமாகும்.

(இ) 30—10—1973 முடிய ரூ. 186.49 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக கொடுக்கப்படுகிற தொகையானது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் அதிகமான தொகை வேண்டுமென்று முன்பு கேட் [illegible] அதற்குத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ரூ. 8 கோடி



திட்டம் இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசிடம் யோசனை ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ரூ. 8 கோடி திட்டம் என்பது மத்திய அரசிடமும் இல்லை, மாநில அரசிடமும் இல்லை. எந்த தகவலை வைத்துக் கொண்டு உறுப்பினர் இதைக் கூறுகிறார் என்று தெரியவில்லை. நான் விசாரித்த வரையில் அப்படி ஏதும் திட்டம் இருப்பதாகத் தகவல் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Works the total length of Highways roads in our State and also the basis on which the amount is allotted by the Centre to the States for improving such roads?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I want notice.

## கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலை

*. 249 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், கவரைப்பேட்டை—சத்தியவேடு நெடுஞ்சாலையில் உள்ள குறுகலான கல்வெர்ட்டுக்களையும், சிறு பாலங்களையும் அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கா வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த நெடுஞ்சாலை ஆந்திர மாநிலத்துடன் இணைகின்ற ஒன்று. நெடுஞ்சாலையிலுள்ள கல்வர்ட்களும் பாலங்களும் மிகச் சிறியனவாக, குறுகலாக இருப்பதால் அவற்றை அகலப்படுத்த அரசிடம் திட்டமேதேனுமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிதி வருவாய் சரியாக இருக்குமானால் அதைப்பற்றி ஆராயலாம்.

## Hosur-Bangalore Highway.

* 250 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to widen the Highway passing through the Zuzuwadi tank on the Hosur and Bangalore High Road near the State border; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the tank bund in the highway from Madras to Bangalore is so narrow and it is very difficult for a number of buses to pass through that road. Daily a number of buses and lorries are passing through that narrow bund road. Unless the road is extended, it is difficult for the buses to pass through that road. May I know from the Hon. Minister, whether steps will be taken to widen that road.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரையை பலப் படுத்துகின்ற விரிவான யோசனை இல்லை என்றுதான் தெரிவித்தேன். கரையின் திருப்பங்களையும் வளைவுகளையும் விரிவு படுத்துகின்ற வேலை தேசிய நெடுஞ்சாலை இலாக்காப் பகுதியில் வயல் வழியாக சாலை அமைப்பது, நடந்து கொண்டு வருகிறது.

## மாயூரம் நகரிலுள்ள காவிரிப் பாலம்

* 251 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரில் காவிரியின் குறுக்கேயுள்ள பழைய பாலத்தினை அகலப் படுத்தும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.



## அண்ணா சாலையில் புதிய கட்டடங்கள்

* 252 வினா.—திரு. கே. எ. வகாப் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் உள்ள அண்ணா சாலையில் அமைந்துள்ள அரசாங்க எஸ்டேட்டில் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விடும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது நமது அரசாங்கக் கட்டிடங்களுக்காக நிறைய வாடகை கொடுத்துக்கொண்டு இருக்கிற காரணத்தால் ஒரு திட்டமிட்டு, அவற்றை வசதியான, வாடகை குறைவான இடத்தில் அமையச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. சீக்கிரத்தில் அதைப் பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அண்ணா சாலையில் அமைந்துள்ள அரசாங்க எஸ்டேட்டில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, பழைய நிலையில் இருக்கின்றன. அவற்றை அகற்றி புதிய கட்டிடங்களைக் கட்ட திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதுவும் திட்டத்தில் ஒன்றாகும்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் ஏற்கனவே வாடகைக்கு விடப்பட்ட கட்டிடங்கள் பேரில் ஏராளமான வாடகை பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அந்த பாக்கியை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போடவும்.

கைவசம் இல்லாவிட்டால் யாரிடமாவது பெறவேண்டும். அப்படி அதை வழங்குவதற்கு யாரும் வராதபொழுது, யாரைக் கொண்டாவது ரத்தம் தரக்கூடியவர்களை அழைத்து வரவேண்டிய நிலைமை பல இடங்களில் ஏற்படுகிறது.

## சென்னை விமான நிலையம்

*246 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தக் கோரி மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை. இருந்தபோதிலும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகாரமன்ற இயக்குநர் இவ்வரசுக்குப் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

உள்நாட்டு விமானப் போக்குவரத்து, அனைத்து நாட்டு விமானப் போக்குவரத்து ஆகிய இவ்விரு தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் தற்போதுள்ள விமானப் பயண முனைக்கட்டிடத்தில் (Terminal building) சில முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கு ரூ. 41 லட்சத்திற்கு மேல் செலவாகியது. விமான ஒரு பாதைகள் தரை ஓட்டப் பாதைகள் (Taxi-tracks) விமான தள ஓர்ப்பாதைகள் (Apron) முதலியவற்றிலும் முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான தள மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் மொத்தம் ரூ. 175 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1973-74-ல் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல் உட்பட சென்னை விமான தளத்தில் நடைபாதைகள், விமானப்பயண முனைக்கட்டிடம், சாலைகள் வெளிப்புறப் பணிகள், இதர வசதிக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு மேம்பாடுகள் செய்யவும் ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றத்திடம் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 84.92 லட்சம் அளவிற்குச் செலவாகும்.

2. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றம் கருதுகிறது. இவற்றுக்குரிய விரிவான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்தில் போதிய வருவாய் இல்லை, நிறைய பாசஞ்சர்கள் இல்லை என்ற காரணத்தால் அதை விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை என்று மத்திய அரசு இலாக்காவிற்கு தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விமான நிலையங்கள் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் ஏற்படுத்தி போக்குவரத்தை அதிகரிப்பதன் மூலம் வருவாயை பெருக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விமான நிலையம் அமைக்க நமது அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை விமான நிலையம் நட்டத்தில் இருப்பதாகத் தகவல் இல்லை. மேலும், மாவட்டத் தலைநகரங்களில் விமான நிலையங்களை ஏற்படுத்தினால் மேலும் நட்டம் ஏற்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னை விமான நிலையம் ஒரு இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டாக ஆகிவிட்டது. மற்ற நாடுகளில் இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டுகள் எவ்வளவோ விரிவாக இருக்கின்றன. டெல்லி விமான நிலையத்தைக் கூட விரிவாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்த மத்திய சர்க்காரை அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே,

The International Airports Authority of India has schemes to the tune of Rs. 84.92 lakhs to carry out improvements to the pavements, terminal building, etc. ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது இண்டர்நேஷனல் ஏர்போர்ட் ஆக சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: எல்லா மாவட்டங்களிலும் விமான நிலையம் ஏற்பட வாய்ப்பில்லாவிட்டாலும், சேலம் மாவட்டத்தில் சேலம் ஸ்டீல் பிளாண்ட், இன்னும் மற்றும் பல தொழிற்சாலைகள் வர இருக்கின்ற காரணத்தால், சேலத்தில் ஒரு விமான நிலையத்தை ஏற்படுத்த முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, அண்ணா சாலையிலிருக்கின்ற அரசாங்க எஸ்டேட்டில் 'ஐந்து நட்சத்திர ஓட்டல்' கட்டப்படலாமென்று முன்பு அறிவித்திருந்தார்கள். அப்படிப்பட்ட திட்டமிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

**திரு. ஜி. ராமசாமி:** தலைவரவர்களே, டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமேதேனும் உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படிப்பட்ட திட்டமேதும் இல்லை.

### குளித்தலை வட்டத்திலுள்ள சிவாயம்குளம்

* 253 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை வட்டம், சிவாயம் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) 1963-ம் ஆண்டு.

(இ) இத்திட்டத்திற்கான ரூ. 5.63 லட்ச மதிப்பீடு அரசினால் 1973-ஆம் ஆண்டு டிசம்பரில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(உ) திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு திருத்தங்கள் தேவைப்பட்டதாலும், நிலங்களின் அளவு வேறுபாடுகளை சரிபார்த்ததிலும் அதிகாரிகள் முடிவான அறிக்கை அரசுக்கு ஏப்ரல் 1973-ல் தான் கிடைக்கப்பெற்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த அளவுக்கு புதுப்பிக்கின்ற திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டதா? வேலை துவங்கப்பட்டதா? அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் எவ்வளவு தூரம் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்ற தகவல் என்னிடமில்லை. வேலைகள் விரைவில் துவங்கப் பெறும்.



### *New Sugar Mills.*

* 254 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Industries be pleased to state—

(*a*) whether licences have been issued for the starting of new sugar mills in this State; and

(*b*) if so, the details of the same ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) அந்த புதிய சர்க்கரை ஆலைகள் வேலூர், திருப்பத்தூர், கோயம்புத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆகும்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், நமது மாநிலம் மற்ற மாநிலங்களை விட பருவ நிலை போன்றவைகளில் கரும்பு உற்பத்திக்குச் சாதகமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் கரும்பு உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 19 டன் என்று சொன்னால் நமது மாநிலத்தில் 50 டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது. ரெகவரியை எடுத்துக் கொண்டால் நமது மாநிலத்தில் 10 சதவிகிதம் வரை வருகிறது. மற்ற மாநிலங்களில் 8.4 சதவிகிதம்தான் வருகிறது. இவ்வளவு சாதகங்கள் இருந்தபோதிலும், அதிகப்படியான சர்க்கரை மில்கள் இல்லை. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 சர்க்கரை மில்கள் என்ற அடிப்படையில் நமது மாநிலத்தில் சர்க்கரை மில்களை ஏற்படுத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஐந்தாவது திட்டத்தில் எட்டு சர்க்கரை மில்கள் ஆரம்பிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, பல சர்க்கரை மில்கள் தொடங்கப்படாத நிலையில் இருக்கிறது. பங்குத் தொகையை செலுத்தியும் கூட பல மில்கள் ஆரம்பிக்கப்படாமலிருக்கின்றன. எனவே உடனடியாக அவை ஆரம்பித்து செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, மில்கள் பங்குத் தொகையை செலுத்துவதில்தான் காலதாமதம் ஏற்பட்டது என்பது உண்மை. அரசாங்கத்தைப் பொடுத்தவரையில் வேலூர் ரூ. 45 லட்சம், திருப்பத்தூர் ரூ. 23 லட்சம், கோயம்புத்தூர் ரூ. 33.93 லட்சம் என்ற அளவில் பாக்கி என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்க இருக்கிற சர்க்கரை ஆலைகளில் ஜாயின்ட் செக்டாருக்கும் ஒதுக்க அரசின் கொள்கை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் கரும்பு கொடுக்கிற விவசாயிகளும் பங்குபோட்டால்தான் ஆலை சரிவர நடக்க முடியும். ஆகவே தனியார் துறையில் இல்லை என்பது தெளிவுபடுத்தப்பட் டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : கோவை சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் பங்குப்பணம் முழுவதும் வசூலாகிவிட்டதா ? இல்லையென்றால், அதில் என்ன இடைஞ்சல் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த 3 ஆலைகளில் கோயமுத்தூர் ஆலைக் குத்தான் குறைவாக வசூலாகியிருக்கிறது கோயம்புத்தூரைப் பொறுத்தவரை இடப்பிரச்சினைதான். முதலில் ஒரு இடம் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அங்கே போதுமான தண்ணீர் கிடைக்காதோ என்கிற சந்தேகத்தில் பிறகு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது திரும்பவும் பழைய இடமே சரியானதாக இருக்கும் என்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சர்க்கரை ஆலைகளை தனியார் துறைக்குத் தருவது இல்லை என்ற கொள்கை இருப்பதாகச் சொன்னார்கள். அதே போன்று இனி வருகிற ஆலைகளை கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தப்போவதா கவும் சொன்னார்கள். தனியார் சர்க்கரை ஆலைகளையும் தேசியமயமாக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது கொள்கைப் பிரச்சினை. இது கேள்வி நேரம்.

திரு. க. மு. இராசகோபால் : அமைச்சர் அவர்கள் அடுத்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு சர்க்கரை ஆலைகள் வர இருப்பதாகச் சொன் னார்கள். அவை எந்த எந்த மாவட்டத்தில் வர இருக்கின்றன ? செங்கல்பட்டு மாவட்டத்தில் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இடம் இன்னமும் முடிவு செய்யவில்லை



திரு. ஏ. சி. நரசிம்மன் : கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளுக்கு பங்குத்தொகை வசூலிப்பதில் நீண்டகால தாமதம் ஆகிறது. ஆகவே தனியாக ஷுகர் கார்ப்பரேஷன் என்று ஆரம்பித்து, அரசாங்கமே பங்குத்தொகை போட்டு, அந்தச் சர்க்கரை ஆலைகளை வெகுவிரைவில் ஆரம்பிக்க, வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு நல்ல யோசனை. கூட்டுறவுத் துறையில் கண்டிஷன் போடுவார்கள். கூட்டுறவுத் துறையில் அவர் பணியாற் றியிருக்கிற காரணத்தினால் அதன் சிரமங்களை உணர்ந்து சொல்கிறார். அரசாங் கமே ஏராளமான முதல் போடவேண்டுமென்றால் தனியார்களுக்குக் கொடுப் பதைப்போல தமக்கும் கொடுக்க வேண்டும். அவர்கள் பொதுமக்களிடத்தில் நிதி திரட்டிக்கொள்வதைப்போல, அரசாங்கமும் பொதுத்துறையில் நிதி திரட்டி போடுவதற்கு மத்திய அரசு அனுமதிக்கவேண்டும் என்கிற அடிப் படையில் நம்முடைய சார்பில் சொல்லியிருக்கிறோம். கோவை மாவட்டத் தில் ஆரம்பிக்கிற சர்க்கரை ஆலையை அப்படி மாற்றலாமா என்பது யோசனை. எப்படி ஆரம்பித்தாலும் கரும்பு தருகிற விவசாயிகள் பங்கு இருந்தால்தான் சர்க்கரை ஆலைகள் நல்லமுறையில் நடைபெற முடியும்.

## *Production of plywood.*

* 255 Q.—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a factory for the production of Plywood in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## நாங்குநேரி வட்டத்தில் முன்சீப் நீதிமன்றம்

* 256 வினா.—திரு. வி. கார்த்திகேயன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், புதிதாக முன்சீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Preference in employment for Ceylon repatriates.*

* 257 Q.—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any preference in employment is being given to the repatriates from Sri Lanka, who are otherwise qualified ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் காரணமாக ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியக் குடிமக்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் வேலைவாய்ப்பு வசதி அளிப்பதற்காக தொகுதி 11-ன் கீழ் (11) முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற நேரத்தில் அவர்களது லிஸ்ட் தனியாகப் பரிசீலிக்கப்படுகிறதா? நம் நாட்டில் உள்ளவர்களோடு சேர்த்து பரிசீலிக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலை வாய்ப்பு நிறுவனங்களின் மூலம் அவர்கள் பெயர்கள் அனுப்பப்படுகிறபோது முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, may I know the number of Ceylon repatriates who have to be employed in the State ? Also, whether it is not a fact that we are going to have more repatriates from Ceylon on account of the recent agreement entered into a few days ago between the Prime Ministers of India and Sri Lanka ? Also, whether the Government of Tamil Nadu have been consulted before they entered into the agreement and if not, whether this Government have expressed the'r displeasure that they have not been consulted?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.





திரு. வை. பாலசுந்தரம்: இலங்கையில் இருந்து வருகிற அகதிகளாகிய தமிழர்கள் வேறு மாநிலங்களிலும் குடியேற்றப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னுடைய துறை வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பெயர்களை அனுப்புவது பற்றி. தனிக்கேள்வி வேறு துறைக்குப் போட வேண்டும்.

விவசாயக் கல்வி குறித்து ஆய்வு

* 258. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கல்வி குறித்து ஆய்வு நடத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த ஆய்வுக்கு நிதி உதவி வேண்டி சர்வ தேச அபிவிருத்தி சங்கத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) முதல் (உ) வரை—தமிழ்நாட்டில் வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கிகளின் உதவி 6 கோடி அளவுக்கு என்று கூறப்படுகிறது. 5—2—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அதன் பிறகு உதவியின் அளவு 15 கோடிக்கு உயர்த்தப்பட்டது. 9—12—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து 3 நாள் பேசினார்கள். இந்த வருடத்தில் நல்ல முடிவு உலகவங்கியிடம் இருந்து வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. வ. சுப்பிரமணியம்: விவசாயக் கல்லூரியில் இடம் தேடுகிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. நம்முடைய தேவையையும் கருதி விவசாயக் கல்லூரியில் அவசரமாக அதிக எண்ணிக்கையை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர், பி.எஸ்.ஸி. ஆர்டிகல்சர், பி.எஸ்.ஸி. என்ஜினியரிங் என்று. இதில் பி.எஸ்.ஸி. என்ஜினியரிங் பகுதியை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, பருத்தி விளைச்சல் குறைவதற்குக் காரணம், ஒன்று, பருத்தி விவசாயம் செய்கிறவர்களது உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறதென்பது. இரண்டாவது, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை போதுமான காலகட்டத்திலே கிடைக்காததுமாகும். இந்தத் தொந்தரவு பொறுக்க முடியாமல், கடலை பயிரிடுகின்ற விவசாயிகள் எங்கள் பகுதியிலே அதிகமாக ஆகியிருக்கிறார்கள். இதனால், எந்த அளவு பருத்தி பயிரிடவேண்டுமென்று திட்டமிடுகிறோமோ அந்த அளவு பூச்சி மருந்துகள் பூரணமான, நியாயமான, ஒத்தாசையான விலையில் கிடைக்குமானால், பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சென்ற முறை கேட்டபோதுகூட நான் பதில் சொன்னேன் மாண்புமிகு உறுப்பினர் பகுதியிலே எந்த ஊரில் பூச்சி மருந்து இல்லாமலிருக்கிறது என்று கேட்டேன். அவர் இன்னும் சொல்லவில்லை. பூச்சி மருந்துகளை இலகுவாகக் கொடுக்க முடியும். ஆனால், பருத்தியைவிட நிலக்கடலைக்குக் குறைவாக பூச்சி மருந்து வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால், நிலக்கடலைக்குக் கூட பூச்சி மருந்து ஏராளமாகத் தேவைப்படுகிறது.

இப்பொழுது பருத்தி உற்பத்தி குறைவதற்குக் காரணம், அதிகமான நீர் கிடைக்கிற காரணத்தினால் நிலத்து நீரை அதிகமாக எடுக்கின்ற காரணத்தினால் வேறு பயிர்களை உற்பத்தி செய்வதால் வருமானம் அதிகமாகிறது. குறிப்பாக நான் கோவையைப்பற்றிச் சொல்லவில்லை, மற்ற மாவட்டங்களைப்பற்றிச் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, இராமநாதபுரம் மாவட்டத்திலே அரிசி உபரியாக உற்பத்தியாகிறது. இராமநாதபுரம் மாவட்டம் என்று சொன்னால் உடனே அது பஞ்சப் பிரதேசம் என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், அங்கு கிணறுகள் வெட்டி, நிலத்து நீரை அதிகமாக எடுத்திருக்கிற காரணத்தினால் அந்த மாவட்டம் இப்பொழுது உபரி மாவட்டமாக இருக்கிறது. இப்படி இருப்பதால் முன்னால் பருத்தி விளைவித்த நிலங்கள் இப்பொழுது அதிகப் பணம் கொடுக்கக் கூடிய பயிர் நிலங்களாக மாறியிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், தமிழ் நாட்டிற்குத் தேவை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். 3½ லட்சம் பேல் உற்பத்தி ஆகிறது என்று சொன்னார்கள். லாங் ஸ்டேப்பில் காட்டன், குறிப்பாக, கோயம்புத்தூரிலே பல்லடத்திலும், மதுரையிலே திண்டுக்கல் தேனியிலும் இராமநாதபுரத்தில் ராஜபாளையம் வலிய பகுதிகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறதே, அதை



உற்பத்தி செய்பவர்களுக்குப் போதுமான உதவியை, இன்டன்சிவ் கல்டிவேசன் என்று 'பாடி'யிலே செய்கிற மாதிரி, அரசு இதற்கும் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே 208 ஆலைகள் இருக்கின்றன. தேவையான பஞ்சு 11 இலட்சம் பேல் ஆகும். அதிலே ஏறத்தாழ 3 இலட்சம் பேல்களைத் தவிர, மற்ற தேவையெல்லாம் பிற மாநிலங்களிலிருந்து, வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றன, இறக்குமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக, நீண்ட இழைப் பருத்தி 'சுஜாதா' கோவை மாவட்டத்திலே உற்பத்தியாவதற்கு முன்னால் வெளிநாட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. கோவையிலுள்ள ஆலை முதலாளிகள், கோவையிலே உற்பத்தி செய்வதை வாங்கப் பிரியப்படாமல், வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், கோவையில் உற்பத்தியாகிற நீண்ட இழை பருத்தி 'சுஜாதா' பம்பாயிலே கட்டாவ் மில்லுக்கும் மஃபட்லால் மில்லுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுதுதான் லக்ஷ்மி மில் முதலாளிகள் சம்மதித்து, அங்கேயே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட இழைப் பருத்தியை, அதிக அளவில் உற்பத்தி செய்ய உற்சாகப்படுத்தி, அதற்கு வேண்டிய உதவிகளை அரசு கொடுத்து வருகிறது. அதன் மூலமாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது குறைவாக இருக்கும். கோவையில்தான் அதிகமாக இருக்கிறதே தவிர, மற்ற இடங்களில் இன்னும் அதிகமாக வரவில்லை.

### *Finance Corporation for Panchayats*

* 262 *Q.*—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISWAMY :— Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the Finance Corporation for the Panchayats is to be set up; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(ஆ) இல்லை.

### களக்காடு ஒன்றியத்தில் புதிய ஊராட்சி

*** 263 வினா.—திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், களக்காடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பத்தை, பண்டிதன்குறிச்சி, வடகரை, மஞ்சவிளை, கரிவேலன்குளம் போன்ற கிராமத்தை ஒன்றாக "பத்தை பஞ்சாயத்து" என்று தனியாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

### *Procurement price for paddy.*

* 264 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the procurement prices for various varieties of paddy have been refixed during 1973; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) 1973-ல் நெல் கொள்முதல் விலையைத் திருத்தியமைப்பதற்கு முன்னர் இருந்த விலைகள் வருமாறு :—

| | |
|---|---|
| மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ 56 |
| நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 54 |
| நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 51 |
| மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 47 |

மேற்கண்ட விலைகள் 1973-ம் ஆண்டு மே திங்கள் 20-ம் நாளிலிருந்து

| | |
|---|---|
| மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 58 |
| நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 56 |
| நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 53 |
| மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 49 |



மேற்சொன்ன விலைகள் 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாளிலிருந்து

| | |
|---|---|
| மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 68 |
| நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 66 |
| நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 63 |
| மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு | ரூ. 59 |

மேற்கண்ட கொள்முதல் விலைகளும் கூட 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6-ம் நாளிலிருந்து மேலும் திருத்தப்பட்டு, மோட்டா ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 66 எனவும், மற்ற எல்லா ரகங்களுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 70 எனவும் விலை வரையறுக்கப்பட்டுள்ளது.

நேர்த்திக்கு ரூ. 75, மிக நேர்த்திக்கு ரூ. 78 என்று விலை நிர்ணயித்து, மத்திய அரசை அனுமதி கேட்டு செய்தி அனுப்பியிருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், சர்க்கார் அனுமதித்த சரியான விலை மூட்டைக்கு ரூ. 50 தான் ஆகிறது. கொள்முதல் செய்கிற நெல்கள் பூராவும் அந்த விலையில் கிடைப்பதில்லை. காரணம், எந்த விலை கொடுத்தாலும் அதிகப் படியான பாடியை வைத்துக்கொண்டு வாங்குவதன் காரணமாக, விவசாயி களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, தஞ்சையில் விளைகிற நெல் பூரா வையும் சர்க்கார் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கொள்முதல் செய்ய ஏதாவது ஏற்பாடு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இதுவரையிலே, சர்க்கார் மொத்தத் தொகுப்புக்கு அதிகமாக லெவி முறையில் வாங்கி வந்தது. ஆனால், இந்த ஆண்டு சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையில், லெவி இல்லாத முறையில், தஞ்சை மாவட்டத்திலே 1,30,000 டன் நெல்லைக் கொள்முதல் செய்திருக்கிறோம். மேலும், இந்தச் சம்பா அறுவடையிலே விலை குறையாமல் இருப்பதற்காக, வியாபாரிகளிடம் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்குத் தேவையான ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

### *Procurement of paddy.*

* 265 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Government have asked the Food Corporation of India to collect the levy paddy in this State; and

(*b*) if so, the details thereof ?

*Water Hyacinth as compost.*

* 259 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to utilise water hyacinth as compost for the growth of agricultural produce; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

*Indo-German Project in the Nilgiris district*

* 260 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any consultancy service has been started by the Indo-German Nilgiris Development Project in the Nilgiris district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (ஆ) நீலகிரி மேம்பாடு திட்டத்தின் கீழ் நடைபெறுகிற பணிகள் மாவட்ட வேளாண்மை அலுவலர் தலைமையில் செயல்படுகிறது.

**பருத்தி உற்பத்தி**

* 261. **வினா—திரு. க. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1972-73-ல் விளைந்த பருத்தியின் அளவு எவ்வளவு ?

(ஆ) அது நமது மாநிலத் தேவையினை பூர்த்தி செய்வதாக இருந்ததா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) மூன்று லட்சத்து, ஐம்பதாயிரம் பேல்கள் பஞ்சு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. பேல் என்பது 180 கிலோ.

**(ஆ) இல்லை.**



**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தமிழகத்திலே பருத்தி வளர்ச்சியை அதிகப் படுத்த தீவிரத் திட்டம் ஒன்று இயங்குவதாகச் சொல்லப்பட்டது. அதன் பலன் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். எத்தனை ஏக்கரா கூடுதலாகப் பயிரிடப்படுகிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. நதித்தனார் : தீவிரத் திட்டம் என்பது ஒரு ஏக்கராவில் எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்வது என்பதைப் பொறுத்தது தான். மொத்தத்தில் தமிழகத்தில் 8½ லட்சம் ஏக்கரா பருத்தி பயிரிடப் பட்டது என்றால் இப்போது 7½ லட்சம் ஏக்கராவாகக் குறைந்துதான் இருக் கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கரா பருத்தி சாகுபடி குறைந்ததற்குக் காரணம் என்ன ? பருத்தி வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்படவேண்டியிருப்பதால், நிலப்பரப்பு குறையாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நிலத்தின் அடியில் இருந்து நீரை வெளிக் கொணரும் முயற்சிகள் அதிகமாகிவிட்டதால் வேறு அதிக வருவாய் தரக்கூடிய—நெல், நிலக்கடலை, கரும்பு, மஞ்சள் போன்ற பயிர்களை வைக்க ஆரம்பித்துவிட்ட காரணத்தினால், நிலப்பரப்பு பருத்தி சாகுபடிக்குக் குறைந்து விட்டது.

**திரு. நா. வீராசாமி :** பெரும்பாலும் பருத்தி சாகுபடி கோவை மாவட்டத்தை நம்பியிருக்கிற காரணத்தினால், நிலப்பரப்பு குறைந்திருக்கிறது. வடாற்காடு போன்ற மாவட்டங்களிலும் பருத்தி சாகுபடி செய்ய உற்சாகப் படுத்தினால் நிலப்பரப்பை அதிகப்படுத்த முடியாதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அந்த முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம், நெல்லை போன்ற இடங்களிலும் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது என்றாலும் கோவை மாவட்டத்தில் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. விளைச்சலை அதிகப்படுத்தவும் வேறு முறைகளைக் கையாள அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது. குறிப்பாக இடைப் பயிராக 2 ஆம் போகம், 3 ஆம் போகம் அதே நிலத்தில் பருத்தி சாகுபடி செய்ய தஞ்சை, வடாற்காடு போன்ற மாவட்டங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) மத்தியத் தொகுப்புக்கு வழங்குவதாக இவ்வரசு ஒப்புக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்காகவும், இந்திய உணவுக் கழகத்தைச் சேர்ந்த அரைவை ஆலைகள் நிற்காமல் இயங்கும் பொருட்டும், இவ்வரசு, 1973 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய இடங்களிலும் லெவி நெல்லைக் கொள்முதல் செய்து கொள்ளுமாறு இந்திய உணவுக் கழகத்தைக் கேட்டுக்கொண்டது.

**திரு. கே. எ. வகாப்:** அரசாங்கம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 78, ரூ. 75 என்று நிர்ணயித்திருந்தும், விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற வியாபாரிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது லெவியைப் பற்றி, விலையைப் பற்றி அல்ல. லெவியைப் பற்றி கேளுங்கள்.

**திரு. கே. எ. வகாப்:** வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யும்போது, அவர்களுக்கு லெவியாலே நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தைக் காட்டி, விலையைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். இப்படிக் குறைத்துக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக விவசாயிகளிடமிருந்து அரசாங்கமே நேரடியாக வாங்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு நெல் இருக்கிறது என்று சொன்னால் உடனே நாளைக்கே நெல் வாங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த வருஷம் மத்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள கோட்டா 6 இலட்சம் டன். ஆனால், இது வரையிலும் 1,30,000 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதே, இதற்கு, இந்த லெவி சரியாக நடைபெறவில்லையென்று அர்த்தமா, அல்லது உணவு சப்ளை கார்ப்பரேஷன் சரியாக நடைபெறவில்லையென்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்த வருஷம் என்று சொல்லியிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் கொள்முதலை இரண்டு மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறோம். இப்பொழுதுதான் தமிழகத்திலே பரவலாக அறுவடை ஆரம்பமாகியிருக்கிறது. ஆகவே, லெவி போட்டு இப்பொழுதுதான் 20 நாட்களாகிறது. இந்த வருஷம் அதிகமான கொள்முதலை எதிர்பார்க்கிறோம்.



*Supply of essential commodities through mobile centres at Tiruchirappalli.*

*266 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to sell essential commodities like kerosene, sugar, maida, rava, etc., through mobile centres in Tiruchirappalli; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இம் மாதிரி ஒரு பைலட் ஸ்கீமை ஏற்பாடு செய்து முக்கியமான பொருள்களை, ஜனங்களுக்கு, சார்ஜையும் சேர்த்து வேண்டுமானல் விநியோகிக்கக்கூடிய முறையிலே ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒன்றும், சென்னையிலே இருக்கிற பெல்ட் ஏரியாக்களிலே 3-ம் வைத்திருக்கிறோம். அவசியம் ஏற்பட்டால் மற்ற இடங்களிலே அதை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

*Ration Shops.*

*267 Q.—THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Government Ration Shops are running on loss at present; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Site for temple near Vadapalani*

*268 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the State Housing Board has allotted any piece of land for the construction of a Sakthi Vinayagar temple at Kalinga Colony near Vadapalani; and

(b) if so, the details thereof?

A.—(a) Yes.

(b) Establishments employing 10 and more workers including Catering Establishments are enumerated and their particulars are kept in the Employment Exchange. Though the latter are not required to submit the employment returns as per the Act, returns furnishing employment and vacancy positions are collected every quarter from them also and salient details of the establishments are maintained in the Employment Exchanges. Collection of returns involves contact by correspondence and through personal contacts. As information about employment vacancies filled through Employment Exchanges, shortage occupation, etc., are revealed through these returns, the officials of the Employment Exchanges advise the catering establishments also during such contacts to notify their vacancies to the Employment Exchanges.

(அ) ஆம்.

(இ) உணவு நிறுவனங்கள் உட்பட 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு வைத்துள்ள நிறுவனங்கள்பற்றிக் கணக்கெடுக்கப்பட்டு அவற்றின் விவரங்கள் வேலைவாய்ப்பு நிறுவனங்களில் வைத்து வரப்படுகின்றன. சட்டத்தின்படி வேலைவாய்ப்பு விவரங்களை உணவு நிறுவனங்கள் அனுப்பத் தேவையில்லை என்றாலும் வேலை வாய்ப்பு, காலியிடம் ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கைகள் அவைகளிடமிருந்து ஒவ்வொரு காலாண்டிலும் சேகரிக்கப்பட்டு, அவைகளைப் பற்றிய முக்கியமான விவரங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வைத்து வரப்படுகின்றன. கடிதத் தொடர்பு மூலமாகவும், நேரிடையாகத் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிக்கைகள் சேகரிக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நிரப்பப்பட்ட காலியிடங்கள், போதிய அளவில் நிரப்பப்படாத காலியிடங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த அறிக்கையிலிருந்து தெரிய வந்தாலும், உணவு நிறுவனங்கள் தங்களிடமுள்ள காலியிடங்களைப் பற்றி வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்குமாறு, வேலை வாய்ப்பு அலுவலக அதிகாரிகள் உணவு நிறுவனங்களுக்கு நேரில் செல்லும்போது அவைகளுக்கு அறிவுறுத்துகின்றனர்.

*Marine and Port Funds*

2 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the merger of the Marine Fund and Port Fund with the consolidate fund of this State?



A.—The Government of India, Ministry of Transport and Communications have stated that the receipts to the Ports Funds and other miscellaneous revenues received at Ports administered by the Government are revenues of the State for the purpose of Article 266 of the Constitution of India.

The revenues derived at the Ports should therefore form part of the consolidated Fund of the State, the revenues derived from the Port should be subject to the vote of Legislature and the transactions of the Port Funds will have to pass through the consolidated Fund of the State and the receipts and expenditure included in the State Budget. This suggestion of Government of India is being accepted by this Government and necessary legislation for merger of the Funds will be brought before the Legislature shortly.

*Parks and play-fields under Slum Clearance Board*

3 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any (i) Parks or (ii) Play grounds are being maintained by the Slum Clearance Board in Madras City;

(b) if so, the details thereof; and

(c) the expenditure incurred thereon?

A.—(a) No.

(b) Does not arise.

(c) Does not arise.

**பழவாற்றுக்கரை அமைப்பிற்கான செலவு**

4. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72, 1972-73-ம் ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம், பழவாற்றுக்குக்கரை அமைக்க அரசு செலவழித்திட்ட தொகை எவ்வளவு?

விடை.—தஞ்சை மாவட்டத்தில் உள்ள பழவாற்றில் கரைகள் அமைக்கும் வேலைகளுக்காக செலவான தொகை பின்வருமாறு:—

| ஆண்டு | | செலவான தொகை |
|---|---|---|
| 1971-72 | | 10,05,643 |
| 1972-73 | | 10,53,858 |
| மொத்தம் | ரூ. | 20,59,501 |

## முத்தப்பன் காவிரி சீரமைப்புச் செலவு

5. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ல் மாயூரம் முத்தப்பன் காவிரியை சீர் செய்திட அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

விடை.—இவ்வேலைக்கு இவ்வாண்டில் செலவு ஒன்றும் ஆகவில்லை.

## பூங்காக்களில் பார்வையாளர் கட்டண விதிப்பு

6. வினா.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள எந்தெந்த அணைக்கட்டுகளில் உள்ள பூங்காக்களில் பார்வையாளர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது ?

சாத்தனூர் அணை, மேட்டூர் அணை ஆகிய இரு அணைக்கட்டுகளில் உள்ள பூங்காக்களில் பார்வையாளர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வடார்க்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணைக்கட்டிற்கு வரும் பார்வையாளர்களிடமிருந்து தலைக்கு 25 பைசா வீதமும், மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் வண்டி தவிர மற்ற ஒவ்வொரு வண்டிக்கும் ரூ. 1 வீதமும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணம் 15—6—1972 முதல் வசூலிக்கப்படுகிறது. மேட்டூர் அணை பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களிடமிருந்து தலைக்கு 10 பைசா வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கல்வி நிலையங்களிலிருந்து முன் அனுமதியுடன் வரும் மாணவர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. வைகை அணைக்கட்டு பூங்காக்களில், மின் விளக்கு பிரத்தியேகமாகப் போடும் நாட்களில் பார்வையாளர் கட்டணம் தலைக்கு 25 பைசா வீதம் வசூலிக்க அரசு 15—10—1973-ம் தேதியில் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளது.

*A*.—Admission fees from visitors to the parks is collected at two dam sites (viz) (i) Sathanur Dam and (ii) Mettur Dam. An admission fee of Rs. 0.25 per head and Re. 1 for each vehicle (excluding cycles and motor cycles) are being collected from the visitors to the Sathanur Dam site. The admission fees are collected with effect from 15th June 1972. In respect of Mettur Dam park an admission fee of Re. 0.10 paise per head is collected from the





visitors at the park gate. Students and Teachers of Educational Institutions are allowed free into the park on prior permission. The Government have since issued orders on 15th October 1973 approving the proposal for the levy of entrance fee of Rs. 0.25 paise per head for the visitors to the Vaigai Dam garden on the days on which special lighting arrangements are in force.

## மாயூரம் நகரில் காவிரியின் குறுக்கே நடைபாலம்

7. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் ராஜாஜி (விஸ்வநாதசாமி கோயில்) தெருவுக்கு அருகே காவிரியின் குறுக்கே நடைபாலம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாயூரம் நகரில் ராஜாஜி (விஸ்வநாதசாமி கோயில்) தெருவுக்கு அருகே காவிரியின் குறுக்கே நடைபாலம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

## நிலவரி பாக்கி

8. வினா.—திரு. எஸ். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டு இறுதியில் இருந்தபடி தமிழக விவசாயிகள் கட்ட வேண்டிய நிலவரி பாக்கித்தொகை எவ்வளவு? மாவட்டவாரியாக ?

விடை.—ஒரு விவரப் பட்டியல்@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## மகளிர்க்கான தனிச் சிறைச்சாலைகள்

9. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பெண்களுக்கான தனிச்சிறைச்சாலைகள் எத்தனை உள்ளன? எங்கெங்கு உள்ளன ?

விடை.—இரண்டு. இவை வேலூரிலும், சேலத்திலும் உள்ளன. (மாநில மகளிர் சிறைச்சாலை வேலூர், கிளைச் சிறைச்சாலை (மகளிர்) சேலம்).

Two, They are at Vellore and Salem (the state jail for women at Vellore and the sub-jail for women at Salem).

---

@ .624-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## மானாமதுரையிலுள்ள பால் பண்ணைகள்

10. வினா.—திரு. த. சோலையா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையில் எத்தனை பால் பண்ணைகள் உள்ளது ?

(இ) நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் கிடைக்கிறது ?

(உ) எத்தனை ஊழியர்கள் வேலை செய்கிறார்கள் ?

விடை.—(அ) மானாமதுரையில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் ஒன்று தான் உள்ளது.

(இ) இச்சங்கம் 46 கிளைச்சங்கங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டர் பால்-உற்பத்தி செய்கிறது.

(உ) இச்சங்கத்தில் கூட்டுறவு உப பதிவாளர் ஒருவர் செயலாளராகவும் மற்றும் 56 ஊழியர்களும் ஆக மொத்தம் 57 பேர் பணியாற்றுகின்றனர்.

(a) There is only one co-operative Milk Supply Society in Manamadurai.

(b) This Society, produces 2,000 litres of Milk per day through its 46 branches.

(c) Besides 56 employees, there is one Co-operative Sub-Registrar who is also the Secretary of the Society; in all, 57 employees are working in this Society.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) காந்தியடிகள், பாரதியார், கட்டபொம்மன் ஆகியோர் சிலைகள் உடைக்கப்பட்ட செய்தியால் ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலை குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் காந்தியடிகளின் சிலை உடைக்கப்பட்டுள்ள செய்தியால் பொதுமக்களிடம் ஏற்பட்டிருக்கும் பரபரப்பான நிலைமையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தகுந்தது என்பதை மட்டிலும் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.



THIRU B. VENKATASWAMY : Sir, I wish to give the reasons why the business of this House should be adjourned to discuss this matter. National Leaders like Gandhiji, Bharathiyar and others should be respected and their statues should be protected. It is said that the statue was damaged by the Communists............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 10½ மணிக்கு பேரவையை ஒத்திவைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதற்குள் ஒத்திவைப்புத் தீர்மானங்களையெல்லாம் முடித்துவிடும்படியாக சுருக்கமாக எல்லோரும் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : In Ambur also it was reported that the statue of Gandhiji was disfigured; similarly, in Salem also an incident took place. National Leaders like Gandhiji and any leader who has worked for the nation should be respected and it is our duty to protect their statues. There are so many statues in the State—we have statues of Hon. Annadurai and so many other leaders. If we do not take action now, the same fate will fall on other statues of other leaders also. This kind of activity should be curbed wherever it takes place.

I, therefore, request the Government to see that some legislation is enacted to prevent this kind of thing. Those who indulge in this kind of activity should be severely punished to whichever political party they may belong. If we are now independent, we should not forget it is because of the work of those national leaders. Those who damage their statues are enemies of the nation and they should be severely punished. I, therefore, request the Hon. Speaker to adjourn the other business of the House and allow this matter to be discussed so that as a result of it some good legislation may be brought in to protect the statues of patriots of India and punish the culprits.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மகாத்மா காந்தியடிகளுடைய சிலை குடியரசு தினத்தன்று மதுரை மாவட்டத்திலே உள்ள உசிலம்பட்டியில் அரிசனங்கள் ஏரியாவிலே சேதப்படுத்தப்பட்டதாகப் பத்திரிகையிலே

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) கலைஞர் கருணாநிதி நகர்த் திட்டப் பகுதியில் சுமார் 4 கிரவுண்டு, 30 சதுர அடி பரப்புள்ள நிலத்தை அருள்மிகு சக்தி விநாயகர் கோயில் அறக் குழுவுக்கு ஒதுக்குவ தென்று மாநில வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்துள்ளது. அந்த நிலத்தின் விலை, மனை ஒன்றுக்கு ரூ. 6,700 என்ற சராசரி வீதத்தில் ரூ 26,834 ஆகிறது. விலையில் 25 சதவீதம் செலுத்தப்படுவதன்மேல் முறையான ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

## *Tap-water facilities in Foreshore Estate*

* 269 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken to provide tapwater facilities inside the houses in the Foreshore Estate, Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள வீடுகளுக்கு வீட்டுக்குள்ளேயே குழாய்த் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: அங்கே கிரவுண்ட் ப்ளோரிலே இருக்கக் கூடிய வீடுகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பர்ஸ்ட் ப்ளோர், செக்கண்ட் ப்ளோரிலே இருக்கக்கூடியவர்களுக்குத் தண்ணீர் வசதியில்லை. ஆகவே, அதை யும் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சில இடங்களிலே குழாய்கள் துருப் பிடித்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டு இருக்கிறார்கள். அங்கேயுள்ள வீடுகளுக்கு ஓவர்ஹெட் டாங்க் கட்டப்பட்டு வருகிறது ஆகவே, விரைவிலே அந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Ennore Thermal Plant*

* 270 Q.—THIRU M. SURENDRAN AND THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to commission a fifth unit at the Ennore Thermal Plant; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவு ஒன்றை நிறுவ திட்ட ஆணைக்குழு, 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இசைவு அளித்தது. இத்திட்டத்திற்கு ரூபாய் 1,775 லட்சம் செல வாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலே சேதம் ஏற்பட்டு அதை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழு மூன்று மாதங்களுக்குள்ளாக அறிக்கை தரும் என்று சொல்லப்பட்டது. அந்தக் குழு அறிக்கையைத் தந்துவிட்டதா? சட்டமன்றத்தின் முன் அது வைக்கப்படுமா? எப்பொழுது வைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அடுத்த சட்டசபைக் கூட்டத் தொடரிலே அதனுடைய காப்பி எல்லோருக்கும் அளிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: இதிலே கிட்டத்தட்ட இரண்டு வருஷம் தாமதப்பட்டிருக்கிறது. மின்சார நெருக்கடி அதிகமாக இருப்பதால், அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டுதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தது அதற்கு 2 ஆண்டுக்காலம் ஆகும் என்று தெரிகிறது. 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேலைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. திருச்சி ஹெவி எலக்ட்ரிக்ஸ் லிமிடெட்டிடம் சாதனங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்தபிறகு தான் மற்ற வேலைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்.

## *Notification of vacancies in Catering Establishments*

1\. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Employment Exchanges have informed the Catering Establishments to notify their vacancies to the Exchanges; and

(*b*) if so, the details thereof?

அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்களே தவிர, வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு சொல்லப்பட்ட, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் சொல்லப் பட்ட கருத்துக்கள் நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன என்ற வகையில் இதற்குமேல் இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசிய மில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதை அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (ஆ) வில்லூர் கிராமத்தில் பயிரிடும் விவசாயிகளுக்கு எதிராகக் காவல் துறையினர் எடுத்துள்ள அத்து மீறிய செயல்கள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து

"Increasing interference by the Police against cultivating tenants and recent events in Villur village in Tirumangalam taluk, Madurai district, on 19th January 1974 when with the police help produce was looted and other acts of vandalism and tension in the area".

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவிற்கு அவசியமானது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த சம்பவம் சம்பந்தமாக எனக்குக் கிடைத்த நீண்ட தந்தியை முதலமைச்சரவர்களிடத்தில் நான் கொடுத்திருக் கிறேன். அதற்குப் பிறகு திருமங்கலத்திலிருந்து இன்னொரு தந்தியும் வந்திருக்கிறது. இதில் எழுப்பப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால், நிலத்தைவிட்டு விவசாயிகளை வெளியேற்றக்கூடாது என்பது அரசின் கொள்கை. அப்படி அரசின் கொள்கை இருப்பதால் நிலத்தைவிட்டு வெளி யேற்றக் கூடாது என்று ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் நில வெளி



யேற்றம் என்பது சர்வ சாதாரணமாக நடக்கிறது. கிட்டத்தட்ட 20,000 பேர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள் என்று தஞ்சை மாவட்டத் திலிருந்து மகஜரை முதலமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இங்குள்ள நிலைமை என்னவென்றால், திருமங்கலம் தாலுக்காவில் வில்லூர் என்ற அந்தக் கிராமத்தில் நீண்டகாலமாக வளசின்னு தேவருக்குச் சொந்த மான இடம், அவர் அது சம்பந்தமாக கோர்ட்டுக்குப் போய் அவர்தான் உரிமை பெற்றவர் என்பதற்கு உத்தரவாதம் ஏற்பட்டதற்குப் பிறகு உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. கோர்ட்டிலே போய் ரத்து செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது தவறு என்று அப்பீல் செய்யும் நேரத்தில் இவர் சாகுபடி செய்த அந்தப் பண்டங்கள் பூராவையும் போலீசாருடைய உதவியோடு வீட்டிலே இருந்த வற்றை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். பெண்களை அவமானப்படுத்தியிருக் கிறார்கள். நம்பத்தகுந்த ஒருவர் எழுதியிருக்கிறார்.

'In collusion with landlady, who is the landlord, committed decoity in his house and in the house of Valasinnu Thevar on mid-night of twenty-first January 1974. Immediately, I proceeded to spot at Villur and came to know the damages caused to said properties humiliation to family members. The entire village being terrorised by police'

என்று அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். நான் சமீபத்தில் மதுரைக்குப் போனபொழுதுகூட விசாரிக்கும்பொழுது கொஞ்சம் அத்துமீறித்தான் நடந் திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, விவசாயிகளின் பிரச்சினைகளில் நிலச் சுவான்தார்களுக்கு ஆதரவாக போலீசார் தலையிடுவது கொள்கை ரீதியாகத் தடுக்கப்பட வேண்டும்.

நாங்கள் அடிக்கடி முதலாளிகள் தொழிலாளர்கள் பிரச்சினையில் அவர்கள் தீர்த்துக்கொள்வார்கள், லா அண்ட் ஆர்டர் பிரச்சினையாக மாற்றி போலீசார் தலையிடக் கூடாது என்று பலசமயங்களில் வற்புறுத்தியிருக்கிறோம். ஒன்று வேண்டுமானால் செய்யலாம், அவர்களை வெளியேற்றக் கூடாது என்ற பிரச்சினை யில் அந்த நிலச்சுவான்தாரரைக் கைது செய்தார்கள் என்றால் அதை வரவேற் கலாம். ஆனால் இங்கே வெளியேற்றுவதற்காக போலீசாரைப் பயன்படுத்தி, கஷ்டப்பட்டு உழுத விவசாயிகளின் வீட்டிலிருந்த நெல்லைக் கொள்ளையடிப் பதிலும், பெண்களை அவமானப்படுத்தும் நிலையிலும் எல்லைமீறிப் போவதால், பொதுவாக இம்மாதிரி சம்பவங்கள் வரக்கூடாது, இதை ஒரு உதாரணத்திற் காகத்தான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, அரசு இதைப்பற்றி என்ன

## காந்தியடிகள், பாரதியார், கட்டபொம்மன் ஆகியோர் சிலைகள் உடைக்கப்பட்ட செய்தியால் ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலை குறித்து



செய்திகள் வந்தன, எனக்கும் அதனுடைய விவரங்கள் வந்தன. இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால், குடியரசு தினம் போன்ற நாளிலே தேசத் தலைவர்களை அவமானப்படுத்துகின்ற போக்கு தமிழ் நாட்டிலே அதிகமாக வளர்ந்து வருகிறது. இதையெல்லாம் யார் செய்தார்கள் என்பது விசாரித்துத்தான் தெரியவேண்டும். அன்சோஷியல் எலிமெண்ட்ஸ் அல்லது persons who have been wrongly guided are responsible for such things; in Salem and in North Arcot also it happened. அதேமாதிரி தமிழ் நாட்டிலே ரொம்ப மதிக்கப்படுகிற தேசியக் கவி பாரதியார் சிலை திருநெல்வேலியில் பட்டப்பகலிலே உடைக்கப்பட்டு இருக்கிறது. மதுரையிலே கட்டபொம்மன் சிலை ஒச்சமாக்கப்பட்டது. தேசியத் தலைவர்களுடைய சின்னங்களைக் காப்பதற்காக அரசு வெறும் லா அண்ட் ஆர்டர் புராப்ளமாக இதைக் கருதிவிடக்கூடாது, தீவிரமாக இதைக் கவனித்து, தேசியத் தலைவர்களை அவமானப்படுத்துவதை இந்த அரசு பொறுக்காது என்ற இம்ப்ரஷன் உண்டாக்கப்பட்டதாகத் தெரியவில்லை, மக்களிடத்திலே அதன் காரணமாக கொந்தளிப்பான நிகழ்ச்சிகள் எல்லாம்கூட ஏற்பட்டிருக்கின்றன. சேலத்திலே ஒரு பெரிய இயக்கமே நடந்தது. இதையெல்லாம் அரசு தடைசெய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டுமென்ற முறையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தேசத் தலைவர்களின் சிலைகள், படங்கள் இவையெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலும், அவர்களுக்குத் தகுந்த மரியாதையைச் செலுத்த வேண்டுமென்பதிலும், அதற்கு மாறாக ஏதாவது ஊனங்கள் சிலைகளிலோ படங்களிலோ அல்லது நினைவுச் சின்னங்களிலோ ஏற்படுமானால் அது வன்மையாகக் கண்டிக்கத்தக்க நிகழ்ச்சி என்பதிலும் இரு வேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், திரு. பி. வெங்கடசாமி அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களிலே மையமாக இருக்கின்ற உணர்வுகளை இந்த அரசு நிச்சயமாக மதிக்கிறது.

ஆனால் நூற்றுக்கணக்கான சிலைகள் தேசத் தலைவர்களின் சிலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ச்சிகள் நடந்துவிடுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே ஒரு முறை குறிப்பிட்டார்கள், மின்னல் வேகத்திலே நடைபெற்று விடுகின்ற நிகழ்ச்சிகளைப் போலீஸார் தடுக்க இயலாத நிலைமையிலே இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.



இன்றைக்கு ஜனவரி 30 ஆம் நாள், அன்று தான் நம்முடைய தேசத் தலைவர் காந்தியடிகள் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். போலீஸார் அதற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடிந்தது, அவர் கொலை செய்யப்பட்டதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த நாட்டினுடைய தேசத் தலைவரைப் பறிகொடுத்தோம், கொலைவெறிக்கு அவர் ஆளானார். அவர்களுடைய சிலைகள், பாரதியாருடைய சிலைகள், மற்றும் தேசத் தலைவர்களுடைய சிலைகள் இவைகளைச் சேதப்படுத்துவதோ, ஊனப்படுத்துவதோ வரவேற்கத் தக்கதல்ல, மாறாக கண்டிக்கத் தக்கது.

குற்றவாளிகளைத் தேடுகிற முயற்சியிலும், பிடிக்கப்படுகிற குற்றவாளிகளைத் தண்டிக்கிற முயற்சியிலும் காவல் துறையினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். சில இடங்களிலே மாஸே துங், நக்ஸலைட் துண்டுப் பிரசுரங்கள் கிடந்தன. அவைகளை நக்ஸலைட்டுகளும் செய்யலாம் அல்லது இதுபோன்று செய்யவேண்டுமென்ற கொடிய எண்ணம் படைத்தவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று துண்டுப் பிரசுரங்களை விட்டுவிட்டுச் செல்லலாம், இவற்றையெல்லாம் போலீஸார் கவனித்து வருகிறார்கள்.

இங்கே சொல்லப்பட்டது அரிசன மாணவர்களுடைய விடுதியிலே நடைபெற்ற சம்பவம் ஆகும். அந்த விடுதியிலே 15 மாணவர்கள் இருக்கிறார்கள், அந்த விடுதியை அவர்களே நடத்தி வருகிறார்கள் இவ்விடுதிக்கு நிறுவன காங்கிரசைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. முத்து மேலாளராகவும், திரு. வி. மாரிமுத்து என்பவர் வார்டனாகவும் இருந்து வருகிறார்கள். அது சிமெண்ட் களிமண்ணால் செய்யப்பட்ட காந்தியடிகளுடைய சிலை. 5½ அடி உயரமுள்ள ஒரு பீடத்தில் 2 அடி உயரமுள்ள மார்பளவு கொண்ட சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்த விடுதியிலே உள்ள மாணவர்கள் மறுநாள் சுதந்திர தினம் கொண்டாட சிலையை சுத்தம் செய்துவிட்டு சென்றனர். மறுநாள் விழா நடத்துவதற்காக அந்த இடத்திற்குச் சென்றபொழுது சிலையின் தலை உடைக்கப்பட்ட சம்பவத்தை அனைவரும் கண்டார்கள். உடனடியாகப் போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. போலீசாராலும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்று எண்ணத் தேவையில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

யாருடைய உணர்ச்சியைக் காட்டுவதாகயிருந்தாலும் அதை மறைந்துவிட்ட தேசத் தலைவர்களின் படங்களிலோ சிலைகளிலோ காட்டுவது நல்லதல்ல. இதன் மூலம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று யாராவது எண்ணினால்

**(இ) ஸ்டான்லி மருத்துவமனை விடுதி காப்பாளர் தாக்கப்பட்டதும், மாணவரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும் குறித்து.**

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** அடுத்து, ஸ்டான்லி மருத்துவ மனையில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தம் பற்றியும், வார்டன் தாக்கப்பட்டதையும், மாண வரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மைபற்றியும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் ஹாண்டே, திருமதி ஜோதி வெங்கடாசலம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடியது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திருமதி ஜோதி வெங்கடாசலம் :*** Sir, I give notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to adjourn the business of the House to discuss an urgent matter of public importance, namely, alleged physical violence between the Warden and the students of the Stanley Medical College and the prevailing unrest among the staff and students of the College and Hostel. '

தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்னையைப்பற்றிக் குறிப்பாக என்ன கூற விரும்புகிறேன் என்றால், இப்படி மாணவர்களால் ஏற்படும் இடைஞ்சல்கள், அது மருத்துவக் கல்லூரியானாலும் சரி, மற்றக் கல்லூரிகளானாலும் சரி, அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. குடியரசு தினத்தன்று இரவு ஒரு மாணவன், குணசீலன் என்னும் மாணவன் குடித்துவிட்டு அந்த மருத்துவ மனை ஹாஸ்டலுக்குச் சென்று அங்கிருந்த மற்றொரு மாணவனைத் தாக்கிய தாகவும், பிறகு வார்டன் வந்து கேட்டபொழுது வார்டனை மாணவன் தாக்கிய தாகவும், மாணவனை வார்டன் தாக்கியதாகவும் பத்திரிகைகளில் ஒரு தகவல் வந்திருக்கிறது.

இப்படி ஒரு இன்டிசிப்ளின் மெடிகல் காலேஜில் ஏற்பட்டாலும் சரி, மற்றக் கல்லூரிகளில் ஏற்பட்டாலும் சரி, என்றைக்கு நாம் இதற்குப் பரிகாரம் காணப் போகிறோம் என்ற பெரும் கவலையோடுதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மா னத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏதோ ஜாதியையோ, கட்சியையோ சேர்த்து அதற்கு ஒரு சாயத்தைப் பூசி நாம் பேசிக் கொண்டிருப்பதைவிட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாதிருக்க அரசு முடிவு எடுக்க வேண்டு மென்பதுதான் என்னுடைய கவலை. அதன் பிறகு அந்த மாணவன் குண்டர்



களை அழைத்துச் சென்று வார்டனைத் தாக்கியதாகப் பத்திரிகைத் தலைப்பைப் பார்க்கும்போது மற்றொரு பாளையங்கோட்டைச் சம்பவம் என்றே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

இப்படிக் குண்டர்களை அழைத்துச் சென்று வார்டனை அடித்ததும் தவறு; மாணவன் குடித்து விட்டு வந்ததே தவறு. இரண்டாவது ஆண்டு மாணவன், எம்.எல்.ஏ. யின் மகன் என்று இவைகளை எல்லாம் கூறுவதை விட இப்பேர்ப் பட்ட மாணவன் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவருடைய பிள்ளையாக இருந்தாலும் சரி, பொது ஸ்தாபனங் களில் படிக்க வந்து விட்டு இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களை நடத்திக் கொண்டே இருப்பார்களானால் என்றைக்கு அரசு இதற்கு ஒரு முடிவு காணப்போகிறது?

இந்த மாணவன் ஏற்கனவே 'ராக்கிங்' கில் ஈடுபட்டிருக்கிறான் என்று நான் பத்திரிகையில் பார்த்தேன். காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் 'ராக்கிங்' கைத் தடுக்க வேண்டுமென்று கடுமையாக நடவடிக்கை எடுத்து தண்டனை விதிக்க வேண்டுமென்று இருக்கிறது. இதையொட்டி 1,400 மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்வதாகவும் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது. ஹவுஸ் சர்ஜன்களும் ஸ்ட்ரைக் செய்ய முடிவு செய்திருந்தாலும் அதைப் பற்றி இப்போது நான் சொல்ல விரும்பவில்லை.

மறுபடியும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்கு மாணவர்கள் ஹாஸ்டலில் இன்டிசிப்ளினுக்கு இடம் கொடுக்காமல் தவறு செய்கிற மாணவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாருடைய மகன்களாக இருந்தாலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சிவியர் பனிஷ்மென்ட் வழங்க வேண்டும். வார்டன் மேல் தவறு இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு பின் வாங்க வேண்டியதில்லை.

இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாதிருக்க அதற்கான வழி வகைகள் என்ன என்பது பற்றி எல்லோருடைய யோசனையையும் கேட்டுப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I have given notice of the following motion—

'That this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the law and order problem prevailing in the Stanley Medical College and Hostel as a result of the indefinite strike by the students of the College and Hostel and to discuss measures for averting the spread of the strike to other Colleges.'

I may briefly say a few words in support of what has been said by the hon. Member, Thirumathi Jothi Venkatachellum.

In supporting her points fully, I would like to state that this is a delicate subject which has to be handled with very great care. I fully endorse the views of the hon. Member who preceded me. What I want to impress upon the Government is this.

It has been alleged that some outsiders have been brought into the hostel. I would like the Hon. Minister for Health to interfere in this matter to find out whether any outsider was brought into the hostel. This is a serious matter which requires the immediate intervention and action of the Government.

The other thing is that the students have taken law into their hands and violence has been unleashed. The warden of the Hostel has been mainhandled with the help of some outsiders. Some outsiders have been placed at the disposal of the students. The students grievances whatever they may be should be properly redressed. The communal passions should not be allowed to run high or roused. That is why, purposely I want to be very brief in my speech. The students' indiscipline should not be allowed to continue. I want to make the position of Anna D.M.K. very clear.

The communal passions and students' indiscipline are already high. The Government should take steps to avert the spread of strike by students and also to stop the communal passions and students' indiscipline. Therefore, I request that the House may be adjourned to discuss these points in order to create a tremendous sense of responsibility among the students.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நான் சுருக்கமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஸ்டான்லி மெடிகல் காலேஜ் சம்பந்தமாக நடந்த நிகழ்ச்சிகளின் விவரங்களைப் பார்த்தால் அந்தக் குறிப்பிட்ட மாணவனோடு இரண்டு மூன்று பேர் சென்று அந்த வார்டனைத் தாக்கி இருக்கிறார்கள். இது எல்லா மாணவர்களுக்கும் தெரிந்த நிலையில் ஸ்ட்ரைக் ஏற்பட்டிருக்கிறது. ஒரு நல்ல சம்பவம் என்னவென்றால் நேற்று முதற்கொண்டு அந்த ஸ்ட்ரைக் வாபஸ் வாங்க முடிவு செய்திருப்பதாகவும் காரணம் அந்த மாணவனை சஸ்பெண்ட் செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

'The students' spokesman said that they have decided to postpone further action till the Inquiry Committee submitted its report.'

இதுவும் ஒரு எச்சரிக்கையாக இருக்கும் காரணத்தால் மேற்கொண்டு ஹவுஸ் சர்ஜன்கள் ஸ்ட்ரைக் நாடு பூராவும் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் ஓரளவு மாணவர்கள் மத்தியில் அமைதி இருக்க வேண்டுமென்று நினைக்கின்ற நேரத்தில் இப்படி ஒரு அசம்பாவிதமான சம்பவத்தின் விளைவாக வேறு அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடக்கூடாதென்பதற்காகத்தான் அதைப் பற்றி விவாதிக்க ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன்.

சாதாரணமாக, 'டில்லிக்கு ராஜா என்றாலும் பள்ளிக்குப் பிள்ளை' என்று தான் சொல்லுவார்கள். நான் மந்திரி மகன், எம்.எல்.ஏ. வின் மகன் என்ற அடிப்படையில் காரியங்கள் நடக்குமென்றால் அதை அனுமதிக்கக்கூடாது. ஆகவே, இதுபற்றி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள், கல்லூரி செல்லாத முடிவை மேற்கொண்டிருந்ததைக் குறித்தும், அங்கு மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மாறுபட்ட மனநிலை குறித்தும், மாணவரால் விடுதிக் காப்பாளர் தாக்கப்பட்டார் என்பது குறித்தும். பொதுவாகப் பயிற்சி டாக்டர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது குறித்தும் விவாதிக்க சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களால் கேட்கப்பட்டுள்ளது.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து கல்லூரி முதல்வரால் அமைக்கப்பட்ட பேராசிரியர்கள் மூன்று பேர் கொண்ட குழு—டாக்டர் ஏ. உமாபதி, டி. கே. சண்முகசுந்தரம், ஜி. எம். யாஸியா—விசாரணை நடத்தி வருகிறார்கள். விசாரணை

நிலையை எடுக்கிறது என்பதைப்பற்றித் தெள்ளத் தெளிவாக விளக்கினால் உதவிகரமாக இருக்கும். ஆகவே, இதற்காக ஒத்திவைத்து விவாதித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நிலத்திலிருந்து பலர் வெளியேற்றப்படுகிறார்கள் என்ற பொதுவான ஒரு கருத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அப்படி வெளியேற்றப் படக்கூடாது என்பதிலே இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதையும், அதற்கான சட்டங்களை இந்த மாமன்றத்திலேதான் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதையும் யாரும் மறந்திருக்க முடியாது. அதே நேரத்தில் சில விவகாரங்களில் நாம் சட்டத்திற்குப் புறம்பாக நடந்துகொள்ள முடியாது என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில், மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டி போலீஸ் எல்லையைச் சேர்ந்த வில்லூர் கிராமத்தில் வசித்து வரும், ஸ்ரீரெங்கம்மாள், மூக்கம்மாள் என்கிற தங்கம்மாள் ஆகிய இரு சகோதரிகளுக்கும் மேற்படி கிராமத்தில் 4 ஏக்கர் 31 செண்ட் நஞ்சை நிலம் உள்ளது. இதிலே சாகுபடி உரிமையிலே தகராறு ஏற்பட்டது. இந்த நிலத்தைச் சாகுபடி செய்வதில் மேற்படி இரு சகோதரிகளுக்கும், வில்லூர் கிராமத்தைச் சேர்ந்த கே. எம். சங்கரலிங்கத்துக்கும் இடையே தகராறு இருந்து வந்தது. இதன்பேரில் சாகுபடி உரிமை கோரி மேற்படி சங்கரலிங்கம் திருமங்கலம் தனித் தாசில்தார் (குடி உரிமை) முன் வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் மேற்படி சங்கரலிங்கத்திற்கு சாகுபடி உரிமை வழங்கி திருமங்கலம் தனித் தாசில்தார் தீர்ப்பு வழங்கினார். பிறகு உரிமையாளர்கள் மேல் முறையீடு என்ற முறையில் கோட்டாட்சித் தலைவருக்கு முறையீடு செய்து கொண்டனர். கோட்டாட்சித் தலைவர், நிலத்தின் உடைமையாளர்கள் மேற்படி இரு பெண்களும்தான் என்று கூறி, சங்கரலிங்கத்திற்கு சாகுபடி உரிமை கோர உரிமை கிடையாது என்று 7—12—1973-ல் தீர்ப்பு வழங்கினார். பிறகு சங்கரலிங்கம் டி.ஆர்.ஓ. விடத்தில் மேல் முறையீடு செய்தார். அவர், முதலில் செய்யப்பட்ட தீர்ப்பிற்கு எதிராகத் தடை விதித்தார்.

அந்தத் தடை உத்தரவை நீக்க வேண்டுமென்றும், அறுவடை செய்ய தங்களுக்கு உரிமை வேண்டுமென்றும் அந்த இரண்டு சகோதரிகளும் மறுபடியும் அப்பீல் செய்து கொண்டார்கள். அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் அறுவடை செய்வதற்கு அனுமதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. காவல்



துறையினரின் பாதுகாப்பும் தர வேண்டுமென்றும் அந்த இரண்டு சகோதரிகளும் கேட்டுக்கொண்டதற்கும் காவல் துறையினரின் பாதுகாப்பும் அளிக்கப் பட்டது.

இதற்கிடையே அறுவடை செய்ய அந்தச் சகோதரிகளின் ஆட்கள் வந்த நேரத்தில் சங்கரலிங்கத்தின் மகன் ராமு என்பவர் சுமார் 10, அல்லது 15 பேர்களுடன் வந்து அறுவடை செய்ய வந்தவர்களைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

இதுகுறித்து, டி. கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வழக்கு விசாரணையில் இருக்கும்போதே, 21—1—1974 அன்று காலை 11 மணிக்கு சங்கரலிங்கமும், மற்றும் 22 பேர்களும் நிலத்தில் ஒரு பகுதியில் அறுவடை செய்து நெல்லை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். மீண்டும் வழக்கு தொடரப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களிலே பலர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். சங்கரலிங்கம் தலைமறைவாக இருக்கிறார். அவர்மூலம்தான் தந்தி வந்திருப்பதாக அறிகிறேன். அவர் தலைமறைவாக இருக்கிறார்.

இதிலே கைது செய்யப்பட்ட பிறகு, அறுத்து வைத்திருந்த நெல்லை போலீசார் கைப்பற்றியிருக்கிறார்கள். அப்படிக் கைப்பற்றியபோது அசம்பாவிதம் நடைபெற்றது, தங்கச் சங்கிலி எடுத்துச் செல்லப்பட்டது என்பது போன்ற தகவல் வந்ததை விசாரிக்கச் சொன்னதில் போலீசார் அப்படி நடக்கவில்லை என்று மறுத்திருக்கிறார்கள். அப்படிப் பறிமுதல் செய்யும்பொழுது அசம்பாவிதங்கள் நடந்திருந்தால் அவைகளை நான் இன்னும் மேலதிகாரிகளைக் கொண்டு விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொண்டு, இதற்குமேல் தகவல் சொல்வது பொருத்தமல்ல என்று கூறி இதை, ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதை, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## ஸ்டான்லி மருத்துவ மனை விடுதி காப்பாளர் தாக்கப்பட்டதும், மாணவரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும் குறித்து

[திரு. க. அன்பழகன்] [1974 சனவரி 30

நடவடிக்கைகள் அமைதியை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை
கள்தான். உண்மையை அவர்கள் அறிந்து அறிவிக்கிற வரையில் நாம்
பொறுத்திருக்க வேண்டும்.

எனவே, அந்த அடிப்படையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு
அவசியம் ஏற்படவில்லை என்பதை அவையினருக்குத் தெரிவிக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று. தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்கள் மீது, மாணவர்
களை ரேகிங்கில் தொல்லைப்படுத்துகிறவர்கள் மீது, நடவடிக்கைகள் எடுக்க
வேண்டுமென்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்திய திருமதி
ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அப்படி ரேகிங் நடத்தி
சேலத்தில் உள்ள பொறியியல் கல்லூரியில் மற்றவர்கள் அதிகமாகப் பாதிக்கப்
படக் காரணமான இரண்டு மாணவர்களை அந்தக் கல்லூரியை விட்டு மாற்றம்
செய்தபோது அரசியல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து அந்த மாணவர்களைக்
கல்லூரியை விட்டு நீக்குவது தவறு என்று பெரிய போராட்டத்தில் ஈடுபட்
டார்கள்.

அதேபோல் இந்தக் கல்லூரியில் யாரோ ஒரு மாணவன் தவறு செய்து
விட்டான் என்று சொன்னால், அந்த மாணவனால் ஏற்பட்ட ஆபத்து அல்லது
தொல்லை யாருக்கு ஏற்பட்டிருந்தாலும் உடனே இந்தியாவிலேயே ஒரு பூகம்
பம் ஏற்பட்டதைப் போல் ஒரு சில பத்திரிகைகள் இந்தச் செய்தியை பெரிது
படுத்துவது ஏதோ ஒரு நோக்கத்துடன்—நோக்கம் என்ன என்பது தெரியா
விடினும்—என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. யாரோ ஒரு எம்.எல்.ஏ.யின்
மகன்மீது இந்தக் குற்றச்சாட்டு வந்துவிட்டது என்பதால் அவர் சேர்ந்த
கட்சி உட்பட—மகன் செய்கிற எல்லாத் தப்புகளுக்கும் தகப்பன் கூட பொறு
பல்ல என்ற நிலையை மறந்து—தாக்கப்படுகிற அளவிற்கு சில பத்திரிகைகள்
அதைப் பயன்படுத்துவது, பிரசாரத்திற்காகப் பயன்படுத்தி இந்த நாட்டில்
அரசியல் நடத்தலாம் என்று விரும்புவதும், இப்படிப்பட்ட அரசியல் மூலம்
கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்களுக்கு ஏதாவது
பிடி கிடைக்காதா என்று நினைப்பதும் நாட்டுக்கு கேடு பயக்கும்.

எந்தத் தீயநோக்கோடு எது செய்யப்பட்டாலும் உரிய நடவடிக்கைகள்
எடுக்கப்படும். ஜாதி, மதம், இனம் என்ற பாகுபாடு பார்க்காது நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.
யார் தவறு செய்திருக்கிறார்கள் என்று பார்த்து, நீங்கள் பூர்ணமாக ஆராய்ந்து
நடவடிக்கைகள் எடுங்கள் என்றுதான் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.



1974 சனவரி 30] [பேரவைத் தலைவர்]

ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் சாதாரண
துரும்பை தூணாக்கி மாணவர்களிடையே ஒரு கொந்தளிப்பான உணர்ச்சியை
ஏற்படுத்தி விட வேண்டாம் என்று வெளியில் உள்ள பத்திரிகைகளைக் கூட
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இளைஞர்கள்
உணர்ச்சிவசப்பட நாம் இடம் தரவேண்டாமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, இங்கே ஹௌஸ் சர்ஜன்களாக உள்ளவர்கள் ஓரிரு நாட்கள் வேலை
நிறுத்தங்களில் ஈடுபடக் காரணம் மத்திய அரசின் பொறுப்பில் பணியாற்றுகிற,
டெல்லியில் உள்ள ஜூனியர் டாக்டர்களுக்கு அவர்களின் வேலைநிறுத்தத்திற்கு
ஆதரவு தரும் வகையில், அனுதாபம் தெரிவிப்பது என்ற முறையில் சென்னை
பொது மருத்துவ மனையில் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள்.
உண்மையில் அனுதாபம் தெரிவிக்கிற ஒரு நல்ல தீர்மானம் போதுமானதாகும்.
பங்களூரில் உள்ள டாக்டர்கள் ஏதோ ஒன்றரை அல்லது ஒரு மணி நேரம்
வேலைநிறுத்தம் செய்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.
நோயாளிகளுக்குத் தெரிவிக்கிற அனுதாபம் டாக்டர்களுக்குத் தெரிவிக்க
வேண்டிய அனுதாபத்தைவிட முக்கியமானது என்பதை அறிந்து வேலை
நிறுத்தங்களை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்று நான் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு
அவசியமில்லை என்று தலைவர் அவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்
குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவை இல்லை என்ற காரணத்
தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (3) அறிவிப்பு.

### நாட்டு விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு மரியாதை செய்ய மவுன அஞ்சலி செலுத்த பேரவை ஒத்திவைக்கப் படுதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய
விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர்த்தியாகம் செய்த வீரர்
களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இன்று காலை 11-00 மணி முதல் 11-02
மணிவரை மவுன அஞ்சலி செலுத்தப்படும். சென்னை, கோட்டையிலுள்ள
இராணுவ அணிவகுப்புத்
தலைமைச் செயலகத்தின் மேற்குப்புறத்தில் உள்ள

திடலில் நடைபெறும் அந்நிகழ்ச்சியில் ஆளுநர் அவர்களும், அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள் வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு 11-30 மணிக்கு மறுபடியும் கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் காலை, 11-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. ஜேம்ஸ், திரு. எட்மண்ட் ஆகியோர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

## (4) கவன ஈர்ப்பு.

### கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் வயிற்றுக்கடுப்பும், காலராவும் ஏற்பட்டுள்ளதும் அதைத் தடுப்பதன் அவசியம் குறித்தும்.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I call the attention of the Hon. the Minister for Health to a matter of urgent public importance, namely the outbreak of cholera and serious type of Dysentry in the districts of Kanyakumari, Tirunelveli and Tiruchirappalli, during the last few months and the necessity to take immediate steps to prevent the same.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முனிச்சிறை மற்றும் மேல்புரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் வயிற்றுக்கடுப்பு மற்றும் குடற்காய்ச்சல் ஆகிய இரண்டு நோய்கள் 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு திருவெட்டாறு, தக்கலை மற்றும் குருந்தன்கோடு வட்டாரங்களில் (Blocks) வயிற்றுக் கடுப்பு நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் 33 ஊர்கள் பாதிக்கப்பட்டன. தோவாளைத் தாலுக்கா முக்கியமாக பாதிக்கப்பட்டது.



நோய் கண்டவர்களின் மலத்தை ஆய்வு செய்தபொழுது அதில் காலரா நோய் அணுக்கள் இல்லையென அறிவிக்கப்பட்டது.

நாகர்கோவிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையில் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1974 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலும் மொத்தம் 482 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது ; அவர்களில் ஒன்பது பேர் இறந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களின் வீடுகள், படுக்கைகள், உடைகள், மலம் முதலியவைகளில் நச்சுத் தடை மருந்துகள் தெளித்தல், குடிநீர் நிலையங்களில் குளோரின் மருந்து கலத்தல் முதலிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1973-ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும் 1974-ஆம் ஆண்டு சனவரி மாதத்திலும் மொத்தம் 2,05,000 பேர்களுக்கு காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

அண்மையில் யாரும் பாதிக்கப்படவில்லை. குமரி மாவட்டத்தில் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் :

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்குப் பகுதிகளிலுள்ள ஸ்ரீவைகுண்டம் மற்றும் தூத்துக்குடிப் பகுதிகளில் 7—10—1973-ஆம் நாளிலிருந்து தொடங்கும் நாள் அளவில் குடற்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தென்காசிப் பகுதியிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நோய் ஏற்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. மொத்தம் 298 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 55 பேர் இறந்தனர். பாதிக்கப்பட்டவர்களில் 12 பேர் காலரா நோய் அணுக்களால் பாதிக்கப்பட்டவர்களென்றும், இறந்தவர்களில் இருவர் நோய் அணுக்களால் இறந்தனரென்றும் ஆய்வுகளிலிருந்து அறியப்பட்டது.

குடிநீரில் குளோரின் மருந்து கலத்தல், பாதிக்கப்பட்ட இடங்களில் நச்சுத் தடை மருந்து தெளித்தல், பெருவாரியாக காலராத் தடுப்பு ஊசி குத்துதல் முதலிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மாவட்டப் பணியாளர்களால் 3,99,833 பேர்களுக்கு காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது. இதைத் தவிர, தூத்துக்குடி நகரத்தில் 39,000 பேர்களுக்கும் காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

## ஸ்டான்லி மருத்துவ மனை விடுதி காப்பாளர் தாக்கப்பட்டதும், மாணவரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும் குறித்து



நடத்தி உண்மை காணப்படும் முன்பே மாணவர்கள் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கருதியும், மாணவர்களிடையே அமைதியை ஏற்படுத்தவும் விடுதிக் காப்பாளரைத் தாக்கியதாகக் கூறப்படும் மாணவன் குணசிலன் விடுதியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்; கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

'Expelled from the hostel and suspended from the college'

26—1—1974 இரவு 9-15 மணி அளவில் அந்த மாணவன் மது அருந்தி இருந்ததாகவும், அந்த நிலையில் தகாத கடுஞ்சொற்களை மற்றவர்கள் மீது வீசியதாகவும், அதனால் சிலமாணவர்கள் விடுதிக் காப்பாளரிடம் சென்று புகார் செய்ததாகவும் தெரிகிறது.

விடுதிக் காப்பாளர் அந்த மாணவனை அழைத்து வரச் செய்து விசாரிக்க முற்பட்டுள்ளார். விசாரித்து எச்சரிக்கையுடன் அனுப்பிவைத்து விட்டதாகவும் அதனால் மாணவரிடையே அந்த மாணவர் விரோத உணர்வைக் காட்டியதாகவும் கூறப்படுகிறது.

27—1—1974 இரவு 1 மணி அளவில் விடுதிக் காப்பாளர் தம்முடைய இல்லத்தில் உறங்கிக்கொண்டிருந்தபோது யாரோ சிலர் கதவைத் தட்டி அவரை எழுப்பி அவர் கதவைத் திறந்துவெளியில் வந்ததாகவும், அப்படி வெளியில் வந்தபோது வெளியே வெளிச்சம் இல்லாமல் இருந்து உள்ளே உள்ள வெளிச்சத்தின் மூலம் பார்த்தபோது சில பேர்கள் கூட்டமாக இருந்ததாகவும், அதில் குணசிலன் மற்றும் வேறு சில மாணவர்களும் அங்கே நின்றுகொண்டு அவரைத் தாக்க முற்பட்டு தாக்கியபோது அவரைச் சேர்ந்த இன்னொருவர் உள்ளே இருந்து வெளியே வெளிச்சத்தில் வர உடனே அத்தனை பேர்களும் ஓடி விட்டதாகவும் அவர் தமது புகாரில் கல்லூரி முதல்வருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியைக் கேட்டறிந்து மற்ற மாணவர்கள் பெரிதும் ஆத்திரப்பட்டு 28—1—1974 அன்று காலை கூடி இதற்கான நடவடிக்கைகள் எடுக்க வற்புறுத்தித் தீர்மானங்களும் நிறைவேற்றியுள்ளனர். செய்திகளை அறிந்த கல்லூரி முதல்வரும் மருத்துவக் கல்லூரி இயக்குநரும் உடனடியாகக் கல்லூரி விடுதிக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களை விசாரித்துள்ளனர். மாணவர்கள் போராட்ட மனநிலை கொள்ளக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் விசாரணை நடத்துமுன்பே மேற்கூறிய நடவடிக்கைகளை புகார் சொல்லப்பட்ட குணசிலன் என்ற மாணவர் மீது எடுத்திருக்கிறார்கள்,



மாணவர்களில் ஒரு சாரார் தந்துள்ள புகாரில்—என்னை அவர்கள் கூட்டமாக வந்து சந்தித்துக் கொடுத்தார்கள்—தாக்க வந்துள்ளதாகச் சொல்லப்படுகிற மாணவர்களை யாரோ தாக்கியதாகவும், அவர் அந்த வார்டனை தாக்கவில்லை என்றும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஏதோ சில வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் என்னிடத்தில் அந்தப் புகாரைத் தந்தார்கள். என்னைச் சந்தித்த மாணவர்களிடம் ஒவ்வொரு பிரச்னையையும் உரியமுறையில் விசாரித்து முடிவு காணவேண்டுமென்றும் பேராசிரியர்கள் குழு விசாரிக்கும்போது உங்கள் சாட்சியத்தைக் கூறிக்கொள்வதுதான் நல்லது என்றும் தெரிவித்து அனுப்பி வைத்துள்ளேன். விசாரணை முடியுமுன் முழு விளக்கம் கூறுவது இயலாததாகும்.

மேலும் நேற்று கூடிய கல்லூரி மாணவர் மன்றத்தில் "விடுதிக் காப்பாளரைத் தாக்கியதாகக் கூறப்படும் மாணவன் மீதும் அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவக் கல்லூரி இயக்குநர் அளித்த உறுதிமொழியின் பேரில் வேலைநிறுத்தம் செய்வதை பிப்ரவரி 1-ம் தேதி மாலை 6 மணி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது" என்று அவர்கள் தீர்மானம் போட்டு இப்போது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் விடுதியில் சில நேரங்களில் சிலர் மது அருந்திவிட்டு சில குழப்பங்களை ஏற்படுத்துவது என்பதை அண்மைக்காலத்தில் சில நிகழ்ச்சிகள் மூலமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படி அவர்கள் நடந்து கொள்ளக் கூடாது என்பதற்காக விடுதிக் காப்பாளர் முதலானவர்கள் ஓரளவிற்கு அவர்களுக்கு எச்சரிக்கை செய்வது என்பது முறையாக நடந்து வருகிறது. ஆனால் இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டபோது, ஒரு மாணவர் யாரோ ஒரு சிலருடன் விடுதிக் காப்பாளரைத் தாக்கிவிட்டார் என்ற செய்தி நமக்கு வருகிறபோது உடனே போலீஸ் அதில் தலையிட்டு விசாரிக்க முடியவில்லை. ஏனென்றால், கல்லூரி விடுதிக்குள்ளே போலீஸ் செல்வது என்பதும், விசாரிப்பது என்பதும், போலீஸ் இலாகாவில் புகார் பதிவு செய்வது என்பதும் பொதுவாக மாணவர்கள் விரும்பாத ஒன்று.

மாணவர்களிடையே ஏற்படுகிற இந்தப் போராட்ட நிலை அல்லது மனம் வேறுபட்ட நிலை ஏற்படுகிறபோதெல்லாம் கல்லூரி முதல்வர்கள்தான் பெருமளவில் பொறுப்பேற்றுக்கொண்டு விசாரணை நடத்தி உண்மையைக் காண வேண்டியிருக்கிறது. இதில் பெரும்பாலான மாணவர்கள் ஒருபக்கமும் சிறுபான்மை மாணவர்கள் இன்னொரு பக்கமும் ஆக தங்கள் கருத்தைத் தெரிவிக்கிறார்கள், எனவே உண்மையைக் காண்பதற்கு முன்னர் நாம் எடுத்திருக்கிற

### கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் வயிற்றுக் கடுப்பும், காலராவும் ஏற்பட்டுள்ளதும் அதைத் தடுப்பதன் அவசியம் குறித்து

[திரு. க. அன்பழகன்] [1974 சனவரி 30

நிலைமை கட்டுக்குள அடங்கியுள்ளது. இப்போது அஞ்சுவதற்குக் காரணம் எதுவுமில்லை.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் திருமானூர் வட்டாரங்களில் (Blocks) 20-1-1974-ஆம் நாள் வரை 78 பேர்களுக்குக் காலரா மற்றும் குடற்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவர்களில் 10 பேர் இறந்தனர். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையில் 24-1-1974-ஆம் நாள் வரை குடற்காய்ச்சல் நோயால் வாடிய 209 பேர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப் பட்டனர்.

மொத்தம் 22 பேர்களின் மலம் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் 5 பேர்களின் மலத்தில் காலரா நோயணுக்கள் இருந்தனவென்றும் மூவரின் மலத்தில் காலரா நோயணுக்கள் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது. மீதமுள்ளவர்களின் மல ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாவட்டத்தில் இதுவரை 24,444 பேர்களுக்குக் காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

நிலைமை கட்டுக்குள் அடங்கியிருக்குமாறு தொடர்ந்து முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது.

### (5) அறிக்கை அளித்தல்.

வனத்துறை, தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHI : Mr. Speaker, Sir, I rise to present the Reports of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Reports on (i) Forests and (ii) Tamil Nadu State Electricity Board.

### (6) தனியார் அலுவல்.

### தனித் தீர்மானம்.

### (1) இன்றியமையாப் பொருள்களின் விலைகளை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வரையறுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம் நடைபெறும்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, while I entirely support the resolution moved by the hon. Member, Thiru K. T. K. Thangamani and his able argument for about an hour, I have to point out that mere fixation of control prices for essential Commodities will not lead us anywhere unless there is a full enforcement following the fixation of prices.

We have seen in this country that wherever there is free trade, there is extreme profiteering and wherever there is control, there is absolute corruption. So, we have not been able to exercise vigilance on such vital matters like price control. To-day, the burning problem of the country is the non-availability of essential commodities and when they are available, they are available at exorbitant prices and with great difficulty.

Where there is rationing, we find that we have to stand in queue for hours together. I think if you take the weekly average working hours of a man, 25 to 30 per cent of his working hours is taken for standing in queue to get milk in the morning, rice, vegetables, coffeeseeds and other things afterwards and they are absolutely necessary for his living. So what is wrong in this country and it is for the great politicians to analyse it.

But what we have seen is that every political party seems to take advantage of the present most difficult situation and exploit it. What is now wanted is that all the patriotic political leaders should sit together and find out a solution for the present abnormal state of affairs. I do not think that many realise the abnormal state of affairs in this country.

(Thiru K. M. Subramaniam) 

Our Communist friends talk of peasants. What is the present economic condition of the peasant? For three months in a year he gets work. His income is not more than Rs. 400 per year. Yet the Government say that he is economically progressing. Government has failed industrially, economically and ultimately we are driven today to a hopeless state of affairs from which we are not able to get up quickly.

We can come out if people like Indira Gandhi and other leaders forget everything else, forget the present exploitation which is going on and concentrate their attention only on solving the problem of prices. Otherwise we are finished. That is why I say it is very necessary to fix prices of essential commodities and to make them available to the people. We must also ensure purity in what we produce. The other day I was happy to hear our Minister for Dairy Development and Religious Endowments saying that we are producing six to seven varieties of milk with varying density.

It is not enough if we produce essential commodities. We must ensure their purity. Now let me take the case of fodder. That is worse. You do not get good fodder anywhere. There are no food inspectors even to check the food which human beings eat. How can there be food inspectors to check animal food. We do not get good quality fodder. It is a serious problem. I say that Thiru K. T. K. Thangamani has done a good thing in bringing this resolution. There is no use of taking political advantage.

(Thiru K. Kamatchi in the Chair)

சிறைக்குப் போனவர்களுக்கு பெரிய மரியாதை நடந்தது. எதற்காக இவர்கள் சிறைக்குப் போனார்கள்? நீங்கள் 20 வருஷம் பண்ணின மால் அட்மினிஸ்டிரேஷன், கரெப்ஷன், அதற்காக ஜெயிலுக்குப் போனீர்கள். 'மகாத்மா காந்தி வழியில் நாங்கள் சிறைக்குப் போனோம். லட்சக்கணக்கில் போனோம்' என்று சொல்லிக்கொள்கிறார்கள். எதற்காகப் போனார்கள். சுதந்திரம் வாங்குவதற்குப் போனார்களா, வேலை யில்லாதவர்களுக்கு வேலை தேடிக்கொடுக்கப் போனார்களா? எங்கே போக வேண்டும், டெல்லிக்குப் போகவேண்டும். விலை ஏற்றத்தைப்பற்றி அங்கே போய் ஏதாவது சொன்னீர்களா? அதைப்பற்றி ஏதாவது யோசனை பண்ணினீர்களா? 50 பேர்களை



 (Thiru K. M. Subramaniam)

சேர்த்துக்கொண்டு கலெக்டர் ஆபீஸுக்கு முன் மறியல் செய்து ஜெயிலுக்குப் போனவர்களுக்கு சால்வை போர்த்தினார்கள். என்ன தியாகிகளா? எத்தனை தியாகிகள் . . . .

திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் பேசிக்கொண்டே போகிறார். சிறைக்குச் சென்றவர்கள் காங்கிரஸைச் சார்ந்தவர்கள். பெருமைக்குச் சென்றார்கள் என்றெல்லாம் சொல்கிறார். ஏற்கனவே சுதந்திரப் போராட்டம் செய்தவர்களும் சென்றிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

திரு .கே. எம். சுப்பிரமணியம்: ஞாபகப்படுத்துவது மட்டுமல்ல. நானும் அதிலே சேர்ந்தவன். கலெக்டர் ஆபீஸில் பண்ணவில்லை, அங்கே போய் பண்ணவில்லை. அவ்வளவுதான் வித்தியாசம். ஐந்து நாட்களுக்கு என்னை ஐ.ஜி. ஆபீஸ் போலீஸ் வீட்டிலே பிடித்துவைத்திருந்தார்கள். வேறு எங்கேயும் இல்லை. சொல்லக்கூடாது என்று சும்மா இருந்தேன். நானே தம்பட்டம் அடித்துக்கொள்ளக் கூடாது. காங்கிரஸுக்கு விரோதம், அந்தக் காலத்தில் நான் அஹிம்சையில் ரொம்ப நம்பிக்கை இல்லாதவன். அதை இப்பொழுது சொல்லிவிடுகிறேன். இப்பொழுது யாரும் என்னைப் பிடிக்கப் போவதில்லை.

What I say is, all the patriotic political leaders of this country instead of throwing mud at each other and taking advantage of the present economic situation, should come together to work out a solution to solve this problem of prices, thus making the people to live a bit happier so that we can survive this freedom. Otherwise we are going to lose freedom whatever we may try because at least 40 to 50 per cent of the population is groaning under high prices.

Middle-class families like mine are not able to buy ghee which is selling at Rs. 44 per viss. With these words I resume my seat once again appealing to political parties not to take advantage of the political situation. What I say is 'solve the problem and be done with it'.

(Mr. Deputy Speaker in the Chair.)

MR. DEPUTY SPEAKER: Have you finished your speech Mr. Subramaniam?

THIRU K. M. SUBRAMANIAM: Yes, Sir. On seeing you I have finished my speech. (laughter).

இப்படி இருக்கக்கூடிய நிலைமையில்—மக்கள் இன்றியமையாப் பொருள்களை பெற முடியாத சூழ்நிலையில்—சர்க்காரின் கடமை என்ன? நமது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். நாட்டு மக்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுவும் ஒரு முறை. விலைகளை நிர்ணயித்துப் பார்க்கலாம்.

ஆனால் ஒன்று. இந்த நாடு சமஷ்டி நாடு. தமிழ் நாடு மட்டும் தனித் தியங்குகிற நிலை இல்லை. இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் பங்கீட்டு முறை முழுமையாக இல்லை. பெரிய வியாபாரிகள் எல்லாம் இன்றியமையாப் பொருள்களின் பங்கீட்டு உரிமைகளைத் தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில்—இன்றியமையாப் பொருள்களின் விலையை நிர்ணயித்து—தமிழ் நாட்டிற்குள் இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று கட்டுப்பாடு செய்தால் இந்த மாநிலத்தில் இருந்து அண்டை மாநிலத்திற்குப் பொருள்கள் போகாதவாறு தடுக்க, அல்லது வேறு மாநிலங்களில் இருந்து இங்கு வருவதைத் தடுக்க—இண்டர் ஸ்டேட் ட்ரேடைக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரம் இருக்கிறதா, உரிமை இருக்கிறதா என்றால், இல்லை.

இங்கே திரு. கே. எம். சுப்பிரமணியம் சொன்னார்கள். இன்றியமையாப் பொருள்களின் விலை ஏறியிருப்பதற்கான முழுப் பொறுப்பையும் மத்திய அரசின் மீது சுமத்துகிறேன். என்று சொன்னார்கள். இதில் உண்மையிருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு—முடக்கக்கூடிய அளவுக்கு மத்திய அரசு மையமான இடத்தில் உட்கார்ந்திருக்கிறது. நாட்டில் எந்த எந்த இடத்தில் தொழில்களை ஏற்படுத்த வேண்டும், என்ன என்ன தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை நிர்ணயிக்கக் கூடியவர்களாக—க்ரெடிட் பாலிசி, மானிடரி பாலிசி ஆகியவற்றை வகுக்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அப்படி க்ரெடிட் பாலிசி வகுக்கும் போது, மானிடரி பாலிசி வகுக்கும் போது உண்மையில் என்ன செய்தார்கள்?

In order to mitigate inflationary tendencies in our country, they have indulged in some kind of credit policy; for example, the recently announced credit squeeze policy of the Reserve Bank of India.

அவர்கள் இதற்கான காரணங்களைச் சொல்கிறார்கள். ஈசியாக பணம் கிடைக்காவிட்டால், பணப்புழக்கம் குறைந்து, விலைவாசிகள் குறையும் என்று மத்திய அரசு நினைக்கிறது. அதற்கு மாறாக இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது?



இன்றைக்கு தொழில் துறையில் பல திட்டங்கள் நடைபெறுகின்றன. விவசாயத் துறையில் பல திட்டங்கள் நடைபெறுகின்றன. க்ரெடிட் ஸ்குவீஸ் பண்ணிவிட்டதால் இன்றைக்கு ப்ரொடெக்ஷன் டிக்ரீஸ் ஆகக்கூடிய நிலைமை தான் நாட்டில் உருவாகியிருக்கிறது.

Instead of there being mitigation of the vigour of the inflationary tendency in our country, what has happened is production has decreased to a substantial extent and that has been telling on the price level and it has had very great impact upon the price level in our country.

என்பதுதான் இன்றைக்கு நாட்டிலே இருக்கிற உண்மையான நிலைமை. இதை மாற்றுகிற வகையில் மத்திய அரசு தீவிரமாக ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். பொருளாதார புத்தகத்தில் பலவற்றைப் படிக்கிறோம். கீன்ஸ் பொருளாதாரத்தில் பல வருகிறது. எங்களைப் போன்ற பொருளாதார மாணவர்கள் பலவற்றைப் படித்திருக்கலாம். நாட்டில் இருக்கிற மாறுபட்ட சூழ்நிலை, சமுதாய அமைப்பு, சமுதாயத்தின் எண்ணங்கள், சமுதாயக் கோட்பாடுகள் ஆகியவற்றோடு ஒருமித்துப் பார்க்கிறபோது, ஒரு நாட்டில் சமஷ்டி ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, மத்திய ஆட்சியும், மாநில ஆட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரு பொருளாதார திட்டத்தை வகுத்து, அந்தத் திட்டத்தைச் சமமாகச் செயல்படுத்தியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் போது, மத்திய அரசு இதுபோலச் செய்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

திரு. கே. எம். எஸ். சொன்னார்கள். கடந்த பத்தாண்டுகளில் நூறு சதவிகிதம் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று. நாங்கள் கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளிலேயே நூறு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது—எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும். இதற்கிடையில்—தொழிலாளர்கள் வேஜ் இன்க்ரீசுக்குப் போராடுகிறார்கள். சில உயர்வுகளைப் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் பெறுகிற ஊதிய உயர்வு, பண்டங்களின் விலையேற்றம் ஆகியவற்றின் விகிதாச்சாரத்தைப் பார்த்தால் 50 சதவிகிதம் என்றால் 75 சதவிகிதம் ஆக இருக்கிறது. இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார்? தொழிலாளர்கள்—பிக்சட் இன்கம் க்ரூப்கள் தான். இந்த மாதம் 300 ரூபாயை வீட்டிலே கொடுத்தால், அடுத்த மாதம் 20 தேதிக்குள் போய்விடுகிறது. வீட்டில் தகராறு. என்ன தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டாயா என்று கணவன்மார்கள் சண்டைபோடுகிற நிலையைப் பார்க்கிறோம். பிக்சட் இன்கம் க்ரூப்புகள் பெறுகிற ஊதிய உயர்வு அவர்களுக்கு பயன் படாமல் விலை உயர்வு தடுக்கிறது. The surest high of inflationary

## இன்றியமையாப் பொருள்களின் விலைகளை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வரையறுத்தல்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 சனவரி 30

வருத்தாலும் போதாது என்று பொருளாதாரத்திலே, நாம் தொழில் துறையிலேயும் அதிகமாக முன்னேற்றம் கண்டிட வேண்டுமென்று, இண்டஸ்ட்ரியல் ஃபீல்டிலே பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த முன்னேற்றங்களை நடைபெற விட்டதில் ஒரு தவறு என்னவென்றால், 'பிரையாரிடி' என்று சொல்வார்களே, 'முன்னுரிமை கொடுப்பது' என்று, அந்த முன்னுரிமை கொடுப்பதிலே நடந்து விட்ட ஒரு தவறு என்னவென்றால், 'கீ இண்டஸ்ட்ரீஸ்' என்று சொல்லக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை ஏற்படுத்தி விட்டு, அவைகளிலே ஏராளமான மூலதனத்தையும் போட்டுவிட்டு இருக்கிறோம். அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று, 'லேபர் ஸேவிங் டிவைஸ்' என்ற முறையிலே தொழிற்சாலைகளில் புகுத்தி வேலையில்லாத் தன்மையை ஏற்படுத்திவிட்டோம். அதே நேரத்தில் வேலையில்லாத தொழிலாளர்களுக்கு லட்சக்கணக்காக இன்றைக்கு நாட்டில் வேலை பெற்றுத் தந்திருக்கிறோம் என்பதை புள்ளிவிவரங்கள் அறிந்தவர் யாரும் மறந்துவிட முடியாது. அவர்கள் வேலைகளைப் பெறுகின்ற போது, 'புரொபன்ஸிடி ஆப் கன்ஸம்ஷன்' என்ற ஒரு தன்மை நமது நாட்டிலே இருக்கின்றது. எவ்வளவு அதிகமாக வருமானத்தைப் பெறுவதால் தொழிலாளர்கள் அதிகமாக கன்ஸ்யூம் செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள். மூன்று வேளை சாப்பிட்டால் மாத்திரம் போதாது, இடையிடையே சிற்றுண்டி சாப்பிட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஒரு சட்டைக்கு 2, 3 சட்டைகள் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே, 'கன்ஸம்ஷன் புரொபன்ஸிடி' என்ற எண்ணம் நமது நாட்டில் அதிகமாக இருக்கின்றது.

இத்தகைய முறையிலே தொழிற்சாலையிலே அதிகமாக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து விட்டோம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே இன்க்ரீஸ் இன்கம் என்று வரும்போது கன்ஸம்ஷன்களுக்கு புரொடக்ஷன் செய்திருக்கிறோமா என்று பார்த்தால் விவசாயத் துறையிலே நாம் நல்ல முறையிலே கவனம் செலுத்தி இருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. மற்ற துறைகளிலே அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. ஆகவே பொருளாதாரத்திலே ஓரளவு சிக்கல்களை நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இன்க்ரீஸ் ஆப் பாபுலேஷன் என்று இருக்கின்றது. இதிலே இருக்கின்ற பிரச்னை என்னவென்றால், பாபுலேஷனுக்கும் புரொடக்ஷனுக்கு மிடையே ஒரு புரபோர்ஷனேட் ரிலேஷன்ஷிப் இருக்க வேண்டும். 'கோ-ஆர்டினேஷன்'—இந்த இரண்டையும் இணைத்து திட்டம் தீட்டப்பட வேண்டும். இதைச் செய்தால் இந்த விளைவுகள் விளையும் என்று இருக்கிறது. அந்த முறையில் ஆராய்ந்து திட்டம் வகுக்க தவறி விட்ட காரணத்தால் தான் இந்த நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

## இன்றியமையாப் பொருள்களின் விலைகளை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வரையறுத்தல்

1974 சனவரி 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

உற்பத்தியில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. சில பேர் சொல்கிறார்கள், உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தவில்லை என்று. அது தவறு. உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அதிலே பெரும் வெற்றி கண்டிருக்கிறோம் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதிலே தவறு எல்லாம் பங்கீட்டு முறையிலே தான் பல கோளாறுகள் நடந்திருக்கின்றன. பங்கீடு செய்யும்போது தான் பல கஷ்டங்கள் வருகின்றன.

ஃப்ரீ இகானமி என்பதை நாம் எந்த நோக்கிலும் செயல்படுத்த முடியாது. வளர்ந்து வருகின்ற ஒரு சமுதாயத்தில் இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகள் வருகின்றன. அரசாங்கம் பங்கீட்டு முறையில் கண்டிரோல் செய்ய வேண்டிய ஒரு அவசியம் ஏற்படுகிறது. அதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். பங்கீட்டு முறை என்று வரும்போது, வினியோகிக்கும் போது, யார் பங்கீடு செய்ய வேண்டுமென்ற நிலை வருகிறது. பங்கீடு செய்யும்போது தனிப்பட்டவர்களுக்கு பங்கீட்டு உரிமைகளை கொடுக்கிறோம்.

நமது நாட்டில் மக்களிடையே ஒரு குறை இருக்கிறது. அதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். மூடி மறைப்பதில் பிரயோசனம் இல்லை. எதை எடுத்துக்கொண்டாலும் லாபம் வரவேண்டுமென்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

(நண்பகல் 12.00)

குறிப்பாக, வியாபாரிகளாக இருக்கக்கூடியவர்கள்—வியாபாரிகள் என்று சொன்னால் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது—நாட்டில் இருக்கிற நிலைமையைச் சொல்கிறேன்—தங்கள் லாபத்தையே பார்க்கிறார்கள். நாம் உணவுப் பங்கீட்டு உரிமையை அவர்களுக்குக் கொடுக்கிறபோது நூற்றுக்கு 25 சதவிகிதம் கூட மக்களைச் சென்றடைவதில்லை என்பது ஒருண்மை. இதை யாரும் மறுக்க முடியாது.

அத்தியாவச்யப் பண்டங்களின் பங்கீட்டு உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவு சங்கங்களிடத்தில் கொடுக்கலாமா என்று கேட்டால் அங்கேயும் பல குறைகள் இருப்பதைக் காண்கிறோம்—மன்னிக்க வேண்டும், அது உண்மையான நிலைமை—மக்களுக்கு பணி செய்வதே தங்கள் கடமை என்கிற உணர்வோடு கூட்டுறவுத் துறையில் இருக்கிறவர்களுக்கும் தாங்கள் சொந்த முறையில் எப்படி லாபம் அடைவது என்கிற உணர்வுதான் இருக்கிறது. இது இன்சிடெண்டல்—இதன் காரணமாக கூட்டுறவுத் துறையில் எத்தனையோ விதமான ஊழல்கள் நடைபெற்று வருகின்றன.

economy is the abnormal profitability என்று சொல்வார்கள். சொன்ன அந்தக் கருத்து நிதர்சனமாக நடக்கிறது. ஒரு இனம், ஒரு கூட்டம், abnormal profitability என்ற அந்த முறையிலே அதிக லாபத்தைப் பெறும் கூட்டமாக நாட்டிலே இன்றைக்கு ஒரு சிலர் இருக்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரம் அவர்கள் கையிலே சிக்கிக்கொண்டிருக்கிறது. அவர்கள்தான் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சியை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழும் கொடுமைக்காரர்களாக இன்றைக்கு ஒரு சிலர் வாழ்கிறார்கள். அவர்கள்தான் இத்தகைய பிளாக் மார்க்கெட் செய்யக் கூடியவர்களாகவும், பதுக்கல்காரர்களாகவும், கள்ள மார்க்கெட் செய்பவர்களாகவும், சர்க்காரால் விநியோகிக்கப்படும் பொருள்களை சரியான முறையில் விநியோகம் செய்யாமல் கள்ள மார்க்கெட்டிலே விற்று அதிகப்படியான லாபத்தைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் கொடுமைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களை 10 ஆண்டு 20 ஆண்டுக்காலம் சிறைச்சாலையில் இடவேண்டுமென்ற ஒரு சட்டத்தை நாம் வகுத்தாலும் அது நியாயம் என்றே நான் கருதுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய பொருளாதார அமைப்பு, நம்முடைய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவாதார உரிமைகள் ஏழை எளிய மக்களின் வாழ்விலே விளக்கேற்றி வைக்க, ஏழை எளியவர்களின் வாழ்வில் வளத்தைத் தருவதற்கு அது தடங்கலாகயிருந்தாலும் அத்தகைய திட்டங்களையும், அரசியல் சட்ட உரிமைகளையும் தூக்கியெறிந்து, நாம் ஜீவாதார உரிமைகளோடு வாழ்வதற்காகப் பிறந்திருக்கிறோம். ஆகவே, அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்காமல் இருக்கும் அந்த நிலைமைகளை மாற்றி சுக வாழ்வு வாழும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். அதற்குத் தடையாக இருக்கும் நிலைகளைத் தகர்த்தெறிய வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம்.

மத்திய அரசு இந்தப் பொறுப்புகளை ஏற்று நடத்துவது, பரந்த இந்திய பூபாகத்திலே, பரந்த இந்திய உபகண்டத்திலே சாத்தியமா என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். ஆகவேதான் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்களைத் தர வேண்டும். பொருளாதார சிக்கலைச் சமாளிக்க, பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க, பொருளாதாரத் தளர்ச்சியைத் தடுக்க, நாட்டிலே ஏற்படும் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தும் சமூக விரோத சக்திகளைச் சந்திக்க மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டுமென்று கூறுகிறோம்.



(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் தலைமை)

விலை நிர்ணயத்தை நீங்கள் செய்து விடலாம். ஆனால் மத்திய அரசு மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இல்லாமல் மாநில அரசு செய்யும் இந்த விலை நிர்ணயத்திற்கு மாற்றமான கருத்துடையதாக இருந்தால் நாம் எடுக்கும் எந்த முடிவும், நாம் வகுக்கும் எந்தத் திட்டமும் நிச்சயமாக வெற்றி பெறாது என்ற எண்ணத்தில்தான் நான் இதைச் சொல்கிறேன்.

இன்றைக்குப் பல பிரச்னைகள் பேசப்படுகின்றன. ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வேண்டுமா, வேண்டாமா, என்பதைப்பற்றிப் பல எண்ணங்கள் இருக்கலாம். நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே மட்டுமல்லாமல் வேறு எந்த மாநிலத்திலே இருப்பவர்களானாலும், அது குஜராத் மாநிலமாக இருந்தாலும், ஒரிசா மாநிலமாக இருந்தாலும், உத்தரப் பிரதேசமாக இருந்தாலும், மத்தியப் பிரதேசமாக இருந்தாலும், வேறு எங்கேயிருந்தாலும் இன்றைக்கு நாட்டிலேயிருக்கும் ஒரே எண்ணத்தினுடைய ஓட்டமாக இருக்கிறது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட கட்சிக்காக அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மிகுந்த பணிவன்போடு எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்தப் பிரச்னையை அணுகாதீர்கள். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கலாம், இன்னும் 25 ஆண்டுகளுக்கு அவர்கள் இருக்கலாம், 50 ஆண்டுகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கலாம், ஆனால் சாசுவதமாக எப்பொழுதும் அவர்களுடைய ஆட்சியே இருக்கும் என்று நினைத்தால், இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே என்னோடு உட்கார்ந்திருப்பவர்களைக் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறது என்று நினைத்தால், நான் அவர்களைக் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகமே சாசுவதமாக ஆட்சியில் இருக்கும் என்ற எண்ணத்தை, மாட்சிமையான எண்ணத்தை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்களா, அந்த அடிப்படையில்தான் இதை நீங்கள் கேட்கிறீர்களா என்பதை அவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன்.

எல்லா மாநிலங்களுக்கும்தான் கேட்கிறோம், தமிழகத்திற்கு மட்டுமல்ல. இங்கேயுள்ள கலைஞர் அவர்கள் இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கிறார்கள். கலைஞர் அவர்கள் கேட்பது தமிழகத்திற்காக மட்டுமல்ல. (மணியடிக்கப்

மறைத்து வைப்பது, சந்தர்ப்பம் பார்த்து ஏற்றுவது என்று சொல்லும் அளவில் மக்களுடைய வாழ்க்கையில் சூதாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அந்த அளவில் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற பிரச்னையில் என் போன்றவர்கள் நிச்சயமாகச் சிந்திக்க வேண்டுமென்பதை மறுக்க முடியாது.

இது ஒரு நீண்டகாலப்பிரச்னை. அது தீருகிற வரையிலே இன்றைக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை வைத்துக்கொண்டு அத்தியாவசியமான பொருள்கள் சம்பந்தமாக கடுமையான நடவடிக்கைகள் எடுத்து அப்பொருள்கள் நியாயமான விலையிலே கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், ராஜ்யத்திலே அமைதியைப் பரிபாலிக்க வேண்டிய அவசியத்தின் நிமித்தமாக இதை முக்கியமான பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்காக எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பையும் அரசாங்கம் நாடவேண்டும், எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க இந்த விஷயத்தில் தயாராக இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன்.

அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்கின்ற உரிமையை கோவாப்ரேடிவ்ஸ்தான் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதிலே ஆட்சேபனை இடையாது. ஆனால் தனியார்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்தால் கண்டிப்பான ஷரத்துக்களைப் போடவேண்டும், நியாயமான விலைக்குத்தான் அவர்கள் விற்கவேண்டும், சரக்குகளை மறைக்கக்கூடாது, இப்படிப்பட்ட நிபந்தனைகளோடுதான் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படவேண்டும்.

அது மட்டுமல்ல, லைசென்ஸ் வழங்கப்பட்ட கடைகள்தான் விநியோகம் செய்யவேண்டும், எல்லாக் கடைகளிலும் எல்லாவற்றையும் விற்கக்கூடிய நிலைமை இருப்பதால் மார்க்கெட்டிலே அவ்வப்பொழுது ஏற்படுகிற தட்டுப்பாட்டை அடிப்படையாக வைத்து விலைகளை ஏற்றக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களை விற்கக்கூடிய கடைகளுக்கு விசேஷ லைசென்ஸ் வாங்கப்படவேண்டும். லைசென்ஸ் வழங்கப்படும்பொழுது நிபந்தனைகளைப் போட்டு அந்த நிபந்தனைகளுக்கு முரண்பாடாக நடந்தால் கடுமையான முறையிலே தண்டனையளிக்கக்கூடிய முறையைக் கொண்டுவரவேண்டும். அட்வான்ஸாக பணம் கட்டுமாறு செய்யவேண்டும்.

நகரங்களிலே சர்வ கட்சியினரைச் சேர்ந்த ஒரு கண்காணிப்புக் கமிட்டி அமைத்து சில இடங்களிலாவது பரீட்சார்த்தமாக கொண்டுவந்து பாருங்கள், சர்வ கட்சியினரும் போடவேண்டுமென்று சொன்னால் ஆளுங்கட்சியினருக்கு கொஞ்சம் கசப்பாக இருக்கலாம், ஆனால் அவர்களுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன், பிரச்னைகள் சுலபமாகத் தீர்க்கப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும், நகரங்களிலே, பெரிய பஞ்சாயத்துக்களிலே, கிராமப் பஞ்சாயத்துக்களிலே பண்டங்களை நியாயமான விலைக்கு விற்கிறார்களா என்று பார்க்கக்கூடிய பொறுப்பை அவர்களுக்கும் கொடுத்தால் ஆளுங்கட்சியினருடைய பொறுப்புக் குறையும், எல்லாக் கட்சியினருக்கும் பொறுப்பு வந்துவிடும், யுத்த காலத்திலே அப்படிச் செய்யப்படுகிறது.



இன்றைக்கு நிலைமை யுத்த கால நிலைமை மாதிரியாகத்தான் இருக்கிறது. ரயிலிலே, பஸ்ஸிலே போகிறவர்கள் எல்லாம் விலைவாசியைப்பற்றிப் பேசுகிறார்கள் ஆளுங்கட்சியைப்பற்றித்தான் மோசமாக நினைக்கிறார்கள், அந்த நிலைமையைத் தகாத சக்திகளும் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. சர்வ கட்சி கண்காணிப்புக் கமிட்டிகள் போட்டால் மற்ற கட்சிக்காரர்களும் இதிலே புகப் பார்க்கிறார்கள் என்று நினைக்காதீர்கள், சகல கட்சியினரும் உங்களுடைய பர்டனை ஏற்றுக்கொள்ள முன்வருகிறார்கள் என்று நினைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இந்தச் சட்டத்திலே தண்டிக்கப்படுவது வெறும் அபராதம் என்ற முறையிலேதான் இருக்கிறது, அது மட்டும் போதாது, அவர்கள் செய்வது ஒரு பேய்த்தனமான காரியம், மக்கள் வாழ்க்கையிலே அவர்கள் சூதாட்டம் நடத்தி தங்களுடைய வாழ்க்கை வசதியைப் பெருக்கிக்கொள்கின்ற மனப்பான்மை அவர்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே, அதை சாதாரணமாக மாற்றிவிட முடியாது, கடுமையான நடவடிக்கைகள் மூலமாகத்தான் மாற்றமுடியும். கைது செய்யப்படுகிறவர்களை ரோடுகள் வழியாக அழைத்துச்சென்று அவர்களை அவமானப்படுத்தக்கூடிய முறையிலே மக்கள் எல்லாம் அவர்களைப் பார்த்து சிரிக்கக்கூடிய அளவிலே கொண்டுவந்தால்தான் மக்கள் மத்தியிலே நாம் தலை குனிந்து செல்ல வேண்டுமே என்று நினைத்து அவர்கள் திருந்துவார்கள்.

ஏற்கனவே நண்பர் கூறியது போல் பிக்ஸட் இன்கம் குரூப், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், என்.ஜி.ஓ. க்கள், சிறு விவசாயிகள் இப்படிப்பட்டவர்களுக்கு வேறுவழியில்லாத காரணத்திலே அவர்கள் நிரந்தரமான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு பாதிக்கப்படுகிறார்கள், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்குமாறு செய்யவேண்டும். பெரிய பெரிய வக்கீல்களாக இருக்கிறவர்கள், லாயர்களாக இருக்கிறவர்கள் தங்களுடைய வருமானத்தை உயர்த்திக்கொண்டே போவார்கள், கேட்டால் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லி பீசைக்கூட கேட்கிறார்கள், அது அம்மையார் அவர்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களுக்கு அனுதாபம்

காட்டவேண்டியதில்லை. சாதாரணமாக வாழக்கூடியவர்கள் வருமானத்தை வைத்து வாழ்க்கை நடத்தமுடியாத நிலையிலே உள்ளவர்கள் வாழ்க்கையிலே வறுமையால் திண்டாடிக்கொண்டிருக்கிறவர்கள், குழந்தைகுட்டிகளோடு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கின்றவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு எல்லாம் கார்டு வழங்கவேண்டும், குறிப்பிட்ட வருமானத்திற்கு மேலாக உள்ளவர்களுக்குக் கார்டு கொடுக்கவேண்டாம், அவர்கள் எங்காவது வாங்கட்டும். இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால் தான் நிலைமை சீர்படும். இல்லாவிட்டால் அரசியல் குழுறல் வரும், அப்படி வந்தால் ஆரோக்கியமில்லாத அரசியல் சக்திகள் அதைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படும்.

ஆகவே, தமிழகத்திலே மிக முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. இதிலே நீங்கள் சரக்கு போக்கு சொல்லக்கூடாது. அனுபவ பூர்வமாக அனு சர்வ கட்சியினருடைய ஒத்துழைப்பைப் பெற்று சில நகரங்களிலாவது கண்காணிப்புக் கமிட்டிகளை போட்டு நடத்தினால்தான் தீர்வு காணமுடியும். அஹமதாபாத் மற்ற இடங்களில் நடப்பதைப் போன்ற துர்பாக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடக்கூடாது.

தேசிய ஒருமைப்பாடுபற்றி பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் பேசுகிற தேசிய ஒருமைப்பாட்டிற்கே உலை வைக்கக்கூடிய பிரச்னை விலைவாசிப் பிரச்னை, நாட்டிலே ஒற்றுமைக்குக் குந்தகத்தை ஏற்படுத்தக்கூடிய பிரச்னை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலே சர்வ கட்சியினருடைய ஒத்துழைப்பைப் பெறக்கூடிய வகையிலே நீங்கள் ஏற்பாடுகளைச் செய்து பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இன்று இன்றியமையாப் பொருட்களுடைய விலைகளை வரையறுத்து நியாய விலையிலே அவையெல்லாம் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இது மிக மிக அவசியமானது, அவசரமானதும்கூட என்பதை வலியுறுத்தவிரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே ஏதோ பேசிவிடலாம், உலகத்திலேயே விலை ஏறிவிட்டது, அகில இந்தியாவிலேயே விலை ஏறிவிட்டது, தமிழகத்திலே விலையேறிவிட்டது என்று பேசலாம். ஆனால் எதற்குமே தமிழகம் வழிகாட்டியாக இருந்த மாநிலமாக இருப்பது வழக்கம். இன்றைக்கும் தமிழகம் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்ற முறையிலேதான் இந்தத் தீர்மானத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள், [illegible] எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற முறையிலே அவர்கள்



தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏன் தமிழகம் இதிலே வழிகாட்டி மாநிலமாக இருக்கக்கூடாது என்ற கேள்விக்கு சவாலுக்குப் பதிலாக அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சிகள் பேசுவதையெல்லாம் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அரசாங்கம் எடுத்துக்கொண்டு ஆற அமர நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும்.

விலைகள் எல்லாம் எப்படி ஏறியிருக்கின்றன என்பதைச் சட்டசபை உறுப்பினர் சொல்லி தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. தமிழகத்திலே உள்ள மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அத்தனை பேருக்கும் தெரியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கொஞ்ச காலத்திற்கு முன்னாலே படிப்படியாக ஏறிக்கொண்டிருந்த விலைவாசி இன்றைக்கு ஏரோப்ளேனிலே பறக்கிறது. கடந்த ஆண்டிலே 200 சதவீதம் 300 சதவீதம் விலை ஏறியிருக்கிறது. பருப்பு விலை, எண்ணெய் விலை, காய்கறி விலை எல்லாம் ஏறியிருக்கிறது. உயிரோடு உடல் ஒட்டிக்கொண்டிருந்தால் போதும் என்ற அளவிற்குக்கூட பொருள்கள் கிடைப்பதில்லை, வாங்கமுடியவில்லை. தேவையான பொருட்களைக்கூட மக்கள் வாங்கிக்கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

லக்ஷரி குட்ஸ், ஆடம்பரப் பொருட்கள் பற்றி கேட்கவேண்டிய கட்டத்தில் நாம் இல்லை. அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. உற்பத்தி என்ன பெருகாமலா இருக்கிறது? பத்து ஆண்டுக்காலத்திலே உணவு உற்பத்தி இருந்ததை விட இன்றைக்குப் பெருகி 73 லட்சம் உணவு உற்பத்தி என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு உற்பத்தியாகியும்கூட என்ன நிலைமையில் தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 45 லட்சம் டன்னாக இருந்த உற்பத்தி இன்றைக்கு அதிகமாகி ஆகி....

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் அரிசியைப்பற்றி மட்டும் சொல்கிறார்களா? அல்லது எல்லாப் பொருட்களின் உற்பத்தியும் ஜாஸ்தியாகியிருப்பதாகச் சொல்கிறார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உணவுப் பொருள்கள் என்று சொன்னேன். நீங்கள்தானே 73 லட்சம் என்று கொடுத்திருக்கிறீர்கள். சென்ற ஆண்டு மின்வெட்டு, மழையின்மை ஏற்பட்டதால் இப்பொழுது எதிர்பார்த்தது கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறோம் என்று உங்களுடைய கவர்னர் உரையிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஆகையால் 43 லட்சம் டன் அளவுக்கு உணவு உற்பத்தியை அதிகரித்திருந்தும் கூட இன்றைக்கும் நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. மட்டமான புழுங்கல் அரிசி ஒரு படி 2½ ரூபாய்; உயர்ந்த புழுங்கல் அரிசி ஒரு படி ரூ. 3-20; பச்சரிசி ஒரு படி ரூ. 3-40 க்குப் போகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவோம்; விலைவாசியைக் கிடு கிடு கிடுவென்று கீழே இறக்குவோம் என்றெல்லாம் சொன்னீர்கள்.

இன்றைக்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? 'பிரதமரைக் கலந்து கொண்டு உங்களுக்குப் பதில் சொல்லுகிறேன்' என்று இங்கிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன? எப்படி ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்க முடியும் என்று நாங்கள் கேட்டபோது, எங்களிடத்தில் ஆட்சியைக் கொடுத்துப் பாருங்கள், நடத்திக் காட்டுகிறோம் என்று சொன்னீர்கள். அப்படிச் சவால் விட்டீர்கள். ஆனால் இன்றைக்கு ஒரு படி அரிசி மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அதுவும் இரண்டு நகரங்களில் போட்டதையும் நிறுத்தி விட்டீர்கள். வங்காள தேசப் பிரச்சினை வரும்போது உங்கள் பிரச்சினையையும் தீர்த்துக் கொண்டீர்கள். நாங்கள் இனிமேல் போட மாட்டோம்; நாங்கள் நெருக்கடியில் இருக்கிறோம்; நாங்கள் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளப் போகிறோம்' என்று சொல்லி விட்டீர்கள். இப்போது மக்களுக்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? இதுவும் இந்திரா காந்தியிடம் கேட்டுத்தான் சொல்ல வேண்டுமா? எதற்கெடுத்தாலும் இந்திரா காந்தியிடம் கேட்டுச் சொல்லுகிறேன் என்ற அவல நிலை இருக்கிறது. சற்றுச் சுய மரியாதையோடு இயங்கிக் காட்டுங்கள்.

நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 8.80; தேங்காய் எண்ணெய் கிலோ 15 ரூபாய். ஒரு தேங்காய் விலை 1½ ரூபாய். எந்தக் காலத்தில் இப்படி விற்றது. திருத்துறைப்பூண்டி அங்கத்தினர் தெளிவாகச் சொல்லலாம். வக்கீல்களுக்கு என்ன, அவர்களுக்கு என்ன, இவர்களுக்கு என்ன என்றால் என்ன பொருள்? வக்கீல்கள் என்ன தேங்காய் உற்பத்தியா செய்கிறார்கள். வக்கீல்களும் விலை கொடுத்துத்தான் வாங்குகிறார்கள்.

திரு. எம். ஆர். கண்ணன்: இந்தச் சர்க்காருடைய எந்தக் கொள்கையின் அடிப்படையில் விலை ஏறி இருக்கிறது; மக்கள் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் கூறமுடியுமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: சொல்லத்தான் போகிறேன். கொஞ்சம் அவசரப்படாதீர்கள்.



காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 75 பைசாவுக்கு மேல் தேங்காய் விற்றது கிடையாது. அன்றைக்கு விலைவாசி ஏறிவிட்டது என்று கலெக்டர் ஆபீஸ் முன்னால் மறியல் செய்தீர்கள். 'இறக்கு இறக்கு விலைவாசியை இறக்கு' என்று கூறி மறியல் செய்தீர்கள். உங்களுக்கு அவ்வளவு மறதி இருக்கக்கூடாது. அரசியல் கட்சிகளுக்குக் கொஞ்சம் ஞாபக சக்தி இருக்கவேண்டும்.

தேங்காய் எண்ணெய் விலை 15 ரூபாய்க்கு எந்தக் காலத்தில் விற்றது? நம்முடைய தமிழகத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். ராஜஸ்தான், குஜராத் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அரசியல்வாதிகள் சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய மாகாணம். 75 பைசா தேங்காய் விற்ற அன்று நீங்கள் மறியல் செய்தீர்கள்; இன்று 1½ ரூபாய் விற்கிறதே.

திரு. என். இராசாங்கம்: திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது போராட்டம் நடத்தியது உண்மை. போராட்டம் நடத்திய காரணம் அன்று டில்லியில் ஆட்சி செய்த கட்சியும், மாநிலத்தின் அரசுப் பொறுப்பில் இருந்த கட்சியும் ஒரே கட்சியாக இருந்த காரணத்தால் மத்திய அரசிடம் கூறி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வகையில் செய்யப்பட்டது. நோட்டு அடிப்பது பண வீக்கத்திற்குக் காரணம் என்பது உலகமே அறிந்த முடிவு. அந்த அடிப்படையில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் விலைவாசியைக் குறைக்க முடியாது. இதுதான் பிரச்சினை.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: எட்டாயிரம் கோடி ரூபாய் பிளாக் மார்க்கட் மணியும் காரணம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பண வீக்கத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. டெபிசிட் பினான்சிங், ப்ளாக் மார்க்கட் போன்று பல இருக்கின்றன. அதே சமயத்தில் பொருள்விலை ஏறாமல் இருக்க திறமையாக அடக்க முடியும். ஒழுங்காக உற்பத்தி செய்து விநியோகம் செய்தால் சமாளிக்க முடியும்.

தமிழகம் இந்தியாவில் எடுத்துக்காட்டு மாகாணமாக இருக்க முடியும். விலைவாசி ஏற்றத்திற்கு அன்றைக்குச் சவால் விட்டவர்கள் இன்றைக்குக் கவலை இல்லாமல் இருக்கிறார்கள். மக்களிடத்தில் நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம்.

இன்றைக்குத் தேங்காய், கொத்தமல்லி, கருவேப்பிலை மற்றும் எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. விறகு குண்டு ஐந்து ரூபாய், ஐந்தேகால் ரூபாய் விற்கிறது. லிக்னைட் கரி நெய்வேலியிலிருந்து வருகிறது. மத்திய அரசு உற்பத்தி செய்கிறது. நீங்களே அதை வாங்கி விநியோகம் செய்து விலையைக் கட்டுப்படுத்துங்கள்.

தால் நாம் வாங்கி விநியோகம் செய்யலாம். கேரளாவில் விளைகிற தேங்காய்க்கு
இங்கே எப்படி நாம் விலை நிர்ணயம் செய்வது? அது மாநில அரசால் முடி
யாத ஒன்று.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பொருள்களின் விலைகளை நிர்ணயித்
திருக்கிறோம். காய்கறிகளும் கிடைக்கின்றன, சூப்பர் மார்கட்டில் விற்கிறார்
கள். உறுப்பினர் அவர்கள் அங்கே போய் வாங்கிக்கொள்ளலாம். உறுப்பினர்
அவர்கள் என்ன விலை என்று சொல்லவில்லை. விலை நிர்ணயித்திருக்கிறோர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரு அநியாயமான விலையை நிர்ணயித்து
விட்டு நியாயவிலை என்று பட்டியல் போடுகிறீர்கள். தேங்காய் எண்ணெய்
விலை கிலோ 15 ரூபாய், நல்லெண்ணெய் விலை கிலோ ரூபாய் 8.50 என்று
விற்கின்றன. காவேரியில் இருக்கிறது, காமதேனுவில் இருக்கிறது என்றும்
வெளிச்சந்தையைவிட கூட்டுறவு அங்காடிகளில் கொஞ்சமாவது வித்தியாசம்
இருந்தால் மக்கள் வாங்குவதற்குத் தயாராயிருக்கிறார்கள். நியாயமான
விலையை நிர்ணயித்து பொருள்களைக் கொடுக்க உங்களுக்கு மனம் வரவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: I got news yesterday that some controlled cloth that was allotted to Thanjavur Co-operative Stores was taken in a car. Unless there is efficient enforcement of rules and machinery to do it, there is no use of fixing the prices. What is the use of fixing the prices without proper machinery to enforce them?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is what I am asking. If you are not efficient to enforce them, there is no use in continuing. There is no use in enforcing orders. You must enforce the orders efficiently.

(Thiru K. M. Subramaniam rose)

MR. DEPUTY SPEAKER: She is interrupted too much. I doubt whether the hon. Member is considering himself as a Minister. He is asking clarifications and other things.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆகவே, நியாயமான விலை நிர்ணயிப்பது
பெரிதல்ல. உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி விலை நிர்ணயித்து
விட்டால் கட்டாயம் பொருள்கள் பறந்துவிடும். [illegible]



கிடையாது. அப்படி நிர்ணயிப்பதற்கு முன்னர் பொருள்கள் பறந்துபோய்
விடாமல் அதை மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடிய அளவிற்கு அதைப்
ப்ரொக்யூர் செய்து கூட்டுறவு அங்காடிகள் மூலம் நியாயமான முறையில்
நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு வழி செய்யவேண்
டும். பெயர் ப்ரைஸ் ஷாப்ஸ் என்று சொல்லி, With all unfair prices
ஒரு ஷாப் திறக்கிறோம். அந்த நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் ஒழுங்
கான முறையில் விநியோகம் செய்யப்படவில்லை.

இப்போது கூட்டுறவு அங்காடிகளில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
கூட்டுறவு அங்காடிகளின் நிலை இன்று அதைவிட மோசமாக இருக்கின்றது.
கேட்டால் சொல்கிறார்கள், நாங்கள் பல பால் குடங்கள் வைத்திருக்கிறோம்,
ஒரு குடத்தில் ஒரு துளி விஷம் இருக்கிறது, மற்றப் பால்குடங்கள் எல்லாம்
சரியாகத்தான் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இருக்கிற 90 சதவிகித
பால் குடங்களிலும் விஷம் விழுந்திருக்கிறது. ஒரு இடம் அல்ல, இரண்டு
இடங்கள் அல்ல. கேட்டால் உணவு அமைச்சர் அவர்கள் எங்கே நடந்தது,
எப்படி நடந்தது என்று சொல்லுங்கள் என்று சொல்வார்கள். விநியோகம்
சரியானமுறையில் நடக்கவில்லை. பல மாவட்டங்களிலும் நியாயவிலைக் கடை
களில் நியாயமான விலையில் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய ரேஷன் பொருள்
கள் கிடைக்கவில்லை என்று மக்கள் அன்றாடம் குறை சொல்லிக்கொண்டிருக்கி
றார்கள். கூட்டுறவு அங்காடிகள் மூலம் விநியோகம் செய்தால் ஒழுங்காக நடக்
கின்றனவா என்றால் அங்கும் இந்தத் தகராறுதான்.

திருத்துறைப்பூண்டி உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் மிக அழகாகச்
சொன்னார்கள். சர்வகட்சிக் கமிட்டி போடுங்கள் தாலுகா அளவில் அல்லது
மாவட்ட அளவில், அப்படிப் போட்டு கூட்டுறவு அங்காடிகள் மூலம் பொருள்
கள் ஒழுங்கானமுறையில் விநியோகிக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும்.
சர்க்கரைக் கார்ட் இருக்கிறது, சர்க்கரை கிடையாது, உரத்திற்கான கார்ட்
இருக்கிறது, உரம் கிடையாது, கார்ட் இருக்கிறது நூல் கிடையாது.
(குறுக்கீடு) கார்ட்க்கு உரிய பொருள்கள் ஒழுங்காக விநியோகிக்கப்படுகின்
றனவா என்று கண்காணிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சர்க்கரை இல்லை என்றால்
உற்பத்தியாகிற சர்க்கரையில் பாதியை அவர்கள் எடுத்துக் கொண்டுபோய்
விடுகிறார்கள். கிடைக்கவில்லை என்றால், இந்திரா அம்மையார் அவர்களைத்தான்
கேட்கவேண்டும் ஏன் கிடைக்கவில்லை என்று. உற்பத்தியாகிறது. எல்லாவற்
றையும் விட்டு விட்டு, இப்படிப் பேசிக்கொண்டிருந்தால், எப்படி?

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தெந்த மாநிலங்களில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை ஏற்கனவே சொன்னேன். அஸ்ஸாமில், மகாராஷ்டிராவில், கேரளத்தில் செய்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. உரம் போன்றவற்றையும், எசென்சியல் கமாடிடிஸ் என்று மத்திய பிரதேசத்தில் டிக்ளேர் செய்து விலையைக் குறைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதையும் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆகவே, அந்தமாதிரியாக அவர்கள் அன்று செய்ததைத் தமிழ்நாடு சர்க்காரால் ஏன் செய்யமுடியவில்லை என்று கேட்கிறேன். அவர்கள் அன்று கேட்டு வாங்கியதை நீங்கள் ஏன் கேட்டு வாங்கவில்லை,

I do not want to score any debating point.

அந்தமாதிரி ஒரு நிலை இருக்கிறது. அப்படி ஏதாவது நீங்கள் இங்கே விலை நிச்சயம் செய்தீர்களா? என்னென்ன பொருள்களுக்கு நீங்கள் இங்கு விலை நிச்சயம் செய்தீர்கள்? இன்னின்ன பொருள்கள் இன்னின்ன விலைக்குத்தான் விற்க வேண்டுமென்று சொன்னீர்களா? அப்படிச் சொல்லி அதற்கு ஏதாவது ஆட்சேபனை ஏற்பட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மகாராஷ்ட்ராவில் 11 பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்தார்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி நிச்சயம் செய்ததில் ஒரு பொருள் கூட கிடைக்கவில்லை என்று அந்தக் கொள்கையை விட்டு விட்டார்கள்.

கேரளாவில் கூட [illegible] கூட அங்குள்ள புட் செகரட்டரியிடம் பேசிக்கொண்டிருந்தேன். தேங்காய் எண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்து விட்டு அப்படி நிர்ணயித்த நான்கு நாட்களில் எங்கள் மாநிலத்தில் தேங்காய் எண்ணெயே இல்லாது போய்விட்டதால் அதைக் கைவிட்டுவிட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

கடலை எண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்கிறோம். அதை அவர்கள் மறுக்கிறார்கள் என்ற அந்த விளக்கத்தை நான் பல முறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்படிக் [illegible] பற்றி ஒரு முறை கூட தவறிக்கூட பேச மாட்டேன் [illegible]. அவர்கள் நாங்கள் கேட்டும் [illegible] என்பதற்கு எங்கள் மீது [illegible] வேண்டுமென்றே நீங்கள் செய்கிறீர்கள்.



திரு. கே. டி. கே. தங்கமணி: கேரளாவில் தேங்காய் எண்ணெய்க்கு விலை நிச்சயம் செய்ய முடிகிறது. அப்படி அவர்கள் செய்யும்போது இங்குக் கடலை எண்ணெய்க்கு ஏன் விலை நிச்சயம் செய்யக்கூடாது? அப்படி நிச்சயம் செய்ததற்குப் பிறகு சாமான்கள் போய்விட்டன என்றால் அது வேறு விஷயம். நிச்சயம் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. அதேமாதிரி இங்கே கடலை எண்ணெய்க்கு இங்கே நீங்கள் விலை நிச்சயம் செய்யுங்கள். இன்ன விலை என்று அறிவியுங்கள், எப்படிக் கிடைக்கிறது என்று பார்ப்போம். கேரளாவில் அப்படி அறிவிக்க அனுமதித்த மத்திய சர்க்கார் உங்களுக்கு அப்படி அறிவிக்க அனுமதிக்காமல் இருந்தால் அன்றைக்கு நாம் பார்ப்போம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேரளாவிற்கு அனுமதி கொடுத்து மத்திய அரசு தமிழகத்திற்குக் கொடுக்கவில்லை என்றுதான் சொல்கிறோம். அப்படிக் கொடுக்கவேண்டுமென்றுதான் சொல்கிறோம். முக்கியமான பிரச்னை விலை நிர்ணயிப்பதுபற்றியதாகும் என்று சொன்னார்கள். ஒரு பொருளின் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசின் அனுமதி பெற்று நிர்ணயிப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பொருள் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்து அப்பொருள்கள் மக்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டன என்பது கேரளா, மகாராஷ்ட்ரா மாநிலங்கள் விலை நிர்ணயம் செய்து பொருள்கள் கிடைக்காமல் போய் விட்டன என்பது நமக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு பாடம். அந்தப் பாடத்தைப் படித்து தெரிந்து கொண்ட பிறகுகூட அதைப் புரிந்துகொண்டு நடக்கவில்லை என்றால் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட சங்கடமானதொரு நிலை ஏற்படும். அப்படிப் பட்ட சங்கடமானதொரு நிலை ஏற்படாதா என்று சில கட்சிகள் எதிர்பார்த்தால் அதற்கு இந்த அரசு இடம் கொடுக்காது.

திருமதி த. நாவுக்கரசி [illegible]: ஒரு சங்கடமான நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள இந்த வாதத்தை எழுப்பலாமே தவிர விலையை நிர்ணயிப்பது என்பதோடு கூட அந்தப் பொருள்கள் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் ஒழுங்காக விநியோகிக்கும் திறமையையும் வைத்துக்கொண்டு விலையையும் நிர்ணயம் செய்யலாம் விநியோகமும் செய்யலாம். கேரளா அல்ல, மகாராஷ்டிரா அல்ல, தமிழ்நாடு சிறந்த மாநிலம் . . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அரிசி உற்பத்தி செய்கிறோம். நம் தேவைக்கு அதிகமாக இருக்கிறது. [illegible] மூலம் கொடுக்கிறோம். ஆனால், அவாம் பருப்பு வெளி மாநிலங்களில் இருந்து வர வேண்டியிருக்கிறது. அங்கே ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால் இங்கே எப்படி விலை நிர்ணயம் செய்வது? மத்திய அரசு விலை நிர்ணயித்துக்கொடுத்

நம்முடைய நாட்டு மக்கள் கேட்பது என்ன? உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம், எங்களுக்கு இரண்டு வேளை சோறு கிடைக்கச்செய்யுங்கள், நியாயமான விலையில் என்று தான் சொல்கிறார்கள். ஆகவே, விலையைக் கட்டுப்படுத்த விநியோக முறையைச் சரிசெய்யுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் தைரியமாக பல நடவடிக்கைகளை எடுத்தால் கட்டாயமாக நாம் உண்மையாக நேர்மையாக மக்களுக்கு எல்லாப் பண்டங்களையும் கொடுக்க முடியும்.

சர்க்கரை கிடைக்கவில்லை என்று சொன்னால், இந்திரா காந்தி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். கொடுத்து இருக்கிற சர்க்கரையை சரியாக விநியோகிக்காமல் இப்படிப்பட்ட பதிலைச் சொல்லி அரசாங்கம் தப்பித்துக்கொள்ளும் அவல நிலைமை இருக்குமானால், மக்கள் அதற்குத் தக்க பதிலை, தக்க நேரத்தில் தருவார்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 35 நிமிடங்கள் இருக்கின்றன. டாக்டர் ஹாண்டே, நீங்கள் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: 10 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

**DR. H. V. HANDE**: Hon. Deputy Speaker, Sir we have been watching a very fairly interesting exchange of words between different sections of the House, one section blaming the Central Government and another section blaming the State Government. But my submission is that both the Governments are at fault, a grievous fault, for the tragic situation that we are facing in our State, namely, the high spiralling of prices of essential commodities. It is in this context that my distinguished Friend, Thiru K. T. K. Thangamani, has brought forward the Non-official Resolution and that is what I surmise.

It is the unscientific policy of the Central Government that is to a great extent responsible for the spiralling of prices. At the same time the defective distribution machinery of the State



Government is also responsible for the chaotic condition that is being watched, felt and suffered by the public, especially middle classes and poor classes. Unless the whole thing is properly viewed in proper perspective and actually treated on a war rooting, we will not be able to solve this problem. In fact the middle classes have been ground to a fine powder by the spiralling prices on the one side and the population explosion on the other.

Now, I would confine myself to certain constructive suggestions which will be possible for the State Government to adopt.

One of them is increased mass scale production of essential commodities. I expect the Hon. Minister, Thiru Mannai Narayanaswamy to reply to this point. He must be able to guide the House or give some guide-lines as to the methods the State Government are going to adopt to increase the production of essential commodities on a mass scale and that will to a certain extent alleviate the suffering of our poor people. But he has not so far disclosed the methods he is going to adopt and he has kept them as top secret. He must inform the House the method he has got to streamline the distribution of essential commodities.

Time and again in this House, we have mentioned facts and figures to show that essential commodities are not properly distributed, whether they are fertilisers or foodgrains. So, we have to streamline the distribution of foodstuffs.

Now, I would like the Hon. Minister to address himself to the credit squeeze which has been touched here and there by a few hon. Members. Unless a selective credit squeeze policy is adopted by the Central Government, we cannot increase the production of basic commodities. So, it is the duty of the State Government to impress upon the Centre that the selective credit squeeze policy must be adopted.

Now what happens is, a blanket credit squeeze is adopted which has only helped the blackmarketeers who have influence with the Central Government and the Banks. They are able to borrow at low interest and charge higher interest to others. The small-scale industrialists do not get any help. Now the entire small-scale industry has come to a grinding halt.

The Hon. Minister for Industries is not here. The production in the small-scale sector has been affected and they have been completely ruined. No statistics are being collected by the Government. What is the Department doing? They must collect statistics and impress upon the Centre that the blanket credit squeeze policy should not be adopted.

With regard to fertilisers, the cost of fertilisers has gone up. Even the Hon. Chief Minister has stated the other day that they could get only half the quantity of fertilisers asked for. Even that quantity is not properly distributed. I have got proofs to show that farmers have to get it at blackmarket price.

The other day a couple of persons from a village near Maduravayal gave me facts and figures. One particular shopkeeper who is a graduate has been given the quota for sale of fertilisers. He writes post-cards to the cardholders . . .
ஒரு கார்டு எழுதியிருக்கிறார்கள். அந்த கார்டுஹோல்டர்ஸ்லோட நெம்பரெல்லாம் அவர் வைத்து இருக்கிறார். கடை வைத்து இருப்பவர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர். அவர் ஒரு பட்டதாரி. அவர் கார்டு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அந்தக் கடை பெயரைச் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அவர் கையால் கையெழுத்துப் போட்டது, ஜெயசேகர், 24, வேலன் நகர், கோயம்பேடு. அந்தக் கடிதத்துடன் சென்றபொழுது, அந்த விவசாயிக்கு கடை முதலாளி சொல்கிறார், உரிமையாளர் சொல்கிறார். 'தாங்கள் ரூ. 61-க்கு உங்களுக்குக் கொடுக்க முடியாது. ரூ. 130 கொடுத்தால்தான் கொடுக்க முடியும்' என்று பச்சையாக பகிரங்கமாகச் சொல்கிறார்.

I may bring it to the attention of the Hon. Minister. I have got concrete examples at my disposal. The persons who have complained are prepared to come and prove it.

(திரு. வீராசாமி எழுந்திருந்தார்)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சந்தேகத்திற்கு இடமில்லாமல் நான் சொல்லி முடித்துவிடுகிறேன். நேரம் இல்லை. இல்லாவிட்டால் மீல்டு பண்ணுவதற்கு தயாராக இருக்கிறேன்.



MR. DEPUTY SPEAKER: Since it is private members' day, it is tradition to allow any member to have his views cleared.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்ததாகச் சொன்னாரே அந்தக் கடிதத்தில் ரூ. 130 கொடுத்தால்தான் உரம் இருக்கிறது என்று அப்படி ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா? உரம் வாங்குகிறவர்கள் எப்படியும் சொல்லலாம். அந்தக் கடிதம் இருக்கிறது என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், அந்தக் கடிதத்தில் ஒரு மூட்டைக்கு ரூ. 130 கொடுத்தால்தான் உரம் கொடுக்கப்படும் என்று ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நீங்கள் கேட்கக்கூடிய கேள்வி மறைமுகமாக கடை உரிமையாளருக்கு சாதகமாக இருக்கலாம். (திரு. வீராசாமி எழுந்திருந்தார்). நான் பேசி முடித்து விடுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** ஒரு நோக்கம் கற்பிக்கக்கூடாது. கடைக்காரருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவர் ஏதோ திண்டிவனம், மதுராந்தகம் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நீங்கள் ஒருவருக்கொருவர் குறுக்கே பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. சட்ட விரோதமாகச் செய்தால், சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்றால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கமுடியும். நிச்சயம் அதைப்பற்றி நடவடிக்கை எடுப்போம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் உண்மையாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். மதிப்பிற்குரிய வீராசாமி அவர்கள். . . (திரு. வீராசாமி எழுந்திருந்தார்) நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு யீல்டு பண்ணுகிறேன்.

இப்பொழுது அவர்கள் எடுத்துரைத்த வாதம் மறைமுகமாக கடை உரிமையாளருக்கு சாதகமாகப் பயன்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகச் சொல்கிறேன். அவர்களுக்கு உள்நோக்கம் கற்பிக்கவில்லை. நான் ஒன்று சொல்கிறேன். கடைக்காரர் எழுதுகிறார் உரம் இருக்கிறது என்று, விவசாயிகள் வருகிறார்கள். அப்படித்தான் அவர்களை வரவழைக்கிறார்கள். கடைக்கு வந்ததற்குப் பிறகு ரூ. 130 கொடுத்தால்தான் வாங்கிக்கொண்டு போகலாம் என்று சொல்வார். எந்தக் கடைக்காரனும் மடையன் அல்ல, அந்தக் கடிதத்திலேயே உரத்தின் பிளாக் மார்க்கெட் விலை ரூ. 130 என்று எழுதுவதற்கு.

நான் இப்பொழுது என்ன சொல்கிறேன் என்றால், அவர்கள் எனக்கு வந்து குற்றச்சாட்டைக் கொடுத்தார்களே, அவர்களுடைய விலாசத்தை நான் இங்கே எழுதி வைத்திருக்கிறேன். எந்த நேரத்தில் அமைச்சர் கூப்பிட்டா லும் கூட, நாங்கள் சாட்சியம் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கூப்பிட்டால் நாங்கள் வருகிறோம் என்று கூறியிருக் கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் இது ஒரு துளி விஷம் குடப் பாலில் கலந்திருக்கிறது. அன்றைக்கே முதல் அமைச்சர் உரத்தைப்பற்றி கூறும்பொழுது, இந்த ஆதாரங்களெல்லாம் என் கையில் இருந்தது. அந்த நேரத்தில் குறுக்கிடவேண்டாம் என்று இருந்தேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு குடம் கிடையாது, பல குடங்கள். மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் பல குடங்களில் இருக்கக்கூடிய விஷம் என்று சொன்னார்கள். திட்ட வட்டமாக அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

நீங்கள் விற்கக்கூடிய நிலைமையை ஸ்ட்ரீம்லைன் செய்யுங்கள். டிஸ்ட்ரி பியூஷன் பாலிசியை ஸ்ட்ரீம்லைன் செய்யுங்கள். அதைச் செய்யாவிட்டால் நீங்கள் அரைகுறையாகப் பண்ணுகிறீர்கள். உங்களுக்குக் கிடைக்கின்ற உரம் போதாது, ஒத்துக்கொள்கிறேன். அதற்காக மத்தியசர்க்காரோடு வலிமை யாகப் போராடுங்கள். நானும் உங்களோடு சேர்ந்து தாக்கத் தயாராக இருக் கிறேன். ஆனால் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய உரத்தை சரியாக கொடுக்க வேண்டும். அது உங்கள் பொறுப்பு. அதற்காகத்தான் ஸ்பென்லோ அண்டு ஜார்கின்ஸ் உபமானத்தைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நீங்கள் சொல்கின்ற தனி யார் ஏஜெண்டுக்கும் நமக்கும் சம்பந்தம் கிடையாது. பூல் ஸ்டாக் பூராவும் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகம் செய்கிறோம். தனியாருக்குக் கொடுக் கப்படுவது மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது. 66-2/3% உள்ளதை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர் அவர்களுடைய ஏஜெண்ட். அதற்கு அவர்கள்தான் ஜவாப்தாரியே தவிர வேறு இல்லை. நடவடிக்கை எடுக்கிறேன் என்றால், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக விற்றார்கள் என்று எங்கள் கவனத்திற்கு வருமேயானால், அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அதி காரம் உங்களிடம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உங்கள் உதவிக்காகச் சொல்கிறேன். நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் மட்டுமல்ல. முதல் அமைச்சர் அவர்கள் அன்றைக்கே விளக்கம் ஒன்று சொன்னார்கள்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வழக்குத் தொடருவதற்கு அதிகாரம் இருக்கிறதே தவிர. அதிக விலைக்கு விற்றார்கள் என்றால், கான்பிஸ்கேட் பண்ணி எடுத்துக்கொள்ள வேறு ஒரு வருக்குக் கொடுப்பதற்கோ அல்லது ஏஜன்சியை ரத்து செய்வதற்கோ அதிகா ரம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அந்த அதிகாரத்தையாவது பயன்படுத்த வேண்டும் என்று உங்களிடம் நான் சொல்கிறேன். இருக்கக்கூடிய அரைகுறை அதிகாரம் என்று சொல்கிறீர்களே, அந்த அதிகாரத்தையாவது பயன்படுத் தினால் நன்றாக இருக்கும்.

இரண்டாவதாக, நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஒரு மசோதா இங்கே. . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதே மன்றத்தில் நேற்று ஒரு மசோதா சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிக அதிகாரம் எடுத்துக்கொள்ள உங்களுக்கும் அதிகாரம் இருக்கிறது. சரக்குகளை எடுத்துக்கொள்ள. . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** வாகனத்தைப் பிடித்து அதைக் கொண்டுபோய் மாஜிஸ்டிரேட்டிடம் கொடுத்தோம் என்றால், வாக னத்தை விட்டுவிடுகிறார்கள். நீதிமன்றத்தில் வழக்குப்போடுவது என்றால், அதிலே கலெக்டர் பொருளை மட்டும் தான் எடுத்துக்கொண்டு வழக்குப் போட உரிமை இருக்கிறது. வாகனத்தை பறிமுதல் செய்வதற்கு கலெக்டருக்கு அதிகாரம் வாங்கித் தருவதற்கு சட்டத்தில் திருத்தம் கொடுத்திருக்கிறோம். பிடிக்காமல் இல்லை. பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு பிடித்திருக்கிறோம். அதைப்பற்றிய விவரம் பின்னால் சொல்கிறேன். அதற்கு நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அந்த அதிகாரத்தை சரியான வகையிலே பயன்படுத்தவேண்டியது நம்முடைய மாகாண சர்க்காரின் கடமை என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். பல இடங்களிலே சரியான வகையிலே, திறமையான வகையிலே இந்த அதிகா ரத்தைப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் சொல் வதற்குத்தான் இந்த ஆதாரத்தைச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. அந்த ஆதாரத்தின் மூலம் நீங்கள் செய்யவேண்டிய அளவுக்கு உங்கள் கடமைகளைச் செய்ய தவறிவிட்டீர்கள் என்று தான் நான் சொல்கி றேன். வேறு ஒன்றும் கிடையாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்திரா அம்மையார், அவர்கள் சர்க்கரையை எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்றால் மற்ற மாநிலங்களுக்கு நீங்கள் போகாமலா இருக்கிறீர்கள். சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகிறது, அதை நாம் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கமாட்டோம் என்றால். . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சர்க்கரை கிடைக்கவில்லை என்று சொன்னதற்காகச் சொன்னேன். இதை விட்டுவிட்டு வேறுவகையில் பேசுவது என்பது, அப்படி பேச்சை மாற்றக்கூடாது. தட்டுப்பாட்டிற்குக் காரணம் மாநிலத்தில் உற்பத்தியாகிற சர்க்கரையில் பாதியை அவர்கள் எடுத்துக்கொண்டு பாதிதான் தருகிறார்கள். ஆகவே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்கவேண்டியதுதான். யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. மனிதாபிமானத்தோடு நாம் கஷ்டப்பட்டாலும் கூட மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கொடுக்கிறோம். ஆகவே இப்படி திருப்பிப் பேசக்கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கார்ட்--க்கு இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு கிலோ என்று கொடுக்கிறீர்களே, அது ஒழுங்காக விநியோகம் ஆகவில்லை என்றுதான் சொல்கிறேன். நீங்கள் கொடுக்கிற சர்க்கரை தேவைக்கு ஏற்ப கொடுக்கவில்லை. இந்திரா காந்தி அம்மையார் எடுத்துக்கொண்டு போவது இருக்கட்டும். கொடுப்பதை ஒழுங்காகக் கொடுங்கள். இந்திரா காந்தி அம்மையார் எடுத்துக்கொண்டுபோக இருப்பதையாவது நீங்கள் ஒழுங்காகக் கொடுத்தால் பரவாயில்லை.

விநியோக முறையில் தவறுகள் நடக்கின்றன. எல்லாவற்றையும் அதிகாரிகளிடம் கொடுத்தாலும் ஒழுங்காக நடத்தமுடியாது. அதிகாரிகள் அதைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. ஏதோ சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டிருந்தால் மக்கள் என்ன செய்வார்கள்?

ஒருவேளை சாப்பாடு கூட சாப்பிடமுடியாத அளவிற்கு மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் எல்லாப் பொருள்களின் விலையும் ஏறி விட்டது. அரிசி விலை கூட ஏறிவிட்டது. உணவுப்பொருள் உற்பத்தி பெருகியிருந்தும் இம்மாதிரி நிலை தமிழ்நாட்டில் இருப்பது சரியல்ல. ஆகவே உற்பத்தியை நாம் மேலும் பெருக்கவேண்டும்.

ஏன் துவரம் பருப்பை இங்கு பயிர் செய்ய முடியாது? கடலையை ஏன் இன்னும் அதிகம் பயிர் செய்யக்கூடாது? ஆயில் வித்துக்களை ஏன் நாம் அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியாது?





ஒரு சமயத்தில் எல்லாவற்றிற்கும் தீவிர திட்டம் என்று போட்டு உதவி செய்கிறோம். பிறகு எல்லா திட்டத்தையும் எடுத்து விடுகிறோம். இவைகளால் விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். நமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்தி செய்வதற்கு தமிழகத்திலே வழி இருக்கிறது. பிற மாநிலங்களை எதிர்நோக்கி இருக்கவேண்டிய தேவையில்லை. இந்தியாவிலேயே பஞ்சாப், ஹரியானா மாநிலம் தான் முதலிடம் பெற்று இருக்கிறது. அதே போல் தமிழகமும் பெற்று இருக்கிறது, குறைந்த அளவு இயற்கை வளத்தை வைத்துக் கொண்டு சிறந்த அளவில் நாம் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். இன்னும் நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்து, அதன் மூலம் மக்களின் துயரை துடைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு லிக்னைட் கோல் கூட 18 ரூபாய் விற்கிறது. கிடைப்பது கூட கடினமாக இருக்கிறது. இதன் விலையையும் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

கேட்டில் பாடர், மற்றும் பல பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். வெறும் கடலை எண்ணெய் என்று மட்டும் பேசிக்கொண்டு இருக்காதீர்கள். விலையை நிர்ணயித்து பொருள்களை கூட்டுறவுத் துறையின் மூலம் ஒழுங்காக விநியோகம் செய்யுங்கள்.

கூட்டுறவுத் துறை ஒழுங்காக செயல்படவேண்டுமானால், அங்கே ஏதேனும் தகராறு என்றால் உடனடியாக அங்கே நடவடிக்கை எடுக்க உங்களுக்கு தைரியம் வேண்டும். தஞ்சாவூர் மல்டி-பர்பஸ் கோவாபரேடிவ் சொசைடியில் 1¼ லட்சம் ரூபாய்க்கு கோணிப்பை காணாமல் போயிருக்கிறது. புகார் பட்டியலில் கூட அதைச் சேர்த்துக் கொடுத்திருந்தார்கள். என்ன பதில் கொடுத்தீர்கள்? அங்கேயுள்ள டைரக்டர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள், ஆகவே நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எப்படி மக்களுக்கு கூட்டுறவுத்துறை மூலம் நம்பிக்கை வரும்?

கிடைப்பதை சரியான முறையில் விநியோகிக்கவேண்டும். தமிழ் நாட்டிலே தான் கன்சூமர் கோவாபரேடிவ் சொசைடிகள் நல்ல முறையில் ஆரம்பித்து இருக்கிறோம். அவற்றை சரியான முறையில் நடத்தி, அதன் மூலம் உணவுப்பொருள்கள் விநியோகம் செய்தால் மக்களுக்கு நல்ல விதத்தில் தன்மை ஏற்படும். இன்று இருக்கும் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் வசதியாக இருக்கும்.

Prices of commodities sold in the fair price shops should be brought down. More commodities like oil, pulses, firewood, etc., should be distributed through these shops and more such shops should be opened.

இன்னும் ஏராளமான ஷாப்கள் துவக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

An announcement from the Civil Supplies Department as to what is available that month per card holder should be displayed in the fair price shops. This will also help to eliminate, to some extent at least, the corrupt practice by the shop-keepers.

Since at present there is no day fixed for the supply of ration items, people are asked to come every other day to the shop only to return empty-handed.

"நாளைக்கு வாருங்கள், நாளைக்கு வாருங்கள்" என்று சொல்கிறார்கள். எனவே, எந்தெந்த நாளைக்கு வரவேண்டுமென்று தெளிவாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

அடுத்து, வெயிட்ஸ அண்டு மெஷர்ஸ்—சரியாக இருப்பதில்லை. அவற்றை பாக்கெட்டில் போட்டு கரெக்டான முறையில் கொடுத்தால் பொருள்கள் சரியான வகையில் இருக்கும்.

அடுத்து ஷுகர் கோட்டா—ஏழை மக்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்களுக்கு அதிகமாக தந்து விடுகிறார்கள், ஏழை மக்கள்—பெரிய குடும்பம் உள்ளவர்களுக்கெல்லாம்—குறைவாகக் கொடுக்கிறார்கள். ஆகவே இந்தக் குறைகள் எல்லாம் எந்த முறையில் இருக்கின்றன என்று பார்த்து அவர்களுடைய குறைகளை சீக்கிரம் தீர்த்து வைத்தால் நன்றாக இருக்குமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கனம் உறுப்பினர்கள் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாடு தீர்மானத்திலே நல்ல விளக்கங்கள் எல்லாம் தந்திருக்கிறார்கள். இந்தக் கொள்கைகளை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று பெரியவர் மணலி அவர்கள் சொன்னார்கள். எந்தக் கொள்கை நல்ல கொள்கையாக இருந்தாலும் அதிலே தீவிரம் காட்டுகின்ற கட்சி எங்கள் கட்சி என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற அதிகாரத்தை எப்படி பயன்படுத்தினால் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்ற ஒரே குறிக்கோளிலே தான்



செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். குறைகளைப் போக்குவதில் எங்களுக்கு மட்டும் பொறுப்பு அல்ல. எதிர்க் கட்சியாக இருக்கக் கூடியவர்களுக்கும் பொறுப்பு அதிகமாகத் தேவை.

பொதுவாக எல்லோரும் சேர்ந்து உண்மையை பேசி, மக்களுக்கு நன்மை பயக்கத்தக்கவைகளை செய்ய வேண்டும். அன்னத்தில் பின்னத்தை கலப்பது போல என்ற முறையில் பாதகர்கள் செய்துவருகிறார்கள். அதையெல்லாம் சமாளித்து, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஒரு சர்க்கார் எடுக்கின்ற நடவடிக்கைகளை பாராட்ட வேண்டும். குறைபாடுகள் இருந்தால், எடுத்துக் காட்டினால் அவற்றை அகற்ற வேண்டியது ஆளுங்கட்சியின் பொறுப்பு. இந்த மனித பண்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை விட்டு, ஏதோ தங்கள் பேச்சின் திறமையால், "ஆறு கிலோ சர்க்கரைக்கு இவ்வளவு கொடுக்கப்பட்டது, வெறும் அட்டையோடு திரும்பி வந்து விட்டேன் என்றெல்லாம் அலங்காரமாகச் சொல்வது ஏதோ பத்திரிகை விளம்பரத்திற்குப் பயன்ப[illegible] தவிர, நடைமுறைக்கு ஒத்துவராது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, நான் எனக்குக் கொடுக்கப்பட்டதைச் சொல்லவில்லை. ஊரில், மக்களுடைய பிரச்னையைத் தான் சொன்னேன். அது மட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் எப்போதும் நான் சொன்னதைத் தான் பெர்சனலாக எடுத்துக் கூறுகிறார்கள். அது ஏனென்று தெரியவில்லை . . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நானும் உங்கள் கவலையைப் பற்றி சொல்லவில்லை. மக்களைப் பற்றித் தான் கவலைப் படுகிறேன். அவர்கள் பேசியதால் பதில் சொல்லித் தான் தீரவேண்டிய நிலையில் இருப்பதால் இதைக் கூறினேனே தவிர வேறல்ல. சர்க்கார், எல்லாவற்றையும் நிர்ணயிக்க வேண்டுமென்று அக்கறை காட்டுகிறோம். இருந்தாலும் எங்களுக்குள்ள அதிகாரத்தைப் பற்றி நிரம்ப சொல்லியாகி விட்டது. மாநில சர்க்காருக்குள்ள அதிகாரம் என்னென்ன இருக்கிறதோ, அவற்றை வைத்துக்கொண்டு எந்தெந்த காரியங்களைச் செய்ய முடியுமோ அதை பயன்படுத்திக்கொண்டு செய்து வருகிறோம்.

திரு. தங்கமணி அவர்களின் தீர்மானத்திற்கு முன்னதாக நாங்களே, விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, வியாபாரிகளை எல்லாம் கூட்டி, அவர்களிடம் பேசிப் பார்த்தோம். எந்த அளவுக்கு மற்ற மாநிலங்களில் விலைகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்தோம்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 சனவரி 30

மகாராட்டிரத்தில் 22 பொருள்களின் விலையை நிர்ணயித்து கட்டுப்பாடு செய்தார்கள். விளைவு, அந்தப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்காத காரணத்தால், அந்தத் திட்டத்தையே கை விட்டு விட்டார்கள்.

கேரளா மாநிலத்தில் எண்ணெய்ப் பிரச்னையில் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அங்கே தேங்காய் எண்ணெயே கிடைக்கவில்லை. திட்டத்தையே கை விட்டு விட்டோம் என்று நேற்றைய முன்தினம் கேரள அரசாங்க செயலாளர் என்னிடம் சொன்னார்கள். அந்த அளவுக்கு அங்கே எல்லாம் எந்த திட்டத்தையும் வைத்து விலையை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு ஒரே காரணம், எந்தப் பொருள்களைக் கட்டுப்படுத்துகிறோமோ, அந்தப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்காமற் போய்விடுகிறது.

குறிப்பாக, இந்த அரிசியைப் பொறுத்த வரையில் நமது மாநிலத்தில் உற்பத்தி ஆகிற அரிசியை எந்தெந்தப் பகுதியிலிருந்து என்று நிர்ணயித்து எந்தெந்த ஜில்லாக்களுக்கு, எந்தெந்த தாலுக்காக்களுக்கு அரிசி[illegible] வேண்டுமென்று விலையை நிர்ணயித்து தேவையான அரிசியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று போட்டிருக்கிறோம். தடைகள் ஏதுமில்லாமல் மிகச் சிறப்பாக இந்த மாநிலத்தில் மட்டுமின்றி மற்ற மாநிலங்களுக்கும் கொடுக்கிறோம். மாநில சர்க்கார் தான் தவறு செய்கிறது, அதிகாரத்தை பயன்படுத்தவில்லை என்று பொதுவாகச் சொன்னால் போதாது. எந்த மாநிலத்திலே அதற்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, இந்த மாநிலத்தில் உள்ள அரிசியின் விலையை விட அங்கே அரிசியின் விலையைக் குறைத்திருக்கிறார்கள்? எந்த மாநிலத்திலே இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு மற்ற பொருள்களின் விலைகளைக் குறைத்திருக்கிறார்கள்? என்ற பிரச்னைக்கு இதுவரையில் யாரும் பதில் சொல்லவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக மாநில சுயாட்சியை குறை சொல்கிறார்கள். இந்திரா காந்தியிடம் கேட்பது தவறு. அது இந்திரா காந்தியின் செல்வாக்கை வளர்த்து விடுவது ஆகும், அது தப்பு என்ற முறையிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில சுயாட்சி பிரச்னை பேசப்பட்டது. அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம்.

உதாரணமாக, நிலக்கடலை லெவி 25 சத விகிதம் என்று பல முறை கேட்டிருக்கிறோம். வாகனங்களை பிடிக்க வேண்டும் என்று அதிகாரம் கேட்டிருக்கிறோம். இப்படி மக்களுக்குத் தேவையான பொருள்களை அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டுமென்று பல அதிகாரங்களை கேட்டிருக்கிறோம் ஆனால் கொடுக்க மறுக்கிறார்கள். பிறகு தான் மாநில சுயாட்சி வேண்டு-



1974 சனவரி 30] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

மென்ற பிரச்னையே எழுகிறது. நீங்கள் கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதிகாரம் வேண்டுமென்று கேட்பது பாவம், மிகக் கேவலம் என்றெல்லாம். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று காரியங்களை நியாயமாகச் செய்கிறோம் என்றால் விநியோகத்தில் தவறு இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். தவறு இருந்தால் திருத்திக் கொள்கிறோம். எங்களால் முடிந்த அளவு செய்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இருக்கிற கஷ்டங்களையும் சொல்கிறோம்.

ஒரு மாண்புமிகு உறுப்பினர் கூறினார் பருப்பு வகைகள் நன்றாக விளைந்திருக்கின்றன என்று. நமது மாநிலத்திற்கு துவரம் பருப்பு தேவை 80 ஆயிரம் டன். இங்கே உற்பத்தி ஆவது 25 ஆயிரம் டன். 64 ஆயிரம் டன் பருப்பை உத்திர பிரதேசத்திலிருந்தும், மகாராட்டிரத்திலிருந்தும் தருவிக்கிறோம். அந்த மாநிலங்களில் எந்த விலைக்குக் கொடுக்கிறார்களோ அந்த விலையில் வாங்கி, [illegible] டிரான்ஸ்போர்ட் செலவு எல்லாம் சேர்த்து விற்க வேண்டியிருக்கிறது.

உளுத்தம்பருப்பு இந்த மாநிலத்தின் தேவை 62 ஆயிரம் டன். ஆனால் இங்கே உற்பத்தி ஆவது 15 ஆயிரம் டன், பாக்கியை ஆந்திரா, மகாராட்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து தருவிக்கிறோம்.

கடலைப் பருப்பை எடுத்துக்கொண்டால் நமது மாநிலத்தின் தேவை 250 ஆயிரம் டன். இங்கே விளைவது 14 ஆயிரம் டன். 240 ஆயிரம் டன் வெளி மாநிலங்களிலிருந்து தருவிக்கிறோம்.

பச்சைப் பருப்பு இந்த மாநிலத்தின் தேவை 14 ஆயிரம் டன். இங்கே விளைவது 11 ஆயிரம் டன். 3 ஆயிரம் டன் பச்சைப் பருப்பை வெளி மாநிலங்களிலிருந்து தருவிக்கிறோம்.

எண்ணெய் வித்துக்களை எடுத்துக்கொண்டால் நமது தேவை 27 ஆயிரம் டன். இங்கே 12 ஆயிரம் டன் உற்பத்தி ஆகிறது. ஆந்திரா, மைசூர், மகாராட்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து 15 ஆயிரம் டன் வாங்க வேண்டியிருக்கிறது.

தேங்காய் எண்ணெய் 3 லட்சம் டன் தேவைப்படுகிறது. ஆனால் இங்கே கிடைப்பது 60 ஆயிரம் டன். கேரளாவிலிருந்து 2,40,000 டன் வாங்க வேண்டியிருக்கிறது.

'பிரைவேட் செக்டாரில் அவர்கள் கொடுக்கிறார்கள். கோவாபரேடிவ் செக்டாரில் பெர்டிலைசரை நாங்கள் விற்கிறோம்' என்று சொன்னார்கள். கோவாபரேடிவ் செக்டார். இன்றையதினம் நம்முடைய மாகாண சர்க்கார் கையில் அகப்பட்டுக்கொண்டு எந்த வகையிலே இருக்கிறது என்பதை யாராவது மறுக்க முடியுமா? எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் திருவாரூர் கோவாபரேடிவ் சொசைடியைப்பற்றிச் சொன்னார்கள். நான் பல ஆண்டுக்கு முன்பாக ஒரு கேள்வியை இந்த மன்றத்தில் எழுப்பியிருந்தேன், ஸ்டார்டு குவெஸ்சின். கடைசி வரையில் அதற்கு பதில் வரவேயில்லை.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், கோவாபரேடிவ் செக்டாரைப் பொறுத்த வரையில் பல்வேறு நேரங்களில் பல்வேறு இடங்களில் ஊழல்கள் இருக்கின்றன, தவறுகள் நடைபெறுகின்றன என்று அழுத்தம் திருத்தமாக இந்த மன்றத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களும் எல்லாக் கட்சிகளின் சார்பாக, ஆளும் கட்சி உட்பட கூட்டுறவுத் துறை மான்ய விவாதத்தில், சென்ற ஆண்டு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டபோதும், அதற்கு முன்பு நடந்த விவாதத்தின் போதும், பல்வேறு உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட கட்சி வேறுபாடு இல்லாமல் இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார்கள். இதை யாராலும் மறுக்க முடியாது. இப்பொழுது புதிதாக உணவு இலாகாவை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களும் மறுக்க முடியாது. (குறுக்கீடு) இந்த இலாகா முதலில் மதிப்பிற்குரிய ஆதித்தனார் கையில் இருந்தது. இப்பொழுது இந்த இலாகா உங்கள் கையில் இருக்கிறது. நீங்களும் இதை மறுக்க முடியாது என்பதற்காகத்தான் சொன்னேன்.

ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன். கோவாபரேடிவ் செக்டாரை வைத்துக்கொண்டு எவ்வளவோ நன்மைகளைச் செய்துவருகிறோம் என்று சொல்லலாம். ஆனால், நீங்கள் இதைச் செய்ய தவறிவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டை உங்கள் மீது சுமத்துகிறேன். கோவாபரேடிவ் செக்டாரை நீங்கள் நான்-கோவாபரேடிவ் செக்டாராக செய்துவிட்டீர்கள். இதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் ஏதாவது திட்டம் போட்டிருக்கவேண்டும்.

இறுதியாக, சில நாட்களுக்கு முன்பாக ஒரு மகஜர் நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் சென்னை ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பாக தரப்பட்டிருக்கிறது. அதிலே சில கான்க்ரீட் ஸஜெஷன்ஸ், பிராக்டிகல் ஸஜெஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாய்மார்கள் ஏறத்தாழ 5,000 பேர்கள் அவர்கள் சார்பாக ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சில பிராக்டிகல் ஸஜெஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் அதைச் செயல்படுத்தினால் நன்றாக இருக்கும். இது பற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.



கடைசியாக முடிப்பதற்கு முன்னால் ஒரு விண்ணப்பத்தை உங்கள் மத்தியில் வைக்கிறேன். ஃபேர் பிரைஸ் ஷாப்பில் பொருள்களை விற்கிறோம் என்று சொல்கிறீர்கள். அப்படி விற்கின்ற நேரத்தில் எந்தப் பொருள்கள் எப்பொழுது கிடைக்கின்றது என்பது கன்ஸ்யூமர்ஸுக்குத் தெரியாத நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மற்றவர்கள் எடுத்துக்கொண்டதில் பாதி நேரமாவது நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் முதலிலேயே டைம் பிக்ஸ் பண்ணியிருக்க வேண்டும். விவாதம் ஆரம்பிப்பதற்கு முந்தியே சொல்லியிருந்தால், டயத்தை ஈகுவிடபிளாக டிஸ்ட்ரிப்யூஷன் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஆரம்பத்திலேயே 10 நிமிடம் கேட்டீர்கள். நீங்கள் 12-52-க்கு ஆரம்பித்தீர்கள். தீர்மானத்தைக்கொண்டு வந்த தங்கமணி அவர்கள் எப்படியாவது இதை இன்று முடித்து, தான் பதில் சொல்லி, அடுத்த தீர்மானத்தை சபை முன் வைத்துவிடவேண்டும் என்று கருதுகிறார். நீங்கள் பேசிய பிறகு மினிஸ்டர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அதற்குத் தகுந்தாற்போல் சீக்கிரம் முடித்துக்கொண்டு விடுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாகச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். தலைவரவர்களே, திரு. கே. எம். எஸ். முதலில் ஆரம்பித்தார்கள். அடுத்து நான் தான் பேசவேண்டுமென்று கேட்டேன். லத்தீப் அவர்கள் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். பிறகு பேசலாம் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 10 நிமிடங்கள் தான் கேட்டிருக்கிறீர்கள். அதற்கும் மேலேயே பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முடித்து விடுகிறேன். 2 நிமிஷத்துக்குள். மற்றவர்கள் எடுத்துக்கொண்டதில் பாதி நேரத்தைத் தான் நான் எடுத்துக்கொள்கிறேன். முதலில் பேச அனுமதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். துர்பாக்கியமான நிலை. என்ன செய்வது? சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

with Revenue Department Notification No. 799, dated the 15th October 1973, published at page 1785 of Part I of the Tamil Nadu Government Gazette, dated the 19th October 1937 as subsequently amended. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

@ 81. First Annual Report of the Cholan Roadways Corporation Limited for the year 1972. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

@ 82. Second Annual Report of the Cholan Roadways Corporation Limited for the year 1973. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. ***Reports, Notifications and other papers.***

26. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly. (*vide*-names below).

*As on 31st March* 1971—

1. Thiru S. GANESAN.
2. Thiru M. P. SARATHI.
3. Thiru K. A. WAHAB.

27. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly. (*vide*-names below).

*As on 31st* 1972—

1. Thiru S. GANESAN.
2. Thiru K. PAZHANIVELAN.
3. Thiru K. A. WAHAB.

---

@ Laid on the Table of the Legislature Library with reference to the proviso to Rules 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.



28. Return of Assets submitted to the House by the Hon. Chief Minister and Hon. the Members of the Legislative Assembly—(vide names below).

*As on 31st March* 1973—

The Hon. DR. M. KARUNANIDHI—*Chief Minister.*

*Members.*

1. Thiru K. RAJAMANICKAM.
2. Thiru J. S. RAJU.
3. Thiru S. GANESAN.
4. Thiru K. R. KRISHNAN.
5. Thiru A. S. KUMARASAMY.
6. Thiru M. P. SARATHI.
7. Thiru A. CHINNASAMY.
8. Thiru N. MANICKAM.
9. Thiru M. V. NARAYANASWAMY.
10. Thiru K. PAZHANIVELAN.
11. Thiru K. BALAKRISHNAN.
12. Thiru A. M. RAJA.
13. Thiru K. A. WAHAB.
14. M. VEDACHALAM.

29. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 10.

30. Reports of the Committee on Estimates on the section taken by the Government on the recommendations of the Committee contained in the Reports on (ii) Forests and (iii) Tamil Nadu State Electricity Board.

## இணைப்பு

557-ம் பக்கத்தில் 8 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடப்படாத வினாவிற்குரிய விடையைக் காண்க]

1972-73-ம் ஆண்டின் இறுதியில் இருந்தபடி தமிழக விவசாயிகள் கட்ட வேண்டிய நிலவரி பாக்கித் தொகையை மாவட்ட வாரியாக காண்பிக்கும் விவரப் பட்டியல்—

| மாவட்டம். | விதித்த தொகை. | வசூல். | நிலுவை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| சென்னை .. .. | 2,57,810 | 41,377 | 2,16,433 |
| செங்கற்பட்டு .. .. | 1,36,20,718 | 63,96,181 | 72,24,537 |
| வட ஆற்காடு .. .. | 89,34,860 | 52,80,038 | 36,54,822 |
| தென் ஆற்காடு .. | 1,75,50,960 | 98,89,104 | 76,61,856 |
| தஞ்சாவூர் .. .. | 3,32,56,556 | 2,74,59,491 | 57,97,065 |
| திருச்சிராப்பள்ளி .. | 1,19,12,120 | 1,12,42,787 | 6,69,333 |
| மதுரை .. .. | 63,80,781 | 50,63,527 | 13,17,254 |
| ராமநாதபுரம் .. | 2,42,82,726 | 83,30,610 | 1,59,52,116 |
| திருநெல்வேலி .. | 91,12,858 | 54,56,548 | 36,56,310 |
| சேலம் .. .. | 63,58,148 | 48,63,011 | 14,95,137 |
| தர்மபுரி .. .. | 26,98,860 | 24,07,722 | 2,91,138 |
| கோயம்புத்தூர் .. | 2,49,40,031 | 86,73,659 | 1,62,66,372 |
| நீலகிரி .. .. | 11,77,838 | 6,98,288 | 4,79,550 |
| கன்னியாகுமரி .. | 12,83,442 | 8,05,723 | 4,77,719 |
| | 16,17,67,708 | 9,66,08,066 | 6,51,59,642 |

## *How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee (s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad Motion | ... Adjournment Motion. |
| Ann. | .. Announcement. |
| B.O.H. | ... Business of the House. |
| | ... Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | ... Calling Attention Statement. |

| | | |
|---|---|---|
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis/H.H.D. | ... | Half-four Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R/Res | ... | Resolution. |
| St. | .. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

(24th, 25th, 28th, 29th and 30th January 1974)

[Volume XLVII (Nos. 1 to 5)]

## A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) (Amendment) Bill, 1974 ... 476–479

ADITANAR THIRU Si. Pa.—

Governor's Address (M) ... ... ... 60–61

ADMINISTRATION—

Co-operation Department, re-organisation ... 166–167

AGRICULTURE—

Agro-Engineering Service Societies, Tiruttani taluk ... ... ... ... ... 403

Indo-German project ... ... .. ... 544

Studies, research ... ... ... ... 543

AIR POLLUTION—

Committee's Report ... ... ... ... 16–18

AIRPORT (s)—

Madras, development ... .. ... ... [illegible]–533

Tirunelveli, opening ... ... ... [illegible]

இவை எல்லாம் திரு. கே. டி. கே. அவர்களுக்குத் தெரியாத பிரச்சினை அல்ல. அந்தக் காலத்தில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யார் யாரைப் பிடித்தார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். யாராவது—கே. டி. கே. ஐக் கைது செய்திருப்பார்கள்; மணலியைக் கைது செய்திருப்பார்கள். இன்றைய முதலமைச்சரைக் கைது செய்திருப்பார்கள். அன்னத்தில் பின்னம் கலப்பவர்களை—கலப்படம் செய்பவர்களை—கள்ளக்கடத்தல் செய்பவர்களை எல்லாம் கைது செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் அந்தக் காலத்திலே பல போராட்டங்களை நடத்தினோமே, அப்படி அவர்கள் ஏதாவது செய்தார்களா? அவர்களைப் பிடிப்பதற்கு அரசியல் ரீதியாக, துணிந்து அகில இந்தியாவிலேயும், அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பல பெரிய வியாபாரிகளைக் கைது செய்திருப்பது நமது அரசுதான். பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த நாங்கள் தவறிவிட்டோம் என்று சொல்வது சரியல்ல. திரு. கே. டி. கே. யைப் போன்றவர்கள் எல்லாம்—முற்போக்குக் கருத்துக்கள் கொண்டவர்கள் எல்லாம் இன்றைக்குச் செய்யவேண்டிய காரியம் இந்த அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதுதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தில் பின்னர் தொடர்ந்து பேசுவார்கள்.

## 7. அரசினர் தீர்மானம்.

### தேதி குறிப்பிடாமல் பேரவையை ஒத்திவைப்பது குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இந்தக் கூட்டத்தொடர் முடிவடைகிறது. நான் பேரவையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கிறேன்.

பேரவை பிற்பகல் [illegible] 30 மணிக்கு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.



## 8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Others*

76. Notification issued with G.O. Ms. No. 2039, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Kanyakumari Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

77. Notification issued with G.O. Ms. No. 2056, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Valparai Local Planning Area. [Laid on the able of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

78. Notification issued with G.O. Ms. No. 2045, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Kuzhithurai Local Planning Area. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

79. Notification issued with G.O. Ms. No. 2040, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Pudukkottai Local Planning Area. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

80. Notification issued with G.O. Ms. No. 366, Excise and Prohibition, dated the 30th October 1973 in regard to amendment to the Rules for the disposal of confiscated articles, published

PAGES

A—cont.

ALAGARSAMY, THIRU S.—
- Lift Irrigation Co-operative Societies, Tirunelveli district ... ... ... ... ... 404–407
- Occupants of Kudiyiruppu (Conferment of ownership) Amendment Bill, 1974 ... ... ... 450–451

ANBAZHAGAN, THIRU K.—
- Assault on warden of Stanley Medical College Hostel and unrest among students (A.M.) ... 569–573
- Govenor's Address (M) ... ... ... 204, 216, 225, 226
- Outbreak of cholera and serious type of dysentry in the districts of Kanyakumari, Tirunelveli and Tiruchirappalli (C.A. St.) ... ... 574–576

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
- Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 ... 487–489
- Essential commodities, fixation of prices under the Essential Commodities Act (R) ... 594–606, 615
- Governor's Address (M) ... ... ... 380–381
- Public Men (Criminal Misconduct) Amendment Bill,
- Hides and skins, export of semi-finished and finished leather (R) ... ... ... 497–498
- Labourers, Gratuity Schemes ... ... ... 305–306
- Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1974 ... ... ... ... 469–472
- Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) (Amendment) Bill, 1974 ... 479–481, 483
- Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 ... ... ... ... ... ... 433, 434, 435, 436–437

PAGES

A—cont.

ANDI AMBALAM, THIRU M.
- Governor's Address (M) ... ... ... 193–195

ARCHAEOLOGY—
- Excavations in Karur ... ... ... ... 172–173

ARUMUGAM, THIRU C.—
- Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 ... ... ... ... ... 420, 426, 428

B

BABY FOOD—
- Supply ... ... ... ... 48–55

BALASUNDARAM, THIRU V.—
- Loans, Handloom Weavers Co-operative Society, Madras ... ... ... ... ... 297
- Technological University, Starting ... ... 1–5

BILL (S)—
- Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 Consid. ... 485–490
  - Consid. Cl. Motion to Pass, Passed ... ... 491, 491
- Essential Commodities (Tamil Nadu Amendment) Bill, 1974—Int. ... ... ... 418
- Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1974–Int. ... ... 180–181, 462
  - Message from Governor ... ... ... 462–473
  - Consid. ... ... ... ... ... 473
  - Passed ... ... ... ... ...
- Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of Office) (Amendment) Bill, 1974 ... ... 473–483
  - Consid. ... ... ... ...

B—cont.

BILL(S)—*cont.*

Passed ... ... ... ... ... 484

Occupants of Kudiyiruppu (Conferment of ownership) Amendment Bill, 1974 Consid. ... 449–451

Passed ... ... ... ... ... 451

Public Men (Criminal Misconduct) Amendment Bill 1974 Consid. ... ... ... ... ... 418–443

Passed ... ... ... ... ... 448

BLOOD—

Donation, amount paid ... ... ... ... 531–532

BOMMAN, THIRU K. H.—

Travellors' Bungalow at Gudalore, expansion ... 397

BRIDGES & CULVERTS—

Bridges, widening in Jayamangalam—Melmangalam Road ... ... ... ... 69

Bridges in Tiruvallur Taluk ... ... ... 38–39

Cauvery bridge at Mayuram, widening ... ... 536

